

தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி

முதல் தொகுதி
அ - ஞெ



Published by
SANTI SADHANA
(Charitable Trust)
125, Chamiers Road
Chennai - 600 028.

தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி
முதல் தொகுதி அ - ஞெ



அமரர் சாக்கை இராஜம் 22-11-1904 இல் பிறந்தவர். நல்ல கல்விக்குப் பின் பட்டயக் கணக்கராஞர். ஆஞல், பின்னர் தம் தமையஞருடன் தாமும் ஏல நிறுவனத்தின் உரிமையாளராஞர். அதஞல் அவர் "மர்ரே ராஜம்" என்றே பெயர் பெற்ருர். பள்ளிப்பருவத்திலிருந்தே அவருக்குத் தமிழில் ஆர்வமிருந்து வந்தது. அத்துடன், "தமிழ் கூறு நல்லுலகின் தவப்பயஞய்" தமிழ் மொழியின் இனிமையும் அழகும் சிறப்பும் அவரைப் பெரிதும் கவர்ந்தன என்ருல் அது மிகையாகாது. அப்போது தமிழ் மொழி கவனிக்கப் படாமலிருந்ததும், அதற்குரிய இடத்தையும் கவனத்தையும் பெருமலிருந்ததும் அவர் மனத்தில் தமிழிலக்கியத்திடம் தனி ஆர்வத்தைத் தூண்டி விட்டன. அவருக்குத் தமிழ்த் தாத்தா டாக்டர். உ. வே. சாமிநாதய்யர் முன்ஞேடியாகத் திகழ்ந்தார். அவரிடம் அவர் கொண்டிருந்த மதிப்பும் பெருமையும், அவரைப் பற்றி அவர் பேசும் போதெல்லாம் தலைவர் ஒருவரைப் புகழ்வதாகவே, அமைந்திருந்தன. அதஞல், ஒருவர் எவ்வளவு ஏழையாக இருந்தாலும் அவரும் வாங்கும் அளவுக்குத் தமிழ் இலக்கியங்களை அச்சிட்டு வழங்க வேண்டுமென்று தீர்மானித்து விட்டார். அவரது இந்த நோக்கத்திற்குப் பெரும் புகழ் பெற்ற திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை, திரு. தெ.பொ. மீஞட்சி சுந்தரம் பிள்ளை, திரு. கந்தசாமிப் பிள்ளை, திரு. பெ. நா. அப்புசாமி, திரு. பி. ஸ்ரீ ஆசார்யா, திரு. சா. கணேசன், திரு. அ. ச. ஞானசம்பந்தம், திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை, திரு. கி. வா. ஜகந்நாதன், திரு. வி. மு. சுப்பிரமணிய அய்யர் மற்றும் தமிழறிஞர் வேறு பலரும் பேரூக்கமளித்தனர்.

1955 இல் "தமிழிலக்கியச் செல்வம்" என்ற வரிசையில் பழந்தமிழிலக்கியங்களைப் பதிப்பிடத் தொடங்கிஞர். அதன் பிறகு முதலாயிரம், திருவாய்மொழி, இயற்பா, பெரிய திருமொழி, திருவாசகம், சிலப்பதிகாரம், மணிமேகலை, கல்லாடம், அஷ்டப்பிரபந்தம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பாட்டும் தொகையும், கம்ப ராமாயணம், வில்லிபாரதம் முதலிய நூல்களை மேற் குறிப்பிட்ட பேரறிஞர்களின் இடையருத ஊக்கத்தின் ஒத்துழைப்பால் பதிப்பித்து, பதிப்பிடு வதற்குப் பெருஞ்செலவானதையும் பொருட்படுத்தாமல், ஒரு நூல் ஒரு ரூபாய் என்ற விலைக்கு வழங்கிஞர். தமிழிலக்கியங்களைப் பதிப்பித்து இத்தகைய மிகக் குறைந்த விலையில் வழங்கிய இவர் தமிழைப் பொதுமக்கள் அனைவரிடையேயும் பரப்பிய முன்ஞேடியாவர் என்று சொன்ஞல் அது முழுமையாகாத புகழ்ச்சியேயாகும்.

இதுவரை யாராலும் முயற்சி செய்யப்படாத ஒன்ருன வரலாற்றுக் கொள்கையில் அகராதி/சொல்லடைவு ஒன்றை வெளிக் கொணர வேண்டும் என்ற தன்னேரில்லாத் தமிழறிஞர்களின் அறிவுரையும் ஊக்கமும் அமரர்.திரு. சா. இராஜம் அவர்களை அப்பணியில் ஈடுபடத் தீர்மானிக்கச் செய்தன. அனைத்துத் தமிழிலக்கியங்களையும் கி.பி.1400-1600 வரையிலான கல்வெட்டுக்களையும் சேகரித்தார். அதுவரை கிடைத்துள்ள தமிழிலக்கியங்களில் சொல்லடைவுகள் தொகுக்கப் பெற்றன. 8000 கல்வெட்டுக்கள் பிரதி எடுக்கப்பட்டன. வரலாற்று முறையில் ஒழுங்குபடுத்தப் பட்டன. பிறமொழி எழுத்துக்களில் எழுதப் பெற்ற உண்மையான முழுமையான தமிழ் நூல்களில் உள்ள சொற்கள் தமிழில் எழுதப்பட்டன. விளக்கவுரைகளைக் கொண்ட மணிப் பிரவாள இலக்கியங்களும் வைணவப் பெரு நூல்களும் கையெழுத்துப் பிரதியாக 132 தொகுதிகளாக அகர அடைவு செய்யப்பெற்றன. கி.பி. 1600 வரையுள்ள அனைத்து இலக்கியங்களின் சொல்லடைவுகளும் கையெழுத்துப் பிரதி வடிவத்தில் 246 தொகுதிகளாகத் தயாரிக்கப் பெற்றுள்ளன.

அவர் நிறுவிய சாந்தி சாதஞ நிறுவனம் வரலாற்றுக் கொள்கையின் அடிப்படையில் தமிழ் அகராதி அட்டவணையை விரைவில் பதிப்பித்து வெளியிடுவதன் மூலம் தமிழ்ப் பேரறிஞர்களுக்கும் தமிழ் ஆர்வலர்களுக்கும் பெரிதும் உதவியாயிருக்குமென்று நம்புகிறது.

GLOSSARY
OF
TAMIL INSCRIPTIONS

தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி

VOLUME - I
முதல் தொகுதி
அ - ஞெ

Published by
SANTI SADHANA
(Charitable Trust)
125, Chamiers Road
Chennai - 600 028.

Tamil Dictionary/Glossary on Historical Principles project

முதற் பதிப்பு - 2002 AD
உரிமை பதிவு செய்யப் பெற்றது

First Edition - 2002 AD
Copy right Reserved

Design & Printing:
Sudarsan Graphics
27, Neelakanta Mehta Street
T.Nagar, Chennai - 17.

கிடைக்கும் இடம்
சாந்தி சாதனா
125, சேமியர்ஸ் சாலை
சென்னை - 600 028.
தொலைபேசி: 435 2745

Books are available at
SANTI SADHANA
125, Chamiers Road
Chennai - 600 028.
Phone:435 2745

நூன்முகம்

தமிழ்த் தாத்தா என்று பாராட்டப் பெறும் டாக்டர். உ.வே. சாமிநாதய்யரால் செந்தமிழ் நூல்கள் பல வெளிக் கொணரப் பெற்றன. அவரைத் தொடர்ந்து பேரறிஞர் பலர் தமிழ்ப் பணியைத் தொடர்ந்து செய்து வந்தனர்; வருகின்றனர்.

தமிழும் கடல் போன்றது; தமிழ்ப் பணியும் அளவிடற்கரியது. வெவ்வேறு துறையில் தமிழ்ப் பணி நடைபெற்று வருகிறது.

அவற்றுள், ஒருவர் தமிழ் இலக்கியங்களைப் பிறர் அல்லது பிற உரைநூல்களின் உதவியின்றித் தாமே படித்து ஓரளவு பொருள் புரிந்து கொள்ளும் வகையில் சொற்களைப் பிரித்தும் நிறுத்தற் குறிகள் இட்டும் அமரர் மர்ரே S. இராஜம் அவர்கள் 65 நூல்களைப் பதிப்பித்தார். அந்த நூல்களுக்கு இன்றும் வரவேற்பு இருக்கின்றது; தமிழறிஞர் நெஞ்சில் அவை நிலைத்து நிற்கின்றன.

இத் தமிழ்ப் பணி அவருக்குப் பின்னும் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்ற நோக்கத்தில் அவர் நிறுவிய 'சாந்தி சாதனா' நிறுவனம், அவர் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் 'வரலாற்று முறைத் தமிழ்ப் பேரகராதி' (ஐந்தில்) 3 தொகுதிகள், 'வைணவ உரைநடை வரலாற்று முறைத் தமிழ்ப் பேரகராதி' 3 தொகுதிகள், 'திவாகரம்-பிங்கலம்-சூடாமணி அகராதி அட்டவணை' 'கலம்பகக் கொத்து' 'பெருங்கதை' 'வார்த்தாமாலை' முதலிய நூல்களை வெளியிட்டுத் தமிழறிஞர்களின் பாராட்டைப் பெற்று வருகின்றது.

இம் முறையில் தமிழ்க் கல்வெட்டுக்களிற் காணப் பெறும் சொல் அகராதி ஒன்று வெளியிட வேண்டுமென்று மர்ரே இராஜம் அவர்கள் கருதியிருந்தமை இன்று செயல்படுத்தப் பட்டு 'அ முதல் ஞெ வரை'யிலான 6814 சொற்களைக் கொண்ட முதல் தொகுதி வெளி வருகிறது.

இதுவரை வெளி வந்தவற்றை விட விரிவான இவ் வகராதியில் கி.பி. 400 முதல் 1800 வரையிலான கல்வெட்டுக்களில் காணப்படும் சிறப்புப் பெயர், இடப்பெயர் தவிர்ந்த அனைத்துப் பெயர்களும் முக்கியச் சொற்றொடர்களும் இடம் பெற்றுள்ளன. தமிழ்நாடு, கேரளம், கருநாடகம், ஆந்திரம், இலங்கை ஒரு சில தென் கிழக்கு ஆசிய நாடுகளில் கிடைத்துள்ள தமிழ்க் கல்வெட்டுக்களில் காணப்படும் பொதுவான சொற்களும் இங்குப் பயன் படுத்தப் பெற்றுள்ளன. இரண்டு தொகுதிகளாக வெளியிடப் படும் இவ் வகராதியின் இரண்டாவது தொகுதி மிக விரைவில் வெளிவர உள்ளது.

இச் சீரிய பணியில் நெடுங்காலமாகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு பணியாற்றி இந் நூலைத் தற்போது வெளி வரத் துணை புரிந்த தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்துக் கல்வெட்டுத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள அறிஞர் திரு. Y. சுப்பராயலு அவர்களுக்கும் அவருடன் சேர்ந்து செயலாற்றிய புலவர் கா. சண்முகம், திரு. ஆர். ஆளவந்தார் அவர்களுக்கும் சாந்தி சாதனா நிறுவனத்தின் நன்றி என்றென்றும் உரித்தாகுக. இந் நூல் அச்சாகுங்கால் பிழை திருத்தம் செய்து உதவிய அனைவருக்கும் இந் நிறுவனம் தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

சாந்தி சாதனா
125, சேமியர்ஸ் சாலை
சென்னை - 600 028.

EDITORIAL NOTE

The present work presents a comprehensive glossary of Tamil inscriptions from AD 400 to 1800 and forms part of the bigger Tamil Dictionary on Historical Principles conceived and directed by the Late Thiru S. Rajam, founder of the Santi Sadhana Trust. The basic work of compiling the glossary entries from inscriptions was undertaken during 1969-1983 and originally it was planned to be published as an integral part of the above-mentioned Tamil Dictionary on Historical Principles. As the final shape of the Dictionary may take a few more years, the epigrahical glossary is published now separately, along with the glossaries for Tamil literature and the Vaishnava prose, as they may be useful to lexicographers, linguists and historians even in the present form. This glossary has been updated with the addition of some new material available from the recent epigraphical publications.

For Tamil inscriptions there are available already a few glossaries. The most detailed among them is that by T.N. Subramaniam published as part of *South Indian Temple Inscriptions*, vol. III, part II (Government Oriental Manuscripts Library, Madras, 1957). It is given in both Tamil and English. That glossary however lacks details about the date and citation of the text. A smaller glossary limited to revenue- and administration- related terms (by R. Gopalan and Y. Subbarayalu) is given as an appendix to T.V. Mahalingam, *South Indian Polity*, 2nd edition (Madras University, 1967). A third one is *kalvettuk kalaichchol akaramutali* by C. Govindarajan (Madurai Kamaraj University, Madurai, 1987). It is selective in nature and mostly limited to the Tamil inscriptions of the 7th to 12th centuries, though there is an appendix relating to later terms. Moreover, the meanings are not accurate enough. Another somewhat small but useful work is *Lexicon of Travancore Inscriptions*, by R. Vasudeva Poduval (Trivandrum, 1947). It contains mostly terms found in the Tamil and Malayalam inscriptions of Kerala.

Unlike the above works, the present glossary is quite exhaustive and contains all possible distinct terms found in Tamil inscriptions from AD 400 to 1800 with the particulars of date, citation and reference for each entry. (The terms from pre-400 AD inscriptions are given in an appendix.) This was compiled from a corpus of nearly nine thousand inscriptions scattered in several publications, both official and non-official. To start with, the corpus was arranged chronologically by assigning dates to each inscription. Though exact dates have been ascertained to a large extent for most of the inscriptions, many of them could be assigned to some particular centuries only, due to lack of any internal evidence or of relevant editorial

comments regarding the palaeography of those inscriptions. In the latter case, the date is taken as the final year of the particular century.

As the Tamil inscriptions are spread over a wide area covering Tamil Nadu, parts of Kerala, Karnataka, and Andhra Pradesh, and Sri Lanka (and a few in Southeast Asia too) there is bound to be dialectal differences. The glossary should naturally reflect such dialectal differences. Even though the language of the Tamil inscriptions of Kerala may be considered as the early form of Malayalam, those inscriptions have also been fully used for this glossary as they contain common lexical items. Unlike literary language, for which a standard form is usually recognized, the language of inscriptions shows much divergence over time and space. Naturally the glossary should reflect this divergence too. There is some problem posed by the different standards in the quality of epigraphical publications of the different institutions, some being of poor quality. In spite of that, terms have been selected from all publications, avoiding only very doubtful cases. Words have not been taken from certain passages if there was some doubt as to the correctness of the text or if there was some mutilation in the text. The texts published in *South Indian Temple Inscriptions*, containing the Mackenzie collection, have not been used for this glossary, as the eye-copyists employed by Colonel Mackenzie did not reproduce the original texts faithfully, and even the careful editor and epigraphist T.N. Subramaniam could not improve the published texts much.

Arrangement of the Glossary

The composition of each entry is as follows: (1) The inscriptional term (in bold) is followed by (2) a grammatical note in brackets, (3) meaning, (4) year of the inscription where the term occurs, (5) quotation in italics, and (6) reference to the publication of the inscription. The grammatical note is just concerned with the elementary classification of the term as noun (*pe*), verb (*vi*), and the particles, *iṭaichchol* (*i*), and *urichchcol* (*u*). Phrases are not given any such indication.

As far as possible, the first chronological occurrence of the particular word or phrase with a distinct meaning is put in the proper alphabetical order. The spelling of each entry is given as it is found in the original text without any emendation. Doubtful cases are given in square brackets. Variants of one and the same word are included in the appropriate places. In the case of nouns, case suffixes are mostly omitted. For verbs all available conjugational forms are included in view of their linguistic interest. The arrangement is made according to the Tamil alphabetical order as well as the Sanskrit alphabetical order so as to accommodate

Tamilized Sanskrit terms using the *varga* letters and different sibilants. But the compound letters in Sanskrit usage, except ஸ்ரீ, are split into their components and given linearly like in Tamil (க்ஷ > க்ஷ, ந்த்ர > ந்த்ர). The *varga* letters are transliterated by adding subscript numerals to the related primary letters in Tamil (*See* **Transliteration Scheme**).

As regards the meaning, in several cases it is only suggestive, taking the contextual usage as the sole guide, as several of the epigraphical terms have become obsolete and there is no other lexical authority to depend on for these terms. For variant forms of the same verb, meaning is omitted. Cross-references to related terms are given within brackets preceded by an '=' sign. Doubtful meanings are followed by a question mark. In the quoted texts, elision of passages or missing/mutilated passages are shown by three dots.

23.6.2002

Y. Subbarayalu
Professor of Epigraphy (Rtd)
Tamil University, Thanjavur

பதிப்புரை

இந்தக் கல்வெட்டுச் சொல் அகராதி சாந்தி சாதனா அறக்கட்டளையின் நிறுவனர் அமரர் திரு. சாக்கை ராஜம் அவர்களின் கருத்துருவாகும்; மேலும் இது அவரால் பெரிய அளவில் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டு வந்த திட்டமான வரலாற்றுமுறை தமிழ்ப் பேரகராதி அமைப்பின் ஒரு கூறாகும். அந்த வரலாற்றுமுறை தமிழ்ப் பேரகராதி தமிழிலக்கியத்தின் தொடக்க காலம் முதல் 1800 முடிய உள்ள தமிழ் இலக்கியம், வைணவ நூல்களின் மணிப்பிரவாள உரைகள், கல்வெட்டுக்கள் ஆகிய மூன்றிலிருந்தும் தொகுக்கப்பட்ட சொற்களைக் கலந்து காலமுறைப்படி பொருள் கூட்டி உருவாக்குவதாக திட்டமிடப்பட்டது. கடந்த நாற்பதாண்டுகளாக நடைபெற்று வரும் அவ்வகராதிப் பணி இன்னும் முழுமை பெறவில்லையாதலாலும், அதற்கென்று இலக்கியம் முதலியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டுப் பொருள் சேர்க்கப்பட்ட சொல்லடைவுகள் அகராதி யியல், மொழியியல், வரலாற்றியல் முதலிய பல துறையினருக்கும் பயன்படும் ஆதலாலும் அவை இப்பொழுது தனித்தனியாகவே வெளியிடப்படுகின்றன. 1969–1983இல் இக்கல்வெட்டு அகராதி தொகுக்கும் பணி செய்யப்பட்டது. அப்பொழுது அது நான்கு காலப்பகுதிகளாகப் பிரித்துச் செய்யப்பட்டது. இப்பொழுது நான்கு பகுதிகளையும் ஒன்றாக்கி, அண்மைக்காலத்தில் வெளியான கல்வெட்டுச் சொற்களையும் சேர்த்துத் திருத்தி மேம்படுத்தி இறுதி வடிவம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்க் கல்வெட்டுகளுக்கு ஏற்கெனவே சில கலைச்சொல் அகராதிகள் செய்யப் பட்டுள்ளன. அவற்றுள் ஓரளவு விரிவான ஒன்று திரு தி.நா. சுப்பிரமணியம் அவர்களால் தொகுத்துப் பதிப்பிக்கப்பட்ட சாசனச்சொல் அகராதியாகும் (*தென்னிந்திய கோயிற் சாசனங்கள்*, தொகுதி 3–2, சென்னை கீழ்த்திசைச் சுவடி நூலகம், 1957, ப. 1387–1498). ஆங்கிலத்திலும் அது ஒரு பிற்சேர்க்கையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வகராதியில் சொல்லுக்கான மேற்கோள் பாடமோ, சுட்டுநூல் பற்றிய செய்தியோ இல்லை என்பது ஒரு குறையாகும். அடுத்து T.V, மகாலிங்கம் அவர்களுடைய *தென்னிந்திய அரசியல் முறை* என்ற நூலின் பின்னிணைப்பாக உள்ள ஒரு சிறு கலைச்சொல் அகராதி ஆகும். அதில் வருவாய் மற்றும் நிருவாகம் தொடர்பான சொற்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. மூன்றாவதாக சி. கோவிந்தராசன் அவர்களால் செய்யப்பட்டு மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தால் 1987இல் வெளியிடப்பட்ட *கல்வெட்டுக் கலைச்சொல் அகரமுதலி* ஆகும். அதில் காலம், மேற்கோள், சுட்டு நூல் ஆகியன கொடுக்கப்பட்டுள்ளன. கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றாண்டு முடிய உள்ள சொற்களுக்கே அதில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பினும் பின்னிணைப்பில் பிந்திய சொற்களும் ஓரளவு சேர்க்கப்பட்டுள்ளன. பொருளைப் பொறுத்தவரை திருத்தவேண்டிய பகுதிகள் அதில் பரவலாக உண்டு. இந்த மூன்று அகராதிகளுக்கும் முன்பே 1947இல் வெளியான R. வாசுதேவ பொதுவாள் அவர்களின் *திருவிதாங்கூர் கல்வெட்டுக்களின் அகராதி* (*Lexicon of*

Travancore Inscriptions) பயனுள்ள ஒரு சுருக்கமான அகராதி ஆகும். ஆயினும் அதில் கேரளத்தில் உள்ள தமிழ் மற்றும் மலையாளக் கல்வெட்டுச் சொற்களே இடம்பெற்றுள்ளன.

மேற்கண்ட அகராதிகளோடு ஒப்பிடுகையில், சாந்தி சாதனாவின் இந்த அகராதி விரிவான ஒன்றாகும். கி.பி. 400 முதல் 1800 முடிய உள்ள கல்வெட்டுக்களில் காணப்படும் ஆள், இடப்பெயர் தவிர்ந்த அனைத்துச் சொற்களும் முக்கிய சொற்றொடர்களும் இதில் இடம்பெற்றுள்ளன. (பிற்சேர்க்கை ஒன்றில் கி.பி. 400க்கு முந்திய கல்வெட்டுச் சொற்களும் சேர்க்கப்பட்டுள்ளன.) ஒவ்வொரு சொல்லுக்கும் காலம், மேற்கோள், சுட்டுநூல் ஆகியன சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வகராதிக்கான சொற்களைத் தொகுக்குமுன் அதற்கு அடிப்படையாகத் தேவைப்படும் கல்வெட்டுக்களுக்கு ஒரு காலமுறை அடங்கல் செய்யப்பட்டது. அதில் 1969 முடிய பல்வேறு நூல்களில் வெளியிடப்பட்ட சுமார் 9000 கல்வெட்டுக்கள் அடங்கும். முடிந்தவரை எல்லாக் கல்வெட்டுக்களுக்கும் கிறித்துவ ஆண்டு வரிசையில் காலம் குறிக்கப்பட்டது. ஆயினும் அரசன் பெயர், பஞ்சாங்கக்குறிப்பு அல்லது எழுத்தமைதி பற்றிய பதிப்பாசிரியர் குறிப்பு ஆகியன எதுவும் கிடைக்காத சில நூறு கல்வெட்டுக்களுக்குத் தோராயமான நூற்றாண்டே கொடுக்கப்பட்டுள்ளது. இம்முறையில் குறிப்பிட்ட நூற்றாண்டின் இறுதி ஆண்டு கல்வெட்டின் ஆண்டாகக் கொள்ளப்பட்டது -- காட்டாக ஒரு கல்வெட்டு 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்றால் அக்கல்வெட்டின் காலம் 900 ஆக எடுத்துக் கொள்ளப்பட்டது.

தமிழ்க் கல்வெட்டுக்கள் தமிழ்நாடு முழுவதும் கிடைப்பதோடு அண்டை மாநிலங்களான கேரளம், கருநாடகம், ஆந்திரம் ஆகியவற்றின் சில பகுதிகளிலும் இலங்கையிலும் (ஒரு சில தென்கிழக்கு ஆசியாவிலும்) காணக்கிடக்கின்றன. இவ்வளவு பரந்த பகுதியில் உள்ள கல்வெட்டுக்களில் கிளைமொழித் தன்மைகள் பரவலாகக் காணப்படுவது இயல்பே. குறிப்பாக கேரளத்தில் உள்ள கல்வெட்டுத்தமிழ் மலையாள மொழியின் தொடக்கநிலையாகக் கருத வேண்டும். இருப்பினும் பொதுவான சொற்கள் அவற்றில் ஆளப்பெறுவதால் அவையாவும் இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இலக்கிய மொழியைப் போல கல்வெட்டு மொழிக்கு ஒரு வரைவமைப்பு இருப்பதாகச் சொல்லமுடியாது. அது அன்றாட வழக்கு மொழியை மிகுதியும் கையாள்வதால் இயல்பாகக் காலந்தோறும் வட்டாரந்தோறும் வேறுபடும். இந்த வேறுபாடு இவ்வகராதியில் தெளிவாகப் புலப்படும்.

இதுவரை பதிப்பிக்கப்பட்ட கல்வெட்டு வெளியீடுகள் யாவும் ஒரே சீரான தரத்தைக் கொண்டுள்ளன என்று சொல்வதற்கில்லை. இருப்பினும் பெரும்பாலான வெளியீடுகளிலிருந்து சொற்கள் தொகுக்கப்பட்டுள்ளன. மிகச் சந்தேகத்துக்குரிய பாடங்கள் அல்லது கல்லில் சிதைந் துள்ள பகுதிகள் மட்டும் தவிர்க்கப்பட்டன. மக்கன்சி தொகுப்புக் கல்வெட்டுக்கள் அடங்கிய *தென்னிந்திய கோயிற் சாசனங்கள்* நூல் முழுவதும் பயன்படுத்தப்பட வில்லை, ஏனெனில் மக்கன்சியின் உதவியாளர்கள் மூலபாடங்களை மிகவும் திரித்து எழுதியுள்ளார்கள். அக் கல்வெட்டுக்களைச் சிறந்த கல்வெட்டறிஞரான தி.நா. சுப்பிரமணியம் அவர்கள் பதிப்பித்திருந்தாலும் சரியான மூலவடிவங்கள் பெறுதல் கடினமே.

அகராதி அமைப்பு

ஒவ்வொரு சொற்பதிவும் பின்வருமாறு உள்ளது: (1) கல்வெட்டுச் சொல் (தடித்த எழுத்தில்), (2) இலக்கணக்குறிப்பு, (3) பொருள், (4) சொல் வரும் கல்வெட்டின் காலம், (5) மேற்கோள் பாடம் (சாய்வெழுத்தில்), (6) சுட்டுநூல். இலக்கணக்குறிப்பில் பெயர் (பெ), வினை (வி), இடை (இ), உரி (உ) என்ற முதனிலைப் பாகுபாடு மட்டும் காட்டப்பட்டுள்ளது. தொடர்களுக்கு இலக்கணக்குறிப்பு இல்லை. ஒரு சொல்லோடு தொடர்புடைய பிற சொல்லை பிறை அடைப்பில் சமன் (=) குறியீட்டைத் தொடர்ந்து கொடுக்கப்பட்டுள்ளது. பொருளில் சந்தேகம் இருந்தால் அப்பொருளுக்குப் பின் கேள்விக்குறி உள்ளது. மேற்கோள் பாடத்தில் தவிர்க்கப்பட்ட அல்லது சிதைந்த பகுதிகள் மூன்று புள்ளிகளால் குறிக்கப்பட்டுள்ளன.

இவ்வகராதி காலமுறை அகராதியாகையால் ஒவ்வொரு சொல்லிற்கும் இயன்றவரை அதன் தனிப்பொருளோடு கூடிய முதல் வரல் (first occurrence) ஒவ்வொன்றும் கொடுக்கப் பட்டுள்ளது. சொற்கள் யாவும் கல்வெட்டில் உள்ளபடியே அவற்றின் உருவமைதியைத் திரிக்காமலும் திருத்தாமலும் கொடுக்கப்பட்டுள்ளன. சந்தேகமான பாடம் பிறையடைப்பில் கொடுக்கப் பட்டுள்ளது. ஒரு சொல்லின் பல வடிவங்களும் உரிய இடத்தில் வைக்கப்பட்டுள்ளன. பெயர்ச் சொற்களைப் பொறுத்தவரை வேற்றுமையுருபுகள் பெரும்பாலும் நீக்கப்பட்டுள்ளன. மொழி யாய்வுக்குப் பயன்படும் என்ற கருத்தில் ஒவ்வொரு வினைச்சொல்லுக்கும் அதன் விகற்பங்கள் யாவும் சேர்க்கப்பட்டுள்ளன.

அகராதி வைப்பு தமிழெழுத்து வரிசையில் இருந்தாலும் கல்வெட்டுக்களில் ஆங்காங்கு வழங்கப்படும் வடமொழிச் சொற்களையும், திரிபுச் சொற்களையும் சேர்க்க வடமொழி எழுத்து வரிசையும் பயன்படுத்தப்பட்டுள்ளது. வடமொழிச் சொற்களில் உள்ள கூட்டெழுத்துக்கள் பிரித்துத் தனித்தனி எழுத்துக்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன. (க்ஷ > க்ஷ; ந்த்ர > ந்த்ர). மேலும் அவற்றில் உள்ள வல்லின வருக்க எழுத்துக்களுக்களை தொடர்புடைய தமிழ் எழுத்துக்களோடு எண்குறியீடு சேர்த்துக் காட்டப்பட்டுள்ளன (*பார்க்க*: ஒலிபெயர்ப்பு முறை).

சொற்பொருளைப் பொறுத்தவரையில், பல சொற்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பொருள் கோடிகாட்டும் நிலையிலேயே கொள்ளவேண்டும். அவை சொற்கள் ஆளப்பட்டுள்ள சூழலை வைத்தே ஊகிக்கப்பட்டுள்ளன. ஏனென்றால் பல கல்வெட்டுச் சொற்கள் வழக்கற்றுவிட்டன. மேலும் பழைய நிகண்டுகளிலோ அகராதிகளிலோ இச்சொற்கள் காணப்படுவதில்லை. ஒரே சொல்லின் ஒன்றுக்கு மேற்பட்ட வடிவங்களுக்கு பொருள் கொடுக்கப்படவில்லை.

நன்றியறிதல்

இவ்வகராதியைத் தொகுக்கும் முயற்சியில் உதவியவகையில் பலருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். முதல் நிலையில் சொற்களைப் பாடப்பகுதியிலிருந்து பிரித்து அடைவு செய்ய உதவியோர் தஞ்சாவூர் புலவர் கா. சண்முகம் மற்றும் திரு ஆர். ஆளவந்தார் ஆகியோர்; அப்பொழுது பாடங்களையும் சொல்லடைவையும் கைப்படி செய்ய உதவியோர் பலர். அகராதியைத் திருத்தி இறுதி வடிவம் செய்யும் போது (2001–2002இல்) கணினியில் ஆங்கில (ரோமன்) எழுத்தில் ஒலிபெயர்ப்பு செய்து இடுவரல் செய்தவர் தமிழ்ப்பல்கலைக்கழகக் கல்வெட்டியல் துறையில் ஆய்வு மாணவியர் செல்வி ந. முத்துலட்சுமி, திருமதி சீ. நீலாவதி ஆகியோர். சுட்டுநூல்களைச் சரிபார்த்தும் மெய்ப்புத் திருத்தியும் உதவியவர் ஆய்வு மாணவி செல்வி மா. பவானி மற்றும் என் துணைவியார் திருமதி உஷாதேவி ஆகியோர். இறுதி நிலையில் மெய்ப்புத் திருத்தியதோடு பொருள்களை முழுவதும் ஒருமுறை கவனமாகப் படித்துச் சரிபார்த்தும் உதவினர் தமிழ்நாடு தொல்லியல் துறையைச் சேர்ந்த முனைவர் சு. இராசகோபால், முனைவர் வெ. வேதாசலம் ஆகியோர்.

எல்லாவற்றுக்கும் மேலாக இப்பொறுப்பை என்னிடம் கொடுத்து, தொடக்கமுதல் ஊக்குவித்து வந்த அமரர் சா. ராஜம் அய்யா அவர்களை என்றும் மறக்க இயலாது. அவருடைய அளவுகடந்த ஆர்வமே இந்நூல் முழுமையடையத் தூண்டுகோலாக அமைந்தது. அவருக்குப்பின் அவருடைய துணைவியார் திருமதி தங்கம்மாள் அவர்கள் இந்நூல் கூடிய விரைவில் வெளிவர விரும்பினார்கள். அவர்கள் விருப்பம் ஈடேறும் வகையில் அறக்கட்டளைப் பொறுப்பாளர் திரு. ஸ்ரீவத்சா அவர்கள் கடந்த ஈராண்டுகளுக்கு மேலாக இப்பதிப்புப் பணியில் மிகுந்த உற்சாகம் காட்டி அதற்கான ஏற்பாடுகளைத் திட்டமிட்டு வழிநடத்தி வருகிறார்கள். குறித்த நேரத்தில் முடியவில்லை யென்றாலும் சிறிது காலந்தாழ்த்தியாவது இப்பணியை நிறைவேற்றுவதில் மகிழ்ச்சி யடைகிறேன். இந்த அகராதி வெளியீட்டில் பயன்படுத்தப்பட்ட அணங்கு எழுத்துக்கள் திரு. பெரியண்ணன் குப்புசாமி அவர்களால் உருவாக்கப்பட்டவை, பயன்படுத்த அனுமதியளித்த அவருக்கும் நன்றி. இந்த அகராதியை மேலும் மேம்படுத்த இதைப் படித்துப் பயன்படுத்துவோர் உரிய அறிவுரை நல்குவாராக.

23.6.2002

எ. சுப்பராயலு
கல்வெட்டியல்துறைப் பேராசிரியர் (ஓய்வு)
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

சுட்டு நூல்களும் அவற்றின் சுருக்கமும

(CITED WORKS WITH THEIR ABBREVIATIONS)

ALB	*Adyar Library Bulletin.*
ARASI	*Annual Report of Archaeological Survey of India.*
ARE	*Annual Report on (South) Indian Epigraphy.*
AVNM	*Avanam* (ஆவணம்) (Journal of Tamizhakat tolliyal Kazhakam).
CHEN	*Chentamizh* (செந்தமிழ்) (Journal of Madurai Tamizh Changam).
CHHS	*Chengam Herostones* (செங்கம் நடுகற்கள்) (TSAD, 1972).
EC	*Epigraphia Carnatica.*
EI	*Epigraphia Indica.*
EZ	*Epigraphia Zeylanica.*
IA	*Indian Antiquary.*
IPS	*Inscriptions of the Pudukkottai State*, 1929.
IPS(Trns)	*Inscriptions in the Pudukkottai State (Translations)*, 1941, 1946.
JOR	*Journal of Oriental Research.*
KANDT	*Kanyakumari District Inscriptions*, 5 vols. (TSAD, 1972, 1979).
MASI	*Memoirs of Archaeological Survey of India.*
MCCM	*Madras Christian College Magazine.*
NI	*A Collection of the Inscriptions on Copper-plates and stones in the Nellore District*, 1905.
PLCP	*Thirty Pallava Copper Plates* (Tamil History Academy, Chennai, 1966).
PNDCP	*Ten Pandya Copper Plates*(Tamil History Academy, Chennai, 1967).
SII	*South Indian Inscriptions*, vols.i to xxiv (Archaeological Survey of India).
TAMARAI	*Tamaraippakkam Inscriptions (தாமரைப்பாக்கம் கல்வெட்டுகள்)* (TSAD, 1999).
TAMIZ	*Tamizhakam /Damilica* (Bulletin of TSAD).

TAS	*Travancore Archaeological Series*, vols. i-ix (I ed., 1910-47).
TASSI	*Transactions of Archaeological Society of South India.*
TDI	*Tirupati Devasthanam Inscriptions* (Tirumala-Tirupati Devasthanam Epigraphical Series).
TMPL	*Tamizhppozil* (*தமிழ்ப்பொழில்*) (Journal of Karandai Tamizh Changam).
TSAD	Tamil Nadu State Department of Archaeology.
UCR	*University of Ceylon Review.*

கிரந்த எழுத்து ஒலிபெயர்ப்பு முறை
(Transliteration scheme for Grantha letters)

கிரந்தம்	தமிழ்	Roman	கிரந்தம்	தமிழ்	Roman
𑌕	க	ka	𑌤	த	ta
𑌖	க$_2$	kha	𑌥	த$_2$	tha
𑌗	க$_3$	ga	𑌦	த$_3$	da
𑌘	க$_4$	gha	𑌧	த$_4$	dha
𑌚	ச	cha	𑌪	ப	pa
𑌛	ச$_2$	chha	𑌫	ப$_2$	pha
𑌜	ஜ	ja	𑌬	ப$_3$	ba
𑌝	ஜ$_2$	jha	𑌭	ப$_4$	bha
𑌟	ட	ṭa	𑌶	ஸ$_0$	śa
𑌠	ட$_2$	ṭha	𑌷	ஷ	sha
𑌡	ட$_3$	ḍa	𑌸	ஸ	sa
𑌢	ட$_4$	ḍha			

அ

அஇில் (பெ) (= அயில்), வேல் (771) *தீவாய் அஇிலேந்தி* (EI,xvii,16.)

அஃகம் (பெ) தானியம் (887) *ஒரு காசுக்கு நிறைமதி நாராயத்தாற் பதின் கல நெல்லஃகமாக* (SII,xiv,16a.)

அக்கசாலை (பெ) பொன்வேலை செய்வோர் (1100) *அக்கசாலைப் பெரும்பள்ளி ஆழ்வார் கோயிலுக்கு திருவுத்ஸவம்* (AVNM,3,p.47); (1264) *யாவருந் தொழுந் தொழியல்லரான அக்கசாலையும் பள்ளியும் ஆனையாக வுடைய அறுவகைத்தொழில் நால்வகை ரத$_2$காரரோம்* (SII,vi,439)

அக்கசாலைப் பெரும்பள்ளி (பெ) அக்கசாலைக் குழுவினர் பேரில் உண்டாக்கப்பட்ட புத்தப்பள்ளி (1100) *அக்கசாலைப் பெரும்பள்ளி ஆழ்வார் கோயிலுக்கு திருவுத்ஸவம்* (AVNM,3,p.47)

அக்கம் (பெ) ஒரு சிறு நாணயம் (994) *திங்கள் ஓரக்கமாக ஆண்டு வரை பன்னிரண்டக்கம்* (SII,xvii,472.)

அக்கரைதேசிகள் (பெ) ஓர் இனப்பிரிவு(?) (1800) *மலைமண்டலத்து அக்கரை தேசிகளில் கிட்டிணன் நாறண நம்பி* (KANDT,1968/134.)

அக்கன் (பெ) தமக்கை (1014) *ஸ்ரீ ராஜராஜீச்[வர முடையார்க்கு நாங்குடுத்தனவும் அக்கன் குடுத்தனவும்* (SII,ii,1.)

அக்கன் காணிக்கை (பெ) ஒரு வரி (1330) *வழிநடை காணிக்கை அக்கன் காணிக்கை காத்திகைக் காணிக்கை* (TDI,i,101.)

அக்காரடலை (பெ) வெல்லச் சோறு (910) *நானாழி அரிசியும் ... நெய் உழக்கும் ஒருமையுள் அக்காரடலைக்கு நீக்கி நின்ற* (SII,xix,60.)

அக்காரடியல்லமுது (பெ) (= அக்காரடலை) (910) *நியதம் அக்காரடியல்லமுது செய்வதற்கு* (SII,xix,60.)

அக்காரவட்டு (பெ) வெல்லக்கட்டி (985) *புளிங்கறி ஒன்று அக்காரவட்டு இரண்டு வாழைப்பழம் இரண்டு* (SII,xiii,91.)

அக்காளி ப்ராஸாத$_3$ம் (பெ) கோயில் பிரசாத வகை (1446) *அக்காளி ப்ரஸாத$_3$ம் நாழியும் அப்ப ப்ராஸாத$_3$ம் ஏழும்* (TDI,i,220.)

அக்கிர (பெ) (= அக்கிரப்புறம்) (960) *நக்கங் கேரளனமச்ச அக்கிர ஒன்று* (TAS,iii,p.159-69.)

அக்கிரசாலை (பெ) (பிராமணருக்கு) கோயிலில் உணவளிக்கும் இடம் (999) *திருவக்கிர சாலையிற் கூட்டம் நிரம்பக் கூடி இருக்க* (TAS,ii,p..1-7.)

அக்கிரப்புறம் (பெ) பிராமணரை ஊட்ட இறையிலியாக விடப்பட்ட நிலம் (932) *அக்கிரப்புறத்திற் ஒரு பொறி கண் பூழிற் பதின்றூணிப்பாடு* (SII,vii,173.)

அக்கிரம் (பெ) சிறந்த உணவு (992) *பூமியுமுமவர் திருவமிர்தினு வித்து மக்கிரத்தினு உணக்கி யுரிபோகி நெல்லு* (TAS,ii,p.34-37.)

அக்கிரம் (பெ) முதன்மையான (பிராமண) ஊர் (905) *அலர் கமழும் பொனலளற்று நாட்டுக்கு அக்கிரம் ஆகிய ... முசுக்குறிச்சி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

அக்கிற மண்டபம் (பெ) கோயிலின் முன்மண்டபம் (1287) *இனாயனார் கோயில் திரு அக்கிற மண்டபம் முன்பு* (SII,xvii,561.)

அக்ர3போ$_4$ஜநம் (பெ) பிராமணருக்கு ஊட்டும் உணவு (1111) *கருணாகரந் சாலை அக்$_3$ரபோ$_4$ஜநத்துக்கு கலம் ஐஞ்சுக்கு* (SII,vii,409.)

அக்ஷமாலை (பெ) ஜபமாலை (905) *அக்ஷமாலைஒடு தோன்றினன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

அகடு (பெ) முகடுச்சி (785) *அகல் வானத்துஅகடுருஞ்சும்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

அகத்தார் (பெ) அரண்மனையைச் சேர்ந்தவர் (802) *விண்ணகோவரையர் அகத்தார்க்கு* (SII,xii,42.)

அகத்தியன் (பெ) கோத்திர முதல்வருள் ஒருவர் (921) *அகத்தியனை புரோஹிதனாகப் பெற்றது* (SII,iii,206a.)

அகத்து (பெ) முற்பகல் (950) *அகத்திருபத்தைய் யடியில் முன்னே திருவமிர்து செய்யக் கடவியர்* (TAS,iii,p.189-91.)

அகத்துண்டம் (பெ) குறைபடும் தொகை (1312) *குடிமகன் ஊணொபாதி பட கிடந்த சிகை அகத்துண்டம் காட்டாதொழிய* (SII,viii,25.)

அகத்துப்பட்ட (வி) உட்பட்ட (1120) *நான்கெல்லை அகத்துப்பட்ட நிலம்* (SII,vii,542.)

அகநகர் (பெ) கோட்டைக்கு உட்புறத்தேயுள்ள நகரம் (1026) *பெருநிதிப் பிறக்கமும் ஆர்த்தவனகநகர் போர்த்தொழில் வாசலில்* (IPS,98.)

அகநாழி (பெ) (= அகநாழிகை) (866) *அகநாழிப் பணி நாலுக்குமாக* (TAS,i,p.1-14.)

அகநாழிகை (பெ) கோயில் கருவறை (866) *அகநாழிச் சென்னடைக்கு அட்டின பூமி* (TAS,i,p.1-14.)

அகநாழிகைப் பணிசெய்வார் (பெ) பூசாரி (866) *அகநாழிகைப் பணிசெய்வார் படாரரை* (TAS,i,p.1.14.)

அகநாழியெ (பெ) (= அகநாழிகை) (1000) *பாலையூரோடொக்கும் அகநாழியெச் செலவினான்* (SII,v,784.)

அகப்பட்ட (வி) உட்பட்ட (550) *பெருநான் கெல்லையகத்து மகப்பட்ட நிலம்* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

அகப்பட்டது (பெ) அடங்கியது (800) *இவ்வெல்லைக்குளகப்பட்டது* (TAS,iii,p.200-03.)

அகப்படுத்தி (வி) உட்படுத்தி (1008) *இவ்வூரு மகப்படுத்திவந்த இறையும்* (SII,xvii,614.)

அகப்பரிவாரம் (பெ) அரண்மனை பணியாளர் குழுவில் ஒன்று (1031) *நம்பிராட்டியார் முக்கோக்கிழானடிகள் அகப்பரிவாரத்து உத்துங்க சோழ வளநாட்டு அரையன்* (TAS,vi,3.)

அகப்பிணவர் (பெ) ஒரு சாதியினர் (1168) *செக்கார் ஒழுக்கைக்கு மேற்கும் அகப்பிணவர் தெருவுக்கு வடக்கும்* (SII,xvii,588)

அகப்பொதுவாள் (பெ) கோயில் கருவறையை நிர்வகிக்கும் குழு (961) *....பொதுவாளும் அகப் பொதுவாளும்...* (TAS,viii,p.43-44.)

அகம் (பெ) வீடு (919) *தன்மனையிலே அகம் எடுத்துக் கொண்டு இருப்பாநைய்* (ARASI,1904-05,p.131.)

அகம் (பெ) உள்ளே (550) *பெருநான்கெல்லை யகத்து மகப்பட்ட நிலம்* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

அகம் (இ) இடம் (731) *ஊருணி அகத்துப் பொற்குளச் சடங்கவியாரேத்தது* (SII,viii,331.)

அகம்படி (பெ) கெடு அல்லது தவணை (817) *மூயாண்டின் அகம்படியுடையான் மீள்க வரில்* (SII,vi,344; EI,xxiv,7a.)

அகம்படி (பெ) அகம்படிச் சாதியைச் சேர்ந்த வீரர் (1171) *பெரியதேவர் ராஜராஜதேவர் பேர்த்து கோயிற் கொத்து மாவர்க் குதிரை அகம்படி நீயாயம் உள்ளிட்ட துறைகளுக்கும்* (EI,xxi,31.)

அகம்படி (பெ) உள்பட்ட (750) *பெருநான் கெல்லையின் அகம்படிப்பட்ட பூமி* (EI,v,8.)

அகம்படி மறமுதலி (பெ) அகம்படி மறவர் என்ற வீரர்களுக்குத் தலைவன் (1151) *குலோத்துங்க சோழக் கடம்பராயந் அகம்படி மறமுதலிகளில் நாற்றந் பெரியாநாந* (IPS,181.)

அகம்படியார் (பெ) அகம்படி இனத்தைச் சேர்ந்தவர் (1225) *கூத்தாடுந் தேவர் அகம்படியாரில் தந்திரபாலன் பெரியுடையாநேன்* (EC,x,Mb.53.)

அகமண்டகம் (பெ) உள் மண்டபம் (862) *அண்ணலக மண்டகம் புதுக்கி* (SII,xiv,45.)

அகமுடையாள் (பெ) மனைவி (948) *தேவன் சொற்றுணை அகமுடையாள் சேட்டங்கை வைத்த* (SII,viii,735.)

அகயாறு (பெ) ஆற்றோரத்தின் உட்பகுதி (1217) *நிலத்திலும் அகயாற்று படுகையிலும்* (SII,xvii,604.)

அகர சீர்மை (பெ) பிராமணர்களுக்கு இறையிலியாக வழங்கப்பெற்ற நிலம் (1478) *இன்னயினார் திருமுற்றத்து வைத்த அகர சீர்மை பிறமாணத்தின்படி கால் நாட்டிக் குடி பூதுவித்தும் குடுத்த* (TAS,ix,p.12-14.)

அகரப்பற்று (பெ) பிராமணர் உரிமை நிலம் (1190) *தேவதானம் திருவிடையாட்டம் அகரப்பற்றும் சிறப்பும் வன்னியப்பற்றும் உட்பட நாட்டுக்கு* (SII,vii,90.)

அகரப்$_3$ரஹ்மதே$_3$யம் (பெ) பிராமணருக்காக விடப் பெற்ற ஊர் (1190) *கேரளசிங்க வளநாட்டு அகரப்$_3$ரஹ்மதே$_3$யம் செய்யாமங்கலமான அம்பலத்தாடிச் சதுப்பேதிமங்கல மென்னும் பேரால்* (SII,xiv,243.)

அகரம் (பெ) பிராமண ஊர் (1236) *இவ்வூர்த் தேவர்கள் தேவதானம் அகரங்கள் உள்பட்ட இறையிலிகளுக்கு* (SII,xii,119.)

அகர ஒட்டு (பெ) பிராமண ஊர்கள் செலுத்த ஒப்பந்தமான நிலவரி (1260) *நெல்லு முப்பத்தேழுகலனே பதக்கு நானாழி உரிக்கு அகர ஒட்டுப்படி நெல்லு பதினைங் கலனே* (SII,viii,56.)

அகல் (பெ) குழிந்த தட்டு (991) *குடுத்த செப்புக் கலசம் 116 செப்புக்குடம் 1 சிப்புக் கரகம் 1 இவைச்சுக்கு மூடச் செப்பகல் 118* (SII,xiii,144.)

அகல் (பெ) அகல் விளக்கு (985) *இவள்ளே இட்ட செப்பு அகல் 32 நிறை 320 பலம்* (SII,xix,276.)

அகல் (வி) பரந்த: அகன்ற (785) *அகல் வானத்தகடுருஞ்சும் பாழி* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

அகல்வித்தும் (வி) நீக்குவித்து (905) *வானரத்$_3$த்$_4$வஜன் வஸூசா$_0$பமகல்வித்தும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

அகல (வி) விலகி (785) *பகலவனுமகல வோடும்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

அகலத்தவன் (பெ) பெருமையுடையோன் (1000) *ஆளியைச் சேர்ந்த வகலத்தவனுக் கிளைய* (SII,iv,167.)

அகல நீக்கி (வி) அழித்து (771) *ஆதி$_4$ராஜரை அகல நீக்கி* (EI,xvii,16.)

அகலம் (பெ) இடைவெளி (753) *இக் கால்களுக்கு கோலகலமும்* (SII,ii,73.)

அகலமணி (பெ) ஒரு நகை (1191) *ஆணி 49 அகலமணி 101ம்* (SII,viii,329.)

அகல வைத்து (வி) விரித்து வைத்து (921) *அஞ்சு விரலும் அகல்வைத்து* (ARASI,1904-05,p.131.)

அகலிடம் (பெ) பூமி, நாடு (771) *அகலிடத்தைக் களப்$_4$ரன் என்னுங் கலி அரைசன் கொண்டதனை* (EI,xvii,16.)

அகவயல் (பெ) நடுவயல் (1300) *இவையிற்றில் தன் முறையி..ரிலே அகவயல் விழுக்காடு விடக்கடவோமாகவும்* (IPS,533.)

அகவாய் (பெ) உள் கால்வாய் (890) *இவ்வூர் அகவாயின் வெங்கூர் நாலாங் கண்ணாற்று* (SII,xiii,287.)

அகவாய் (பெ) உள்பக்கம், அடிப்பக்கம் (986) *மேல் அகவாயும் புறவாயும் மகுடமும் பொன் ஆசித்து* (SII,xix,390.)

அகவாய் (பெ) கட்டிடத்தின் ஓர் உறுப்பு (1800) *நாயனார் திருக்கற்றளி பலகைப் படையும் பஞ்சரமும் அகவாயுஞ் செய்தான்* (IPS,1014.)

அகவாறு (பெ) (= அகயாறு), ஆற்றினுள் கரையோரத் திட்டு (772) *நம்மகவாற்று துக்கியார் அட்டகத்துக்கும் கிழக்கும்* (SII,xiv,19.)

அகவினை (பெ) ஊதியம் பெறா உழைப்பு (1006) *செந்நீர்க்ககவினை செய்யாததாகவும்* (SII,v,518.)

அகவும் (வி) ஒலிக்கும் (771) *குஇலோடு மஇலகவும்* (EI,xvii,16.)

அகழ் (பெ) அகழி (785) *ஆழி முந்நீரகழாக* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

அகழி (வி) அகழ்ந்து (910) *புன்செய்த்திடல் கல்லி அகழி திருத்தி மயக்கிக் குடுத்த நிலம்* (SII,v,533.)

அகற்றி (வி) நீக்கி (771) *அறை கடல் வளாகம் பொதுமொழி அகற்றி* (EI,xvii,16.)

அகன்றது (பெ) அகலமானது (785) *கண்ணகன்றதோர் கல்லகமொடு* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

அகனிலத்தோர் (பெ) உலகிலுள்ள மக்கள் (905) *கார் முளைய அகனிலத்தோர்* (TASSI,1962-65,p.1-31.)

அக$_{2}$ண்டா$_{3}$ர்ச்சநா போ$_{4}$கக்காணி (பெ) பரம்பரையாக அர்ச்சனை செய்யும் உரிமை (1103) *அவிமுக்தீச்$_{0}$வர ஸத்மத்தில் அக$_{2}$ண்டா$_{3}$ர்ச்சநா போ$_{4}$கக் காணியுடையனாயிநார்* (SII,vii,404.)

அக$_{3}$ம்யாக$_{3}$மனம் (பெ) தகாத உறவு கொள்ளல் (921) *அக$_{3}$ம்யாக$_{3}$மனத்திலும் மஹா பா$_{4}$தகங்கள் முன்படைந்த நாலு மஹாபாதகத்திலும்* (ARASI,1904-05,p.131.)

அகாரணக் கங்காணி (பெ) கோயில் கண்காணி (1257) *தேவகன்மி கோயிற் கணக்கனும் இவ்வனைவோம் இப்பட்டிக்கு எழுத்திட்டார் அகாரணக் கங்காணி தற்புவுதேவார் எழுத்தென்றும்* (SII,xvii,576.)

அகாலகாலன் (பெ) எமன் போன்றவன் (815) *அகங்க்ய விக்ரமந் அகாலகாலன்* (SII,iii,206b.)

அகில் (பெ) தூபவர்க்கங்களிலொன்று (887) *அகிலுட்பட கற்பூரமுந்* (SII,xiv,16a.)

அகில் (பெ) அகில் மரம் (1000) *பேரகில் வஞ்சியென்று பயிலாக்கிளியும் மயிலும்* (SII,iii,167.)

அகில் சுமை (பெ) அகில்மரக் கட்டு (1300) *அகில் சுமை ஒன்றுக்குக் காசு முப்பதும்* (SII,viii,442.)

அகில லோகங்கள் (பெ) எல்லாவுலகங்களும் (1176) *காக்கும்மென அகில லோகங்களும் அடியடைக் குலைபடுவன்* (SII,xvii,585.)

அகையாறு (பெ) (= அகவாறு) (892) *இல்ல வளாகமும் தோட்டமும் அகையாறும் புன்செய்யும் மென்செய்யும்* (SII,iv,531.)

அகோ$_{4}$ர ஸுபூஜை (பெ) சிவபூஜை (1168) *இருபத்தெட்டு நாள் அகோ$_{4}$ர ஸுபூஜை பண்ணியருளிநார்* (SII,vii,456.)

அக்$_{3}$நி (பெ) நெருப்பு (958) *தண்ணீர் அட்டுவதற்கும் அக்$_{3}$நி யிடுவதற்கும்* (EI,iii,38d.)

அக்$_{3}$நி கார்ய்யம் (பெ) தீ வளர்த்துச் செய்யப்படும் யாகம் முதலியன (984) *நிசத மூன்று ஸந்தி$_{4}$யும் அக்$_{3}$நி கார்ய்யத்துக்கு நிவந்தஞ் செய்த பரிசாவது* (SII,iii,140; SII,xix,349.)

அக்$_{3}$நிஷ்டை (பெ) தீச்சட்டி (960) *ஆறு மாஸம் அக்$_{3}$நிஷ்டை இடுவதாகவும்* (SII,iii,14.)

அக்$_{3}$நி ஆஹார ப்ரஸாத$_{3}$ம் (பெ) தீயில் ஆகுதி செய்யும் உணவு (1476) *இந்த சந்தியில் திருப்பணி அக்$_{3}$நி ஆஹார ப்ரஸாத$_{3}$ம் உழக்கும் தேவையாட்கள் பெற்றுவரக் கடவர்களாகவும்* (TDI,ii,68.)

அக்$_{3}$ரம் (பெ) விருந்து: நிறைவான உணவு (870) *இவ்வக்$_{4}$ரம் அடுவிச்சு ஊட்டுவிக்கக் கடவார்* (SII,xix,163.)

அக்$_{3}$ரம் (பெ) உச்சி (1014) *பர்வ்வதத்துக்கு மேல் அக்$_{3}$ரத்தளவுஞ் செல்ல ஒரு முழமேய்* (SII,ii,50.)

அக்$_{3}$ராயதநம் (பெ) தலையான கோயில் (1113) *அபயகிரி மஹாவிஹாரத்து அக்$_{3}$ராயதநமான* (SII,iv,1396; EI,xviii,38; EZ,ii,p.242-55.)

அக்$_{3}$ராஹாரம் (பெ) பிராமண ஊர் (700) *அக்$_{3}$ராஹாரம் பல செய்து* (EI,xxxviii,4.)

அங்கக்களரி (பெ) ஒரு மரியாதைச் சின்னம் (1477) *நமக்கு உண்டான வரிசை பாவாடை சேமயிர் அடக்கம் நாடக சாலை பகல் விளக்கு ஏறச் சங்கு இறங்கச் சங்கு அங்கக் களரி புலித் தண்டை* (IPS,715.)

அங்ககாறன் (பெ) ஐந்நூற்றுவர் வணிகக்குழுவோடு தொடர்புடைய வீரர் (1050)

கொங்கவாள் ளெழுநூறும் அங்ககாறனும் ஆவணக்காறனும் உலகனும் (AVNM,2,p.6-8)

அங்கசுத்தம் (பெ) ஒரு நகை (1279) *கதிர்மணி மகுடமுஞ் செங்கதிரெறிக்கு மங்கசுத்தமும் பாகுவலையமும்* (SII,viii,69.)

அங்கணம் (பெ) முற்றம் (1539) *கீழை அங்கணத்தில் பட்டர்கள் மனைவாசலில் திருவேங்கடமுடையான்* (TDI,iv,129.)

அங்க தேவதை (பெ) பரிவார தேவதை (1000) *அங்க தேவதைக்கு உரி* (TAS,ii,p.173-207.)

அங்கம் (பெ) கூத்துள் ஒரு பகுதி (960) *ஆக இந்தக் கூத்து ஏழு அங்கமும் ஆடுவதாகவும்* (SII,iii,202; SII,v,718.)

அங்கமணி (பெ) சீதனம்: பெற்றோர் மகளுக்குக் கொடுக்கும் சொத்து (731) *தேவ பூதி அங்கமணி பெற்ற செறுவின் தலை* (SII,viii,331.)

அங்கரங்கவைபோ$_{4}$க$_{3}$ம் (பெ) விக்கிரக அலங்காரம், பூசை, படைப்பு முதலிய அனைத்து தேவைகளும் (1575) *வேலூர் ஜ்வர கண்டேச்$_{0}$வரஸ்வாமிக்கு அங்கரங்க வைபோ$_{4}$க$_{3}$த்துக்கு விடுவித்த க்ராமம்* (SII,i,48)

அங்கராகம் (பெ) உடலிற் பூசப்படும் மணப்பொருள் (921) *நிலப்பெண்ணிற்கு அங்கராகமென நிவப்பாணி தந்தும்* (SII,iii,206a.)

அங்கவர் (பெ) ஓர் அரசகுலம் (1136) *வங்கரங்கவர்* (SII,vii,1038.)

அங்க$_{3}$ஸாலெவரி (பெ) நாணயச்சாலை பொருட்டு செலுத்தும் வரி (1432) *நாடு கணக்குவரி அங்க$_{3}$ஸாலெவரி ஆளமஞ்ஜி ஊளிகம்* (EI,xviii,17.)

அங்காடி (பெ) கடைத்தெரு (849) *இவ்வீழவர்தம் வண்டி குணர்ந்து அங்காடியிலும் மதிலிலும்* (TAS,ii,p.67-68.)

அங்காடிக்கூலி (பெ) கடைகள் மீதான வரி (873) *எங்களூர் கடைத்தெருவில் அங்காடிக்கூலியாவது* (SII,iii,90.)

அங்காடிப் பாட்டம் (பெ) (= அங்காடிக் கூலி) (960) *கண்ணாலக் காணமும் அங்காடிப் பாட்டமும்* (EI,xv,5.)

அங்கா$_{3}$ர ப$_{3}$லி (பெ) நெருப்பால் நிவேதனஞ் செய்தல் (1024) *அங்கா$_{3}$ர ப$_{3}$லிக்கு நாளோன்றுக்கு ஆடோன்றாக* (EC,x,Kl.112a.)

அங்கி கார்ய்யம் (பெ) தீயில் செய்யப்படும் ஓமம் முதலியன (983) *அர்த$_{4}$யாமத்துக்கு சென்நெலரிசி குறுணியிருநாழியிம் அங்கி கார்ய்யத்துக்கும் முழாகும்* (SII,xix.322.)

அங்கிஸ முத்திரை (பெ) அன்னம் போன்ற குறியீடு (1554) *யிருனூறு எருத்துக்கு அங்கிஸ முத்திரையுடந் போக்கி நடவைக்கு* (TDI,v,154.)

அங்குசம் (பெ) யானைத் தோட்டி (1044) *வீராங்குசமும் விட்டி வாராணமல்ல விமலாதித்தனையும்* (SII,v,1352.)

அங்கு நின்றும் (பெ) அவ்விடத்திலிருந்தும் (739) *அங்கு நின்றும் போந்து* (SII,iv,135; MASI,lxiii,p.54-59.)

அங்குரார்பணம் (பெ) முளைத் தானியம் தெளித்தல் (1464) *அவணி மாஸத்தில் பூர்வ பக்ஷத்தில் த$_{3}$ச$_{0}$மிநாள் இராத்ரி அங்குரார்பணம் பண்ணி* (TDI,ii,18.)

அங்கை (பெ) உள்ளங்கை (800) *என் கையளவிற்றேய் பாண விகல்வீக்குமங்கைச் செரு வேல் மாவல்ல....* (EI,xiii,10.)

அங்ஙாடி (பெ) கடைத்தெருவில் வசூலாகும் வரி (1000) *குடவூர்க்குப் படும் பதினெட்டு வரியையும் அங்ஙாடி யுமகப்படத் திருவல்ல வாழப்பனு* (TAS,ii,p.173-207.)

அங்சோபாதி (பெ) பங்குக்கான வரிக்கடமை (1242) *எங்கள் அங்சோபாதிக் குடல்லாக நாங்கள் இன்னாயனாற்கு திருநாமத்துக்காணியாக* (SII,vii,289.)

அச்சஞ்சு (பெ) ஐந்தைந்து: ஐந்து வீதம் (811) *இந்நில கடமையில் அச்சஞ்சு பழங்காசு வெவ்வேற்று வகை இரட்டி* (SII,xiv,41.)

அச்சதறி (பெ) ஒருவகைத் தறி: அதன் மீது

விதிக்கப்பட்ட வரி (1243) *தாப்படி அரிசி அச்சதறி சாலிகைத்தறி தூசக்கதறி பறைத்தறி செக்குக்கடமை* (SII,i,64.)

அச்சினா போகம் (பெ) (= அர்ச்சினா போகம்) (1007) *நிலமிரு வேலியும் மச்சினா போகமானதிவ்வயல் நீங்கலாக நின்ற நீர் நிலத்திலே* (IPS,85.)

அச்சுக்கட்டு (பெ) இறைகட்டும் நிலம் (1389) *குடியும் ஏற்றி கரம்பும் திரித்தி அச்சுக் கட்டாக்கி பயிற் செய்ய கடவராகவும்* (SII,viii,72.)

அச்சுப் பொலிசை (பெ) அச்சு என்ற நாணயமாகச் செலுத்தப்படும் வட்டி (1224) *வேண்டுவனவற்றுக்கும் அச்சுப் பொலிசையாற் செல்வதாக* (CHEN,xii,p.498.)

அச்சுவதி (பெ) அசுவினி நட்சத்திரம் (973) *மிரிச்சிக ஞாயிற்று ஞாயிறாண்ட அச்சுவதி இந்நாளால்* (EI,ix,32; TAS,iv,p.1-11.)

அச்சுவரி (பெ) ஒரு வரி (1223) *கணக்கப் பேறு வார மாக்கலம் வெட்டி முட்டாவாள் அச்சுவரி மாதக்காசு பலவரிசி* (IPS,267.)

அச்சு வற்கம் (பெ) பணமாக இறுக்கும் வரிகள் (1281) *பதினாறாவது முதல் கைக்கொண்டு உழுது அச்சுவற்கம் இறுத்தும்* (SII,v,243.)

அசல் (பெ) அண்டை (1422) *உட்கோயில் புறக்கோயில்களில் நாயன்மாரையும் பூஜித்து அசல்நம்புக்கு ஒத்த மரியாதி உடைமையும்* (SII,v,762.)

அசல் (பெ) அண்டையிலுள்ளோர் (1193) *இந் நாயனார் தேவதானம் அசல் இறுத்தபடி இறுக்கக் கடவேனாகவும்* (IPS,219.)

அசல் (பெ) எஞ்சிய (1455) *ஏகனாயக பட்டனும் குமாரஸ்வாமி பட்டனும் நீங்கலாக அசறபங்காளர் நாலு பேரும் ஊர்வழிபோய்* (SII,v,767.)

அசலாசலன் (பெ) மலையைப் போன்று உறுதி படைத்தவன் (905) *அணி நீள் உயத்தஹிதாக்ஙி அசலாசலன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

அசலூர் (பெ) பக்கத்தூர் (1342) *விளைந்த நிலத்துக்கு அசலூரிற் பாடி காவலுக்குப் பெறுமரியாதி பெறுவாராகவும்* (IPS,440.)

அசனம் (பெ) உணவு (1488) *ஒரு ப்ராஹமணன் நமஸ்காரமாக நாள்தோறும் அசனம் செய்து போர கற்பித்து* (TAS,vii,p.15.)

அசுபதி (பெ) குதிரைப் படைக்குத் தலைவன் (1798) *அசுபதி கெசபதி தனபதி நரபதி நரவேட்டை கண்டருளிய மல்லிகாற்சுன தேவமாகாராயர்* (IPS,763.)

அசும்பு (பெ) நீர் ஊற்று (785) *முகிறுஞ்சலில் லசும்பறாத* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

அசுரம் (பெ) அரக்கர் (905) *தேவாஸுரஞ் செரு வென்றும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

அசுரர் (பெ) அரக்கர் (1000) *எழுதப்படா வுருவத் தசுரர்* (SII,iv,167.)

அசுவதியாகம் (பெ) அசுவமேத யாகம் (1726) *இந்தத் தன்மத்தை பரிபாலபாகமாக நடத்தின பேர்கள் அசுவதியாகம் வளத்த பலன்* (KANDT,1968/274.)

அசே$_0$ஷம் (பெ) எல்லா (1060) *ஸிம்ஹச் சதுர்வேதிமங்கலத்து அசேஷம் மஹாஜநங்களும் கமரச் செட்டியாரும்* (EC,ix.Cp.154.)

அசைப்ப (வி) வீச (1192) *கவரி சேர செம்பியர் திரண்டருகசைப்ப* (SII,v,301.)

அசைவில் (வி) கலங்குதலில்லாத (1045) *வீரகேரளனை ஆனைக் கிடுவித்தசைவில் சுந்தரபாண்டியனை* (SII,vii,842.)

அசோகு (பெ) மர வகை (1000) *சுழலும் மலரும் மசோகும் பலாசுந் துடரா* (SII,iv,167.)

அச்$_0$வஜாதீயம் (பெ) குதிரை சேணம் முதலியன செய்தல் (1200) *கம்மாளந் இவநுக்கு தொழில் அஸ்வஜாதீயமும்* (SII,xvii,603.)

அச்$_0$வபதி (பெ) குதிரைப்படைத் தலைவன் (1012) *மஹிபதி வழிமுதலதிபதி நரபதி அச்$_0$வபதி* (SII,vii,863.)

அஞ்ச (வி) பயப்பட (800) *நாகங்கண்டஞ்ச வென் னெஞ்சம்* (EI,xiii,10.)

அஞ்சல் (பெ) பயப்படுதல் (1074) *வயிராகரத்து குஞ்சரகுழாம் பலவாரி அஞ்சலில் சக்கர கோட்டத்து* (SII,viii,701.)

அஞ்சலி (பெ) கை கூப்புகை (1344) *குவித்தபட்ட அஞ்சலையை யுடையராய* (UCR,xviii,p.16-23.)

அஞ்சாலி (பெ) எழுத்துமூலமான சம்மதம் (1236) *ஸபையாரையும் ஊராரையும் வளைச்சு அஞ்சாலி எழுதிப் பிடிப்பிச்சு கடமையுங் கொண்டு* (TAS,iii,p.59-63.)

அஞ்சாலி (பெ) ஒரு வரி (1636) *வருஷம் 1க்கு அஞ்சாலி போக்கி மேல்வாரமுங் கொழுவாரமுங் கண்ட கோட்டை 24* (TAS,vii,p.39-40.)

அஞ்சான் (பெ) பயப்படாதவன் (793) *இப் பாவத்துக்கு அஞ்சானாகில்* (SII,iii,42.)

அஞ்சி (வி) பயந்து (1044) *நெடுவாள் விச்சியன் வெரு நெளித்தஞ்சி ஓடத்தன் வஞ்சிப் படையார்* (SII,v,465.)

அஞ்சு (பெ) 5 (எண்) (900) *இதுக்கு விட்ட சாவாமூவா பேரெருமை அஞ்சு* (TAS,iii,p.75.)

அஞ்சு கட்டிப்பூ (பெ) ஒரு நகை (1014) *அஞ்சு கட்டிப் பூப் பன்னிரண்டில் தடவிடக் கட்டின பளிங்கு ஐம்பத்து நாலும்* (SII,ii,51.)

அஞ்சு சிகை (பெ) ஐந்து குடுமிகள் (1044) *பெண்ணுடை உடுத்தி ஒருவனை அஞ்சு சிகை பட சிரைப்பித்து* (SII,v,465.)

அஞ்சு நிலைப் பித்தளைத் திருவிளக்கு (பெ) ஐந்தடுக்குடைய பித்தளையாற் செய்த விளக்கு (1172) *திருமுன்பெரிய இட்ட அஞ்சுநிலைப் பித்தளைத் திருவிளக்கு ஒன்றால்* (SII,viii,216.)

அஞ்சுவண்ணப்பேறு (பெ) ஒரு மரியாதை (1000) *ஈஸ்ஸுப்பு இறப்பானுக்கு அஞ்சுவண்ணமு பெடியாலும் வாயனத்தாலும் பாகுடமும் அஞ்சுவண்ணப்பேறும் பகல் விளக்கும்* (EI,iii,11.)

அஞ்சுவண்ணம் (பெ) அரபு முதலிய வெளிநாட்டார் கொண்ட ஒரு வணிகக் குழு (849) *பிரகிருதியும் (பரணி.க..யும்) அஞ்சு வண்ணமும் புன்னைத் தலைப் பதியும்* (TAS,ii,p.67-68.); (1000) *அஞ்சுவண்ணம் உடைய ஈஸ்ஸுப்பு இறப்பானுக்கு* (EI,iii,11.)

அஞ்சுவித்து (வி) பயமுறுத்தி (1057) *பேராற்றங் கரை கொப்பத்து ஆஹவமல்லனை அஞ்சுவித்து* (TAS,i,p.242-43.)

அஞ்ஞாழி (பெ) ஐந்து நாழி (808) *அஞ்ஞாழி நெல்லால்* (EI,viii,29.)

அஞ்ஞாழிக் கால் (பெ) ஐந்து நாழி கொண்ட முகத்தலளவை (939) *அஞ்ஞாழிக் காலால் நெல்லு 300 கலம்* (SII,iii,106.)

அஞ்ஞூறு (பெ) 500 (எண்) (731) *அஞ்ஞூற்றுக் காடியும்* (SII,viii,331.)

அஞ்பது (பெ) 50 (எண்) (731) *தலச்சமாடாக நெலஞ்பதின் காடிக்கும்* (SII,viii,331.)

அட்ட (வி) செலுத்த (889) *நெல்லட்டினாரும் அட்டவுடன் பட்டாரும்* (SII,xii,72.)

அட்ட (வி) அமைக்க (803) *ஏரி தோண்டவுங் கரையட்டவும்* (SII,vi,365.)

அட்டக்கடவ (வி) செலுத்த வேண்டிய (868) *நிசதம் அட்டக் கடவ எண்ணை* (SII,xiv,6.)

அட்டக் கடவியர் (பெ) வார்க்கக் கடமைப்பட்டோர் (988) *எண்ணை ஆயுட்டக் கடவியர் திருக்கோயிலுடைய நாராயண மங்கலத் திரண்டு கூற்றாரும்* (TAS,ii,p.40-41.)

அட்டகத்தார் (பெ) அட்டகம் உடையார் (970) *இச் சேரி திருப்பேர் பாண்டன் தாமோதிர னுள்ளிட்ட அட்டகத்தார்க்கு பட்ட மேற்க்கடைந்த இரண்டு மாவில்* (SII,xiii,249.)

அட்டகம் (பெ) எட்டு பாகம் கொண்ட நிலக்கூறு (772) *திருவடி சோமாசியார் அட்டகத்துக்கு மேக்கும்* (SII,xiv,19.)

அட்டணைக்கால் (பெ) மடக்கும் அமைப்புடைய கால் (923) *அட்டணைக்கால் தரா எண்பதின் பலத்தால்* (SII,xix,397.)

அட்டப் பெறுவதாக (வி) இடப் பெறுவதாக (883) *நிலத்தேய் புழுதி அட்டப் பெறுவதாக* (SII,xiii,222.)

அட்ட பெந்தனம் (பெ) விக்கிரகங்களை நிறுத்த அடித்தளத்தில் இடும் கலவைப் பொருள் (1717) *ஆலையத்திலுள்பட்ட மகா சிவலிங்கம் திருக்கோயில் அட்டபெந்தனம் முதலாக கல்ப முதலிறந்து* (SII,xvii,580)

அட்டவணை (பெ) வருவாய் அதிகாரி (1521) ... *ஹவுப4ளதே3வர் புத்ரர் அட்டவணை ப4ஸவரஸற்கு சி2லாசா2ஸநம் பண்ணி* (TDI,iii,148.)

அட்டழிய (வி) சமைக்க (800) *அட்டழிய வைத்த அரிசி* (IPS,8.)

அட்டாது (வி) செலுத்தாது (880) *இப்பரிசு அட்டாது திறம்பிநோம்* (SII,xii,102.)

அட்டாதொழிகில் (வி) செலுத்தாதுவிடில் (1200) *தங்கள் குறைவினால் அட்டாதொழிகில் முட்டிரட்டிக் கொள்ள வேண்டும்* (TAS,vi,135.)

அட்டி (வி) கொட்டி (883) *அடி மண்ணைய் கல்லி மணலட்டி* (SII,viii,633.)

அட்டி (வி) கொடுத்து (919) *நாழித்தயிரும் அட்டி* (SII,iii,99.)

அட்டி (வி) தானஞ்செய்து (771) *நீரோடட்டிக் கொடுத்தமையால்* (EI,xvii,16.)

அட்டிக் கொண்டமையில் (வி) அமைத்துக் கொண்டதால் (1008) *கல்லிக் கரையட்டிக் கொண்டமையில்* (SII,v,638.)

அட்டிகை (பெ) ஒரு நகை (1513) *அரிப்புச் சரி 2 அட்டிகை 15முட்பட தூக்கம் 225* (TDI,iii,35.)

அட்டிப் பேறு (பெ) தான சாஸன மூலம் கொடுக்கப்பட்ட பொருளும் உரிமைகளும் (845) *இவ்வட்டிப் பேறெல்லாஞ் செப்புப்பத்திரத்தில் பட்ட வண்ணம்* (TAS,ii,p.80-82.)

அட்டில் பள்ளியார் (பெ) மடைப்பள்ளியிலுள்ளவர் (1000) *ஆறாட்டு பணையமாக கொள்வதூ அட்டில் பள்ளியார் பணிக்குரியார்* (EI,xxxiii,33.)

அட்டி வந்திலாமை (பெ) கொடுத்துவராமை (1012) *வரையிலும் அட்டி வந்திலாமையாலும் இந் நெய்யாலுந்* (SII,xvii,328.)

அட்டிவிப்பார் (வி) வார்ப்பிப்பார் (1006) *நித்த முடிக்கு நெய் முட்டாமை அட்டி விப்பார்களாக* (ALB,vii,p.87-88.)

அட்டிற்பேறு (பெ) (= அட்டிப்பேறு) (973) *ஆதிச்ச னுமையம்மை தானட்டிற் பேறு கொண்டது* (EI,ix,32; TAS,iv,p.1-11.)

அட்டின (வி) கொட்டிய (992) *திடல் வயக்கி திடல்லில் மண் அட்டின இடமும்* (SII,viii,660.)

அட்டின (வி) கொடுத்த (794) *அட்டின ஆடு நாறு* (SII,xiv,32.)

அட்டு (வி) கொடுத்து (811) *முட்டாமல் அட்டும்* (SII,xiv,41.)

அட்டு (வி) பாய்ந்து (811) *நீரட்டு நெல் விளைவன* (SII,xiv,41.)

அட்டு (வி) போரிட்டு (1179) *கச்சி காவலன் நறுதென்னனை யடுகளத்தட்டு வென்ற* (EC,x,Kl.132.)

அட்டுக்கறை (பெ) ஒரு வரி (978) *இடைப் பாட்டமும் அட்டுக்கறையும் ஊரில்கழஞ்சும் உள்ளிட்டு* (SII,iii,151-151a.)

அட்டுக (வி) செலுத்துக (959) *இப்படி வழுவாமேய் அட்டுக* (SII,xiii,44.)

அட்டும் (வி) செலுத்தும் (999) *உடையார்க்கும் கடன் அட்டுமவற்றிற்கு விளைஞ்ச நிலத்தால் மாத்தால் முக்கல* (TAS,iv,p.127-30.)

அட்டுவதாக (வி) கொடுப்பதாக (770) *நியதம் ஆழாக்கு நெய் அட்டுவதாக* (SII,xiv,18.)

அட்டுவது (பெ)(மண்) குவிப்பது (845) *இவ் வெள்ளேரியிலே குழி குத்தி அட்டுவதாக வைத்தேன்* (EI,xi,22b.)

அட்டுவார் (பெ) சமைப்பவர் (959) *திருமடைப்பள்ளி அட்டுவார் இருவற்க்கும்* (EI,xxvii,47.)

அட்டுவார் (பெ) நீர் கொண்டுவருபவர் (809) *தண்ணீரட்டுவார்க்கு* (SII,xiv,40.)

அட்டுவிச்சு (வி) அமைப்பித்து (1011) *கரையட்டுவிச்சு காடும் வெட்டுவிச்சு* (SII,v,724.)

அட்டுவின (வி) கொடுக்கப் படுவன (973) *உழக்கு நெய்யும் எழுவருக்குமாக அட்டுவின குறுணியும்* (SII,xix,40.)

அட்டுவோம் (வி) குவிப்போம் (884) *குழி குத்தி கரைமேல்லே அட்டுவோமாநோம்* (SII,vi,375.)

அடக்கம் (பெ) ஒரு மரியாதைச் சின்னம் (1477) *நமக்கு உண்டான வரிசை பாவாடை சேமயிர் அடக்கம் நாடகசாலை பகல்விளக்கு ஏறச்சங்கு இறங்கச்சங்கு* (IPS,715.)

அடக்கி (வி) பயன்படுத்தி (997) *சி2வப் ஃராஹ்மரே பயிரேற்றி யிந்த போ4க2மடக்கி இப்பொற்சாலை நங்கைக்கு* (SII,vii,809.)

அடங்க (வி) சேர்ந்திருக்க (765) *ஸர்வ்வ பரிஹாரமுள்ளடங்க* (EI,xxxvi,20.)

அடங்கல் (பெ) முழுவதும் (1039) *முள்ளூர் யாண்டு 27ஆவது முதல் ஊர் அடங்கலும் எங்கள் ஊரோடும் கூட கழிக்க கொண்டு* (SII,viii,68.)

அடங்கலாக உள்ளாக, உள்பட (928) *எப்பேற்பட்ட ஸித்3தாயதியும் அடங்கலாக வாசியேற்றி* (SII,v,1375.)

அடத்தில் (பெ) இடத்தில் (1190) *திரு மதிளில் கல் வெட்டலாம் அடத்திலே கல் வெட்ட கடவதாகவும்* (SII,v,706.)

அடப்பம் (பெ) தாம்பூலப் பை (1583) *அடைகாயி அமுது அடப்பத்துக்கு திருப்பளிஅறைக்கு ப்ரஸாதிக்கவும் அடைக்காயி அமுது 9150க்கு ரேகை பொன் 3* (TDI,vi,5.)

அடர் (பெ) வருத்தும் (771) *அற்றமிலடர் வேற்றானை ஆதி3ராஜன்* (EI,xvii,16.)

அடல் (பெ) வலிமை (771) *பாகனூர்க் கூற்றத்துப் படுவது ஆள்வதானை அடல் வேந்தேய்* (EI,xvii,16.)

அடல் (பெ) வெற்றி (1168) *கலைமகளும் அடல் சூழ்ந்த போர்மகளுஞ் சீர்மகளும் வந்து வாழ* (SII,xvii,583.)

அடவி (பெ) காடு (1068) *பெருஞ்சேனையை அடவியிற் பாச்சிக் கோதாவிரியிற்றன்* (EI,xxi,38.)

அடவு (பெ) முழுவதும் (1236) *ஊரடவு இறை நிலம்* (TAS,iii,p.59-63.)

அட வேண்டும் (வி) சமைக்கத் தேவைப்படும் (1031) *அட வேண்டுங் குசக்கலத்துக்கும் சட்டி இருபதுக்கும்* (SII,viii,66.)

அடற் களிறு (பெ) போர் செய்யும் யானை (1063) *அடற்களிற்றால் ஆஹவமல்லனை முடற்காற்றில்* (SII,vii,743.)

அடற் சேனை (பெ) வலிய படை (1058) *ஆகவமல்லன் அடற்சேனை யெல்லாம் பாரது நிகழ* (SII,ii,67.)

அடற் போர் (பெ) தாக்கும் போர் (1070) *கடும்போர் மன்னரடற் போர் வம்மென்றறைகூருள்* (SII,vii,137.)

அடி (பெ) கீழே (831) *அதனடிஇற் கல்லு நாட்டி* (SII,xiv,43.)

அடி (பெ) நேரத்தைக் கணித்தறியும் நிழலிந் நீளம் (950) *அகத்திருபத்தைய்யடியில் முன்னே திருவமிர்து செய்ய* (TAS,iii,p.189-91.)

அடி (பெ) பாத்திரத்தின் அடிப்பாகம் (1014) *கறண்டிகைச் செப்பு ஒன்று அடியும் மூழலும் உட்பட பொன் நூற்று இருபத்து ஒரு கழஞ்சரை* (SII,ii,1.)

அடி (பெ) பாதம் (731) *ரக்ஷித்தாரடி என்றலை மேலன* (SII,viii,331.)

அடிக்கடி நிகரான (866) *அடிக்கடி நிலங் குடுத்து மாறிக் கொண்டு* (TAS,i,p.1-14.)

அடிக்காறை (பெ) காலில் அணியும் ஒருவகை நகை (1014) *ஒப்பன திருவடிக்காறை ஓரணை* (SII,ii,1.)

அடிக்கி (வி) ஒன்றனுள் ஒன்று அடக்கிவைத்து (1009) *அஞ்சொன்றாக அடிக்கி விளக்கிந தாளிம்பமிரண்டும்* (SII,v,521.)

அடிக்கீழ் நிற்ப்பார் (பெ) ஏவல் தொழில் புரிபவர் (964) *வாரியப் பெருமக்களையும் அடிக்கீழ் நிற்ப்பாரையும்* (SII,vi,362.)

அடிக்கும் (வி) நெற்கதிரடிக்கும் (1306) *நீர் நிலங்களுக்கு தடி ஒன்றுக்கு அறுக்குமந்று குறுணியும் அடிக்குமந்று குறுணியும்* (IPS,435.)

அடிகள்மார் (பெ) கோயில் பணியாளர்கள் (861) *ஸபை$_{4}$யுமடிகள்மாரும்* (TAS,ii,p.85-86.)

அடிகள்மார் (பெ) சமணத் துறவிகள் (911) *திருமலைப்பள்ளியில் நிசதமொரு அடிகள்மார்க்கு சோறு வைத்தார்* (SII,iii,97.)

அடிகுடிமை (பெ) ஊழியம் செய்யும் குடிகள் (1382) *மக்கள் மருமக்களை யடிகுடிமை வடக்கிலரைய னுற்றாரான மேலைக்கோட்டை பெரும்புலியூர்* (IPS,683.)

அடிச்சு (வி) கொன்று (1300) *கோழி பிடிச்சு கொடுபோவாரும் அடிச்சுதிந்பாரும்* (EC,xvii,Kl.267.)

அடிச்சுதளி (பெ) பெருக்கி நீர் தெளித்துத் தூய்மை செய்தல் (1365) *மாமண்டபமும் திருமடப்பள்ளியும் அடிச்சுதளியும்* (TAS,iv,p.148-50.)

அடித்த (வி) கொடுத்த (1083) *நெய் உழக்குக்கு அடித்த ஆடு ஐம்பத்தொன்று* (IPS,121.)

அடித்தளம் (பெ) கட்டிடத்தின் அடிப்பகுதி (1279) *படிமூன்றுக்கும் மடித்தளம் மென்னவுமடையா மன்னவர்* (SII,viii,69.)

அடி தளர்ந்து (வி) கால் வலியிழந்து (1047) *தன்முடி விழத் தலை விரிந்தடி தளர்ந்தோட* (SII,iii,28.)

அடிநிலை (பெ) செருப்பு (885) *இது இரக்ஷிபார் அடிநிலை எங்கள் தலை மேலன* (SII,iii,92.)

அடிப்படுத்த (வி) அடக்கியாண்ட (921) *நாவலந்தீவடிப் படுத்த நரபதியும்* (SII,iii,206a.)

அடிப்படுத்தருளி (வி) கீழ்ப்படுத்தி (1122) *வடதிசை வடிப் படித்தருளி தென்திசை தருமமும் தவமும்* (SII,v,986.)

அடிப்படுத்து (வி) வென்று (771) *மழ கொங்கமடிப்படுத்து* (EI,xvii,16.)

அடிப்பித்த (வி) தோண்டுவித்த (771) *தன் முதல் குடுத்தடிப்பித்த கிணறு* (SII,v,405.)

அடிப்புக் குறுணி (பெ) தானியம் பிரிக்க கதிர் அடித்தல் போது கொடுக்கும் குறுணி அளவு தானியம் (1540) ...*லொரு கட்டுமிட்டு அடிப்புக் குறுணியிமிட்டு பைங்குடியுள்ளது* (IPS,751.)

அடிபிடி (பெ) சண்டை (1526) *இளைய கங்கன் உள்ளிட்டாற்கு அடிபிடி அனியாயம் புன்கோசனம்* (TAS,vi,129.)

அடி பொடி (பெ) கால் தூசி (864) *அடி பொடி என் தலை மேலது* (SII,xii,54.)

அடிமண் (பெ) கீழ்மண் (883) *அடி மண்ணைய் கல்லி* (SII,viii,633.)

அடிமனை (பெ) வீட்டின் கீழ்த்தளம் (974) *பொலியூட்டுக்குப் பிரமாணம்மாய் உள்ள கற்கள் எல்லாம் அடிமனை கீழே இட்டிகல்லின் படி எடுத்துக் கொண்டு இட்டமையில்* (SII,iii,124; SII,xix,91.)

அடிமை (பெ) தொண்டு செய்யுந் தன்மை (1000) *உலகறியக் கொள்ளும் மடிமை கொடுக்கும்* (SII,iv,167.)

அடிமை (பெ) ஏவல் தொழில் செய்யும் அடிமையாள் (845) *இவகள் கொள்ளும் அடிமைக்கு ஆள்க் காசு கொள்ளப் பெறாராகவும்* (TAS,ii,p.80-82.)

அடிமைச் சாரிகை (பெ) அடிமைகள் பேரில் சுங்கவரி (1300) *குதிரைச் சாரிகை யடிமைச் சாரிகை தரகு மகண்மை பட்டணப்பகுதி* (EC,ix,Ht.162.)

அடிமை செய் (வி) தொண்டு செய் (1012) *ஏவலில் அருஷையோடரஹரவெனக் குனித் தடிமை செய் பருஷையர்* (SII,vii,863.)

அடியந்திரங்கள் (பெ) திருநாள் முதலிய சிறப்புக் காரியங்கள் (1253) *குறவும் நேர்நீக்கவும் வராதே அடியந்திரங்களும் நடத்திச்சு* (TAS,iv,p.86-89.)

அடியன்தரம் (பெ) இடையூறு (954) *இப்பூமி பாட்டமாண்டு முட்டிரட்டியும் அடியன்தரமுந் தீர்த்து செலுத்தக்கடவர்* (TAS,iii,p.169-71.)

அடியார் (பெ) பக்தர் (985) *எழுநாளும் வந்த அடியார்க்கு உண்ண* (SII,viii,240.)

அடியான் (பெ) ஊழியன் (630) *மயேந்திரப்*

போத்தரெசரு அடியான் கந்தசேனன் (SII,ii,72.)

அடியிணை (பெ) இரண்டு பாதங்கள் (1068) *அங்கவன் வந்தடியிணை வணங்கிய வாசக முணத்தலும்* (SII,iii,30.)

அடியுறை (பெ) காணிக்கை (985) *புன்செய் காற் செய்க்கும் விலையாக இத்தேவர்கடியுறை பொன் குடுத்து விலை கொண்டு* (SII,xiii,75.)

அடியேந் (வி) தொண்டனாகிய நான் (1000) *மெய்ம்மையே யடியேநுக் கிம்மை பொருள் செய்துதவும் புதல்வரைத் தந்தேன்* (SII,iv,167.)

அடியேன் (பெ) ஏவலாளாகிய நான் (950) *காவேட்டு வையன் அடியேன் பன்றயன் புளியனேன் ஊரழியப் போதேனென்று பட்டான்* (CHHS,1971/116.)

அடிவணங்க (வி) காலில் விழுந்து தொழ (921) *குலவர்த்$_{3}$த$_{4}$னரடி வணங்க* (SII,iii,206a.)

அடிவாரம் (பெ) மலையின் அடிப்பகுதி (1436) *குப்பத்தில் குடியுமிருந்து அடிவாரம் மேல்மலைப்பற்று அம்மருதைஊர்* (AVNM,10,p.67)

அடிவீட்சி (வி) பாதத்தில் விழுந்து வணங்கி (1181) *ஆதிராய பம்மிதேவந் வாய் புதைத்து காற்மடக்கி அடிவீட்சி விண்ணப்பம் செய்த* (EC,ix,Cp.167.)

அடு (வி) வெல்லும் (1066) *வென்றார்த் தடுதுப்பில்* (SII,v,976.)

அடுக்கவும் (வி) ஒப்புவிக்கவும் (958) *திருவுண்ணாழிகை ஸபை$_{4}$யே இப்பூமி அடுக்கவும் வுழவும் பெறுவதாகவும்* (SII,vii,999.)

அடுக்களக் கணக்கு (பெ) கோயில் மடைப்பள்ளிக் கணக்கு எழுதுபவர் (1300) *விக்கிரமன் அடுக்களக் கணக்கு காளத்தி நல்லசிவன்* (TAS,viii,p.3.)

அடுக்களக்காணி (பெ) கோயில் மடைப்பள்ளிச் செலவுக்கு விடப்படும் நிலம் (1147) *சந்ததிப்ரவேச$_{0}$மே அடுக்களக் காணியா ஸ்ரீதுல்யம் சார்த்தி பட்டயம் கொடுக்கயில்* (TAS,viii,p.7-8.)

அடுக்கள சிலவு (பெ) கோயில் மடைப்பள்ளிச் செலவு (1147) *அடுக்கள சிலவு வகைக்கு மத்தியூர் குளப்புரவில்* (TAS,viii,p.7-8.)

அடுக்களைப்புறம் (பெ) கோயில் மடைப்பள்ளிச் செலவுக்காக விடப்படும் நிலம் (1201) *நூற்றுவர்க்கும் நம் அடுக்களைப் புறங்களான ஊர்களில்* (SII,xvii,599.)

அடுக்களையற்குக் கூறு (பெ) மடைப்பள்ளி மேற்பார்வை செய்யும் அலுவலர் (1202) *பரதேசிகளை யூட்டுவதாகப் பெறவேணுமென்று நம்மடுக்களையாற்க்குக் கூறு அரையன்* (TAS,viii,p.26-28.)

அடுக்கு (பெ) வெற்றிலைக்கட்டு (878) *வெள்ளிலை ஈரடுக்கு* (SII,xiv,13.)

அடுக்குமது (பெ) இனிமேல் வருபவை (1545) *உடைமயும் சோறும் இதில் உள்ள அடுக்குமதும் சுவாந்திரியங்களும் பற்றிக்கொண்டு* (TAS,iv,p.104-05.)

அடுகளம் (பெ) போர்க்களம் (1179) *கச்சி காவலன் நறு தென்னனை யடுகளத்தட்டு வென்ற* (EC,x,Kl.132.)

அடுத்த (வி) கொடுத்த (809) *அஞ்ஞாழி நெய் அட்ட அடுத்த ஆடு ஐம்பது* (SII,xiv,39.)

அடுத்த (வி) பிறிதொரு (905) *அடுத்த வாரியரையும் கரணத்தானையுமே* (SII,iv,516.)

அடுத்த (வி) ஒப்புவித்த (923) *நாணிக்கன் கையில் அடுத்த எருமை ஏழு* (TAS,i,p.287.)

அடுத்த (இ) இறுதியில் (873) *வாரா வைகல் ஆண்டடுத்து* (SII,iii,91.)

அடுத்த முறை (பெ) வாரிசு (1014) *அவ்வவர்க்கு அடுத்தமுறை கடவார்* (SII,ii,65.)

அடுத்தன (வி) கொடுக்கப்பட்டன (866) *பூ இடுவான் ஒருவநுக்கு.....செய்தடி 7 விதை இருகலமும் அடுத்தன* (TAS,i,p.1-14.)

அடுத்திருந்து (வி) நெருங்கியிருந்து (1068) *தூசி முன் விட்டுத் தன்றுணைமந்தருந் தானும் பின்னடுத்திருந்து* (EI,xxi,38.)

அடுத்து (வி) செய்து (951) இப்பூமி எல்லாம் உழவு....மூத்தவனும் கூடி அடுத்து பலம் முக்கால் வட்டத்து (TAS,v,p.6-7; TAS,i,p.288-89.)

அடுத்து (வி) சேர்ந்து (866) இரண்டு கிரமவாரம் அடுத்தோதுவது (TAS,i,p.1-14.)

அடுத்து (வி) ஒப்புவித்து (869) அரையன் நாசகனுக்கு அடுத்துக் குடுத்த (SII,v,728.)

அடுத்துக் குடுத்து (வி) பிறர் பொறுப்பில் விட்டு (1009) தேவகந்மிகளுக்கு அடுத்துக் குடுத்து அனுபவித்தும் (SII,xvii,235.)

அடுத்து வரும் (வி) வசூலாகும்; சேரும் (973) நெல்லும் இவ்வூர் மேலடுத்துவரும் னெல்லில் (SII,xix,63.)

அடுத்தூண் (பெ) கூடுதல் செலவு (1510) முன்னாள் சீபண்டாரத்தில் நடந்து போருகிற ஒரு திருநந்தாவிளக்குக்கு அடுத்தூணாக கற்பித்து (TAS,vi,83.)

அடுத்தோதுவது (வி) அடுத்தடுத்துச் சொல்லுவது (866) இரண்டு கிரமவாரம் அடுத்தோதுவது (TAS,i,p.1-14.)

அடுதிறல் (பெ) போரிடும் வன்மை (1056) மும்முடி சோழனைத் தெம்முனை யடுதிறற் சோழ பாண்டியந் (SII,iii,29.)

அடுப்பித்த (வி) செய்வித்த (809) இப் பந்தலுக்கு அடுப்பித்த கிணறு (SII,xiv,40.)

அடும் (வி) வருத்தும் (921) அடும்பசி நோய் நாடகற்றி (SII,iii,206a.)

அடுமடையர் (பெ) சமையற்காரர் (1068) அரிசி கொண்டு வந்து விறகு மிலையுமிட்டுத் தண்ணீரட்டி யடுமடையர் மூவருக்கு (EI,xxi,38.)

அடுவார் (பெ) சமைப்பவர் (894) இப்ப்ராஹ்மணர்க்கும் அடுவார்க்கும் (SII,iii,1.)

அடுவான் (பெ) சமையல் செய்பவன் (990) நந்தவானக் குடிகள் மூவர் சாலைக் கடுவான் ஒருத்தன் (SII,v,625.)

அடுவான் (வி) சமைக்கும் பொருட்டு (861) ஆவணி யோணமடுவான் கொடுத்த பூமி (TAS,ii,p.85-86.)

அடுவிக்கும் (வி) சமையல் செய்விக்கும் (1100) நிசதம் ஆறு நாழி அரிசி திருவமிர்தும் அடுவிக்கும் மாணி இரண்டுக்கு (SII,iv,1412.)

அடுவிச்சு (வி) சமைப்பித்து (870) இவ்வக்$_3$ரம் அடுவிச்சு ஊடுவிக்கக்கடவார் (SII,xix,163.)

அடை (பெ) குத்தகை; பயிரிடும் குடியோடு கொண்ட ஒப்பந்தம் (870) இந் நிலத்தால் வந்த அடைப்படி நெல்லு நீக்கி (SII,xix,163.)

அடை (பெ) கூறு (941) புளிப்பழவடை 7க்கு நெல்லு (SII,viii,529.)

அடை (வி) மொய்க்கும் (1012) பந்தற் சுரும்படை வெண்பூங் (SII,vii,863.)

அடைக்க (வி) பகிர்ந்து கொடுக்க (954) மூவெலியும் நிவேத்யம் மடைக்கவென்று (IPS,24.)

அடைக்கலப் பெண் (பெ) அடைக்கலமாகப் புகுந்த பெண் (1012) செஞ்சொற் கபிலன் முரிவண் டடக்கைப் பாரி தனடைக்கலப் பெண்ணை மலையர்க்குதவி (SII,vii,863.)

அடைக்கலம் (பெ) பொறுப்பு (850) தொட்டகுளம்...சேனா முகத்தார்க்கும் ...பதார்க்கும் அடைக்கலம் (JOR,vi,p.304.)

அடைக்காய் (பெ) பாக்கு (869) சற்க்கரை வாழைப்பழம் அடைக்காயிருபதும் (SII,vii,523.)

அடைகுடி (பெ) குத்தகைதாரரான குடி; கீழ்க்குடி (1014) இவர்கள் உறவு முறையாய் அடைகுடிகளானாரும் இவர்கள் அடைக்குடிகளுந் (SII,ii,63&94.)

அடை கொண்டார் (பெ) குத்தகைதாரர் (985) அடுத்த பண்டார வாரிகரையு மடை எழுதின நங்கரணத்தானையும் அடை கொண்டாரையும் (SII,iv,516.)

அடைஞ்சிருந்து (வி) சேர்ந்திருந்து (771) திரு மாலடைஞ்சிருந்து ஸித்$_3$தா$_4$ந்தம் உரைக்கும் (SII,v,405.)

அடைத்த (வி) ஒப்புவித்த (1014) வலங்கைப் பழம் படைகளிலார் தங்களுக்கு அடைத்த ஸ்ரீ ராஜராஜீச்$_2$வரம் உடையார் கோயிலில் (SII,ii,35.)

அடைத்த (வி) ஒப்புவித்த (917) சென்னடைக்கும் நிவந்தம் மடைத்த (SII,viii,645.)

அடைத்துக் கொள்வதாக (வி) தேக்கிக் கொள்வதாக (900) ஓராளி நீர் முறைதோறு மடைத்துக் கொள்வதாக (SII,xii,114.)

அடைந்த (வி) சேர்ந்த; பெற்ற 771 கறுவடைந்த மனத்தவரை (EI,xvii,16.)

அடைப்பான (வி) சேர்ந்த (1300) நிலம் நானூற்றைஞ்சு மாக்காணியும் இதுக்கடைப்பான சுந்தரபாண்டிய நல்லூருங் காடுகளும் (SII,v,287.)

அடைப்பிச்சமை (பெ) மூடச் செய்தமை (1133) குளத்தில் உடைப்பும் அடைப்பிச்சமையில் இக்கால் ஸ்ரீவாஸுதே$_3$வப் பேராறெந்றும் (SII;xiv,231.)

அடைப்பிதற்க்கு (வி) மூடச் செய்வதற்கு (914) எம்மூர்ப் பெரிய ஏரி ஊர்மேலே உடைஞ்ச உடைப்படைப்பிதற்கு முதலாக் (SII,xix,179.)

அடைப்பியாதே (வி) மூடாமல் (1236) இவேரி மடைகளும் அடைப்பியாதே கலிங்கும் இடாதே பாழ் கிடக்கையாலே (SII,viii,83.)

அடைப்பு (பெ) சேர்ந்தவன் (1154) இந்நாயனார் குடிமக்களுக்கு அடைப்பு தாயிலுநல்ல வேளானும் (SII,xvii,657.)

அடைப்பு (பெ) விளைச்சல் கணக்கு (1232) பயிரடைப்பின்படி கார்மறுவும் ஒரு பூவும் (SII,iv,424.)

அடைப்பு (பெ) அடைக்கப்பட்டது (1125) நாங்களும் எங்கள் வற்கத்தாரும் எங்களுக்கு அடைப்பாந நிலமும் (SII,xvii,601.)

அடைப்பு (பெ) அடைத்த நிலம் (1227) அருளாளப் பெருமாள் அடைப்பு நிலம் இரண்டு மாவுக்கும் (TAS,viii,p.37-38.)

அடைப்புத்தாழ்வு (பெ) ஒரு வரி (1387) வாசல்ப்பணம் புல்வரி அடைப்புத்தாழ்வு உழவன் கோடி..எப்பேர்ப்பட்ட வரிகளும் (EI,viii,31.)

அடைமுதல் வரிசை (பெ) பயிரிட அடைத்த நிலங்கள்மேல் வரும் வருவாய் விழுக்காடு (1255) திருநாமத்துக்காணி உடனே கூட்டி அடைமுதல் வரிசை நிற்கும் படியாய் உள்ள நெல்லு (SII,xii,174.)

அடைமுதல் வருசை (பெ) (= அடைமுதல் வரிசை) (1259) இநிலம் எண்மாவரைக்கு அடைமுதல் வருசைப்படி நெல்லு நூற்றிருபத்தேழு கலனே தூணி பதக்கால் (SII,xii,199.)

அடைய்த்து (வி) வாரிசு முறையில் பெற்று (985) தெங்கு கறிநிலிலும் அடைய்த்தும் படைத்துமுடைய நிலந்கீழ் (SII,xix,379.)

அடைய (வி) சேர (771) காடவனைக் காடடைய ... வென்று (EI,xvii,16.)

அடைய (வி) பக்கத்தில்; சேர்ந்து (997) வடக்கு ஸ்ரீ ராக$_4$வதேவர் பூமியோடுமடைய வடக்குப் பங்கிட்ட கோலால் (SII,iii,2.)

அடைய (வி) ஒரு சேர (877) இக் கோலிட்டோடும் அடைய அரைக்கோல் (SII,vi,370.)

அடையமிர்து (பெ) தாம்பூலம் (1000) கலவாணியநு இருபதினாழி அடையமிர்தினு நானாழி (TAS,ii,p.173-207.)

அடையமுது (பெ) தாம்பூலம் (979) நாநாழியும் அடையமுதும் பன்னிரண்டுக்கு நெல்லு முன்னாழியும் (SII,iii,134.)

அடையவளத்து நாள் (பெ) ஒரு திருவிழா (1494) திருவித்$_3$யேநத்தில் பிறபத்தில் திருவாய்மொழி சாத்துமுறை அடையவளத்து நாள் திருவோலக்கம் இரண்டும் (TDI,ii,123.)

அடையாத (வி) சரணடையாத (771) விரவிவந்தடையாத பரவரைப் பாழ்படுத்தி (EI,xvii,16.)

அடையுழவு (பெ) குத்தகையுழவு (1200) பொருள் கவருவும் அடையுழவுழவும் பாட்டமாளவும் குடியிருக்கவும் (SII,v,772.)

அடைவு கேடுகள் (பெ) முறைகேடுகள் (1171)

..வேண்டிப் புரத்து எல்லா அடைவு கேடுகளும் [வா]ராத இடத்து (EI,xxi,31.)

அடைவு முதலிகள் (பெ) பிரதிநிதிகளாக உள்ள முன்னோடிகள் (1132) *சிவப்$_3$ராஹ்மணர்க்கு ஸமைந்து அடைவு முதலிகள் பா$_4$ரத்$_3$வாசன்* (SII,xiv,230.)

அடைவே (வி) ஒட்டி (992) *எங்களூர்க் கருங்காலி ஏரி கீழ்த்தூம்பி நின்று கரையடைவே போன வாய்க்காலுக்கு மேற்கு* (SII,iii,50.)

அடை ஓலை (பெ) குத்தகை ஆவணம் (960) *இரண்டாயிரத்து தெண்ணூற்றுக் கலத்துக்கும் அடை ஓலைப்படி* (SII,iii,203.)

அண்டகூடம் (பெ) வானம் (1186) *பத்துத் திசையும் பரிய முத்தக்குடையளவிட்ட திரிசுடர் சூழண்டகூடத்தையே* (SII,xii,263.)

அண்டத்துள்ளோர் (பெ) மக்கள் (900) *சீர் பலவமாராயன் ---அண்டத்துள்ளோர் மதிப்பவன்* (EI,vii,5.)

அண்டர் (பெ) தேவர் (1332) *கைதொழுபவர் அண்டராகுவர் அனைவருந்தொழவே* (EI,xxviii,28(2).)

அண்ணர் (பெ) உடன் பிறந்தவர்களில் மூத்தவர் (1068) *ஆறைமேல்த் துஞ்சிந அண்ணர்க்கு யாண்டு* (SII,iv,529.)

அண்ணல் (பெ) சமணத் தீர்த்தங்கரர் (862) *மதிரை ஆசிரியன் அண்ணலக மண்டகம் புதுக்கி* (SII,xiv,45.)

அண்ணாழ்வி (பெ) தலைவன் (1462) *தென்காசி பொற்கோபுர மீதில் எங்களண்ணாழ்வி செய்த பணியிப்படி குறையாயிக் கிடக்க* (TAS,i,p.103.)

அணவ (வி) நெருங்க (921) *விஜயத்$_4$வஜம் விசும்பணவச் செங்கோறிசை விளிம்பணவ குசைமாவுங்* (SII,iii,206a.)

அணி (பெ) நகை (771) *வந்தணைக என்றீத்தளித்த மகரிகை அணிமணி நெடுமுடி* (EI,xvii,16.)

அணி (வி) தாங்கிய (1061) *பார் அணி திரடோள்* (SII,v,647.)

அணிகலன் (பெ) நகைகள் (1220) *நெடுந் தோளின் வாரணிகலன் தரித்தருளி* (CHEN,xiv,p.362-64.)

அணிந்த (வி) சூடிய (905) *பிறை சடைக் கணிந்த பிநாகபாணி எம்பெருமானை* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

அணிந்து (வி) பூண்டு (1000) *அடைக்குங் கதிர் மணியாரம் முலைக் கணிந்தல்கின்* (SII,iv,167.)

அணிய (வி) நெருங்கிய (919) *பெருமக்குளுக்கு அணிய பந்துக்கள் அல்லாதாரை* (ARASI,1904-05,p.131.)

அணிய (வி) அலங்கரிக்க (1014) *ஏறியருளுந் திருவரங்கணியக் குடுத்த பொன்* (SII,ii,6.)

அணுக்கத் திருநொந்தாவிளக்கு (பெ) சுவாமிக்குப் பக்கத்தேயுள்ள நொந்தாவிளக்கு (1009) *அணுக்கத் திருநொந்தாவிளக்காக எரிப் போமானோம்* (IPS,87.)

அணுக்க பிள்ளை (பெ) பாண்டியர் ஆட்சியில் ஓர் அரச அலுவலர் (950) *அணுக்க பிள்ளை தென் பருத்திக்குடி நாட்டு* (TASSI,1962-65,p.32-52.)

அணுக்கர் (பெ) நெருங்கிய ஊழியர் (916) *அரையன் அணுக்கரில் பூவன்* (SII,xiv,56.)

அணுக்க விளக்கு (பெ) சுவாமிக்குப் பக்கத்தில் எரியும் திருவிளக்கு (1031) *இராவை ஸந்தி$_4$க்கு அணுக்க விளக்காக எரிய வைத்த விளக்கு* (SII,viii,66.)

அணுக்கியார் (பெ) அரசனின் நெருங்கிய பணிப்பெண்/காதற் கிழத்தியார் (1060) *உடையார் ஸ்ரீ ராஜேந்த்ரசோழதேவர் அணுக்கியார் ஐய்யாறந் செம்பொந் தங்கை* (SII,v,644)

அணுக (வி) நெருங்கிய (785) *குடபாலுங் குணபாலும் மணுகவந்து* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

அணை (பெ) நீர்த்தேக்கம் (979) *அணைக்கு வைத்த நெல்லிலே மாத்தால் குறுணி* (SII,xix.231.)

அணை (பெ) இரட்டை (887) *பாவாடையும் ஓரணை ஒரு காசு பெற்றன* (SII,xiv,16a.)

அணைக (வி) சேருக (771) *அந்தணர்க்கும் அச$_0$க்தர்க்கும் வந்தணைக என்றீத்தளித்த* (EI,xvii,16.)

அணைகுறி (பெ) நீர்த்தேக்க அளவைக் காட்டும் அடையாளம் (1124) *ஊறுணி அரையன் மதுராந்தகனான கருநிலக்குடி நாடாள்வான் இட்ட அணைகுறி* (SII,xiv,203.)

அணைஞ்சு (வி) சார்ந்து (1132) *தன்னை அணைஞ்சு நிற்க வாத்த சிறு நிலை விளக்கும்* (SII,xiv,230.)

அணைத்தேவை (பெ) அணைக்கட்டுப் பராமரிப்புக்குச் செய்யப்படும் ஊழியம் (1273) *கரைத் தேவை அணைத்தேவை உள்ளிட்ட அனைத்துபாதிகளும்* (SII,vii,145.)

அணைந்த (வி) சேர்ந்த (905) *வான் உலகணைந்த பின் மற்றவற்கு மகனாகிய* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

அணைய (வி) சேர (1245) *இறுகூறு தென்வடல் முட்ட மேற்கணைய மாஹாதே$_3$வருதாகவும்* (IPS,340.)

அணையும் (வி) சேரும் (1012) *வால் வளைத் துணையும் மேல் வளைத்தணையுங் கருப்பொலி* (SII,vii,863.)

அத்தகு (வி) அத்தகைய (1068) *அத்தகு தேமரு தெரியைவ் வீமநற்நனை சேமதி வங்காரனையும்* (EI,xxi,38.)

அத்தநையும் (பெ) எல்லாம் (691) *வளையில் சுற்றுநிலம் அத்தநையும்* (SII,i,151; EI,xvii,22.)

அத்தம் (பெ) அஸ்த நட்சத்திரம் (989) *ஸப்தமியும் விசாழக்கிழமையும் பெற்ற அத்தத்தினான்று பகல்* (SII,xiii,83.)

அத்தயாமம் (பெ) நடு நிசி (894) *நக்கபிரான் அத்தயாமத்து ஒரு திருவமுது* (SII,xiii,300.)

அத்த$_2$சௌ$_0$ச$_0$ம் (பெ) நல் வழியில் ஈட்டிய பொருள் (919) *அத்த$_2$சௌ$_0$ச$_0$முந் ஆத்மசௌ$_0$ச$_0$மும் உடையராய்* (ARASI,1904-05,p.131.)

அத்தாணி (பெ) ஒரு வணிகக் குழு (1142) *ஸ்ரீவல்லவந் கோட்டனாத வாடுறை கூடி வளர்ந்த ஐய்யபொழில் அத்தாணி சித்திரமேழி மூன்று...* (SII,xiv,251.); (1100) *தானசாலையும் குளமும் அத்தாணிகள் பேராயினமையில்* (AVNM,7,p.24)

அத்தாழம் (பெ) மாலைக் காலம் (950) *அத்தாழத் திருவமிர்தினும் அந்தியின் முன்னை அரி அளக்கக்கடவியர்* (TAS,iii,p.189-91.)

அத்தாளத் திருஅமர்து (பெ) இராச் சாப்பாடு (1168) *இரா அத்தாளத் திருஅமர்த்தின்னு அரி அஞ்ஞாழியும் கூடே* (TAS,v,p.63-85.)

அத்தாள பூசை (பெ) சாயங்காலப் பூசை (1603) *உசா பூசைக்கு 2 நாழி உச்சை பூசைக்கு அரிசி 6 நாழி அத்தாள பூசைக்கு அரிசி 4 நாழி* (TAS,vi,100.)

அத்திகோயத்தார் (பெ) யானை வீரர் குழு (500) *அவை அத்திகோயத்தாரு முள்மனையாருந் நாற்பாற்றிணைகளுந் தமக்கு காவலாக* (AVNM,1,p.67-69)

அத்தியயநம் (பெ) வேதம் ஓதுதல் (992) *தைத்ரிய வேதமும் சந்தோக ஸாமவேதமும் அத்தியயநம் பண்ணும் ப்$_3$ராஹ்ஹமணர் இருபத்தைவற்கு* (SII,xiii,170.)

அத்திரம் (பெ) ஆயுதம் (795) *அத்திரத்தாற் பலரொடுங் குத்திப் பட்டான்* (TAS,i,p,158-59.)

அத்துணையிலும் (பெ) எல்லாவற்றிலும் (953) *பெருநான்கெல்லையுளகபட்டனிலம் அத்துணையிலும் இத்திருவெறும்பியூர் ஆள்வாற்க்கு* (SII,xiii,51.)

அத்தை (பெ) தந்தையோடு உடன்பிறந்தாள் (921) *இவர்களுக்கு அத்தை மாமன் மக்களையும்* (ARASI,1904-05,p.131.)

அத்ரி (பெ) ஒரு முனிவர் (905) *மலர்க் கமலயோனி மனந்தந்த மாமுனி அத்ரி அருமரபிற்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

அதமம் (பெ) கடைசித் தரம் (1001) *இந்நிலன் ஒன்றேய் இரண்டுமாவும் உத்தம மத்தியம்*

அதமமாக அடைவு குத்தின காசு 62 (SII,v,723.)

அதரம் (பெ) இடையூறு (1000) *இடையீடன் பற்றி கொள்ளவும் அதரஞ் செய்யவும் பெறார்* (TAS,ii,p.17.)

அதரவினியோகம் (பெ) ஒரு வரி (1266) *இலாஞ்சினைப் பேறு அந்தராயம் அதரவினியோகம் அச்சுவரி வெட்டி பாட்டம்* (IPS,366.)

அதரோக்தி (பெ) வாய்மூலம் (1090) *தந்தோமென்று அதரோக்தியாக வாசலுக்குள்ளே இருந்து திருக்கையாலே நீர்வார்த்து* (SII,vii,533.)

அத$_4$ர்ம்மகோபி (பெ) தீநடத்தையை வெறுப்பவன் (905) *அத$_4$ர்ம்ம கோபி மாயா நாராயண பட்டர்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

அதிக்கப்பேறு (பெ) ஒரு வரி (1259) *அதிகார பேறு அதிக்கப்பேறு ஆயவற்கம்* (SII,v,422.)

அதிக்கிராவி (பெ) நெல் வகை (1635) *மணவாரியும் சம்பாவும் அதிக்கிராவியும் விரைச்சு புழுக் கோளாயிப் போக* (TAS,v,p.208.)

அதிகரணத் தண்டம் (பெ) மேல் நீதி மன்றத்தில் செலுத்தும் அபராதம் (753) *கரணத் தண்டமும் அதிகரணத்தண்டமும்* (SII,ii,73.)

அதிகரிக்கின்றது (வி) வருவாயாகப் பெறுகின்றது (1000) *வடசேரி கரியில் பள்ளிக் காவினால்க் கீழதிகரிக்கின்றது நூற்றுக்கலம்* (TAS,ii,p.173-207.)

அதிகரிச்சு (வி) விருத்தி செய்து (1250) *சுற்று மண்டபத்தில் புறவாய்க்கால் வெட்டினபடி அதிகரிச்சுக் கொள்ளுமாறும்* (KANDT,1968/250.)

அதிகாரச்சியார் (பெ) பெண் அதிகாரி (995) *அதிகாரச்சியார் ஐயாறன் தே$_3$வியார் முன் செய்கின்ற நிப$_3$ந்த$_4$த்திற்கு முதலாக* (SII,vii,1017.)

அதிகாரஞ் செய்கின்ற (வி) அதிகாரியாக பணியாற்றுகின்ற (967) *இத்திருமுகப்படி கொண்டு அதிகாரஞ்செய்கின்ற சோளாந்தக ப்$_3$ரஹ்மமாராயர்* (SII,xiv,95; EI,xxv,6.)

அதிகாரப் பொன் (பெ) ஒரு வரி (1224) *இறை அதிகாரப்பொன் புழுகுவரி முள்ளிடி உள்ளிட்ட எப்பேர்ப்பட்ட பொன்* (SII,iv,648.)

அதிகாரம் (பெ) அதிகாரி (950) *தமிழப் பேரரையன் திருந்ததிகாரமாகவும்* (TASSI,1962-65,p.32-52.)

அதிகாரம் (பெ) அதிகாரித் தொழில் (916) *சோழப்பெருமானடிகளுக் கதிகாரஞ் செய்கின்ற* (SII,xix,218.)

அதிகாரம் (பெ) அதிகாரியின் நிர்வாகம் (1008) *நித்தவினோதப் பல்லவரையர் அதிகாரத்தில்* (EC,ix,Cp.132.)

அதிகார மேலெழுத்து (பெ) ஓர் அரசியல் அலுவலர் (966) *மஹாஸபை$_4$யோம் அதிகார மேலெழுத்து சேராந்தகப் பிரம்மராயன்* (TAS,iii,p.70-71.)

அதிகாரர் (பெ) அதிகாரிகள் (753) *நிலெக் களத்தாரும் அதிகாரரும்* (SII,ii,73.)

அதிகாரிகள் (பெ) சோழ அரசாங்கத்தில் உயர் அலுவலர் (1002) *புக்க கேழ்விப்படி அதிகாரிகள் வானவன் மூவேந்த வேளார்* (SII,v,1409.)

அதிகாரிச்சி (பெ) பெண் அதிகாரி (1009) *காடந்னூற்றெண்மநையு அதிகாரிச்சி எடுதந் குஞ்சிரமல்லியையும் அருளிச் செய்ய* (SII,v,521.)

அதிகாரி சோடி (பெ) அதிகாரிகள் பொருட்டுச் செலுத்தும் ஒரு வரி (1600) *உலுப்பை ஊழியும் ஊர் மாகாணி சீவிதம் அதிகாரிசோடி கரணிக்கர்சோடி ஓலைஎழுத்து வந்தனை* (SII,vii,293.)

அதிகாரிபேறு (பெ) அதிகாரி பொருட்டுச் செலுத்தும் ஒரு வரி (1466) *ஓலைஎழுத்து வத்தனை அவதரவத்தனை அதிகாரிபேறான கொற்றிலக்...* (SII,xvii,532)

அதிசயிக்கும் (வி) வியக்கும் (1220) *அவ்வுலகத் தருந்ததியும் அதிசயிக்கும் பெருங்கற்பால் இவ்வுலகத் தருந்ததியென* (CHEN,xiv,p.362-64.)

அதிச$_0$யம் (பெ) வியக்கத்தக்க செயல் (815) *அபரிமித மதிசயங்கள் செய்து* (SII,iii,206b.)

அதிட்டானம் (பெ) அடித்தளம் (1252) *சிசீகோயில் அதிட்டானம் துடங்ஙி உத்தரத் தோளமு கெர்ப்பகிரகமும் தளக்கல்லும்* (TAS,iv,p.151-52.)

அதிதேவதை பிறதிமை (பெ) மூல தெய்வ வடிவம் (1564) *சேஷபிறதிமை பணம் 1 அதிதேவதை பிறதிமை பணம் 1* (TDI,v,173.)

அதிபதி (பெ) தலைவன் (833) *இருப்பைக்குடி தனக்கதிபதி* (SII,xiv,44.)

அதியரையன் (பெ) குறுநில மன்னரின் பட்டப் பெயர் (800) *மாறனவன் மகன் இளங்கோ வதியரையனாயின மாறன் பரமேச்$_0$வரன்* (EI,xiii,10.)

அதியன் (பெ) தகடூர் ஆண்ட குறுநில அரசன் (785) *திகழ் வேலதியனை ஓடு புறங் கண்டவந்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

அதிர்படுவன (பெ) அதிர்ச்சி அடைவன (1176) *அலைபடுவன நீர்நிலையே அதிர்படுவன இடியேறே* (SII,xvii,585.)

அதிர்வது (வி) முழங்குவது (1200) *மதிள் விழுந்த பேரொலியு முருமதிர்வ தொக்குங் காணே* (SII,vii,123.)

அதிரஸம் (பெ) பணியாரவகை (1473) *அமுது செய்யும் அப்பப்படி அதிரஸப்படி 1 வடைப்படி 1 சுகியன் படி 1 கோ$_3$திப்படி திருக்கணாமடை 1* (TDI,ii,50.)

அதிராத்திரம் (பெ) சோமயாக வகை (1149) *கவிநிக்கற்றுறை பட்ட அதிராத்திர காடகையாஜியார்* (SII,vii,945.)

அதிரும் (வி) நடுங்கச் செய்யும் (1000) *முதிரும் பரவை முகந்த கொண்மூ முகடேறி முன்னியதிரும்...* (SII,iv,167.)

அதிரும் (வி) ஒலிக்கும் (1000) *முகில் போலதிரும்.* (SII,iv,167)

அதிவஸித்தருள (வி) தங்க: தூங்க (1473) *மலைகிநிய நின்ற பெருமாளும் னாச்சிமாரும் அதிவஸித்தருள திருப்பள்ளிக்கட்டிற் கீழ் பரப்ப அரிசி 6 மரக்கால்* (TDI,ii,50.)

அதிவாஸநை (பெ) விழாத்தொடங்கு முன் செய்யும் புண்ணியச் சடங்கு (985) *அதிவாஸநைக்கு பாலிகைக்கு கீழட்ட* (SII,xix,380.)

அதிவாஸம் (பெ) விதை தெளிக்கும் சடங்கு (1506) *முதல் திருனாள் அதி$_4$வாஸத்துனாள் சாளுக்கிய நாராயணன் காலால் அதி$_4$வாஸத்துக்கு அடிப்பரப்ப* (TDI,iii,13.)

அதிஸாஹஸன் (பெ) மிகுந்த தீரச் செயல் புரிபவன் (800) *ஸ்ரீ கள்வர் கள்வன் ஸ்ரீ அதிஸாஹஸன்* (EI,xiii,16.)

அதீதர் (பெ) இறந்தவர் (877) *ப்ருதி$_2$வி கங்கரையர் அதீதராயின பிற்பாடு* (EI,vii,26a.)

அதீய்தக$_3$ரம் (பெ) பள்ளிபடை (இறந்தவர் நினைவாக எழுப்பப்படும் கோயில்) (877) *ஈச்$_0$வர ராலயமும் அதீய்தக$_3$ரமும்* (EI,vii,26a.)

அதுலன் (பெ) ஒப்பற்றவன் (1012) *சொல்லிய வரைசர்தம் பெருமான் அதுலனெம்பெருமான்* (SII,vii,863.)

அதே$_3$யம் (பெ) இறையிலி (960) *காசு கொடுத்து அதே$_3$யஞ் செதுகுடுத்த* (SII,iii,120.)

அத்$_2$த$_2$ப்ரமாணம் (பெ) பொருள்மேல் ஆணை (1330) *இவற்கொரு நலித்தீங்கு வந்தால் எங்கள் அத்$_2$த$_2$ப்ரமாண அபி$_4$மானத்தாற் பரிகரிக்க கடைவோம்* (EC,xvii,Mr.18.)

அத்$_3$த்$_4$யயனம் (பெ) ஓதுதல் (1235) *ஆனந்த பிள்ளை அத்$_3$த்$_4$யயனம் பண்ணி அவனுக்குப் பின்பு* (SII,v,422.)

அத்$_3$பு$_4$தம் (பெ) ஓர் ஊழியின் பெயர் (905) *செந்தமிழ்ப்பாத் தொடை செய்தோன் அத்$_3$பு$_4$தம் மெனும் ஊழிக்கள்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

அத்$_3$ருஷ்டமுக$_2$ம் (பெ) எதிர்பாராது உண்டாகும் நற்பேறு (1168) *பூசலிலே அறப்பட்டு*

துரப்புண்டு போம்படிக்கு அத்$_3$ருஷ்ட முக$_2$த்தாலே வேண்டும் யத்நம் பண்ணுகிறோமென்றருளி (SII,vi,456.)

அத்$_4$யய்யம் (பெ) ஓதுதல் (992) *உத்தமாக்ரத்தில் உண்ணு ப்ராஹமணர்க்கு அத்$_4$யய்யம் செய்வா... கொள்ளும்* (SII,xix,357.)

அந்த்யர் (பெ) கடைப்பட்டவர் (1344) *ஆக பஞ்ச சண்டால குலத்துக்கும் அந்த்யர் ஆவார்கள்* (UCR,xviii,p.16-19.)

அந்தணர் (பெ) பிராமணர் (771) *அந்தணர்க்கும் அஸக்த்தர்க்கும் வந்தணைக என்றீத்தளித்த* (EI,xvii,16.)

அந்தணாளர் (பெ) பிராமணர் (771) *கேள்வி அந்தணாளர் முன்பு கேட்க* (EI,xvii,16.)

அந்தம் (பெ) முடிவு (811) *அந்தமில் பல் குணத்தாதி* (SII,xiv,41.)

அந்தரப்பட்டமை (பெ) அழிந்து போனது (1106) *கைத்தடி ஓலை வைச்சவிடத்தில் சிதலரிக்க அந்தரப்பட்டமையில்* (CHEN,xii,p.190-91.)

அந்தரம் (பெ) வானம் (833) *அந்தரத்திநோ டியங்குஞ் சந்திராதித்தர் வழித் தோன்றி* (SII,xiv,44.)

அந்தரவாளம் (பெ) (= அந்தரவானம்) (1061) *விசும்பேற்றி அந்தரவாளத் தரம்பையர் எதிர்கொள* (SII,v,647.)

அந்தரவானம் (பெ) தேவர் உலகம் (1061) *விசும்பேற்றி அந்தரவானத் தரம்பையர் எதிர் கொள* (SII,xvii,579.)

அந்தராயதி (பெ) (= அந்தராயம்) (914) *அந்தராயதியும் இறை நாங்களே* (SII,xix,191.)

அந்தராயம் (பெ) நிலவரி தவிர்ந்த பிற சிறுவரிகள் (961) *இந்நிலத்தால் வந்த இறைய் ஸித்$_3$தா$_4$யமும் அந்தராயமுந்* (SII,xiii,106-07.)

அந்தராய வேணிமயம் (பெ) ஒரு வரி (1115) *திருநந்தவனகுடிகள் ஒன்பதின்மர்க்கு அந்தராய வேணிமயம் நீக்கி* (SII,iv,1285.)

அந்தரிக்ஷம் (பெ) நற்கதி (1012) *மலையர்க்குதவிப் பெண்ணை யலைபுனலழுவத் தந்தரிக்ஷஞ் செல மினல் புகும் விசும்பின் வீடுபேறெண்ணி* (SII,vii,863.)

அந்தளகத்தாளர் (பெ) பல்லக்கு வீரர்(?) (1022) *அடைத்த நியாயம் உத்தம சோழத் தெரிந்த அந்தளகத்தாளர்* (SII,ii,12.)

அந்தி (பெ) சாயங்காலம் (816) *உச்சஅகது பந்தீறடி துடங்கி அந்தியில்* (TAS,ii,p.85-86.)

அந்தி (பெ) செவ்வானம் (1000) *கொண்டலந்தி மந்தி பிடிக்கும்* (SII,iv,167.)

அந்திக்காப்பு (பெ) கடவுளுக்கு மாலைக் காலத்தில் செய்யும் பூச்சு (1024) *இத்தேவர்க்கு மந்திர தீ$_3$பத்துக்கும் அந்திக்காப்புக்கும்* (SII,xvii,319.)

அந்தித்திருவமுது (பெ) மாலை நைவேத்தியம் (905) *அந்தித்திருவமுது உச்சி திரிஞ்ஞு இருபதிற்றடிக்கு* (TAS,iii,p.189-91.)

அந்தியம்போது (பெ) மாலைக் காலம் (872) *இரு நாழி உரி அந்தியம் போது திருவமுது செய்கிற்று* (SII,xiv,16a.)

அந்திரர் (பெ) ஆந்திரநாட்டரசர் (1047) *சிங்களர், பங்களர், அந்திரர் முதலிய வரைசரிடு திறைகளும்* (SII,iii,28.)

அந்தி விளக்கு (பெ) மாலை நேர விளக்கு (884) *அந்திவிளக்கும் அர்ச்சநையும்* (SII,xii,68.)

அந்தோ (இ) இரங்கல் குறிப்பு (1000) *சிராமலையா யிரங்கந்தோ* (SII,iv,167.)

அந்தோளகம் (பெ) பல்லக்கு (1000) *பகல் விளக்கும் பாவாடையும் அந்தோளகமும் குடையும்* (EI,iii,11.)

அந்நியோந்ய ஸஹவாஸம் நெருங்கி உறவாடல் (957) *ஸபை$_4$யோம் அந்நியோந்ய ஸஹவாஸமெப்பேர்ப்பட்டதும் செய்யாதோமாகவும்* (SII,xiii,165.)

அந்நுவையம் (பெ) வழியார் (1068) *மாதவன்நேனும் என் அந்நுவையமும்* (SII,vi,458.)

அந்யநாமகரணம் (வி) வேறொருவர் பெயரிடுதல் (985) *சோமாசியார் பேரால் அந்ய நாமகரணத்தால் இவர் பேரால் விலை கொண்டுடையேநாந* (SII,xiii,66.)

அந்யர் (பெ) பிறர் (978) *வாய்க்காலை அந்யர் குறங்கறுத்துக்குத்தவும் குற்றேத்தம் பண்ணவும்* (SII,iii,151-151a.)

அந்யாயம் (பெ) முறையின்மை (964) *இத் தண்டப்பட்டு இவ்வந்யாயம் வராமை* (SII,vi,362.)

அந்யோந்யம் (பெ) நெருக்கம் (919) *வாரியஞ் செய்தார்க்கு ப$_3$ந்து$_4$க்களும் சேரிகளில் அந்யோந்யம் மே...* (ARASI,1904-05,p.131.)

அந்வயத்தார் (பெ) வாரிசு; கால்வழியார் (955) *வேண்டிந பொன் இவன் அந்வயத்தார் மன்ற பெறுவாராகவும்* (SII,xiii,162.)

அந்வயம் (பெ) சந்ததி (1113) *எங்கள் அந்வய முள்ளதனையு மெஞ்ஞான்று மிதுக்கு வேண்டுவன* (SII,iv,1396.)

அந்றாடு கோ (பெ) (= அன்றாள் கோ) (988) *த$_4$ன்மாதன முள்ளிட்டு தாம் அந்றாடு கோவுக்கு நிசதம் அரைக்கால் பொன்* (SII,xiii,29,32.)

அந்று (வி) இல்லை (996) *ஏரி கல்லுவிக்க கடவராகவும் யிதந்றெந்றாரை* (SII,vii,805.)

அநர்த்த$_2$ப்பட்டு (வி) போக்கில்லாமல் (1154) *ஊரும் போகமு மழிந்து அநர்த்த$_2$ப்பட்டு இவூரிறை இறுக்கைக்கு* (SII,vii,96.)

அநவர்ஜ்யந் (பெ) விதி விலக்காயுள்ளவன் (1905) *அநவர்ஜ்யந் கொந்தலர்தார் கோச்சடையன்* (TASSI,1962-65,p.1-31.)

அநிசயம் (பெ) தீங்கு (1058) *இத்$_4$அர்மத்துக்கு அநிசயம் நினைப்பார்* (EC,ix.Cp.97b.)

அநிச$_0$யம் (பெ) தீங்கு (1155) *இதுக்கு அநிச$_0$யம் நினைத்தார் ராஜ்த்$_3$ரோஹி க்$_3$ராமத்$_3$ரோஹி* (EC,iii,Sr.76.)

அநியநாமகரணத்தால் .(பெ) (= அந்யநாம கரணம்), வேறு ஒருவர் பெயரில் (997) *இவ்வூர் சாவான்தி பூதன் சோழநார் பேரால் அநியநாமகரணத்தால் சுட்டப்பட்ட* (SII,v,677.)

அநியாய நிந்தை (பெ) அவதூறு (1284) *தன்தாயை அநியாய நிந்தை சொன்நபடி* (EC,x,Kl.138.)

அநுக்$_3$ரஹபு$_3$த்$_3$தி$_4$யன் (பெ) அருள் புரியும் திருவுள்ளமுடையவன் (921) *செங்குடிக் கௌசிகந் பராந்தகன்றனக் கநுக்$_3$ரஹபு$_3$த்$_3$தி$_4$யநாகி* (SII,iii,206a.)

அநுக்$_3$ரஹம் (பெ) அருள் (878) *ஸ்ரீப$_4$டார ரநுக்$_3$ரஹத்திநாற்* (SII,xiv,13.)

அநுச்சை (பெ) அநுமதி (873) *புதுக்குப் புறமாக நகர அநுச்சையால் வைத்துக் குடுத்தோம்* (SII,iii,91.)

அநுஜந் (பெ) தம்பி (815) *அநுஜந் உத்தரமந்திரபத$_3$மெய்தின* (SII,xiv,2; EI,viii,33b.)

அநுதாரத்துள்ளார் (பெ) அண்டியவர் (1205) *இவர்கள் அநுதாரத்துள்ளார் பக்கல் ஆளாதல் ஓலையாதல்* (SII,viii,106.)

அநுபவிப்பார் (பெ) நுகர்வார் (1000) *பாபப$_2$லம் அநுபவிப்பாராகவும்* (SII,v,873.)

அநுப$_4$விக்க (வி) நுகர (803) *தாமும் ஸந்ததியும் விசே$_0$ஷ மநுப$_4$விக்க பெறாதாரானார்* (SII,vi,365.)

அநுபோகம் (பெ) பயனை உண்ணும் உரிமை (1074) *நாவிசர்க்கு அநுபோகம் விட்ட நிலம்* (SII,viii,701.)

அநுலோமந் (பெ) உயர்குல ஆணுக்கும் தாழ்ந்த குலப் பெண்ணுக்கும் பிறந்தவன் (1200) *இவ்வரிஷ்டோமாபத்தியை யுடைய ரத$_2$காராநுலோமந் ஆகிய க[ர்ம்மா]ரநே* (SII,xvii,603.)

அநுஷ்டுப்பு (பெ) ஒரு வடமொழி யாப்பு (950) *விதித்தமைத்த அநுஷ்டுப்பின் விழுப்ப நோக்கி* (TASSI,1962-65,p.32-52.)

அநுஸந்தாநம் (பெ) தொடர்ந்து பாசுரம் ஓதுபவர் (1245) *இன்னாட்டுக்கு ஸ்ரீவைஷ்ணவ அநுஸந்தாந..திருப்பாணதாதரும்* (IPS,340.)

அநுஸந்தித்த (வி) ஓதிய (1800) *...திருப்பாவை அநுஸந்தித்த னாட்டு ஸ்ரீவைஷ்ணவர் பெறக்கடவர் ஆகவும்* (TDI,vi,166.)

அநுஸாரம் (பெ) அண்டியிருத்தல் (1168) *இவர்களும் இவர்கள் அநுஸாரத்துள்ளாருங் குடியிருந்து* (SII,xiii,588.)

அநைவோம் (பெ) எல்லோரும் (993) *இவ்வநைவோம் இது பந்மாஹேச்$_0$வர ரக்ஷை* (SII,xiii,182.)

அப்பஞ் சுடுவாள் (பெ) பணியாரம் சுடும் பெண் (985) *அப்பஞ்சுடுவாளுக்கு நெல்லு* (SII,viii,547.)

அப்பணை (பெ) கட்டளை (1442) *இருகண நாயக்கற்க்கு ஸமுக அப்பணையும் பண்ணி தந்ம சாதனமுங் குடுத்து* (SII,xvii,751.)

அப்பப்படி (பெ) அப்ப உணவு (1255) *கறி அமுதும் அப்பப்படி திருக்கணாமடையும் திருவிளக்கு* (SII,vii,855.)

அப்பம் (பெ) பணியார வகை (985) *இரா அமுது செய்து அர்த்$_3$த$_4$ சாமத்துக்கு முன்பு அப்பமுது அமுது செய்வதாகவும்* (SII,viii,547.)

அப்ப அமிர்து (பெ) பணியார வகை (985) *கணபதியாற்க்கு அப்ப அமிர்து நிலம் அரைமா* (IPS,20.)

அப்பிய்ய விஷு (பெ) ஐப்பசி மாதத்து முதல் தேதி (1001) *உத்தர மயனமும் ஐப்பசி விஷு தக்ஷணமயநமும் அப்பிய்ய விஷுவும் சித்திரைவிஷுவும்* (SII,xvii,222.)

அப்பியை விழு (பெ) ஐப்பசி மாதத்து வரும் விஷு நாள் (992) *நின்ற பாதியு மப்பியை விழு விதிகையட்டக் கடவியர்* (TAS,ii,p.34-37.)

அப்பு (பெ) நீர் (1012) *நிலத் தொகை அப்புத் திரண்டியல் மா முப்பத்திரண்டு* (SII,vii,863.)

அப்பொழுதேய் உடன் (771) *வேந்தனப் பொழுதேய் நீரோடட்டிக் கொடுத்தமையால்* (EI,xvii,16.)

அப்போது (பெ) அந்நேரம் (885) *அப்போது காட்டும் விளக்கினுக்கு* (SII,xii,69.)

அபர பக்ஷம் (பெ) தேய்பிறை நாள் (996) *இவ்வாட்டை மிதுந நாயற்று அபரபக்ஷத்து நாயற்றுக்கிழமை* (SII,vii,805.)

அபராத காணிக்கை (பெ) தண்டப்பணம் (1437) *ஸேவாபராத ஸ்தாநத்துக்கு அபராத காணிக்கை வருஷம் ஒன்றுக்கு நூற்றுஇருபது பொன்* (SII,viii,165.)

அபராதம் (பெ) தண்டம் (921) *வாரியஞ் செய்யா நின்றாரை அபராதங் கண்ட போது அவனை யொழித்துவதாகவும்* (ARASI,1904-05,p.131.)

அபரிமிதம் (பெ) எண்ணற்றவை (700) *அபரிமிதமாகிய ஹிரண்யக$_3$ர்ப$_4$* (EI,xxxviii,4.)

அபஹரித்தான் (பெ) கவர்ந்தான் (921) *பரத்$_3$ரவ்யம் அபஹரித்தானையும் குடவோலை எழுதிப்புக* (ARASI,1904-05,p.131.)

அப$_4$யதா$_3$நம் (பெ) அடைக்கலந்தருகை (1518) *வந்நியரையும் ஜீவக்$_3$ராஹமாகப் பிடிதுக் கொண்டு யிவர்களுக்கு அப$_4$யதா$_3$நம் குடுது* (TDI,iii,81.)

அப$_4$யம் (பெ) தஞ்சம் (1113) *அப$_4$யம் புக்காரையும் பட்டுங் கெட்டுங் காக்கக் கடவோமாகவும்* (SII,iv,1396; EI,xviii,38; EZ,ii,p.242-55.)

அபாயம் (பெ) தீவினைப் பேறு (1168) *ப்ரதேச$_0$த்திலே பூசலுண்டாய் அபாயத்திலே ஈழப்படை ஜயித்தவாறே* (SII,vi,456.)

அபாவத்து இறந்த பிறகு (1158) *தண்பரி சுடையார் பேரிலே விலைகொண்டுடையா ராய் அநுபவித்து அவர் அபாவத்து எங்களுக்கு* (SII,viii,228.)

அபா$_4$வம் (பெ) இறப்பு (960) *அபா$_4$வமெய்தியு* (SII,v,574.)

அபிசெயம் (பெ) தோல்வி (1460) *எங்களுக்கு விரோதியான தூவார் ஊரையும் அழித்து எங்கள் அபிசெயமுந் தீத்து மேலும் எங்களுக்கு உதவி ஆந காரியமே* (IPS,799.)

அபிமாநம் (பெ) அவமானம் (1050) *தாயை மூக்கரிய ஆங்கபிமாநம் நீங்குதற்காக* (SII,v,641.)

அபிமானித்து (வி) மதித்து (1546) *அலைமேல் மங்கை நாச்சியாரும் தன்னை அபிமானித்து* (TDI,v,74.)

அபி$_3$ழேகம் (பெ) திருமுழுக்கு (952) *அபி$_3$ழேகஞ் சேசுவிச்சோம் மூலபரடைச் சவையோம்* (TAS,iv,p.118.)

அபி$_4$மானம் (பெ) நம்பிக்கை (1330) *இவற்கொரு நலித்தீங்கு வந்தால் எங்கள் அத்$_2$த$_2$ ப்ரமாண அபி$_4$மானத்தாற் பரிகரிக்க* (EC,xvii,Mr.18.)

அபி$_4$ஷேகம் (பெ) முடிசூட்டல் (796) *நந்திவந்மனென்று அபி$_4$ஷேகஞ் செய்து* (SII,iv,135; MASI,lxiii,p.54-59.)

அபி$_4$ஷேக$_3$தக்ஷணை (பெ) மன்னன் தன் முடிசூட்டு விழாவின்போது பிராமணர்க்கு செய்யும் கொடை (953) *நாங்கள் அபி$_4$ஷேக$_3$தக்ஷணை பெற்றுடைய அரிசலூர் நிலத்தில்* (SII,xiii,46.)

அபூர்வ்வி (பெ) ஊருக்குப் புதியவர் (919) *சாலை மண்டகத்தேய் வேத$_3$ம் வல்ல அபூர்வ்வி களேய் நிசதி நால்வர் ப்$_3$ராஹ்மணற்கு* (SII,iii,99.)

அபூர்வாயம் (பெ) ஒரு வரி (1297) *உள்ளூர் உள்ளவையற்றில் அழிவன்னியாயம் அபூர்வாயம் மனைதிறை எற்பேறபட்டனவும்* (EC,ix,An.84.)

அபூர்விகள் (பெ) புதியவர்கள் (985) *மூன்று ஸம்வத்ஸரத்தில் பரீக்ஷை கொண்டு அபூர்விகளுக்கேய் பணிப்பதாகவும்* (SII,vi,322.)

அபூரித் திருமேனிகள் (பெ) புதியவர்கள் (1278) *அரிசி முன்னாழியும் அபூரித் திருமேனிகளுக்குக் குடுக்க திருமுன் ஒடுக்குக்கு அரிசி இரு நாழியும்* (SII,iv,426.)

அபேக்ஷிக்க (வி) விரும்ப (1192) *எப்பேறபட்ட ஸபாவினியோகமுந் தவிரவேணுமென்று தற்புர்ஷசிவர் அபேக்ஷிக்க* (SII,v,301.)

அபோவநம் (பெ) தரிசு (953) *பண்டு விளைந்தறியாகக் களர் அபோவநமேய் கிடந்த நிலத்தை* (SII,viii,694.)

அபோஹநம் (பெ) தரிசு (923) *ஊரகன் குடி அபோஹநங்கிடந்த பூ$_4$மியை கல்லி* (SII,xix,402.)

அபோ$_4$ஹனம் (பெ) விளைச்சலில்லாமல் (998) *ஊர்க்குடி அபோ$_4$ஹனம் கிடந்த பூமியைக் கல்லி* (SII,xiii,235.)

அப்$_4$யாஸிகள் (பெ) பயில்பவர்கள் (974) *அதிதிகளையும் அப்$_4$யாஸிகளையும் முட்டாமை ஊட்டுவோமானோம்* (SII,xiii,284.)

அப்$_4$யுத$_3$யம் (பெ) வளர்ச்சி; நன்மை (921) *நம க்$_3$ராமத்துக்கு அப்$_4$யுத$_3$யமாக துஷ்டர் கெட்டு விசி$_0$ஷ்டர் வத்தி$_4$ப்பதாக* (ARASI,1904-05,p.131.)

அம்ச$_0$ம் (பெ) பங்கு (961) *வாகூர் ஸ்ரீ மூலஸ்தானம் அம்ச$_0$முடைய திருக்கோயிலுடையார்* (SII,vii,803.)

அம்பட்டன் (பெ) மருத்துவர் (1014) *மூன்றும் அம்பட்டன் கோன் சடங்கவியான ராஜராஜ ப்ரயோக$_3$தரையனுக்குப் பங்கு* (SII,ii,66.)

அம்பலப்பட்டி (பெ) (= அம்பலப்புறம்) (958) *அக்$_3$நியிடுவதற்கும்மாக அம்பலப்பட்டி வைத்தமையில்* (EI,iii,38d.)

அம்பலப்புறம் (பெ) அம்பலத்தைப் பராமரிக்க விடும் நிலம் (879) *அம்பலப்புறமாக விற்றுக் கொடுத்த நிலம்* (SII,xiii,187.)

அம்பலம் (பெ) ஊர்ப் பொது மண்டபம் (789) *அம்பலந் தண்ணீரட்டுவார்க்கும் தீயெரிப்பானுக்குமாகப் பங்கொன்றும்* (SII,ii,99.)

அம்பிலி (பெ) கூழாகப் படைக்கும் உணவு (1561) *பால் குழம்பு வட்டில் 1 ரஜாயந வட்டில் 1 அம்பிலி வட்டில் 1 மோர் வட்டில் 1 குழம்பு வட்டில் 1 அகா இவ்வகை அலங்கார தளிகை 1* (TDI,v,167.)

அம்பு (பெ) ஒரு பருவகாலப் பயிரின் பெயர் (1300) *கடைப்பூவும் அம்பும் புன்பயிரும்* (SII,ii,22.)

அம்பு (பெ) ஓர் ஆயுதம் (785) *அரிநெடுங் கண்ணம்புகளாற் பொரமைந்தர் புலம் பெய்தும்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

அம்பும் சோறும் பட்டு பொருளும் உணவும் கொடுத்து (1403) *யிராசதலை ஒழிந்து இனக்கு ஒரு வினையுண்டாநால் அம்பும் சோறும்*

பட்டு காத்து நோக்க கடவர்களாகவும் (IPS,695.)

அம்புமுது (பெ) முத்து வகை (1014) *ஒப்பு முத்துங் குறுமுத்தும் நிம்போளமும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும்* (SII,ii,3.)

அம்புமுது பாடன் (பெ) முத்துவகை (1015) *தைத்த முத்து அம்புமுதும் வரையும் அம்புமுது பாடனும்* (SII,ii,7.)

அம்பொற்சித்ரம் (பெ) இந்திரனுடைய கொடி (921) *அம்பொற் சித்ரமுயரிஉம்* (SII,iii,206a.)

அம்மா (இ) (அசைச் சொல்) (1000) *சிராமலை மேன் மலையன் உள்ளியம்மா விரந்தாலுகந்திய பரமுன்மத்தமே* (SII,iv,167.)

அம்மான் (பெ) தாய்மாமன் (1037) *குடுக்கவென்று அம்மான் அருளிச்செய்தமையில்* (SII,xiv,160.)

அம்மை (பெ) தாய் (868) *இது இறக்குவாந் தங்களம்மைக்குத் தாநேய் மிணாளன்* (SII,xii,58.)

அம்மை (பெ) அடுத்துவரும் பிறப்பு(?) (1000) *ஈன்றாள் வருந்த விம்மைப் பிறந்தம்மைக் கிரங்கி நைய்யு முன்* (SII,iv,167.)

அம்ருதக₃ணம் (பெ) ஓர் ஊர் நிர்வாகக் குழு (899) *ஆதம்பாக்கத்து ஸபை₄யோமும் அம்ருத க₃ணத்தோமும்* (SII,xii,87.)

அம்ருதகிரணன் (பெ) சந்திரன் (815) *அம்ருதகிரணன்னன் வயத்திலாக* (SII,iii,206b.)

அம்ருதம் (பெ) அமிழ்தம் (796) *அம்ருதமுந் நஞ்சி கலந்தந்த* (SII,iv,135; MASI,lxiii,p.54-59.)

அம்ருதமஹா நிர்வாணம் (பெ) புத்த மதத்தில் உயர்ந்த நிர்வாண நிலை (1344) *முடிவிலே அம்ருதமஹா நிர்வாணம் என்று சொல்லப்பட்ட மோக்ஷ சம்பத்தையும் பெறுவார்கள்* (UCR,xviii,p.16-23.)

அமச்சி (பெ) (= அமஞ்சி) (1000) *இறையும் சோறுமாட்டும் அமச்சியும் வெட்டியும் உவகையும்* (SII,v,873.)

அமஞ்சி (பெ) கட்டாய ஊழியம் (900) *இந்நிலத்துக்கு ஏருமமஞ்சியு இவநேய் செய்து கொண்டு* (SII,xii,114.)

அமணம் (பெ) பாக்கு எண்ணிக்கையில் ஒரு அளவு (இருபதினாயிரம் கொட்டைப் பாக்கு கொண்டது) (1614) *பாக்கு சுவந்திரம் பொக்காயம் உள்ப்பட அமணத்துக்கு முன்று மாப்பணமும்* (SII,iv,401.)

அமர் (பெ) போர் (771) *பாழிவாயமர் கடந்து* (EI,xvii,16.)

அமர் (வி) பொருந்திய (1001) *வண்டமர் பொழிலணிவாள்* (SII,v,975.)

அமர் (வி) பொலியும் (862) *பண்ணமர் கோஇல்* (SII,xiv,45.)

அமர்க்களம் (பெ) போர்க்களம் (1015) *விளையமர்க்களத்துக் கிளையோடும் பிடித்து* (SII,xvii,329.)

அமர்ந்தாய் (பெ) எழுந்தருளியிருந்தாய் (1000) *சிராமலை மாமணியே மருதாடமர்ந்தாய்* (SII,iv,167.)

அமர்ந்து (வி) விரும்பி (785) *திருமாலுக்கமர்ந் துறைய* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

அமரச் சீர்மை (பெ) விஜயநகர அரசந் தனக்கு படை ஊழியம் செய்யும் அமரம் அல்லது அமர நாயக்கர் என்றழைக்கப்பட்ட வட்டாரத் தலைவர்களின் ஆட்சிக்கு வழங்கிய நிலப்பகுதி (1524) *வீரநரசிஞ்கராய நாயக்கர் பண்டாரத் தார் எனக்கு நாயக்கத்தனத்துக்கு குடுத்த அமரச்சீர்மை மேலைநிலைப் புரவு* (AVNM,10,p.65)

அமர நாயகன் (பெ) திருமால் (905) *திண்படை மால் ஸ்ரீபூ₄பதி ஆதிபுருஷன் அமரநாயகன் அழகமை நாபி₄* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

அமரம் (பெ) (= அமரச் சீர்மை) (1426) *திருவாரூர் உசாவடி அகப்பற்று ... ... ம் இறை– இலிப்பற்று பண்டாரவாடை அமரம் லிகிதச்சீவிதம் உள்ளிட்ட நாடு நாட்டவற்கு* (SII,xvii,562)

அமர மாகணை (பெ) (= அமரச் சீர்மை) (1570) *நமக்கு ராமரசர் அய்யன் அவர்கள் அமரமாகணையாக பாலித்தருளின மதுரை மண்டலம்* (AVNM,7,p.69)

அமரர் (பெ) வானோர்; தேவர்கள் (905) *திறலஷ்ட மூர்த்தி அமரர்க்கும் அறிஓன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

அமராபதி (பெ) இந்திரன் தலைநகர் (1200) *வானவர் தங்கோமான் எனதென்றிரான் அமராபதிக் குஞ்சரமே* (SII,viii,145.)

அமராலையம் (பெ) கோயில் (905) *அமராலையம் பல செய்தும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

அமாவாதி (பெ) அமாவாசை (962) *அமாவாதி நாள் பந்திருநாழி திரு அமிர்தும்* (TAS,v,p,190.)

அமாவாஸிப்புறம் (பெ) அமாவாசைப் பூசைச் செலவிற்காக விட்ட நிலம் (1114) *பொலின்து நின்றபிரான் அமாவாஸிப்புறம் திருநாராயண வயலுக்கு கிழக்கும்* (CHEN,xx,p.166-67.)

அமாவாஸை (பெ) நிலவில்லாத நாள் (910) *அமாவாஸைதொறும் இருநாழி நெய்யமுது செவிப்பதற்க்கு* (SII,xix,67.)

அமிது (பெ) உண்ணும் பொருள் (887) *கறி அமிது...மிளகமிது மஞ்சளமிது சீரக அமிது சிறுகடுகமிது* (SII,xiv,16a.)

அமிர்தம் (பெ) அமிழ்தம் (921) *திருவோடுந் தெள்ளமிதோடும்* (SII,iii,206a.)

அமிர்து (பெ) படையல் சோறு (869) *திருவமிர்தரிசி முக்குறுணியும் திருவமிர்துந் திருவிளக்கும்* (SII,vii,523.)

அமுது (பெ) படையல் சோறு (953) *உச்சம் போதைச் சந்தியில் அமுது செவ்வதாகவும்* (SII,viii,694.)

அமுது செய் (வி) உணவு கொள் (987) *ஆள்வார் அமுது செய்யும் வணம் ஊட்ட கொண்ட செம்பொந்* (SII,xiii,161.)

அமுதுபடி (பெ) படையல் சோறு (868) *திருநொந்தாவிளக்கும் அமுதுபடிக்கும் உபையம் வைய்க்க* (SII,xii,58.)

அமைக்கப்பட்ட (வி) குடியமர்த்தப்பட்ட (1043) *ஸ்ரீ இராயசிங்கப் பெருமானடிகளால் தாழைக் காட்டிக்கமைக்கப்பட்ட வாணிகர்க்கு* (TAS,viii,p.39-40.)

அமைக்கிற (வி) செய்கிற; உண்டாக்குகிற (922) *சாந்தமைக்கிற முனைப்பாடி அதியரைய மங்கலத்து* (SII,iii,101.)

அமைச்ச (வி) வைத்த (800) *நாராயணஞ் சிவாகரன் அமைச்ச பூமி* (TAS,iii,p.203-05.)

அமைச்சார் (வி) ஏற்படுத்தினார் (951) *திருவக்கிரமிரண்டு கலமுமிப் பூமியா லிருவரும் அமைச்சார்* (TAS,i,p.288-89; TAS,v,p.6-7.)

அமைச்சான் (வி) வைத்தான் (951) *சந்தனத்தின்னு புகைக்கு சிறு புனையில் தலைச் சாத்தன் கூறு அமைச்சான்* (TAS,i,p.289; TAS,v,p.7.)

அமைச்சு (பெ) ஏற்பாடு; அதிகாரம் (947) *இரவி ஆதிச்சனமைச்சினில் பிச்சைப் பரடையாரு பொதுவாளுங்கூடி* (TAS,vi,52,p.64.)

அமைஞ்ச (வி) பொருந்திய (944) *கோயிற்கமைஞ்ச சென்னடையுங்* (SII,v,783.)

அமைஞ்ஞ (வி) ஏற்பட்ட (954) *இச் செலவின் னமைஞ்ஞ பூமியாவது* (TAS,iii,p.169-71.)

அமைஞ்ஞ (வி) இசைந்த (1000) *சிரிகண்டனிதினு கீழீட்டினு கொடுப்பானமைஞ்ஞ ரக்ஷாபோகம் பொன்* (TAS,ii,p.173-207.)

அமைஞ்ஞான் (பெ) கடமைப்பட்டான் (1010) *திருவிளக்கினு நெய் கொடுப்பானமைஞ்ஞான் நாராயணதேவன்* (TAS,ii,p.42-44.)

அமைத்த (வி) நிலைநிறுத்தி (771) *தன் பாலுரிமை நன்கனமைத்த* (EI,xvii,16.)

அமைத்தன (வி) ஏற்பாடு செய்தது (870) *முட்டாவவியும் ஓரடிகளுக்கு சோறாக அமைத்தன பொன் ஐந்நூற்றைந்து காணம்* (SII,xiv,22.)

அமைத்தாய் (வி) செய்தாய் (1000) *முழுதும் பித்தமைத்தாய் சிந்தை நொந்து* (SII,iv,167.)

அமைத்து (வி) உருவாக்கி (785) *நெடுமதிலை வடிமைத்தும்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

அமைந்த (வி) பொருந்திய (771) *அழகமைந்த வார் சிலை* (EI,xvii,16.)

அமைந்து (வி) பொருந்தி (1012) *குடியிலலகியல் மரபினமைந்து உலகியல் சாண்பந்நிரண்டிற் சமைந்த* (SII,vii,863.)

அமைந்து (வி) ஒப்புக்கொண்டு (873) *நெய் அட்டுவிப்பதற்கு அமைந்து புணைபட்டோம்* (SII,xiv,10.)

அமைந்தோம் (வி) ஒப்பினோம் (802) *இயற்றுவாராக அமைந்தோம்* (SII,xii,42.)

அமைப்பித்த (வி) செய்வித்த (833) *கற்பிளந்த குளவாயிலமைப்பித்த இற்பணம்பு* (SII,xiv,44)

அமைய (வி) பொருந்த (783) *வடிவமைய பிடி சூழ்ந்தான்* (IA,xxii,p.55-75; PNDCP,p,55-62)

அமைவு (வி) முடிவு(?) (1176) *தருமமு மருமறையு மோங்க அமைவில்லா மனுவொழுக்க மாதியாம்படி* (SII,xvii,585.)

அய்ம்பத்தெட்டு (பெ) 58 (எண்) (789) *யாண்டு அய்ம்பத்தெட்டாவது* (SII,ii,99.)

அய்ம்பத்தொன்பது (பெ) 59 (எண்) (792) *யாண்டு அய்ம்பத்தொன்பதாவது* (EI,xviii,14.)

அய்யபொழில் புர பரமேசுவரி (பெ) அய்யப்பொழில் (அய்யவொளெ) நகரில் இருந்த துர்கை: ஐந்நூற்றுவர் வணிகக்குழுவினரின் குலதெய்வம் (1050) *ஸ்ரீ அய்யபொழில்புர பரமேசுவரிக்கு மக்களாகி* (AVNM,2,p.6-8)

அய்யம் (பெ) பிச்சை(?) (1200) *அவன் இல்லத்து அய்யமும் பிச்சையும் கொள்.ளும்* (SII,v,785.)

அய்யர் (பெ) தந்தை (1070) *விஜையஸிம்ஹாஸனத்து வீற்றிருந்தருளின நமய்யர் திருமுகம் ப்ரஸாதஞ் செய்தருளி* (SII,xiv,194.)

அய்யன் (பெ) கீழ்ப் பூசாரி(?) (944) *தாரைக்கும் அய்யனுக்கும் இத்தனைக்கும் அமைஞ்ச பூமி* (SII,v,783.)

அய்யன் (பெ) அய்யனார் (கிராம தெய்வம்) (1400) *அய்யன் போகம் பிடாரி பாத்தி* (SII,viii,210.)

அய்யன் மஹாசா$_0$ஸ்தா$_2$ (பெ) அய்யனார் (957) *எமூர் தெற்க்கில் அ[ய்]யன் மஹாசா$_0$ஸ்தா$_2$ திரு சென்னடைக்கும்* (SII,iii,167.)

அய்யன்மார் (பெ) பிராமணப் பெரியோர்கள் (954) *இவிளக்கு ரக்ஷிப்பார் திருச்சுழியல் அய்யன்மார்* (SII,xiv,79.)

அய்வோம் (பெ) நாங்கள் ஐந்துபேரும் (789) *கண்டியும் பரனும் சிறுநம்பி$_3$யும் ஆடரியும் ஆயிரவனும் இவ்வய்வோம்* (SII,xii,39.)

அயங்கரி (பெ) யானை (1047) *விரிசுடர்ப் பொன்னோ டயங்கரிப் புரவியோடும்* (SII,iii,28.)

அயநம் (பெ) சூரியன் வடக்கு அல்லது தெற்கு நகரும் காலம் (986) *உத்தரமயந ஸங்க்ராந்தியும்* (SII,iii,128.)

அயப்படை (பெ) குதிரைப்படை (1054) *பூண்டுர் வெண்சமத்தகப்படுத் தயப்படை யாகவமல்லன்* (SII,vii,1048.)

அயர்ந்த (வி) செய்த (771) *மலர் மங்கைஒடு மணனயர்ந்த* (EI,xvii,16.)

அயர்வில் (வி) சோர்வில்லாத (1024) *மாசுணிதேசமு மயர்வில் வண்கீத்தி ஆதி நகரவையில்* (SII,i,68.)

அயல் (பெ) அருகே (1012) *கரும்பிடை தூணித்தரத்தாட் டொலியாலை யயலது பாட்டொலி* (SII,vii,863.)

அயன் (பெ) நான்முகன் (1000) *சுடர்க்கமலத்தயன்றன் சிரம்* (SII,iv,167.)

அயனவாரம் (பெ) ஞாயிற்றுக் கிழமை(?) (992) *சனிவாரம் எண்ணை நாழிஉரியும் அயனவாரம் எண்ணை நாழி உரியும்* (SII,xix,357.)

அயனஸங்கிராந்தி (பெ) (= அயநம்) (985) *உத்தர மயநம் பற்றின அயன ஸங்கிராந்திக்கு ஆடி அருள* (SII,xix.384.)

அயிர்ப்பு (பெ) ஐயம் (1000) *பழவஞ் சாலவயிர்ப் புடைத்தேய்* (SII,iv,167.)

அயிராபதம் (பெ) இந்திரனது யானையின் பெயர் (1076) *படர்புகழ் அயிராபதத்தோ பயிராபதமென வயிராகரத்து வாரணம்* (SII,vii,137.)

அயில் (பெ) வேலாயும் (1075) *வயிராகரத்து வாரி அயில்முனைக் கொந்தளவரைசர்* (SII,iii,68)

அயிலாது (வி) உண்ணாது: பருகாது (1000) *உழைமானயிலாதொழிகிலவை* (SII,iv,167.)

அர்க்கி பலி (பெ) (= அர்க்கியப் பலி) தீர்த்தத்தாற் செய்யும் படையல் (1024) *அந்தியம் போது அர்க்கி பலிக்கு அரிசி இருநாழி* (EC,x,Kl.112a.)

அர்க்கியம் (பெ) (= அர்க்கிய பலி) (1011) *அர்க்கியத்த்துக்கும் விண்டிலத்துக்கும் ஒடுக்க அரிசி* (SII,v,724.)

அர்ச்சநா விசே$_0$ஷம் (பெ) பூசைச் சிறப்பு (1175) *இம்மனையும் தோட்டமும் விளை நிலமும் இத்$_3$தே$_3$வற்கு அர்ச்சநா விசே$_0$ஷமாக* (SII,xvii,244.)

அர்ச்சநை (பெ) பூசை (884) *அந்தி விளக்கும் அர்ச்சநையும்* (SII,xii,68.)

அர்ச்சனய் (பெ) பூசை (759) *அர்ச்சனய் செய்துண்பாரனார்* (SII,iv,827.)

அர்ச்சனா போகம் (பெ) கோயிலில் பூசை செலவிற்காக விடும் நிலம் (780) *தான்தொன்றி பெருமானடிகள் அர்ச்சனா போகத்து* (SII,xiv,17.)

அர்ச்சனா வ்ருத்தி (பெ) பூசைச் செலவுக்காக விட்ட மானிய நிலம் (1018) *முன்பு இவர்கள் அர்ச்சனா வ்ருத்தி ஆன அரிசாண் மங்கலத்தினில் வ்ருத்தி சிலாலெகை* (ALB,viii,p.99.)

அர்ச்சிநாவிதி$_4$ (பெ) பூசை விதி (927) *வேத$_3$மும் அர்ச்சிநாவிதி$_4$யும் வல்லாநொருவநுக்கு ஜீவிதமாக வைத்த பொன்* (SII,xvii,475.)

அர்ச்சிப்பாந் (வி) பூசிப்பான் (1016) *க$_3$ங்கா$_3$த$_4$ர பட்டந் புத்ர பௌத்ராதி சந்த்$_3$ராதி$_3$வற் ஐர்ச்சிப்பாநாக ச்$_0$லாலேகை செய்து* (SII,vi,336.)

அர்ச்சிப்பார் (பெ) பூசிப்பார் (864) *நாழ்வாய் நாழி நெய் முட்டாமை அர்ச்சிப்பார் கையிலேய் குடுத்து* (SII,vii,503.)

அர்த்தம் (பெ) பொருள் (1171) *பரிகரித்து பலத்தாலும் அர்த்தத்தாலும் உற்சாகத்தாலும் பாண்டிநாடு கைக்கொண்டு* (EI,xxi,31.)

அர்த்$_3$த$_4$ சந்த்$_3$ரம் (பெ) அரைநிலா வடிவம் (1014) *அர்த்$_3$த$_4$ சந்த்$_3$ரம் ஒன்றுமாய் அறுமுழமேய் இருவிரற் சுற்றுடைய கனமாகச் செய்த* (SII,ii,34.)

அர்த்$_3$த$_4$ நாரீச்$_0$வரம் (பெ) பாதியுடம்பு பெண்வடிவான சிவன் (1014) *எழுந்தருளுவித்த அர்த்$_3$த$_4$நாரீச்$_0$வரம் திருமேனி ஒன்று* (SII,ii,39.)

அர்த்$_3$த$_4$மண்ட$_3$பம் (பெ) கருவறையின் முன்னுள்ள சிறு மண்டபம் (932) *பெரிய கோயிலில் அர்த்$_3$த$_4$ மண்ட$_3$பத்தில் தென் மாட்டில்* (SII,v,588.)

அர்த்$_3$த$_4$யாம ப$_3$லி (பெ) நள்ளிரவில் செய்யும் படையல் (1024) *அந்தியம் போது பலிக்கு அரிசி இருநாழி அர்த்$_3$த$_4$யாம ப$_3$லிக்கு அரிசி இருநாழியும்* (EC,x,Kl.112a.)

அர்த்$_3$த$_4$யாமம் (பெ) நள்ளிரவு (800) *அர்த்$_3$த$_4$யாமத் திருவமிது* (TAS,iii,p.200-03.)

அர்த்$_3$தா$_4$ஸநம் (பெ) இருக்கையில் பாதியிடம் (815) *ஹாரம் பூண்டும் அர்த்$_3$தா$_4$ஸநமவநோடேறிஉம்* (SII,iii,206b.)

அரக்கல் (பெ) நில வரியைச் செலுத்தும் தவணைகளில் ஒன்று (1236) *ஊரடவு இறைநிலம் மேலும் அரக்கல் கடமைக்கு கலச்சை ஈவுநெல்* (TAS,iii,p.59-63.)

அரக்கு (பெ) மரமெழுகு (1014) *அரக்கு நிறை எண்கழஞ்சே எழுமஞ்சாடியும் பிஞ்சு நிறை முக்காலும்* (SII,ii,3.)

அரங்கழிவு (பெ) அரங்கில் ஏற்பட்ட குறைகள் (941) *அரங்கழிவு சொன்றுடனுன்றிசக்குந் தச்சனுக்கு* (SII,viii,529.)

அரங்கு (பெ) கூத்தாடுமிடம் (1120) *நீடும் அதிகையரன் நித்தற் பெருங் கூத்தையாடும் அரங்கமைத்தான்* (CHEN,xxiii,p.93-96.)

அரங்கேறி (வி) மேடை ஏறி (1396) *திருக்கோயிலதனில் முதலடைவும் பெற்றே யரங்கேறியவை மதிக்க ஆடினாந்ளே* (IPS,781.)

அரங்ஙம் (பெ) (= அரங்கு) (1118) *திருப்பள்ளித் தாமமுடவ்வளயுங் கிடத்தி அரங்ஙத்து நால்வர் உவைச்சறேரவுங் கிடக்குமாறு கற்பிச்சு* (TAS,iv,p.22-25.)

அரசி மாணிக்கம் (பெ) சிறந்த மாணிக்கம் (1014) *திருப்பட்டிகை நாணும் அரசி மாணிக்கமும் படுகண்ணுங் கள்ளிப்பூவும்* (SII,ii,93.)

அரசியலுரிமை (பெ) அரசாளுதற்குரிய உரிமை (1044) *நந்குதரு தகைமையில் அரசியலுரிமை முறைமையிலேத்தி* (SII,v,633.)

அரசிலைய் (பெ) அரசிலை போன்ற நகை (1010) *மாங்காய் இரண்டும் அரசிலைய் ஒன்றும் தகட்டுகுழை நாலும்* (SII,viii,234.)

அரசு (பெ) ஒரு வரி (1517) *உள்ளூர் தேவதானம் உண்டாநதுக்கும் ஆயம் அரசு தறிக்கடமை பேற்க்கடமை ஸகல பட்டிடைகளிலாயம்* (SII,vi,70.)

அரசு கட்டு (பெ) ஒரு வரி (1377) *பாடிகாவல் அரசுகட்டு பறைமை மற்றும் எப்பேற்பட்ட சுவந்தரங்களும்* (IPS,453.)

அரசு சுவந்திரம் (பெ) பாடிகாவல் தலைவர் பொருட்டுச் செலுத்தும் வரிகள் (1426) *விளைஞ்ச நிலத்துக்குள்ள பணமும் மாத்தால் அரசு சுவந்திரம் நீங்கலாக* (IPS,784)

அரசுபேறு (பெ) காவல் புரியும் அரையர் பெறும் உரிமை (1241) *இந்நாயனார் திருநுந்தாவிளக்குப்புறத்து பள்ளிகளுக்கு அரசுபேறாக குடுப்பித்த* (SII,xvii,577.)

அரசுபேறு (பெ) ஒரு வரி (1387) *பொது மக்கள் பேரால் கொள்ளும் விலையாசெறு அரசுபேறு பாடிகாவல் அரிசிகாணம்* (EI,viii,31.)

அரசு மக்கள் (பெ) ஒரு வகை சாதியினர் (1283) *வள நாட்டு விரையாச்சிலை அரசுமக்களும் மறமுதலிகளும் பிராமணம் பண்ணிக் குடுத்த பரிசாவது* (IPS,393.)

அரசுரிமை (பெ) ஆட்சியுரிமை (1176) *போகமெல்லாம் வந்தீண்டி ஏகவாணை அரசுரிமை எழுபொழில்களும் பெற்றதென்ன* (SII,xvii,585.)

அரணம் (பெ) கோட்டை மதில் (800) *கடி அரணம் மூட்டின சீற்றம்* (EI,xiii,10.)

அரணிது (பெ) காவல் உடையது (785) *அணியிலங்கையிலரணிதாகி நெடுமாடமதில் விழிஞம்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

அரணிய (வி) பேணிய (1128) *மாதர் மடமயில் பூதலத்தருந்ததி அரணிய கற்பில் தரணி முழுதுமுடையாள்* (SII,vii,773.)

அரநிலை விளக்கு (பெ) ஒரு வகை விளக்கு (923) *வைத்த பொன்னர நிலைவிளக் கொன்று* (SII,xvii,380.)

அரம் (பெ) கரும்பு பிழியும் கருவி (1012) *கரும்பிடை துணித்தரத் தாட்டொலியாலை* (SII,vii,863.)

அரம்பையர் (பெ) தெய்வமகளிர் (1061) *அந்தரவாளத் தரம்பைய ரெதிர் கொள இந்திர லோகம்* (SII,v,647.)

அரமங்கை (பெ) தேவமகள் (1000) *நெஞ்சமேயினித் தேறர மங்கையல்லள் செயிர்ப் புடையார்* (SII,iv,167.)

அரமனை (பெ) அரண்மனை (1363) *கம்பண்ண உடையர் ப்ருதிவிராஜ்யம் பண்ணா நிற்க்க இவர் அரமனைக்கு ஸர்வ நிர்வாஹகந்* (EC,x,Kl.101.)

அரயகள் (பெ) (= அரையன்) (1300) *தென்கவி நாட்டு நாடாக இ.சந்த நாட்டவரு. அரயகளும் நிலவிலைப் பிராமணம் பண்ணி* (IPS,532.)

அரவம் (பெ) பாம்பு (1000) *நுன்பியற் கறைவாயரங் கடியாவகை* (SII,iv,167.)

அரவரைசன் (பெ) ஆதி சேஷன் (905) *அரவரைசன் பல்லூழி ஆயிரமாயிருந்தலையால்... பொறுக்கின்ற* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

அரவிந்த$_3$ம் (பெ) தாமரை (785) *அரவிந்த$_3$முக$_2$த்திளையவர்* (IA,xxii,p.55-75; PNDCP,p,55-62)

அரவு (பெ) பாம்பு (1000) *உலகொளிம் மதியமுங் கோளரவும்* (SII,iv,167.)

அரற்றுவன (பெ) புலம்புவன (1171) *பாடி யானையே பிணிப்புண்புன்பன வடிமணிச் சிலம்பே யரற்றுவன* (SII,xvii,592.)

அரன் (பெ) சிவபெருமான் (700) *சத்துரு மல்லேச$_6$வராலையமென்று அரனுக்கிடமாக* (EI,xii,27; SII,xii,10-11.)

அரா (பெ) பாம்பு (1120) *அராப்புனையும் நம்மதிகை வீரட்டானர்க்கு* (CHEN,xxiii,p.93-96.)

அராவின (பெ) தேய்த்தனவை (1015) *சிவந்த நீரும் இப்பி பற்று அராவினவும் வரையும் கறையும் குருவும் சிப்பிரமும் உட்பட முத்து* (SII,ii,7.)

அராவு (வி) பரவியுள்ள (1000) *பசுஞ் சந்தனத் தினாவி யராவு சிராமலை யானை* (SII,iv,167.)

அரி (பெ) சிவந்த வரி (785) *அரி நெடுங்கண்* (IA,xxii,p.55-75; PNDCP,p,55-62)

அரி (பெ) நெல் (1000) *அரிகுத்துவானும் எச்சிலடிப்பானும்* (TAS,iii,p.186-88.)

அரி (பெ) அரிசி (800) *அறு நாழியரியு நந்தாவிளக்கும்* (TAS,iii,p.203-05.)

அரி (பெ) வலிமை (1000) *கோளரியேறு தஞ்சமாரிதற்குந் தலைமகளே* (SII,iv,167.)

அரி (பெ) ஒரு கொடி (1118) *தென்கண்டம் அரி படர்ந்து திடலும் குழியுமாய்க் கிடந்தமையில்* (SII,xvii,624.)

அரிக்க (வி) தின்ன (1106) *கைத்தடி ஓலை வைச்ச விடத்தில் சிதலரிக்க* (CHEN,xii,p.190-91.)

அரிகேஸரி (பெ) பகைவர்க்கு சிங்கம் போன்றவன் (771) *அமரிகை அணிமணி நெடுமுடி அரிகேஸரி அஸமஸமந்* (EI,xvii,16.)

அரிகொழி (பெ) ஒரு வரி (753) *அரிகொழியும் நெய்விலெயும்* (SII,ii,73.)

அரிச்சனை (பெ) பூசை (1012) *யருக்க னரிச்சனை முற்றிய நான் மறை தெரிந்து* (SII,vii,863.)

அரிசி (பெ) உமி நீக்கப்பட்ட நெல் தானியம் (745) *உழக்கரிசிமுன் குறட்டி வைத்தது* (TAMIZ,1970,p.122.)

அரிசிக் காசு (பெ) ஒரு வரி (1250) *இக்கோயிலில் அரிசிக்காசுஞ் சீகாரியப்பேறு நீர்வார்த்துக் கல்வெட்டிக் குடுத்தோம்* (IPS,335.)

அரிசிகாணத் தேவை (பெ) ஒரு வரி (1500) *குதிரைப்பந்தித்தேவை அரிசிகாணத்தேவை ஆள்வரி மனைவரி* (IPS,656.)

அரிசி காணம் (பெ) ஒரு வரி (1265) *ஒழுக்கு நீர்ப்பாட்டம் வீசுவலைப்பாட்டம் அரிசிகாணம் ஆயவற்கம் தறி இறை* (SII,xvii,143.)

அரிசிப்பொதி (பெ) அரிசி மூட்டை (1532) *நெல்லுப்பொதி அரிசிப்பொதி உள்ளிட்ட பலதானிய வற்கத் தீர்வையும்* (SII,xvii,264.)

அரித்து (வி) நீரில் கழுவி கல்லைப் பிரித்து (938) *அரிசி அரித்து எச்சிலெடுப்பானுக்கும்* (SII,v,693.)

அரிதாக (பெ) அருமையாக (921) *அஹிபதி ஆயிரந்தலையாலரிதாகப் பொறுக்கின்ற* (SII,iii,206a.)

அரிதாயிட்டு (வி) அரிதாகி விட்டது; இல்லையென்றாகியது (924) *எப்பேர்ப்பட்ட சாதியும் மிசங்குவதரிதாயிட்டு* (SII,vi,292.)

அரிதின் (பெ) முயற்சியோடு (905) *இருந் தலையால் பெரிதரிதின் பொறுக்கின்ற பெரும் பொறை மண்மகளை* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

அரிந்து (வி) அறுத்து (1070) *பொற்களத் தலங்கல் சூழ பசுந்தலை அரிந்து புலங்கழல்* (SII,v,1382.)

அரி நீர் (வி) வற்றிய காலத்தில் கிடைக்கும் நீர் (1300) *இந்த நிலத்துக்கு அரிநீர் பெருநீர் அடியில்* (IPS,476.)

அரிப்பன் (பெ) ஒரு தாழ்த்தப்பட்ட சாதி (1258) *அனைத்துச் சாதிகளு அந்தணன் தலையாக அரிப்பன் கடையாக உள்ளுப்பட்ட அனைத்துச் சாதிமாற்க்கு* (SII,vii,118.)

அரிப்பாடி காவல் (பெ) ஒரு வரி (1183) *இன்னாள் முதல் கடமையும் ஆயமும் வெட்டி அரிமுக்கை அரிப்பாடிகாவல் காசுகடமையும் உட்பட* (SII,v,861.)

அரிப்பாள் (பெ) அரிசியிலிருந்து கல்லை நீக்கும் பெண் (1007) *அரிசி அரிப்பாளுக்கும் உத்தமாக்கிரம் உண்ண* (SII,viii,679.)

அரிமுக்கை (பெ) ஒரு வரி (1183) *இன்னாள் முதல் கடமையும் ஆயமும் வெட்டி அரிமுக்கை அரிப்பாடி காவல் காசு கடமையும் உட்பட* (SII,v,861.)

அரியது (பெ) முடியாதது (921) *விரவலர்க் கரியது* (SII,iii,206a.)

அரியவேய் (பெ) முடியாதது (800) *எண்கின் இருங்கிளையு மேறற்கரியவேய்* (EI,xiii,10.)

அரியன (பெ) அருமையுடையன (1000) *சிந்தை யடியர்க் கொன்னோ வின்றரியனவெ* (SII,iv,167.)

அரியேறு (பெ) ஆண் சிங்கம் (1000) *கோளரியேறு போலக் கோல யானையைக் கொன்று* (SII,iv,167.)

அரிவாட்பதக்கு (பெ) கதிர் அறுவடையின் போது செலுத்தும் வரி (1013) *கண்ணாலக் காணம் வண்ணார பாறை அரிவாட்பதக்கு சான்தியாயம் மற்றும் சில்வரி வெட்டி எச்சோறு உட்டிட்ட* (IPS,i,90.)

அரிவாள் (பெ) மரம் வெட்டும் கத்தி (1091) *மரத்தை அரிவாளிட்டு வெட்ட* (SII,vii,850.)

அரிவை (பெ) பெண் (1000) *அலமரு நெஞ்சத்தரிவை கண்டாற்றுங்கொல்* (SII,iv,167.)

அரிளிப் பாடு (பெ) உத்தரவு (896) *பெருமானடிகள் அரிளிப்பாட்டால்* (SII,xiii,312.)

அரி உல (பெ) அரிசி உலை (961) *அரி உலவ் வைப்பிச்சு....உண்டியை கொடுத்து ஊட்டக் கடவன்* (TAS,viii,p.43-44.)

அருக்கன் (பெ) சூரியன் (939) *அருக்கனோடும் மதியிழைந்து சுடர்களுளவளவு* (SII,xvii,501.)

அருகந்தன் (பெ) தீர்த்தங்கரர் (811) *அந்தமில் பல் குணத்தாதி அருகந்தனெந்தமிடர் தீர்க்கு* (SII,xiv,41.)

அருகு (பெ) பக்கம் (1192) *கவரி சேர செம்பியர் திரண்டருகசைப்ப* (SII,v,301.)

அருகு கண்டம் (பெ) நகையின் ஒரு உறுப்பு (1232) *சாத்தியருள இட்ட பதக்கமாலை 1னால் நாய்க கண்டம் 1 அருகு கண்டம் 6 கடைத்தொழில் 2 படுகண் 1 கொக்குவாய் 1* (SII,viii,103.)

அருச்சனாவிதி (பெ) பூசை செய்யும் முறை (1012) *நூன் முறை யுணர்தாங் கருச்சனாவிதியோடு தெரிச்சவாகமத் தொழில்* (SII,vii,863.)

அருதாகில் (வி) குறைந்தால் (1000) *திருவமிது அகத்தருதாகில் மண்டபத்தில் மண்டபத்தி லருதாகில்த் தொலியமலைக்குறவு தீர்த்து செலுத்துவிது* (TAS,ii,p.173-207.)

அருந்த (வி) குடிக்க (1000) *நறுங்கமலத் தளைவாய்த் தேனருந்தச் சுரும் பார்க்கின்ற* (SII,iv,167.)

அருந்தமிழோர் (பெர்) புலவர் (1236) *போர் மன்னு சயமடந்தையும் மண்மடந்தையும் முறையினெறி வாழ அருந்தமிழோர் கிளைவாழ* (TMPL,vi,265-67.)

அரும்பெறல் பெறுதற்கரிய (1066) *முறைமையி லரும் பெறல் தமையனை* (SII,v,976.)

அருமரபு (பெ) அரிய வழி (905) *அத்ரி அருமரபிற் பல காலந் தவஞ் செய்வுழி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

அருமொழி (பெ) கொஞ்சமாகப் பேசுபவன்; நன்றாகப் பேசுபவன் (1012) *நாடன் நேரியன் அருமொழி நித்த வினோதன்* (SII,vii,863.)

அருவடச் சுரிவு (பெ) ஒரு நகை (1247) *திருமுத்துவாளி 2 னால் பொன்னும் அருவடச்சுரிவு கல் 4ம் முத்து 12னாலும் எடை 3* (SII,viii,77.)

அருவி (பெ) நீர்வீழ்ச்சி (914) *பெரு வழியருவி வழிக்கு மேற்க்கு* (SII,xix,191.)

அருள் (பெ) நல்வினை (1146) *மெய் பெற்ற அருளென்னவு மொழி பொருளென்னவு* (SII,xvii,592.)

அருள் (பெ) அனுமதி (771) *மன்னன் கோன்னருளிற் பெற்றும்* (EI,xvii,16.)

அருள் செய்தவன் (பெ) கருணை பாலித்தவன் (1000) *மெய்ப்பொருள் வேண்டுமெனச் சொல்லிய கோவிற்க் கருள் செய்தவன்* (SII,iv,167.)

அருள் பயந்து (வி) கருணை புரிந்து (815) *அருள் பயந்து கல்பகத்தின் விரதம் கொண்டு* (SII,iii,206b.)

அருள் பெறுதல் (பெ) நன்மை பெறுதல் (1264) *தேவேந்திரரால் அருள் பெறுதலும் புகழும் புத்ரலாபமும் ஸத்ரு நாசமும் மற்றும் மெய்பேர்ப்பட்ட* (SII,vi,6.)

அருள்ளித்தாரு (வி) கட்டளையிட்டார் (500) *எழுதி வைக்கென்று அருள்ளித்தாரு* (AVNM,1,p.67-69)

அருள்ளிருந்து (வி) வீற்றிருந்து (934) *கோதை இரவி உள்பாட்டில் அருள்ளிருந்து செய்த கச்சமாவது* (TAS,viii,p.43-45; EI,xxviii,37.)

அருளி (வி) கொடுத்து (1048) *படர்புகழ் ஆங்கவற் கவர் நாடருளி* (SII,viii,199.)

அருளிச் செய்து (வி) கொடுத்து (919) *பரகேஸரிவர்மர் ஸ்ரீ முகம் அருளிச் செய்து வரக்காட்ட* (ARASI,1904-05,p.131.)

அருளிச் செய்வது (வி) கட்டளையிடுக (986) *ஸ்ரீகாரியங் கடைக் காணவும் அருளிச் செய்வதென்று விண்ணப்பஞ் செய்ய* (SII,iii,128.)

அருளிச் செயல் (பெ) அனுமதி (1157) *எம்பெருமாநார் அருளிச் செயல்படியே இப்பொன் ஸ்ரீ பண்டாரத்தே ஒடுக்கிவித்துக் கொண்டு* (EI,xxxiii,30.)

அருளிச் சேத (வி) கட்டளையிட்ட (765) *ப்ரஹ்மதேயம் அருளிச் சேத திருமுகந்தலைக்கு வைத்து* (EI,xxxvi,20.)

அருளின (வி) மரியாதை குறிக்கும் துணைவினை (986) *இக் கச்சிப்பெட்டு ஊரகத்து நின்றருளின தேவர்க்கு* (SII,iii,128.)

அருளுச் செய்து (வி) கொடுத்து (750) *திருமுகம் அருளுச் செய்து விடுதர* (EI,v,8.)

அருளுத்து (பெ) அருளியது; வழங்கியது (910) *இவெண்பா பெருமானடிகள் தாம் பாடி அருளுத்து* (SII,xii,94.)

அருளுப் பாட்டால் (பெ) ஆணையால் (926) *பரகேசரிபற்மர் அருளுப்பாட்டால் அரையன் வீரசோழனுக்கு* (SII,viii,668.)

அருளும் (வி) கருணை செய்யும் (1000) *மனத்தார்க் கருளும் பிரான்றன் சிராமலை* (SII,iv,167.)

அருஷை (பெ) பூசை (1012) *நாற்கவி நவின்றது ஏவலிலருஷையோடரஹர வெனக் குனித்தடிமை செய் பருஷையர்* (SII,vii,863.)

அரை (பெ) பாதி (804) *அரைச் சிராவணையும்* (SII,xiv,37.)

அரை (பெ) இடை (1000) *பைத்தலைப் பாம்பு கண்டீரரை மேற்கொண்ட பட்டிகையே* (SII,iv,167.)

அரைக்கால் (பெ) எட்டில் ஒரு பாகம் (875) *கழஞ்சே அரைக்காற் பொன்* (SII,xii,99.)

அரைக்கால்வாசி (பெ) குறைபாட்டுக்காக ஏற்றும் அரைக்கால் பங்கு கூடுதல் அளவு (1300) *பயிர் பாத்து நிலை நின்ற நிலத்துக்கு அரைக்கால்வாசி உறைநாழி ஏற்றி* (IPS,525.)

அரைக்கால்வாசிக் கூலி (பெ) ஒரு வரி (1288) *காணி ஆளப்பேறு சீகாரியப் பேறு அரைக்கால்வாசிக் கூலி கூற்றிலக்கை கடைக்கூற்றிலக்கை* (SII,vii,795.)

அரைக்கும் (வி) கல்லிலிட்டுத் தேய்க்கும் (887)

திருச்சந்தனத் தோடு கூட்டி அரைக்கும் கற்பூரம் (SII,xiv,16a.)

அரைச கோபம் (பெ) அரசனால் வரும் தடை (1000) இரவி சிரிகண்டன் அரைச கோபமும் (TAS,ii,p.173-207.)

அரைசரு (பெ) அரசர் (550) கங்கரைசரு மேல் வந்த (TAMIZ,1970,p.92-93.)

அரைசன் (பெ) அரசன் (771) கலிஅரைசன் கைக்கொண்டதனை (EI,xvii,16.)

அரைசாளும் (வி) ஆட்சி செய்யும் (1000) முடிவரைசாளு முந்நிரகன் ஞாலந்தன் (SII,iv,167.)

அரைசி (பெ) சிறந்தவள்; தலைவி (1000) மங்கையம்பார் கண்ணி பெண்ணுக்கரைசி மலை மடந்தை (SII,iv,167.)

அரைசியல் வழக்கம் (பெ) அரசாட்சி முறை (1266) அரைசியல் வழக்கம் நெறிப்பட நாட்டும் (IPS,366.)

அரைப் பட்டிகை (பெ) இடுப்புக் கச்சு (970) பொன்னின் உதர பொந்தனம் 1ம் திருவரைப் பட்டிகைக்கு இட்டுக் கட்டின மாணிக்கம் (TDI,i,8.)

அரைமனை (பெ) அரண்மனை (1395) அரைமனையில் கணக்கிலும் எழுதுவித்துவிட்ட அளவுக்கு (SII,xxii,194)

அரைமனை சோடி (பெ) அரண்மனை பேரில் வாங்கப்பட்ட ஒரு வரி (1564) யிந்தபடிக்கு அரைமனைசோடி அதிகாரி கடைக்கூட்டு சோடி புறவகையும் (SII,xvii,581)

அரைமனையூழியம் (பெ) ஒரு வரி (1387) அரிசிகாணம் அரைமனையூழியம் மகமை தலையாரிக்கம் (EI,viii,31.)

அரைய கோபம் (பெ) (= அரைச கோபம்), அரசரால் வரும் தடை (987) னிரவி சிரிகண்டன் அரையகோபமுஞ் சாமந்த கோபமுந் நீக்கி (TAS,ii,p.173-207.)

அரையர் (பெ) ஒருபட்டம் (987) அரையர் ஆசாரகாந்த ப்ரஹ்மாதிராஜர் இம் மஹேந்த்ர மங்கலத்து மூலபரடையார்க்குச் சொல்ல (SII,xiii,3.)

அரையன் (பெ) அரசன்; உயர் அலுவலர் மற்றும் குறுநிலத்தலைவர் பட்டப்பெயர் ஒட்டு (741) அமிர்தமங்கலவரையன் (SII,xiv,3; EI,xxxvi,15b.)

அரை ரேகை (பெ) மொத்த ஊர் வரியில் பாதி (1436) அம்மருதை ஊர் ஒன்றுக்கு அரை ரேகைப் படி பொன் அம்பதும் (AVNM,10,p.67)

அரைவாசி (பெ) குறைபாட்டுக்காக ஒன்றுக்கு அரைவிழுக்காடு என்று சேர்த்தல் (1001) இது அரைவாசி யேற்றி காசு நிறைக் கல்லால் அட்டக்கடவ (SII,xvii,222.)

அல் (பெ) இரவு (856) இதனால் அலும் பகலுமாக னிசதி உரிய் (SII,v,609.)

அல்பமிறை (பெ) சிறுவரி (1056) நிலஞ்சுட்டி வெட்டிக் கூற்று நெல்லு அல்பமிறை உள்ளிட்டு யாதொந்றும் (SII,v,489.)

அல்பியை (பெ) ஐப்பசி மாதம் (961) தாழ்வாரத்து அல்பியை விழுவின்னும் சித்திரை விழுவின்னும் (TAS,viii,p.43-44.)

அல்பிறை (பெ) சிறுவரி (890) மனைப் பொன்னும் அல்பிறையும் சோறு மாட்டும் (SII,vi,369.)

அல்லது (வி) அவ்வாறில்லையேல் (898) குடிமை செய்க அல்லது இவ்வூர்ப்புரவு (TDI,i,7.)

அல்லவர்கள் (பெ) அல்லாத பிறர் (1068) மன்னவர் அல்லவர்கள் பேர்ப் பெரும்பழிப் பிரட்டர் ஆக (EI,xxi,38.)

அல்லவை (பெ) கெட்டவை (1046) நைய குடியோம்பி ஆறில் ஒன்று கொண்டல்லவை கடிந்து (EI,xxx,19(vi).)

அல்லாத்த (வி) தவிர்ந்த (919) ஸம்வத்ஸரவாரியம் அல்லாத்த வாரியங்கள் ஒருக்கால் செய்தாரை (ARASI,1904-05,p.131.)

அல்லாதது (பெ) அற்றது (803) ஸபையொட்டை ஸாமந்யமல்லாதது விலைக்கு கொண்டோம் (SII,vi,365.)

அல்லாதார் (பெ) அல்லாத மற்றவர் (919) அணியபந்துக்கள் அல்லாதாரை (ARASI,1904-05,p.131.)

அல்லாது விடில் (வி) ஆகாவிட்டால் (1014) தாந்தாம் யோக்யர் அல்லாது விடில் (SII,ii,65.)

அல்லாதேன் (பெ) (1192) கைக்கூலி குற்ற தெண்டன் உள்ளிட்ட சிலவரிகளும் கொள்ளக் கடவேன் அல்லாதேனாகவும் (CHEN,i,p.117.)

அலகிட்டு (வி) குப்பையைப் பெருக்கி (992) பழம்படி திருமுற்றந் திருவலகிட்டு திருமெழுக்கிடக் கடவகளாக (SII,xiii,170.)

அலகிடுவார் (பெ) துடைப்பம் கொண்டு சுத்தம் செய்பவர் (959) திருவலகிடுவார் மூவர்க்குமாக (EI,xxvii,47.)

அலகியல் மரபு (பெ) அளவு விதி முறைகள் (1012) குடியிலலகியல் மரபினமைத்து உலகியல் சாண் பந்நிரண்டிற் சமைந்த (SII,vii,863.)

அலகில் (வி) அளவில்லாத (1000) பரமனருஞ் சிராமலை வாயலகின் னிறைந்த கதிர்மணி (SII,iv,167.)

அலகு (பெ) துடைப்பம் (1142) எங்களுக்குப் பின்பு குச்சியும் அலகும் எடுத்து இக்கோயி லில் புகுந்து காணி செய்வாரே (SII,vi,340.)

அலகுகாய் (பெ) பாக்கு வகை (1009) வெறுங்காய் அலகுகாயும் சிற்றூராட்ச்சியால் வந்ததும் (SII,xvii,235.)

அலகு நிலை (பெ) மொத்த எடை (987) மட்டத்தளிகை 1 அலகுநிலை 5ம் (SII,xiii,1.)

அலங்க்ய விக்ரமங் (பெ) கடத்தற்கரிய வல்லமையுள்ளவன் (815) அஸமஸமன் அலங்க்ய விக்ரமந் (SII,iii,206b.)

அலங்கல் (பெ) பூமாலை (905) கவின் அலங்கற்க் களப்பாழர் (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

அலங்கார தளிகை (பெ) விஷ்ணு கோயில்களில் படைக்கப்படும் பலவகை உணவுத் தட்டுகள் (1561) ஸ்ரீ கோவிந்தராஜந் நாள்வழி அமுது செய்தருளும் அலங்கார தளிகை 1ல்க்கு ராஜாந திருபோநகம் 2 (TDI,v,167.)

அலம் (பெ) கலப்பை (1186) அலங்குலவும் வயற்பெறுகை ஆட்கொள்ளி காடவர்கோன் (SII,xii,263.)

அலம்காரம் பண்ணி (வி) அலங்கரித்து (1104) ப்ராஹ்மணர்க்கு கன்றோடு கூட அலம்காரம்பண்ணி தான பண்ணினார்க்குள்ள பலம் (EC,xiv,Yl.146.)

அலம்ப (வி) கழுவ (1125) வழுதியர் கோன் வடிம்பலம்ப நின்றருளி மால் கடலை எறிந்தருள (TAS,i,p.21f.)

அலமரும் (வி) துன்புறும் (1000) அலமரு நெஞ்சத் தரிவை கண்டாற்றுங் கொல் (SII,iv,167.)

அலர் (பெ) அரும்பு (785) தேன்னலராடி தேம் புனற் குறட்டி (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

அலர் (வி) விளங்குகின்ற (785) அலர் கதிர் நெடு வேற்றென்னன் (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

அலர் மகள் (பெ) இலக்குமி (1272) அலர் மகள் முதலாவரிவையர் பாவுலகமுழுதுடையா ரொடு வீற்றிருந்தருளிய (CHEN,ix,p.357.)

அலரும் (வி) மலர்கின்ற (771) கொங்கலரு நறும்பொழில் (EI,xvii,16.)

அலைக்கும் (வி) அலைமோதும் (1000) வெண்பளிங்கு தெள்ளலைக்கும் மருவிச்சிராப்பள்ளிச் சிவனுக்கு (SII,iv,167.)

அலைகதிர் நாள் (பெ) அறுவடை நாளில் கொண்டாடும் திருவிழா (1543) தை மாஸத்தில் ரோஹிணி நக்ஷத்ரம் அலைகதிர் நாள் சேனை முதலியார் அலைகதிர் எதிர் கொண்டு திருவீதி எழுந்தருளி (TDI,v,9.)

அலை கல் (பெ) கரையை நீர் கரையாதபடி அமைக்குங்கல் (1264) இருபது கல்லு சேரமங்கலத் தேவரளும் ஈழக் குளத்தின்னு அலைகல் இடுவது (TAS,vii,p.31.)

அலைத்து (வி) வருந்தி (1000) கவியலைத் துண்ணுங் கவைஞர் தங்காமாறு (SII,iv,167.)

அலைத்து (வி) உருட்டப் பெற்று (1075)

தெந்நவநருந்தலை பருந்தலைத்துக் கிடப்ப (SII,iii,68.)

அலைந்து (வி) தடவி (800) *விழிகட் பேய் புண்ணலைந்து கையும்ப* (EI,xiii,10.)

அலைபடு (வி) அலைக்கழிக்கப்படு (1176) *கோட்படுவன இளங்கமுகே அலைபடுவன நீர்நிலையே* (SII,xvii,585.)

அலைபடுதல் (பெ) துன்பப்படுதல் (1147) *பணைக்கை மாவுமல்லது வந்தலை படுதலின்றி* (SII,v,643.)

அலைபாணம் (பெ) வாணவேடிக்கை (1557) *மண்டபத்துக்கு திருமெழுக்கிடவும் பணம் 1 ...அலைபாணத்துக்கு ரேகை பொன் 1* (TDI,v,156.)

அலையுறாது (வி) அலைச்சலையடையாமல் (1134) *நின்றொருவர் ஒருவரை யிறந்தலையுறாதினி தொழுக* (SII,v,645.)

அவ்வக் காலம் (பெ) சுட்டப்பட்ட காலம் (805) *அவ்வக் காலத்து வாரியரேய் மாஸந்தோறுங் குழிகுத்துவதாகவும்* (SII,vi,359.)

அவ்வவர் (பெ) தம்தம் (921) *அவ்வவர் ப்ராணாந்திகம் வாரியத்துக்குக் குடவோலையெழுதி* (ARASI,1904-05,p.l31.)

அவ்வவாரே (பெ) அவர் அவர்களே (994) *அவ்வவ் ஜாதிகள் பட்ட தண்டம் அவ்வவாரே போக்கறுப்பாராகவும்* (EI,xxii,32.)

அவ்வாறு (பெ) அப்படி (957) *அவ்வாறு ஆஸம்ஸ்தி₂தியாக* (SII,xix,22.)

அவ்வைகள் (பெ) பெண் தெய்வம் (870) *பாரிச்₂வ படாரரையும் இயக்கி அவ்வைகளையும் புதுக்கி* (SII,xiv,22.)

அவகள் (பெ) அவர்கள் (800) *தேவியார் கருப்பிணியருளராக அவகளைக் காத்திருந்தாண் பிள்ளை* (SII,vii,581.)

அவச்₀யம் (பெ) இன்றியமையாதது (1168) *அவச்₀யமேதேநும் தரவேணு மென்றிருந்த தாகில்* (SII,vi,456.)

அவதர வத்தினை (பெ) (= அவஸர வர்த்தினை) (1525) *சறுவமானியமாக அனுப₄வித்துக் கொண்டு அரசுபேறு அவதரவத்தினை பரித்திவரி பிடாரிவரி ஆளமஞ்சி மற்றுண்டானது* (SII,vi,71.)

அவதாரம் (பெ) தெய்வாம்சமாகப் பிறத்தல் (1012) *திருவவதாரம் செய்தருளிந ஐப்பிகை திங்கள்* (SII,v,979.)

அவதி₄ (பெ) எல்லை (800) *மூன்று யாண்டவதி₄யாக வைத்தோம்* (SII,vi,355.)

அவநிவர் (பெ) அரசர் (1044) *தந்குலத்தவநிவர் நந்கு தருதகைமையில்* (SII,v,633.)

அவநையிட்டு அவன்மூலம் (1055) *ப்₃ராமணுக்கு குடுத்து அவநையிட்டு பூ₃ஜிப்பிக்க கடவோமாகவும்* (SII,iii,55.)

அவமானம் (பெ) பெயருக்கு இழுக்கு வரல் (1047) *தன்றவ்வையைப் பிடித்து தாயை மூக்கரிய ஆங்கவமானம் நீங்குதற்காக* (SII,iii,28.)

அவர் (பெ) பெரியோரைக் குறிக்கும் பன்மைச் சொல் (796) *மஹாராஜரைக் காண அவர் நிங்கள் போந்தவாறெனென* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

அவரள் (பெ) அவர்கள் (992) *சாந்தி செய்யும் அவரளை மூவாண்டில் மிக வைக்கப் பெறார்* (TAS,ii,p.34-37.)

அவல் (பெ) இடித்த நெற் பொரி (923) *க₃ணபதியர்க்கு பங்குனித் திருவோணத்தி னான்று அவல் அமுது தூணியும்* (SII,xix,406.)

அவலம்பலம் (பெ) ஒரு வரி (1281) *காத்திகைப்படி ஊர் பழைச்சம் அவலம்பலம் ஆசுவிக் கடமை யிராச நிவந்தி* (EC,x,Mr.37.)

அவலமுது புறம் (பெ) அவல உணவு படைப்பதற்காக விட்ட நிலம் (1252) *பயிர் செய்யப்பெறாது கிடக்கிற இடம் அவலமுதுபுறமாகத் திருத்துவித்தரவேணு மென்று* (SII,iv,511.)

அவன் (பெ) ஆண்பாற் சுட்டுப் பெயர் (700) *அவன் பணியால்* (ARE,1959-60,358.)

அவனிதலம் (பெ) பூமி (921) *ஆங்கவற் காத்மஜ னாகி அவனிதலம் பொறை தாங்கி* (SII,iii,206a.)

அவனி மண்ட₃லம் (பெ) பூமி; உலகு (815) *அவனிமண்ட₃லமுடனோம்பி* (SII,ii,206b.)

அவனிஸுரர் (பெ) பிராமணர் (815) *அவனி ஸுரரிடர் நீக்கி* (SII,iii,206b.)

அவஸரம் (பெ) ஒரு வரி (1387) *செக்குக்கடமை வெட்டிவரி கட்டிகை அவஸரம் வாசலொட்டு ஓலைஎழுத்து* (EI,viii,31.)

அவஸரவத்தினை (பெ) அவசரம் என்னும் அதிகாரி பொருட்டுச் செலுத்தும் வரி (1430) *கரணிக்கர் சோடி அவஸரவத்தினை இராயஸவத்தனை உட்பட பலவரிகளும்* (SII,viii,349.)

அவாத்திரம் (பெ) இடையிலுள்ளது(?) (1123) *அந்தராயக்காசென்றும் மவாத்திரம் உப்புக்காசென்றும் வெட்டி* (SII,vi,434.)

அவாந்தரவரி (பெ) இடையிலே விதிக்கப்படும் வரி (1223) *அவாந்தர வரிகளும் மற்று எப்பேர்ப்பட்ட தன்மதானமாக தானம் பண்ணி* (CHEN,xi,p.264-66.)

அவாம் (பெ) விரும்பும் (852) *செல்லிக் கோமான் மல்லவாந் தோண் மறவ* (SII,xii,48.)

அவி (பெ) கடவுளுக்குப் படைக்கும் உணவு (869) *திருநாமத்துக்கு வேண்டு மவி கொண்டு* (SII,vii,523.)

அவிக்கிணறு (பெ) வேள்விக்கிணறு (1218) *ஸ்ரீ விமானமும் அவிக்கிணறும் விளக்குமாடமும் பணி செய்விச்சு* (TAS,i,p.289-91.)

அவிட்டத்தினாள் (பெ) அவிட்ட நட்சத்திரம் கொண்ட நாள் (975) *விரிச்சிக ஞாயிற்று அவிட்டத்தினாள்* (TAS,ii,p.38-40.)

அவிட்டம் (பெ) அவிட்ட நட்சத்திரம் (875) *தனு ஞாயற்றுத் திங்கட்கிழமை பெற்ற அவிட்ட முதலாக* (EI,xxviii,6.)

அவிடை (பெ) அந்த இடத்தில் (1000) *அவிடையே சாலப்புழைக் கோவிந்நனார் புரையிடத்தெல்* (TAS,ii,p.173-207.)

அவிப்புலம் (பெ) கடவுளுக்குத் திருவமுதுக்காக விடப்பட்ட நிலம் (807) *அவிப்புலத்துந் தன் புலத்தும்* (EI,viii,29.)

அவிப்புறம் (பெ) திருவமுதிற்காக விடப்பட்ட நிலம் (755) *அவிப்புறமாக குடுத்தேன்* (SII,vi,356.)

அவிப₃லி (பெ) தேவர்க்குப் படைக்கும் உணவு (1050) *திருத்தொண்டீச்₂வரம்முடைய பிடாரற்கு அவிப₃லி அச்சநை திருநாளுக்கு* (SII,iv,416.)

அவிய (வி) அழியும்படி (815) *வந்தெதிர்ந்த கழல் வேந்தருடனவிய* (SII,iii,206b.)

அவிர் (வி) ஒளிவிடும் (905) *அவிர் சடைமுடி அரன் வேண்ட* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

அவிரோதம் (வி) ஒரு மனதாக (861) *ஸபை₄யுமுடிகள்மாரும் அவிரோதத்தால்க் கூடிச் செய்த* (TAS,ii,p.85-86.)

அவிழ் (வி) விரிகின்ற (905) *மடலவிழ் பூ மலயத்து மாமுனி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

அவிழ்த்து (வி) நீக்கி (1000) *சுற்றத்திடரிடை யாப்பவிழ்த்தென்னைப் பணிகொள்* (SII,iv,167.)

அவிழ (வி) கலைய (1000) *கமழ் கோதை சூலாவிக் குழலவிழப் பந்திறைஞ்சி* (SII,iv,167.)

அவிள் (வி) விரிந்த (1000) *முளைவாயெயிற்று முதவச் சிராமலை முடியிலவிள் சூளைவாய்* (SII,iv,167.)

அவிஷேகக் கைக்காணி (பெ) முடிசூட்டு விழாவின் பொருட்டு செலுத்தும் ஒரு காணிக்கை (1288) *ஓலை எழுத்து வினியோகம் வாசல் வினிய்யோகம் அவிஷேகக் கைக்காணி துலாபாரவரி* (SII,vii,793.)

அவை (பெ) ஆகியவை (785) *மணித்தேராடல் வெம்மா அவை உடன் கவர்ந்தும்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

அழகச்சு (பெ) ஒரு நாணயம் (1173) *ஒள்ள மூன்று சலாகையும் அழகச்சு 30தின்னு பொலியால் கோதைநல்லூர்* (TAS,vii,p.117; TAS,i,p.296.)

அழகு (பெ) நல்ல தோற்றம் (771) *அழகமைந்த வார்சிலைஇன்* (EI,xvii,16.)

அழகெருது காட்சிகாசு (பெ) கால்நடை மீதான ஒரு வரி (1034) *தேவதானங்களைக் கொண்டு வரும்படி அழகெருது காட்சி காசும் காட்சி எருது காசும்* (SII,xiv,145.)

அழல் (பெ) தீ (1000) *மன்மதவேள் மதனுகட் போந்தழற் சிந்துவித்தான்* (SII,iv,167.)

அழனெறி (பெ) வெம்மையான வழி (1000) *கொண்ட சுற்ற மழனெறி காட்டு மிட* (SII,iv,167.)

அழிக்க (வி) செலுத்த (1001) *இப்பொன் காசு கல்லால் அழிக்கவும் இன்னெல்லு சிவலோகனான மரக்காலால் அட்டவும்* (SII,xvii,222.)

அழிக்கும் (வி) கெடுக்கும் (771) *எத்திறத்து மிகலழிக்கு மத்த யானை* (EI,xvii,16.)

அழித்த (வி) தகர்த்த; இடித்த (783) *வெண் குழிக் கோட்டை அழித்த ஞான்று* (EI,xxii,18; TASSI,1958-59,p.20.)

அழித்தான் (பெ) கெடுத்தவன் (793) *இது அழித்தான் கடிகை எழாஇரவரையும்* (SII,iii,42.)

அழித்து (வி) வென்று (771) *ஆய்வேளைஉங் குறும்பரைஉம் அடலமருளழித்தோட்டி* (EI,xvii,16.)

அழித்துக் கொண்டமை (வி) செலவுக்கு பயன்படுத்திக் கொண்டமை (990) *ஸபாவிநியோகத்துக்கு அழித்துக் கொண்டமையால் அங் கழஞ்சு வண்ணம் விலையாக* (SII,xiii,115.)

அழிந்தது (வி) செலவானது (986) *இத்தேவர் விசம் அழிந்தது ஆண்டு தோறும் திருவிழாச் செய்தவளவே* (SII,iii,128.)

அழிந்து பட்டார் (வி) இறந்து பட்டார் (1000) *கிளை போலழிந்து பட்டார் கடைவாய் நிணந்தின்ற பாவி* (SII,iv,167.)

அழிப்பன் (வி) ஒழிப்பேன் (1000) *கருஞ் சிலையாலழிப்பன்* (SII,iv,167.)

அழிப்பாங் (பெ) கெடுப்பவன் (850) *யிது எரிப்பியாதானும் அழிப்பானும்* (SII,xix,446.)

அழிப்பான் (வி) நாசம் செய்வதற்கு (795) *கரைக்கோட்டை அழிப்பான் வர* (TAS,i,p.158-59; ARE,1958-59,471.)

அழிபிழை (பெ) குற்றம் (1149) *நல்வயலூரில் வயலில் வழியில் அழிபிழை செய்யில்* (IPS,186.)

அழிம்பினார்கள் (பெ) கெடுத்தவர்கள் (1266) *இத்தை அழிம்பினார்கள் கங்கைகரையில்க் குரால்ப் பசு* (EC,xiv,YI.74.)

அழிய (வி) கெட (771) *கூடாத பல்லவனைக் குழும்பூருட் டேசழிய* (EI,xvii,16.)

அழிய (வி) சிதைய (800) *மழை இடித்தழிய* (IPS,11a.)

அழியப் போடார் (வி) அழித்து விடமாட்டார்; அழிக்கக்கூடாது (950) *எனூரழியப் போடார் என்று* (CHHS,1971/114.)

அழியாமை (வி) குறைவு படாமல் (759) *இதர்மம் அழியாமை காத்தான்* (SII,iv,827.)

அழியாமை (வி) சிதையாமல் (795) *உள்வீட்டி னொற்றைச் சேவகர் கோட்டை அழியாமை காத்தெறிந்து* (TAS,i,p.158-159; ARE,1958-59,471.)

அழிவன்னியாயம் (பெ) ஒரு வரி (1297) *திரு விடையாட்டமான பள்ளியு உள்ளூர் உள்ளவையற்றில் அழிவன்னியாயம் அபூர்வாயம் மனைதிறை எப்பேற்பட்டனவும்* (EC,ix,Ah.84.)

அழிவித்த (வி) அழியச் செய்த (1000) *மடந்தை யோர் பாகத்தன் மாகத்துமான தஞ்சிலையாலழிவித்த நாதன்* (SII,iv,167.)

அழிவு (பெ) சிதைவு (877) *தேவர் முன்பு பல கணியு மழிவு நீக்கி* (SII,vi,287.)

அழிவு (பெ) செலவு (970) *நித்தல்லழிவுக்கும் ஸம்கிராந்தி 12நுக்கும்* (SII,iii,149.)

அழிவு (பெ) நாசம் (815) *ஆக₂ண்ட₃லனதழிவகல* (SII,iii,206b.)

அழிவு செலவு (பெ) மேற் செலவு (916) *மெழுகு வாளுக்கு நியதி ஐஞ்ஞாழி நெல்லும் அழிவு செலவும் வைத்தது* (EI,xxiii,45c.)

அழிவு சேராது (வி) சேதம் அடையாமல் (1005) *ஒருநாள் மெழுகுவதற்கு ஆட்டொருக்கால் அழிவு சேராது மெழுகுவதற்கு ஆகவைத்த நிலமாவது* (SII,vii,34.)

அழிவு சொல் (வி) பழுது செப்பனிடும் (1014) *அழிவு சொல் தைச்சனுக்கு நாற்கலமும்* (SII,viii,582.)

அழிவு சொல (வி) பழுது பார்க்க (982) *செப்பு கலசப்பானை நிறை ஐம்பதின்ம் பலம் அழிவு சொல புன்செய் ஒருமா நிலம்* (SII,xix,303.)

அழிவு சொலும் (வி) பழுது பார்க்கும் (950) *ஓடம் அழிவு சொலுந் தச்சனுக்கு* (SII,viii,652.)

அழிவு சோர்ந்தும் (வி) செப்பனிட்டும் (1113) *அழிவுப் பட்டிடங்கள் அழிவு சோர்ந்தும்* (SII,iv,1396; EI,xviii,38; EZ,ii,p.242-55.)

அழிவு படாமை (வி) கெடா வகையில் (1034) *இப்பூமி அழிவு படாமை செலுத்துவோமாக* (SII,vii,1047.)

அழு (வி) அழுகின்ற (1200) *அழைத்த வழுகுரலே* (IPS,678.)

அழுக்குற வழுக்கை (பெ) இளநீரின் முதிராத உள்ளீடு (985) *இரண்டிள நீரழுக்குற வழுக்கை பற்றின* (SII,xiii,38.)

அழுகல் சரக்கு (பெ) ஒரு வரி (1262) *குளவடை பாசிப்பட்டம் அழுகல் சரக்கு அங்காடிப் பாட்டம் உலாவிப் பரிமாறுவர் வரி* (SII,viii,753.)

அழு குரல் (பெ) அழுகின்ற ஒலி (1200) *வெங்கணாவென்றென் றழைத்த வழுகுரலே யான் தழைத்த* (IPS,678.)

அழுங்க (வி) வருத்த (1012) *தேவியரழுதுயர் அழுங்கலிலழுங்க* (SII,vii,863.)

அழுத்தின (வி) பதித்த (970) *வெள்ளித் திருமேனியின் திருமுடியிலழுத்தின வயிரம் 23ம்* (TDI,i,8.)

அழுந்த (வி) மிதிக்க (800) *தேரழுந்தி மாவழுந்தச் செங்குருதி மண்பரந்தவூர்* (EI,xiii,10.)

அழுந்தி (வி) புதைந்து (800) *தேரழுந்தி மாவழுந்த* (EI,xiii,10.)

அழுவம் (பெ) ஆழம் (1012) *பெண்ணையலை புனலழுவத் தந்தரிக்ஷஞ் செல* (SII,vii,863.)

அழைத்து (வி) (கூட்டமாகக்) கூட்டி (992) *ஸபை₄யாரையும் அழைத்து இத்தேவருடைய ஆயமும்* (SII,iii,49.)

அழைப்பிச்சு (வி) கூப்பிட்டு (895) *ஆரிகப் படாரரையும் அழைப்பிச்சுக் கொண்டு* (SII,xiii,306.)

அள்ளுள்ளது (பெ) கையால் அள்ளப்படுவது (1384) *சந்தைகள் கடைகளில் அள்ளுள்ளதும் அள்ளிக் கொள்ளக் கடவர்களாகவும்* (SII,i,142.)

அளக்கக் கடவ (வி) அளந்து கொடுக்க வேண்டிய (870) *பொற்காலால் அளக்கக்கடவ நெல்லு* (SII,xix,163.)

அளக்க கடவன் (வி) அளந்து கொடுக்கக் கடமைப்பட்டவன் (961) *நெல்...சங்கிராந்திக்கு இரட்டி அளக்க கடவன்* (TAS,viii,p.43-44.)

அளக்குங் கரணம் (பெ) ஒரு வரி (1300) *அளக்குங் கரணம் கார்த்திகைப் பச்சை ... உள்ளிட்ட அனைத்தாயவற்கங்களு* (SII,ii,22.)

அளக்கும் (வி) அளந்து கொடுக்கும் (926) *ஆண்டு வரை அளக்கு நெல் சூலக்காலால்* (SII,viii,668.)

அளகம் (பெ) கூந்தல் (1000) *பாரோர் நகப் பனையின் மடன் மேலளகந்நுதலி யொருவர்* (SII,iv,167.)

அளந்த (வி) நிலம் அளவிட்ட (1012) *சாண்பந்நிரண்டிற் சமைந்த தனிக்கோல் போற்றுற வளந்த நூற்றறுபது* (SII,vii,863.)

அளந்து குடுத்து (வி) அளவை செய்து கொடுத்து (856) *திருக்கோயிலுடையானுக்கு அளந்து குடுத்து* (SII,v,609.)

அளந்து வந்தபடி அளவு கணக்கிட்ட (975) *பெரு நான்கெலையுள்ளக...அளந்து வந்தபடி காற்செய்யும் விற்று* (SII,xix,131.)

அளப்பது (வி) செலுத்துவது (1003) *ஓராட்டைக்கு*

வாடாக்கடந் அளப்பதான நெல்லு (SII,xvii,243.)

அளப்பரிய (வி) மதிப்பிடுதற்கு அரிய (950) *அளப்பரிய பேரொழுக்கத்தாச்$_0$வலாயந ஸூத்ரத்து* (TASSI,1962-65,p.32-52; PNDCP,p.187-196.)

அளப்பன (பெ) முகந்து அளக்கப் பெறுவன (873) *நெல்லும் அரிசியும் மற்றும் அளப்பன* (SII,iii,90.)

அளப்பிச்சு (வி) அளக்கச் செய்து (1250) *சனி தோறும் அளப்பிச்சுக் கொண்டு செலவு செலுத்துவாராக* (KANDT,1968/250.)

அளப்பித்தபடி (வி) அளக்கச் செய்தபடி (1002) *சோபுர நாட்டு மூவெந்த வேளாநும் நிலமளப்பித்தபடி* (SII,viii,217.)

அளப்பெரும் அளவில்லாத (1018) *முதுகிட் டொளிச் சய சிங்கன் அளப்பெரும் புகழோடு* (IPS,96.)

அளப்போம் (வி) செலுத்துவோம் (871) *ஸ்ரீ கோயிலுக்கே கொடு சென்று அளப்போமானோம்* (SII,xii,61.)

அளம் (பெ) உப்பளம் (1137) *திருப்படி மாற்றுக்கு உடலாக இவ்வூர் உப்புப்படுக்கும் அளம் தொண்ணூற்றிலும்* (SII,viii,31.)

அளவர் (பெ) ஒரு சாதியினர் (1288) *வெள்ளாழர் அளவர் பள்ளிகள் பரம்பர் உட்பட உழுது* (SII,vii,759.)

அளவாதொழியில் (வி) அளந்து கொடுக்காவிடில் (961) *நெல்லளக்கக் கடவன் விழுவின்னுமுன் அளவாதொழியில்* (TAS,viii,p.43-44.)

அளவிட்டது (வி) அளந்தது (1186) *நின் நடையளவிட்டது ஞாலங்களேழையும்* (SII,xii,263.)

அளவிய (வி) கட்டிய (1049) *வாரளவிய கழல் வீரகேரளனை* (SII,iv,555.)

அளவிற்று (வி) அளவையுடையது (800) *என்கையளவிற்றேய் பாண* (EI,xiii,10.)

அளவு (பெ) நிலமளக்குங் கோல் (1145) *உடையான் வசக்கல் அளவு கோலருணிதி யால் நிலம் அரைமாவின்* (SII,xiv,259.)

அளவு (பெ) பருமன் (1000) *நுண்ணிடை யல்கிலுஞ் சால வளவுடைதேய்* (SII,iv,167.)

அளவும் (பெ) முழுவதும் (771) *பாரளவுந்தனிச் செங்கோல்* (EI,xvii,16.)

அளவுவற்கம் (பெ) ஒரு வரி (1300) *அளவுவற்கம் உறைநாழி...உள்ளிட்ட அனைத்து வற்கமும்* (SII,ii,61.)

அளவே (பெ) உடனே (986) *ஆண்டுதோறும் திருவிழாச் செய்தவளவே கணக்கு காண்பதாகவும்* (SII,iii,128.)

அளவேற்றம் (பெ) (இருந்த) அளவில் கூடுதல் (1262) *பதினாறுமாவரைக்காணி முந்திரிகைக் கீழ்க்கால் நிலம் அளவேற்றமுண்டாகையாலே இந்நிலத்துக்கு* (SII,xii,215.)

அளவை (பெ) மொத்தம் (1012) *அறுகலமேற்றிப் பெறு கலவளவை மூன்றோடு முப்பது குறைந்த* (SII,vii,863.)

அளவோமாயில் (வி) தராவிடில் (867) *மஹாதே$_3$வர்க்கு அளவோமாயில்* (SII,xiv,12a.)

அளி (பெ) கருணை (771) *மண்ணினிதாண்ட தண்ணளிச் செங்கோல் தென்னவானவன்* (EI,xvii,16.)

அளிக்கும் (வி) காக்கும் (1000) *வருதுன்ப வெம்பகை நீக்கி உலகளிக்குஞ் சடைத் தேவர்* (SII,iv,167.)

அளித்த (வி) கொடுத்த (771) *அந்தணர்க்கும் அஸக்தர்க்கும் வந்தணைக என்றீத்தளித்த* (EI,xvii,16.)

அளித்து (வி) காத்து (815) *ச$_0$ரண்யனா யுலகளித்து* (SII,iii,206b.)

அளிப்ப (வி) காக்க (1125) *மண்முழுதளிப்ப* (SII,v,703.)

அளைந்த (வி) பொருந்திய (1012) *செங்கை யிரண்டிட்டளந்த நெல்லாறுபதனிற் களைந்த நிவந்தத்தன்மை* (SII,vii,863.)

அளைந்த (வி) அனுபவித்த (800) *மண்ணளைந்த சீர்மாறன்* (EI,xiii,10.)

அளைந்தார் (வி) தேடினார் (1000) *வேளார் வரையார் கொள்வாளளைந்தார்* (SII,iv,167.)

அற்சிப்பது (வி) பூசிப்பது (976) *தெரிசனமாக அற்சிப்பதாகவும்* (SII,xix,169.)

அற்பம் (பெ) கொஞ்சம் (815) *அற்ப மல்லா த்$_3$ரவ்யம்* (SII,iii,206b.)

அற்புத சா$_0$ந்தி (பெ) தீங்குகள் அடையாவண்ணம் செய்யும் பரிகாரச் சடங்கு (1024) *க்$_3$ரஹ சா$_0$ந்திக்கும் அற்புதசா$_0$ந்திக்கும் நாள் ஒன்றுக்கு ஆடு ஒன்றாக* (EC,x,Kl.112a.)

அற்றம் (பெ) குறைபாடு (771) *அற்றமிலடர் வேற்றானை* (EI,xvii,16.)

அற்று (வி) இல்லாமல் (1164) *ஆண்டார்களில் ஆண்வழி அற்று பெண்வழியான கொத்துக்கு* (SII,iii,210.)

அற்றும் அறவும் (வி) முழுவதும் (1258) *ப்ரமாண மிட்டோம் இப்படி அற்றுமறவும் செய்திலோமாகில் வல்லவரையன் சத்தியம்* (SII,vii,118.)

அற்றை (பெ) சுட்டப்பட்ட நாள் (866) *பொருவார் அற்றைக்கலம் இழப்பது* (TAS,i,p.1-14.)

அற்றை வட்டை (பெ) ஒரு வணிகப் பெருவழி (1300) *அற்றை வட்டை யருவட்டை நாரத்தரை நல்வாத்தரை திசை விளங்கு திசையாயிர தைஞ்ஞூற்றுவோம்* (SII,viii,442.)

அற (வி) நீங்க: இல்லாமல் (862) *பழுக்கற முறையால் வழிபடுவானுக்கு* (SII,xiv,45.)

அற (உ) முற்றும் (772) *விலைக்கற விற்றுப் பொருளறக் கொண்டு* (SII,xiv,19.)

அறக்குளம் (பெ) தர்மத்திற்காக வெட்டிய நீர்நிலை (772) *சோமாசியார் கல்லு விச்ச அறக்குளத்து* (SII,xiv,19.)

அறங்கள் (பெ) தருமங்கள் (1012) *தத்துவ நெறியிலறங்கள் யாவையு மிறங்காவண்ணம்* (SII,vii,863.)

அறங்காவல் (பெ) அறக்கொடைகளைக் காவல் செய்தல் (1113) *எங்கள் காவலாய் நிற்க வேண்டுமென்று அறங்காவலுக்கு* (SII,vii,1396; EI,xviii,38; EZ,ii,p.242-255.)

அற நீக்கி (வி) அடியோடு ஒழித்து (875) *கல்பகத் தின் வ்ரதம் கொண்டு கலிகலுஷமற நீக்கி* (SII,iii,206b.)

அறநெறி (பெ) நல்ல நெறி (1196) *மனுநெறி திகழ வறநெறிச் சமையங்கள்ளாறுந் தழைப்ப* (SII,v,302.)

அறப்பட்டு (வி) முழுதும் அழிந்து (1168) *அவர்கள் பூசலிலே அறப்பட்டு துரப்புண்டு போம்படிக்கு அத்$_3$ருஷ்டமுகத்தாலே* (SII,vi,456.)

அறப்புறத்தண்டம் (பெ) அறச்செயலை அழித்தமைக்கான தண்டம் (765) *...பள்ளி வாஸ்துவும் அறப்புறத் தண்டமும்* (EI,xxxvi,20.)

அறப்புறந் நடை (பெ) அறங்களுக்காக விட்ட நிலங்களைப் பேணும் மரபு (500) *அவற்றுக்குப் பெயப்பட்ட அறப்புறந்நடை யாட்டுவதூஞ் செயும் பாண்டங்கரும்* (AVNM,1,p.67-69)

அறப்புறம் (பெ) அறத்துக்கு விடப்பட்ட நிலம் (764) *ஈத்தங்காட்டு அறப்புறமிரண்டு பட்டியும்* (TAMIZ,1970,p.124.)

அறப்புறம் (வி) கோயில் சார்ந்த அறச்செயல் களுக்குக் கொடுத்த மானிய நிலம் (1012) *முக்குடையவர் தம் அறப்புறமான திறப்பட நீக்கிச் சாலிவிளை ஞிலம்* (SII,vii,863.)

அறம் (பெ) தர்மம்: நற்செயல் (709) *அறமறவற்க* (EI,iv,22a; SII,i,135.)

அறம் (பெ) தானம் (745) *இளையாரப்பணந்தி வைத்த அறம் கழஞ்சினா உழக்கரிசி* (TAMIZ,1970,p.122.)

அறம் (பெ) நீதி நூல் (866) *அறத்துக்குப் புறத்தனாவது* (TAS,i,p.1-14.)

அற மருசாதி (பெ) அறங்களைக் காக்கும் மரபுப் படி (866) *அறமருசாதி காக்கும் பரிசினாற் காப்பது* (TAS,i,p.1-14.)

அறமிறக்கின (வி) தர்மத்தை அழித்த (805) *மற்று விநியோகஃஞ் செய்தார் பணியும் பிழைத்தற மிறக்கின பாபமும்* (SII,vi,359.)

அறவாழி (பெ) தர்மச் சக்கரம் (1220) *அறவாழியுஞ் செங்கோலு மனந்தகற்ப காலம்* (CHEN,xiv,p.362-64.)

அறவோலை (பெ) (= அறையோலை) எல்லோருக்கும் செய்தியைத் தெரியப்படுத்தும் ஓலை (1008) *எல்லை தெரிந்து கல்லுங் கள்ளியு நாட்டி அறவோலை செய்த நிலத்துக்குக் கீழ் பாற் கெல்லை* (EI,xxii,34.)

அறவோன் (பெ) தீர்த்தங்கரர் (862) *வகையானடி நன்றமைத்த வழியறவோற்கு நிலமும்* (SII,xiv,45.)

அறா (வி) குறையாத (833) *அறை கரும்பு விளைவறா* (SII,xiv,44.)

அறாத (வி) நீங்காத (785) *முகிறுஞ்சலில் லசும்பறாத வகன் சென்னி* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

அறிகிற்பீர் (வி) அறிவீர்களாக (1200) *தனியாண்மை வடதிக்கிலறிகிற்பீர் பின்பொரு* (SII,vii,123.)

அறிஞ்ச (வி) தெரிந்த (919) *ஊர் அறிஞ்ச பன் நான்கெல்லை* (SII,viii,600.)

அறிதாரம் (பெ) கூத்தாடுவோர் முக ஒப்பனைக்குப் பூசும் ஒரு கலவைப்பொருள் (700) *வானுரிஞ்சிற் றறிதாரம்போல் குளிருந் தன்மைத்தே* (AVNM,7,p.14)

அறிதி (பெ) அறுதி: முடிந்த (877) *இதுவே பொருள் மாவறிதி ஓலையாக ஒட்டிக் கொடுத்தோம்* (SII,vi,370.)

அறிதும் (வி) அறிவோம் (800) *யாமறிதுமெங்கயர்க் கேய் சொல்லு* (EI,xiii,10.)

அறிந்திலோம் (வி) அறியமாட்டோம் (1255) *நாங்கள் இவை ஒன்றும் அறிந்திலோம் என்றார்கள்* (IPS,601.)

அறிந்து (வி) தெரிந்து (1200) *புதுவையானில்லறத்தை யார் போற்ற வல்லாரறிந்து* (CHEN,iv,p.251-52; v,p.59-60.)

அறிந்து (வி) தெரிந்து (905) *அருளறிந்து விண்ணப்பயஞ்செய* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

அறிந்தோர் (பெ) தெரிந்தவர் (905) *கற்றறிந்தோர் திறல் பரவ* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

அறிமின்களே (வி) அறிவீர் (800) *குடுத்தானென்றறிமின்களே* (SII,iv,131.)

அறிய்வான் (பெ) தெரிந்தவன் (921) *ஓதுவியத் தறிய்வானைக் குடவோலை இடுவதாகவும்* (ARASI,1904-05,p.131.)

அறிய (வி) தெரிந்து கொள்ள (805) *உலகம் மறிய் வைம்மினேய்* (SII,xii,40; EI,xi,15.)

அறியாத்தான் (பெ) தெரியாதவன் (919) *ஏதும் உருவறியாத்தானொரு பாலனை* (ARASI,1904-05,p.131.)

அறிவர் (பெ) அருகக் கடவுள் (862) *அண்ணல் வாஇலறிவர் கோஇன்* (SII,xiv,45.)

அறிவரிஒன் (பெ) எளிதில் அறியக் கூடாதவன் (905) *அமரர்க்குமறிவரிஒன் வேகவெள் விடை ஊர்தி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

அறிவார் (வி) சாட்சியாக அறிவார் (960) *சங்கரங் குமரனும் அறிவார்* (TAS,iii,p.159-69.)

அறிவித்து (வி) தெரிவித்து (1278) *எங்களுக்கும் அறிவித்து அபேச்சிக்கையில் இப்படி செய்வதாக இசைந்து* (SII,iv,426.)

அறிவிலை சாதனம் (பெ) இறுதி விலை ஆவணம் (1636) *அறிவிலை சாதனமாகக் கொண்டு சுவாமியார் பொலிந்து நின்ற விண்ணகரம் பெருமானுக்கு* (IPS,761.)

அறிவு (பெ) சாட்சி (1200) *இப்பரிசாயத்தாற் கொள்க இதற்கறிவு இப்பாதமூலம்* (SII,vii,167.)

அறிவேன் (வி) சாட்சியாக அறிவேன் (925) *இப்படி அறிவேன் வெண்ணாயிலுடையா நரைய நங்கநேந்* (JOR,xii,p.70.)

அறிவோம் (வி) சாட்சியாக அறிவோம் (885) *அறிவோந் திருவொற்றியூர் பன்றி பாக்கிழான் போற்றிஉங்* (SII,xii,105.)

அறு (பெ) 6 (எண்) (731) *பொன் அறு கழஞ்சும்* (SII,vii,331.)

அறு (வி) இல்லாத (771) *புகரறு பொழின் மருங்குடுத்த* (EI,xvii,16.)

அறுக்க (வி) வெட்ட (985) *தர்பைமாலைக்கு புல்லறுக்கவும்* (SII,xix,380.)

அறுக்கும் (வி) நீக்கும் (1000) *பிறப்பறுக்குந் தெள்ளும் மருவிச் சிராமலை மேய் சிவக்கொழுந்தே* (SII,iv,167.)

அறுக (வி) இல்லாமல் போவது (985) *இதுக்கு தீங்கு வேண்டுவான் வழி அறுக* (SII,viii,688.)

அறுகாடு (பெ) அழிந்த காடு (750) *அறுகாடும் பீடிலிகையும்* (EI,v,8.)

அறுகாலினம் (பெ) வண்டுகள் (771) *அறுகாலினம் புடை திளைக்கும்* (EI,xvii,16.)

அறுகு (பெ) அறுகம்புல் (1187) *உப்பு மண்ணும் ஆய் அறுகெழுன்த படுதறையும் என்று அளந்த நிலத்து நெல் பயிரும்* (SII,v,990.)

அறுகை வாணிகர் (பெ) துணி வியாபாரி (869) *சிரீகண்டபுரத்து அறுகை வாணிகர் கைவ்வழி வைத்தது* (SII,vii,523.)

அறு சமையம் (பெ) சைவம், வைணவம், சாக்தம், சௌரம், காணபத்தியம், கௌமாரம் ஆகிய ஆறு சமயங்கள் (1134) *தனிச் செங்கோல் கொள்கை சான்ற வறு சமையமும்* (SII,v,645.)

அறுசுவை (பெ) அறுவகைப் புலன்களால் அறியும் சுவை (1000) *கண்டன கேட்டன வுற்றன காமர(று) சுவையாலுண்டன மோந்தன* (SII,iv,167.)

அறுத்து (வி) நீக்கி (1000) *பழியும் புகழுந்தரவந்தன (வினை)ப் பற்றறுத்து* (SII,iv,167.)

அறுத்து (வி) முடித்து (941) *நின்று இவ்வழிவு கணக்கறுத்துக் குடுக்க கடவ* (SII,viii,529.)

அறுதி (பெ) கடைசியில் (953) *முந்நாழி முழாக்காக திங்களறுதி அட்டுவதாகவும்* (SII,xiii,45.)

அறுதி (பெ) முடிவான (979) *அறுதிப 'பரிவர்த்தனையால் குடுத்து இப்பரிசு அறுதிப் பரிவத்தனையோலை சேது* (SII,xix,222.)

அறுதி (பெ) எல்லை (1013) *பரமேசுவர வாய்காலின் நின்று தேவதான அறுதியெ கிழக்கு நோக்கி போந்தவாக்காலுக்கு தெற்கும்* (IPS,92.)

அறுதிகள் (பெ) எல்லைக்கோடுகள் (1245) *மேல்சுவரிலும் கீழ் சுவரிலும் எல்லைகளுள்ள அறுதிகளிலே இரண்டு திறவரு* (IPS,340.)

அறுதி செய்தல் (பெ) முடிவு செய்தல் (1205) *உறவு பண்ணுதல் அறுதி செய்தல் செய்யக் கடவோமல்லாதோமாகவும்* (SII,viii,106.)

அறுதி பண்ணி (வி) முடிவு செய்து (1245) *நாடாக நிச்சயித்து எல்லையறுதி பண்ணி* (IPS,341.)

அறுதி பிறமாணம் (பெ) இறுதி உடன்படிக்கை (1460) *திருச்சூல தாபநம் பண்ணித் தரவேணும் என்று சொலி [இதற்கு] வேண்டும் அறுதி பிறமாணங்களும் பண்ணித் தருகையில்* (IPS,799.)

அறு தொழிற்கள் (பெ) பிராமணரின் ஆறு தொழில்கள் (ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்) (905) *அறு தொழிற்கள் மேம்பட்ட மறைஒர்* (TASSI,1962-65,p.1-31.)

அறு நீர் (பெ) வறண்டகாலத்தில் கிடைக்கும் நீர் (1388) *இந்த நிலத்துக்கு அறுநீர் பெருநீர் கூடை இறைத்து கொள்ளவும்* (SII,xvii,732.)

அறுநூற்றுவர் (பெ) (சேர நாட்டில்) ஒரு படைவீரர் குழு (1000) *பணியுடையவகளும் அறுநூற்றுவருந் நிழலோரும் பாட்டாற் செய்த காரிஇமாவது* (SII,v,784.)

அறுப்பு (பெ) பயிர் அறுவடை செய்யும் காலம் (1274) *குறுணி நெல்லு அறுப்பிலே பெற்று* (IPS,380.)

அறுபத்திரண்டு (பெ) 62 (எண்) (793) *நந்தி விக்கிரம பருமற்கு யாண்டறுபத்திரண்டாவது* (SII,iii,42.)

அறுபது (பெ) 60 (எண்) (731) *அறுகழஞ்சும் நெல் அறுபதின் காடியும்* (SII,viii,331.)

அறுவகைத் தொழில் (பெ) தச்சு, தட்டு முதலிய ஆறுவகைப்பட்ட தொழில் (1259) *மூன்றுவினைப் பள்ளி அறுவகைத்தொழில் னால்வகை இரதகாறரோம்* (IPS,362.)

அறுவகையிருது (பெ) எல்லாப் பருவங்களிலும் (1012) *அப்பரிசியற்றலிலறு வகை யிருதுவுமிப்பரிசியற்றி யெழுந்து* (SII,vii,863.)

அறுவார் (பெ) ஆறு பேர் (919) *பன்னிருவாரிலும் அறுவார் பஞ்சவாரவாரிய மாவதாகவும்* (ARASI,1904-05,p.131.)

அறுவான் (வி) அற்றுப் போவான் (961) *வழியேழெச்ச மொழியாமலறுவான்* (SII,iii,213.)

அறை (பெ) நிலத்துக்குப் பொதுப் பெயர் (800) *வாழைக் கோட்டு பேரறையும் துடவலும் சூழிக்குண்டறைக் கலம்பாடு* (TAS,iii,p.203-05.)

அறை (வி) வெட்டப்படும் (833) *அறை கரும்பு விளைவறா அழகமைந்த கிழவனேரியும்* (SII,xiv,44.)

அறைக்கணக்கு (பெ) கோயில் கணக்கு (1566) *இந்த வகைக்கு எல்லாம் நம்ம அறைக் கணக்காக எழுதும் பேர்க்கு* (TAS,ix,p.37-38.)

அறைகடல் (பெ) ஒலிக்கும் கடல் (771) *அறைகடல் வளாகம்* (EI,xvii,16.)

அறைந்து (வி) பறை சாற்றி (765) *இவர்களுக்கறைந்தாழி போகி* (EI,xxxvi,20.)

அறைய (வி) தெரிவிக்க (785) *கடிமுறைசு தன்பியரறைய* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

அறையோலை (பெ) யாவருக்கும் தெரியப் படுத்தும் ஓலை (550) *அறையோலை செய்து கொடுத்து* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

அறைவாசல் (பெ) கோயில் களஞ்சியம் (1494) *ஒன்பதாந் திருனாள்களில் அமுதுபடி அறைவாசலில் கணக்கு கேட்டருளுகிற போது அமுது செய்தருளும் அதிரஸப்படி* (TDI,ii,115.)

அன்ஞாயாம் (பெ) குறை (845) *அன்ஞாயாம் தீர்த்துக் கொள்ளக் கடவர்* (TAS,ii,p.80-82.)

அன்தோளகத்தண்டு (பெ) பல்லக்கு (982) *கூத்தன் வைத்த அன்தோளகத்தண்டும் பிடாயும் கடிகையும்* (SII,xix,303.)

அன்பர் (பெ) அன்புடையவர் (1000) *நெடும் பொழுதாலென்கலோ வன்பர் நீர் வந்து நிற்கின்றதே* (SII,iv,167.)

அன்பு (பெ) உள்ளநெகிழ்வு (795) *பெருமானடிகள் அன்பு மீக்கூ௱* (TAS,i,p.158-59; ARE,1958-59,471.)

அன்வயம் (பெ) சந்ததி (815) *அம்ருதகிரணனன் னன்வயத்தில்* (SII,iii,206b.)

அன்றன்று (பெ) ஒவ்வோர் நாளும் (885) *அன்றன்று படுமுலக்கு* (TAS,ii,p.80-82.)

அன்றாடகம் (பெ) ஒவ்வோர் நாளும் (986) *ப்ராஹ்மண போஜனத்துக்கு அன்றாடகத்தால் நெற்கொண்டு* (SII,iii,128.)

அன்றாடு (வி) குறித்த நாளில் வழக்கில் உள்ள (1013) *விலைப் பொருளன்றாடு நற்காசு 5* (IPS,i,90.)

அன்றாள் கோ (பெ) சுட்டப்படும் காலத்தில் ஆட்சிபுரிகின்ற மன்னன் (880) *அன்றாள்கோவேய் இரக்ஷிப்பதாகவும்* (SII,xii,102.)

அன்றி (வி) அல்லாமல் (804) *முழு சிராவணை அன்றி* (SII,xiv,37.)

அன்றில் (பெ) அல்லாவிடில் (1000) *பகை பகை யன்றில் எநன்றும் பகை பான்மை தந்த* (SII,iv,167.)

அன்றினார் (பெ) பகைவர் (1120) *அன்றினார்கள் ஓடுந்திறங் கண்ட* (SII,iv,225.)

அன்று (பெ) அக்காலத்தில் (785) *கொடுஞ்சிலை அன்று கால் வளைத்தும்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

அன்று (வி) அல்ல (883) *இது அன்றென்று திறம்பினோம்* (SII,vii,420.)

அன்றென்றார் (பெ) மறுத்தவர் (1014) *இப்பரிசு அன்றென்றாரை* (SII,i,40.)

அன்றைச் செலவு (பெ) நாள் செலவு (1000) *அன்றைச் செலவு வாய்க்கும்மவனு அஞ்ஞாழி* (TAS,ii,p.173-207)

அன்ன (இ) போன்ற (785) *குன்றமன்ன குலைக் களிறும்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

அன்னது (பெ) போன்றது (785) *குன்றமன்னதோர்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

அன்னபுலி (பெ) சோறு: நைவேத்தியம் (955) *அன்னபுலிக்கும் ... நியதம் அரிசி முந்நாழி* (SII,xiv,86.)

அன்னம் (பெ) ஒரு பறவை (833) *களியன்னங் கிளை பயிர் புனல்* (SII,xiv,44.)

அன்னவை (பெ) அத்தன்மையவை (1218) *திகழ் சாலையுஞ் சயித்தம் அன்னவை திகழ் ஐவர் கண்டன்* (UCR,xviii,p.157-62; UCR,xx,p.15-18.)

அன்னன் (பெ) அத்தகையவன் (785) *அன்னனாகிய அலர் கதிர் நெடுவேற்றென்னன்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

அன்னான் (பெ) ஒத்தவன் (1000) *சிராமலைத் தெய்வமன்னான் மனம் புகுவேம்* (SII,iv,167.)

அன்னியகர்ம தீட்டு (பெ) (= அந்ய நாமகரணத் தீட்டு), ஒருவர் இன்னொருவர் பெயரில் கொடுக்கும் ஆவணம் (1246) *இக்கோயில் தேவகன்மி கோயிக்கனுக்கு அன்னிய கர்மதீட்டுக் குடுத்த பரிசாவது* (SII,viii,706.)

அன்னியர் (பெ) பிறர் (1008) *இவ்வாய்க் கால்கள் அன்னியர் குறங்கறுத்துக் குத்தவும்* (EI,xxii,34.)

அன்னியாய காரிகள் (பெ) அநியாயம் செய்பவர்கள் (1225) *ஒட்டருடனே கூடி நின்று அன்னியாய காரிகளாய் போந்த* (SII,iv,500.)

அன்னியாய வாவ தண்ட இறை (பெ) தண்டத்தின் மூலம் பெறும் வரி (993) *கற்பூர விலையும் அன்னியாய வாவ தண்டவிறையும் இப் பள்ளிச் சந்தத்தைக் கொள்வான்* (EI,iv,14b.)

அன்னுவயம் (பெ) பரம்பரை (1132) *சாவாமூவாப் பேராடாக கைகொண்டு என்மக்கள் மக்கள் அன்னுவயமுள்ள தனையும்* (SII,xiv,230.)

அனசனம் (பெ) உண்ணா நோன்பு (600) *ஐம்பத்தேழனசனந் நோற்ற* (SII,xvii,262.)

அனந்த கற்பக நாள் (பெ) நீண்ட காலம் (1220) *புவனமுழுதுடையாளும் அனந்த கற்பக நாள் பிரியாது* (CHEN,xiv,p.362-64.)

அனந்தடம் (பெ) பிறகு (919) *நிரம்பவாரியம் ஒழிஞ்ச அனந்தடம் இடும் வாரியங்கள்* (ARASI,1904-05,p.131.)

அனந்தரம் (பெ) பிறகு (921) *இவர்கள் ஒழிந்த அனந்தர மிடும் வாரியங்களும்* (ARASI,1904-05,p.131.)

அனந்தலை விளக்கு (பெ) ஒரு வகை விளக்கு(?) (1009) *அனந்தலை விளக்கு உள்கருவும்* (SII,v,521.)

அனலம் (பெ) நெருப்பு (1012) *வெண்குடைக் கீழிரட்டை வெண்கவரி தெற்றியவநலந் திவள* (SII,vii,863.)

அனவஸ்தை (பெ) எதிர்ப்பு (985) *இறை காத்துக் குடுப்போமானோம் மஹாஸபை௰யோம் இதுக்கு அனவஸ்தை பேசினார் கங்கையிடை* (SII,vi,322.)

அனாதி (பெ) தொடக்கத்தில் (1286) *கல் வெட்டுப் படித்து அனாதியில் போந்த படியிலே உடைப்பும் உடைத்து...* (IPS,573.)

அனாதி காலம் (பெ) தொடக்கம் தெரியாத காலம் (1258) *இவ்வூர் பற்றில் அனாதிகால இறையிலியான* (IPS,359.)

அனாதியாயது (பெ) தொடக்கம் இல்லாதது (1012) *புனல் வளர் பேரெட்டான வீரெட்டாநமனைத்தினு மனாதியாயது நினைப்பினு முணர்தற் கரியது* (SII,vii,863.)

அனாதேசம் (பெ) வெளியூர் (1014) *இவர்களில் செத்தார்க்கும் அனாதேசம் போனார்க்குந் தலைமாறு* (SII,ii,65.)

அனியாயம் இடுகின்றார்கள் (வி) முறை தவறி நடக்கிறார்கள் (985) *பன்மாயேச$_0$வரரும் வந்து அனியாய மிடுகின்றார்கள் என்று நமக்கு சொல்ல* (SII,iii,142.)

அனுக்கிராமம் (பெ) காத்தல் (849) *தேவரே யனுக்கிராமஞ் செய்வாராக* (TAS,ii,p.67-68.)

அனுங்கி (வி) வருந்தி (1000) *நிற்குந்துயர் கொண்டிருக்கும் பொழுதின்றி நெஞ்சனுங்கி* (SII,iv,167.)

அனுசயம் (பெ) உரிமை (1288) *எங்கள் காணி என்று அனுசயம் பண்ணின படியாலே* (SII,vii,759.)

அனுசா$_0$கை$_2$ (பெ) உட்கிளை (1014) *தைத்த மஹாசா$_0$கை$_2$ ஒன்பதும் இவற்றுள் அனுசா$_0$கை$_2$ நாற்பத்திரண்டும்* (SII,ii,50.)

அனுசிதம் (பெ) முறையற்றது (1192) *இதுக்கு அனுசிதம் பண்ண நினைத்தார் க்$_3$ராமத்$_3$ரோஹிகளுமாய்* (SII,vii,393.)

அனுசுதம் (பெ) (= அனுசிதம்) (1090) *இக் கோயில்கள் கடக்கிற அனுசுதத்தைக் கண்டு* (SII,vii,533.)

அனுப்பு சீற்மை (பெ) அனுப்பு என்ற காவற்காரர் வாழ்க்கைக்குக் கொடுத்த மானிய நிலம் (1436) *படைவீட்டில் பெருமாள்குலத்து வாசல் முகைஊர் வாசல் அனுப்பு காவற்காற்கு ... குடுத்தபடி இந்த அனுப்பு சீற்மை ஊதுசேற்றி* (AVNM,10,p.67)

அனுபந்தம் (பெ) ஒத்துப் போதல் (951) *விலக்குமவகள்க்கனுபந்தம் பறையுமவகளும்* (TAS,i,p.288-29; TAS,v,p.6-7.)

அனுபவம் (பெ) துய்த்தல் (961) *எப்பேர்ப்பட்டநவுந் த்டுத்து அநுவபக் குத்துக்கால் வரில்* (SII,xiv,91.)

அனுபவிக்கும் (வி) துய்க்கும் (987) *உண்ணில மொழிவின்றி அனுபவிக்கும்* (SII,xiii,12.)

அனுபவித்த (வி) நுகர்ந்த (921) *மஹேந்த$_3$ரபோ$_4$க$_3$ மனுப$_4$வித்த விகடவாடவந்* (SII,iii,206a.)

அனுப$_4$விக்கின்ற (வி) உரிமையாகக் கையாளும் (915) *சடையன் கீரன் அனுப$_4$விக்கின்ற நிலத்துக்கும்* (SII,xix,211.)

அனுப$_4$விப்பதாக (வி) நுகர்வது (866) *கீழ்ப்பாதி அனுப$_4$விப்பதாக* (TAS,i,p.1-14.)

அனுபோகம் (பெ) உழுது பயிரிட்டுத் துய்ப்பதைக் குறிக்கும் கணக்கு (1238) *நமூர் 22வது காணி அனுபோகம் எழுதுகிற இடத்து தரமிலியாய் ஒழுகல் மாட்டு* (SII,viii,206.)

அனுபோக ஒற்றி (பெ) விளைவை நுகரும் உரிமையுள்ள (1300) *திருச் சூலக்கல்லுக் குட்பட்ட நிலத்தில் இருகூறு இவர்க்கு அனுபோக ஒற்றியாகப் போதுகையால்* (IPS,579.)

அனுவட்டம் (பெ) ஒருவகை முத்து (1014) *முத்தில் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் குறுமுத்தும்* (SII,ii,3.)

அனுவந்தம் (பெ) உதவி (1200) *அனுவந்தம் பண்ணுமவந்னும் அதுவே கச்சம்* (TAS,vi,143.)

அனுஸாரம் (பெ) சேர்ந்துள்ளது (1222) *இக்கோயில் அனுஸாரம் பிக்ஷைமடத்து நல்லதறியும் பெருமாள்* (IPS,266.)

அனுஸாரம் (பெ) ஆட்சியில் (1286) *விராடராயர் அனுஸாரமான நாளில்* (SII,viii,591.)

அனைச்சர் (பெ) அனைவர் (931) *மயக்கின துடவைஉம் இவ்வனைச்சர் நிலமும்ங் கொண்டு* (SII,iii,102.)

அனைச்சும் (பெ) அனைத்தும் (1008) *கலசம் நூற்றெட்டும் ஸ்நமநத்$_3$ரவ்யங்கள் அனைச்சும்* (SII,vii,142.)

அனைத்தினும் (பெ) எல்லாவற்றிலும் (1012) *புனல்வளர் பேறெட்டான வீரட்டான மனைத்தினு மனாதியாயது* (SII,vii,863.)

அனைத்து (பெ) எல்லாம் (805) *மேலைத் தொறு நிலையுமிவ்வனைத்து* (SII,iii,132; SII,xix,196.)

அனையவர் (பெ) போன்றவர்: ஒப்பானவர் (1012) *ஒப்பத் திருவனையர் முப்பத்திருவர்* (SII,vii,863.)

அனைவர் (பெ) எல்லோருடைய (988)

இவ்வனைவர் முறியும் நம்மாணைக் குரியவாறு (EI,xxi,27.)

அஷ்ட பரிபாலனங்கள் (பெ) எட்டு திசைகளைக் காப்போர் (1300) *அஷ்டபரிபாலனங்களுக்கும் யாக மண்டபத்துக்கு அமுது செய்யும்* (SII,v,228.)

அஷ்ட பரிவாரம் (பெ) எட்டு திசைகளைக் காக்கும் தெய்வங்கள் (995) *மூவேந்தவேளார் ஸ்ரீ கரணத்து அஷ்ட பரிவார எடுப்பித்த* (SII,vi,21.)

அஷ்ட போகம் (பெ) நிலந் தொடர்பான விற்றல், தானம் செய்தல், ஒற்றிவைத்தல் ஆகிய உரிமைகளும், அந்நிலத்தில் உள்ள நீர், மரம், கல் முதலியவற்றைத் துய்க்கும் உரிமைகளும் (1774) *நிதிநிக்ஷேப ஜலதருபாஷாண ஸிந்து$_3$ர அக்ஷிண்யாகா$_3$மி ஸித்$_3$த$_4$ ஸாத்$_3$யமென்று சொல்லப்பட்ட அஷ்ட போ$_4$க$_3$ தே$_3$ச$_0$ ஸ்வாமியங்களுக்கு* (TAS,v,p.7-17.)

அஷ்ட மங்கல பிரதிமை (பெ) எட்டு மங்கலங்களைக் குறிக்கும் எட்டு கலசங்கள் (1551) *அங்குரார்பணத்துக்கு ஜஹாதி ப்ரதிமை 1 சோம ப்ரதிமை 1 கும்பத்துக்கு அஷ்டமங்கல பிரதிமை 8 னாயகப் பிரதிமை 5 ஆக பிறதிமை 15க்கு* (TDI,v,127.)

அஷ்டாதச$_0$ விஷையம் (பெ) பதினெட்டு/பல நாடுகள் (1272) *அருளாள தாஸர் மடத்தில் வர்த்திக்கும் அஷ்டாதச$_0$ விஷையத்து ப்ரஹ்ம வித்வான்களுக்கு போஜன முள்ளிட்டு* (CHEN,ix,p.357.)

அஷ்டாத$_3$ச$_0$ புராணங்கள் (பெ) பதினெட்டுப் புராணங்கள் (1119) *தலைவனிருடைப் பரசமைய கோளரிமாமுநிக்கு கொழிந்த வஷ்டாதச$_0$ புராணங்கள் தாநங்கந்னிவன புராணம் வழுத்தபடி காட்டுதலானந்* (SII,vii,752.)

அஸ்த்ர தேவர் (பெ) ஆயுத வடிவ உற்சவ மூர்த்தி (1024) *பலிக்கு அரிசியிரு நாழியும் அஸ்த்ரதேவர்குத் திருவமுதரிசி யிரு நாழியும்* (EC,x,Kl.112a.)

அஸ்தமநம் (பெ) அழிவு (1700) *எங்கள் பற்று இராயர் அஸ்தமநம் ஆன பாழாய் இருந்து இராச்சியம் பாழாய் இருந்து* (SII,xvii,185.)

அஸ்தி கடை செய்த (வி) (யானைப்?) போர் செய்த (919) *ஈழத்தரையநும் வந்து பெருமானடிகளோடு அஸ்தி கடை செய்த நான்று* (SII,iii,99.)

அஸமஸமந் (பெ) ஒப்பற்றவன் (771) *மகரிகை அணிமணி நெடுமுடி அரிகேஸரி அஸமஸமந் ஸ்ரீமாரவர்ம்மந்* (EI,xvii,16.)

அஸுரர் (பெ) தேவர்களுக்கு எதிரான ஒரு கணம் (1344) *பேய் விலங்கு சாதி அஸுரர்களாயும் பிறந்து நெடுங்காலம் துக்கம் அநுபவிப்பார்கள்* (UCR,xviii,p.16-23.)

அஸுரக$_3$ணம் (பெ) அசுரர் கூட்டம் (815) *அஸுரக$_3$ணந்தலை அழிய* (SII,iii,206b.)

அஹித நினைத்தார் (பெ) தீமை நினைத்தவர்கள் (914) *இத$_4$ர்ம்மத்துக்கு அஹித நினைத்தார்* (SII,viii,529.)

அஹிதாக்$_3$நி (பெ) விடாமல் ஓமம் செய்பவன் (905) *அணி நீள் புயத்தஹிதாக்$_3$நி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

அஹிபதி (பெ) ஆதிசேடன் (921) *அஹிபதி ஆயிரந்தலையாலரிதாகப் பொறுக்கின்ற மஹிமண்டல* (SII,iii,206a.)

அஹோராத்ரம் (பெ) இரவும் பகலும் (985) *ஆசந்திரார்கமும் உழக்கெண்ணை கொண்டு அஹோராத்ரம் முட்டாமை நுந்தா$_3$ விளக்கெரிக்க* (CHEN,i,p.25.)

அஹோவனம் (பெ) தரிசு நிலம் (1073) *பழந் தேவதானத்தில் அஹோவனமாக கிடந்த திடலை இவூர்* (SII,vii,498.)

ஆ

ஆ (பெ) பசு (750) *நல்லாவும்ந் நல்லெருதும் ஈழ்ழப்பூச்சியும்* (EI,v,8.)

ஆக்கப் பெருக்கம் (பெ) தொடர் வருவாய் (1055)

இப்பசுவால் வந்த ஆக்கப் பெருக்கம் தங்களிதாகவும் (EC,x,Kl.107.)

ஆக்கி (வி) கட்டி (785) *குன்ற மன்னதோர் கோஇலாக்கி* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

ஆக்கி (வி) செய்து (985) *பெருமக்களேய் இந்த ஆக்கு ஆக்கி முட்டாமேய்* (SII,vi,270.)

ஆக்கிய (வி) பொருந்திய (1000) *செம்பொற்கழல் மேலாக்கிய சிந்தை* (SII,iv,167.)

ஆக்கின (வி) உரிமை செய்த (921) *குரைகழற் காலரைசிறைஞ்ச குவலையதலந் தனதாக்கின* (SII,iii,206a.)

ஆக்கு (பெ) செயல் (985) *பெருமக்களேய் இந்த ஆக்கு ஆக்கி முட்டாமேய்* (SII,vi,270.)

ஆக்குகை (பெ) செய்தல் (1144) *திருப்பள்ளித்தாமம் ஆக்குகைக்கு* (SII,xvii,597.)

ஆக்கு பானை (பெ) சமைக்கும் பானை (1009) *ஆக்கும் பானைக் காலொன்று னிறைய்* (SII,v,521.)

ஆக்குவன (வி) உண்டாக்கப்படுவன (1253) *இவ்வயலில் மேல்னோக்கிய மரங்களும் கீழ் நோக்கிய கிணறுகளும் ஆக்குவன ஆக்கவும்* (IPS,346.)

ஆக்ரோதி$_{4}$க்க (வி) கூச்சலிட (771) *கூடற்பாடு நின்றவர் ஆக்ரோதி$_{4}$க்க* (EI,xvii,16.)

ஆக (வி) மொத்தம் (807) *ஆக விளக்கு மூன்று* (SII,xiv,38.)

ஆக (வி) ஆவதாக (550) *குரவர்க்கே பள்ளிச் சந்தமாக* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

ஆகம் (பெ) மார்பு (1000) *செங்குவளை நாறு மல்லாகத்து நாராயணன்* (SII,iv,167.)

ஆகமத் தொழில் (பெ) ஆகமநூல்கள் விளக்கும் கோயிற்பூசனை முதலியன (1012) *விதியோடு தெரிச்ச வாகமத் தொழில் மூவெண் பெயருடைய முப்புரி நூலோர்* (SII,vii,863.)

ஆகமம் (பெ) கோயில் வழிபாட்டு முறை பற்றிய நூல் (1055) *வேதமும் ஸ்ரீ ஆகமமும் பேர் தீக்ஷிதநாயிருக்கும் ப்$_{3}$ராமணுக்கு குடுத்து* (SII,iii,55.)

ஆகரம் (பெ) உறைவிடம் (865) *திருக்கோடிகாவில் சிறு நங்கை ஈச்$_{0}$வராகரத்து மஹாதே$_{3}$வர்க்கு திருவிளக்கு* (SII,xii,55.)

ஆக$_{2}$ண்ட$_{3}$லன் (பெ) இந்திரன் (815) *ஆக$_{2}$ண்ட$_{3}$லனதழிவகல* (SII,iii,206b.)

ஆகா (வி) ஆகமாட்டா (1200) *நகராகா தூந்து மணிநீர்த் துறையாகா* (SII,viii,97.)

ஆகாச$_{0}$ம் (பெ) வானம் (1014) *சாந்து ப்ருதிவி அப்புத் தேயு வாயு ஆகாச$_{0}$ம் சந்திராதித* (EC,iii,TN.94.)

ஆகாத வண்ணம் பகை ஆக (1092) *ஊரவரே தீர்த்துக் கொடுப்பிது இவகளில் ஆகாத வண்ணமிருக்கில்* (TAS,v,p.172-76.)

ஆகா நின்ற (வி) உள்ள (691) *தே$_{3}$வதமாகா நின்ற ப$_{3}$ப்பப$_{4}$ட்டாரகருங்* (SII,i,151; EI,xvii,22.)

ஆகாமி (பெ) இனி வருமவை (1293) *வரும் ப்ராப்திகளு மற்றும் ஆகாமி ஆந கோபூ ஹிரண்யாதி* (EC,x,Kl.102.)

ஆகா விசாதி (பெ) நவமணிகளில் ஒரு வகை (1014) *ஸ்ரீபா$_{3}$ஹூவலயம் ஒன்றிற் தடவிக்கட்டின பளிங்கு இரண்டும் ஆகா விசாதி ஒன்றும்* (SII,ii,93.)

ஆகி (வி) தோன்றி (771) *மருவினிய ஒரு மகநஹாகி* (EI,xvii,16.)

ஆகுதி புகை (பெ) வேள்விப் புகை (1150) *மங்கையர் கற்பும் ஆதி$_{3}$ அந்தணர் ஆகுதிப் புகையும்* (SII,iv,546.)

ஆக்$_{3}$நிவேச்$_{0}$ய (பெ) ஒரு கோத்திரத்தின் பெயர் (789) *ஆக்$_{3}$நிவேச்$_{0}$ய கோ$_{3}$த்ரத்து* (SII,ii,99.)

ஆங்கணும் (பெ) குறித்த அவ்விடத்தும் (1044) *ஆஹவமல்லன் ஆங்கணும் அஞ்சின நென்ன* (SII,v,465.)

ஆங்கு (பெ) அவ்விடம் (700) *அரனுக்கிடமாக வாங்கு* (EI,xii,27; SII,xii,10-11.)

ஆச்சமார் (பெ) பெரியோர்; புரவலர் (1014) *கைக்கோளப் பெரும்படையோமினால் சமைப்பித்து எங்கள் ஆச்சமார் திகை ஆயிரத்தைஞ்ஞூற்றுவர்* (SII,xix,4.)

ஆச்சார்ய போகம் (பெ) குருவுக்கு விட்ட நிலம் (1009) *இட்டபடி ஆச்சார்ய போகம் பங்கு நாலும் பணிசெய்யும் மாணிகள்* (CHEN,xxi,p.425.)

ஆச்சி (பெ) தாய் (956) *எங்கள் ஆச்சி வேட்டுவன் ஆச்சபிடாரி* (SII,viii,612.)

ஆச்சிதின் (வி) ஆயின (921) *கணக்குக் காட்டி சு$_{0}$த்$_{3}$த$_{4}$ந் ஆச்சிதின் பின்னன்றி மற்றுக்கணக்குப் புக* (ARASI,1904-05,p.131.)

ஆச்சிய போகம் (பெ) ஒரு வரி (1120) *இந்நாற்பாலெலைக்குள்ளு அந்தராயமும் ஆச்சிய போகமும்* (SII,xvii,207.)

ஆச்சியார் (பெ) தாயார் (991) *உத்தம சோழதேவர் தங்களாச்சியார் பராந்தக மாதேவியாரான* (SII,xiii,144.)

ஆச்சினை (பெ) கட்டளை (1344) *தண்டிக் கொள்ளக்கடவதாக ஆச்சினைப் பண்ணினோம்* (UCR,xviii,p.16-23.)

ஆச்சு (வி) ஆனது (895) *வடசாதங்குடி இழிஞ்சு தாநே ஆச்சு* (SII,xiii,309.)

ஆச்சை (பெ) வேதப் பாடங்களில் ஒன்று (955) *முப்பத்திரண்டு ஆச்சைஉம் ஐஞ்சு வாரமும் மோதி தானம் புக்கார்* (SII,xiv,81.)

ஆசந்த்ர காலம் சூரியனும் சந்திரனும் உள்ள காலம் வரை (913) *ஆசந்த்ர காலத்துக்கும் சா$_{0}$ச்$_{0}$வதமாக* (SII,xii,95.)

ஆசந்த்ர தாரம் சூரியனும் சந்திரனும் நட்சத்திரங்களுமுள்ள வரை (894) *இப்பரிசு ஆசந்த்ர தாரமும் ஊட்டுவதாக* (SII,iii,1.)

ஆசறுதி (பெ) கடைசி (1006) *தென்னெல்லை மேற்க்கு நோக்கி முப்பத்தெண் கோலாசறுதியில்* (SII,v,518.); (1118) *பசாநக்காசும் ஆண்டாசறுதியாக நேரம் இறுக்கக் கடவோமாகவும்* (SII,vi,57.)

ஆசனம் (பெ) இருக்கை (1176) *பொன்னாசனஞ் சிங்கவணை* (SII,xvii,585.)

ஆசார்ய்ய போ$_{4}$க$_{3}$ம் (பெ) குருக்களுக்கு மானியமாக விடப்பட்ட நிலம் (947) *ஆசார்ய்ய போ$_{4}$க$_{3}$மாகத் தான் கல்லி வயக்கிக் குடுத்த* (SII,xiv,85.)

ஆசார்ய்யர் (பெ) ஜைனத் துறவிகளின் ஒரு பட்டம் (1000) *கடைக் கோட்டூர்த் திருமலைப் பாவாதி மல்லர் மாணாக்கர் அரிஷ்டநேமி ஆசார்ய்யர்* (SII,i,73.)

ஆசார்ய்யன் (பெ) கட்டிடக்கலைஞன்; ஸ்தபதி (755) *இம்மண்டபத்தினுக்காசார்ய்யன்* (SII,vi,356.)

ஆசார்யர் (பெ) குரு; ஆசிரியர் (800) *ஆசார்யர் அநிருத்$_{3}$த$_{3}$ர் பாடியது* (EI,xiii,10.)

ஆசாரம் (பெ) ஒழுக்கம் (1012) *நெஞ்சாசார நிறைவொடு குறையாப் பஞ்சாசாரியப் பகுதியோற்கும்* (SII,vii,863)

ஆசாரவான்கள் (பெ) ஒழுக்க முடையவர்கள் (1396) *மடா$_{3}$மட$_{3}$த்தில் சம்ப்ரதா$_{3}$யமாய் ஆசாரவான்களான தப்ஸ்விகள் ஸிக்ஷை பண்ணக்கடவது* (EI,xxxii,29.)

ஆசாரி புருஷகள் (பெ) குருமார்கள் (1433) *திருப்பதி அகரத்தில் ஆசாரி புருஷகளில் கச்சியபாடியில் அண்ணர் வெங்கடத்துறை...* (TDI,i,205.)

ஆசாரியக் காணி (பெ) குருவுக்கு கொடுக்கப் பட்ட நிலம் (1300) *ஸ்ரீபதியிலே ஆசாரியக் காணியாக குடுத்தோம்* (EC,xvii,Kl.333.)

ஆசாரிய தெ$_{3}$க்ஷணை (பெ) குருவுக்கு காணிக்கை (1024) *தச்சனுக்கு நெல்லு குறுணியும் ஆசாரிய தெ$_{3}$க்ஷணைக்கு* (SII,xvii,305.)

ஆசாரிய பூசனை (பெ) குருவை வணங்கல் (1008) *கலமும் விறகும் ஆற்றிநீரும் ஆசாரிய பூசனையும்* (SII,vii,142.)

ஆசா$_{0}$ரம் (பெ) தர்மசாத்திர முறைப்படி ஒழுகுகை (921) *கார்ய்யத்தில் நிபுணராய் ஆசா$_{0}$ரம் உடையரானாரையேய்* (ARASI,1904-05,p.131.)

ஆசித்து (வி) பூசி (986) *அகவாயும் புறவாயும் மகுடமும் பொன் ஆசித்து* (SII,xix,390.)

ஆசிபொதுமக்கள் பேரால் குலதிறை (பெ) ஊர்க்காவல் புரிபவர் பொருட்டுச் செலுத்தும் ஒரு வரி (1110) *பருத்திப் புடவை தறிப்புடவை ஏற்காசு வீடுமாடு ஆசிபொதுமக்கள் பேரால் குலதிறையும் கோரும் பல அந்தராயங்களுமுட்பட்ட* (EC,ix,Nl.3.)

ஆசிரிகரு (பெ) ஆசிரியர்: சமணத் துறவியின் பட்டப் பெயர் (600) *சந்திரநந்தி ஆசிரிகரு நிசீதிகை* (SII,xvii,262.)

ஆசிரியம் (பெ) புகலிடம் (1301) *கடம்பராயரும் விசையேந்திரக்கும் ஆசிரியம்* (IPS,582.)

ஆசிரியன் (பெ) சமணத்துறவி: ஆசிரியர் (862) *வளங்கெழு திருநகர் மதிரை ஆசிரியன்* (SII,xiv,45.)

ஆசிவக்காசு (பெ) (= ஆசுவிகள் பேர்க்கடமை) (1238) *கடை இறை தட்டார்ப்பாட்டஞ் செக்குக்கடமையும் ஆசிவக்காசு எப்பேற்ப்பட்ட அனைத்தாயங்களும்* (SII,i,59.)

ஆசிறியப் பிரமாணம் (பெ) அடைக்கலம் பெறுவோர் கொடுப்போருக்குக் கொடுக்கும் உறுதிமொழி (1408) *வாச்சான் சேமப் பிள்ளையான்நேன் ஆசிறியப் பிரமாணம் பண்ணிக்குடுத்த பரிசாவது* (IPS,696.)

ஆசீர்வாதம் (பெ) வாழ்த்து (1127) *திரு முன்பு நின்று நமக்கு ஆசீர்வாதம் பண்ணுவார்களாக* (SII,iv,631.)

ஆசு (பெ) கைப்பிடி (1014) *குற்றுடைவாள் ஆசுங் கண்டமும் பொன் கட்டிற்று* (SII,ii,46.)

ஆசுபொதுமக்கள் (பெ) ஊர்க்காவல் புரியும் வீரர்கள் (?) (1400) *பச்சை ஆசுபொதுமக்களைக் கொள்ளும் வரி எண்ணைப்பந்தம் உள்ளுட்ட இறைகளும்* (SII,vii,936.)

ஆசுபொதுமக்கள் பேறு (பெ) ஆசுபொதுமக்கள் பொருட்டு வாங்கும் வரி (1542) *கண்காணியள் முகாந்திரமாக கண்காணித்து ஆசுபொதுமக்கள்பேறும் கணக்கிலக்கையுமிட்டு* (IPS,743)

ஆசுபொதுமக்களைக் கொள்ளும் வரி (பெ) ஆசுபொதுமக்கள் செலுத்தும் வரி (1400) *பச்சை ஆசுபொதுமக்களைக் கொள்ளும் வரி எண்ணைப்பந்தம் உள்ளுட்ட இறைகளும்* (SII,vii,936.)

ஆசுவக் கடமை (பெ) (= ஆசுவிகள் பேர்க்கடமை) (1294) *தறி இறை தட்டார்ப்பட்டம் ஆசுவக் கடமை நாட்டார் வரிவு ஊர்பழச்சம்* (EC,x,Kl.18.)

ஆசுவதி பேர்க்கடமை (பெ) (= ஆசுவிக்கடமை) (1298) *மாவடை மரவடை குளவடை ஆசுவதி பேர்க்கடமை* (ikikik.iktP.253)

ஆசுவம் (பெ) அம்பு (?) (1073) *சிறுசுங்கத்துக்கு ஆசுவிமக்கள் ஆசுவ முண்ணும் பேரால் ஒரு காசிடுவதாகவும்* (EC,x,Mb.49a.)

ஆசுவிகள் (பெ) (= ஆசுபொதுமக்கள்) (1211) *ஏரிமீன்பாட்டம் ஆசுவிகள் பேர்க்கடமை தறியிறை* (SII,vii,103.)

ஆசுவிகள் பேர்க்கடமை (பெ) ஊர்க்காவல் புரியும் வீரர்கள் பொருட்டு வாங்கும் வரி (1211) *ஏரிமீன்பாட்டம் ஆசுவிகள் பேர்க்கடமை தறியிறை* (SII,vii,103.)

ஆசுவிகள் பொதுமக்கள் பேரால் வந்த கடமை (பெ) (= ஆசுவிகள் பேர்க்கடமை) (1218) *தட்டார்ப்பட்டமும் ஆசுவிகள் பொதுமக்கள் பேரால் வந்த கடமையும்* (SII,vii,448.)

ஆசுவி காசு (பெ) (= ஆசுவிகள் பேர்க்கடமை) (1211) *கந்நாரிறையும் ஆசுவிகாசும் பட்டி தெண்டமும்* (SII,vii,912.)

ஆசுவி மக்கள் (பெ) (= ஆசுபொதுமக்கள்) (1073) *சிறு சுங்கத்துக்கு ஆசுவிமக்கள் ஆசுவ முண்ணும் பேரால் ஒரு காசிடுவதாகவும்* (EC,x,Mb.49a.)

ஆசை (பெ) விருப்பம் (1072) *கொண்டருளி அருக்கந் உதையத் தாசையில் இருக்குங் கமல மனைய* (SII,iii,64.)

ஆச்$_0$ரயம் (பெ) சார்ந்திருக்கை (1223) *கோயிலில் ஆச்ரயமாக நாகங்குடையார் மண்டையாழ்வார் எழுந்தருவித்த... திருமேனி* (SII,viii,248.)

ஆச்$_0$ரயலிங்கம் (பெ) மூல விக்கிரகத்தைச் சார்ந்திருக்கும் லிங்கம் (1237) *மழவராயர் பூஜித்து இக்கோயிலில் ஆச்ரய லிங்கமாக எழுந்தருளிவித்த சொக்கனார்க்கு* (SII,v,431; EI,xxii,10.)

ஆச்$_0$ரித்து (வி) அணுகி (1300) *நம்முடைய நாட்டாரை ஆச்ரித்து இப்பழிக்காரிய தீத்து தரவேணும்மென்று* (IPS,481.)

ஆஜ்ஞையிடுவித்து (வி) கட்டளை பெற்று (1523) *திருவாபரணத்ரோஹம் பண்ணுகையில் நரஸிம்ஹராய மஹாராயர் ஆஜ்ஞையிடுவித்து* (SII,iv,303.)

ஆஞாபித்து (வி) ஆணையிட்டு (1120) *இரண்டுபணம் ஆஞாபித்து வருஷந் தோரும்* (EC,xv,Hn.186.)

ஆஞை (பெ) கட்டளை (919) *எங்களூர் ஸ்ரீமுகப்படி ஆஞையினால் தத்தநூர் மூவேந்த வேளான் இருந்து* (ARASI,1904-05,p.131.)

ஆட்சி கொண்டருளிந (வி) வீற்றிருந்த (1119) *திருவைச்சிறுபாக்கத்து ஆட்சிகொண்டருளிந மஹாதேவர்க்கு விளக்கு ஒன்று* (SII,vii,471.)

ஆட்சி வசம் (பெ) பொறுப்பில் (1256) *நிச்சையித்த திருநந்தாவிளக்கு ஒன்று இதில் சித்திரமேழிக் கோன் ஆட்சி வசம் விட்ட திரு நந்தாவிளக்கு* (SII,iv,860.)

ஆட்சுமை (பெ) ஆள்சுமக்கும் சுமையளவு (1270) *பலமண்டலச் சரக்குக்கும் மிப்படியே ஒரு ஆட்சுமைக்கு ஒருமாப்பணம்* (SII,viii,405.)

ஆட்ட (வி) குளிப்பாட்ட: அபிஷேகம் செய்ய (866) *படாரரை ஆட்ட* (TAS,i,p.14.)

ஆட்ட (வி) செலுத்த (1000) *முட்டிச்ச நாளைத் தண்டம் வச்சன்றிப் பிற்ற நாளாட்டப் பெறார்* (TAS,ii,p.173-207.)

ஆட்டடுத்து (பெ) ஓர் ஆண்டுக்கு: ஆண்டு முடிவில் (1032) *இறை காராண்மையுடைய ஆச்சன் பலதேவனை ஆட்டடுத்து மாத்தால் இரண்டு காசு கொண்டு* (TAS,vi,8.)

ஆட்டத்துவ் வெளி (பெ) குதிரை முதலியவை பழக்கும் பரந்த வெளி (1029) *விக்கிரம சோழபுரத்து வீட்டருளிந கோயிலிநுள்ளால் ஆட்டத்துவ் வெளிக் கூடத்து எழுந்தருளியிருந்து* (EC,x,Kl.111.)

ஆட்டம் (பெ) கூத்து (1119) *புக்க துறை வல்லவத் தலைக்கோலியை ஆட்டங் கண்டருளா நிற்க* (SII,xvii,606.)

ஆட்டம் (பெ) செருக்கு (1774) *சத்திராதியள் மிண்டன் வன்னிய ராட்டந் தவிள்த்தான்* (TAS,v,p.7-17.)

ஆட்ட விசே$_0$ஷம் (பெ) ஆண்டு விழா (1251) *மாஸவிசேஷம் ஆட்ட விசேஷம் ஆண்டுதோறும்* (TAS,iv,p.l86-89.)

ஆட்டாண்டு தோறும் ஒவ்வோர் ஆண்டும் (768) *ஆட்டாண்டுதோறும் ஏரி தோண்டு விப்போமாகவும்* (SII,xii,34.)

ஆட்டிக்குமவன் (பெ) செலுத்துபவன் (1000) *திருவெண்ணை ஆட்டிக்குமவன் உச்சையகத்தைய்யடியின்* (TAS,ii,p.173-207.)

ஆட்டு (பெ) ஓர் ஆண்டுக்கு (910) *பூவில் தூணிபதக்கு நெல்லாக ஆட்டு அறுபதின் கல நெல்* (SII,iii,96.)

ஆட்டு (வி) தொங்கும் (913) *சந்திராதித்வற் வைத்த ஆட்டு விளக்கு* (SII,xix,170.)

ஆட்டு (வி) அரைக்கும் (1012) *கரும்பிடை தூணித்தரத்தாட் டொலியாலை யயலது* (SII,vii,863.)

ஆட்டுக்கறை (பெ) ஆட்டின் மீதான வரி (928) *புரவு நெல் முந்நூற்றுக்காடியு மாட்டுக் கறையும் தொக்கைக் குன்றியும்* (SII,v,1375.)

ஆட்டுக் காணம் (பெ) ஆட்டின் மீதான வரி (765) *ஆட்டுக்காணமும் நாவிதக் காணமும்* (EI,xxxvi,20.)

ஆட்டுக்கிறை (பெ) ஆட்டின் மீதான வரி (939) *ஆடு மேய்க்கும் மன்றாடிகள் தேவர்ராடு நீக்கி மிக்கவாடுகள்ளில் ஆட்டுக்கிறை இத்தேவர்க்கே இடுவதாக* (Tamarai,p.7)

ஆட்டுகின்ற (வி) நீராட்டுகின்ற (982) *ஆடவலாரை ஆட்டுகின்ற செம்பொற்குடம் இட்டது* (SII,v,681.)

ஆட்டுப் பாட்டம் (பெ) ஆடுவளர்ப்போர் மீதான வரி (1056) *காலளவு பாட்டமும் பாடி காவற் கூலியும் ஆட்டுப் பாட்டமும் பேர் முதலாயமும்* (TAS,i,p.164-68.)

ஆட்டுவதற்கு (வி) நீராட்டுவதற்கு (986) *தேவர்களை உத்த்தரமயந ஸங்க்ராந்தியு சித்திரை விஷுவும் ஸ்நபன மாட்டுவதற்கும்* (SII,iii,128.)

ஆட்டுவிக்க (வி) நீராட்டு விக்க (992) *ஆழ்வாரை ஸஹஸ்ர கலைசம் ஆட்டுவிக்க வந்து திருவடி தொழுது* (SII,iii,49.)

ஆட்டுவிது (வி) கொடுப்பது (988) *இது முட்டுகில் முட்டிச்சவன் முட்டிரட்டி ஆட்டுவிதுஞ் செய்வது* (TAS,ii,p.40-41.)

ஆட்டுவோம் (வி) குடுப்போம் (863) *இப்பொன்னின் பலிசையாலேய் நிசதம் உழக்கெண்ணை ஆட்டுவோமானோம்* (EI,vii,20a.)

ஆட்டை (பெ) ஆண்டு (875) *இவ்வாட்டை ஐப்பசி முதலாறாறு திங்களிற்* (SII,xii,99.)

ஆட்டைக் கடன் (பெ) ஓர் ஆண்டுக்கு செலுத்தும் வரி (1128) *இந்நிலத்தில் எல்லாப் பயிர்கள் செய்து கொண்டும் ஆட்டைக்கடன் ஊர்க்காலால்* (SII,vii,772.)

ஆட்டைக் காணம் (பெ) ஓர் ஆண்டுக்கான வரி (961) *உக்கிரமங்கலம் பாட்டம் ஆட்டைக் காணங் கொள்விது* (TAS,viii,p.43-44.)

ஆட்டைக் கோள் (பெ) ஆண்டுக்கு ஒரு முறை செலுத்தப் பெறுவது (976) *பந்திரு கல்ந் நெல் ஆட்டைக் கோளாக அமைச்ச மிக்கது அட்டி கொடுத்து* (TAS,v,p.176-78.)

ஆட்டைத் திசை (பெ) ஆண்டுக்கு ஒரு முறை கொடுக்க வேண்டிய கடமை (1008) *நிழல்வகைய்ர கோயில்க்கு போம் ஆட்டைத் திசை கொடாதவன்* (IA,xx,p.290.)

ஆட்டைத் திருவிழா (பெ) ஆண்டுக்கு ஒரு முறை வரும் திருவிழா (1014) *கொடியேற்ற வலஞ் செய்யுநாள் எழுந்தருளுந் திருவிழா வொன்றும் ஆட்டைத் திருவிழா எழுந்தருளு நாள் ஒன்பதும்* (SII,ii,28.)

ஆட்டை நாள் (பெ) ஓர் ஆண்டு முழுக்க (871) *நிசதி நாழி நெயாக நெல் தூணி ஆக ஓராட்டை நாளைக்கு நெல்...நூற்றிருபதின் கலம்* (SII,viii,581.)

ஆட்டைப்பாழ் (பெ) குறித்த ஆண்டில் தரிசாகவுள்ள நிலம் (1319) *நன்செய் தடி பலவினால் வரம்பறை பாழ் ஆட்டைப்பாழ்* (SII,iv,525.)

ஆட்டை வட்டம் (பெ) ஆண்டுக்கு ஒரு முறை (810) *ஆட்டை வட்டம் இருபதினாழி நெய்யும்* (SII,xiv,42.)

ஆட்டைவழி (பெ) ஆண்டிற்கு ஒரு முறை (1348) *பயிர்பார்த்து முதலான நெல்லும் ஒட்டுப்படி பணம் பதினெட்டும் ஆட்டைவழி இறுப்போமாகவும்* (SII,viii,170.)

ஆட்டை வாரியர் (பெ) ஆட்டை வாரியம் என்ற சபை உட்குழுவின் உறுப்பினர் (986) *இந்நகரத்து நகரமாள்வானும் ஆட்டை வாரியரும் ஏற்றுவழிச்சேரியாரும்* (SII,iii,128.)

ஆட்டை விட்டம் ஆண்டு தோறும் (870) *ஆட்டை விட்டமும் பொற்காலால் அளக்கக் கடவ நெல்லு* (SII,xix,163.)

ஆட்டொருக்கால் ஆண்டுக்கு ஒரு முறை (919) *ஆட்டொருக்காலும் ஸம்வத்ஸர வாரியமும்* (ARASI,1904-05,p.131.)

ஆட்த்தெண்டம் (பெ) பணி ஆள்களின் மீது விதிக்கப்பட்ட அபராதம் (1211) *சீபாதம் தாங்க வாராத ஆட்த் தெண்டமும்* (SII,vii,912.)

ஆட்தேவை (பெ) ஒரு வரி (1231) *அந்தராயம் ஆட்தேவை எச்சோறும் மற்றும்* (IPS,295.)

ஆட (வி) கூத்தாட (921) *எதிர்ந்த வீரர் கவந்தமாட* (SII,iii,206a.)

ஆட (வி) துடிக்க (1120) *வில்லியுடனாடக் கண்டான் தன்னொன்னலர்க்குக் கண்களிடனாடச் செல்* (CHEN,xxiii,p.93-96.)

ஆடல் (பெ) அசைதல் (785) *உடை மணித்தேராடல் வெம்மா* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

ஆடவல்லார் (பெ) சிவன் (1007) *ஆடவல்லார்க்கு உமாபடிாரகியை எழுந்தருளுவித்தாந்* (SII,xvii,238.)

ஆடவலார் (பெ) சிவன் (982) *ஆடவலாறை ஆட்டுகின்ற செம்பொற் கூடம் இட்டது* (SII,v,681.)

ஆடற் புரவி (பெ) போர்க் குதிரை (1068) *ஆடற்புரவிளங் கரியும் அரிவையர் குழாத் தோடு மகப்படப் பிடித்து* (EI,xxi,38.)

ஆடாங்காசு (பெ) சிறைப்பட்டவரை மீட்கக் கொடுக்கும் விலைப்பொருள் (1150) *வேணாடுடையார் பிடித்துச் சிறைசெய்து ஒண்பாதுகைத் தளை இழுப்பின் போது ஆடாங்காசு குடுத்து வீடுகொண்டமையாலும்* (AVNM,9,p.33-34)

ஆடி (பெ) மாதங்களில் ஒன்று (923) *ஆடிப் புணரத்ததினாள் பன்னிரு கல நெல்* (TAS,i,p.287.)

ஆடி (வி) குடைந்து (785) *தேன்னலராடி தேம்புனற்குறட்டி* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

ஆடி (வி) குளித்து (1173) *மார்கழித் திருவாதிரை நெய்யாடி* (SII,viii,36.)

ஆடி (வி) அசைந்து (1000) *அறியேனறை வாயழலுமிழும் புரிந்தாடி யலமருமே* (SII,iv,167.)

ஆடிக்காத்திகைப் பச்சை (பெ) ஒரு வரி (1187) *ஆளமஞ்சியும் ஆடிக்காத்திகைப் பச்சை எற்சோறு அகப்பட* (SII,vii,1011.)

ஆடிகாத்திகை சுதந்தரம் (பெ) ஒரு வரி (1430) *மாவடை மரவடை கோயிற்சுதந்தரங் குளமீன்பாட்டம் ஆடிகாத்திகைச் சுதந்தரம்* (IPS,801)

ஆடிட (வி) விளையாட (1000) *வெற்பிதன் மிசை சாரலில் யாமாடிட* (SII,iv,167.)

ஆடிநார் (பெ) கூத்தாடினார் (1024) *திருவிழாவில் சேவித்தாரும் ஆடிநார்க்கும் பாடினார்க்கும்* (EC,x,Kl.112a.)

ஆடின (வி) பொருத (900) *கம்பபெருமாள் ஆனையாடின கொந்தளத்து* (SII,xii,112.)

ஆடி அருள (வி) அபிஷேகம் செய்ய; குளிக்க (887) *திருமஞ்சனமும் ஆடி அருள* (SII,xiv,16a.)

ஆடி அருளுகின்ற (வி) நடனம் செய்கின்ற (957) *திருக்கற்றளியின் தென் பக்கத்து ஆடி அருளுகின்ற கூத்தப் பெருமாளுக்கு* (SII,xix,15.)

ஆடு (பெ) விலங்கு வகை; செம்மரி ஆடு (794) *அட்டின ஆடு நூறு* (SII,xiv,32.)

ஆடு (வி) வழங்கும் (985) *இவ்வூராடு பழங் கல்லால் நித்தல்படிய் நாற்கழஞ்சு* (SII,xiii,35.)

ஆடுகிற (வி) கூத்தாடுகிற (1009) *செம்பில் மேற்பொந் கடுக்கின பாவைக் கண்ணாடியில் ஆடுகிற பாவை ஒன்று* (SII,v,521.)

ஆடு படாதே பலியிட ஆட்டைக் கொல்லாமல்(?) (1228) *கண்ணாலத்துக்கு ஆடுபடாதே சுட்டுத்திந்நி கிடாயுள்..* (IPS,281; SII,xvii,394.)

ஆடுவான் (வி) குளிப்பாட்ட (1000) *எருமைத் தானத்து வாழ்கையால் நெய்யாடுவான் நூற்று நாழி* (TAS,ii,p.173-207.)

ஆடூர பணம் (பெ) ஒரு நாணயம் (1394) *திருவாழி மோதிரம் ..ஒரு ஆடூரபணம் ஒன்றும்* (IPS,689.)

ஆடை (பெ) உடுக்கும் துணி (887) *ஸ்ரீ உடையாடை இணை மூன்று காசு பெற்றன* (SII,xiv,16a.)

ஆடைக் காசு (பெ) புதுமணமக்கள் தம் நலத்துக்காக கோயிலுக்கு ஆட்டுக்கு மாறாகக் கொடுக்கும் காசு (1228) *கண்ணாலத்துக்கு ஆடுபடாதே சுட்டுத் திந்நிகிடாயுள்.அணந் வீட்டில் ஆடைக்காசு எண்பது* (IPS,281; SII,xvii,394.)

ஆண்ட (வி) ஆட்சி செய்த (700) *கொற்றாயரைச நாண்ட காலத்து* (SII,xiv,97.)

ஆண்டகை (பெ) பெருமையிற் சிறந்தோன் (833) *வெளியன்குடி விறலாண்டகை* (SII,xiv,44.)

ஆண்டடுத்து ஆண்டுக் கடைசியில் (873) *வாரா வைகல் ஆண்டடுத்துக் கொள்வது* (SII,iii,91.)

ஆண்டாசறுதி ஆண்டுக் கடைசி (1112) *ஆண்டா சறுதியாக அன்தராயம் உதவினாயகந் தச்சு* (SII,vii,776.)

ஆண்டார் (பெ) தெய்வம் (990) *திருக்கோவலூர் திருவீரட்டானத்து ஆண்டார்க்கு* (SII,xiii,104.)

ஆண்டான் (பெ) நடைபெறச் செய்பவன் (895) *இது காத்தார் ஆண்டான் அடி என் முடி மேலன* (SII,iii,93.)

ஆண்டு (பெ) 365 நாள் கொண்ட காலப்பகுதி (856) *இதனால்லாண்டு வரை பலிசைனெல் அறுபதின் கலம்* (SII,v,609.)

ஆண்டுஎழுத்துத் தேவை (பெ) ஒரு வரி (1265) *குதிரைப் பந்தி ஆண்டுஎழுத்துத் தேவை பழந்தேவை வெட்டி நிலையாள்* (SII,xvii,143.)

ஆண்பிள்ளை (பெ) ஆண்குழந்தை (800) *ஆண்பிள்ளைப் பெறுவதும்* (SII,vii,581.)

ஆண் மக்கள் (பெ) ஆண் வாரிசுகள் (1000) *ஈஸ்ஸுப்பு இறப்பானுக்கும் இவன் ஸந்ததி ஆண் மக்களுக்கும் பெண்மக்களுக்கும்* (EI,iii,11.)

ஆண்மை (பெ) வீரம் (1200) வாணகுலதீபன் *செய்த தனியாண்மை வடதிக்கில்* (SII,vii,123.)

ஆண்மை (பெ) ஆட்சி (950) *ஊராண்மையில் வேறுனீக்கி நாட்டாண்மையோடுடன் கூடி* (TASSI,1962-65,p.32-52; PNDCP,p.187-96.)

ஆண்மை செய்து (வி) ஆட்கொண்டு (1197) *குலமுடி கவித்துத்தநி யானை விட்டாண்மை செய்து வடமன்னனரைத் தறைப்படுத்தி* (SII,ii,88.)

ஆண் வழி (பெ) ஆண் சந்ததி (1164) *அமுது செய்வித்து வருகிற ஆண்டார்களில் ஆண்வழி அற்றுப் பெண்வழியான கொத்துக்கு அமுது செய்விக்கும்படி* (SII,iii,210.)

ஆணடிகண்மார் (பெ) ஆண் துறவிகள் (956) *ஆணடிகண்மார்க்கு நியதநெல்லு முக்குறுணியாக* (SII,xiv,86.)

ஆணடிமை (பெ) அடிமையான ஆண் (1344) *இவர் தம்முடைய கல்லியாண அடிமையாயும் காசிட்டுக் கொண்டு இடுவித்த ஆணடிமை பெண்ணடிமையால் இருனூறு அடிமையும்* (UCR,xviii,p.16-19.)

ஆணடியார் (பெ) ஆண் பக்தர் (985) *ஒரு கூறு ஆணடியாருண்பதாக* (SII,xiii,218.)

ஆணத்தி (பெ) அரசன் கட்டளையை நிறை வேற்றும் அலுவலர் (550) நரபயனாணத்தியால் (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

ஆணி (பெ) கூரான உலோகத் துண்டு (1014) *செம்பின் ஆணிகளுஞ்சரடும் நீக்கி* (SII,ii,57.)

ஆணி (பெ) தங்கம் உரை காணும் ஆணி (1218) *ஒரு காணம் ஆகப் பொந் பதிந்நாற்கழஞ்சே ஒரு காணம் நகரப் பொந் ஆணியோடொத்த பொந்நுக்கு* (SII,v,266.)

ஆணி (பெ) ஊர் நிர்வாகி (875) *கழஞ்சே அரைக்காற் பொன்திருவொற்றியூராணி கீழே கொண்டு குடுப்போமானோம்* (SII,xii,99.)

ஆணிக்கல் (பெ) பொன் நிறுக்குங்கல் (985) *கச்சிப்பேட்டு ஆணிக்கல்லால் நிறை இருபதின் கழஞ்சு பொன்* (SII,i,85.)

ஆணிப்பொன் (பெ) நல்ல மாற்றுள்ள பொன் (985) *இருபத்தாறு முத்தாலாணிப் பொன் எண்பதினால்* (SII,xiii,86.)

ஆணியம் (பெ) நாள்படி (866) *படி இரட்டி ஆணியம் பெறுவதாகவும்* (TAS,i,p.1-14.)

ஆணெல் (பெ) நெல்லாக இறுக்கும் வரி (962) *தலையரையும் ஆணெல்லும் திங்கட்சோறும்* (SII,vi,324.)

ஆணை (பெ) ஆட்சி (785) *வடவரை யிருங்கய லாணை ஒருங்குடன்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

ஆணை (வி) அரச கட்டளை (988) *இவ்வனைவர் முறிவும் நம்மாணைக்குரியவாறு கோட்டையூர் ப்$_{3}$ரஹம ஸ்ரீ ராஜனும்* (EI,xxi,27.)

ஆணை ஆள் (பெ) (= ஆணத்தி) (921) *வேம்பற்றூர்க் கூற்றங் கோன் ஆணை ஆளாகவும்* (SII,iii,206a.)

ஆத்தி (பெ) மரவகை (1918) *கூடின விடத்து நின்ற ஆத்திமரமேயுற்று* (SII,iii,205.)

ஆத்மசௌ$_{0}$ச$_{0}$அம் (பெ) மனத்தூய்மை (919) *அத்த சௌ$_{0}$சமும் ஆத்ம சௌ$_{0}$சமும்* (ARASI,1904-05,p.131.)

ஆத்ரய (பெ) ஒரு கோத்திரம் (765) *ஆத்ரய கோத்ரத்து வாஸேணி சூத்ரத்து* (EI,xxxvi,20.)

ஆதலில் (வி) ஆகையினால் (905) *விச்$_{0}$வாஸ கர்ம்மங்கட்கான தன்மையானாதலில்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

ஆதன்மை (பெ) ஆகை (877) *ஸபை$_{4}$யோமுக்கே வேண்டுவன ஆதன்மைய்யில்* (SII,vi,290.)

ஆதாயம் (பெ) வருமானம் (1495) *ஊரை நோக்கி வரும் ஸகல ஆதாயத்திலும்* (TDI,ii,133.)

ஆதி (பெ) தெய்வம் (1000) *சிராமலை யாதிதன் பேரருள்* (SII,iv,167.)

ஆதி (பெ) தொன்மை (862) *ஆதிவேந்தர் அறஞ் செ வழக்கின்* (SII,xiv,45.)

ஆதி (பெ) முதல் தீர்த்தங்கரர் (811) *அந்தமில் பல்குணத்தாதி அருகந்தன்* (SII,xiv,41.)

ஆதிக் கேழல் (பெ) பன்றி அவதாரம் (1072) *திருமாலாதிக் கேழலாகி யாதுஞ்சலியா வகையினி தெடுத்து* (SII,iii,64.)

ஆதிகள் (பெ) முதலியவைகள் (850) *க$_{2}$ண்ட$_{3}$ ஸ்பு$_{2}$டித நவகந்மாதிகளுக்குமாக* (SII,iii,43.)

ஆதி காலம் (பெ) கிருத யுகம் (1176) *கோமானிவனென்று கவ்வை தீரக்கலிகாலத் தாதிகாலங் காட்டினனென* (SII,xvii,585.)

ஆதித்த பிடாரர் (பெ) சூரிய தேவன் (898) *ஆதித்த பிடாரர்க்கு இரு நாழி* (SII,iii,560.)

ஆதித்த வாரம் (பெ) ஞாயிற்றுக் கிழமை (1128) *சித்திரைத் திங்களத்தம் பெற்ற ஆதித்த வாரத்து* (SII,vii,773.)

ஆதி பூமி (பெ) தரைத் தளம் (1014) *தே$_{3}$வராலையத்துக்கு வடக்கு ஆதிபூமியிற் கபோதத்தின் கீழ்ப்புறனில்* (SII,ii,57&70.)

ஆதி பூமி (பெ) வீட்டின் முதற்தளம் (985) *கச்சிப்பேட்டு நம்வீட்டி னுள்ளால் பொன்மாளிகை ஆதி பூமியில் நாமிருக்க* (SII,iii,142.)

ஆதி யுகம் (பெ) கிருதயுகம் (1121) *வேதமும் மெய்ம்மையும் ஆதியுகம் போல் தலைத்தலை சிறப்ப* (SII,xvii,605.)

ஆதிர சாலை (பெ) மருத்துவ மனை (1000) *திருவாயம்பாடிக்கு நானாழி ஆதிர சாலைக்கு நானாழி* (TAS,ii,p.173-207.)

ஆதிரை (பெ) ஒரு நட்சத்திரம் (800) *தேவர்க்குத் திருவாதிரைக்கு* (IPS,8)

ஆதி வாணியன் (பெ) பழைய வியாபாரி (1010) *தஞ்சாவூர் இருக்க ஆதி வாணியந் பொற் காமந் புலியந் வச்ச* (SII,vii,808.)

ஆதி$_{3}$ (வி) முதல் (796) *ப்$_{3}$ரஹ்மநாதி$_{3}$ ஆக வாரா நின்ற* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

ஆதி$_{3}$புருஷன் (பெ) மூலநாயகன் (905) *ஸ்ரீபூ$_{4}$பதி ஆதி$_{3}$ புருஷன் அமரநாயகன் அழகமைநாபி$_{4}$ மண்டலத்துச் சோதி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

ஆதி$_{4}$ராஜர் (பெ) தொல்குல அரசர் (771) *அளவரிய ஆதி$_{4}$ராஜரை அகல நீக்கி* (EI,xvii,16.)

ஆதி$_{4}$வாஸி (பெ) தொன்மையான குடி (774) *கரவந்த புராதி$_{4}$வாஸி வைஜ்யந்* (SII,xiv,3; EI,xxxvi,15b.)

ஆதுல சாலை (பெ) மருத்துவச் சாலை (1068) *கிடைகளுக்குச் சாஸ்த்ரற்கும் ஆதுல சாலைக்கு வேண்டுங் கலமிடுங் குசவனுக்கு* (EI,xxi,38.)

ஆதுலர் (பெ) நோயாளிகள் (1068) *ஓத்துக் கேட்பார்க்கும் ஆதுலற்கும் ஒலிக்கும் மீரங் கொல்லிக்கு* (EI,xxi,38.)

ஆதேசம் (பெ) கட்டளை (1196) *ஆதி தண்டேச்$_{0}$வரன் ஆதேசம் நாயனார்* (SII,vii,1041.)

ஆதே$_3$ச$_0$ம் (பெ) கட்டளை (1117) *மூலப்$_4$ருத்தயநாகிய ச$_0$ண்டே$_3$ச்$_0$வரந் ஆதே$_3$ச$_0$ம்* (SII,iii,76.)

ஆந்ம செள$_0$ச$_0$ம் (பெ) மனத்தூய்மை (921) *அர்த்த$_2$செள$_0$ச$_0$மும் ஆந்ம செள$_0$ச$_0$மும்* (ARASI,1904-05,p.131.)

ஆந்மத்யாக$_3$ம் (பெ) தன்னையே அர்ப்பணித்தல் (991) *தேவருடை ஸ்ரீ கார்ய்யத்துக்காகத் தன்னை ஆந்மத்யாக$_3$ம் செய்த இவனுக்காக* (SII,xiii,131.)

ஆநா (வி) நீங்காத (1048) *பொன்முடி யாநாப் பருமதிட் பசுந்தலைப் பொருகளத் தரிந்து* (IPS,108.)

ஆநி (பெ) ஆனிமாதம் (884) *ஆநி முதலாக மூன்று திங்கள்* (SII,vi,325.)

ஆப்பால் (பெ) பசும்பால் (1066) *நன்று தேன் ஆப்பாலோடை தொடும்* (CHEN,xiv,p.365.)

ஆபரணங்கள் (பெ) நகை (970) *மாணிக்கம் 1 இத்தனை ஆபரணங்களும் இட்டு செய்த பொன்* (TDI,i,8.)

ஆமணக்கங்கொட்டை (பெ) ஆமணக்குச் செடியின் விதை (1300) *ஆமணக்கங்கொட்டை வண்டி ஒன்றுக்குக் காசு பத்தும்* (SII,viii,442.)

ஆமளவும் உண்டாகுமளவும் (894) *இவர்களுக்கு த்ருப்தியாமளவும்* (SII,iii,1.)

ஆமாறு இருக்கும் விதம் (919) *பன்னிரண்டு சேரியிலும் சேரியால் ஒரு பேராமாறு* (ARASI,1904-05,p.131.)

ஆமை (பெ) ஒரு நீர் வாழ் விலங்கு (550) *மனைப்படப்பும் உடும்போடி ஆமை தவழ்ந்ததெல்லாம்* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

ஆய் (இ) சார்பாக (637) *பொன் மாந்தானார்க்காய்ப் பட்டான்* (CHHS,1971/68.)

ஆய்த்து (வி) ஆயிற்று (800) *எறி விசும்பும் இரு நிலமாய்த் தென்ப* (EI,xiii,10.)

ஆய்ந்த (வி) கற்றறிந்த (1125) *அறத்தால் விளங்கிய ஆய்ந்த கேள்விப் புறத்தாய நாடு* (TAS,i,p.21f.)

ஆய்வான் (பெ) சோதிப்பவன் (800) *சிந்தியார் போலுமருவலராய்வான் மாறன் சீற* (EI,xiii,10.)

ஆய (வி) பெற்ற (771) *துளக்கமில்லா கடற்றானையாய களப்$_4$ரரால்* (EI,xvii,16.)

ஆயத்துக் கடவர் (பெ) வரி வசூலிக்கும் அரசு அலுவலர் (1269) *உப்பு அளப்பதாக ஆயத்துக் கடவர்ரோடுங் கூட நிச்சயித்து* (SII,v,627.)

ஆயதி (பெ) வருமானம் (916) *அறுகூறினால் புரவும் ஆயதியும் பொனும் பெறுமாறு* (EI,iv,32.)

ஆயம் (பெ) தோழியர் கூட்டம் (1000) *எய்துவராய முந் தாமும் சிராமலை* (SII,iv,167.)

ஆயம் (பெ) வரி (962) *ஆயம் ஏர்க்காடியும் தலையரையும்* (SII,vi,324.)

ஆயம் (பெ) வருவாய் (800) *தனமுதலாயமும் பூவையும்* (EI,xiii,10.)

ஆயமாடை (பெ) வரிப் பொன் (1232) *எங்களூர் ஆயமாடைக்கு* (SII,xvii,731.)

ஆயமுதல் (பெ) மொத்த வரித் தொகை (1300) *காத்திகை மாத வரை நாட்டில் வகுப்பில் கூட்டிக் கிடந்த ஆயமுதலும் மார்கழி மாத முதல் ஏற்றிக்கொள்ளும்* (SII,viii,245.)

ஆயர் (பெ) இடையர் (800) *கொண்டாயர் மலைய* (EI,xiii,10.)

ஆயன் (பெ) இடையன் (1038) *மாதேவர்க்கு ஆயன் கடவுழான் அரங்கன் வசம்* (SII,xiv,159.)

ஆயி (வி) ஆகி (691) *இருபத்தெயிந்து பங்காயி* (SII,i,151; EI,xvii,22.)

ஆயிடை (பெ) அவ்விடம் (1061) *அரைசரை விண்ணகத்தேற்றி ஆயிடை எதிர்ந்த கார்சிலை* (SII,v,647.)

ஆயிரத்திருநூறு (பெ) 1200 (எண்) (691) *ஆயிரத் திரு நூற்றுக் குழி* (SII,i,151; EI,xvii,22.)

ஆயிரம் (பெ) 1000 (எண்) (793) *கோயிலுக்கு ஆயிரம் காணம் தண்டப்படுவோம்* (SII,iii,42.)

ஆயிரவர் (பெ) ஆயிரம் பேர் (941) *ப$_4$க்தராயின பலசமை அஞ்நூற்றுவருமாக ஆயிரவர்க்கும்* (SII,viii,529.)

ஆயில் (வி) ஆனால் (993) *இப்பாவத்துக்கு அஞ்சானாயில்* (SII,iii,42.)

ஆயில மரம் (பெ) ஒரு வகை மரம் (1093) *இரட்டைக்கும் இன் நடுவில் ஆயிலமரமே உற்று* (SII,v,473.)

ஆயிலெயம் (பெ) ஒரு நட்சத்திரம் (939) *ஆயிலெயத்தினான்று சூற்றியக் கிரண வேலை* (SII,iii,106.)

ஆயிற்று (வி) ஆனது (765) *ப்$_3$ரஹ்மதே$_3$யம் ஆயிற்று* (EI,xxxvi,20.)

ஆயின (வி) ஆன: என்ற (772) *பஞ்சவன் ப்$_3$ரஹ்மாதி$_4$ராஜன் ஆயின சேந்தன் சாத்தனுக்கு* (SII,xiv,19.)

ஆயுத$_3$ங்கள் (பெ) படைக்கருவிகள் (900) *கோக் கருநந்தடக்கற்கு ஆயுத$_3$ங்கள் செய்வான்* (TAS,i,xiii,p.197-200.)

ஆயுதிக் காரியம் (பெ) கோயில் காரியம்(?) (1251) *கோயிலில் மேல்கோயிந்மையும் ஊராண்மையும் ஸ்தாநம் எப்பேறும் ஆயுதி$_4$க் காரியத்திநு நடந்து கொள்ளுமாறும்* (TAS,iv,p.86-89.)

ஆயுள் (பெ) வாழ்நாள் (800) *ஆயுள் சீர்ப்பரமேச்$_0$வர விண்ணகரத்தவர்க்கு* (SII,iv,131.)

ஆர் (வி) பொருந்திய (805) *தண்டார் மூப்பு* (EI,xi,15.)

ஆர்க்க (வி) ஒலிக்க (1000) *முன்னின்றடிக் கட்டிய கழலார்க்க நின்றம்பலத்தாடு* (SII,iv,167.)

ஆர்க்கின்ற (வி) ஒலிக்கின்ற (1000) *நறுங்கமலத் தலைவாய்த் தேனருந்தச் சுரும் பார்க்கின்ற தண்பரணியே* (SII,iv,167.)

ஆர்க்கும் (வி) ஆரவாரம் செய்யும் (1279) *வளஞிமிறார்க்கு மடவிளம்பாளை விரை கமழ்* (SII,viii,69.)

ஆர் கலி (பெ) வெள்ளம் (1036) *ஆர்கலி முடக்காற்றில் சளுக்கி கேட்டுடைதர* (SII,iv,223.)

ஆர் குட விளக்கு (பெ) ஒருவகை விளக்கு (1009) *ஆர்குட விளக்கு ஒன்று னிறை னூற்று எண்பத்தொன்பதின் பலம்* (SII,v,521.)

ஆர்த்த (வி) ஆரவாரம் செய்த (1176) *வாழ முடிசூடி ஆர்த்தவமரர் அபிஷேக* (SII,xvii,585.)

ஆர்த்து (வி) ஆரவாரம் செய்து (1026) *பெருநெதிப் பிறக்கமும் ஆர்த்தவனகநகர் போர்த்தொழில் வாசலில் விச்சாதிர தோரணமும்* (IPS,98.)

ஆர்ப்பு (பெ) ஆரவார ஒலி (771) *ஆர்ப்பறா அடற்றானை* (EI,xvii,16.)

ஆர்ய்ய தே$_3$ச$_0$ம் (பெ) வடநாடு (1031) ஆர்ய்ய தே$_3$ச$_0$த்தும் மத்$_4$ய *தே$_3$ச$_0$த்துத்தான் கெள$_3$ட$_3$தே$_3$ச$_0$த்துத்தான் உள்ளாராய்* (SII,ii,20)

ஆர்வம் (பெ) விருப்பம் (1200) *வடுகெறிந்த ஆர்வத்தாலின்ன மறங்கால் வேலண்ணல்* (IPS,676.)

ஆரம் (பெ) மாலை (921) *கொலைக்குன்றமுங் குருதி ஆரமுங் குணந்தும்* (SII,iii,206a.)

ஆரம்பிக்கையில் (வி) தொடங்கும் பொழுது (1249) *கோயில் செய்ய தேசாந்திரிகளில் திருப்புல்லாணி தா$_3$ஸர் ஆரம்பிக்கையில்* (TDI,i,88; SII,iv,290.)

ஆராகின்ற (வி) ஆராய்கின்ற (932) *ஸ்ரீ கார்ய ஆராகின்ற பவதாயனக்கனார்* (SII,v,588.)

ஆராச்சி (பெ) மேற்பார்வை (931) *அமுதங்காஞ்சன் ஆராச்சியில் ஆராஞ்சு தயிர் அமுதுக்கு* (SII,xvii,478.)

ஆராச்சி நாயகம் (பெ) (சோழ அரசில்) மேற்பார்வை செய்யும உயர் அலுவலர் (1013) *மும்முடிசோழ ப்$_3$ரஹ்ம மாராயன் ஆராச்சி நாயகத்து* (SII,v,652.)

ஆராஞ்ச (வி) நிர்வகித்த (923) *ஸ்ரீ காரியம் ஆராஞ்ச மாறபிரான்* (SII,xix,406.)

ஆராஞ்சி (வி) மேற்பார்த்து (935) *இதி ஆராஞ்சி எரிப்பிப்பார்* (SII,xvii,478.)

ஆராஞ்னு (வி) விசாரித்து (885) *தங்களைக் கொண்டே யாராஞ்னு கொள்ளக் கடவராகவும்* (TAS,ii,p.80-82.)

ஆராதனம் (பெ) பூசை; வழிபாடு (994) *நின்ற இரண்டு போது திருவாராதனம் திருவிளக்கு மூன்று ஸந்தியு* (SII,xiii,203.)

ஆராதிக்குமவன் (பெ) பூசிப்பவன் (1000) *ஆராதிக்கு மவன்னும் பத்து காணம்* (TAS,iii,p.186-88.)

ஆராதிச்சு (வி) பூசை செய்து (1100) *திரு விளக்குத் தூண்டியும் பரிவாரம் ஆராதிச்சும்* (SII,viii,235.)

ஆராதித்த (வி) வழிபட்ட (990) *மூவேந்தவேளான் ஆராதித்த புறம்பியமுடைய மஹாதேவர்க்கு* (TMPL,i,p.192-93.)

ஆராதிப்பிக்க (வி) பூசை செய்விக்க (869) *இப்படி ஆராதிப்பிக்கவும்* (SII,vii,523.)

ஆராதிப்போம் (வி) வழிபடுவோம் (1021) *முன் நின்று ஆராதிப்போம்* (SII,xiv,180.)

ஆராதி$_4$க்கும் (வி) பூசிக்கும் (888) *ஆராதி$_4$க்கும் சி$_0$வப்$_3$ராஹமணநுக்கு வைத்த பூ$_4$மி* (SII,iii,45.)

ஆராதி$_4$த்து (வி) பூசை செய்து (755) *ப்$_3$ராஹ்மணன் ஆராதி$_4$த்துண்பானாக* (SII,vi,356.)

ஆராதி$_4$ப்பார் (வி) பூசிப்பார் (944) *விஷ்ணுக்$_3$ருஹத்துப் பெருமானடிகளுக்கு ஆராதி$_4$ப்பார்க்கும்* (SII,iii,12.)

ஆராதி$_4$ப்பான் (பெ) பூசாரி (892) *ஆராதி$_4$ப் பானுக்கு ஜீவிதமும் ஆக* (EI,vii,26b; SII,i,53.)

ஆராந்து (வி) விசாரித்து (849) *இவகளைப் பிழை செய்யிலும் பள்ளியாரேய் ஆராந்து கொள்ளப் பெறுவர்* (TAS,ii,p.67-68.)

ஆராய்கின்ற (வி) மேற்பார்க்கின்ற (911) *ஸ்ரீகாரியம் ஆராய்கின்ற மூலபரடை ஸபை$_4$யார்* (TAS,iv,p.122.)

ஆராய்ச்சி (பெ) குறைநிறைகளைக் கண்டறிதல் (934) *வாஸுதே$_3$வனார் ஆராய்ச்சியில் திரைமூர் ஸபை$_4$யாரும்* (SII,v,721.)

ஆராய்ந்து (வி) கண்காணித்து (800) *இது செலவு ஆராய்ந்து* (TAS,iii,p.65-66.)

ஆராய்வதாக (வி) நடத்துவதாக (869) *அறுதிங்கள் வாரம் ஆராய்வதாக வைத்தேன்* (SII,vii,525.)

ஆராய்வார் (பெ) மேற்பார்ப்பவர் (957) *ஸ்ரீகார்ய்யம் ஆராய்வாரேய் எரிப்ப்பிப்ப தாவாராக வைய்த்தார்* (SII,xix,23.)

ஆராய (வி) மேற்பார்வை செய்ய (999) *ஸ்ரீ காரியமும் ஆராய உண்ணாதென்றும்* (TAS,ii,p.1-7.)

ஆராயப் பெறுவார் (வி) கவனிப்பார்; மேற் கொண்டு நடத்துவார் (997) *இப் பொற்சாலை நங்கை ஸ்ரீ காரியம் ஆராயப் பெறுவாராகவும்* (SII,vii,809.)

ஆராயவும் (வி) மேற்பார்க்கவும் (986) *இவ்விரண்டு சேரியும் இருந்தவர் ஸ்ரீ காரியமாராயவும்* (SII,iii,128.)

ஆராயாநின்று (வி) ஆராய்ந்து (956) *இத்தேவர்க்கு ஸ்ரீகார்ய்யமாராயாநின்று* (SII,xiv,84.)

ஆராயாவிருந்து (வி) சோதித்து (1020) *இக்கோயிற் கருமம் ஆராயாவிருந்து* (SII,v,449.)

ஆராயோமாயில் (வி) மேற்பார்வை செய்யாவிடில் (913) *இப்படி ஆராயோமாயில்* (SII,xii,95.)

ஆராலும் (பெ) யாராவது (817) *ஆராலும் மீளப்பணிப்பாருளராகில்* (SII,vi,344; EI,xxiv,7a.)

ஆராஅமுதுச் சிறப்புனாள் (பெ) ஒரு சிறப்புத் திருவிழா (1520) *திருவாழிபரப்பினான் மடத்தில் ஆரா அமுதுச் சிறப்புனாள் அமுது செய்தருளும்* (TDI,iii,140.)

ஆரிகப் படாரர் (பெ) வேதம் வல்ல பிராமணர்கள் (895) *ஸபை$_4$வாரிகரையும் ஆரிகப்படாரரையும்* (SII,xii,306.)

ஆரியக் கூத்து (பெ) ஒரு வகைக் கூத்து (960) *பெருமான்னடிகளுக்கு ஆரியக்கூத்தாட* (SII,iii,202; SII,v,718.)

ஆரிய நூல் (பெ) வடமொழி நூல் (966) *தண்டமிழோடாரிய நூல் வல்ல தமிழ் வேள்* (SII,xiv,87.)

ஆரியம் (பெ) சமஸ்கிருதம்; வடமொழி (905) *ஆரியம் விராய்த் தமிழ் தொடுத்த* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

ஆரியம் பாடுவார் (பெ) வடமொழி இசைக்கலைஞர் (1014) *ஆரியம் பாடுவார் மூவர்க்கு* (SII,ii,66.)

ஆரியர் தேசம் (பெ) வடநாடு (?) (1426) *ஆரியர் தேசத்து புரோஹிதத்$_4$நேச்$_0$வரந் ஸூதஸ்ரீதர பா$_3$த்$_4$யாயந்* (SII,v,755.)

ஆரியன் (பெ) தலைவன் (1100) *பொங்கொலி நீற் சிங்கை நகராரியனைச் சேரவனு ரேசர் தங்கள்* (SII,iv,1413.)

ஆரும் (பெ) யாரும் (796) *ஆரும் போகாராக* (SII,iv,135; MASI,lxiii,p.54-59.)

ஆரையான் (பெ) ஒரு படர் கொடி (962) *இஞ்நிலம் ஆறு கொள்ளிலும் ஆரையான் கொள்ளிலும்* (SII,xiii,151.)

ஆரோக்$_3$யசா$_0$லை (பெ) மருத்துவ நிலையம் (1493) *இவருடைய பூர்வாள் க$_3$ருட$_3$வாஹந ப$_4$ட்டர் நடத்தி வந்த ஆரோ(க்)க்$_3$ய சா$_0$லை வாணத்திலே கி$_2$லமாகையில்* (ei.xxiv,12a.)

ஆரோஹணம் (பெ) ஏறுகை (815) *ஸ்வர்க்$_3$காரோஹணஞ் செய்தபின்னை* (SII,xiv,2; EI,viii,33b.)

ஆல் (பெ) ஆலமரம் (771) *களந்தைக் குளத்திலாலுக்கு வடக்கு* (EI,xviii,16.)

ஆல் (இ) மூன்றாம் வேற்றுமை உருபு (550) *நரப$_4$யனாணத்தியால்* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

ஆல் (இ) அசைச் சொல் (800) *தோய்த்தனவா லெங்கும் வரு புனல்* (EI,xiii,10.)

ஆலகுநிலை (பெ) (= அலகு நிலை) (996) *அமுது செயக்குடுத்த செப்புத் தளிகை ஆலகு நிலைப்படி 47 பலமும்* (SII,vii,411.)

ஆலஞ்சேர் மிடற்றார் (பெ) சிவபெருமான் (1070) *ஆலஞ்சேர் மிடற்றார்க்கு வெள்ளை நலூர்* (IPS,115.)

ஆலத்தி (பெ) விக்கிரகத்துக்கு முன் தீபம் தீர்த்தம் இவற்றைக் காட்டுவது (1208) *திருவாலத்தி எடுக்கவும்* (IPS,162.)

ஆலம் (பெ) ஆலமரம் (922) *இடையாற்றுக் கொல்லையின் கீழையாலமும்* (SII,ii,76.)

ஆலயம் (பெ) கோயில் (905) *உத$_3$தி$_4$ ஆலயமாகத் தேங்கமழ் மலர்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

ஆல வ்ருக்ஷம் (பெ) ஆலமரம் (1014) *கனமாகச் செய்த ஆலவ்ருக்ஷம் ஒன்று* (SII,ii,50.)

ஆலஸ்யமாய் (பெ) கவனக் குறைவாய் (992) *நொந்தா விளக்கும் ஆலஸ்யமாயிருக்கக் கண்டு* (SII,iii,49.)

ஆலிக்கும் (வி) முழங்கும் (1300) *பொன்னி நாட்டாலிக்குந் தானை அபையன் குலமகளிர்* (IPS,651.)

ஆலித்து (வி) செழித்து (1012) *நல்லாலித் தெழும் புல்லாலிப் புறமஞ்சோடுங் கூட்டி* (SII,vii,863.)

ஆலிப்ப (வி) ஒலிப்ப (1363) *மண்டலிகராலிப்ப வயப்புலி வரிவளம்* (EI,xxviii,28(2).)

ஆலிலை வாரம் (பெ) நில வருவாயின் பங்கீடுகளில் ஒன்று (866) *ஆலிலைவாரம் ஊட்டுவதாக* (TAS,i,p.1-14.)

ஆலும் (வி) ஆரவாரிக்கும்; ஒலிக்கும் (921) *ஆலும் போர்ப்பரி ஒன்றாலகன் கொங்கிலமர் கடந்தும்* (SII,iii,206a.)

ஆலேபன த்$_3$ரவ்யம் (பெ) மேற் பூச்சுக்கான எண்ணெய் (1045) *பசு மஞ்சற் காப்புக்கும் ஆலேபன த்$_3$ரவ்யத்துக்கும்* (SII,iv,867.)

ஆலை (பெ) கரும்பாட்டும் எந்திரம் (1012) *வெண் பூங்கரும்பிடை துணித்தரத்தாட் டொலி யாலையயலது* (SII,vii,863.)

ஆலைக் கரும்பு (பெ) ஆலையில் ஆட்டுதற்குரிய கரும்பு (1252) *நெற்ப்பயிரும் ஆலைக் கரும்பு உள்ளுட்ட பயிர்ச் செய்வித்து* (SII,iv,511.)

ஆலையம் (பெ) கோயில் (700) *சத்துருமல்லேச்$_{0}$வராலையமென்ற* (EI,xii,27; SII,xii,10-11.)

ஆலை இறை (பெ) செக்கு/கரும்பு ஆலைகள் மீதான வரி (1299) *கடை இறை உள்மாறாட்ட..இறையும் ஆலை இறை ஸர்வமாநியமாக விட்ட* (EC,ix,Ah.83.)

ஆவணக் களம் (பெ) ஊரறிய விற்பனை செய்யுமிடம் (914) *எப்பேர்ப்பட்டதும் ஆவணக் களத்தேய்ச் செலவறக் கொண்டு* (SII,xix,191.)

ஆவணக் களி (பெ) (= ஆவணக்களம்) (936) *எட்டு மஞ்சாடிப் பொன்னும் ஆவணக்களியேய் அறக் கொண்டு* (SII,xvii,636.)

ஆவணக்காறன் (பெ) கடை வைத்து வணிகம் செய்பவன் (1050) *ஆவணக்காறனும் உலகனும் உள்பசும்பைக்கா[றனூ]சி தொழில் வாரியநும்* (AVNM,2,p.6-8)

ஆவணக்கு (பெ) ஆமணக்குச் செடி (1300) *இறுங்கு ஆவணக்குப் பருத்தி.. புன்பயிரும்* (SII,vii,22.)

ஆவணம் (பெ) விலை (966) *செம்பியன் முனைப் பாடி மூவேந்த வேளான் ஆவணத்து இருபது செறுவு கொண்டு* (SII,vii,811.)

ஆவண ஓலை (பெ) ஓலையில் எழுதிய ஆவணம் (771) *விலையாவண ஓலை எழுதி விற்று* (SII,xiv,19.)

ஆவணி (பெ) ஆவணி மாதம் (861) *ஆவணி யோணமடுவான் கொடுத்த பூமி* (TAS,ii,p.85-86.)

ஆவணித் திங்கள் (பெ) ஆவணி மாதம் (892) *ஆவணித் திங்கள் சோதிஞான்று* (SII,vi,371.)

ஆவணி யோணம் (பெ) ஆவணி மாதத்து ஓண நட்சத்திரம் பொருந்திய நாள்; ஒரு விழா (861) *சேந்தஞ் சங்கரன் ஆவணியோணம் அடுவான் கொடுத்த* (TAS,ii,p.85-86.)

ஆவணி அவிட்டம் (பெ) ஆவணி மாதத்தில் அவிட்ட நட்சத்திரம் (891) *ஆவணி அவிட்டத்தினான்று ஆடி அருளுவதற்கு* (SII,v,686.)

ஆவத்தம்ப (பெ) ப்$_{3}$ராஹ்மணர் சூத்திரங்களு ளொன்று (765) *ஆவத்தம்ப சூத்திரத்து உழப்பூர் வத்தவன்* (EI,xxxvi,20.)

ஆவதாக (வி) சேர வேண்டியதாக (894) *முந்தாஞ் செய்த இஷ்டாபூர்த்தம் ப்$_{3}$ரஹ்மாதி$_{4}$ ராஜநுக்கே ஆவதாகவும்* (SII,iii,1.)

ஆவி (பெ) உயிர் (1000) *தேவியராவியுங் கொண்டதன்றோவவன் செஞ்சரமே* (SII,iv,167.)

ஆவிது (வி) ஆவது (1044) *இதிவேய் விலை ஆவணச் சலாவண பொரு...லை ஆவிதாகவும்* (SII,v,307.)

ஆவிரை (பெ) ஆவிரஞ்செடி (1304) *புளி ஆத்தி ஆவிரை கொழுஞ்சி மற்றும் மேனோக்கிய மரமும்* (SII,viii,172.)

ஆவிஷ்ட (பெ) ஒரு கோத்திரம் (765) *ஆவிஷ்ட கோத்ரத்தாவத்தம்ப$_{3}$ சூத்திரத்து சிறைக்கூர் வத்தவன்* (EI,xxxvi,20.)

ஆவேசித்து (வி) புகுத்தி ('1232) *கொக்குவாய் 1 இவையிற்றில் ஆவேசித்து கட்டின கோமளம் 28* (SII,viii,103.)

ஆழ் (வி) ஆழமான (1004) *ஆழ் கடல் கந்தாங் கருதி* (EC,x,Mb.123.)

ஆழ்வார் (பெ) சிவன் (916) *திருவழிதி ஈச்$_{0}$வரத்து ஆழ்வார்க்கு* (SII,xiv,60.)

ஆழ்வார் (பெ) புத்தர் (1100) *அக்கசாலைப் பெரும்பள்ளி ஆழ்வார் கோயிலுக்கு திருவுத்ஸவம் எழுந்தருள ஆழ்வார் இவ்வாழ்வாரை* (AVNM,3,p.47)

ஆழ்வி (பெ) அரிசி (1300) *ஆளுடையார் திருவாந்பட்டி யாண்டார்க்கு நம் ஆழ்விக்கு நன்றாக நாம் கண்ட திருநாளாவது* (SII,v,228.)

ஆழ்விப்பதற்கு (வி) நடத்துவதற்கு (1246) *நிலத்துக்கு வந்த தடையும் யிடையூறுந் தீத்து ஆழ்விப்பதற் கெங்கள் வாழ்வேயாட்சி யிறைப் புணையாவுதாகவும்* (SII,viii,708.)

ஆழாக்கு (பெ) ஒரு முகத்தல் அளவு (770) *ஆழாக்கு நெய் அட்டுவதாக* (SII,xiv,18.)

ஆழி (பெ) கடல் (771) *இகலாழிஉள் வென்று* (EI,xvii,16.)

ஆழித் தேர் (பெ) தேர்ப்படை (1198) *மாலியாநை யாழித் தேர் வேந்தர் கதிர் முடி யொப்பமிடுங்கல்* (SII,viii,123.)

ஆழிபோகி (வி) கட்டளையனுப்பி (765) *இவர்களுக்கறைந்தாழிபோகிக் கன்னாட்டி கூகைபுகுத்தி* (EI,xxxvi,20.)

ஆழிமுங்கீர் (பெ) கடல் நீர் (785) *ஆழி முந்நீரகழாக* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

ஆள் (பெ) தூது (1205) *இவர்கள் ஆநுதாரத் துள்ளார் பக்கல் ஆளாதல் ஓலையாதல் போகக் காட்டிச் சில காரியம் பாத்தல்* (SII,viii,106.)

ஆள் (பெ) பேர் (1228) *இவ்வடை வெட்டிலும் அடைவுகளில் இந்றொள்ள ஆளெண்ணி ஆளோஹரி அச்சும் வச்சு ஆளோஹரி பகுத்துக் கொள்வாறாகவும்* (TAS,viii,p.23-24.)

ஆள் (பெ) ஊழியர் (900) *ஐஞ்சாள் கொண்டு திருப்பலி கொட்டுவதற்கு* (SII,xii,114.)

ஆள் (வி) ஆட்சி செய்கின்ற (594) *கருங்காலிபாடி ஆள் கொற்றவாசிற் கருசாத்தனாரு மகன்* (CHHS,1971/113.)

ஆள்க்காசு (பெ) ஆள்பேரில் வாங்கும் ஒரு வரி (845) *அடிமைக்கு ஆள்க்காசு கொள்ளப் பெறாராகவும்* (TAS,ii,p.80-82.)

ஆள்கின்ற (வி) ஆட்சி செய்கின்ற (583) *தொப்புரவருப் பாடி ஆள்கின்ற* (CHHS,1971/30.)

ஆள் கூலி (பெ) வேலை ஆளுக்கான ஊதியம் (1000) *இவோடத்துக்கு ஆள் கூலி உள்ளிட்டு நிசதி ஒரு குழியாக* (SII,vi,353.)

ஆள்ச்சி (பெ) ஆட்சி (950) *ஸ்ரீ பிரிதியங்கரையர் அதியை இராமன் ஆள்ச்சியில்* (CHHS,1971/115.)

ஆள் வகை (பெ) பேர் ஒன்றுக்கு (1000) *முப்பத்து மூன்றாள்க்கும் ஆள்வகை முந்நாழிச் செய்தரி* (TAS,ii,p.173-207.)

ஆள் வரி (பெ) வீரர் மீதான ஒரு வரி (1068) *கம்மாள மகழ்மையும் தறியிறையும் ஆள் வரியும் திரு வெழுச்சிக்குடிமைகளும்* (SII,vii,467.)

ஆள்வார் (பெ) சிவன் (917) *திருவழுதி ஈஸ்வரத்து ஆள்வார்க்கு* (SII,xiv,62.)

ஆள்வார் (பெ) பள்ளியை நிர்வகிக்கும் சமணத்துறவி (911) *இப்பள்ளியாள்வாரே ஊட்டுவிக்க வைத்தோம்* (SII,xix,89; SII,iii,97.)

ஆள்வினை (பெ) முயற்சி (833) *இத்திறத்தால் ஆள்வினைகள்* (SII,xiv,44.)

ஆள்ளும் (வி) ஆட்சி புரியும் (550) *வுகயுருநாடாள் ளும் கங்கரைசரு* (TAMIZ,1970,p.92-93.)

ஆளமஞ்சி (பெ) நீர்நிலைகள் பராமரிப்புக்கான கட்டாய ஊழியம் (1374) *இவ்வேரி நீர்ப்ராப்தி ஆற்றுக்கால் ப்ராப்தி வாய்க்கால் ப்ராப்தி பெறக்கடவதாகவும் இவையிற்றுக்கு ஆளமஞ்சி ஏரிக்குழி வெட்ட* (SII,i,72)

ஆளமஞ்ஜி (பெ) (= ஆளமஞ்சி) (1432) *அங்க$_{3}$ ஸாலெவரி ஆளமஞ்ஜி ஊளிகம்* (EI,xviii,17.)

ஆளாநிற்க (வி) ஆள (800) *தாயநூர் நாடும் ஆளாநிற்க* (TSAD.9.)

ஆளாநின்ற (வி) ஆட்சி செய்த (849) *அடிப்படுத்தாளா நின்ற* (TAS,ii,p.67-68.)

ஆளாவிருக்க (வி) ஆள்கிறபோது (953) *கல்லெடுப்பூர் மஜ்ஜாதி ஆளாவிருக்க* (EI,vii,26d.)

ஆளி (பெ) சிங்கம் (800) *தஞ்சைக் கோன் கோளாளி மொய்ம்பிற் கொடும்பாளூர்* (EI,xiii,10.)

ஆளி (பெ) ஆள்பவன் (1000) *சிராமலையாளியைச் சேர்ந்தவரேய்* (SII,iv,167.)

ஆளுங்கணத்தார் (பெ) பிராமண ஊர்களில் ஒரு நிர்வாகக்குழு (845) *திருவிப்பிரம் பேடாளுங்கணத்தார்* (EI,xi,22b.)

ஆளும் (வி) ஆட்சி செய்யும் (693) *வேளூர் ஆளும் பனையமாரியார்* (EI,xxxii,12; CHHS,1971/54.)

ஆளுவான் (பெ) ஊர் நிர்வாகி (746) *ஊரும் ஆளுவானும் அறமறவற்க* (NI,g.54; TASSI,1959-60,p.18-19.)

ஆளோலை (பெ) அடிமைப்பத்திரம் (1200) *பெருமாள் மகதேசன் பேரெழுதி தத்தம் திருமார்பில் ஆளோலை செய்து* (CHEN,iii,p.423-432.)

ஆளோஹரி (பெ) ஆள் விழுக்காடு (1228) *இந்றொள்ள ஆளெண்ணி ஆளோஹரி அச்சு வச்சு ஆளோஹரி பகுத்துக் கொள்வாறாகவும்* (TAS,viii,p.23-24.)

ஆற்றங்கரைப் படுகை (பெ) ஆற்றங் கரையை அடுத்துள்ள நிலம் (1095) *வடகீழ் மூலையில் ஆற்றங்கரைப் படுகையிலே இந்நாயனார்க்கு நீர் வார்த்துக் கொடுத்தோம்* (CHEN,xiv,p.208-09.)

ஆற்றல் (பெ) சக்தி (921) *பருதி ஆற்றலொடு விளங்கின பரசக்கிர கோலாலன்* (SII,iii,206a.)

ஆற்றலன் (பெ) ஆற்றல் உள்ளவன் (1120) *வெஞ்சிலையின் ஆற்றலனை மாற்றிய கோன்* (SII,iv,225.)

ஆற்றாது (வி) தாங்க மாட்டாமல் (1237) *எங்களைப் பல வேதினை செய்தவிடத்து வேத்னைக் காற்றாது எங்களுக்கு மற்றொரு செய்தி இல்லாமையால்* (IPS,309.)

ஆற்றாதோர் (பெ) வலியற்றவர் (1068) *கெட்டுடைந்தாற்றாதோ ரோசைத்த ரையினோட* (EI,xxi,38.)

ஆற்றால் (பெ) வகையில் (921) *எல்லாஜ் ஜனமுங்காணும் ஆற்றால் எடுத்துக் கொண்டு* (ARASI,1904-05,p.131.)

ஆற்றிடு படுகை (பெ) ஆற்றோரத்தில் உள்ள சமதள நிலம் (954) *ஆறும் ஆற்றிடுபடுகையும்* (SII,xiii,92.)

ஆற்றி நீர் (பெ) ஆற்றிலிருந்து கொணர்ந்த தண்ணீர் (1008). *கலமும் விறகும் ஆற்றி நீரும்* (SII,vii,142.)

ஆற்றுக் கால் (பெ) ஆற்றிலிருந்து நீர் வரும் கால்வாய் (753) *ஆற்றுக் காலும் வெள்ளக்காலும்* (SII,ii,73.)

ஆற்றுக் குலை (பெ) ஆற்றின் கரை (987) *இட்டேரிக்கு மேக்கும் ஆற்றுக்குலைக்கு வடக்கும்* (SII,xiii,3.)

ஆற்றுக் குலைத் தலைவாய் (பெ) ஆற்றுக் கரையில் உள்ள மதகு (983) *கிழக்கோடிய வாய்க்காலுக்கும் ஆற்றுக் குலைத் தலைவாயின் நிலத்துக்கும்* (SII,xix,321.)

ஆற்றுப் படுகை (பெ) (= ஆறிடு படுகை) (1018) *செட்ட மங்கலமும் நத்தமும் ஆற்றுப்படுகை புன்செய் உட்பட* (SII,iii,205.)

ஆற்றேத்தம் (பெ) நீரிறைப்பதற்காக ஆற்றில் வைத்த ஏற்றமரம் (1125) *நீர் பாயப் பெறுவதாகவும் ஆற்றேத்த மிட்டிறைக்க* (SII,vii,96.)

ஆறங்கம் (பெ) வேதத்தின் ஆறு உறுப்புகள் (950) *ஐவேள்வி யாறங்கத்தந்தணாளன்* (TASSI,1962-65,p.32-52; PNDCP,p.187-96.)

ஆறடைப்புடையர் காணிக்கை (பெ) ஒரு வரி (1387) *குற்றத்தெண்டம் ஆளமஞ்சி ஆறடைப்புடையர் காணிக்கை மற்றுமு் எப்பேர்ப்பட்ட வரிகளும்* (EI,viii,31.)

ஆறாட்ட (வி) ஆற்றில் நீராட்ட (1100) *அமிர்து சைய்யிச்சு ஆறாட்டக் கடவர்* (TAS,v,p.34-37.)

ஆறாட்டு காணம் (பெ) ஆற்று நீராடு விழாவுக் கான செலவு தொகை (1000) *ஆறாட்டு காணம் ஸமூஹத்தில் பந்நிரண்டு ஊழ்த்த பயன் கூறிட்டு கொள்ளும் முதலும்* (EI,xxxiii,33.)

ஆறாட்டு மண்டபம் (பெ) ஆற்றில் சுவாமி நீராடும் மண்டபம் (1462) *மேலை அஞ்சாந்திருவீதியில் அரிகேஸரிப் பிள்ளையார் திருக்கோயிலும் ஆறாட்டு மண்டபமும் வெச்சமுது* (TAS,i,p.99-102.)

ஆறாடி (வி) ஆற்றில் தீர்த்தமாடி (1003) *சதையத்தினாள் ஆறாடி ஞமனஞ்*

செய்வ்விப்பதாகவும் (TAS,i,p.291-92.)

ஆறாடு நாள் (பெ) சுவாமி ஆற்றில் நீராடும் நாள் விழா (1000) *அட்டில் பள்ளியார் பணிக்குரியார் ஆறாடு நாள் ரோத்தர் கலநெல் பெறுவது* (EI,xxxiii,33.)

ஆறாடுவது (வி) ஆற்றில் நீராடல் (866) *எழுநாடிருவிழாச்செய்து வியாகம் ஆறாடுவதாகவும்* (TAS,i,p.1-14.)

ஆறாயிரத்து நானூறு (பெ) 6400 (எண்) (768) *நெல் பொற்காலால் ஆறாயிரத்து நானூற்று காடி* (SII,xii,34.)

ஆறிடுபடுகை (பெ) ஆற்றோரச் சமநிலம் (960) *ஆறு மாறிடுபடுகையும் குளமும்* (EI,xv,5.)

ஆறிலொன்றும் (பெ) விளைவில் ஆறு கூறுகளில் ஒன்று (1048) *அரைசரிடு திறைகளும் ஆறிலொன்றவனியில் கூறு கொள் பொன்களும்* (SII,iv,329.)

ஆறு (பெ) நல்ல வழி (1012) *மேலாறுணர்ந்த நாலாறெண்பயில்* (SII,vii,863.)

ஆறு (பெ) நீரோடும் ஆறு (550) *இன்னும் ஆற்றெல்லை* (TASSI,1958-59,p.41-43; PLCP,p.26-32.)

ஆறு (பெ) விதம் (614) *நாய் இரு கள்ளனைக் கடித்துக் காத்திருந்தவாறு* (CHHS,1971/59.)

ஆறு (பெ) 6 (எண்) (550) *ஸிம்ஹவர்ம்மற்கு யாண்டாறாவது* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

ஆறுபத்து அந்து (பெ) 65 (எண்) (796) *செல்லா நின்றது ஆறுபத்து அந்தாவது* (MASI,xxvi,p.10-11.)

ஆறு ஸமயம் (பெ) ஆறு வகையான சமய்ங்கள் (941) *மஹாவ்ரதிகளுள்ளிட்ட ஆறுஸயமத்துத் தபஸ்பிகளும்* (SII,viii,529.)

ஆன்தொறு (பெ) பசுமந்தை (721) *ஆன்தொறுக்கொண்ட நான்று* (CHHS,1971/37.)

ஆன (வி) ஆயின: என்ற (785) *வரகுணவதி அரையன் ஆன நக்கஞ் செட்டி* (SII,xiv,25.)

ஆனவாய் தண்டம் (பெ) ஒரு வகை அபராதம் (895) *ஆனவாய் தண்டம் உள்ளிட்டு மற்றும் எப்பேறப்பட்ட மன்று பாடும்* (SII,iii,93.)

ஆனார் (பெ) ஆயினவர் (921) *ப்ராயச்சித்தஞ் செய்து சு$_{0}$த்$_{3}$த$_{4}$ர் ஆனாரையும்* (ARASI,1904-05,p.131.)

ஆனித்திங்கள் (பெ) ஆனி மாதம் (985) *இய்யாட்டை ஆனித் திங்கள் முதலாக* (SII,xiii,59.)

ஆனியம் (பெ) (= ஆணியம்): நாட்படி (934) *நியதிப்படி ஆனியங் கொடுக்கும் பரிசு* (TAS,viii,p.43-45; EI,xxviii,37.)

ஆனிரை (பெ) பசுக் கூட்டம் (1000) *ஆனிரை அழிஞ்ச நர்ன்று பட்டான்* (AVNM,7,p.31)

ஆனிலை (பெ) பசுக்கொட்டில் (1296) *கன்றும் ஆனிலை யுள்ளனவும்* (SII,viii,314.)

ஆனை (பெ) யானை (750) *கோயிக்கரணத் துக்குக் கோயில் ஆனைக்கும்* (EI,v,8.)

ஆனைக் கடுவார் (பெ) யானைக்குத் தீவன முதலியன இட்டுப் பராமரிப்பவர் (1014) *தஞ்சாவூர்ப் புறம்படி ஆனை கடுவார் தெருவில் இருக்கும்* (SII,ii,63&94.)

ஆனைச் சாலை (பெ) ஒரு வரி (1265) *கீற்றுவரி வாசல்வினியோகம் சிறைஅச்சு இலாஞ்சினை பேறு ஆனைச்சாலை குதிரைப்பந்தி ஆண்டெழுத்துதேவை* (SII,xvii,127.)

ஆனை நடையந் (பெ) யானைப் பாகன் (948) *தஞ்சாவூர் ஆனை நடையந் பூதஞ் சிலையந் மகன்* (SII,viii,735.)

ஆனைப் பாகர் (பெ) யானையை நடத்துவோர் (1014) *மும்மடிசோழத் தெரிந்த ஆனைப் பாகரில் சூற்றிநாதனுக்கு* (SII,ii,66.)

ஆனையாடின (வி) யானையோடு சண்டை செய்த (900) *ஆனையாடின கொந்தளத்து இவூரழிந்த நாட்பட்டான்* (SII,xii,112.)

ஆனையாள் (பெ) யானை வீரன் (938) *இராஜாதித்த தே$_{3}$வர் ஆனையாள் அழிசிகுலன்* (SII,vii,959.)

ஆனை அச்சு (பெ) ஒரு நாணயம் (1234) *நாங்கள் கைக் கொண்ட அன்றாடு பழமுதல் ஆனை அச்சு 10 யிவ்வச்சு* (SII,v,447.)

ஆஸநம் (பெ) இருக்கை (815) *ஹாரம் பூண்டும் அர்த்$_3$தா$_4$ஸநம் அவனோடேறிஉஞ்* (SII,iii,206b.)

ஆஸபா$_3$ல விருத்தர் எல்லா இளையரும் முதியோரும் (985) *பெரியமண்டகத்திலே மஹாஸபை$_4$யார் ஆஸபா$_3$ல விருத்தரமைய எப்பேர்ப்பட்டதும் நிரம்ப கூடி இருன்து* (SII,vi,345.)

ஆஸம்ஸ்தி$_2$தி நிலை (957) *ஆஸம்ஸ்தி$_2$தியாக உத்தமாக்$_3$ரத்து ஒரு கலம்* (SII,xix,22.)

ஆஹார தா$_3$நம் (பெ) உணவு அளித்தல் (771) *வயிராக்$_3$யர்க்கு ஆஹாரதா$_3$நமாக* (SII,v,405.)

ஆஹாரம் (பெ) உணவு (883) *உத$_3$யாஸ்தமம் ஆஹாரமிட்டு* (SII,viii,633.)

ஆஹாரார்த்த$_2$ம் உணவின் பொருட்டு (1070) *வந்துண்ணு மஹாநங்களுக்கு ஆஹாரார்த்$_2$தமாகவும்* (SII,viii,754.)

இ

இக (வி) விலக (1000) *கொன்றைத் தாரிகத் தாழ் சடைச் சங்கரனே* (SII,iv,167.)

இகல் (பெ) பகை (771) *எத்திறத்தும் இகலழிக்கு மத்தயானை* (EI,xvii,16.)

இகல் (பெ) வலிய (771) *வாளமருளுடன் வவ்விய ஏனப் பொறி இகலமருளிடி உறுமென* (EI,xvii,16.)

இகலாழி (பெ) பகைக்கடல்; போர்க்களம் (771) *பகனாழிகை இறவாமை இகலாழிஉள் வென்று கொண்டும்* (EI,xvii,16.)

இகுத்துவிப்போம் (வி) ஆழப்படுத்தச் செய்வோம் (884) *ஏரிக்கட்டி இகுத்துவிப்போமானோம்* (SII,iii,5.)

இங்கட்கு (பெ) எங்களுக்கு (833) *சிந்தையினாலிய விங்கட்கிது நன்றென* (SII,xiv,44.)

இங்கிட்டு (பெ) இவ்விடத்து (1255) *கணக்கரும் கண்டு விடுதந்ததாவது இங்கிட்டுத் திருப்பூ மண்டபத்துக்கு* (SII,xii,174.)

இசக்க (வி) செலுத்த (950) *இப்படி இசக்கக் கடவோமாய் ஒட்டிக் குடுத்தோம்* (SII,viii,652.)

இசக்கி (வி) செலுத்தி (950) *ஓடம் ஒன்றுக்கு ஓடம் இசக்கி* (SII,viii,652.)

இசங்க (வி) செல்ல (1255) *இறைக்கும் படியே இறைக்கவும் வழி இசங்கும் படிகளிலே இசங்கவும் கடவர்களாகவும்* (SII,xii,179.)

இசங்கும் (வி) செல்லும் (953) *எங்களூர் குளத்தில் இசங்கும் ஓடத்துக்காக* (SII,viii,651.)

இசங்குவது (வி) செல்லுவது (924) *எப்பேர்ப் பட்ட சாதியும் மிசங்கு வதரிதாயிட்டு* (SII,vi,292.)

இசை (பெ) புகழ் (1120) *இட்டான் எழில் தில்லை எம்மாற்கிசை விளங்க* (SII,iv,225.)

இசை (பெ) வரி ஒப்பந்தம் (1238) *சேர பாண்டிய தேவர் சன்னதியிலே நாடுகளுக்கு இசை அறுதி பண்ணி* (IPS,327.)

இசை கெழு புகழ் பொருந்திய (1050) *செங்கோலோச்சி இசைகெழு தென்னவன் மானாபரணன்* (SII,viii,82.)

இசைஞ்ச (வி) உடன்பட்ட (913) *இந்நிலத்துக்கு எமில் யிசைஞ்ச...பொருள்* (SII,xix,170.)

இசைத்த (வி) சொல்லப்பட்ட (550) *இவ் விசைத்த பெருநான்கெல்லை* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

இசைத்தோம் (வி) ஒப்பினோம் (954) *இருவோம் இப்படி இசைத்தோம்* (SII,xiii,103.)

இசைந்த (வி) ஒத்துக்கொண்ட (772) *எம்மி லிசைந்த விலைப்பொருள்* (SII,xiv,19.)

இசைந்தமை (வி) ஒப்புக்கொண்டமை (985)

தேவதானங்களை அனுபவித்து வருகின்ற மைய் இசைந்தமையில் (SII,iii,142.)

இசைந்து (வி) உடன்பட்டு (925) *எல்லோரும் ஈந்தாரிசைந்து* (SII,viii,696.)

இசைப்பாணர் (பெ) இசை வல்ல பாணர் சாதியினர் (1171) *இயற்புலவரேய் பொருள் வைப்பார் இசைப்பாணரேய் கூடஞ் செய்வார்* (SII,xvii,592.)

இசைப்பித்தார் (பெ) அமைப்பித்தவர் (1300) *கோயில் கற்பக்கிரகத்து தளம் இசைப்பித்தார்* (IPS,501.)

இசையிங் செல்வி (பெ) புகழ் மகள் (1135) *இசையிந் செல்வி எண்டிசை வளற்ப* (SII,iv,824.)

இசைவு (பெ) சம்மதம் (1000) *தங்களிசைவினால் ஆண்டு வரை இடுவதாக* (SII,xvii,492.)

இசைவுத் தீட்டு (பெ) ஒப்பந்த ஆவணம் (1199) *இப்பிரமாண இசைவுத்தீட்டு எழுதிநேந்* (SII,vii,797.)

இஞ்சி (பெ) பூண்டு வகை (1254) *மஞ்சளிஞ்சி வெற்றிலை கரும்பு கமுகு தெங்கு வைக்கும் நிலத்துக்கு* (IPS,345.)

இட்ட (பெ) விதித்த (961) *தாம் வேண்டு கோவால்த் தண்டமிட்டால் இட்ட தண்டமும்* (SII,xiv,91.)

இட்ட (வி) கொடுத்த (875) *இப்பள்ளிக்கிட்ட பெரு மணி ஒன்று* (TAMIZ,1970,p.125.)

இட்ட (வி) பதிந்த (997) *தேவதானமாக புகுந்த கேழ்வி வரியிலிட்ட படி* (EC,x,Kl.106c.)

இட்ட காமியம் (பெ) விருப்பம் (1129) *தமுடைய இட்ட காமியம் முடிகைக்கு* (SII,vii,496.)

இட்டது (வி) கொடுத்தது (932) *இப்பொன் தே$_3$வக்கு பட்டங்கொட்டி இட்டது* (SII,v,588.)

இட்டலி (பெ) இட்டலி (இட்லி) உணவு (1504) *கோ$_3$திபடி 1 யிட்டலிபடி 1 சுகியன் படி 1* (TAS,i.ii,140.)

இட்டன (பெ) வைத்துப் பயிர் செய்யப் பட்டன (793) *பலயமரமும் இட்டன கால் கோட்டிறாமயியும்* (SII,ii,73.)

இட்டாக்குவன (பெ) பயிர் உண்டு பண்ணுவன (965) *இத்தெங்கும் இட்டாக்குவனவும்* (SII,xiii,200.)

இட்டார் (பெ) பயிர் செய்தார் (1011) *வாழை இட்டாரும்* (SII,vii,412.)

இட்டார் (வி) அணிவித்தார் (1001) *முத்து இருபத்தெட்டும் இப் பட்டம் இட்டார் பராந்தக தேவி அம்மன்* (TDI,i,14.)

இட்டிகைப் படை (பெ) செங்கல் கட்டிடம் (981) *இத்$_3$தே$_3$வர்க்கு முன் னிட்டிகைப் படையாலுள்ள ஸ்ரீ கோயிலை* (SII,xix,292.)

இட்டு (வி) கொடுத்து (815) *யானையாயிரம் ஐய்யமிட்டும்* (SII,iii,206b.)

இட்டு (வி) (ஒன்றின்) மூலம் (1012) *கருங்காலொன்றாற் செங்கையிரண் டிட்டளந்த நெல்லாறறுபதினிற் களைந்த* (SII,vii,863.)

இட்டு (வி) செலுத்தி (866) *தண்டம் இட்டன்றி* (TAS,i,p.14.)

இட்டு (வி) நியமித்து (987) *அர்ச்சநா போ$_4$க$_3$ம் மாண் இரண்டிட்டு வேண்டும் பணி செய்ய* (SII,xiii,3.)

இட்டு (வி) பயிர் செய்து (845) *இடுவன இட்டு* (TAS,ii,p.80-82.)

இட்டு (வி) வைத்து (1018) *திடலே துடங்கி இதனை இடத்திட்டு இப்பெருமூர் மேலெல்லை* (SII,iii,205.)

இட்டுக்கட்டி (வி) சேர்த்துக்கட்டி (1174) *பெரிய திருவாசல் கூரும் திண்ணையும் யிட்டுக் கட்டி* (SII,viii,41.)

இட்டுக் கொள்க (வி) வைத்துக் கொள்க (992) *புதுக்கு புறமாகவும் பலிசைக் கிட்டுக் கொள்க வென்று* (SII,xvii,617.)

இட்டு குடுத்த (வி) செய்து கொடுத்த (987) *பரமஸ்வாமிக்கு ஒட்டி இறை காவல்லொட்டோலை இட்டு குடுத்த பரிசாவது* (SII,xiii,76.)

இட்டுத்தட்டி (வி) வைத்துப் பொருத்தி (1249) *இதில் கல்வெட்டிக் கிடந்த கல்வெட்டுக் கண்டு இட்டுத்தட்டி இவ்வெம்பெருமான் திருவிடை* (SII,vii,949.)

இட்டேரி (பெ) குறுகலான காட்டுவழி (937) *கீழ்பாற் கெல்லை இட்டேரிக்கு மேக்கும்* (SII,xvii,640.)

இட (வி) புரிய (872) *பாசாற்றூர் பூசலிட* (CHHS,1971/56.)

இடக்கடவ (வி) செலுத்தற்குரிய (928) *வாசியேற்றி இடக்கடவ பொன்* (SII,v,1375.)

இடக்கடவியன் (பெ) கொடுக்கக் கடமைப்பட்டவன் (946) *அம்பதினாழி உப்புங் கார்த்தியை ஞாயிற்றகம் இடக்கடவியன்* (TAS,i,p.293-94.)

இடங்கழி (பெ) ஒரு முகத்தல் கருவி (934) *பாட்டமளக்கடவிய நெல்லிடங்கழியால் முந்நூற்றுக் கலம்* (TAS,viii,p.43-44; EI,xxviii,37.)

இடங்கை (பெ) படை சார்ந்த ஒரு சாதித் தொகுதி (1066) *வலங்கை இடங்கை மகந்மையும்* (SII,v,976.)

இடங்கைப் பணம் (பெ) இடங்கைச் சாதியார் செலுத்த வேண்டிய வரி (1547) *இடங்கைப் பணமும் ஆக இவை எப்பேறப்பட்டதும்* (TAS,ix,p.16-18.)

இடங்கை மகந்மை (பெ) இடங்கைப் படை வீரர் பேரில் ஒரு வரி (1066) *வலங்கை இடங்கை மகந்மையும்* (SII,v,976.)

இடங்கை மாசேனை (பெ) படைப் பிரிவு (1100) *இடங்கை மாசேனைக்குச் சேனாபதி* (EC,ix,Cp.117.)

இடங்கொண்ட (வி) பரந்த (1000) *இடங் கொண்ட வேலையு மேழு மலையுந்* (SII,iv,167.)

இடந்தன (பெ) விரிசலுடையன (1014) *தேய்ந்தனவும் தோலிடந்தனவும் சிவந்த நீரும் பழமுத்தும்* (SII,ii,34.)

இடப்படாதார் (வி) சேர்க்கத் தகுதியற்றவர் (919) *குடவோலையில் பேர் எழுதி இடப் படாதாராகவும்* (ARASI,1904-05,p.131.)

இடப் பெறுவதாக (வி) பயிரிடப் பெறுவதாக (789) *காவுதெங்கிடப் பெறுவதாகவும்* (SII,ii,99.)

இடபம் (பெ) காளை ராசி (968) *நாலாமாண்டு இடபத்தில் வியாழந் நிற்கக் கர்கடக ஞாயிற்று* (TAS,iii,p.179-182.)

இடம் (பெ) பொழுது (796) *தொழுது நின்ற இடம் அது கேட்டு* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

இடம் (பெ) வாழிடம் (700) *அரனுக்கிடமாக வாங்கு* (EI,xii,27.)

இடமாட்டாத (வி) செலுத்த முடியாத (817) *பொன்னிடமாட்டாத குடி பலவும்* (SII,vi,344; EI,xxiv,7a.)

இடர் (பெ) துன்பம் (785) *இரு பாலும் மிடரெய்தப் படை விடுத்து* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

இடவம் (பெ) காளை (1000) *பேரிடவத்தின் கொடியாரைச் சிராமலையாரை* (SII,iv,167.)

இடறி (வி) தடுக்கி (1012) *செறிந்துயர் புதுமத கிடறிப் போர்க் கலிங் கிடந்து* (SII,vii,863.)

இடா (பெ) நீர் இறைக்கும் கூடை (1122) *இக்குளத் தில் இடா இறைக்க* (SII,xvii,609.)

இடாதார் (பெ) செலுத்தாதார் (817) *முன்னின்று பொன்னிடாதார்* (SII,vi,344; EI,xxiv,7a.)

இடி (பெ) மின்னல் ஒலி (771) *இகலமருள் இடி உறுமென* (EI,xvii,16.)

இடிக்கும் (வி) பொடி செய்யும் (970) *திருச் சுண்ணமிடிக்கும் போது* (SII,iii,149.)

இடித்திழவு (வி) இடிபாடு (1255) *இக் கண்ணாற்று இரண்டாஞ் சதுரத்து இடித் திழவும் சரிதலையுமான நாற்றங்கால்* (SII,xii,175.)

இடித்து (வி) தகர்த்து (800) *மழை இடித்தழிய* (ips(trAn.),11a.)

இடிந்த (வி) சிதைந்த (800) *நெடுமாமதிலிடிந்த* (EI,xiii,10.)

இடிப்பார் (பெ) உரலில் இடிப்பவர்கள் (1088) *அப்பமுதுக்கு மாவிடிப்பார்க்கும் நீரட்டுவார்க்கும்* (SII,iii,70.)

இடிப்பாள் (பெ) உலக்கை கொண்டு இடிப்பாள் (985) *மஞ்சள் பொடியிடிப்பாளுக்கும்* (SII,xix,380.)

இடியுரும் (பெ) இடியோசை (1134) *மன்னவற் கிடியுரு மொத்தெத்திசையிலு மற்றுலாவ* (SII,v,645.)

இடியேறு (பெ) பேரிடி (1176) *அலைபடுவன நீர் நிலையே அதிர் படுவன இடியேறே* (SII,xvii,585.)

இடில் (வி) வைத்தால் (768) *விற்கிலும் ஒற்றி இடிலும்* (SII,xii,34.)

இடுக்கு வளையில் (பெ) ஒருவகை வளையல் (1009) *சார்த்தும் இடுக்கு வளையில் இரண்டு* (SII,v,521.)

இடுக்குவித்த (வி) கவ்விய (1001) *அப்பிய்ய விஷுவும் சித்திரை விஷுவு மற்றும் இடுக்குவித்த க்ராண முண்டாகுலும்* (SII,xvii,222.)

இடுகாடு (பெ) பிணம் புதைக்கும் இடம் (1465) *இடுகாடு இவர்களும் ஊரவரும் பொருந்தின இடத்திலே இடக்கடவோமாகவும்* (IPS,302.)

இடு கூறும் (வி) ஒருவரால் கொடுக்கப்பட்ட பங்கு (983) *சுட்டி வந்த அகமனையும் ச்ராவணையும் இடு கூறும் படுகூறு புன்செயும்* (SII,xix,335.)

இடுகை (பெ) கொடுத்தல் (1257) *பள்ளிக்குத் தலைமாறாக நிலமிடுகையால்* (SII,xvii,576.)

இடுங்கி (வி) உள்ளொடுங்கி (1000) *குழி கண்ணிடுங்கிக் குரனடுங்கு இடும்பைக் கொதுங்கி* (SII,iv,167.)

இடுபடி (பெ) (சேர) அரசனால் அளிக்கப்படும் சிறப்புப் பேறுகளுள் ஒன்று (1000) *வடுகப் பறையு மகா காளமும் இடுபடியும் தோரணமும் தோரணவிதானமும்* (EI,iii,11.)

இடும் (வி) கொடுக்கும் (887) *நியதி இடும் இளநீர் எட்டு* (SII,xiv,16a.)

இடும்பை (பெ) துன்பம் (921) *குரை கடல்ப் பெருந்தானை இடும்பை உற்றிரிய* (SII,iii,206.)

இடுமரம் (பெ) நட்டு வைக்கப்பட்ட மரங்கள் (1328) *இடுமரம் படுமரங்களும் மேல் நோக்கின மரமும்* (SII,viii,178.)

இடுவது (வி) கொடுப்பது (887) *கற்பூரமும் தேனும் நியதி அரைக்காணம் விலைபெற இடுவது* (SII,xiv,16a.)

இடுவது (வி) செலுத்துவது (922) *எலவு கொண்ட பொன்னிடுவது விக்கமாய்* (SII,vi,291.)

இடுவர் (பெ) கொடுப்பவர் (1000) *முகந்த உண்டு மிக்கதுற்றாரிடுவாரென* (SII,iv,167.)

இடுவன (பெ) பயிரிடுவன (885) *இடுவன இட்டு* (TAS,ii,p.80-82.)

இடுவார் (பெ) செய்பவர் (986) *திரு மெழுக்கிடு வார்க்கு நிசத நெல் முன்னாழியும்* (SII,iii,128.)

இடுவான் (பெ) கொடுப்பான் (866) *பூ இடுவான் ஒருவனுக்கு* (TAS,i,p.1-14.)

இடுவித்த (வி) செய்வித்த (941) *மும்மடிக் கீரணிராமி இடுவித்த படை* (SII,iv,392.)

இடுவித்தார் (வி) செய்வித்தார் (900) *ஏரி கண்டு தூம்பு இடுவித்தார்* (ARE,1934-35,p.75.)

இடுவித்து (வி) மீட்டு (618) *தொறு இடுவித்துப் பட்டான்* (CHHS,1971/50.)

இடுவிதாக (வி) கொடுப்பதாக (869) *வடம் ஓரிலைச் சாந்தும் எழுநாளிடுவிதாக* (SII,vii,523.)

இடுவை (பெ) குறுகிய சந்து (925) *பழஞ்சிக்கு அருகே போயின இடுவைக்கும்* (TAS,i,p.187-93.)

இடுவை (பெ) வழி (1200) *..கோட்டத்துக்குப் போகிற இடுவைக்கு மேற்கு* (CHEN,xx,p.240-41.)

இடை (பெ) நடுவு (1012) *கரும்பிடை துணித்தரத் தாட்டொலியாலை* (SII,vii,863.)

இடை (பெ) இடைப்பட்ட நிலத்தில் (995) *கெங்கா கந்யாந்தரத் திடைப்பட்டார் பாவத்திற் படுவோம்* (SII,v,1366.)

இடை (பெ) இடையர் சாதி (1032) *இவ்வூரில் இருக்கும் இடைத்தலைவன் அருளாக்கிய் வேட்டுவனேன்* (TAS,vi,4.)

இடை (பெ) எடை (1152) *வெள்ளித் தளிகை அஞ்சினால் வெள்ளி இடை முன்னூற்று வறுபதின் பலமும்* (SII,vi,440.)

இடை (இ) இடம் (731) *பொற்றாழியாரிடை ஊருணி அகத்து* (SII,viii,331.)

இடைக் கட்டு (பெ) ஒரு நகை (1014) *இடைக் கட்டு இரண்டிலுங் கட்டின போத்தி இரண்டும்* (SII,ii,34.)

இடைகழி (பெ) வெற்றிடம் (925) *தெங்கறைக்கு நடுவாகப் போயின இடைகழியாகப் போயின கீழிடுவைக்கு* (TAS,i,p.187-93.)

இடைச் சான்றார் (பெ) இடையர் (897) *திருமறைக்காட்டுத் தேவரிடைச்சான்றோம்* (SII,xiii,318.)

இடைத்தி (பெ) இடையர்குலப் பெண் (1000) *ஶ்ரீ இடைத்தி சாத்தங்குருன்தி சுனை இயிது* (IPS,12.)

இடைத்துறை (பெ) கால்நடை வளர்ப்போர் மீதான வரி (1448) *விட$_4$வ வர்ஷம் ப...ஒன்றுக்கு ஸ்தா$_2$னமாத்யம் சு$_0$ங்கம் உடையமார்க்$_3$க$_3$ம் இடைத்துறை புறம்பாக ....* (SII,vii,758.)

இடைதடையற இடையிலே நின்று போகாமல் (1529) *சந்திராத்திரவரைக்கும் இடைதடையற நடத்தினவர்கள்* (IPS,740.)

இடை நாழிகை (பெ) கோயிலில் அர்த்தமண்டபத்துக்கும் மகாமண்டபத்துக்கு இடைப்பட்ட பகுதி (1422) *அர்த்த$_4$மண்டபம் இடைநாழிகை மஹாமண்டபம் ஸோபாநம் இவையும்* (SII,v,762.)

இடைப்பாட்டம் (பெ) இடையர் மீதான வரி (978) *நீர்க்கூலியும் ஈழம்பூட்சியும் இடைப்பாட்டமும் அட்டுக் கறையும் ஊர்க்கழஞ்சும் உள்ளிட்டு* (SII,iii,151-151a.)

இடைப்பூச்சி (பெ) இடையர் மீதான வரி (750) *ஈழ்ழப்பூச்சியும் இடைப்பூச்சியும் உள்ளிருக்கையும்* (EI,v,8.)

இடைப்பூட்சி (பெ) இடையர்கள் மீதான வரி (789) *ஈழம்பூசியும் இடைப்பூட்சியும்* (SII,ii,99.)

இடையர் வரி (பெ) இடையர் மீதான வரி (1260) *தட்டார் பாட்டம் செக்கிறை ஆயம் இடையர்வரி இனவரி உட்பட்ட மற்றும்* (IPS,364.)

இடையன் (பெ) இடையர் குலத்தவன் (917) *இடையன் வண்ணக்கன்* (SII,xix.263.)

இடையாமம் (பெ) நடு இரவு (1186) *செருகாவிடையாமஞ் செல்லாதொருகாலும்* (SII,xii,263.)

இடையீடர் (பெ) குத்தகைதாரர் (973) *இப்பரிசு செய்த கீழீட்டில் ஊராளராக இடையீடராக புக்கு விலக்கவும்* (EI,ix,32; TAS,iv,p.1-11)

இடையீடு (வி) பயிரிடும் குடியுரிமை (951) *தானமும் பரடையும் ஊராண்ம்மைக்கும் இடையீடுங் கெட்டு* (TAS,v,p.6-7.)

இடையூறு (பெ) தடை (986) *இத்தேவர் ஶ்ரீ கார்ய்யம் இடையூறுள்ளன பதினெட்டு நாடடியாருமே கடைக்கண்டு* (SII,iii,128.)

இடையொள்ள (வி) நடுப்பட்ட (1000) *இடையொள்ள நாள் முட்டுகிலறு கழைஞ்ஞிற் பாதி* (TAS,ii,p.173-207.)

இடை வட்டைகள் (பெ) ஓரளவு தூரமுள்ள வணிகப் பெருவழிகள் (1300) *எட்டைவட்டை யிடைவட்டைகளிற் திசைவிளங்கு திசையாயிரத் தைஞ்நூற்றுவரோமும்* (SII,viii,442.)

இடைவிட்டு (வி) தள்ளி (1178) *இதன் கிழக்கு இடைவிட்டு விட்ட நிலத்துக்குக் கீழ்பாற் கெல்லை* (SII,xvii,540.)

இடை உவா (பெ) முழு நிலா நாள் (1151) *பிள்ளையார்க்கு அமாவாஸி பன்நிரண்டும் இடைஉவாப் பன்நிரண்டும் விஷுவயந ஸங்க்ரமம் நாலும்* (SII,viii,27.)

இண்டை (பெ) வட்டமான பூமாலை (866) *இண்டையு மாலயுங் கட்டி* (TAS,i,p.1-14.)

இணர் (பெ) கொத்து (800) *சேட்டிணர் பூந்தண் பொழில்* (EI,xiii,10.)

இணை (பெ) இரட்டை (957) *ஓரிணைப் பரியட்டம் சார்த்துவிப்போமானோம்* (SII,xix,15.)

இணைகள் (பெ) ஒரு குழு (809) *பெரும்பழஞ்சி இணைகள் ஓரெடுப்பர் புறங்காத்துப் புதுக்குவிப்பது* (SII,xiii,40.)

இத்தனை (பெ) இவ்வளவு (764) *முதுகாட்டகப்பட்ட பனைய் நில மித்தனையும்* (TAMIZ,1970,p.124.)

இதடக்கு (பெ) ஒரு நகை (1001) *பொந்நிந் மாந்தளிராக செய்த இதடக்கு 20ம்* (SII,v,647.)

இதற்கு (பெ) (793) *வட சிகர கோயில் புதுக்குவித்து இதற்கு* (SII,iii,42.)

இதன் (பெ) இதற்கு (804) *இதன் மேற்பட்டது விலயாலும் ப்ரதிக்$_3$ரஹத்தாலும்* (SII,xiv,37.)

இதுக்கு (பெ) இதற்கு (881) *இதுக்குக் கொற்றவன் குடியிலே குடுத்த நிலம் மூன்றுமா* (CHEN,xxv,p.339.)

இந்தனம் (பெ) விறகு (1012) *பெருமடைக் குதவு மிந்தன வொருவற்கும்* (SII,vii,863.)

இந்திர விழா (பெ) இந்திரனைக் குறித்துச் செய்யும் ஒரு திருவிழா (941) *இந்திர விழாவினுக்குமாக விளக்கினுக்கு நெய்* (SII,viii,529.)

இந்திரனாரம் (பெ) இந்திரனுடைய மாலை (1018) *சுந்தர முடியும் இந்திரனாரமும் தெண்டிரை யீழ மண்டல* (SII,vii,205.)

இந்திர ஸமானன் (பெ) இந்திரனுக்குச் சமமானவன் (1012) *ஶ்ரீ ராஜராஜன் இந்திர ஸமானன்* (SII,vii,863.)

இந்திரை (பெ) இலக்குமி (1192) *மாவினில் இந்திரையிருப்ப புயவரை தழுவி வயமகள் களிப்ப* (SII,v,301.)

இந்துவிந் குலம் (பெ) சந்திர வம்சம் (1179) *குடதிசை யிந்துவிந் குலமுதற் சிறந்தோந்* (EC,x,Kl.132.)

இந்து$_3$கிரணந் (பெ) சந்திரன் (905) *பெருஞ்சோதி இந்து$_3$கிரணந் வெளிப் பட்டனன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

இந்த்$_3$ராணியார் (பெ) ஏழுகன்னிமாரில் ஒரு தெய்வம் (1072) *இந்த்$_3$ராணியார்க்கு ஸந்தி ஒன்றுக்கு* (EC,x,Kl.108.)

இந்நாதார் (பெ) பகைவர் (1199) *இவர்களுக் கிந்நாதார் எனக் கிந்நாதார்களாகவும் எநக்கிந்நாதார் இவர்களுக் கிந்நா தார்களாகவும்* (SII,vii,119.)

இந்பம் (பெ) மகிழ்ச்சி (1136) *பல்லுயிற் கெல்லாம் எல்லையிலிந்பமிக விநிதெய்த* (SII,vii,460.)

இந்று தோறும் (பெ) இன்றுவரை (1061) *கங்காபுரி புகுதருளிந இந்று தோறுமியாவருஞ் செய்தறியாதந* (SII,v,647.)

இப்படி (பெ) இவ்விதம் (768) *இப்படிக்கு குறியிலிருந்து* (SII,xii,34.)

இப்பரி (பெ) இந்த விதமாக (1000) *உலகுக்கு சந்திரனும் உள்ளளவும் அஞ்சுவண்ணம் ஸந்ததிப் பிரக்ருதி ஶ்ரீ இப்பரி அறிவென்* (EI,iii,11.)

இப்பி பற்று (பெ) சிப்பியோடு சேர்ந்திருத்தல் (1015) *குளிர்ந்த நீரும் சிவந்த நீரும் இப்பிபற்று அராவினவும்* (SII,ii,7.)

இம்பர் (பெ) இவ்வுலகத்து (1200) *இம்பர் நிகழ விளக்கிடான் இடர்க்கரம்பை..உம்பர் தொழ விண்ணுய்ய* (SII,iv,1026.)

இம்மை பொருள் (பெ) அறம் பொருள் இன்பங்கள் (1000) *மெய்மையே யடியேநுக் கிம்மை பொருள் செய்துதவும்* (SII,iv,167.)

இமம் (பெ) இமய மலை (1068) *விரதமுமாற்றிச் சூழிமஞ்சேது வரம்பாக* (SII,iv,529.)

இமவான் பெற்ற மாது (பெ) உமை (1000) *சென்னிப் பொன்னிமவான் பெற்ற மாது* (SII,iv,167.)

இமைக்கும் (வி) இமை கொட்டுகின்ற (1000) *படைக்கணிமைக்கு முயிர்ப்புடையாளி* (SII,iv,167.)

இமைக்கும் (வி) ஒளிவிடும் (771) *மணி இமைக்கு மெழிலமைந்த நெடும்புரிசை* (EI,xvii,16.)

இமைப்ப (வி) ஒளிவிட (905) *ஸஹஸ்ர ப$_2$ணமணி கிரணம் விளக்கிமைப்ப* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

இமையப் பொருப்பு (பெ) இமயமலை (905) *பொன்னிமையப் பொருப்பதனில்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

இமையாது (வி) கண் இமை கொட்டாது (1279) *கண்ணிவாடாது கண்ணிமையாது மண் மிசை நடவா வானோர்* (SII,viii,69.)

இய்து (பெ) இது (771) *இய்தெழுதின* (EI,xvii,16.)

இயக்கம் (பெ) குறிப்பு (800) *அன்புமென்னாகச் செய்தாளியக்கத்தை* (EI,xiii,10.)

இயக்கி (பெ) யக்ஷி; சமண சமயத்தில் ஒருபெண் தெய்வம் (870) *திருவயிரை பாரிச$_0$வ படாரரையு மியக்கி அவ்வைகளயும்* (SII,xiv,22.)

இயக்கி பட்டி (பெ) சமணத் தெய்வமான யக்ஷிக்கு விடப்பட்ட மானிய நிலம் (1018) *தென்பாற் கெல்லை பள்ளிச் சந்தம் இயக்கிபட்டிக் குடைக்கும்* (SII,vii,889.)

இயங்கிய (வி) செல்லுகின்ற (1000) *இயங்கிய காலு நிலனும் எரியும் மிருவிசும்பும்* (SII,iv,167.)

இயங்கும் (வி) உலாவும் (833) *அந்தரத்தினொடியங்குஞ் சந்திராதித்தர்* (SII,xv,44.)

இயங்குவர் (வி) செல்லுவார் (1000) *உணர்ந்தமை வினாவியியங்குவரேய்* (SII,iv,167.)

இயம்ப (வி) ஒலிக்க (771) *கொற்ற மூன்றுட னியம்ப* (EI,xvii,16.)

இயமபுரி (பெ) யமனுடைய பட்டணம் (1200) *விடுபட வெறுவரேனு மியமபுரியேறுவர் கொல்லி விடு முதகாதிபர்* (SII,vii,123.)

இயமன் (பெ) யமன் (1179) *எண்டிசை யமரு மியமனு நடுங்கிப் பண்டு வெங்காளி பரிகலம் பறித்தோந்* (EC,x,Kl.132.)

இயல் (பெ) (= இகல்) மாறுபாடு (1058) *இயல் வேட்டெழுந்து சென்று ஒண்டிறல் இரட்டமெய்தி* (SII,viii,1.)

இயல் (பெ) தன்மை (833) *நீரியனற் புகழ்நெறி நடை ஏரி* (SII,xiv,44.)

இயல் (பெ) திவ்வியப் பிரபந்தத்தைக் குழுவாக நின்று ஓதுதல் (1491) *ஸந்நதியில் இயல் சாத்துகிறபோது* (TDI,ii,95.)

இயல் (பெ) இலக்கியம் (1192) *இயல் இசை நாடகமெழில் பெற* (SII,v,301.)

இயல் (வி) வழக்கமான (802) *இயற்றண்டப்பட ஒட்டிக் குடுத்தோ மருவாகூரோம்* (SII,xii,42.)

இயல் (வி) ஒத்த (1012) *வாய்மையிற் பணியப் பொன்னியல் விசும்பரிற் கதமும்* (SII,vii,863.)

இயல்வகை (பெ) முறையாக (1012) *மியல் வகை யுரைப்பில் ஒப்பத் திருவனையர் முப்பத்திருவர்* (SII,vii,863.)

இயல்வு (பெ) வழக்கமாக (833) *சமையத்தவர் தமக்கு மியல்வின் களவிரோத மின்மையின்* (SII,xiv,44.)

இயல்வு (பெ) இயற்கை (1138) *பல்லுயிற் கெல்லாம் எல்லையிலிந்பம் இயல்விநில் இயல* (SII,vii,913.)

இயல் ஸேவிக்கும் (வி) திவ்விய பிரபந்தத்தை ஓதும் (1476) *விட்டவர் விழுக்காடு அப்பம் பதின் மூன்றுக்கும் இயல் ஸேவிக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுகும் அப்பப் பிறஸாத$_3$ம் ஒன்றும்* (TDI,ii,68.)

இயல (வி) நடைபெற (1138) *எல்லையிலிந்பம் இயல்விநில் இயல* (SII,vii,913.)

இயல் அநுஸந்திக்கும் (வி) திவ்விய பிரபந்தம் ஓதும் (1520) *விட்டவன் விழுக்காட்டில் இயல் அநுஸந்திக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் அப்பம் 20* (TDI,iii,143.)

இயலிசை நாடகம் (பெ) முத்தமிழ் (1192) *சிறப்பின் மாமுனி தெரிந்த வியலிசை நாடக மெழில்பெற* (SII,v,301.)

இயலும் (வி) நடக்கும் (1012) *மொய்வைத்தியலு*

முத்தமிழ் நான்மைத் தெய்வ (SII,vii,863.)

இயற்புலவர் (பெ) இலக்கியப் புலவர் (1171) *இயற்புலவரேய் பொருள் வைப்பார்* (SII,xvii,592.)

இயற்ற (வி) நடத்த (950) *மால்களிற்றின் நாசகமினிதியற்றவு* (TASSI,1962-65,p.32-52.)

இயற்றல் (வி) செய்தல் (1012) *அப்பரிசி யியற்றலில் அறுவகை யிருதுவு* (SII,vii,863.)

இயற்றி (வி) செய்து (921) *எண்ணிறந்த பள்ளிச்சந்தமும் எத்திசையும் இனிதியற்றி* (SII,iii,206a.)

இயற்றுவதற்கு (வி) செய்வதற்கு (802) *இயற்றுவதற்கு வாரிகப்பட்டோம் காச$_0$யபரும்* (SII,xii,42.)

இயற்றுவித்து (வி) உண்டாக்கி (905) *தடாகங்களும் இரு நிலத்திலியற்றுவித்தும்* (TASSI,1962-65,p.1-31.)

இயன்ற (வி) நடந்தேறிய (156) *ஈசானமங்கலத்து நன்பகலாவணத் தியன்ற பூ$_4$மி விலையாவணமாவது* (SII,viii,612.)

இயன்ற (வி) பொருந்திய (905) *சடைமுடிஒடளவியன்ற கமண்டலுவோடக்ஷமாலை* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

இயைத (வி) சொல்லிய (771) *இவ்வியைத பெருநான்கெல்லையிற் பட்ட பூ$_4$மி* (EI,xvii,16.)

இரக்கா போகம் (பெ) (= ரக்ஷா போகம்); காவலுக்காக செலுத்தும் வரி (960) *இரக்கா போகம் ஆட்டு கற்கடக ஞாயிற்று. மகத்தினாள்* (TAS,iii,p.159-69.)

இரக்ஷிக்கக்கடவர் (வி) பாதுகாக்கக் கடவர் (885) *அறுநூற்றுவரும் அஞ்சுவண்ணம்மு மணிக்கிராமமும் இரக்ஷிக்கக் கடவர்* (TAS,ii,p.80-82.)

இரங்கு சரக்குகள் (பெ) இறக்குமதிப் பொருள்கள் (1279) *இவ்வூர்த் துறையில் ஏறு சரக்கு இரங்கு சரக்குகள் மதிக்குமிடத்து* (NI,g.45.)

இரச குடுக்கை (பெ) பாதரசம் வைக்கும் குடுவை (1541) *கஸ்தூரி கற்பூரம் பட்டுநூல் இரசகுடுக்கை வெள்ளாட்டி தண்டிகைக்கொம்பு சல்லீசவரம்* (SII,vii,21.)

இரட்டர் (பெ) சளுக்கியர் (இரட்டபாடி நாட்டினர்) (1068) *எண்ணருங்களிற்றின் இரட்டரைக் கவர்ந்த கண்ணியர்* (EI,xxi,38.)

இரட்டி (வி) இரு மடங்காக்கி (811) *அச்சஞ்சு பழங்காசு வெவ்வேற்று வகை இரட்டி* (SII,xiv,41.)

இரட்டிச்ச (வி) இரண்டு மடங்கு ஆக்கிய (1100) *நெல் பதினாழிப் பறையால் ஆயிரம் பறையும் விற்றிரட்டிச்ச வண்ணம் பதினாழிப் பறையால்* (TAS,v,p.34-37.)

இரட்டித்த (வி) இருமடங்கான (985) *பக்கல் குடுத்த காசு பத்தாலிரட்டித்த காசு இருபதுக்கு* (SII,xix,182.)

இரட்டிப்பு (பெ) இரு மடங்கு (1024) *இது இரட்டிப்பு த$_3$க்ஷனைப் பொன் கழஞ்சுக்கு* (EC,x,Kl.112a.)

இரட்டிரட்டை (பெ) இரண்டு இரண்டு (1100) *ஓரோத்தர் இரட்டிரட்டை குலை வாழைக்காயும் ஓரோகுலை வாழைப்பழம்* (TAS,v,p.34-37.)

இரட்டை (பெ) முத்துவகை (1014) *அம்பு முதுங்கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்தும்---உடையமுத்து* (SII,ii,3.)

இரட்டை (பெ) இரண்டு (1014) *இரட்டை திருவுழுத்து ஓரணையினால் பொன் பதின்* (SII,ii,2.)

இரட்டை (பெ) இருமடங்கு (1300) *உழுமவர் இரட்டையால் ஐம்பதினாழி கொள்ளுந் தூணியால்* (TAS,vii,p.58-59.)

இரட்டைக் கன்றீன்றன (பெ) ஒரே தடவையில் இரண்டு கன்றுகள் பெற்றவை (1219) *நாற்பாலெல்லைக்குட்பட்ட சுள்ளி சூடி பால்மறி இரட்டைக் கன்றீன்றனவு மற்றுமிப்படி யொப்பன* (EC,x,Kl.120.)

இரண்டு (பெ) 2 (எண்) (693) *நரசிங்கபருமற்கு*

இரண்டாவது (EI,xxxii,12; CHHS,1971/54.)

இரண்டு நினைத்தவன் (பெ) தீங்கு செய்ய நினைத்தவன் (1519) *இந்த நிலம்மைக்கு இரண்டு நினைத்தவன் கெங்கைக் கரையில் காராம்பசுவைக் கொன்ற பாவத்திலே போகக்கடவராகவும்* (IPS,743.)

இரண்டுவா (பெ) பௌர்ணமியும் அமாவாசையும் (978) *ஸ்ரீ க்ருஷ்ணர்க்கு இரண்டுவாவும் அஷ்டமியும் ஸங்க்ராந்தியும்* (SII,iii,132; SII,xix,196.)

இரண்யகேசி (பெ) சூத்திரங்களிலொன்று (792) *கௌதம கோத்திரத்து இரண்யகேசி சூத்திரத்து* (EI,xviii,14.)

இரந்து (வி) பணிந்து கேட்டு (1058) *ஸ்ரீ வயிஷ்ணவர் பலரையும் இரந்து வைத்த திரு நுந்தாவிளக்கு* (SII,xvii,249.)

இரவதி (பெ) ரேவதி நட்சத்திரம் (943) *மகர நாயற்றுச் சனிக்கிழமை பெற்ற இரவதி நான்று* (ARASI,1905-06,p.171.)

இரவலர் (பெ) வருந்திக் கேட்பவர் (1044) *நெதிப் பிறக்கம் இரவலர் ஆனோர்க்கீய்ந்து* (SII,v,465.)

இரவு (பெ) சிறுவரிகள் தொகுதி: (அந்தராயம்?) (985) *காணி நீக்கிப் புரவு மூவாயிரக்காடியும் இரவு அஞ்நூற்று அறுபத்தொரு காடியும்* (SII,iii,142.)

இரவு (பெ) இராக்காலம் (800) *திருவிளக்கு இரவுபகல்லும் முட்டாமே* (SII,v,618.)

இரவு சோறு (பெ) பொது ஊழியர்களுக்கு இரவில் கொடுக்கும் சோறு (849) *இரவு சோறுங் குடநாழியும்* (TAS,ii,p.67-68.)

இரவை (பெ) இராப்பொழுது (978) *இரவைக்கும் குறுணியும்* (SII,iii,151-151a.)

இராக்களவு காணுதல் (பெ) இரவில் திருடுதல் (1300) *இடை நின்ற காலங்களில் நகரத்தை நலிதல் இராக்களவு காணுதல்* (IPS,491.)

இராக்காலம் (பெ) இரவு நேரம் (1272) *உச்சிச் சந்திக்கு எட்டுத் திருவிளக்கு இராக்காலத்துக்கு* (SII,vii,767.)

இராக்ஷஸ (பெ) அறுபது ஆண்டுகளில் ஒன்று (1200) *இராக்ஷஸ ஸம்வத்ஸரத்து மகர மாஸத்து* (EC,iii,TN.130.)

இராசகரத்தார் (பெ) அரசாங்கத்தார் (1530) *இந்தப் பணம் இருபத்து நாலும் இராசகரத்தார் பாதியும் ஊரார் பாதியும் குடுக்கக்கடைவோம் ஆகவும்* (SII,vi,273.)

இராசகரம் (பெ) அரசாங்க வரி (1300) *இராசகரம் இறுப்பார் இல்லாதொழிகையில்* (IPS,636.)

இராசதம் (பெ) ஆணை ஆவணம் (1257) *இறையிலி செய்த படிக்கு தேவர் திருவெழுத்திட்டருளின இராசதப்படி* (SII,vi,35.)

இராச நிவந்தி (பெ) ஒரு வரி (1281) *அவலம்பலம் ஆசுவிக்கடமை யிராசநிவந்தி கேழ்விநிவந்தி மற்றும் உள்ள பல வரிகளும்* (EC,x,Mr.37.)

இராச பரிச்சின்னம் (பெ) அரசத் தன்மையைக் குறிக்கும் சின்னம் (1036) *வராக வெல்கொடி இராச பரிச்சின்னமும்* (SII,iv,223.)

இராச ஊழியம் (பெ) ஊழியமாகச் செலுத்தும் ஒரு வரி (1567) *திருநாள்கொடி குடை எடுக்கிற ஆளு அல்லாமல் இராச ஊழியம் ஏர் ஆளமஞ்சி எச்சோறும்* (SII,viii,158)

இராசி (பெ) நாணய வகை (1263) *ஆண்டு ஒன்றுக்கு வாடாக் கடமையாக இராசி இருபத்துஅஞ்சு பணம் கடமை கொள்ளவும்* (IPS,424.)

இராசிதம் (பெ) (= இராயசம்) (1350) *இன்னாயனார் நிலம்பத்து..லியாகக் குடுத்த படிக்கு தேவன் இராசிதமுங் குடுத்..* (IPS,507.)

இராஜ்ய வாஸிகள் (பெ) நாட்டு மக்கள் (1344) *இவையிற்றுக்கும் லங்காதிலகம் என்று இராஜ்ய வாஸிகள் பேராகையில்* (UCR,xviii,p.16-23.)

இராஜகார்ய்யம் (பெ) அரசர்க்குச் செய்யும் ஊழியம் (896) *இராஜ கார்ய்யமும் க்ராம கார்ய்யமும் திருத்தப்பெறாததாகவும்* (SII,xiii,312.)

இராஜ தண்டம் (பெ) அரசனால் விதிக்கப்படும் தண்டனை (1425) *கந்யாதாநம் பண்ணாமல் பொன் வாங்கிப் பெண் குடுத்தால் பொன் குடுத்து விவாஹம் பண்ணினால் இராஜதண்டத்துக்கு உட்பட்டு* (SII,i,56.)

இராஜ நியோகம் (பெ) அரசனின் உத்தரவு (978) *இராஜ நியோகத்தால் ஸ்ரீ கார்ய்யம் மாராய்வானுக்கு* (SII,iii,151-151a.)

இராஜா (பெ) அரசன் (896) *இப்பரிசு எம்மில் இராஜாவிந் நியோகம் புக்கும்* (SII,xiii,312.)

இராத்ரி (பெ) இரவுக்காலம் (946) *உரோயணி நாள் இராத்ரி எழுர்த் திருவாய்ப்பாடி ஸ்ரீகூடத்தே குறைவற கூடி* (SII,vii,35.)

இராதீதர (பெ) கோத்திரத்தின் பெயர் (792) *இராதீதர கோத்திரத்து* (EI,xviii,14.)

இராப் பகல் (பெ) இரவும் பகலும் (953) *திருவாதிரை நான்றிராப் பகலொரு நொந்தா விளக்கு* (SII,xiii,60.)

இராப் போனகம் (பெ) இரவு வேளையில் கடவுளுக்குப் படைக்கும் உணவு (808) *இராப் போனகஞ் சங்கசர்மனுஞ்* (EI,viii,29.)

இராமானுச கூடங்கள் (பெ) வைஷ்ணவ யாத்திரிகர்களை ஊட்டும் அன்னசாலை (1462) *கோயில் திருமலை பெருமாள் கோயி திருப்பதியில் இராமானுச கூடங்களுக்கும் நரசிங்கராச உடையற்கு சொல்லி* (TDI,ii,14.)

இராயச நிமந்தி (பெ) ஒரு வரி (1294) *ஊற்ப் பழச்சும் இராயச நிமந்தி கேழ்வி..மற்றும் எப்பேர்பட்ட வரிவுகளும்* (EC,x,Kl.18.)

இராயஸ்பதங்கள் (பெ) எழுத்துச் சான்று (1346) *முத்தண உடையரும் தேக்கலநாட்டு நாட்டார்க்கு குடுத்த முத்திரை இராயஸ்பதங்கள்* (EC,x,Hr.39.)

இராயஸம் (பெ) அரச ஆணை ஓலை (1271) *காலப் பிற்படாமல் பயிர் ஏற்றி அனுபவிக்க இப்படிக்கு தேவர் இராயஸம் எழுதித்து* (SII,iv,434.)

இராயஸ வத்தனை (பெ) ஒரு வரி (1425) *அவஸரவத்தினை இராயஸவத்தனை உட்பட்ட பல வரிகளும்* (SII,viii,349.)

இராவணன் மோவாய் (பெ) ஒரு வகைப் புல் (1187) *திரை எறிவாய் அருகு இல்லிப்பூடும் இராவணன் மோவாயும் எழுன்து மணல் குன்றாந நிலமும்* (SII,v,990.)

இராவிளக்கு (பெ) இரவில் எரிக்கும் விளக்கு (937) *கடம்ப பட்டர் எடுப்பிச்ச அம்பலத்துக்கு இரா விளக்கிட* (SII,xvii,466.)

இராவை (பெ) இரவு (1001) *ஸ்ரீ பலி எழுந்தருள இராவைக்கு பலி அரிசிக்கு நெல்லு உரியும்* (SII,xvii,222.)

இராவை (பெ) இரவுக்காலம் (960) *இராவைக்கு திரு அமுதரிசி பன்னிரு நாழியும்* (SII,iii,203.)

இரா ஸந்தி விளக்கு (பெ) மாலைப் போதில் எரிக்கப்படும் விளக்கு (994) *கணபதியார்க்கு இராஸந்திவிளக்கு* (SII,v,611.)

இரிய (வி) நிலைகெட (921) *பெருந்தானை இடும்பை உற்றிரிய* (SII,iii,206a.)

இரீஇ (வி) நிறுவி (905) *அருந்தமிழ் நற்]சங்கம் இரீஇ தமிழ் வளர்த்தும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

இரு (பெ) இரண்டு (1002) *இரு பூ விளையும் நிலம்* (SII,viii,217.)

இருக்க (வி) குடியிருக்க (765) *மாடமும் மாளிகையும் எடுத்துக் கொண்டிருக்கப் பெறுவாராகவும்* (EI,xxxvi,20.)

இருக்கின்ற (வி) வசிக்கின்ற (810) *திருச்சுரியல் இருக்கின்ற ப்ராஹ்மணன்* (SII,xiv,42.)

இருக்கு (பெ) முதல் வேதம் (833) *இருக்கோசை மலிமுதலூரீச்சுவரன்* (SII,xiv,44.)

இருக்கும் (வி) வசிக்கும் (691) *வழிபாடு செய்வார்க்கு இருக்கும் மநெயும் மநெப்படப்பும்* (SII,i,151; EI,xvii,22.)

இருக்கு வேதி (பெ) இருக்கு வேதம் ஓதி அறிந்தவன் (1024) *இருக்கு வேதி ஒருவநுக்கும் ஸாம வேதி ஒருவநுக்கும்* (EC,x,Kl.112a.)

இருக்கை (பெ) தங்குமிடம் (1038) *வட பக்கத்து*

பகலிருக்கை நந்தவானம் (SII,xiv,161.)

இருகால் (பெ) இருமுறை (815) *ஹிரண்ய க$_3$ர்ப$_4$ மிருகால் புக்கு* (SII,iii,206b.)

இருகூறு பறையுமவன் (பெ) எதிர்த்தவன் (1092) *பாடுதாங்குவிதாக செய்தவனும் இருகூறு பறையுமவனும் ஊராண்மைக் கிடையீடுங் கெட்டு* (TAS,v,p.172-76.)

இருங்கயல் (பெ) பெரிய மீன் (785) *வானவன் செம்பியன் வடவரை யிருங்கயலாணை ஒருங்குடன்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

இருங்கிளை (பெ) பெரிய சுற்றம் (800) *எண்கின் இருங்கிளையு மேறற்கரியவேய் வண்கைச் செருமாறன்* (EI,xiii,10.)

இருங்கோல் (பெ) செங்கோல் (1196) *வெண்குடை நிழற்ற இருங்கோல் நடப்ப கொடுங்கலி நடுங்கி* (SII,v,302.)

இருசுடர் (பெ) சூரியனும் சந்திரனும் (905) *புத்தேள் மாருதம் கனல் இரு சுடர்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

இருட் பிழம்பு (பெ) இருள் தொகுதி (1012) *கங்குற்குழம்பு படு பேரிருட்பிழம்பு படவுருட்டிய செஞ்சுடர் மௌலி* (SII,vii,863.)

இருணீங்க (வி) துன்பம் நீங்க (1176) *எவ்வுலகமு யிருணீங்க வந்த கோமானிவனென்று* (SII,xvii,585.)

இருத்தி (வி) இருக்கச் செய்து (1072) *தன்குடை நிழற்கீழ் இன்புற விருத்தி* (SII,iii,64.)

இருத்திக் கொண்டு (வி) அமரச் செய்து (921) *நம்பிமார் ஒருவரையும் ஒழியாமே மஹாஸபை$_4$யிலே உள்ம்மண்டகத்திலேய் இருத்திக் கொண்டு* (ARASI,1904-05,p.131.)

இருத்திய (வி) (அடைக்கலமாக) வைத்த (1014) *...அரண் கருதி யிருத்திய செம்பொற்றிருத்தகு முடியும்* (EC,ix,Cp.88.)

இருதலை வாரம் (பெ) குடிவாரம் மேல்வாரம் இரண்டும் (1359) *தாம்பயிர் செய்து இருதலைவாரமும் கைக்கொண்டு* (EC,x,Bp.31.)

இருது (பெ) பருவம் (1012) *அப்பரிசியற்றலிலறு வகை யிருதுவுமிப் பரிசியற்றியெழுந்த* (SII,vii,863.)

இருந்த (வி) குடியிருந்த (709) *அவரிருந்த மனைஉம்* (EI,iv,22a; SII,i,135.)

இருந்தமையில் (வி) (1196) *சுதையாலே பீடமாய் இருந்தமையில்* (SII,vii,1041.)

இருந்தருளி (வி) தங்கி (873) *நியமத் திருந்தருளி* (SII,xiv,10.)

இருந்து (வி) குடியிருந்து (875) *தொழுமாத்தூர் இருந்து வாழும்* (CHHS,1971/57.)

இருநிலம் (பெ) உலகம் (800) *எறிவிசும்பும் இருநிலமாய்த் தென்ப* (EI,xiii,10.)

இருநில மடந்தை (பெ) பூமிதேவி (1018) *திருமன்னி வளர இருநிலமடந்தையும் போர்ச் சயப் பாவையும்* (SII,iii,205.)

இருநூற்றுவப் பெருமக்கள் (பெ) சபைக்குழுக்களில் ஒன்று (985) *ஏரிவாரியப் பெருமக்களும் கழநிவாரியப் பெருமக்களும் இருநூற்றுவப் பெருமக்களும்* (SII,xix,84.)

இருப்ப (வி) வீற்றிருக்க (1192) *மந்தர மாவினி லிந்திரையிருப்ப* (SII,v,301.)

இருப்பாராக (வி) நிலை பெற்றிருப்பாராக (768) *ஸ்வர்க்$_3$க$_3$த்திலே யிருப்பாராகவும்* (SII,xii,34.)

இருப்பிது (வி) இருப்பது (1000) *ஓரோகுலை அறுபது செய்து காயுளவாயிருப்பிது* (TAS,ii,p.173-207.)

இருப்புக் கட்டி (பெ) ஒரு வரி (1329) *வெட்டி புயல் இருப்புக் கட்டி பத்திவரி இவை நாலு வரியும் கழித்துக் கொள்ளும்* (SII,iv,287.)

இருப்பு பொதி (பெ) இரும்புச் சரக்கு மூட்டை (1300) *இருப்பு பொதி ஒன்றுக்குக் காசு இரண்டும்* (SII,viii,442.)

இருப்பு விளக்கு (பெ) இரும்பினால் செய்த விளக்கு (991) *எரியும் இருப்பு விளக்கைம்பதுக்கு* (SII,v,610.)

இருப்பு னாராயம் (பெ) இரும்புக் கம்பி (985) *நிறை உட்கரு இருப்பு னாராயம் உள்பட* (SII,xiii,154.)

இருபத்திரண்டு (பெ) 22 (எண்) (753) *கோனோலெ யாண்டிருபத்திரண்டாவது* (SII,ii,73.)

இருபத்து நால்கு (பெ) 24 (எண்) (715) *நரசிங்க விக்கிரம பருமற்கி யாண்டு இருபத்து நால்காவது* (EI,vii,4(i).)

இருபத்துநாலடிக் கோல் (பெ) நிலம் அளக்கும் ஒரு கோல் (1535) *காவநூரில்க் கயக்கால் பட்டடையில் இருபத்து நாலடிக் கோலால் குழி நூறும் சிறலேரியில் ஏரிகீழில்* (SII,v,Appx.,50.)

இருபத்து மூன்று (பெ) 23 (எண்) (791) *கோமாறஞ் சடையர்க்கு யாண்டு இருபத்து மூன்றாவது* (SII,xiv,30.)

இருபத்தெயிந்து (பெ) 25 (எண்) (691) *இருபத்தெயிந்து பங்காயி* (SII,i,151; EI,xvii,22.)

இருபத்தொன்று (பெ) 21 (எண்) (550) *சோமாசி கோதிருமானில்கு இருபத்தொன்றாவது* (CHHS,1971/62.)

இரு பெண்டிர் (பெ) பொது மகளிர் (1073) *...அடியாள் வீடும் இரு பெண்டிர் வீடொன்றும் உழமை சைவதாகவும்* (EC,x,Mb.49a.)

இரும் (பெ) பெரிய (800) *எறிவிசும்பும் இருநிலமாய்த் தென்ப* (EI,xiii,10.)

இரும்பு (பெ) இரும்பு உலோகம் (1000) *இரும்பிடைச் சேர்ந்த தெண்ணீர் வலிமை* (SII,iv,167.)

இரும்பு தாழி (பெ) பெரிய இரும்புச் சட்டி (1441) *அதிட்டான கரிங்கல்லும் யிரும்பு தாழியும் குடமும் செம்பு வைப்பிச்சு கலசம் ஆழச்சிது* (TAS,vii,p.105.)

இருமல் (பெ) இருமல் நோய் (1000) *இடும்பைக் கொதுங்கி யிருமற் பகை கொல்ல* (SII,iv,167.)

இருவர் (பெ) இரண்டு பேர் (759) *இருவருக்கும் முதக பூர்வ்வகம் செய்து* (SII,iv,827.)

இருவாச்சி (பெ) ஒரு பூச்செடி (911) *சிறு செண்பகமும் இருவாச்சியும் உள்ப்பட்டன* (SII,vii,640.)

இருவி (வி) நினைத்து (905) *எம்பெருமானை உள்ளத்திலினிதிருவி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

இரு வேலி (பெ) வெட்டிவேர் என்ற நறுமணச் செடி (852) *இரு வேலியும் செங்கழுநீரும் உள்ளியும் நடப்பெறுவதாகவும்* (SII,ii,98.)

இருவோம் (பெ) இரண்டு பேரும் (909) *கௌசிய கணபதி சூற்றியனும் பக்குடி சுதந்தியும் இவிருவோம்* (SII,v,1412.)

இருள் (பெ) துன்பம் (1197) *திக்கனைத்து மிருளகற்றி* (SII,v,1359.)

இருள் (பெ) இருட்டு (966) *கடற் பக்கத்தாரிருள் கடியும்* (SII,xiv,87.)

இருளிய (வி) இருண்ட (1012) *அளிபடுத் திருளிய சாரல் மலையட்டுஞ்* (SII,vii,863.)

இருஷி (பெ) முனிவர் (1238) *பாண்டியன் வந்து இருஷியை வணங்கி* (CHEN,xii,p.499.)

இரேகை (பெ) வரி; அரசாங்கத்தின் மொத்த வரி (நாணயத்தில்) (1466) *பூசைமிகுதி சூலவரி இரேகை முன்பிலாண்டும்* (SII,xvii,532.)

இரேவதி (பெ) ஒரு நட்சத்திரம் (992) *இரேவதியும் பெற்ற விஷுவில்* (SII,iii,49.)

இரைக்கும் (வி) ஒலிக்கும் (831) *தோட்டார் கரும்பிரைக்குந் தொன்னீர் வயல்* (SII,xiv,43.)

இரைவதி நாள் (பெ) ரேவதி நட்சத்திரம் (888) *நாயிற்றுக் கிழமை பெற்ற இரைவதி நாள்* (SII,v,684.)

இல் (வி) இல்லாத (771) *அற்றமிலடர் வேற்றானை* (EI,xvii,16.)

இல் மனை (பெ) வீடு கட்டுதற்குரிய இடம் (985) *இல்மனையும் பாத$_3$சி$_0$வ ஆசார்ய்யன்* (SII,v,589.)

இல்லம் (பெ) வீடு (985) *ப்ரஹ்மதே$_3$வாமாக அவர் காட்டின சேரியிலே யில்லம் ஒத்திக் குடி இருந்து* (SII,vii,742.)

இல்ல மனை (பெ) (= இல்மனை) (985) *மேற்கும் இல்லமனையும்* (SII,xiii,73.)

இல்லமுடையாள் (பெ) மனைவி (985) *வடுகங்காரியும் இவன் இல்லம்முடையாள் ஊரன் வேம்பியும்* (SII,xix,271.)

இல்ல வளா (பெ) (= இல்லவளாகம்) (771) *ஒரு இல்லவளாவும் இரண்டு மாச் செயும்* (EI,xvii,16.)

இல்ல வளாகம் (பெ) வீட்டைச் சுற்றியுள்ள இடம் (892) *இல்லவளாகமும் தோட்டமும்* (SII,iv,531.)

இல்ல வளால் (பெ) (= இல்லவளாகம்) (905) *தொன்னில முழுவதும் இல்லவளா லதுவாகவும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

இல்லறம் (பெ) குடும்பத் தோடிருந்து நடத்தும் வாழ்க்கை (1200) *போர் வேற் சடையன் புதுவையா னில்லறத்தை யார் போற்ற வல்லாரறிந்து* (CHEN,iv,p.251-52; v,p.59-60.)

இல்லா (வி) இல்லாத (771) *அற்றமில்லாக் கொற்றன் புத்தூர்* (EI,xvii,16.)

இல்லாதது (வி) இல்லாமற் போதல் (789) *குறங்கறுத்தும் கொள்ளப்பெறுவார் இல்லாததாகவும்* (SII,ii,99.)

இல்லாதார் (பெ) பெறாதவர் (804) *இப்பரிசினால் முழுச் சிராவணை இல்லாதாரை* (SII,xiv,37.)

இல்லாமை (வி) இன்மை (865) *தனிக் கல்லால் உபைபயோகமில்லாமையால்* (SII,xii,55.)

இல்லி (பெ) துளை (1000) *இல்லிபட்ட நெடும்பக் களைய* (SII,iv,167.)

இல்லி (பெ) இல்லாதவன் (905) *தொண்டியர் கோன் துளக்கில்லி* (PNDCP,p.95-115; TASSI,1962-65,p.1-31.)

இல்லிப் பூடு (பெ) ஒரு வகைப் பூண்டு (1187) *அருகு இல்லிப்பூடும் இராவணன் மோவாயும் எழுந்து மணல் குன்றாந நிலமும்* (SII,v,990.)

இல்லிருக்கை (பெ) வீடுகட்டும் இடம் (955) *சவையார் இனக்கு இல்லிருக்கையாக அட்டின தோட்டம்* (SII,viii,626.)

இல்லை (வி) கிடையாது (936) *அறமறவேல் அறமல்லது துணையில்லை* (SII,vii,954.)

இல்லோர் (பெ) இழந்தவர் (1171) *தாயரில்லோர் தாயராகியு* (SII,xvii,592.)

இலக்கணம் (பெ) வரையறை (992) *திருவமிர் துக்குப் பணித்து இலக்கணஞ் செய்து* (SII,xiii,160.)

இலக்கம் (வி) அரசாங்கத்துச் செலுத்தும் மொத்த வரி (1426) *அதிகாரிகள் நாட்டிலே அன்னியாயத்திலே இரட்டிக்க இலக்கம் எடுத்து நாடு நலங்கித் தென்றும்* (SII,xvii,562.) ; (1463) *ஊர்களுக்கு இறை இலாபம் ஆகப் பதிந்து வருகிற இலக்கம் உள்ளதும்* (SII,iv,506.)

இலக்கிச்சு (வி) கணக்கிட்டு (885) *அன்றன்று படுமுலக்கு அஞ்சுவண்ணமும் மணிக்கிராமும் இலக்கிச்சு வைப்பதாகவும்* (TAS,ii,p.80-82.)

இலக்கித்தான் (வி) காப்பாற்றினான் (800) *இத்தர்மத்தை இலக்கித்தானடி என்றலைமேலன* (SII,vii,80.)

இலக்கிப்பான் (வி) காப்பாற்றுவான் (1000) *இத்தந்...து இலக்கிப்பான் அடி முடி மேல்லின* (CHHS,1971/125.)

இலக்கை (பெ) குடியிருப்பு (1144) *கொற்றுக்கும் இலக்கைக்கும் அடைத்த நிலம் 2 வேலியினால் நெல்* (SII,xvii,597.) ; (1453) *திருநன் தவனம் பயிற்செய்கிற தோப்பு ஆள் இலக்கைக்கும் ஆகரம் முடைய நாயக்கத்தனம் ஆன வடகரை வெண்கோன்குடியில்* (EI,iii,12c.)

இலக்கை (வி) காத்தல்; மேற்பார்த்தல் (985) *மஹேசுரர் இலக்கையாக எரிப்பாரானார்* (SII,vii,527.)

இலக்ஷா போகம் (பெ) (= ரக்ஷாபோகம்) (1550) *செதுங்க நாட்டுத் துருவமும் சிறைவாயித் துருவமும் உள்பட இலக்ஷாபோக வகையும் திரிகெக் கடமையும்* (TAS,ix,p.22-24.)

இலக (வி) விளங்க (1120) *பொற்றடமிரண்டும் செம்மா மலரிலகச் செய்தமைத்தான்* (CHEN,xxiii,p.93-96.)

இலங்க (வி) தோன்ற (833) *பொருப்பனைய நெடுமாடம் பொலிந்திலங்க முகிறணியும் இருப்பைக்குடி வளநகரம்* (SII,xiv,44.)

இலங்கணம் (பெ) தடை (1241) *இதுக்கு இலங்கணம் சொனவன்* (SII,xvii,705.)

இலங்காபுரம் (பெ) இலங்கை (1000) *வெண்கடலுட் போயிலங்காபுரஞ் செற்ற* (SII,iv,167.)

இலங்கு (வி) விளங்கும் (833) *செந்நன் மலையுந் திகழ்ந்திலங்கு மணிப்பூணும்* (SII,xiv,44.)

இலங்கும் (வி) ஒளிவிடும் (785) *நின்றிலங்கும் மணி நீண்முடி நிலமன்னவ நெடுஞ்சடையற்கு* (PNDCP,p.55-62; IA,xxii,p.57-75.)

இலங்கேசன் (பெ) இலங்கை யரசன் (1046) *ஏழ்கடலீழம் புக்கிலங்கேசநாகிய விக்கிரம பாண்டியன்* (SII,viii,3.)

இலங்கொளி (பெ) மிக்க ஒளி வீசுகின்ற (1221) *இலங்கொளி மணி முடி இந்திரன் பூட்டிய பொலங்கதிராரம்* (IPS,256.)

இலச்சினை (பெ) முத்திரை (1100) *பெண்கள் எழுவரைத் தலை இலச்சினையிட்டு* (EZ,iv,24.)

இலத்ஜஷணம் செய்து (வி) காத்து (869) *இப்பொன் கொண்டாரை இலத்ஜஷணம் செய்து* (SII,vii,523.)

இலந்தை (பெ) மரவகை (1018) *இலந்தை மரத்தோடு நின்ற புற்றேயுற்று* (SII,iii,205.)

இலயமிது (பெ) தாம்பூலம் (956) *இலயமிதுக்குத் தெரியிலை நியதம்* (SII,xiv,86.)

இலன் (பெ) இல்லாதவன் (866) *புவிச்ஶ்ரம் இலன் த்ரைராஜ்ய வ்யவஹாரத்துக்கு* (TAS,i,p.1-14.)

இலாஞ்சினைப்பேறு (பெ) ஒரு வரி (1254) *சந்திவிக்ரஹப்பேறும் வாசற்பேறும் இலாஞ்சினைப்பேறும்* (SII,v,419.)

இலாமச்சம் (பெ) ஒருவகை வாசனைவேர் (1014) *ஏலவரிசிக்கும் இலாமச்சத்துக்கும்* (SII,ii,24.)

இலாமை (பெ) இல்லாமை (986) *முன்பு இத்தேவர்க்கு நிவந்தஞ் செய்திலாமையில் நிவந்தஞ் செய்யவும்* (SII,iii,128.)

இலாளர் (பெ) குசராத்தியர்கள் (1425) *கன்னடிகர் தமிழிர் தெலுங்கர் இலாளர் முதலான அசேஷ கோத்ரத்து* (SII,i,56.)

இலி (வி) இல்லாமல் (800) *யிறையிலி மீயாட்சி உண்ண அட்டின நிலம்* (IPS,237.)

இலுப்பய் (பெ) இலுப்பை மரம் (1187) *..நிலத்து பனையும் இலுப்பயும் உள்ளிட்டு மரமாக்கலாம்* (SII,v,990.)

இலுப்பைப் பால் (பெ) இலுப்பை எண்ணெய் (1014) *இலுப்பைப் பால் இரு கலனெ* (SII,ii,92.)

இலேகை (பெ) எழுத்து (900) *அவியலன் நடக்கன் இலேகை* (TAS,i,p.197-200.)

இலேசு (பெ) உடல் நலம் (1219) *திருமேனிக்கு நன்றாக இலேசுபெற வேணுமென்று* (IPS,250.)

இலை (பெ) செடியின் உறுப்பு (800) *பேரிலைப் பங்கயம்* (EI,xiii,10.)

இலை (பெ) வாழையிலை (941) *இலைஇடுவா னுக்கு நெல்லு எழுகாடியும்* (SII,viii,529.)

இலைக்கூலம் (பெ) வெற்றிலை வாணியர் மீதான வரி (960) *இலைக்கூலமுந் தறிப் புடவையும்* (EI,xv,5.)

இலைக்கொடி (பெ) வெற்றிலைக் கொடிக்கால் (1234) *இலைக்கொடியும் பட்டப்பாழும் நன்சை புன்சை யுள்ளிட்ட கடமைகளுங்* (SII,iv,850.)

இலைச் செப்பு (பெ) வெற்றிலைச் சிமிழ் (1014) *இலைச் செப்பு ஒன்று யாளிக்கால் நாலும்* (SII,ii,1.)

இலைசுனி (பெ) மாணிக்கத் தன்மைகளில் ஒன்று (1014) *மரகதம் மூன்றும் தைச்ச மாணிக்கம் சட்டமும் இலைசுனியும் ஒன்றும்* (SII,ii,93.)

இலைத் தட்டி (பெ) இலை போன்ற தட்டு (1200) *நாராயணந் உமையாண்டாள்ளிட்ட இலைத்தட்டி* (SII,v,661.)

இலைத் தட்டு (பெ) பூசைப் பாத்திரவகை (1009) *வெண்கலம் இலைதட்டு ஒன்று நிறை முப்பலம்* (SII,v,521.)

இலையிடுமவன் (பெ) வாழை இலைகளைக் கொடுப்பவன் (1000) *இலையிடுமவனு நானாழி வாயிற்க்கல் நிற்க்குமவனு நானாழி* (TAS,ii,p.173-207.)

இலைவாணியப் பாட்டம் (பெ) வெற்றிலை வாணிகர் மீதான வரி (1056) *இலைவாணியப் பாட்டமும் காலளவு பாட்டமும் பாடிகாவற்கூலியும்* (TAS,i,p.164-68.)

இலைவேல் (பெ) இலை போன்ற வடிவுடைய வேலாயுதம் (905) *கதிரார் கடுஞ்சுடரிலை வேல்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

இலை அமிர்து (பெ) வெற்றிலை (878) *இலை அமிர்து* (SII,xiv,13.)

இவ்வனைத்தும் இவையெல்லாம் (849) *குடநாழியும் மிவ்வனைத்துங்(க்) கொள்ளப் பெறார்* (TAS,ii,p.67-68.)

இவ்வனைவோம் (பெ) இவ்வனைவரும் (885) *சிங்க நம்பி உள்ளிட்டிவ்வனைவோம்* (SII,xii,105.)

இவகள் (பெ) இவர்கள் (885) *இவகள்க்கு குடுத்த வீடுபேறாவது* (TAS,ii,p.80-82.)

இவள் (பெ) இந்தப்பெண் (807) *இவள் தங்கை இரையானாச்சிய்* (SII,xiv,38.)

இவற்றுள் (பெ) இவ்விடங்களில் (785) *விண்ணஞ் செழியக்குடி என்றிவற்றுட் டெவ்வரழிய* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62)

இவன் (பெ) இந்த ஆண் (753) *இவன் பெறும் னெயும் மனெப்படப்பு* (SII,ii,73.)

இவிகள் (பெ) இவர்கள் (849) *இவிகள் பந்நிருவரும்* (TAS,ii,p.67-68.)

இவுளி (பெ) குதிரை (771) *மால்களிறும் இவுளிகளும்* (EI,xvii,16.)

இவை (பெ) சுட்டியறியப்படும் அண்மைப் பொருள் (771) *இவையுத்$_3$த$_4$கேஸரிப் பெரும்பணைகாரனெழுத்து* (EI,xvii,16.)

இவைச்சுக்கு (பெ) இவையிற்றுக்கு (809) *இவைச்சுக்கு புணைப் பெரும்பழஞ்சி ஊராரே* (SII,xiv,40.)

இவைத்தில் (பெ) இவையிற்றில் (884) *இவைத்தில் வர்த்$_3$த$_4$மாநம் கொண்டு* (SII,xii,68.)

இவைத்துள் (பெ) இவற்றுள் (765) *ப$_4$க$_3$வதியார் பங்கு இவைத்துள் அஷ்டசதத்தின் மேல்* (EI,xxxvi,20.)

இழ (வி) நீக்க (989) *சந்திராதிதவற் இறையிலி யாக இறையிழப் பணித்து* (SII,xiii,83.)

இழக்க (வி) நீக்க (1268) *இவ்வூர் அனைத் தாயமும் இழக்கத் திருநாமத்துக் காணி* (SII,viii,359.)

இழந்து (வி) தொலைந்து (905) *இரண்டின் செப்பேடு மறக்கேட்டால் இழந்து போயின* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

இழப்பது (வி) உரிமை விடுவது (866) *பொருவார் அற்றைக் கலம் இழப்பது* (TAS,i,p.1-14.)

இழற்கடிவரி (பெ) ஒரு வரி (1300) *பொதுமக்கள் பேர்கடமை னாட்டுவரி மகண்மை வாசலொட்டு பழநடை காணிக்கை இழற்கடிவரி கனவாராச்சி* (SII,vii,57.)

இழிக்க (வி) தோண்ட (789) *துரவு கிணறிழிக்கப் பெறுவதாகவும் காவு தெங்கிடப் பெறுவ தாகவும்* (SII,ii,99.)

இழிச்ச (வி) தோண்ட (978) *துரவு கிணறிழிச்ச பெறுவதாகவும்* (SII,iii,151-151a.)

இழிச்சி (வி) இடித்து (850) *திருமண்டபம் இழிச்சியெடுப்பதற்கு* (SII,iii,43.)

இழிச்சிவித்து (வி) இடிக்கச் செய்து (1110) *இஷ்டிகை இழிச்சிவித்து* (CHEN,xv,p.241.)

இழிஞ்சு (வி) இறங்கி (1000)

இச்சிங்களாந்தகனடுவே தெற்கு நொக்கி இழிஞ்சு ஏறித் தெற்கு நோக்கிச் சென்று (TASSI,1958-59,p.84.)

இழித்த (வி) தோண்ட (852) *துரவு கிணறிழித்தப் பெறுவதாகவும்* (SII,ii,98.)

இழித்தி (வி) இடித்து (1029) *இத்திருக்கற்றளி ஜீர்ணித்தி இழித்திச் செய்கையால்* (IPS,99.)

இழித்து (வி) இடித்து (831) *பழங்கரை இழித்து* (SII,xvi,43.)

இழிந்து (வி) கீழிறங்கி (796) *சிவிகை மேனின்றுமிழிந்து* (SII,iv,135; MASI,lxiii,p.54-59.)

இழிய (வி) நீங்க (959) *எப்பேர்பட்ட இறையும் இழிய பணித்து* (SII,iii,159.)

இழிவித்து (வி) உழுவித்து (785) *கொடுஞ்சிலை பூட்டிழிவித்து* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

இழுது (பெ) பேய் (1209) *தம் குடமண்டபங் கழுதையேரிட இழுது புகழக் கதிரவிய* (IPS,163.)

இழுது (பெ) வெண்ணை (1012) *பொழுது மூன்றினுக் கிழுதுபடு செந்தயிர்* (SII,vii,863.)

இழுவை (பெ) ஒரு நீட்டல் அளவு கோல் (1387) *புழுதிவனப் பெருமாள் ஜீவிதந் திறந்து இழுவையால் வேலி பத்தரையே அரைக்கால்* (EI,viii,31.)

இழை (பெ) விளக்குத்திரி (935) *நூல் இழை இட்டு எரிப்பதாக* (SII,viii,566.)

இழைந்து (வி) சேர்ந்து (939) *அருக்கனொடு மதியிழைந்து சுடர்களுள்வளவு* (SII,xvii,501.)

இளக்கம் (பெ) தளர்ச்சி (1049) *மாளிகை தகர்ப்பித் திளக்கமில் வில்லவர் மீனவர்* (SII,iv,555.)

இளங்கூறு (பெ) இளவரசனின் ஆட்சியுரிமை நிலம் (1173) *வேணாட்டு இளங்கூறு வாண்ணருளுகின்ற ஸ்ரீவீர உதைய மார்த்தாண்ட வர்ம்ம திருவடி* (TAS,vii,p.117.)

இளங்கோக்கள் (பெ) அரசனுக்குத் தம்பிகள் (1047) *திருந்தமையனையும் குறிகொள் தந்னிளங்கோக்களையும் நெறியுணர்ந்த* (SII,v,978.)

இளங்கோப்பருவம் (பெ) இளவரசு நிலை (1075) *ஜயமகளை இளங்கோப்பருவத்து சக்கரக்கோட்டத்து* (SII,iii,68.)

இளங்கோவேளார் (பெ) ஒரு குறுநில அரசகுலப் பட்டப் பெயர் (871) *தென்னவன் இளங்கோவேளாராயிந மறவன் பூதியார்* (SII,viii,581.)

இளந்தேன் (பெ) புதுத்தேன்(?) (1120) *பச்சையிளந்தேனுக் கடங்கார்* (SII,iv,225.)

இளநிலம் (பெ) புதிதாகப் பயிரேற்றிய நிலம் (998) *இம்மூன்று வயலில் நாலெல்லைக்கு நடுவுபட்ட நீர் நிலமு மிளநிலமும் புன் செய்யும்* (SII,xvii,339; IPS,36.)

இள நிலா (பெ) குளிர்ந்த ஒளி (1210) *திசை இருநான்கும் இளநிலா வெறிப்ப மனுநெறி வளர* (CHEN,xi,p.344-6.)

இளநீர் (பெ) முற்றாத தேங்காய் (869) *இளநீர் இருபது* (SII,vii,523.)

இளநீர் வழுவை (பெ) இளந்தேங்காயின் உள்ளீடு (887) *இளநீர் வழுவை உட்பட நியதி இரு நாழி உழக்கு* (SII,xiv,16a.)

இளநீரமுது (பெ) இளநீர் உணவு (985) *பூசை செய்த பின்பு இளநீரமுது செய்ய* (SII,xiii,38.)

இளமக்கள் (பெ) வீரர்கள் (618) *கூடல் இளமக்கள் நடுவித்த கல்* (CHHS,1971/50.)

இளமக்கள் (பெ) உழுகுடிகள் (764) *ஒட்டினோம் ஊரோமும் இளமக்களும்* (TAMIZ,1970,p.124.)

இளமக்கள் காணம் (பெ) இளமக்கள் மீதான ஒரு வரி (764) *இளமக்கள் காணமு மாத்து நெல்லும்* (TAMIZ,1970,p.124.)

இளமகன் (பெ) வீரன் (591) *சாக்கை பறையனர் இளமகன்* (CHHS,1971/96.)

இளமுளைத்தாளை (பெ) பாலிகை (?) (1254) *மைச்சருவுக்கும் இளமுளைத்தாளைக்கும் பூஜைப்பேற்றுக்கும்* (SII,viii,716.)

இளமைச் சிறப்பு (பெ) திவ்வியப் பிரபந்தம் ஓதும் திருவிழா (1541) *திருவத்தி என 2ம்ந்திருநாள் கிளரொளி இளமைச்சிறப்புக்கு எம்பெருமானார் அப்பாவிந் ஸ்ரீபாதத்தில்* (TDI,iv,156.)

இளமை திருவாய்மொழி (பெ) (= இளமைச் சிறப்பு) திருமங்கை ஆழ்வார் பாசுரங்கள் (1519) *12ம் திருநாளில் கிளரொளி இளமை திருவாய்மொழி கேட்டருளி அமுது செய்தருளும்* (TDI,iii,132.)

இளவரையன் (பெ) குறுநிலமன்னர் குடும்பத்தில் இளையோரின் பட்டப் பெயர் (800) *வாலி வடுகனாயின கலிமூர்க்க இளவரையன் செய்த குளம்* (IPS,17.)

இளவெள்ளாளர் (பெ) உழுகுடி வெள்ளாளர்(?) (1213) *பறப்புனாட்டு இளவெள்ளாளரிலே சிலவர் பக்கலும்* (AVNM,7,p.52)

இளன் (பெ) ஒரு புராணக் கதாநாயகன் (905) *ஏந்தெழிற்றோள் இளனொருநாள் ஈச₀னது சா₀பமெய்தி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

இளைய (வி) வயதிற் குறைந்த (895) *இளைய அங்கி காடப்பட்டரும்* (SII,xiii,309.)

இளைய நியாயத்தார் (பெ) (= இளைய படை) (1320) *இப்படி அறிவோம் எட்டுக் கொத்து தண்டநாயகம் செய்வார்களோம் இப்படி அறிவோம் இளைய நியாயத்தாரோம்* (SII,viii,497.)

இளைய படை (பெ) இளைய வீரர்களைக் கொண்ட படை (1009) *சோழவிச்சாதிர முத்தரையனோடு இளையபடை இருமுடி சோழவீரரில்* (SII,v,1411.)

இளைய மக்கள் (ஒள) ஒரு இனத்தாரின் பெயர் (1300) *மெய்ப்பையூர் இளைய மக்களில் சுத்தன் மருதனான கொடும்பை நாடாழ்வான்* (IPS,533.)

இளைய வகை (பெ) சோழர் படையில் ஒரு பிரிவு: (= இளைய படை) (992) *உடையார் பள்ளித் தொங்கலுடையான் இளைய வகையில் அப்பூருடையான் ஆச்சன் பட்டாலகனும்* (SII,xiii,170.)

இளையவன் (பெ) தம்பி (921) *வரகுணவர்மனும் மற்றவநுக்கிளையனான மனு சரிதன்* (IA,22,p.57-75; PNDCP,p.55-62.)

இளையாள் (பெ) இரண்டாம் மனைவி (884) *அக்₃நி சித்தஸர்வ்வ க்ருதுக்கள் ப்₃ராஹ்மணி இளையாள் தாழிச்சாநி* (SII,vi,314.)

இற்றின (வி) நைந்து போனவை (1042) *தந்த பொன்நும் இற்றினவும் முறிந்தனவும் இட்டு* (SII,vi,33.)

இற்று போகை (பெ) சிதைந்து போதல் (1381) *திருமண்டபமதில் கரநாளிலே நேர் குலைந்து இற்று போகையில்* (SII,vi,552.)

இற்றை (பெ) இன்று (1222) *நெல்லே சிலவாக இற்றை வரையும் இப்படிக்கு* (SII,vii,1028.)

இற்றைக்கு மேல் இனிமேல் (957) *இம் மாக் குறுணி குளத்திற்கல்லது இற்றைக்கு மேல் ஸபை₄யோங்கொள்ளப் பெறாதோமாகவும்* (SII,xiii,165.)

இற்றைநாள் (பெ) இன்று (999) *இற்றை நாளால் பகல் எம்மூர்* (SII,vi,267.)

இறக்கப்பட்டது (வி) இறையிலி நிலையிலிருந்து இறைசெலுத்தும் நிலைக்கு மாற்றப்பட்டது (771) *களப்₄ரராலிறக்கப்பட்டது* (EI,xvii,16.)

இறக்காதான் (பெ) தான (இறையிலி) நிலையிலிருந்து நீக்காதவன் (868) *இன்னில ஒன்றையும் இறக்காதாந் திருவடி இரண்டும்* (SII,xii,58.)

இறக்கிக் கட்டின (வி) அழித்து (புதுப்பித்துக்) கட்டின (1300) *மேற்பாற்கெல்லை சுந்தரசோழன் குளத்து இறக்கிக் கட்டின கரைக்குக் கிழக்கு* (IPS,603.)

இறக்கிநான் (பெ) தடைசெய்தவன் (875) *குருக்ஷேத்ரத்து த₄ர்ம இறக்கிநானை* (SII,vi,347.)

இறக்கிய (வி) நிறுத்திய (771) *கலி அரைசன் கைக் கொண்டதனை இறக்கிய பின்* (EI,xvii,16.)

இறக்கின (வி) கெடுத்த (805) *பணியும் பிழைத்தறமிறக்கின பாபமும் படுவாராக* (SII,vi,359.)

இறக்கும் (வி) பேர்த்தெடுக்கும் (1131) *கல்லணைக்கு கல்லிறக்கும் கற்க்களத்துக்கு* (SII,xiv,223.)

இறக்குவாந் (பெ) கெடுப்பவன் (868) *இது இறக்குவாந் தங்களம்மைக்குத் தாநேய் மிணாளன்* (SII,xii,58.)

இறக்குவார் (பெ) கெடுப்பார் (1196) *இறக்குவார் வல்லவரையந் சத்தியமேய்* (SII,vii,922.)

இறங்க (வி) கெட (895) *இது இறங்க குடிமை செய்யில்* (SII,iii,93.)

இறங்கக் கிடந்த (வி) அறம் நிறுத்தப்பட்டுக் கிடந்த (1196) *தப்பில் மலையமாந் விட்டு இறங்கக் கிடந்த நிலம்* (SII,vii,922.)

இறங்கச் சங்கு (பெ) ஒரு மரியாதைச் சின்னம் (1477) *நமக்கு உண்டான வரிசை பாவாடை சேமயிர் அடக்கம் நாடகசாலை பகல்விளக்கு ஏறச்சங்கு இறங்கச்சங்கு அங்கக்களரி* (IPS,715.)

இறங்கட்டு (பெ) நீக்கி (1246) *இவ்வருகிற நிலத்தில் ஸபைப் பொதுவாக நிலம் இறங்கட்டு குடுத்து* (IPS,467.)

இறங்கல் (பெ) மானிய நிலத்தை மீண்டும் வரி நிலம் ஆக்கல் (1008) *பட்டநக் கூற்றத்து ஆனைமங்கலம் பள்ளிச் சந்தம் இறங்கலுள்பட அளந்தபடி நீங்கல் நீக்கி* (EI,xxii,34.)

இறங்கல் மீட்கை (பெ) அறமழிந்து கிடந்ததை மீட்டல் (1338) *இவர் பக்கல் அச்சுபற்றி குடுத்து இறங்கல் மீட்கையில்* (TAS,v,p.46.)

இறங்கா வண்ணம் (வி) கெடாதவாறு (1012) *தத்து நெறியிலறங்கள் யாவையு மிறங்காவண்ணம் விஞ்ஞாபனத்தால் மிக வெளிப்படுத்தோன்* (SII,vii,863.)

இறங்கு சாத்து (பெ) வெளியூரிலிருந்து சரக்குக் கொண்டு வரும் வணிகக்குழு (1300) *ஏறுசாத் திறங்குசாத்துத் திசை விளங்கு திசையாயிரத்தைஞ்நூற்றுவரோடும்* (SII,viii,442.)

இறஞ்ச (வி) வணங்க (815) *பராவனிப குலமிறஞ்ச* (SII,iii,206b.)

இறந்த காலம் (பெ) சென்ற காலம் (1493) *பூசத்து நாள் திருவரங்க₃ந் திருப்பதி இறந்த காலம் எடுத்த பெருமாள் கூடல் சக்ரவாள நம்பி* (EI,xxiv,12a.)

இறந்துபட்டு (வி) அழிந்து (1300) *கோயில் இறந்து பட்டுக் கிடக்கையில்* (IPS,560.)

இறப்பட (வி) இறங்கல் பட (1012) *முக்குடையவர் அறப்புறமான திறப்பட நீக்கிச் சாலி விளைநிலம் வெளியாக்கி* (SII,vii,863.)

இறவாமை (வி) கழியாமை (771) *பகனாழிகை இறவாமை* (EI,xvii,16.)

இறாது (வி) செலுத்தாது (753) *கோயிளுமுதல்படியால் இறாது* (SII,ii,73.)

இறாமய் (பெ) செலுத்தாமை (753) *பட்டிகைக் காணமும் இறாமயும்* (SII,ii,73.)

இறுக்க (வி) செலுத்த (952) *இத்தேவர் இறை இறுக்க கடவ நிலத்தில்* (SII,viii,611.)

இறுக்க பற்றாது (வி) வரி செலுத்த இயலாது (1238) *இன்னிலம் இறுக்க பற்றா தென்றும் இன்னிலம் ஊர்கீழ் இறையிலியாக பெற வேணும்* (SII,viii,206.)

இறுக்கை (பெ) செலுத்துகை (1125) *அநர்த்தப்பட்டு இவ்வூரிறை இறுக்கைக் குடலிலாமையில்* (SII,vii,96.)

இறுங்கு (பெ) சோளம் (1247) *எள்வரகு தினைப்புல் இறுங்கு விளைந்த நிலத்து* (SII,v,446.)

இறுத்த (வி) செலுத்தின (1018) *இறைகட்டாதே தவிந்து இவ்வூர் முன் இறுத்தபடியும் பள்ளியும் உட்பட நெல்லு* (SII,iii,205.)

இறுத்த (வி) தாக்கிய (771) *எதிரேய் வந்திறுத்த ஆய்வேளையும்* (EI,xvii,16.)

இறுத்து (வி) செலுத்தி (885) *இறையுங் காட்டாதே நாங்களே இறுத்திவை இறையிலியாக* (SII,xii,105.)

இறுப்பாற்றாமல் (வி) வரி செலுத்த முடியாமல்

(1500) *தங்கள் பற்று காடு பாழுமாய் காணாப் புரவுமாயி தாங்களும் இறுப்பாற்றாமல் தேசாந்திரத்திலே போகையிலே* (IPS,635.)

இறுப்பிக்க (வி) செலுத்தச் செய்ய (955) *தாங்கள் வேண்டு பொன் இறையிலி மன்றி இறுப்பிக்கப் பெறுவாராக* (SII,xiii,110.)

இறுப்பு (பெ) செலுத்துகை (1215) *திருவிழிச்சில் உள்ளூரில் இறை இறுப்பு அரிதாய்* (SII,iv,381.)

இறுளர் (பெ) ஒரு சாதியார் (1258) *செக்கிலியரும் இறுளருமுள்ளிட்ட அனைத்துச் சாதிகளு* (SII,vii,118.)

இறை (பெ) வரி (755) *எப்பேர்ப்பட்ட இறையு மொழிந்தோம்* (SII,vi,356.)

இறைக்க (வி) நீர் இறைத்துப் பாய்ச்ச (887) *பூமர நடுவு வைத்து நீரிறைக்கவும்* (SII,vii,926.)

இறைக்கட்டு (பெ) வரி செலுத்தும் நிலம் (1144) *இந்நெல்லு நிலவொபாதிக்கு ஏறுமாகில் இறைக்கட்டாக்கிக் கொள்ளுவது* (SII,xvii,597.)

இறைக் காவல் (பெ) செலுத்த வேண்டிய வரிக்காக முன்கூட்டியே செலுத்தப்படும் முதல் (927) *இவ்வூர் ஸபை$_4$யாரிடை நான் விலையிறைக்காவலாகக் கொண்ட நிலம்* (SII,viii,607.)

இறைக் குடிகள் (பெ) வரி செலுத்தும் குடிகள் (922) *இறைக்குடிகளில் பொன் காண வல்லாரெனப்படுவாரை* (SII,vi,295.)

இறைக்கு நீர் (வி) கருவி மூலம் மேலேற்றிப் பாய்ச்சும் நீர் (1008) *இறைக்கு நீர் இறைத்து கொள்ளப் பெறுவதாகவும்* (EC,ix,Cp.132.)

இறைக்கும் (வி) நீர் இறைத்துப் பாய்ச்சும் (1100) *திருநந்தாவாநம் இறைக்கும் திருநந்தவாநக் குடியளுக்கு* (SII,viii,235.)

இறைக் கூலி (பெ) வரி (1118) *இப்பரிசிறாதாரை இரட்டி இறுப்பிக்கக் கடவோமாகவும் குடிமகநை இறைக்கூலி கொண்டாநை* (SII,vi,57.)

இறை கட்டின (வி) அரசுக்கு வரி செலுத்தின (1014) *இறை கட்டின காணிக்கடன்* (SII,ii,4.)

இறை கட்டும் (வி) அரசனுக்குரிய வரி செலுத்தும் (1018) *வெள்ளான் வகையால் ஊர்கள் இறைகட்டும் படி இவ்வூர் இறை கட்டாதே தவிந்து* (SII,iii,205.)

இறை கடன் (பெ) நிலவரி (809) *மூன்று மாவினாலும் இறைகடனும் வழி இறை வெட்டி* (SII,xiv,40.)

இறை கரணம் (பெ) வரிக்கணக்கு (புத்தகம்) (1003) *இப்பூமி இறைகரணத்தில் செய்து குடுத்த வண்ணம்* (TAS,vi,103.)

இறை கழிப்பதற்கு (வி) வரியை நீக்குவதற்கு (1007) *இக்காசு பத்தும் இறை கழிப்பதற்கு காசு பத்தும்* (SII,xvii,470.)

இறை காட்ட (வி) வரி வசூலிக்க (879) *இந்நிலம் இறை காட்ட பணிப்பார்* (SII,xiii,187.)

இறை காட்டினார் (பெ) வரி வசூலித்தவர் (917) *இறை காட்டினாரைத் தண்டம் பன்மாஹேச்$_0$வரர்* (SII,viii,646.)

இறை காத்து (வி) வரி செலுத்ாதபடி செய்து (1011) *சந்திராத்தவற் இறை காத்தட்டுவோமாகவும்* (ALB,ix,p.95-96.)

இறை காப்பதாக (வி) வரிவிலக்கு செய்வதாக (891) *விற்றுக்குடுத்த நிலத்துக்கு இறை காப்பதாக* (SII,viii,634.)

இறை காவல் (பெ) (= இறைக்காவல்) (883) *இறைகாவலாகப் பொன் கொண்டு* (SII,vii,420.)

இறைகாவல் த்$_3$ரவ்யம் (பெ) (= இறைக்காவல்) (957) *எம்மிலிசைந்த இறை காவல் த்$_3$ரவய்மும் ஆவணக்களியேறக் கொண்டு* (SII,xiii,164.)

இறைகாவற் பொன் (பெ) இறைகாவல் பொருட்டு செலுத்தும் பொன் (953) *எம்மிலிசைந்த விறை காவற் பொன்* (SII,xiii,51.)

இறை குளம் (பெ) பாசனக் குளம் (946) *பாழ்முட்டி காலும் இறைகுளமாக கல்லி* (SII,iii,110.)

இறை கெட்டிய (வி) வரி செலுத்திய (1150) *இறை புரை யிடத்தால் ஆண்டுவரை இறை கெட்டிய* (TAS,vii,p.119-20.)

இறைச்சல் (பெ) இறைத்து நீர்ப் பாய்ச்சல் (1008) *வடபுலத்து இறைச்சல் நிலந் அரைக்கு* (SII,v,603.)

இறைச்சி (பெ) விலங்கின் ஊண் (1000) *காரிக் குதவா கடவுட் கிறைச்சியுங் கள்ளு நல்கு* (SII,iv,167.)

இறைச்சு (வி) நீரேற்றிப் பாய்ச்சல் (985) *குளத்தில் நீரேறாத தோட்டபாழுக்கு இறைச்சுப் பெறுவதாகவும் இப்பரிசு கல்லில் வெட்டவும்* (SII,xiii,333.)

இறை சுருக்கவும் (வி) வரி குறைக்கவும் (978) *பொன்னிலும் பஞ்சவாரத்திலும் யாண்டு எட்டாவது முதல் இறை சுருக்கவும்* (SII,iii,151-151a.)

இறை சுருக்கி (வி) வரி குறைத்து (908) *தேவதானம் இறை சுருக்கியும் நீர் பாயவும்* (EI,xxviii,17a.)

இறைஞ்ச (வி) வணங்க (921) *குரை கழற்காலரைசிறைஞ்ச* (SII,ii,206a.)

இறைஞ்சு (வி) வணங்கும் (1136) *வரிந்திறை குணந்திறைஞ்சுவம் பொநமலர் கொடி* (SII,vii,1038.)

இறைத்தல் (பெ) இறைத்துப் பாய்ச்சுதல் பெறும் நிலம் (1259) *இறைத்தல் ஒரு பூ நிலம்* (SII,iv,422.)

இறைத்து (வி) நீரை மேலேற்றிப் பாய்ச்சி (753) *இக்கால்களில் கூடை இறைத்தும்* (SII,ii,73.)

இறைத் தேவை (பெ) வரிக்காக செலுத்த வேண்டிய ஊழியங்கள் (1249) *கடமை குடிமை வினியோகம் வெட்டி மற்றும் எப்பேறபட்ட இறைத்தேவைகளால்* (SII,viii,193.)

இறை த்$_3$ரவ்யம் (பெ) (= இறைக்காவல்) (958) *இவன் பக்கல் இறைத்$_3$ரவ்யமும் கொண்டு* (EI,iii,38d.)

இறை நாட்ட (வி) வரி வசூலிக்க (961) *இறை நாட்டினாரையும் இறை நாட்டப் பணிச்சாரையும்* (SII,xiii,106-07.)

இறை நிலம் (பெ) வரி செலுத்தும் நிலம் (919) *கானிலத்துக்கு மேல் இறை நிலம் உடையான்* (ARASI,1904-05,p.131.)

இறை நெல் (பெ) வரியாகக் கொடுக்கும் நெல் (952) *ஒன்றரைநிலத்தாலும் ஊர்கொடு வந்த இறை நெல்லும் பொன்னும்* (SII,viii,611.)

இறைப்பார் (பெ) நீர் பாய்ச்சுவார் (992) *திருநந்தவானம் இறைப்பார்க்கும்* (SII,viii,660.)

இறைப்பான் (பெ) தண்ணீர் பாய்ச்சுபவன் (884) *நந்தவானம் இறைப்பாற்கு* (SII,xiii,238.)

இறைப் பிணை (பெ) (= இறைப்புணை) (1246) *யிடையூறுந் தீத்து ஆழ்விப்பதற்கெங்கள் வாழ்வேயாட்சி யிறைப்பிணையாவுதாகவும்* (SII,viii,708.)

இறைப்பு (பெ) நீர் இறைத்தல் (1012) *நந்தவன மிறைப்புத் தொழில் புரிந்த வருந்தவத்தோற்கும்* (SII,vii,863.)

இறைப் புணை (பெ) ஒருவர் செலுத்த வேண்டிய வரிக்காக மற்றொருவர் பொறுப்பேற்றல் (916) *நெய் அட்டுவிப்பதனுக்கும் இறைப்புணை இவ்வூர் படைத்தலைவன்* (EI,xxiii,45c.)

இறைப் பூமி (பெ) வரி செலுத்தும் நிலம் (1016) *குடிமக்கள் இறைப் பூமிக்கும்* (SII,iii,10.)

இறைப் பொருள் (பெ) (= இறைகாவல்) (772) *சவையோம் விலைப் பொருளும் இறைப்பொருளுமாகச் சார்த்திக் கொண்டு* (SII,xiv,19.)

இறைப் பொன் (பெ) (= இறைகாவல்) (914) *இறைப்பொன்னும் கா...ம் அரிசியும்* (SII,xix,191.)

இறை பதிவு (பெ) பெருவரிகள் தொகுதி (1558) *நிலம் ஒரு மாவினெட்டுமா முக்காணிக்கும் இறை பதிவும் வெட்டி வேகரியும் நாம் கொள்ளுங்கோமுறைபாடு எற்பேப்பட்டதும் தவித்து* (TAS,vi,86.)

இறை போக்கி (வி) இறை செலுத்திய பிறகு (929) *இச்செயில் என்னுடைய அரைக்காற் செயும் இறைபோக்கி நின்ற போகம்* (SII,xix,418.)

இறை போகம் (பெ) நிலவரி வருவாய் (1050) *தொண்டீச்$_0$வரம்முடையார்க்கு நாலிலொன்று*

யிறை போகம் குடுப்பானாகவும் (SII,iv,413.)

இறை மகன் (பெ) அரசன் (1012) *எழுநூற்றிருபதில் இறைமகற்குரிமை நாழி யெட்டான வாழியட்டானக் கருங்கால்* (SII,vii,863.)

இறை மிகுதி (பெ) இறை செலுத்திய பின் மீதமாகவுள்ளது (1217) *இறைமிகுதி கொண்டு நாள் ஒன்றுக்கு இருநூறு செங்கழுநீர் திருப்பள்ளித்தாமம்* (TMPL,vii,p.502-05.)

இறை முதல் (பெ) (= இறைகாவல்) (913) *ஆயிரங்குழியாலும் வந்த இறை முதல் விற்று* (SII,xii,95.)

இறை முறைமை (பெ) (= கடமை) (1531) *தியாக விநோதன் வயலுக்கு வரும் இறைமுறைமை வெட்டி முட்டாள் ஆள்த்தேவை ஏர்த்தேவை* (IPS,746.)

இறைமுறைமை ப்ரமாணம் (பெ) வரி செலுத்தும் முறை பற்றிய உடன்பாடு (1264) *அனுபவிக்க கடவராகவும் சம்மதித்து இறைமுறைமை ப்ரமாணம் பண்ணினமையில்* (SII,xii,222.)

இறையாற்றாமை (வி) வரி கொடுக்க இயலாமை (1300) *கருமாணிக்க பல்லவதரையர் அனுபவித்து இறையாற்றாமை ஊர் பொதுவாக* (IPS,472.)

இறையில்லி (பெ) இறையிலி (894) *மாச் செய் இறையில்லி செய்து குடுத்தான்* (SII,xiii,300.)

இறையிலி (பெ) இறை நீக்கப்பட்டது (772) *சேந்தஞ் சாத்தனுக்கு இறையிலியாக விற்றுக் குடுத்த பூமியாவது* (SII,xiv,19.)

இறையொழிஞ்சு (வி) வரி நீக்கி (908) *இத்தேவர் நிலம் இறையொழிஞ்சு* (EI,xxviii,17a.)

இறை யொற்றி (பெ) இறையிறுக்கும் நியதியோடு கூடிய அடைய்மானம் (1253) *இவ்வச்சு அறுபத்தொன்றுக்கும் வீரபாண்டியப் பல்லவரையன் பக்கல் இறையொற்றி கொண்ட நிலம்* (TAS,vi,16.)

இறைவயல் நிலம் (பெ) வரி செலுத்தும் நிலம் (880) *இறைவயல் நிலமும் அடை நிலமும்* (SII,xii,102.)

இறைவன் (பெ) தலைவன் (833) *சிராலங்குடி அதற்கிறைவன்* (SII,xiv,44.)

இறை வாட்டி (வி) இறை நீக்கி (970) *நிலமுதலும் பொத்தகத்தும் இறைவாட்டி* (SII,iii,150.)

இறைவி (பெ) பெண் கடவுள் (1803) *பகவதி வாள் வைத்த கோட்டத்தோதிலுற மிறைவி யிருப்பதற்கு மேன்மையுறும்* (TAS,vi,125.)

இறைவிலைப் பொருள் (பெ) = இறைகாவல் (811) *இந்நிலத்தால் யிறைவிலைப் பொருள் கொண்டு* (SII,xiv,41.)

இறை விழுத்துகை (பெ) வரி நீக்குதல் (1154) *மலைகினியனின்றான் பக்கல் இன்னிலம் இறை விழுத்துகைக்கு வேண்டும்* (SII,iii,35.)

இறை அடை (பெ) தீர்மானித்த வரி (1293) *நித்தம் இப்படிச் செல்வதாக இவ்வூரில் இறை அடை இரட்டி பலவரிவு புறத்திறை* (EC,x,Bp.27.)

இறை அறிய (வி) வரி செலுத்த (917) *இப் பெருமானடிகளிறை அறியக் கடவரில்லாராகவும்* (SII,viii,646.)

இறை இலாபம் (பெ) அரசு வரி (1463) *திருவிடையாட்டம் ஆக நடக்கிற ஊர்களுக்கு இறை இலாபம் ஆகப் பதிந்து வருகிற இலக்கம் உள்ளதும்* (SII,iv,506.)

இறை இழிச்சி (வி) வரி நீக்கி (888) *ஊர் மஞ்சிக்கமிறை இழிச்சி வைத்த நிலம்* (SII,iii,45.)

இன் (பெ) இனிய (833) *சிரீவல்லவனின் னருளால்* (SII,xiv,44.)

இன்மை (பெ) இல்லாமை (833) *எச்சமையத்தவர் தமக்கு மியல்வின் களவிரோத மின்மையின்* (SII,xiv,44.)

இன்றி (வி) இல்லாமல் (550) *உண்ணில னொழிவின்றி* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

இன்று (பெ) சுட்டப்படும் அன்று (962) *எங்களூர்க் காலால் இன்று விற்ற ஓரகம் நெல்லுப் பதினைங்கலமாக* (SII,xiii,151.)

இன்ன (வி) இவை போன்ற (1012) *மற்று மின்ன வளங்கொள் மதிற்பதாகை* (SII,vii,863.)

இன்னதனை (பெ) இவ்வளவு (1090) *இக்கோயில்கள் இன்னதனை காலம் பாழ்பட்டுக் கிடந்த தென்று அறிவாரில்லை* (SII,vii,533.)

இன்னருள் (பெ) மிகுந்த கருணை (833) *சிரீவல்லவனின்னருளாற் பல் சிறப்பொடு* (SII,xiv,44.)

இன்னவை (பெ) இவை போன்றவை (1012) *முறைமை மதித்து நோக்கியின்னவை பிறவு* (SII,vii,863.)

இன்னன (பெ) இப்படிப்பட்ட (950) *இன்னன பல திறல் செய்த பாண்ட்ய* (TASSI,1962-65,p.32-52.)

இன்னாதார் (பெ) பகைவர் (1198) *மற்று மிவற் கின்னாதாருடன் கூடி* (SII,vii,127.)

இன்னாள் (பெ) இன்று (1250) *இன்னாள் முதல் இக்கோயில்* (SII,iv,814.)

இன்னும் (இ) மேலும் (550) *இன்னும் தென்பாலெல்லை* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

இனக்கு (பெ) எனக்கு (883) *இனக்கு ஸந்ததி யாயிருக்க* (SII,viii,633.)

இனம் (பெ) கூட்டம் (771) *அறுகாலினம் புடை திளைக்கும்* (EI,xvii,16.)

இனம் (பெ) உயர்ந்த (1068) *இன மணிப் பீடத்திருத்தி* (EI,xxi,38.)

இனம் பண்ணி (வி) தனி சாதியாகச் செய்து (1800) *இவர்களை பிறவூர் வலையர் சாதி நீக்கி இனம் பண்ணின படியினாலே இவர்கள் குடி போயிருக்கையில்* (IPS,926.)

இன மாணிக்கம் (பெ) மாணிக்க வகை (1279) *ஆடிய அதிருங்கழற் பெருமாளுக் கினமாணிக்க மிலங்கச் செய்த* (SII,viii,69.)

இன வரி (பெ) ஒரு வரி (1260) *தட்டார் பாட்டம் செக்கிறை ஆயம் இடையர்வரி இனவரி உட்பட்ட மற்றும்* (IPS,364.)

இனவாராச்சி (பெ) ஒரு வரி (1300) *இழற்கடிவரி இனவாராச்சி ஏரிமீன்காசு நாயனார் காணிக்கையும்* (SII,vii,57.)

இனி (இ) இதன்மேல் (866) *இனி வருங் கலமூன்று சரணத்தார்க்கும்* (TAS,i,p.1-14.)

இனிது (வி) நன்றாக (771) *மண்ணினிதாண்ட* (EI,xvii,16.)

இனிய (வி) இனிமையான (771) *மற்றவற்கு மருவினிய ஒரு மகனாகி* (EI,xvii,16.)

இனியது (வி) உகந்தது (1012) *யோகிகளுள்ளது புணர்தற்கினியது பொய்கைக் கரையது* (SII,vii,863.)

இனியோகம் (பெ) (= வினியோகம்) (1502) *உலுப்பை விரியம் எச்சோறு இனியோகம் எற்பேற்பட்டனவும் கழித்து* (IPS,720.)

இனிவோகம் (பெ) (= வினியோகம்) (1403) *இவ்வூரை நோக்கி வரும் கடமை குடிமை எற்சோறு இனிவோகம் வெட்டி முட்டாவாள் பட்டடை சிற்றாயம்* (IPS,695.)

இனையன (வி) இத் தன்மையன (1036) *இராச பரிச்சினனமும் இனையன பலவு முனைவையிற் கலந்து* (SII,iv,223.)

இஷ்டகைப் படை (பெ) செங்கல் கட்டிடம் (1058) *ஸ்ரீ விமாநம் முன்பு இஷ்டகைப் படையாய்ப் பிழந்தமை கண்டு* (EI,vii,20k.)

இஷ்டாபூர்த்தம் (பெ) விருப்பப்படி (894) *முந்தாஞ் செய்த இஷ்டாபூர்த்தம்* (SII,iii,1.)

இஷ்டிகை (பெ) செங்கல் (1110) *கோயில் முன்பு இஷ்டிகையில் சீரணித்தமையில்* (CHEN,xv,p.241.)

இஷபவாஹனர் (பெ) சிவபெருமான் (978) *இஷபவாஹனர்க்குத் திருவமுதுக்கு* (SII,iii,151-151a.)

இஷவம் (பெ) எருது (876) *இஷவமும் இஷவக் கொட்டிலும்* (SII,xii,63.)

இஷிதிந (வி) (= இழித்தின): நீக்கிய (966) *தேவற்கு பூர்வாசாரம் கொண்டு இறை இஷிதிநபூமி ஆவது* (SII,vi,289.)

இஹலோகம் (பெ) இவ்வுலகம் (1520) *த$_4$மர்மத்தை பரிபாலநம் பண்ணினபேர் இஹலோகத்திலெ இஷ்ட மநோரத$_2$ ஸித்$_3$தி$_4$யை யெல்லாம் அநுப$_4$வித்து* (SII,xvii,680.)

ஈ

ஈக்காலாணி (பெ) சிறிய ஆணி (1014) *தாளிம்பத்து ஈக்காலாணியும் அரக்கும் உட்பட* (SII,ii,51.)

ஈங்கு (பெ) இங்கு (1036) *வளவன் மும்முடிசோழனையும் ஈங்கவன்றம்பி வென்றிறல்* (SII,iv,223.)

ஈச்சுவரன் (பெ) கடவுள் (833) *இருக்கோசைமலி முதலூரீச்சுவரன்* (SII,xiv,44.)

ஈச்சோப்பிகைய் (பெ) ஈயோட்டி (979) *ஈச்சோப்பிகைய் 1றினால் பொன்* (SII,xix,236.)

ஈச$_0$ன் (பெ) கடவுள் (905) *இளனொரு நாள் ஈச$_0$னது சாப$_4$மெய்தி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

ஈசா$_0$ந்யம் (பெ) வடகீழ்த்திசை (1289) *வடக்கு மீசா$_0$ந்யமுமாறு இப்படி சதுஸ்ஸீமையும்* (EI,xxxvii,32.)

ஈசா$_0$ந திசை$_0$ (பெ) வடகிழக்குத் திசை (755) *சதுர்வேதி மங்கலத் தீசா$_0$ந திசை3 ப்$_3$ரஹ்மேச்$_0$வர க்$_3$ரஹத்து* (SII,vi,356.)

ஈச்$_0$வர க்$_3$ருஹம் (பெ) சிவன் கோயில் (867) *அறிந்திகை ஈச்$_0$வரக்$_3$ருஹம் சாஸநத்தாலுடையோரும்* (SII,xii,56.)

ஈச்$_0$வர பா$_3$க$_3$ம் (பெ) சிவனுக்குரிய வலப்பக்கம் (1014) *ஈச்$_0$வரபா$_4$க$_3$ம் இரண்டு ஸ்ரீஹஸ்தமும் உமாபா$_4$க$_3$ம் ஒரு ஸ்ரீ ஹஸ்தமும்* (SII,ii,39.)

ஈச்$_0$வராலயம் (பெ) சிவன் கோயில் (877) *ஈச்$_0$வராலயமும் அதிய்தகரமும் எடுப்பித்து* (EI,vii,26a.)

ஈச்$_0$வரஸ்தாநம் (பெ) சிவன் கோயில் (1200) *சோழ மண்டலத்து ஈச்$_0$வரஸ்தாநங்களில்* (SII,v,662.)

ஈச்$_0$வரியார் (பெ) ஏழு கன்னிமாரில் ஒரு தெய்வம் (1072) *ஈச்$_0$வரியார்க்கு ஸந்தி ஒன்றுக்கு திருவமுதரிசி* (EC,x,Kl.108.)

ஈஞ்ச வண்ணம் (பெ) பகிர்ந்த முறை (958) *ஏரி நீரை நீர்க்கீஞ்சவண்ணம் காலிலே பாச்சப் பெறுவதாகவும்* (SII,vii,999.)

ஈட்டம் (பெ) கூட்டம் (1056) *தேவியர் குழாமும் பாவையரீட்டமு மேனையன பிறவு* (SII,iii,29.)

ஈடாக (வி) ஒப்பாக (1171) *சோழராஜ்யம் சென்றபடிக்கு ஈடாக* (EI,xxi,31.)

ஈடு (பெ) பகுதி (1195) *ஊர்க்கழனியிலே கீழை இரண்டாமீட்டிலே நான் கொண்டுடைய* (EC,ix,Cp.110.)

ஈண்ட (வி) சேர (1145) *தங்கள் செல்வந் தழைத்தீண்ட* (IPS,120; SII,vii,1044.)

ஈண்டிய (வி) நிரம்பிய (833) *ஈண்டிய பெருந்தெய்வத்திறற் பாண்டியர்* (SII,xiv,44.)

ஈண்டு (வி) மிகுகின்ற (771) *ஈண்டொளிய மணி இமைக்கும்* (EI,xvii,16.)

ஈத்து (வி) பகிர்ந்து (771) *அந்தணர்க்கும் அச$_0$க்தர்க்கும் வந்தணைக என்றீத்தளித்த* (EI,xvii,16.)

ஈந்த (வி) பங்கிட்ட (799) *கூற்றன் வாயினின்றும் நீரீந்தவாறுண்ணப் பணித்தேம்* (SII,ii,99.)

ஈந்தார் (வி) கொடுத்தார் (925) *கம்பலச் செய்யின் கீழ்வயக்கல் எல்லோரும் ஈந்தாரிசைந்து* (SII,viii,696.)

ஈந்தான் (வி) கொடுத்தான் (1012) *கோவலான் வீரட்டற்கீந்தான் குலவேலி* (SII,vii,863.)

ஈய்ந்த (வி) பங்கிட்ட (1030) *ஏரியிலுங் காலிலு நீர்க்கீய்ந்த வண்ணம் நீர்பாச்சப் பெறுவதாகவும்* (SII,viii,67.)

ஈரங் கொல்லி (பெ) வண்ணான் (967) *திருமெழுக்குப்புறம் நில மிரண்டு மா ஈரங்கொல்லிக்கு* (SII,xiv,95; EI,xxv,6.)

ஈரங்கொள்ளி (பெ) வண்ணான் (1014) *வண்ணத்தார் இருவர்க்குப் பேராற் பங்கு ஒன்றாக இத் தெருவில் ஈரங்கொள்ளிகளுக்குப் பங்கு இரண்டும்* (SII,ii,66.)

ஈரடுக்கும் (பெ) இரண்டு அடுக்கு (878) *வெள்ளிலை ஈரடுக்கு* (SII,xiv,13.)

ஈரணை (பெ) இரண்டு சோடி (970) *ஸம்கிராந்தி 12நுக்கும் பரிசட்ட மீரணையினுக்கும்* (SII,iii,149.)

ஈரம் (பெ) நீர்ப்பற்று (963) *ஈரமும் பதரும் நீக்கி* (SII,iii,186.)

ஈரிலை (பெ) இரண்டு இலை (800) *குறுமுளைப் போந்தீரிலைக் கொள்ளும்* (EI,xiii,10.)

ஈரைந்து (பெ) 10 (எண்) (900) *தங்கோன் சத்தி பொற்றொட்டில் இட்ட யாண்டேடியல் ஈரைந்திடுவித்தானீடிய* (EI,vii,5.)

ஈவு (பெ) பங்கு; விழுக்காடு (1236) *அரக்கல் கடமைக்கு கலச்சை ஈவு நெல்* (TAS,iii,p.59-63.)

ஈழக் கருங்காசு (பெ) நாணய வகை (960) *பெருங்குறி பெருமக்களுக்கு ஈழக் கருங்காசு* (SII,xiii,84.)

ஈழக்கழஞ்சு (பெ) நாணய வகை (950) *ஈழக்கழஞ்சு ஈரேழுதாந் பகுத்து* (TASSI,1962-65,p.32-52 .)

ஈழக்காசு (பெ) நாணய வகை (912) *அரிகுலகேசரியார் வைத்த ஈழக்காசு 40* (MCCM,viii,p.104-09.)

ஈழக்கையர் (பெ) ஈழவர் தொழிலாளிகள் (849) *ஈழவரும் மக்குடிக்கேறும் மீழக்கையர்* (TAS,ii,p.67-68.)

ஈழங்காசு (பெ) நாணய வகை (1189) *சந்தி விளக்கு ஒன்றுக்கு கொண்ட ஈழங்காசு 2 இவ் ஈழங்காசு இரண்டும்* (CHEN,xxviii,p.144.)

ஈழச்சியல் விளக்கு (பெ) இலங்கையில் வழங்கி வருவது போன்ற ஒரு விளக்கு (1009) *மேற்படி ஈழச்சியல் விளக்கொந்று உட்க்கருவும் நாராயமும் முட்பட* (SII,v,521.)

ஈழச்சேரி (பெ) ஈழவர் வாழ் ஊர்ப்பகுதி (1014) *ஸ்ரீ கோயில்களும் ஈழச்சேரியும்* (SII,ii,4.)

ஈழ சான்றான் (பெ) ஈழவன் என்ற தொழில் சாதி (929) *ஈழ சான்றான் தேவந் கலிமறி* (SII,iv,533.)

ஈழத்தரையன் (பெ) இலங்கை அரசன் (919) *பாண்டியனும் ஈழத்தரையனும் வந்து* (SII,iii,99.)

ஈழ நிலைவிளக்கு (பெ) (= ஈழ விளக்கு) (923) *இவ்விளக்கெரிய ஈழநிலை விளக்கொன்றும்* (SII,xix,397.)

ஈழப் படை (பெ) இலங்கைச் சேனை (1168) *இப்படி புகுந்தது ஈழப் படையாகிறது* (SII,vi,456.)

ஈழப் பரிசு (பெ) இலங்கைத் தொழில்முறை (1014) *பித்தளை கொண்டு ஈழப்பரிசு எண்சதுரமாகச் செய்வித்துக் குடுத்த* (SII,ii,36.)

ஈழப்பூச்சி (பெ) ஈழவர் மீதான வரி (750) *நல்லெருதும் ஈ(ழ்)ழப்பூச்சியும் இடைப்பூச்சியும்* (EI,v,8.)

ஈழப்பூட்சி (வி) ஈழவர் மீதான வரி (1008) *மாவிறையும் தீயெரியும் ஈழப்பூட்சியும் கூத்திகாலும்* (EI,xxii,34.)

ஈழம் (பெ) இலங்கை (905) *குரை கடலீழங் கொண்டும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

ஈழம்பூட்சி (பெ) ஈழவர் மீதான வரி (789) *ஈழம்பூட்சியும் இடைப்பூட்சியும்* (SII,ii,99.)

ஈழமண்டலம் (வி) இலங்கை (1012) *சூழமண்டலந் தொழ வீழ மண்டலமுங் கொண்டருளிய* (SII,vii,863.)

ஈழவர் (பெ) ஒரு தொழில் சாதியார் (789) *தெங்கும்பனையுமீழவரேறப் பெறாதாராகவும்* (SII,ii,99.)

ஈழவன் (பெ) ஈழவ சாதியைச் சேர்ந்தவன் (1000) *கொல்லனும் வண்ணானும் ஈழவனும் பறம்பனும் பறையனும் ஒரோகுடி இருப்பது* (EI,xxxiii,33.)

ஈழவிளக்கு (பெ) ஈழ நாட்டுப் பாணியில் செய்த ஒரு விளக்கு (808) *ஈழவிளக்கும் வட்டி லோஹப்பானையும்* (EI,viii,29.)

ஈன்றால் (வி) பெற்றால் (991) *சேங்கன்று ஈன்றால் உள்ளன நாகுக்கும்* (SII,xiii,132.)

உ

உக்கிராணம் (பெ) சரக்கறை (1550) *உக்கிராணம் காற்க்கிற பேற்கு வருஷம் 1க்கு ரேகை பொன் 12* (TDI,v,125.)

உக (வி) சிதற, கெட (800) *மதி போன் முகத்தால் பொற்புக வெற்புப் புகுதி* (EI,xiii,10.)

உகச்சகள் (பெ) (= உவச்சர்) (986) *உகச்சகள் தலைப்பறை ஒன்றும் மத்தளி இரண்டும்* (SII,iii,128.)

உகச்சர் (பெ) (= உவச்சர்) (992) *திருக்கோயி லுடையார்களும் உகச்சர்களும்* (SII,xiii,170.)

உகச்சு (பெ) (= உவச்சு) வாத்தியக் குழு (992) *உகச்சுத் தலைப்பறை யொன்று மத்தள மூன்றும் கறடிகை ஒன்றும் சங்கிரண்டும்* (SII,xiii,170.)

உகத்தருளிவித்த (வி) விரும்பிச் செய்வித்த (1103) *என் பேரால் உகத்தருளிவித்த* (IPS,124.)

உகந்தருளாமை (வி) விழா எடுக்காமை (1115) *எங்களூரில் நடுவிற் கோயில் முன்பு உகந்தருளாமையில் திருக்கோலம் எழுந்தருளுவிக்க* (SII,iv,445.)

உகந்தருளும் (வி) கோயிலில் குடி கொள்ளும் (1235) *பெரிய நாட்டார் தர்ம்மமாக உகந்தருளும் காராளர் கற்பகமான திருமங்கையாழ்வாற்கு* (TDI,i,40.)

உகந்தாள் (பெ) மகிழ்ந்தவள் (991) *பைஞ் பொற்குடம் ஒராயிரத் தொடைஞ்ஞூற்று கழஞ்சினால் வைத்துகந்தாள்* (SII,xiii,144.)

உகந்து (வி) விரும்பி (815) *உலக முழுதுகந்தேத்த* (SII,iii,206.)

உகப்பார் பொன் (பெ) திருமணம் முதலிய மகிழ்ச்சியான காரியங்கள் செய்வோர் செலுத்தும் வரி (1016) *நீர்க்கீய் விலையும் உகப்பார் பொன்னு மற்று மூர்படு குடிமை ஏதொன்றும்* (SII,iii,54.)

உகவை (பெ) (= உகப்பார் பொன்) (1016) *இறைவரி சிற்றாயம் எலவை உகவை மன்றுபாடல் தெண்டகுற்றம்* (SII,iii,22.)

உகவை பொன் (பெ) (= உகப்பார் பொன்) (1068) *வீரசேஷையும் உகவை பொன்னும்* (SII,vii,467.)

உகள் (வி) துள்ளும் (905) *வராலுகள் புனற்பதி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

உகாதி (பெ) (= உபாதி) (1503) *உள்ள கடமை விநியோகம் உகாதி கணக்கிலக்கை உள்பட வகையும்* (TAS,ix,p.7-8.)

உகாதி (பெ) (தெலுங்கு) ஆண்டுப்பிறப்பு நாள் (1542) *பங்குனி உத்திரத்து நாள் அப்பப்படி 1 உகாதி தீபளிகை நாள் அதிரசப்படி 2* (TDI,iv,181.)

உகாய் (பெ) ஒரு மரம் (1018) *மேலெல்லையில் உகாயோடு நின்ற புற்றே* (SII,iii,205.)

உகிர்ப்புறவன் (பெ) புலிநகம் செதுக்கப்பட்ட ஒரு நகை (1014) *திருக்கைக்காறை உகிர்ப்புறவன் ஒரணை* (SII,ii,2.)

உகுத்த (வி) சிந்திய (921) *எதிர்ந்த தெவ்வருடலுகுத்த செந்நீர்* (SII,iii,206a.)

உகைச்ச புறம் (பெ) உவச்சர்க்கு விடப்பட்ட நிலம் (1300) *மேலது உகைச்ச புறம் நிலம்* (IPS,562.)

உகைச்சர் (பெ) (= உவச்சர்) (1003) *உகைச்சர்களுக்கு நிலம்* (SII,xvii,243.)

உகைத்த (வி) செலுத்திய (905) *காடவனைக் கருவூரில் கால் கலங்கக் களிறுகைத்த கூடலர் கோன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

உச்ச (பெ) உச்சிப்பொழுது (1168) *உச்சக்கெ திரு அமுதின்னு அரியிருபத்தொரு நாழி அரியும்* (TAS,v,p.63-85.)

உச்சங்கரை (பெ) கரையின் உச்சி (950) *இப்படியேய் கொண்டு வந்து உச்சங்கரையில் அட்டு...* (SII,viii,652.)

உச்சம் போழ்து (பெ) நடுப்பகல் (894) *பெருமானடிகள் உச்சம் போழ்து திருவமிர்து செய்வதன் முன்னம்* (SII,iii,1.)

உச்ச அகம் (பெ) முற்பகல் (861) *உச்ச அகது பந்திரடி துடங்கி அந்தியில் முன்னடுக* (TAS,ii,p.85-86.)

உச்சி (பெ) நடுப்பகல் (844) *தைப்பூயத்தினாள் உச்சிப் பலிஇன் முன் குடுப்பது* (TAS,ii,p.13-14.)

உச்சிதிரிஞ்ஞு (பெ) பிற்பகல் (950) *உச்சி திரிஞ்ஞு இருபதிற்றடிக்கு அரி அளக்கக் கடவியர்* (TAS,iii,p.189-91.)

உச்சிப்பலி (பெ) உச்சிக்காலப் பூசையின் போது செய்யப்படும் படையல் (844) *தைபூயத்தினாளுச்சிப் பலி* (TAS,ii,p.13-14.)

உச்சி அகம் (பெ) முற்பகல் (950) *உச்சி அகமே திருவமிர்து செய்விக்க* (TAS,iii,p.189-91.)

உச்செதிரிஞ்ஞு (வி) பிற்பகல் (961) *உச்செதிரிஞ்ஞு ஒரடிக்கு* (TAS,viii,p.43-44.)

உச்சை (பெ) நடுப்பகல் (988) *பங்குனி உத்திரத்தினாள் உச்சையின் முன்னே இரண்டு படை (அ) எண்ணை ஆயட்டக்கடவியர்* (TAS,ii,p.40-41.)

உசத்தி (வி) உயர்த்தி (1115) *உசர்ப்பிலி உசத்தியும் குழிப்பிலி குழித்தும்* (IPS,228.)

உசர்க்க (வி) வளர்க்க (993) *உசர்ப்பிலி உசர்க்கவும் குழிப்பிலி குழிக்கவும்* (SII,xiii,182.)

உசர்ப்பிலி (பெ) போதிய வளர்ச்சியற்றவை (993) *உசர்ப்பிலி உசர்க்கவும் குழிப்பிலி குழிக்கவும்* (SII,xiii,182.)

உசர (வி) மேலெழ (939) *இக்குளங்கரை உசர அட்டப் பெறுவதாகவும்* (SII,iii,106.)

உசரம் (பெ) உயரம் (1007) *சாண்ணே ஒரு விரல் உசரத்து எண்சாணே மூவிரல் உசரத்தில்* (TMPL,xviii,p.100-01.)

உசாவடி (பெ) விஜயநகர ஆட்சியில் மேல்நிலை ஆட்சிப்பிரிவு: (= ராஜ்யம்) (1426) *பெரிய சிருப்பரசர் திருவாரூர் உசாவடி அகப்பற்று ... ... இறைஇலிப்பற்று பண்டாரவாடை அமரம் உள்ளிட்ட நாடு நாட்டவற்கு நிருபம்* (SII,xvii,562)

உசாவடிக் குத்தகை (பெ) (= உசாவடி ரேகை) (1426) *புக்கண உடையர் காலத்திலே அவன் உசாவடிக் குத்தகை இறுக்கிறபொழுது* (SII,xvii,562)

உசாவடி ரேகை (பெ) உசாவடியின் வருவாய் அலுவலகத்தில் செலுத்தும் அனைத்து வரிகளும் (1426) *தான் குத்தொகை ஆகக்கொண்டு உசாவடி இரேகையிலே கூட்டி* (SII,xvii,562)

உசிலை (பெ) மர வகை (1018) *நின்ற உசிலையென்னும் மரமே யுற்று* (SII,iii,205.)

உட்கடை (பெ) உட்புறம் (993) *புது வயக்குளத்து உட்கடை நீரோடுகாலுக்கு வடக்கு* (SII,xiii,182.)

உட்கடை (பெ) உள்ளே அடங்கியது (1211) *இன்னான்கெல்லைக்குள் உட்கடையாய் நாடறிபுகழ் நல்லூர்* (SII,v,632.)

உட்கரு (பெ) அச்சு வார்ப்புக்காக உள்ளே இடும்பொருள் (938) *இவ்ரேய் வைத்த வெள்ள விளக்கு உட்(க்)கரு உடன் நிறை* (SII,v,547.)

உட்குடி (பெ) பரம்பரை பரம்பரையாக பயிர் செய்யும் குடி (1468) *நான்கு எல்லையிலும் திருச்சூலக் கல் நாட்டி உட்குடி புரக்குடி உட்பட* (IPS,671.)

உட்கொத்து முதலி (பெ) உட்கொத்து என்ற அரண்மனைப் பணியாளர் தொகுதியின் தலை (1274) *திருமுதுகுன்றமுடைய நாயனாற்கு உட்கொத்து முதலிகளில் ஐஞ்சாத பெருமாளான காங்கராயர்* (SII,xii,239.)

உட்சிறுகால் (பெ) கிளைவாய்க்கால் (960)

உட்சிறு காலுக்கு மேற்கு (SII,xiii,89.)

உட்சிறுவழி (பெ) சந்து (925) *விளாகத்துக்கு புக்க உட்ச்சிறுவழிஇன் தெற்க்கும்* (SII,vii,740.)

உட்சிறு வாய்க்கால் (பெ) கிளை வாய்க்கால் (898) *உட்சிறு வாய்க்காலுக்கு வடக்கு* (SII,xiii,325.)

உட்திருச்சுற்று (பெ) உள் பிரகாரம் (1209) *பெருமாள் கோயில் உட்திருச்சுற்றில் என் தவப்பன்* (SII,v,491.)

உட்பகை (பெ) நட்புப்பாராட்டிக் கெடுக்கும் விரோதம் (1232) *கடிதிழைத்த உட்பகையும் புறப்பகையும்* (SII,iv,424.)

உட்பட்டது (வி) அடங்கியிருப்பது (815) *இவ்விசைத்த பெருநான்கெல்லையுட்பட்டது* (SII,iii,206b.)

உட்பட (வி) சேர்ந்து (914) *வாசலிற்ப்போந்த குடிமை உட்பட* (SII,xix,183.)

உட்புரவு (பெ) நாட்டுப்புரவிலிருந்து வேறுபட்டு தனியாக இறைசெலுத்தும் வகை (852) *மஹாதே₃வர்க்கு நாட்டு நீங்கலாய் உட்புரவாய் தேவர் தா₃னமாகப் பெற்றதற்கு* (SII,ii,98.)

உடங்கூட்டத்து அதிகாரம் (பெ) உடன் கூட்டத்து அதிகாரியின் பணி (1009) *உடந் கூட்டத்து அதிகாரஞ்செய்கின்ற கோவலூருடையாந்* (SII,v,521.)

உடநிலைசேவகர் (பெ) நெருங்கிய வீரர் குழுக்களில் ஒன்று (873) *வீரசோழ இளங்கோவேளார் வாள்படையும் உடநிலைசேவகரும்* (AVNM,10,p.15)

உடநே (வி) அப்பொழுதே (1069) *கோமரைசன் சாவ இவன் மணவாட்டிப் பிள்ளை பொன் நக்கன் உடநே தீயில் பாஞ்சாள்* (EC,x.Ct.161.)

உடப்பிறந்த (வி) ஒரு தாய் வயிற்றுப் பிறந்த (918) *இவள்ளோடு உடப்பிறந்த தானஞ்சன்* (SII,v,571.)

உடப்பிறந்தாள் (வி) சகோதரி (921) *தன்னோடுடப் பிறந்தாளை வேட்டானையு* (ARASI,1904-05,p.131.)

உடல் (பெ) முதல்: மூலதனம் (870) *இந்நெல்லுக்குடலாகச் செய்த நிலம்* (SII,xix,163.)

உடல் (பெ) உடம்பு (800) *மறங்கூர்வாய்ப் பட்டாருடல் குடைந்து* (EI,xiii,10.)

உடல்படுகை (வி) ஒத்துழைக்கை (1255) *சிவப்பிராமணருங் காவல்சோர்வுக் குடல்(ப்)படுகையால் இவர்கள் பற்றான* (IPS,601.)

உடலம் (பெ) உடல் (1120) *மாறுபடுத்தாருடலம் வன்பேய் பகிர்ந்துண்ண* (CHEN,xxiii,p.93-96.)

உடற்கோள் (பெ) மூலதனம் திரட்டல் (1300) *உள்ளிட்டவையிற்றுக்கு உடற்கோள்ப்படிக்கு பெறுவதாக நிச்சயித்த* (SII,xvii,141.)

உடன் (இ) ஒரு சேர (771) *ஓத வேலி உடன் காத்த* (EI,xvii,16.)

உடன்கூட்டத்து அதிகாரிகள் (பெ) சோழ அதிகாரிகளின் இரு பெரும் பிரிவுகளுள் ஒன்று (1056) *இவர்கள் ஏவின படியே உடன் கூட்டத்து அதிகாரிகள்* (TAS,i,p.164-68.)

உடன்கூட்டம் (பெ) சோழ அதிகாரிகளின் இருபெரும் பிரிவுகளுள் ஒன்று (1171) *திரு அபி₄ஷகம் பண்ணுவித்து உடன்கூட்டமும் நாடு [மொ]ன்றும் பட்டுச் செல்லும்படி பண்ணி* (EI,xxi,31.)

உடன்கூட்டி (வி) ஒன்று சேர்த்து (905) *ஒன்றாகவுடன் கூட்டி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

உடன்பட்டார் (பெ) சம்மதித்தவர் (889) *நெல்லட்டினாரு மட்ட வுடன்பட்டாருஞ்* (SII,xii,72.)

உடன்பாடு (பெ) ஒப்பந்தம் (1008) *திருநெல்லிக் கொள்ளும் உடன்பாடு திருநெல்லிப் பெருமாளுக்கு அட்டிக் கொடுத்தன* (IA,xx,p.290.)

உடன்பாடுவான் (பெ) சேர்ந்து பாடுகிறவன் (953) *நிவந்தத்திற் நன்கு பாடுவான் 3 கூறு*

முடன்பாடுவான் 2 கூறும் (SII,xiii,74.)

உடன்பிறந்த (வி) ஒரு தாய் வயிற்றுப் பிறந்த (1014) *இவன் உடன் பிறந்த ஆனை செல்வநும்* (SII,ii,63&94.)

உடன் புகுந்து (வி) கூடச் சென்று (800) *அவரோடுடன் புகுந்து தகடூரில் பட்டார்* (SII,vii,581.)

உடன்வாரம் (பெ) (செலவினங்கள் கழிக்கா முன்) மொத்த நில விளைச்சல் (866) *உடன்வாரம் நாற்கலனேய் எண்குறுணி நெல்லுக் கொண்டு* (TAS,i,p.1-14.); (1400) *பயிர் பாத்து உடன்வார மதிப்பிட்ட முதலிலே மூன்றிலொன்று கொள்ள...* (IPS,647.)

உடன்வேளை (பெ) அரசன் அல்லது தலைவனோடு கூடவே சாக உறுதிபூண்ட வீரர் (1200) *இவற்கு உடன்வேளையாகச் சாவக்கடவேநாகவும்* (CHEN,iii,p.255.)

உடன்று (வி) கோபித்து (1058) *செப்பரும் தீர்த்த கொழ்ப்பத்தகமையில் உடன்றமர் துடங்கிய பொழுது* (SII,viii,1.)

உடனிருக்க (வி) கூடவிருக்க (919) *ஸ்ரீ ஆஜையினால் தத்தநூர் மூவேந்தவேளான் உடனிருக்க* (ARASI,1904-05,p.131.)

உடனின்று (வி) சேர்ந்திருந்து (878) *பணிமக்களும் இளங்கோக்குடிச் சவை வாரியரும் உடனின்று* (SII,xiv,13.)

உடனேய் (வி) கூட (917) *பருடையோடும் உடனேய் இருந்து* (SII,viii,620.)

உடுக்க (வி) ஆடை அணிய (1024) *உடுக்கக் கறை ஒன்றுக்கு* (EC,x,Kl.112a.)

உடுக்கை (பெ) சிறுபறை, இசைக் கருவி (934) *மூன்று ஸந்தியும் உடுக்கை வாசிப்பானொருவனுக்கு* (SII,v,721.)

உடுக்கைப்புறம் (பெ) உடுக்கை வாசிப்பர்களுக்கு விட்ட நிலம் (1321) *சுறுக்குளத்தி குளத்திகம்பில் உடுக்கைப்புறமாக வடவெல்லைக்கு நாட்டின திருச்சூலக் கல்லுக்கும்* (SII,v,411.)

உடுத்த (வி) சூழப்பெற்ற (771) *பொழின் மருங்குடுத்த நகரூரெல்லைக்கும்* (EI,xvii,16.)

உடுத்தி (வி) அணிவித்து (1044) *ஒருவனை பெண்ணுடை உடுத்தி* (SII,v,465.)

உடும்பு (பெ) பல்லி வகை (550) *உடும்போடி ஆமை தவழ்ந்ததெல்லாம்* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

உடை (வி) மனமுடைந்த (1066) *உறைபிலத் துடை கலி யொதுங்க* (SII,v,976.)

உடை (வி) உடைய (785) *ஒலி உடை மணித் தேர்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

உடைக்கை (பெ) கரை உடைப்பு (1300) *கற்றளேரிக் குளமும் பேராம்..குளமும் இறங்கலாக உடைக்கையில் இவை* (IPS,550.)

உடைகுளப்பாழ் (பெ) குளம் உடைந்து ஏற்பட்ட பாழ்நிலம் (1232) *பழந்தேவதானமாய் உடைகுளப்பாழாய் கிடன்த மூலனேரி* (IPS,302.)

உடைகுளம் (பெ) உடைந்த கரையையுடைய நீர்நிலை (995) *பூ₄மியில் ... வாநைமா யுடை குளப்பட்டுக் கிடந்த நிலமுள்ளது* (SII,vii,1017.)

உடைகை (வி) உடைப்பு ஏற்படுதல் (1302) *சுகுணியில் பெரியேரி உடைகையில்* (EC,ix,An.80.)

உடைஞ்சு கிடக்க (வி) (1180) *சீமாகேசுர நல்லூரேரி உடைஞ்சு கிடக்க நாந் அடைத்து* (SII,viii,143.)

உடைத்தாக (வி) உடையதாக (1014) *நாற்பத் திரண்டும் உடைத்தாகக் கனமாகச் செய்த* (SII,ii,50.)

உடைத்து (வி) தகர்த்து (905) *முடி ஓடு வளை உடைத்தும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

உடைத்து (வி) உடையது (887) *எம்மூர்ச் சங்கரப்பாடி கொண்டு பொலிப் புடைத்தாகச் செவிப்போமானோம்* (SII,vii,421.)

உடைதர (வி) கவலையுற (1036) *முடக் காற்றில்*

சளுக்கி கேட்டுடை தர (SII,iv,223.)

உடைந்த (வி) பணிந்த (1045) *இலங்கைக் கிறைவந் அலங்கல் முடி பரித்து முன் தனக் குடைந்த தென்றமிழ் மண்டலமுழுதும்* (SII,vii,842.)

உடைந்து (வி) மனந்தளர்ந்து (1068) *சாமந்தனும் படு விழக் கேட்டுடைந் தாற்றாதோரோசைத் தரையினோட* (EI,xxi,38.)

உடைநிலை நிலையான சொந்தம் (1247) *திருமழபாடி மகன் சுப்பிரமண்ணியன் இன்னாயனார்க்கு உடைநிலைச் சுரவியா ஆடி அருள விட்ட பசு* (SII,xii,140.)

உடைப்பு (பெ) உடைந்த குளம், கால் முதலியன (877) *ஓடையும் உடைப்பும் உள்ளிட்டு* (EI,xviii,2.)

உடைப்பு கட்டுகை (வி) செப்பனிடுகை (1302) *மாரப்பன் தன்கையில் பொன்விட்டு ஏழு உடைப்பு கட்டுகையில்* (EC,ix,An.80.)

உடை புறங்கண்டு (வி) தோற்றோடுமாறு செய்து (1066) *சிங்கணனையும் உடை புறங்கண்டு மற்றவர் மாதேவியரோடு* (SII,v,977.)

உடைமைகள் (பெ) சொத்துகள் (1183) *இன்னிலத்துக்கு பழம்படி உடைய உரிமைகளும் உடைமைகளும்* (SII,iv,226.)

உடைய (வி) பெற்றுடைய (992) *கண்டராதித்தனுக்கு நகரத்தோம் இன்னில நானுடைய வண்ணமே யுலகமாதேவிபுரத்து* (SII,xiii,167.)

உடைய (வி) பொறுப்பான (731) *மகிழரேதது மேல் உடைய அஞ்நூற்றுக் காடியும்* (SII,vii,331.)

உடையது (பெ) பெற்றிருப்பது (731) *பொலி ஊட்டுண்ண உடையது கொறுத்தலை* (SII,viii,331.)

உடையது (வி) கொண்டது (771) *வேள்வி குடி என்னும் பியருடையது* (EI,xvii,16.)

உடையநாக (வி) உரியவனாக (877) *உபாஸித்துண்ண உடையநாக குடுத்தோம்* (SII,vi,288.)

உடைய பிராட்டியார் (பெ) காலஞ்சென்ற அரசனின் தேவி (978) *உடைய பிராட்டியார் செம்பியன்மாதேவியார்* (SII,iii,151-151a.)

உடையர் (வி) பெற்றிருப்பவர் (1014) *ஸ்ரீஹஸ்தம் உடையராகக் கனமாக எழுந்தருளுவித்த* (SII,ii,7.)

உடையன் (வி) உரிமை பெற்றுடையவன் (771) *நான்கரைப் படாகாரம் உடையன்* (EI,xvii,16.)

உடையன (வி) பெற்றிருப்பன (1015) *ரக்த பிந்துவும் காக பிந்துவும் வெந்தனவும் உடையன* (SII,ii,7.)

உடையனாக (பெ) உரியவனாக (875) *ஆராதித்துண்ண உடையனாக* (SII,vi,347.)

உடையாடை (பெ) சுவாமிக்கு உடுக்கும் ஆடை (887) *ஸ்ரீ உடையாடை இணை மூன்று காசு பெற்றன* (SII,xiv,16a.)

உடையார் (பெ) அரசர் மற்றும் குறுநிலத்தலைவரின் பட்டம் (500) *குழலூருத் துஞ்சிய உடையாரால் வேள்கூருப் பெயப்பட்ட* (AVNM,1,p.67-69)

உடையார் (பெ) (953) *ப்ருத்விகங்கரையர்க்கு விண்ணப்பஞ் செய்ய உடையாரும் க்ராமஞ் செய்கிற போழ்து* (EI,vii,26d.)

உடையான் (பெ) நிலக்கிழான் (916) *கீழ் மாந்தூர் உடையான் ஸுப்ரமண்யன்* (SII,xix,221.)

உடையேன் (பெ) உடையவனாகிய நான் (984) *பெருமக்கள் பக்கல் விலை கொண்டு உடையேன்னா இம்மஹா ஸபையார்க்கே* (SII,xix,357.)

உடைஆர் (பெ) உரிமை உடையவர்கள் (745) *இப்பள்ளி உடைஆரை நீக்கி* (TAMIZ,1970,p.122.)

உண் (வி) சாப்பிடும் (992) *இவனே சாலை உண் வெண்கலநூறும் எண்ணி* (SII,xix,357.)

உண்டழிவு (வி) செலவு (970) *திருவிழானாளால் உண்டழிவிதுக்கு* (SII,iii,149.)

உண்டன (வி) சாப்பிட்டன (1000) *கண்டன கேட்டன வுற்றன காமறுசுவையால் உண்டன*

மோந்தன (SII,iv,167.)

உண்டாகில் (வி) இருக்குமானால் (885) *தங்கள் செய்யும் பிழையுண்டாகில்* (TAS,ii,p.80-82.)

உண்டாகில் (வி) ஏற்பட்டால் (1001) *இடுக்குவித்த க்ராணமுண்டாகிலும் ஸ்நபன செய்தருள* (SII,xvii,222.)

உண்டார் (பெ) அனுபவித்தவர்கள் (753) *குற்றேத்தம் பண்ணியும் கொண்டுண்டார்* (SII,ii,73.)

உண்டி (பெ) உணவு (905) *பாயல் மீமிசை நிமிர்ந்து பல்லுண்டி விருப்புற்றும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

உண்டிகை (பெ) அரச ஆணை முத்திரை (802) *உண்டிகையும் பட்டிகையும் காட்டாதே* (SII,xii,42.)

உண்டு (வி) பெற்று (1000) *நீருண்டு நெல்லு விளைவதாக* (TAS,vi,103.)

உண்டு (வி) அனுபவிப்பது (805) *நில்லாமுன்னுண்டேல் உண்டு மிக்கது* (SII,xii,40; EI,xi,15.)

உண்டு வருகின்ற (வி) அனுபவித்து வருகின்ற (973) *மாலைகாரன் உண்டு வருகின்ற விளக்குடி நிலத்தில்* (SII,xiii,270.)

உண்டேல் (வி) இருந்தால் (805) *தளரச் செய்து நில்லாமுன்னுண்டேல் உண்டு மிக்கது* (SII,xii,40; EI,xi,15.)

உண்ண (வி) சாப்பிட (870) *இவ்வக்ரமுண்ண இட்ட கலம் நாலு* (SII,xix,163.)

உண்ண (வி) அனுபவிக்க (731) *நெல் அஞ்பதின் காடிக்கும் பொலிஊட்டுண்ண உடையது* (SII,viii,331.)

உண்ணக் கடவர் (வி) சாப்பிட உரிமையுடையவர் (1014) *சிவயோகிகள் பதின்மரும் உடையார் சாலையிலே உண்ணக் கடவர்* (SII,ii,28.)

உண்ண கடவ (வி) வருவாயாகப் பெறும் (800) *முருகன்படுகன் தரவின்னால் உண்ண கடவ நெல்* (SII,vi,448.)

உண்ணடை (பெ) வழக்கம் (1200) *கோட்டுவாயிரவேலிக் கச்சத்திலப்பட்ட உண்ணடை [கொ]ள்வது சிறைக்கல்* (SII,v,786.)

உண்ணப் பாலன (பெ) அனுபவிக்கத் தக்கன (789) *கோத்தொட்டுண்ணப்பாலன எவ்வகைப் பட்டனவும்* (SII,ii,99.)

உண்ணப் பெறுவார் (வி) அனுபவிப்பார் (753) *வெள்ளக்காலும் தோண்டிக் கொண்டுண்ணப் பெறுவாராகவும்* (SII,ii,73.)

உண்ணல் (பெ) அனுபவித்தல் (914) *இறையிலி உண்ணல் பெறுவாராகவும்* (SII,xix,191.)

உண்ணாதன (பெ) முடியாதன (1015) *வேறு நிறையறிய உண்ணாதன* (SII,ii,7.)

உண்ணாது (வி) (= ஒண்ணாது): முடியாது (999) *இத் தேவர் தேவதானங்களுக்கு இறைஇறுக்க உண்ணாதென்றும்* (TAS,ii,p.1-7.)

உண்ணாழிகைப் புறம் (பெ) கருவறைச் செலவுக்கு விடப்பட்ட நிலம் (759) *மாணிக்கத் தேவர்க்கு உண்ணாழிகைப் புறமாக பணித்துக் குடுத்தேன்* (SII,iv,827.)

உண்ணாழிகையுடையார் (பெ) பூசாரிகள் (985) *தேவகன்மிகளும் உண்ணாழிகையுடையாரும்* (SII,iii,142.)

உண்ணாழியைப் பெருமக்கள் (பெ) பூசாரிகள் (962) *ஒரு நந்தாவிளக்கெரிப்போமானோம் உண்ணாழியைப் பெருமக்களோம்* (SII,iii,181.)

உண்ணிலம் (பெ) உள்ளே அடங்கிய நிலம் (772) *உண்ணிலம் ஒழிவின்றிக்கேய்* (SII,xiv,19.)

உண்ணிலன் (பெ) (= உண்ணிலம்) (550) *உண்ணிலனொழிவின்றி* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

உண்ணினின்று (வி) முன்னிலையிலிருந்து (1008) *தன்ஞ்ஞாதிகளும் யோகிகளும் உண்ணினின்று செலுத்தி கொள்ளக் கடவர்* (IA,xx,p.290.)

உண்ணும் (வி) வாழும் (1000) *கவையலைத் துண்ணுங் கவைஞர்* (SII,iv,167.)

உண்ணும் (வி) உணவு கொள்ளும் (992) *நெல்லு ஐகலமும் உத்தமாக்$_3$ரத்து உண்ணும் ப்ராஹமண சிவயோகி$_3$களும்* (SII,xix,357.)

உண்பதற்கு (வி) சாப்பிடுவதற்கு (958) *உச்சம்போதுண்பதற்கு* (SII,iii,119.)

உண்பது (வி) சாப்பிடுவது (866) *அஞ்சு காணம் பொன்றண்டம் இட்டு சாலை உண்பது* (TAS,i,p.1-14.)

உண்பார் (பெ) அனுபவிப்பார் (691) *பங்கிட்டுண்பாராகவும்* (SII,i,151; EI,xvii,22.)

உண்பான் (வி) சாப்பிடுவான் (755) *ப்$_3$ராஹ்மணனாராதித்துண்பானாக* (SII,vi,356.)

உணக்கலரி (பெ) நன்கு உலர்ந்த அரிசி (1237) *அளவும் உணக்கலரியும் வெற்றிலையு மடைக்காயும்* (TAS,vii,p.127.)

உணக்கி (வி) உலர்த்தி (992) *திருவமிர்தினு வித்தும் அக்கிரத்தினு உணக்கியுரி போகி* (TAS,ii,p.34-47.)

உணங்க (வி) வாட (1120) *நில்லாதார் தாள்வரை வாய் நின்றுணங்க* (CHEN,xxiii,p.93-96.)

உணங்கல் (பெ) உலர்த்திய தானியம் (985) *உள்ளூரும் பிடாகையும் உணங்கல் பிடித்து இருநாழி உழக் கரிசி கொண்டு* (SII,viii,655.)

உணங்கற்பிடி (பெ) (வீட்டிற்கு?) ஒரு பிடி உலர்த்திய அரிசி (965) *தேவர்க்கு ஊரோம் எம்மூர் விளைவு பட்டியில்த் தேவகுட்டையும் உணங்கற்(ப்) பிடியுமி ஸ்ரீ கோயிலின்றெற்க்கில் மனையும்* (SII,iii,187.)

உணங்குவது (வி) வாடுவது (1243) *காவல் மன்னவர் திறையுட னுணங்குவ துன் பெருந் திருவாசல்* (EI,xxiii,27.)

உணத்தல் (பெ) அறியும்படி செய்தல் (1068) *வந்தடியினை வணங்கிய வாசகமுணத்தலும்* (SII,iii,30.)

உணர்தற்கரியது (வி) அறியமுடியாதது (1012) *நினைப்பினுமுணர்தற் கரியது* (SII,vii,863.)

உணர்ந்த (வி) அறிந்த (1012) *மேலாறுணர்ந்த நாலாறெண்பயில் அந்தணரனைவர்க்கு* (SII,vii,863.)

உணர்ந்தாங்கு (வி) அறிந்தபடி (1012) *நான் மறை தெரிந்த நூன் முறையுணர்ந்தாங் கருச்சனா விதியோடு தெரிச்சவாகமத் தொழில்* (SII,vii,863.)

உணர்வு (பெ) அறிவு (1000) *கலைகொடுத்த வொண் கொடியாரை யுணர்வழிந்தாரென்று* (SII,iv,167.)

உணர்வெய்தி (வி) அறிவு பெற்று (905) *சா$_0$ஸ்த்ரமும் தன்னோடு பிறரோதிக் கேட்டுணர்வெய்தி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

உணர்வோன் (பெ) அறிபவன் (905) *அருந் தமிழின் பாத்தொகு பொருள் பயன் உணர்வோன்* (PNDCP,p.95-115; TASSI,1962-65,p.1-31.)

உணரும் (வி) அறிந்த (1036) *சுருதி நன்குணருஞ் சோழ பாண்டியனையும்* (SII,iv,223.)

உணும் (வி) பெறும் (768) *இவ்வேரியி னீருணுந்நிலம்* (SII,xii,34.)

உத்ச$_0$ங்கம் (பெ) நசித்துப் போதல் (796) *ராஜ்யமுத்ச$_0$ந்நமாயது நிவ்வஹிக்க மாட்டாது* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

உத்தமகர்ணாதி தைலம் (பெ) மருந்து எண்ணை வகை (1068) *லசு$_0$உநாத்$_3$யேரண்ட தைலந் தூணியு முத்தம கர்ணாதி தைலந்தூணியுமு* (EI,xxi,38.)

உத்தம நீதி (பெ) சிறந்த நீதி (1168) *எழுபத் தொன்பது நாட்டு உத்தம நீதி உயர் பெருங்கீத்தி முத்தமிழ் மாலை மும்மையும் நிறைந்த* (SII,viii,291.)

உத்தம அக்கிரம் (பெ) (= உத்தமாக்$_3$ரம்) (939) *திருவமிர்து உத்தம அக்கிரமாகத் தேவர் அமிது செய்வதாகவும்* (SII,iii,106.)

உத்தமாக்$_3$ரம் (பெ) பிராமணர்க்கு அளிக்கப்படும் சிறந்த உணவு (870) *வைச்ச உத்தமாக்$_3$ரத் துக்குக் குடுப்பதாகவும்* (SII,xix,163.)

உத்தமோத்தமம் (பெ) மிகச் சிறந்தது (961) *மஹாதேவர்க்கு சிதாரி உத்தமோத்தமபடி அகிலும்* (SII,xiii,109.)

உத்தரபடை (பெ) விட்டத்து மேல் கட்டிடம் (1198) *திருப்பணியில் உத்தரப்படைக்கு கொண்ட காசு 500* (IPS,152.)

உத்தரம் (பெ) மறுமொழி (1460) *எப்பேறப்பட்ட இறைவரி ஊழியம் உள்ளது தவித்து நாங்கள் உத்தரஞ் சொல்வதாக எங்கள் இறை மேலெ வைத்துக்கொள்ளுகையில்* (IPS,799.)

உத்தரம் (பெ) வடக்கு (950) *மற்றதனுத்தரம்திசை ஓங்கெல்லை நாட்டு பெருங்காலினின்றுங்* (TASSI,1962-65,p.32-52 .)

உத்தரம் (பெ) விட்டம் (1252) *சிரீகோயில் அதிட்டானம் துடங்ஙி உத்தரத் தோளமு* (TAS,iv,p.151-52.)

உத்தரம் (பெ) ஒரு நட்சத்திரம் (960) *சித்திரை உத்தரதிந் நான்று அமுது செய்வதாகவும்* (SII,vi,441.)

உத்தர மந்த்ரபத$_3$ம் (பெ) உத்தர மந்திரிப் பதவி (815) *அநுஜந் உத்தரமந்த்ரபத$_3$மெய்தின* (SII,xiv,2; EI,viii,33b.)

உத்தர மந்திரி (பெ) முற் பாண்டிய அரசாங்கத்தில் ஓர் உயர் அலுவலர் (815) *குண்டுருத்தர மந்திரியாயின தாயன் சிங்கன்* (SII,iii,206b.)

உத்தரமயநம் (பெ) சூரியன் வடக்காகத் திரும்பும் காலம் (923) *உத்தரமயநமும் [யூ]ட்டிமயநமுமும்* (SII,iii,11.)

உத்தரிய்யப்புடவை (பெ) மேலாடை (1018) *உத்தரிய்யப்புடவை நாலுக்குமாக* (SII,v,578.)

உத்தரியம் (பெ) மேலாடை (1001) *திருப்பரிசட்டத்துக்கும் திருநமநிகைக்கும் உத்தரியத்துக்கும்* (SII,xvii,222.)

உத்தாரம் (பெ) கட்டளை (1589) *ஆண்டவர் அச்சுதப் பல்லவராயர் பண்டாரத்தார் ...ளிலெ பண்டார உத்தாரமாக நாட்டுமனு[ஷ]ரும் தானத்தாரும்* (IPS,860.)

உத்திரகணத்தார் (பெ) உத்திர விழாவை நடத்தும் குழுவினர் (1019) *உத்திரவிழா ஆட்டாண்டு திருக்கடித் தானத்து உத்திர கணத்தாரும்* (TAS,v,p.189.)

உத்திரட்டாதி (பெ) ஒரு நட்சத்திரம் (955) *இவாண்டு கந்திநாயற்று உத்திரட்டாதி நான்று பற்றின ஸோமக்$_3$ராணத்தில்* (IPS;30.)

உத்திரப்பாடு (பெ) ஈடாகப் பெறும் பொருள் (1692) *அதுக்குச் சரிப்பட்ட உத்திரப்பாடும் கொண்டு* (TAS,vii,p.93-94.)

உத்திரம் (பெ) விட்டம் (923) *உத்திரத்திலும் போதிகைஇலும்* (SII,v,588.)

உத்திரவிழா (பெ) பங்குனி உத்திர நடசத்திரத்தன்று நடைபெறும் திருவிழா (1019) *சிரீவல்லவங்கோதைவர்ம்மர் அமைச்ச உத்திரவிழா ஆண்டாண்டு* (TAS,v,p.189.)

உத்திர அயன ஸங்கிராந்தி (பெ) தை முதல் நாள் (923) *மாதே$_3$வற்க்கு உத்திர அயன ஸங்கிராந்தி போது* (SII,xix,406.)

உத்திராடம் (பெ) ஒரு நட்சத்திரம் (937) *உத்திராடத்தினாந்நு நெய்யாடியருள* (SII,viii,624.)

உத்தேசபடி (பெ) ஏறக்குறைய (1163) *ஊற்றுக் கேணிக்கு வடக்கு உத்தேசபடி மனை குழி இருபத்தஞ்சும்* (SII,xvii,558.)

உத்ராயந ஸங்க்ரமம் (பெ) தை மாதப் பிறப்பு (1008) *இருபத்து அறு கழஞ்சுக்கு உத்ராயந ஸங்க்ரமந் தோறும் திருமஞ்சனத்துக்கு* (TDI,i,18.)

உத்ஸவம் (பெ) திருவிழா (941) *திரு உத்ஸவஞ் செய்வதற்கும்* (SII,viii,529.)

உத்ஸவ மண்டபம் (பெ) திருவிழா நடைபெறும் மண்டபம் (1126) *கோயில் கீழைச்சோபானப் பீடத்து ஸ்ரீ உத்ஸவ மண்டபமாக செய்ய* (SII,viii,224.)

உதகபூர்வ்வகம் (பெ) தானம் (759) *இருவருக்கும் முதகபூர்வ்வகம் செய்து* (SII,iv,827.)

உதர பந்தனம் (பெ) அரைப்பட்டிகை (1233) *செய்வித்த திருநெற்றிமாவாரம் உதரபந்தனம் திருப்பிறை* (SII,xvi,455.)

உதர பெந்தனம் (பெ) (= உதர பந்தனம்) (970) *பலவும் இட்டுக்கட்டின மாலை 4ம் பொன்னின் உதர பெந்தனம் 1ம்* (TDI,i,8.)

உதவாமை (வி) முடியாமை (1133) *எங்களூற்கு இக்காசு குடுக்க உதவாமையில்* (SII,vi,351.)

உதவி செய்கை (வி) துணை செய்தல் (1175) *ஈழத்தான் குலசேகருடன் கூட நின்று உதவி செய்கை சூட்டி இவருடன் சார்வுபட்டு* (EI,xxii,14.)

உத$_3$க தாரை (பெ) தானம் (877) *உத$_3$கதாரையால் பெற்றுடைய* (SII,vi,287.)

உத$_3$கம் பண்ணி (வி) தானம் செய்து (917) *ஸூர்ய்ய க்$_3$ரஹாணமாஹ உத$_3$கம் பண்ணி பெருமானடிகள் மேலேற்றின மாற்றிலி செம்பொன்* (SII,viii,646.)

உத$_3$தி$_4$ (பெ) கடல் (905) *ஓங்கு திரை வியன் பரப்பில் உத$_3$தி$_4$ ஆலயமாக* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

உத$_3$யகி$_3$ரி (பெ) சூரியன் உதிக்கும் மலை (771) *உத$_3$யகிரி3 மத்$_4$யமத்து உறுசுடர் போல* (EI,xvii,16.)

உத$_3$யங்கள் (பெ) மேன்மைகள் (1264) *எப்பேர்ப்பட்ட ஸமஸ்த உத$_3$யங்களையும் முடையராய்* (SII,vi,439.)

உத$_3$யாஸ்தமம் (பெ) காலைமாலை (883) *உத$_3$யாஸ்தமம் ஆஹாரமிட்டு* (SII,viii,633.)

உத$_3$ரப$_3$ந்த$_4$நம் (பெ) அரைப் பட்டிகை (1014) *உத$_3$ரப$_3$ந்த$_4$நம் ஒன்றில் தடவிக் கட்டின பளிங்கு எட்டும்* (SII,ii,46.)

உதா$_3$ஸிந வாரியம் (பெ) சபை உட்குழுக்களுள் ஒன்று (895) *ஊர் வாரியப் பெருமக்களு உதா$_3$ஸிந வாரியப் பெருமக்களு* (SII,xiii,307.)

உதித்தருளிய (வி) தோன்றிய (1012) *விருப்புடன் வந்துதித்தருளிய மலையர்* (SII,vii,863.)

உதித்தவாறே (வி) சூரியன் எழும்போது (985) *ஆழாக்காக உதித்தவாறே ஏற்றிநால் அஸ்தமிக்கும் அளவுக்கும்* (SII,xix,340.)

உதிரப்பட்டி (பெ) பொதுத்தொண்டில் இறந்துபட்டவர்களின் நினைவுக்காக வழங்கும் நிலம் (1299) *விழுந்துப்பட்ட தச்சன் வாந்தார்தேவன் அரங்குளவனுக்கு உதிரப்பட்டியாக இறையிலியாக கல்லு நாட்டி* (IPS,411.)

உதிரபலி (பெ) இரத்தபலி (1024) *உதிரபலிக்கு ஆடு ஒன்றும் அந்தியம் போது அர்க்கிபலிக்கு* (EC,x,Kl.112a.)

உதிரித்தீர்வை (பெ) போக்குவரத்துச் சரக்கு மீதான ஒரு வரி (1532) *கூனி மேட்டில் னடந்து வருகிற நாட்டாயம் உதிரித்தீர்வை தெற்கு வழி வேலூர் வழி* (SII,xvii,264.)

உதிரி நாட்டாயம் (பெ) (= உதிரித்தீர்வை) (1532) *மரக்கானத்து வழியிலுண்டான உதிரி நாட்டாயம் பூர்வ்வம் நடந்து வருகிற தீர்வை* (SII,xvii,264.)

உதைப்பித்து (வி) காலால் உதைக்கச் செய்து (1014) *களிற்றானுதைப்பித்தருளி* (SII,iii,28.)

உதையம் (பெ) தோன்றுதல் (1134) *பாரிலெழு சந்திரோதையம்* (SII,v,645.)

உதைய அற்தமனம் (பெ) பகற்பொழுது (1193) *திருமறைக்காடுடையார்க்கு உதைய அற்தமனமும் அற்தமன உதையமும்* (SII,xvii,447.)

உதை$_3$யம் (பெ) வருமானம் (1545) *இந்த கி$_2$லோத்$_3$தா$_4$ரணம் பண்ணின க்$_3$ராமத்தில் உதை$_3$யங்கொண்டு* (EI,xxix,9.)

உத்$_3$தே$_3$ச$_0$ம் (பெ) ஏறக்குறைய (891) *நூறு பாத்தியின் உத்$_3$தே$_3$ச$_0$ம்* (SII,viii,634.)

உந்த (வி) செல்ல (800) *முகிலி வளர் பீலி உந்த* (EI,xiii,10.)

உந்தி (வி) செலுத்தி (771) *சூழியானை செலவுந்தி* (EI,xvii,16.)

உந்து (வி) பாயும் (905) *செய்யுந்து புனற் செறுவில்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

உப்பள நீலம் (பெ) ஒருவகை நீலக்கல் (1014) *ராஜவர்த்தம் ஒன்றும் உப்பள நீலம் ஒன்றும்* (SII,ii,51.)

உப்பளம் (பெ) உப்பு விளைநிலம் (1048) *ராஜராஜத் தென்னாட்டுத் உப்பளங்கழுக்கு கூறு செய்வார்கழுக்* (TAS,i,p.162-64.)

உப்பு (பெ) உணவுப்பு (941) *உப்புக்கு நிசதி நெல்லு ஒரு காடியாக* (SII,viii,529.)

உப்புக்காசு (பெ) ஒரு வரி (1126) *நீர் விலை உப்புக்காசு உள்ளிட்ட வெட்டி* (SII,vii,97.)

உப்புக் கோச்செய்கை (பெ) உப்பு எடுக்கும் அரச உரிமை (789) *திருமுகக் காணமும் உப்புக் கோச் செய்கையும்* (SII,ii,99.)

உப்புப் படுக்கும் அளம் (பெ) உப்பு விளைக்கும் நிலம் (1137) *இவ்வூர் உப்புப்படுக்கும் அளம் தொண்ணூற்றிலும்* (SII,viii,31.)

உப்புப் பாக்கம் (பெ) உப்பு நிரப்பப்பட்ட சிறு மூட்டை (1300) *உப்புப்பொதி ஒன்றுக் கரிதிக்குக் காசு ஒன்றும் உப்புப் பாக்கத்துக்கு காசு அரையும்* (SII,viii,442.)

உப்பு மண் (பெ) உப்பான நிலம் (1187) *கொல்லையும் உவரும் உப்புமண்ணும் ஆய் அறுகெழுன்த படுதறையும்* (SII,v,990.)

உப்பு வழிச்சாரிகை (பெ) உப்புப் போக்குவரத்தின் மீதான வரி (1300) *செக்காயம் வண்ணார்காசு பலகணி மாலைகளும் உப்புவழிச் சாரிகை* (SII,viii,245.)

உப்பெருவியர் (பெ) உப்பு வணிகர் (?) (1188) *பொழிக் கரைத் துறையில் உப்பெருவியர் இருக்கிமெடத்தினு கொள்ளும் உப்பு முப்பறை* (TAS,iv,p.22-65.)

உபகரணங்கள் (பெ) துணைப் பொருள்கள் (1300) *இலையமுது அடைகாயமுது மற்றும் வேண்டும் உபகரணங்களுக்கும்* (IPS,587.)

உபகரணத் தண்டம் (பெ) கீழ் நீதிமன்றத்தில் செலுத்தும் அபராதம் (765) *உபகரணத் தண்டமும் அதிகரணத் தண்டமும்* (EI,xxxvi,20.)

உபகரணாதிகள் (பெ) துணைப் பொருள்கள் (1233) *இத்திருமாசித் திருநாளைக்கு வேண்டும் உபகரணாதிகளுக்கூ உடலாக* (SII,xvii,304.)

உபசரிப்ப (வி) மரியாதை காட்ட (1171) *சமையமுமைம்பூதமும் நெறியில் வந்துபசரிப்ப* (SII,iv,820.)

உபபீட$_2$த்துக் கண்டப் படை (பெ) கோயில் கட்டிடத்தின் அடிப்பகுதியின் உறுப்பு (1014) *சண்டேச்$_0$வரர் கோயிலில் ஜக$_3$திப் படையிலும் உபபீ$_2$டத்துக் கண்டப் படையிலும்* (SII,ii,3.)

உபபீட$_2$ம் (பெ) அடிப்பீடம் (1014) *எழுந்தருளி நின்ற உபபீட$_2$ம் ஒன்று* (SII,ii,34.)

உபயதலம் (பெ) மண்ணுலகும் விண்ணுலகும் (1222) *சங்கிராமரன் உபயதலமேத்த* (EC,x,Mb.212.)

உப$_4$யக$_3$ணத்தயார் (பெ) இரண்டு வகைக் குழுக்கள் (796) *மஹாஸாமந்தரும் உப$_4$யக$_3$ணத்தயாரும்* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

உப$_4$யகுல பரிசு$_0$த்$_4$த$_4$ர் (பெ) தாய் வழியும் தந்தை வழியும் தூயதாகப் பெற்றவர் (796) *ஸமத்த$_4$ருப$_4$யகுல் பரிசு$_0$த்$_4$த$_4$ர்* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

உபாத்தியான் (பெ) வேதம் கற்பிப்போன் (1346) *வேதாத்யானம் பண்ணுவிக்கும் உபாத்தியானுக்கு* (SII,vii,45.)

உபாதிகள் (பெ) வரிகள் (1250) *மற்றும் இவூர்களை நோக்கிவரும் எப்பேர்ப்பட்ட உபாதிகளும் வரிகளும் உட்பட* (SII,vii,107.)

உபாத்$_4$யாயன்மார் (பெ) வேத ஆசிரியர் (1196) *ருக்$_3$வேத$_3$மும் யஜுர்வேத$_3$மும் ஓதிவிக்க ஸபை$_4$யாய்க் கல்பித்த உபாத்$_4$யாயன்மார் இருவற்கும்* (TAS,vii,p.13-14.)

உபாயம் (பெ) வழி (1238) *மேனாட்டரையர் கேட்ட்ருளி கொள்ள நிச்சயித்து நாட்டுக் கொண்ட காசுக்கு ஒடுக்க உபாய மில்லாமையாலும்* (SII,v,984.)

உபாஸகர் (பெ) பூசாரிகள் (875) *ஸ்ரீ கோயில் உபாஸகரோம்* (SII,xiii,88.)

உபாஸகன் (பெ) பூசை செய்வோன் (937) *இ ஸ்ரீ கோயில் உபாஸகன் ஒமயின்தன்* (SII,vii,517.)

உபாஸிக்கும் (வி) பூசை செய்யும் (985) *இத்*

திருக்கோயிலுபாஸிக்கும் திருக்கோயி லுடையார் (SII,vii,740.)

உபாஸித்து (வி) பூசித்து (877) *புத்ரபௌத்ரிகம் உபாஸித்துண்ண* (SII,vi,288.)

உபாஸை (பெ) வழிபடுகை (887) *சுப்பிரமண்ணிய படாரர் உபாஸையான திருமூலத்தானத்து படாரர்க்கு* (SII,xiv,16a.)

உபையத்தீட்டு (பெ) கோயில் தருமங்களை ஏற்று நடத்துவதற்காகக் கொடுக்கப்படும் உறுதிமொழி (1275) *சிவபிராமணரோம் உபையத்தீட்டு குடுத்த பரிசாவது* (SII,xvii,557.)

உபையம் (பெ) கோயிலுக்குக் கொடுக்கும் தருமம் (868) *அமுது படிக்கும் உபையம் வைய்க்க* (SII,xii,58.)

உபையம் (பெ) ஒரு வரி (1570) *வாசல் மனை ஏற்கடமை காணிக்கை ஆளமஞ்சி உபையம் நெல்முதல் பொன்முதல் உண்டானதும்* (IPS,726.)

உபை$_4$யப்பட்டு (வி) கோயில் தருமத்தைக் காக்கும் பொறுப்பையேற்று (1116) *திருநந்தாவிளக்கு எரிக்ககடவோமாக உபை$_4$யப்பட்டு* (SII,viii,622.)

உபை$_4$யமாற்கம் (பெ) போக்குவரத்துச் சரக்குகள் மீதான ஒரு வரி (1372) *பல ஸர்வ்வமாந்நியம் நீங்கலாக சுங்கம் உபை$_4$யமாற்கம் இடைத்துறை செக்குகடமை* (SII,viii,282.)

உபை$_4$யோகம் (பெ) பயன் (865) *தனிக் கல்லால் உபை$_4$யோகம் இல்லாமையால்* (SII,xii,55.)

உபோகம் நிப்பார் (பெ) உதவியாக இருப்பவர் (804) *குத்துக்கால் செவ்வார்க்கு உபோகம் நிப்பாரையும்* (SII,xiv,37.)

உம்பர்வான் (பெ) மேலுலகம் (905) *உபாயப$_3$ஹுலன் உம்பர்வான் உலகணைந்தபின்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

உம்பரியானை (பெ) எட்டுத் திசைகளைக் காக்கும் யானைகள் (1142) *நெடுமேருவிற் புலி வீற்றிருப்ப உம்பரியானை ஒரெட்டினுக்கும்* (SII,v,705.)

உம்பளிகை (பெ) சிறிய நாயக்கர்களுக்கு விட்ட வாழ்நாள் மானியம் (1418) *இன்னாயநாற்கு மல்லிதேவராயன் தம்முடைய உம்பளிகையில் வழுதிலம்பட்டுச் சாவடி தென்கரை கோழியூர் பற்றில் பெருமுளை ஊர் ஒன்றுக்குப் பொன் 200* (SII,viii,276.)

உம்பிலிக்கை (பெ) (= உம்பளிக்கை) (1600) *வீரதிப்பப்ப நாயக்கர் அய்யன் உம்பிலிக்கைக் கிறாமமான இஞ்சிவேடு* (AVNM,7,p.66)

உம்பிளிகை (பெ) (= உம்பளிகை) (1691) *தேவதாயம் பிறமதாயமு மானிபம் மடப்புறம் உம்பிளிகை சீவிதம் இந்த வகையில் அனுவாகிற இறைவரி கடமை காசும்* (IPS,875.)

உமாபரமேச்$_0$வரியார் (பெ) பார்வதி (1014) *எழுந்தருளுவித்த உமாபரமேச்$_0$வரியார் திருமேனி ஒன்று* (SII,ii,42.)

உமாபா$_4$க$_3$ம் (பெ) உமையுள்ள இடப்பாகம் (1014) *ஈச்$_0$வரபா$_4$க$_3$ம் இரண்டு ஸ்ரீ ஹஸ்தமும் உமாபா$_4$க$_3$ம் ஒரு ஸ்ரீஹஸ்தமும் உடையாராய்* (SII,ii,39.)

உமாஸஹிதன் (பெ) உமாதேவியோடு பொருந்தியுள்ள சிவபெருமான் (1120) *செம்பொநாலமைத்துருவது வளவுமா்ஸஹிதன் திருமேனி* (EC,x,Sd.9.)

உய்த்த (வி) செலுத்திய (800) *கருகைப் பகடுய்த்த மாறன்* (EI,xiii,10.)

உய்த்து (வி) அனுப்பி (921) *அமரர்க்குப் பல முறைஉந் தூதுய்த்தும்* (SII,iii,206a.)

உய்ய (வி) வாழ (1200) *உம்பர் தொழ விண்ணுய்ய நின்றாடுவானுக்கு* (SII,iv,1026.)

உய (வி) ஈடேற; வாழ (1008) *உலகுயக் கொண்டருளின* (EI,xxi,38.)

உயகும் (வி) செலுத்தும் (955) *திருப்பலி சுமக்கும் ஆனை கொண்டுயகும் மஹமாத்ரனுக்கு வைத்த பூ$_4$மி* (SII,viii,739.)

உயர் (வி) பெரிய (905) *சிறு மேனி உயர்தவத்தோன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115)

உயர்தரு (வி) சிறப்புற்ற (921) *உயர்தரு பெரும்புகழ்ச் செட்டிகுலமதலை* (SII,iii,206a.)

உயர்ந்த (வி) மேலான (1045) *உயர்ந்த பெரும் புகழ் கோவிராசகேஸரி பந்மரான* (SII,vii,842.)

உயர (வி) சிறக்க (1220) *பொற்றொடியவர் கற்புயர* (CHEN,xiv,p.362-64.)

உயரி (வி) உயர்த்தி (905) *குளம் பலவின் கரையுயரியும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

உயரும் (வி) உயர்ந்து வளரும் (833) *வரைக் கமுகொடு கரும்புயருங் கலிக் கழனி* (SII,xiv,44.)

உயற்பிலி (பெ) உயரமில்லாது (1232) *இச்செய்க்கு மேனோக்கிய மரமும் கீணோக்கிய கிணறும் உயற்பிலி உயர்த்தவும் குழிப்பிலி குழிக்கவும்* (IPS,301.)

உயற்றுவன (பெ) மேடு செய்யப்படுவன (1253) *ஆக்குவன ஆக்கவும் குழிப்பன குழிக்கவும் உயற்றுவன உயற்றவும் மற்றும் எப்பேற்பட்டவையிற்றுக்கும்* (IPS,346.)

உயிராகி (வி) உயிர் போன்றவராகி (1171) *மன்னுயிர்கட் குயிராகியும் விழிபெற்ற பயனென்னவு* (SII,xvii,592.)

உயுத்த களம் (பெ) போர்க்களம் (1241) *தண்டநாயக்கஞ் செய்வார்களை உயுத்த களத்திலே* (SII,xii,124.)

உரம் (பெ) வலிமை (905) *உரம் போந்த திண்டோளரை* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

உரல்வரி (பெ) ஒரு வரி (1300) *ஏர் வரி இனவரி இடைவரி வுரல்வரி வாசல்வரி* (SII,iv,369.)

உரவோன் (பெ) வலிமையுடையவன் (1012) *சதுசன போராண்டலைமைப் புணர் புயத்துரவோன்* (SII,vii,863.)

உரி (பெ) ஒரு முகத்தலளவு (768) *நிசதம் நெய் உரிக்கு* (SII,xiv,27.)

உரித்தாக (வி) உரியதாக (765) *பண்டுண்ணும் நீர்க்குரித்தாகவும்* (EI,xxxvi,20.)

உரித்து (வி) பொருந்துவது (700) *நிமிமுக்கந் நிருவத்துக்கும் உரித்து* (IPS,425.)

உரிபோகி (வி) பதர் நீக்கி (992) *உணக்கி யுரிபோகி நெல்லு* (TAS,ii,p.34-37.)

உரி மரம் (பெ) உரியடி விழாவில் நட்டு வைக்கும் மரம் (1547) *உரிமரத்துக்கு மரமூங்கில் எடுக்கவும்* (TDI,v,99.)

உரிமை (பெ) சொந்தம் (771) *தரணி மங்கையைப் பிறர் பாலுரிமை திறவிதினீக்கி* (EI,xvii,16.)

உரிமைச் சுற்றம் (பெ) அரசச் சுற்றத்தார் (771) *கேரளனைப் பல முறையும் உரிமைச் சுற்றமொடு* (EI,xvii,16.)

உரிமை பூண்டமை (பெ) உடைமையானமை (995) *பெருநிலச் செல்வியும் தனக்கே உரிமை பூண்டமை மனக் கொள* (CHEN,xxv,p.341-42.)

உரிமையரிவையர் (பெ) மனைவியர் (1257) *பாராள் வேந்த ருரிமையரிவையர் இருமருங்கு நின்று* (SII,v,459.)

உரிமையின் பரம்பரை உரிமையால் (1068) *கோத்தொழில் உரிமையினெய்தி அரைசுவீற்றிருந்து* (EI,xxi,38.)

உரியவாறு (வி) பொருந்தியவாறு (988) *இவ்வனைவர் முறிவும் நம்மாணைக் குரியவாறு கோட்டையூர்* (EI,xxi,27.)

உரியன (வி) உள்ளன (815) *தனக்குரியன பலகு$_3$ண நாமம்* (SII,iii,206b.)

உரியார் (பெ) கடமைப்பட்டவர் (1000) *அட்டில் பள்ளியார் பணிக்குரியார் ஆறாடு நாள்* (EI,xxxiii,33.)

உரு (பெ) வகை (753) *பல்லுருவில் பலய மரமும்* (SII,ii,73.)

உரு (பெ) வடிவம் (771) *மாலுருவின் வெளிற்பட்டு* (EI,xvii,16.)

உரு (பெ) அடையாளம் (919) *ஏதும் உருவறியாத்தானொரு பா$_3$லனை குடவோலை வாங்குவித்து* (ARASI,1904-05,p.131.)

உரு (பெ) உருப்படி (988) *பட்டம் மூந்றிநால் பொந் நாற்ப்பதிந் கழஞ்சு பட்டம் உரு அஞ்சும் பொற்பூ ஐஞ்சிநாலும்* (SII,v,672.); (1270) *சிற்றுருவுக்கு அரைப்பணமும் தோணிக்குக் காற்பணமும்* (SII,viii,405.)

உருஞ்சும் (வி) உராயும் (785) *அகல் வானத்து அகடுருஞ்சும் பாழி நீண் மதில்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

உருட்டிய (வி) உருளச் செய்த (1012) *கங்குற் குழப்பு படு பேரிருட் பிழம்பு படவுருட்டிய செஞ்சுடர்* (SII,vii,863.)

உருத்த (வி) உண்டாக (1467) *நாலு பங்காளரை யும் அர்த்த$_2$ஹாநியும் ஐந்மஹாநியும் உருத்த வேணுமென்று னாம் கோபித்திருக்க* (SII,v,768.)

உருத்ராக்ஷச் சுரி (பெ) ஒரு அணி (1014) *உருத்ராக்ஷச் சுரி பொன்னின் நூலிற்க் கோத்த* (SII,ii,38.)

உருத்$_3$ர பெருமக்கள் (பெ) சிவன் கோயிலை நிர்வகிக்கும் குழு (985) *மாசித் திருநாளில் உருத்$_3$ரபெருமக்களும் பந்மஹேச$_0$ரரும்* (SII,xix,194.)

உருத்$_3$ராக்ஷத் தாழ்வடம் (பெ) ஒரு நகை (1014) *நம்பி ஆரூரனார்க்குக் குடுத்தன உருத்$_3$ராக்ஷத் தாழ்வடம் ஒன்றில்* (SII,ii,38.)

உருவதிச்சு (வி) நேரில் வைத்துக் கொண்டு (1092) *முந்நூற்றுவரும் பணி உடையவகளையும் உருவதிச்சு அவகளால் விட்டிசுக்கொள்விது* (TAS,v,p.172-76.)

உருவப்புக்க (வி) ஊடுருவிச் சென்ற (877) *தெல்கிலங்காடிக்கேய் உருவப் புக்க வழியில்* (SII,vi,290.)

உருவம் (பெ) வடிவம் (1000) *ஓவியராலும் மெழுதப் படாவுருவத்தசுரர்* (SII,iv,167.)

உருவி (வி) உறையிலிருந்து (கத்தி) எடுத்து (872) *எவ்விப்பத்திரமுருவி* (CHHS,1971/56.)

உருவிக் குத்தி (வி) கத்தியெடுத்துக் குத்தி (993) *பலதேவந் வயிரியும் தங்களில் உருவிக் குத்தி* (SII,v,670.)

உருளி (பெ) அகன்ற பாத்திரம் (1196) *இச்செலவு வைப்பான் கொடுத்த உருளி ஒன்று* (TAS,iii,p.46-52.)

உருளை (பெ) வைரக் கல்லின் ஒருவகை (1014) *மாணிக்கத்தின் திரு ஒன்றிற்கட்டின வயிரஞ் சப்படியும் உருளையும் மூன்றுந் தடவிக் கட்டின* (SII,ii,42.)

உரை (பெ) (= உறை); அம்புக் கூடு (872) *உரையில் அம்புமாள* (CHHS,1971/56.)

உரை (பெ) புகழ் (925) *உரைசேர் பெருப்புகழ் அலூரார்* (SII,viii,696.)

உரை (பெ) மாற்று (813) *காசின்னோடுரை ஒப்பது* (SII,vii,931.)

உரைக்கும் (வி) விளக்கும் (771) *ஸித்$_3$தா$_4$ந்தம் உரைக்கும் படாரர்* (SII,v,405.)

உரைத்த (வி) கூறிய (921) *முன்னுரைத்த அரைசர் பிரான் அந்தண் புனலழனாட்டில்* (SII,iii,206a.)

உரைத்து (வி) கூறி (771) *அந்தணாளர் முன்பு கேட்க என்றெடுத்துரைத்து* (EI,xvii,16.)

உரை திறம்பா (வி) சொல்மாறாத (1220) *ஒப்பரிய மறைநாலும் உரை திறம்பா மனுநூலும்* (CHEN,xiv,p.362-64.)

உரைப்பது (வி) மாற்றறிய தேய்த்தல் (922) *பருங் கல்லில் உரையாதே பொன்னறிந்தனையே உரைப்பதாக* (SII,vi,295.)

உரைப்பில் (வி) கூறுமிடத்து (771) *தெற்றென விரித்துரைப்பில்* (EI,xvii,16.)

உரையார் (வி) சொல்லமாட்டார் (1220) *மற்றவரொன்றும் பழுதுரையார் மகதை வேந்தன்* (SII,vii,123.)

உரையிலும் நிறையிலும் வழுவாது தூய்மையானது (1048) *பதின்கழஞ்சரையும் காசுக்கருதித் துளையில் உரையிலும் நிறையிலும் வழுவாது தீபோக்குச் செம்பொன்* (SII,viii,199.)

உரையொக்கும் (வி) மாற்று ஒத்துள்ள (1039) *பண்டாரத்துக் கல்லால் துளையோடும் உரையொக்கும் பொன்னேய்* (SII,viii,68.)

உரோயணி (பெ) ரோகிணி நட்சத்திரம் (946) *சனிக்கிழமையும் நவமியும் பெற்ற உரோயணி நாள் இராத்ரி* (SII,vii,35.)

உல்கு (பெ) சுங்கம் (845) *உல்கு கூட்டுஞ் சரக்கு இவகளை கூட வச்சு உல்கு விடுப்பதாகவும்* (TAS,ii,p.80-82.)

உல்லியக் குழி (பெ) குளம் முதலியவைகளை, ஆழமாக்கத் தோண்டப்படும் குழி (985) *ஆண்டு உள பலிசையால் கல்லிவிதான உல்லியக்குழி பெற* (IPS,60.)

உல்லியக் கூலி (பெ) ஒரு வரி (கிணறு தோண்டுவோர் மீதான வரி) (753) *செக்கும் தறியும் உல்லியக் கூலியும் பிராமணராசக் காணமும்* (SII,ii,73.)

உலக்கடைப்பு (பெ) ஒரு வரி (1347) *கீற்றுவரி உலக்கடைப்பு நல் எருது நற்கிடாக் காத்திகைப்பச்சை* (SII,vii,820.)

உலகம் (பெ) உலகத்திலுள்ள மக்கள் (805) *உலகம்மறிய வைம்மினேய்* (SII,xii,40; EI,xi,15.)

உலகளந்த கோல் (பெ) நில அளவு கோல் (1009) *வெட்டுவித்தபடி உலகளந்த கோலால் நூறுகுழி கொண்டது* (CHEN,xxi,p.425-28.)

உலகியல் (வி) நாட்டில் வழங்கும் (1012) *குடியிலலகியல் மரபினமைந்து உலகியல் சாண் பந்நிரண்டிற் சமைந்த* (SII,vii,863.)

உலகு (பெ) உலகம் (785) *ஒலி கெழு முந்நீருலகு* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

உலகுடை முக்கோக்கிழானடிகள் (பெ) பட்டத்து அரசியின் சிறப்புப் பெயர் (1175) *வீர ஸிம்ஹாஸநத்து உலகுடை முக்கோக்கிழானடிகளோடும் வீற்றிருந்தருளிய* (SII,xvii,244.)

உலண்டு பீலி (பெ) பட்டு நூல் (?) (1300) *உலண்டு பீலி தலைச்சுமை ஒன்றுக்கு* (SII,viii,442.)

உலந்த (வி) அழிந்த (1047) *வெங்களத்துலந்த அச்சிங்களத்தரசந்* (EC,ix,Dv.75.)

உலந்தவர் (பெ) இறந்தவர் (800) *உலந்தவர்தம் என்பருந்து* (EI,xiii,10.)

உலந்தார் (பெ) இறந்தவர் (800) *கரும்பகடு சென்றுழக்க வங்குலந்தார் தேரழுந்தி* (EI,xiii,10.)

உலரா நின்றது (வி) வாடியது (1279) *கமுகுகள் நீர்பெறாமலெ உலரா நின்ற தென்றும்* (SII,xii,256.)

உலவ் வைய்பிச்சு (வி) (உலைவைத்து) சோறாக்கி (961) *நாட்டாரைக் கூட்டி அரி உலவ் வைய்பிச்சு ஐய்யடியின் முன்னே* (TAS,viii,p.43-44.)

உலவு (வி) பரந்த (905) *க$_4$ணஸ்வாமிப$_4$ட்டற்கு தற்பெருமாமதலை உலவு சீர்த்தி யோகே$_3$ச$_0$வரப$_4$ட்டற்கு* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

உலா (பெ) பவனி (1201) *நாம் உலாப் போதுமிடத்து முன்பு கைய்தரும் குவளைவேலி உடையான்* (SII,xvii,599)

உலாவ (வி) சஞ்சரிக்க (1069) *ஒற்றையாழி யுலாவ* (SII,viii,4.)

உலாவிப் பரிமாறுவார் வரி (பெ) நடந்து விற்பனை செய்வோர் மீதான வரி (1262) *அங்காடிப்பாட்டம் உலாவிப் பரிமாறுவார் வரி* (SII,viii,753.)

உலாவு காட்சை (பெ) ஒரு வரி; ஒரு சொத்து உரிமை (1567) *கொடிக்கடமை உலாவுகாட்சை தேன்படு பொற்றை மீன்படுபள்ளம்* (SII,v,765.)

உலுப்பை (பெ) உணவுப் பொருள் முதலிய காணிக்கை (1388) *தச்சு ஆளமஞ்சி உலுப்பையாக கொள்ளும் முதலும் மற்றும் எப்பேற்பட்ட பல ஊழியங்களும்* (SII,viii,156.

உலை (பெ) கொல்லர் ஊது உலை (984) *மீகாற்ப்பாட்டமும் உலையும் உலைப்பாட்டமும் உள்பட* (SII,xix.357.)

உலை (பெ) கொல்லன் உலை (1300) *கொல்லர் ஊதுகிற உலைகளில் உலை ஒன்றுக்கு கொள்ளுங்காசு* (IPS,427.)

உலைந்தன தேவை (பெ) ஒரு வரி (1300) *காலத்தேவை உலைந்தன தேவை*

ஆனைச்சாலை குதிரைப்பந்தித் தேவையும் உட்பட (IPS,559.)

உலைப்பாட்டம் (பெ) கொல்லர் தொழில் மீதான வரி (984) *மீகாற்ப்பாட்டமும் உலையும் உலைப்பாட்டமும் உள்பட* (SII,xix.357.)

உவ்வி (பெ) ஒரு வரி (1316) *இத்தேசத்து கீழியக்கம் கொள்ளும் ஒட்டிற் கடமையும் உவ்வியும் வேய்நெல்லும்* (TAS,iv,p.91.)

உவகை (பெ) (= உகப்பார் பொன்) (1000) *அமச்சியும் வெட்டியும் உவகையும் விபூதியும்* (SII,v,873.)

உவச்சகள் (பெ) (= உவச்சர்) (800) *உவச்சகட் கைங்கலம்* (TAS,iii,p.203-05.)

உவச்ச களன் (பெ) உவச்சர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் (968) *பத்துச் செறுவும் உவச்சகளன்* (EI,vii,20g.)

உவச்சப் பணி (பெ) மத்தளம் முதலியன கொட்டும் பணி (956) *நியதம் ஆறாளிட்டு உவச்சப்பணி செய்* (SII,xiv,84.)

உவச்சப் புறம் (பெ) உவச்சர்களுக்குக் கொடுக்கப்பட்ட மானிய நிலம் (955) *உவச்சப்புறம் பாண்டியேரி நீர்ப் பழனி வயலில்* (IPS,30.)

உவச்சர் (பெ) இசைக்கலைஞர் (ஒரு தொழில் சாதி) (930) *உவச்சர்க்கு பூதி ஆதித்த பிடாரியார் சேதுகுடுத்தது* (SII,viii,629.)

உவச்சவரி (பெ) உவச்சர் மீதான வரி (1406) *ஏரிமீன்விற்ப்பணம் உவச்சவரி வண்ணார்வரி உட்பட* (SII,i,55)

உவச்ச விருத்தி (பெ) உவச்சர்களுக்குக் கொடுக்கபட்ட நிலம் (947) *உவச்சன் தன் உவச்ச விருத்தியால் ஒரு கூறிறுப்பதாகவும்* (SII,xiv,85.)

உவச்சிகள் (பெ) உவச்சர் (911) *கிழக்கும் உவச்சிகள் சேகண்டிகைச் செய்க்கு* (SII,viii,639.)

உவச்சு (பெ) உவச்சர் பணி (956) *உவச்சு எட்டாள் கொண்டு கொட்டுவாராக* (SII,vii,499.)

உவச்சு கொட்ட (வி) மத்தளம் பறை முதலியன இசைக்க (1012) *திருவிறையான்குடி பரமேச்ᵥவரர்க்கு உவச்சுகொட்ட கடவராக* (IPS,89.)

உவந்த (வி) விரும்பிய (1012) *மற்றக் கண்ணுதற்காக நிலத்தவருவந்த நிவந்தம்* (SII,vii,863.)

உவந்து (வி) விரும்பி (1012) *நிவந்தத் தன்மை நினையிலுவந்து நஞ்சுண்டவருக்கமுதுண* (SII,vii,863.)

உவர் (பெ) உப்பு நிலம் (1008) *பீடிகையும் களரு முவரும்* (EI,xxii,34.)

உவர்க்கடல் (பெ) உப்பையுடைய கடல் (1061) *நிந்றுவர்க் கடல் கிளந்ததெந* (SII,v,647.)

உவரி (பெ) உப்பு நிலம் (792) *உவரியும் ஊர் பாழும்* (EI,xviii,14.)

உவன்றி (பெ) நீர்த்தேக்கம் (789) *கூற்றன் வாய்மீதேய் உவன்றி செய்வதாகவும்* (SII,ii,99.)

உவா (பெ) அமாவாசை, பௌர்ணமி ஆகிய நாட்கள் (896) *ஸங்க்ராந்தியும் உவாவும் ப்ரதிபதமும்* (SII,xiii,312.)

உவாத்தி (பெ) ஆசிரியன் (1073) *உவாத்தி வீடும் திருக்கோயிலுடையான் வீடும்* (EC,x,Mb.49a.)

உவாத்துக்கலம் (பெ) வேத ஆசிரியருக்கு வாழ்க்கைச் செலவுக்குக் கொடுக்கப்பட்ட பொருள் (1120) *ஸபாவ்யவஸ்தை செது உவாத்துக்கலம் விட்ட நிலமாவது* (SII,viii,185.)

உவாதி (பெ) (= உபாதி) (1308) *இதற்கு வரும் இறை குடிமை உவாதி வினியோக மற்று மெப்பேற்பட்டவும்* (IPS,417.)

உவாப்படி (பெ) அமாவாசை, பௌர்ணமி நாட்களுக்கான செலவு (1300) *உரிமைகளும் அகபட இக்கோயிலுக்கு நான் உவாப்படிக்கு* (SII,xviii,131.)

உவாஏர் (பெ) ஒரு வகை மானிய நிலம்(?) (896) *மரக்குன்றத்தூரந் நம்பி அருமறைக்கு ஊரோம் உவாஏர் விட்டமைய்கு* (AVNM,7,p.19)

உவிக் கதிர் (பெ) தீய்ந்து போன தானியக் கதிர் (866) *போகத்துக்கும் பொலிக்குமாய் உவிக்கதிரேற்றி உடன்வாரம் நாற்கலனேய்* (TAS,i,p.1-14.)

உவைச்சர் (பெ) (= உவச்சர்) (900) *ஊருவதியென்ற செறுவும் இவ்வூரில் உவைச்சர்குரியது* (SII,xii,114.)

உழக்க (வி) கலக்க (795) *படைவிழுஞத்து புறத்து விட்டுழக்க* (TAS,i,p.158-59.)

உழக்கு (பெ) ஒரு முகத்தலளவு (745) *உழக்கரிசி முன் குறட்டி வைத்தது* (TAMIZ,1970,p.122.)

உழக்கு (பெ) ஒரு முகத்தலளவைக்கருவி (1007) *ஒலோக விடங்க நென்னும் நாழியோடொக்கும் உழக்கிநால் நிசதம் உழக்குனெய்* (SII,v,516.)

உழந்து (வி) செய்து (1047) *மீட்டு வந்து வாட்டொழிலுழந்து* (SII,v,978.)

உழப்பறையர் (பெ) உழும் தொழில் செய்யும் பறையர் (1014) *ஐய்யன் கோயிலுந் திரு முற்றமும் உழப்பறையரிருக்கும்* (SII,ii,5.)

உழப்பார் (பெ) பயிர் செய்பவர் (986) *நந்தவனம் உழப்பார் இருவர்க்கு நிசத நெல் குறுணி* (SII,iii,128.)

உழப்பார்க்கு (பெ) உழுது பயிர் செய்வார்க்கு (1075) *திருனந்தவன முழப்பார்க்கு கொற்றுக்கும்* (SII,iii,68.)

உழப்பான் (வி) பயிர் செய்வான் (985) *திருநந்தவானத்துக்கு வேண்டும் உழப்புக் குற்றப்படாமை உழப்பானாகவும்* (SII,xiii,342.)

உழப்பு (பெ) உழுது பயிரேற்றல் (985) *திருநந்தவானத்துக்கு வேண்டும் உழப்புக் குற்றப்படாமை உழப்பானாகவும்* (SII,xiii,342.)

உழமைச் சூடு (பெ) நில விளைச்சலில் ஒரு சிறு பங்கு (1337) *கொட்டர் கூழரி உழமைச் சூடு குடிகலி பறையன் கண்டபடி பெறுவேனாகவும்* (IPS,438.)

உழவடைத் தீட்டு (பெ) பயிர் செய்யும் உரிமைபற்றிய ஓலை (1300) *குலசேகர வீரசேகர நாடாழ்வார்கு உழவடைத்தீட்டுக் குடுத்த பரிசாவது* (IPS,482.)

உழவர் (பெ) உழுது பயிரிடுவோர் (1000) *செந்நன்கரி உழவர் கொடுப்பிது பொன்னிரு கழைஞ்சு* (TAS,ii,p.173-207.)

உழவன் சோடி (பெ) ஒரு வரி (1387) *அடைப்புத்தாழ்வு உழவன் சோடி காரடை மாவடை குளவடை* (EI,viii,31.)

உழவு (பெ) உழுது பயிரேற்றல் (951) *இப்பூமி எல்லாம் உழவு மங்கலத்தவகள் தந்ததியில்* (TAS,i,p.288-89.)

உழவு காணி (பெ) உழுகின்ற உரிமையோடு நில உடைமை (1524) *பெரிய நத்த முழவு காணியாய் நின்ற நிலம் 20,750க்கு* (SII,xvii,684.)

உழவு குடி (பெ) பயிரிடுங் குடி (1420) *நன்செய் புன்செய் நத்தத்தில் ஏறும் உழவுகுடி காசாயக்குடி பலபட்டடைக்குடி செக்குக்கடமை மற்றும் பலகுடிக்கும்* (SII,viii,275.)

உழவு முற்றூட்டு (பெ) உழுது முழுப்பயனையும் அனுபவிக்கும் முறை (1268) *இந் நாயநாற்கு திருநாமத்துக்காணியாக கோயில் உழவு முற்றூட்டாக விற்றுக் கொடுத்து* (IPS,375.)

உழவொற்றி (பெ) பயிரிடுமுரிமையுள்ள அடைமானம் (1143) *உழவொற்றி கொண்ட தேவதான தென்பறக்கை நிலம் ஆறுமாவின் மேலும்* (TAS,viii,p.33-34.)

உழுகுடி (பெ) உழுது பயிரிடும் குடி (1058) *இன்னிலம் உழுகுடிகள் சென்னீரமஞ்சி உள்ளிட்ட ஏரியமஞ்சி செய்யக்கடவரல்லாதாக* (SII,vii,947.)

உழுகுடிமக்கள் (பெ) பயிரிடும் குடிகள் (1127) *இன் நிலம் உழுகுடிமக்களை ஆள்வரி வெட்டியமஞ்சி* (SII,vii,540.)

உழுகொல்லை (பெ) பயிர் செய்யத்தக்க கொல்லை நிலம் (750) *உழுகொல்லையும் எறிகாடும்* (EI,v,8.)

உழுங்குடி (பெ) (= உழுகுடி) (992) *தே₃வதா₃ன மான நிலமுழுங்குடிகள் குடியாக்கவுந் நிறுத்தி நிவந்தஞ் செயுநிலம்* (SII,xiii,170.)

உழுத்து (பெ) ஒரு நகை (991) *செய்த ஆபரணங்கள் குப்பி இரண்டும் உழுத்து ஈரணையும் வாளி ஒன்றுமாக* (SII,xiii,144.)

உழுத குடிகள் (பெ) பயிரிடும் குடிகள் (957) *இவ்வூர்ப் பிடாகை வட்டத்தும் உழுத குடிகளைப் பூவில் மாத்தாற் குறுணியாக* (SII,xiii,165.)

உழுதான் குடி (பெ) ஒரு வரி (1204) *இந் நிலத்தால் வந்த இறை குடிமை உழுதான் குடி உட்பட மற்றும்* (SII,v,412.)

உழுது (வி) பயிர் செய்து (866) *காராண்மையாக உழுது* (TAS,i,p.1-14.)

உழுந்து (பெ) தானியவகை (984) *எள்ளு நானாழியும் உழுந்து நானாழியுந் தினை நானாழியும்* (SII,xix,341.)

உழுந்தோகரை (பெ) உழுந்து கலந்த சோறு (1537) *கடுகோரை திருப்போநகம் 4 உழுந்தோகரை திருப்போநகம் 4ஆக பல ஓகரை வகை 5க்கு திருப்போநகம் 20* (TDI,iv,100.)

உழுபாழ் (பெ்) தரிசாக உள்ள விளை நிலம் (750) *சென்றுழுபாழும் ஏத்தப்பாடும்* (EI,v,8.)

உழுமவர் (பெ) (= உழுகுடி) (992) *பூமி யுழுமவர்* (TAS,ii,p.34-37.)

உழுவார் (பெ) பயிரிடுவார் (932) *இவை உழுவாரும் விலக்குவாரும் பறிப்போரும்* (SII,vii,173.)

உழுவையேறு (பெ) ஆண் புலி (1051) *ஏத்தக் கிரியில் ஓங்கிய லுழுவை யேறெழுதி* (SII,vii,1046.)

உள் (வி) உள்ள (550) *உண்ணிலனொழிவின்றி* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

உள்க்கனி இலக்கை (பெ) ஒரு வரி (1202) *உள்க்கனி இலக்கைக்கு மாத்தால் முக்குறுணியாக வந்த* (IPS,116.)

உள்கிடை (பெ) உட்பட்ட நிலம் (1222) *வெண்ணி நகரத்து உள்கிடையாய் அம்பலப்புறம் என்று பேர் கூவப்பட்ட கரிகாலசோழப் பேராற்றுக்கு* (SII,vii,1028.)

உள்ச் சேவகம் (பெ) வீரர் பொருட்டு செலுத்தும் ஒரு வரி (1085) *மாவிறையென்றும் உள்ச்சேவக மென்றும்* (SII,v,1003.)

உள் தடுத்து வைச்சு (வி) பறித்து வைத்து (?) (1100) *எப்படிப் பட்டிதும் விலக்கி யுள் தடுத்து வைச்சு மீட்டிக்கொள்ளக் கடவியார்* (TAS,v,p.31-33.)

உள்ப்பட (வி) சேர்த்து (885) *பூளைக் குடிப்பதியும் உள்ப்பட வச்சு* (TAS,ii,p.80-82.)

உள்ப்படுத்து (வி) சேர்த்து (1012) *இரு நாழி யுள்ப்படுத்துயர்ந்த நெல்* (SII,vii,863.)

உள்படுவான் (பெ) சார்ந்தவன் (1014) *தொங்கல் பிடிக்கும் ஆளுக்கு உள்படுவான் ஒருவனுக்குப் பங்கு* (SII,ii,66.)

உள்பாடன் (பெ) கோயில் பணியாளர்களில் ஒருவர் (954) *செலுத்தக் கடவன் உள்பாடன்* (TAS,vii,p.169-71.)

உள் மடிகை (பெ) ஊருக்குள் உள்ள அங்காடித் தெரு (1344) *புறமடிகையாலும் உள்மடிகையாலும் ஒன்பது துறையாலும்* (UCR,xviii,p.16-23.)

உள் மண்டகம் (பெ) அர்த்த மண்டபம் (985) *கோவில் உள் மண்டகம் மெடுப்பிச்சான் இவூர் ஸ்ரீ கோயில் லுடையான்* (IPS,42.)

உள் மனையார் (பெ) அரண்மனை காவலர் (500) *அவை அத்திகோயத்தாரு முள்மனையாருந் நாற்பாற்றிணைகளுந் தமக்கு காவலாக* (AVNM,1,p.67-69)

உள் மாறாட்டம் (பெ) ஒரு வரி (1294) *நாட்டார் வரிவு உள் மாறாட்டம்..எப்பேர்பட்ட வரிவுகளும்* (EC,x,Ct.88.)

உள்வரி (பெ) புரவுவரித் திணைக்களத்தில் பதிவாகிய அரச ஆணையின் நகல் (1116) *இராமதேவி நல்லூரென்னும் திருநாமத்தால் பெருமாள் திருமுகப்படியாலும் புரவரியார் எழுத்திட்ட உள்வரிப் படியாலும்* (IPS,126.)

உள்வரிக் கூட்டம் (பெ) வரி வசூல் தொடர்பான பிராமண ஊர்ச்சபையின் கூட்டம் (1246) *முதலிகள்ளுடநேய் கூடி நின்று உள்வரிக் கூட்டம் புகுதல் வ்யவஸ்தைப்படியைத் தவிர புகுதல்* (ARE,1931-32,p.57-58.)

உள் வீடு (பெ) கோட்டையின் நடுப்பகுதி (795) *உள்வீட்டி னொற்றைச்சேவகர் கோட்டை அழியாமை காத்தெறிந்து* (TAS,i,p.158-59.)

உள்ள (வி) எண்ண (1012) *நெஞ்சத்துள்ளத் தகும்* (SII,vii,863.)

உள்ள (வி) இருக்கும் (768) *சந்திராதித்தியர் உள்ள நாளையும்* (SII,xii,34.)

உள்ள (வி) ஏற்பட்ட (914) *இச்சேரிமேல் முன்னாள் உள்ள கலம் முப்பது* (SII,xix,191.)

உள்ளங்கை (பெ) கையின் உட்பக்கம் (921) *அஞ்சுவிரலும் அகலவைத்து உள்ளங்கையிலே ஏற்றுக் கொள்வானாகவும்* (ARASI,1904-05,p.131.)

உள்ளடங்க (வி) சேர்த்து (765) *ஸர்வ்வ பரிஹாரமுள்ளடங்க ஸாமாந்ய இரண்டு பட்டிப் படியால்* (EI,xxxvi,20.)

உள்ளதனையும் (பெ) இருக்கும் வரையும் (768) *நாமமுள்ளதனையும் ஆட்டாண்டுதோறும்* (SII,xii,34.)

உள்ளது (பெ) இருப்பது (691) *கத்திக் காணமும் மற்றும் பொதுவிநால்லுள்ள தெல்லாம்* (SII,i,151; EI,xvii,22.)

உள்ளதுணையும் (பெ) இருக்குமளவும் (884) *நிலமும்(ன்) நாயறும் உள்ளதுணையும்* (SII,vi,314.)

உள்ளம் (பெ) மனது (905) *எம்பெருமானை உள்ளத்திலினிதிருவி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

உள்ளவாறே (பெ) இருந்தபடியே (1018) *மேலெல்லை தாநுள்ளவாறே* (SII,iii,205.)

உள்ளன (பெ) இருப்பன (869) *இவூர்ச் செக்குள்ளன எல்லாம் நட்டு* (EI,xi,22a.)

உள்ளாக (வி) அடங்க (753) *இவ்வுள்ளிட்ட ஸர்வ்வ பரிசாரமுள்ளாக* (SII,ii,73.)

உள்ளாராய் (பெ) சேர்ந்தவராய் (1032) *கௌ$_{4}$ட தே$_{3}$ச$_{0}$த்துத்தான் உள்ளாராய் யோக்$_{3}$யரா யிருப்பார்க்கே* (SII,ii,20.)

உள்ளால் (பெ) உட்பக்கத்தில் (986) *கச்சிப் பேட்டு கோயிலினுள்ளால் தெற்கில் சித்திர மண்டபத்தெழுந்தருளி இருக்க* (SII,iii,128.)

உள்ளாலை (பெ) உட்பக்கம் (985) *இதன் மேலேய் உள்ளாலைத் திருப்படியினுள்ளே* (SII,iv,534.)

உள்ளாலை (பெ) ஊரின் நடுப்பகுதி (986) *தஞ்சாவூர் உள்ளாலைச் சங்கரப்பாடியான் மகன்* (SII,xix.401.)

உள்ளி (பெ) வெள்ளைப் பூடு (852) *இருவேலியும் செங்கழுநீரும் உள்ளியும் நடப்பெறுவதாகவும்* (SII,ii,98.)

உள்ளிட்ட (வி) சேர்ந்த (753) *இவ்வுள்ளிட்ட ஸர்வ்வ பரிசாரமுள்ளாக* (SII,ii,73.)

உள்ளிட்டனது (பெ) உள்ளிட்டவை (1250) *பனிநீர் உள்ளிட்டனத்துக்கும் திருச் செங்கழுநீர் உள்ளிட்டனத்துக்கும்* (SII,iv,814.)

உள்ளிட்டார் (பெ) சேர்ந்தவர், முதலியோர் (909) *முருகன் சடையன் உள்ளிட்டாரிடை* (SII,viii,619.)

உள்ளிட்டு (வி) சேர்த்து (771) *படாரர் உள்ளிட்டுப் பதின்மர்* (SII,v,405.)

உள்ளிருக்கை (பெ) (= ஊரிருக்கை) குடியிருப்பு மீதான ஒரு வரி (750) *இடைப்பூச்சியும் உள்ளிருக்கையும் மற்றும் எப்பேர்ப்பட்ட ஸர்வ்வபாத பரிஹாரத்தால்* (EI,v,8.)

உள்ளிருந்து (வி) கூடவிருந்து (753) *வாயிக் கேட்ப்பாரும் உள்ளிருந்து* (SII,ii,73.)

உள்ளீட்டம் (பெ) குறைபாடு (1391) *நாட்டில் சுற்றில் ஏற்ற உள்ளீட்டம் வாராமல் காத்து நோக்க கடவராகவும்* (IPS,687.)

உள்ளீடு (பெ) உள்பட (1300) *மிகுதி குறை உள்ளீடாக நிலம் இரண்டுமா* (IPS,610.)

உள்ளுட்டு (வி) (= உள்ளிட்டு) (1247) *உறைநாழி கோ[யி]ற்றமப் பேறு உள்ளுட்டுக் கூட்டுவன கூட்டாதொழியவும்* (SII,vii,1039.)

உள்ளூர்ப் பண்டாரம் (பெ) உள்ளூரில் உள்ள நெற்களஞ்சியம் (1014) *ஸ்ரீராஜராஜீச்$_0$வரம் உடையார் உள்ளூர்ப்பண்டாரத்தே பெறவும்* (SII,ii,69.)

உள்ளூர்ப்பற்று (பெ) உள்ளூரில் உள்ள விளைநிலம் (1120) *உள்ளூர்ப்பற்று தேவதாநமாக வேண்டுமெந்று விண்ணப்பஞ் செய்ய திருவாய்மொழிந்தருள* (SII,xvii,207.)

உள்ளை (இ) உள்ளே (845) *எங்கள் தூம்பனேரி உள்ளை* (EI,xi,22b.)

உள்ளொடுங்ங (வி) அடங்க (960) *பூமி எவ்வகைப்பட்டது முள்ளொடுங்ங அட்டிக் குடுத்தான்* (TAS,iii,p.159-69.)

உள்ளொடு புறம்பால் அகத்திலும் புறத்திலும் (862) *காமரு விழுச்சீர் உள்ளொடு புறம்பாலொளி மிகப் போக்கி* (SII,xiv,45.)

உளக் கருத்து (பெ) எண்ணம் (1047) *மெய்யே உளக்கருத்தால் சாலவுகந்து* (SII,iv,545.)

உளங்கொள் (வி) மனமிசைந்த (1047) *உளங்கொள் தன்னோடு தன்னுறவோடும் புகுந்து* (SII,iii,28.)

உளர் (வி) இருப்பார் (981) *சாந்தி இருக்கப் பெறார், கொடுத்து இருப்பாருளராயில்* (TAS,iii,p.177-79.)

உள் அரக்கு (பெ) நகையின் உள்ளே வைக்கப்பட்டுள்ள அரக்கு (1014) *ஸ்ரீச்ச$_2$ந்த$_3$ம் ஒன்று பொன் அறு கழஞ்சே எழு மஞ்சாடியும் உள்ளரக்கு நிறை முக்காலே இரண்டு மஞ்சாடியும்* (SII,ii,3.)

உளராக (வி) இருக்கவே (800) *அவர் போரிற்றுஞ்சின பின்னைத் தேவிமார் கருப்பிணியருளராக* (SII,vii,581.)

உளவளவு (பெ) இருக்கும் வரையிலும் (939) *சுடர்களுளவளவு மற்றிதனைக் காப்ப* (SII,xvii,501.)

உளவாய் (வி) இருப்பதாய் (1220) *கலனுளவாய்த் தோற்றில்* (SII,vii,430.)

உளன் (பெ) இருப்பான் (764) *விற்பானுளனாயிலும்* (TAMIZ,1970,p.124.)

உற்சாகம் (பெ) ஊக்கம் (1171) *பலத்தாலும் அர்த்தத்தாலும் உற்சாகத்தாலும் பாண்டி நாடு கைக்கொண்டு* (EI,xxi,31.)

உற்பு$_4$தித இறை (பெ) பின் வரக் கூடிய (புதிய) வரி (885) *எப்பேர்ப்பட்ட உற்பு$_4$தித இறையுங் காட்டாதே* (SII,xii,105.)

உற்ற (வி) சேர்ந்த (1018) *கூளபாடி தென்னெல்லையும் உற்றவிடத்துப் பழையனூர் வடகீழ்மூலையில்* (SII,iii,205.)

உற்றது (பெ) வேண்டியது (500) *தமக்கு காவலாக அவற்றுக்குற்றது செயக்கொண்டமையால்* (AVNM,1,p.67-69)

உற்றது (வி) அடைந்தது (1093) *செந்று வெய்யாற்றேரியில் தான்றி மரமே உற்றது* (SII,v,473.)

உற்றார் (பெ) நெருங்கியவர் (1382) *தெற்கி லரையன் உற்றாரான வல்லநாட்டில் உறவுமுறையிலே யொருத்தர் வெறுத்து* (IPS,683.)

உற்று (வி) சென்று சேர்ந்து (1008) *முஞ்சிகுடி ஊதாரிமயக்க லென்னும் நிலமே யுற்று* (EI,xxii,34.)

உற்று (வி) பெற்று (921) *பெருந்தானை இடும்பை உற்றிரிய* (SII,iii,206a.)

உற (வி) அடைய (905) *பனுவனரப்பிசை செவியுற* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

உற (வி) நெருங்க (1076) *உள் நிலத்துக்குத் தெற்கு கல்லங்காடுக் கல்லிலேயுறத் தெற்குள்ள நிலத்து* (SII,vii,137.)

உற (வி) அமைய (862) *பண்ணமர் கோயில் பாங்குறச் செய்வித்து* (SII,xiv,45.)

உறங்க (வி) தூங்க (800) *பருந்துசாராவே யருந்துறங்க* (EI,xiii,10.)

உறங்கா (வி) தூங்காத (1200) *வேலண்ணல் வரும் வருமென்றேங்கி உறங்கா வடவேந்தரூர்* (IPS,676.)

உறவாட (வி) நட்புப் பாராட்ட (1220) *பகையின்றி யுறவாட புயல்வாரி பொழிவிக்கும்* (CHEN,xiv,p.362-64.)

உறவின்முறை (பெ) சுற்றத்தார் (1634) *சிவத்துரோகி செனத்துரோகி யுறவின்முறைத் துரோகி குருத்துரோகியுமாகி* (AVNM,7,p.81)

உறவு (பெ) சுற்றம் (1047) *உளங்கொள் தன்னாடு தன்னுறவோடும் புகுந்து விளங்குமுடி* (SII,iii,28.)

உறவுபண்ணுதல் (பெ) நட்புச் செய்தல் (1198) *இராஜராஜ அதிகமானாருடன் உறவு பண்ணுதல் பகை கொள்ளுதல் செய்யுமிடத்து* (SII,vii,127.)

உறவு முறை (பெ) சுற்றம் (1014) *இவர்கள் உறவு முறையாய் அடைகுடிகளானாரும்* (SII,ii,63&94.)

உறவுமுறை கடவார் (பெ) சுற்றத்தார் (1009) *இவனுக்குறவு முறை கடவரான காரி நக்கத்தின் மகன் கண்டன் காரியும்* (SII,v,1411.)

உறவுமுறையார் (பெ) சுற்றத்தார் (1215) *இவந்தானும் தந்நுறவுமுறையாரும் தங்கள் ஸொம்மிட்டு ஆள் கூலியட்டி* (SII,viii,685.)

உறழ் (வி) ஒத்த (1060) *குஞ்சரமுகத்திலும் குந்றுறழ் புயத்திலும்* (SII,v,644.)

உறிக்காணம் (பெ) ஒரு வகை வரி (765) *உறிக்காணமும் பறிக்காணமும்* (EI,xxxvi,20.)

உறிகட்டி (பெ) உறியடித் திருவிழா (1485) *..ஸத்தில் உறி கட்டிக்கு இந்த மண்டபத்தில் ஏறி அருளி அமுது செய்தருளும் அப்பபடி ஒன்றும்* (TDI,ii,83.)

உறியடி னாள் (பெ) உறியடித் திருவிழா (1493) *ஸ்ரீ கோ$_3$விந்த$_3$ப் பெருமாள் தம்முட வாசலில் உறியடினாள் அமுது செய்தருளும் அதிரஸப்படி ஒன்றும்* (TDI,ii,108.)

உறு (வி) பொருந்திய (771) *நிரை உறு மலர்மணி நீண்முடி நேரிய கோன்* (EI,xvii,16.)

உறு (வி) உண்டாகிய (1176) *மனுவொழுக்க மாதியாம்படி நிலை நிற்க ஓர்ப்பினுந் தமுறு கனவினும்* (SII,xvii,585.)

உறு (வி) எழும் (771) *உத$_3$யகிரி மத்$_4$யமத்துறு சுடர் போல* (EI,xvii,16.)

உறுத்தி (வி) அடையச் செய்து (?) (1101) *ஊர்ப் பொதுவாளுங் கூடி திருமுகம் பதியுறுத்தி* (TAS,v,p.37-40; EI,xviii,40.)

உறுதி (பெ) சொர்க்கம் அடையும் பயன் (1450) *இம்மைப் பயனு மறுமைக் குறுதியு மேம்பட நல்கி* (TAS,i,p.89-94.)

உறுதி (பெ) நன்மை (852) *தந்தி மங்கைக்கான உறுதியான் புகழ் வளர்க* (SII,xii,48.)

உறுப்பு (பெ) துணை (1175) *பலவழிகளாலுஞ் செய்யப்பார்த்து இதுக்கு உறுப்பாகப் பாண்டி நாட்டிலே* (EI,xxii,14.)

உறுப்பு (பெ) பொருள் (887) *ஸ்ரீ தூபம் சிதாரினுக்கு வேண்டும் உறுப்பு அகிலுட்பட* (SII,xiv,16a.)

உறுபாதை (பெ) ஒரு வரி (1400) *கெடுபாதை யுறுபாதை மரமச்சாதி விலைப்பதுவாரம்* (SII,viii,403.)

உறுமென இடிக்கும் ஓசை போல (771) *இகலமரு ளிடி உறுமென* (EI,xvii,16.)

உறுவான் (பெ) செய்வான் (764) *கொள்ளுலற வானுளனாயிலும்* (TAMIZ,1970,p.124.)

உறை (பெ) ஒரு முகத்தல் அளவு (1048) *செலுத்தி வந்தமையி லிப்போது உப்பு உறைபிடித்து கொள்ள விடுகலிரென்று கேட்டோம்* (TAS,i,p.162-64.)

உறை (பெ) ஆயுதக் கூடு (785) *கொற்ற வேலை உறை நீக்கி* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

உறைத்து (வி) உதிர்ந்து (1296) *மன்னருச்சி கொண்ட பூந்தாதுறைத்து* (CHEN,iv,492-94)

உறை நாழி (பெ) ஒவ்வோர் உறைக்கும் ஒரு நாழி என்ற காணிக்கை (1249) *நின்ற நெல்லுக்கு தலைஅகப்படி காசு இடவும் உறைநாழி கோ..ற்றமப்பேறு உள்ளிட்டு* (SII,vii,1039.)

உறைய (வி) வசிக்க (785) *திரு மாலுக்கமர்ந்துறைய* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

உறையும் (வி) வசிக்கும் (833) *ஈச்சுரன் மகிழ்ந்துறையுந் திருக்கோயில்* (SII,xiv,44.)

உறைவது (வி) வசிப்பது (1012) *அருவை முக்கண்ணவனுறைவது கடவுளர் நிறைவது* (SII,viii,863.)

உறைவிடம் (பெ) வாழ்கின்ற இடம் (1219) *பல்லவர் முதலிய பார்த்திவரெல்லா முறைவிடம் அருளென்று ஒருவர்முந் ஒருவர்* (IPS,250.)

உன் (பெ) முன்னிலை ஒருமைச் சொல் (883) *உன்னாமத்தாலெடுக்க வேண்டுமென்று பணிக்க* (SII,viii,633.)

உன்மத்தம் (பெ) பைத்தியம் (1000) *உள்ளியம்மா விரந்தால் உகந்தீய் பதமுன்மத்தமெ* (SII,iv,167.)

ஊ

ஊசிதொழில் வாரியன் (பெ) வணிகர் குழுவின் கணக்கன்/எழுத்தன் (1050) *ஆவணக்காறனும் உலகனும் உள்பசும்பைக்கா[றனுமூ]சி தொழில்வாரியநும்* (AVNM,2,p.6-8)

ஊசி வாசி (பெ) கணக்கர் பொருட்டுச் செலுத்தும் வரி (1273) *இடைவரி இனவரி சாட்டுவரி ஊசிவாசி காலத்தேவை* (SII,vii,145.)

ஊட்ட (வி) கொடுக்க (808) *புலம் ஒற்றி இட்டு நாற்பத்தைங்காடி நெல் பொலி ஊட்ட* (EI,viii,29.)

ஊட்டக் கடவன் (வி) உண்ணச்செய்பவன் (961) *உண்டியை கொடுத்து ஊட்டக்கடவன்* (TAS,viii,p.43-44.)

ஊட்டம் (பெ) உணவிடுதல் (861) *ஊட்டம் முட்டிகுவரார் ஐம்பத்துநாலு காணந் பொன்* (TAS,ii,p.85-86.)

ஊட்ட மிடாத (வி) உணவு கொடாத (961) *ஊட்ட மிடாத நாள் கோழ் பற்றியும் பொதுவாளுங் கடங்கொண்டு செலுத்துக் கடவர்* (TAS,viii,p.43-44.)

ஊட்டாது (வி) உணவிடாது (960) *ஊட்டாதொழிவாராயின் பூமி தடுத்து வச்சு உண்ணக் கடவியர்* (TAS,iii,p.159-69.)

ஊட்டாமே (வி) உணவூட்டாமல் (894) *இப்பரிசு ஊட்டாமே விக்ரக்ஙநஞ் செய்தார்* (SII,iii,1.)

ஊட்டாராக (வி) ஊட்டாமல் இருக்க (759) *தளியாள்வார் ஊட்டாராக* (SII,iv,827.)

ஊட்டி (வி) உணவளித்து (941) *முப்பத்தேழு காடி ஐந்நூம்பாக எழுநாளும் ஊட்டிச் செலவு பெறுமரிசி* (SII,viii,529.)

ஊட்டு (பெ) வட்டி (985) *நொந்தாவிளக் கொன்றினாற் பொன் ஐங்கழஞ்சு ஊட்டுப் பொன் கழஞ்சு* (SII,iv,148.)

ஊட்டு (பெ) வருவாய் (864) *இப்பொன் கொண்டு பலிசை ஊட்டினால் நாள்வாய் நாழி நெய் முட்டாமை அரிச்சிப்பார்* (SII,vii,503.)

ஊட்டு (பெ) உணவு (861) *ஊட்டுமடக் கடவர்* (TAS,ii,p.85-86.)

ஊட்டு (வி) உண்பிக்கும் (861) *ஊட்டு பரிசு* (TAS,ii,p.85-86.)

ஊட்டுகள் (பெ) உணவு (995) *திருச்செந்நெல் நடைக்கு திருப்பலி ஊட்டுகளுக்கும் திருவாராதினை செய்வாரிருவர்க்கும்* (SII,vii,1017.)

ஊட்டுவதற்கு (பெ) உண்பிப்பதற்கு (909) *வேதஞம் வல்லானெரு ப்ஙராஹ்மணனை ஊட்டுவதற்கு* (SII,iv,520.)

ஊட்டுவதாக (வி) உணவளிப்பதாக (809) *பாப்பார் சான்றாரேய் காத்தூட்டுவதாக* (SII,xiv,40.)

ஊடு தடிகள் (பெ) நடுவேயுள்ள வயல் பகுதிகள் (1247) *போகின்ற காலுக்கு கிழக்கும் இதன் மேற்குள்ள ஊடுதடிகளும்* (SII,v,446.)

ஊடு போங்து (வி) நடுவே சென்று (1008) *புறவூர் நிலத்தூடு போந்து இவ்வூர் நிலத்துக்குப் பாயும் வாய்க்கால்கள் மேனடை நீர் பாயவும்* (EI,xxii,34.)

ஊண் (பெ) உணவு (1019) *அட்டியூணுங் கறியுந் நெய்யு மொண்டாய் பிராமணரை ஊட்டி* (TAS,v,p.189.)

ஊணொபாதி (பெ) உணவாகக் கொடுக்கும் வரி (1239) *திருமுகத்தேவைக்கு ஆளாய் வந்தது ஊணொபாதி செய்ய கடவர்களாகவும்* (SII,vi,48.)

ஊத்தாதாயம் (பெ) (= ஊத்தைப்பாட்டம்) (1514) *க்ஙராமம் ஒன்றுக்கு [நடக்கிற] ஊத்தாதாயம் பூஙம்யாதாஙரம் ஆயம் மகமை* (NI,s.11.)

ஊத்துக்கால் (பெ) ஒரு வரி (1548) *ஆற்றுக்கால் ஊத்துக்கால் மாவடை மரவடை செக்கொட்டு தறிக்கடமை எப்பேர்ப்பட்ட சகல உபாதிகளும்* (SII,viii,113.)

ஊத்தை அட்டாமல் (வி) தீங்கு உறாமல் (1014) *ஸ்ரீ ராஜராஜதேஉவந் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று* (SII,ii,64&95.)

ஊதுகிற (வி) தீயெரிய காற்றைச் செலுத்துகின்ற (1300) *கொல்லர் ஊதுகிற உலைகளில்* (IPS,427.)

ஊதும் (பெ) ஒலிக்கின்ற (1012) *சங்கூதுமாள் ஒன்றுக்குமாக* (IPS,89.)

ஊம்படுவன (பெ) ஊம் என்று முனகுவன (1176) *தடைபடுவன கோபுரமே ஊம்படுவன சூன் மகளிரேய்* (SII,xvii,585.)

ஊர்க்கணக்கர் ஜீவிதம் (பெ) ஊர்க் கனக்கர் பொருட்டு செலுத்தப்படும் ஒரு வரி (1291) *வெட்டிப் பரிவாரம் ஊர்க்கணக்கர் ஜீவிதம் பணிக்கொத்து தறுதம்பு வண்ணார் நெல்லு* (SII,v,987.)

ஊர் (பெ) மக்கள் குடியிருக்கும் இடத்தின் பொதுப்பெயர்: மரபு வழியான (பிரமதேயம் அல்லாத) ஊர் (550) *குடி நீக்கி இவ்வூர் பெற்ற வஜ்ரநந்திஉக்குரவர்க்கே பள்ளிச்சந்தமாக* (PLCP, p.29.)

ஊர்க்கணக்கவரி (பெ) ஊர்க் கணக்கன் செலுத்தும் வரி (1258) *முள்ளடி ஊர்க்கணக்கவரி உவச்சன் பேர்க்கடமை ஆசுவிகள் பேர்க்கடமை* (SII,i,78.)

ஊர்க்கணக்கன் (பெ) ஊர்க் கனக்கை எழுதுபவன் (1004) *ஊர்க்கணக்கன் தேவன் கராளநேன்* (EC,xiv,TN.220.)

ஊர்க்கணக்குப் பேறு (பெ) ஊர்க் கணக்கர் பொருட்டு செலுத்தப்படும் வரி (1289) *பணிக் கொத்து பாடிகாவல் ஊர்க்கணக்குப்பேறு காரியப்பேறு காணியாள்பேறு* (SII,vii,793.)

ஊர்க்கமஞ்சு (வி) ஊர் மன்ற உறுப்பினராகத் தகுதி பெற்று (1124) *ஊர்க்கமஞ்சு வெள்ளாளந் நாயகந் மண்டையேறும்* (SII,v,673.)

ஊர்க் காட்சை எண்ணை (பெ) உற்சவ ஊர்வலம் வருங்கால் தேவைப்படும் எண்ணெய் (1237) *ஊர்க் காட்சை எண்ணை 12க்குந் [நெல்] 2 கலவும்..* (TAS,vii,p.127.)

ஊர்க்கால் (பெ) ஊரில் வழங்கும் முகத்தல் கருவி (992) *ஸ்ரீகோயிற்கால் ஊர்க்கால் பழுவூர் நக்கனால் திருமுற்றத்து அளக்க கடவ நெல்லு* (SII,xix,357.)

ஊர்க்கிடையீடு (பெ) ஊர்க் குத்தகை யுரிமை (?) (1300) *தானமும் பரடையும் அறமும் பெறார் ஊர்க்கிடையீடுங் கெடுவிது* (TAS,iii,p.191-96.)

ஊர்கணக்கர் காசு (பெ) ஒரு வரி (1209) *பல காசாயங்களும் தறி இறை தட்டார்பாட்டம் ஊர்கணக்கர் காசு* (SII,vii,107.)

ஊர்களிலார் (பெ) (= ஊரார்) (1014) *மூலப்ஙருத்யநாகிய சண்டேஉச்ஙவரர் பக்கல் பொலிசைக்கு ஊர்களிலார் கொண்ட காசும்* (SII,ii,6.)

ஊர்காவல் கொண்டாரு (பெ) உள்ளூர்க் காவலர் (500) *தருமிகளு மூர்காவல்கொண்டாரு ஆராஇந்து வைஇக்கப்பட்டாரு* (AVNM,1,p.67-69)

ஊர்கீழிறையிலி (பெ) ஊரார் வரிசெலுத்தும் பொறுப்பேற்ற மானிய நிலம் (868) *காசு கொள்ளா ஊர்கீழிறையிலியாக மணலிடில்* (SII,xii,58.)

ஊர்ச் சரிகை (பெ) (= ஊர்ச்சாரிகை) போக்கு வரத்து பண்டங்கள் மீதான சுங்க வரி (1268) *காசு கடமை வெட்டி ஊர்ச்சரிகை தறியிறை மற்றும் எப்பேர்ப்பட்ட இறைகளும்* (SII,v,878.)

ஊர்த்தநிசுகள் ஊராரின் பொதுக் கடன்கள் (1015) *இப் பொந் கொண்டு கோயில் வாசலாற் போந்த குடிமைகளும் ஊர்த்தநிசுகளும் மற்று எங்களூர் சுட்டு வந்த இறை* (SII,xvii,741.)

ஊர்த் தரகு (பெ) ஊரில் விற்போர் வாங்குவோர் கொடுக்கும் பொருள் (1547) *உண்டிகை கருஞ்சரக்கு மருத்துப் பாட்டம் அளக்க நிறுக்கப் பட்டதும் சபை பச்சைப்பாட்டம் எற்பேறப்பட்டதும் களக்கடையில் ஊர்த்தரகும்* (TAS,ix,p.16-18.)

ஊர்த் தலையாரிக்கம் (பெ) உள்ளூர்க் காவலர் பொருட்டுச் செலுத்தும் வரி (1460) *ஊர்தலைஆரிக்கம் புல்வரி பிறதானிசோடி அதிகாரிசோடி* (SII,vi,4)

ஊர் தண்டல் (பெ) ஊரில் வரி வசூலிப்பவன் (1220) *ஊர்தண்டல் நெற்குன்றமுடையார்* (SII,vii,207.)

ஊர் தரம் (பெ) ஊரில் வரிவிதிப்பு நிலங்களின் விளைச்சல் தரம் (1178) *இந்த நிலத்துக்கு ஊர்தரப்படி நெல்லு அறுகலனே இருதூணிக் குறுணி* (SII,xvii,540.)

ஊர்த்$_3$த்$_4$வகேசம் (பெ) விரித்தசடைமுடி போன்ற நகை (1010) *ஊர்த்$_3$த்$_4$வகேசமும் உள்படத் திருமுடி ஒன்றினால் பொன்* (SII,viii,234.)

ஊர்ப் பதின்காடி (பெ) ஓர் ஊருக்கு பத்துக் காடி நெல் என்று வாங்கும் வரி (967) *இவ்வூரிற் கண்ணாலக்காணமும் ஊர்ப்பதின்காடியும் பிதாநாழியும்* (EI,xxviii,43b.)

ஊர்ப் பழச்சம் (பெ) ஒரு வரி (1284) *உதகப்பிரமாணம் பண்ணிக் குடுத்தோம்..ஆசுவம் அவலம்பலம் ஊர்ப்பழச்சங் காத்திகை படி..வரிவு காணிக்கை* (EC,x,Mr.38.)

ஊர்ப் பறையன் (பெ) ஊர்ப் பொது ஊழியம் செய்யும் பறையன் (1009) *மரத்தச்சனுக்குப் பங்கு அரையும் ஊர்ப் பறையனுக்குப் பங்கு காலும்* (CHEN,xxi,p.425-28.)

ஊர்ப் பாத்தி (பெ) ஊராருக்குச் சொந்தமான நிலம் (952) *இத்தேவர் இறை இறுக்க கடவ நிலத்தில் ஊர்ப்பாத்தியில் பாதியும் நீர் நிலத்துப் பாதியும்* (SII,viii,621.)

ஊர்படு குடிமை (பெ) ஊரார் செலுத்த வேண்டிய குடிமை (1016) *நீர்க்கீய் விலையும் உகப்பார் பொன்னு மற்று மூர்படு குடிமை ஏதொன்றும்* (SII,iii,54.)

ஊர் பாழ் (பெ) குடி இல்லாத ஊரிருக்கை (792) *உவரியும் ஊர்பாழும் காடும் ஓடையும்* (EI,xviii,14.)

ஊர் புரவு (பெ) ஊரில் வசூலாகும் மொத்த வரி வருவாய் (1266) *அந்தராயம் அதரவிநியோகம் ஆட்தேவை ஊர்புரவுடன் கூட்டி திறப்பிற்கு இறுக்கக் கடவதல்லவாகவும்* (IPS,367.)

ஊர் மாகாணி (பெ) ஒரு வரி (1600) *நல் எருது நற்பசு நல் ஆடு கோணிகை விரிமுட்டு உலுப்பை ஊழியம் ஊர்மாகாணி சீவிதம் அதிகாரிசோடி* (SII,viii,293.)

ஊர்மாவீந்த கடமை (பெ) ஊரின் மொத்த நிலவரியில் பங்கு விழுக்காடு (1217) *இன்னிலங் கைக்கொண்டு ஊர்மாவீந்த கடமையும் இறுத்துக் குடிமை செய்து* (TMPL,vii,p.502-05.)

ஊர் முதல் (பெ) ஊரின் வருவாய் மொத்தம் (1003) *திருநாவலூரும் பெரும்பாக்கமும் ஊர் முதலுள்* (SII,vii,1000.)

ஊர்மேல் நிற்கும் கோ (பெ) ஊரை மேற்பார்வை செய்யும் அரசு அலுவலர் (896) *ஸம்வத்ஸர வாரிகப் பெருமக்களும் ஊர்மேல் நிற்கும்(ங்) கோவும்* (SII,xiii,312.)

ஊர்மேனின்ற திருவடிகள் (பெ) (= ஊர்மேல் நிற்கும் கோ) (924) *வதி அட்டுவதாக ஊர்மேனின்ற திருவடிகளே கடைக்காச்சியால்* (SII,vi,292.)

ஊர் வ்ாரியம் (பெ) சபை வாரியங்களுள் ஒன்று (895) *ஊர் வாரியப் பெருமக்களு* (SII,xiii,307.)

ஊர் வாஸ்து (பெ) ஊர்ப்பொது மனையிடம் (1278) *சித்தர் கோயிலுக்கு வடக்கு ஊர் வாஸ்துவில் புழுக்கடை வாவநத்துக்கு கிழக்கு* (SII,iv,426.)

ஊர் விலைப்பிரமாணம் (பெ) ஊர்ப்பொதுவில் செய்த விற்பனை (1285) *வளத்து நன்மை செய்த உமையாண்டாற்கு ஊர் விலைப் பிரமாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது* (IPS,422.)

ஊர் விவத்தை (பெ) ஊரவையின் தீர்மானம் (1178) *இராச நியோகமும் நாட்டு விவத்தை ஊர்விவத்தைபடியும் வந்த கடமை* (SII,xvii,540.)

ஊரடங்கல் (பெ) ஊர் முழுவதும் (1000) *புறங்கரம்பை நாட்டு தனவலிப் பூண்டி ஊரடங்கல் நிலன் முப்பதிற்று வேலியும்* (TASSI,1958-59,p.102-108.)

ஊரடவு (பெ) ஊர் அவைப் பொறுப்பில் உள்ள நிலத்தின் வரிக்கணக்கு (1236) *ஊரடவு இறை நிலம் 510 த்தின் மேலும்* (TAS,iii,p.59-63.)

ஊராக இசைந்த ஊர் (பெ) ஒரு மனதாக கூடிய ஊர்மன்றத்தினர் (1300) *இந்நாட்டு மேற்படி ஊர் ஊராக இசைந்த ஊரோமும்* (IPS,525.)

ஊராட்சி (பெ) ஊர் மன்ற நிர்வாகச் செலவுக்காக தரப்படும் வரி (852) *பரிஹாரம் நாடாட்சியும் ஊராட்சியும்* (SII,ii,98.)

ஊராடு கல் (பெ) ஊரில் வழங்கும் எடைக்கல் (890) *ஊராடு கல்லால் 110 . னூற்றொரு பதின்கழஞ்சு* (SII,v,572.)

ஊராடு கோல் (பெ) ஊரில் வழங்கும் நில அளவு கோல் (985) *மேலைப் புது கிணற்று மேற்கடைய தெற்கு வடக்காக ஊராடு கோலாலளந்து குடுக்க* (SII,xiii,99.)

ஊராண்ம ஸ்தா$_2$நம் (பெ) நிலக்கிழார் உரிமை(?) (1251) *கோவிலில் மேல்கோயிம்ம ஊராண்ம ஸ்தா$_2$நம் கொடுக்கையில்* (TAS,iv,p.86-89.)

ஊராண்மை (பெ) (சேர நாட்டில்) நிலக்கிழார் உரிமை (1300) *ஊராண்மை யில்லாத்தவரள் இக்கச்சம் பிழைப்போர் யில்லங்களுடைய இடையீடு* (TAS,iii,p.191-94.)

ஊராண்மை (பெ) ஊர்மன்ற நிர்வாகம் (950) *ப்$_3$ரஹ்மதே$_3$யமாய்ப் பிடி சூழ்வித்து ஊராண்மையில் வேறுனீக்கி* (TASSI,1962-65,p.32-52 .)

ஊராயிசைந்த ஊர் (பெ) ஒரு மனதாகக் கூடிய ஊர் மன்ற உறுப்பினர் (985) *செய்து குடுத்தோம் நெரிஞ்சிக் குடி ஊராயிசைந்த ஊரோம்* (IPS,20.)

ஊரார் (பெ) சாதாரண ஊர்களில் நிலக்கிழார் கொண்ட ஊர் மன்றம், அதன் உறுப்பினர் (1000) *ஊரார் இடை பொன்குடுத்து* (CHHS,1971/125.)

ஊரார் (பெ) ஊர் மன்ற உறுப்பினர் (809) *இவ்வூர் ஊராரே பக்கல்* (SII,xiv,40.)

ஊராள்கோ (பெ) (= ஊர்மேல்நிற்கும் கோ): அரசன், அரச அலுவலர் (962) *இபூ$_4$மிக்கு எம்மூராள் கோவினால் வந்த விக்கமுள்ளது* (SII,iii,181.)

ஊராள்ச்சி (பெ) (= ஊராட்சி) (691) *மநையும் மநைப் படப்பும் ஊராள்ச்சியும்* (SII,i,151; EI,xvii,22.)

ஊராள்வர்கள் (பெ) ஊரை நிர்வகிக்கும் அரச அலுவலர்கள் (980) *இவ்வூர் அங்காடியில் ஊராள்வர்கள் பெறுமங்காடிக் கூலி கொண்டு இவ்வூர் நகரவாரியஞ் செய்வோம்மேய்* (SII,v,597.)

ஊராளர் (பெ) (சேர நாட்டில்) பிராமண நிலக்கிழார் (960) *தீர்த்துக் கொடுக்கக் கடவியந் தச்ச நாட்டுராளர்* (TAS,iii,p.159-69.)

ஊராளர் (பெ) (சேர நாட்டில்) பிராமண நிலக்கிழார் கொண்ட ஊர் சபை (1000) *நந்தாவிளக் கெரிக்கக்கடவார் ஊரர்ளர்* (SII,v,784.)

ஊராளி (பெ) ஒரு சாதி (1300) *திருவான்பட்டி உடையாற்குத் தெந்வழி நாட்டு ஏழூர் ஊராளி தெந்குபேரி சிங்கன்* (SII,v,240.)

ஊரா இசைந்த ஊர் (பெ) (= ஊராயிசைந்த ஊர்) (942) *திருவிழாப்புறம் செது குடுத்தோம் ஊரா இசைந்த ஊரோம்* (IPS,81.)

ஊரிடுவரி (பெ) ஊரார் அரசுக்குச் செலுத்தும் வரிகள் (936) *இந்நிலத்தால் வுந்த இறையும் வெட்டியும் மற்றும் ஊரிடுவரியால் வந்தது எப்பேர்ப்பட்டதும்* (SII,xvii,636.)

ஊரிடுவரிப்பாடு (பெ) (= ஊரிடுவரி) (985) *பதிநைங் கழஞ்சு ஊரிடுவரிப்பாட்டால் வந்த*

இறை எப்பேற்பட்டுதுக்கும் பலிசெயால்க் குடுத்த பொந் (SII,xix,55.)

ஊரிருக்கை (பெ) ஊரில் நிலக்கிழார் குடியிருப்பு இடம் (877) *ஊரும் ஊரிருக்கையும் மனையும்* (EI,xviii,2.)

ஊரிருக்கை நத்தம் (பெ) ஊரில் நிலக்கிழார்கள் வாழும் பகுதி (1014) *ஊரிருக்கை நத்தமும் இவ்வூர் மஹாதெ₃வர் ஸ்ரீ கோயிலும்* (SII,ii,5.)

ஊரிலார் (பெ) ஊரைச் சேர்ந்தவர் (960) *பள்ளிச்சந்தக் கணிமுற்றூட்டு ஊரிலார்க்கும்* (EI,xv,5.)

ஊரீஞ்ச வரி (பெ) (= ஊரீந்த வரி) (1300) *இவர்கள் பேரில் ஊரீஞ்ச வரிப்படியாலுள்ள* (IPS,563.)

ஊரீந்தவரி (பெ) ஒரு நிலத்துக்குமொத்த ஊர் வரியில் விழுக்காடு (1232) *இந்நிலத்தாலுள்ள கடமை அந்தராயம் மற்றும் எப்பேற்ப்பட்டிதும் ஊரீந்தவரி ஊராய் ஏறட்டு இறுப்போமாகவும்* (IPS,301.)

ஊருகாய் (பெ) (= ஊறுகாய்) கறி வகை (1396) *அம்பலம் அடிச்சுதளிக்கும் கூட்டத்தில் தண்ணீரும் உப்பும் ஊருகாயும் தன்ம நடக்கணம்* (TAS,vii,p.112.)

ஊருண்ணி (பெ) (= ஊருணி) (1139) *வட எல்லை அஞ்சாதகண்டன் ஊருண்ணிக்கு தெற்கும்* (SII,xiv,243.)

ஊருணி குளம் (பெ) ஊர்க்குடிநீர் மற்றும் பாசனக் குளம் (1014) *பிடாரி கோயிலுந் திருமுற்றமும் ஊருணிகுளமுங் கரையும் ஐயன் கோயிலுந்* (SII,ii,5.)

ஊருணிப்புறம் (பெ) ஊருணி பராமரிப்புக்காக விட்ட நிலம் (1223) *செங்கழநி வயக்கலும் ஊருணிப்புறம் பிரத்த வயக்கலும்* (IPS,269)

ஊரும் (வி) செல்லும் (771) *பொருதூருங் கடற்றானையை* (EI,xvii,16.)

ஊரெட்டு (பெ) ஒரு வரி (789) *கண்ணாலக் காணமும் ஊரெட்டும்* (SII,ii,99.)

ஊழ்த்த பயன் (பெ) விளைச்சல் (1000) *ஸமூஹத்தில் பந்நிரண்டு ஊழ்த்த பயன் கூறிட்டு கொள்ளும் முதலும் ஊட்டக் குறைவும்* (EI,xxxiii,33.)

ஊழி (பெ) யுகம் (905) *அரவரைசன் பல்லூழி ஆயிரமாயிருந்தலையால்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

ஊழியங்கள் (பெ) உழைப்பு மூலம் செலுத்தல் (1500) *நயினாற்கு ஆள்வரியும் இறுத்துச் கொடியேறுத் திருனாளுக்கு ஊழியங்களுண்டானது செய்துபோதக் கடவார்களாகவும்* (IPS,596.)

ஊழியம் (பெ) உடலுழைப்பு (1388) *கிறையமாகக் கொள்ளும் முதல்களும் ஊழியமாகக் கொள்ளும் எடுத்தளவு விகுதி [தா]ப்படியும்* (SII,viii,156.)

ஊற்க்கேடு (பெ) ஊர்க்குக் கெடுதி (1239) *வெள்ளாழர் ஆதல்க் கணக்கர் ஆதல் ஊற்க்கேடு நாட்டு கேடு பொற்கேடு சொன்னார்* (SII,vi,48.)

ஊற்று (பெ) வடிகால் நீர் (976) *பழங்கோளூர் ஊற்றும் ஏரி நீரும் செய்க்கு பாய்கிற வாய்க்காலும்* (SII,xix,169.)

ஊற்றுக் கால் (பெ) வடிகால் நீர் ஓடுகின்ற வாய்க்கால் (976) *தத்தப்பாடி எல்லைக்கு கிழக்கும் பல்லூர் ஏரிக்குப் பாய்ந்த ஊறுக்காலுக்கு கிழக்கும்* (SII,xix,169.)

ஊற (வி) கலக்க (1469) *எலும்பிச்சை பழத்துடன் ஊற இட்ட இஞ்சி அமுதும் கடுகு மாங்காயமுதும்* (TDI,ii,38.)

ஊறுகால் (பெ) வடிகால் (691) *தலெப்பேழயும் ஊறுகாலும்* (SII,i,151; EI,xvii,22.)

ஊன்றி (பெ) ஏற்றத்தின் ஓர் உறுப்பு (1254) *ஏத்தமும் ஏத்த நிலை சிக்குழியும் முன்னூன்றி பின்னூன்றியும்* (SII,xii,166.)

ஊன்னம் (பெ) (= ஊனம்): இடையூறு (974) *இந்த தல்மத்துக்கு ஊன்னம்மாக நின்றோம் இக்கிராமத்தை தீங்கு நினைத்தான் பாவத்து படுவோம்* (SII,xiii,284.)

ஊனம் (பெ) குறைவு (815) *ஊனமில் புகழ்* (SII,iii,206b.)

எ

எங்கணும் (பெ) எவ்விடத்தும் (1075) *வெண்குடை இருநிலவளாக மெங்கணுந் தநாது திருநில வெண்ணிலாத் திகழ* (SII,iii,68.)

எங்கயர் (பெ) எங்கள் தங்கைமார் (800) *பண்டெலாம் யாமறிது மெங்கயர்க்கேய் சொல்லு* (EI,xiii,10.)

எங்கள் (பெ) எங்களுடைய (845) *எங்கள் தூம்பனேரி* (EI,xi,22b.)

எங்கும் (பெ) எல்லாவிடத்தும் (800) *தோய்த்தன வாலெங்கும் வருபுனல்* (ei.xiii,10.)

எங்ஙநே (இ) எப்படி (1168) *இநக்குயிது எங்ஙநேயாமோ வென்று விசாரந் தோன்றி* (SII,vi,456.)

எச்சம் (பெ) சந்ததி (961) *வழியேழெச்சம் ஒழியாமலறுவான்* (SII,iii,213.)

எச்சற்று (வி) சந்ததியில்லாமல் (1197) *ஆதன்பாக்கத்துக்கு காணியாளர் எச்சற்று நெடுங்காலம் பாழ் கிடந்ததென்று* (SII,v,1359.)

எச்சில் (பெ) சாப்பிட்ட இலை (992) *எச்சில் எடுத்து எச்சில் மண்டலம் செய்து* (SII,xix,357.)

எச்சில் மண்டலம் செய்து (வி) உணவுண்ட இடத்தை தூய்மை செய்து (992) *எச்சில் எடுத்து எச்சில் மண்டலம் செய்து கலம் சாம்பல் இடுவாள் ஒருத்திக்கு நிசதம் நெல்லு* (SII,xix,357.)

எச்சிலடிப்பன் (பெ) எச்சில் இலை நீக்கிச் தூய்மை செய்பவன் (1000) *இருநாழி அரிகுத்துமவன்னு எச்சிலடிப்பவனு நாழி அக்கிரத்தின்னு* (TAS,iii,p.186-188.)

எச்சிலெடுப்பான் (பெ) சாப்பிட்ட இலையை அகற்றித் தூய்மை செய்பவன் (938) *அரிசி அரித்து எச்சிலெடுப்பானுக்கும்* (SII,v,693.)

எச்சு (பெ) சந்ததி (986) *தோளாச் செவியரான ஏலாக்கையர் எச்சற்றமையில் இவ்வேலாக் கையார்* (SII,iii,128.)

எச்சோற்று கூற்று நெல் (பெ) எச்சோறு பொருட்டுக் குற்றும் நெல் (1120) *எச்சோற்று கூற்று நெல் வெட்டி அமஞ்சி என்று காட்டவும்* (SII,vii,542.)

எச்சோறு (பெ) பொது ஊழியர்களுக்குப் பகலில் கொடுக்கும் சோறு (ஒரு வரி) (871) *எப்பேர்ப் பட்ட இறையும் எச்சோறும் வெட்டி வேதினையும்* (SII,v,544.)

எஞ்சல் (பெ) குறைதல் (1048) *வஞ்சியம் பொதுமலர் மலைத்தாங்கெஞ்சலில் வேலைகெழு காந்தளூர்ச் சாலை* (SII,viii,199.)

எஞ்சாத (வி) குறையில்லாத (785) *எஞ்சாத சா₀ஸ்த்ரங்களை* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

எட்டு (பெ) 8 (எண்) (774) *கோமாறஞ் சடையற்கு யாண்டு எட்டு* (SII,xiv,23.)

எட்டு நடைப் பரிகள் (பெ) விரைந்து செல்லும் குதிரைகள் (1056) *மூல பத்தர சாதி பகட்டனமநேகம் மெட்டு நடைப் பரிகளு மொட்டக நிரைகளும்* (SII,v,489.)

எட்டை வட்டை (பெ) தொலைதூரம் செல்லும் வணிகப் பெருவழி (1300) *எட்டை வட்டை யிடை வட்டைகளிற் திசை விளங்கு திசையாயிரத் தைஞ்நூற்றுவரோமும்* (SII,vii,442.)

எடர்புரம் (பெ) பொன்னை நிறுக்கும் ஒரு எடைக்கல் (962) *யாங்கள் கொண்டு கடவ பொன் எடர்புரம் பந்நிரு கழஞ்சு பொன் பெறுவதாகவும்* (SII,iii,180.)

எடுக்க போந்த (வி) நிறுத்த (996) *கோலால் எடுக்க போந்த நிறை செப்புத் தளிகை தொண்ணூற்றுப் பலமும்* (SII,vii,411.)

எடுக்கின்றது (பெ) கையால் அள்ளி எடுக்கப்படுவை (1252) *எண்ணின்றதிலும் எடுக்கின்றதிலும் உபனோடு சக்கரயோடு கஸ்தூரியோடு* (EI,iv,41.)

எடுக்கு நான்று (பெ) நடத்துங் காலத்து (869)

முதல் விழா எடுக்கும் நாள்று (SII,vii,523.)

எடுத்த (வி) கட்டிய (691) *ஊருள் மண்டகம் எடுத்த நிலத்தொடு* (SII,i,151; EI,xvii,22.)

எடுத்ததனை (பெ) கையால் எடுத்ததை (922) *எங்களுற்றது நாங்களெடுத்ததனை நாளும் சிலாலேகைப்படி* (SII,vi,295.)

எடுத்த படி (பெ) செய்த நகல் (974) *கல்லின்படி எடுத்துக் கொண்டு இட்டமையில் முன்படி எடுத்தபடி மாற்றின பரிசேய் திருக்கற்றளி மேலே* (SII,iii,124; SII,xix,91.)

எடுத்தருளி (வி) சொல்லி (771) *எம்மாலுந் தரப்பட்டதென்று செம்மாந் தவனெடுத் தருளி* (EI,xvii,16.)

எடுத்தளவு (பெ) ஒரு வரி (1341) *வழிநடைக்கு இடும் பணம் முன்னிடும் பணம் எடுத்தளவு விருத்துப்படி* (SII,vii,109.)

எடுத்தளவு விகுதி (பெ) ஒரு வரி (1388) *கிறையமாகக் கொள்ளும் முதல்களும் ஊழியமாகக் கொள்ளும் எடுத்தளவு விகுதி தாப்படியும்* (SII,viii,156.)

எடுத்தான் (வி) கட்டினான் (862) *அறிவர் கோஇல் முக மண்டகமெடுத்தான்* (SII,xiv,45.)

எடுத்து (வி) கட்டி (691) *விச்சாவிநீத பல்லவ பரமேச்சுரகரம் எடுத்து* (SII,i,151; EI,xvii,22.)

எடுத்து (வி) நடத்தி (869) *திருவிழாவெடுத்து* (SII,vii,523.)

எடுத்துக்காட்டும் பச்சை (பெ) ஒரு வரி (1300) *எடுத்துக் காட்டும் பச்சை ஆட்தேவை மதிட்தேவை* (SII,iv,369.)

எடுத்துக்கொட்டி (பெ) ஒரு வரி (1239) *ஆயம் பாடிகாவல் வாசல்வரி எடுத்துக்கொட்டி அரிமுக்கை உட்படப் பல நெல்லாயங்களும்* (SII,i,62.)

எடுத்துக்கொண்டு (வி) தொடங்கி (805) *தந்திவர்ம்மற்கு யாண்டு நான்காவது எடுத்துக்கொண்டு ஐந்தாவது முற்றுவித்தான்* (SII,xii,40; EI,xi,15.)

எடுத்து கட்டி (பெ) கைப்பிடிச்சுவர் (1234) *திருவெடுத்து கட்டி அழிவு சோரத் தந்த காசு பதினாயிரம்* (SII,viii,105.)

எடுத்துரைத்து (வி) விளக்கிச்சொல்லி (771) *அந்தணாளர் முன்பு கேட்க என்றெடுத்துரைத்து* (EI,xvii,16.)

எடுத்தோம் (வி) கொண்டோம் (922) *சிலாலேகைப்படி பிழைக்க எடுத்தோமாயில்* (SII,vi,295.)

எடுப்ப (வி) பாட (1220) *முனிவர்கணந் துதியெடுப்ப* (CHEN,xiv,p.362-64.)

எடுப்பதற்கு (வி) கட்டுவதற்கு (850) *திருமண்டப மிழிச்சி யெடுப்பதற்கு* (SII,iii,3.)

எடுப்பது (பெ) கட்டுவது (691) *தளி எடுப்பதற்கு ஒடு சுடக் கொண்ட நிலம்* (SII,i,151; EI,xvii,22.)

எடுப்பார் (பெ) தாங்குவார் (986) *விளக்கு பிடிப்பாரும் கொடி எடுப்பாரும்* (SII,iii,128.)

எடுப்பிக்கின்ற (வி) கட்டுவிக்கிற (1008) *நாகபட்டினத்து எடுப்பிக்கின்ற சூளாமணி பந்மவிஹாரத்துப் பள்ளிக்கு* (EI,xxii,34.)

எடுப்பிச்ச (வி) கட்டுவித்த (809) *ஊரிலே எடுப்பிச்ச முந்நூறுவப் பெரும் பந்தல்* (SII,xiv,40.)

எடுப்பிச்சு (வி) உண்டாக்கி (1011) *காடும் வெட்டுவிச்சு மடைகளும் எடுப்பிச்சு பரமேச்ᵤவர பேரேரி என்று பேரிட்டு* (SII,v,724.)

எடுப்பித்த (வி) கட்டுவித்த (800) *சுவரன் மாறனவனெடுப்பித்த பிடாரி கோயில்* (EI,xiii,10.)

எடுப்பித் தருளின (வி) கட்டுவித்த (1001) *செம்பியன் மாதேவியார் எடுப்பித் தருளின ஸ்ரீ திருவக்கரை திருக்கற்றளி* (SII,xvii,222.)

எடுப்பித்து (வி) கட்டுவித்து (883) *கல்லாலே ஸ்ரீவிமான மெடுபித்து* (SII,viii,633.)

எடுப்பு (பெ) வீடுகள் கட்டப்படல் (1096) *திருமடை விளாகத்து எடுப்பாயிருந்த மனைகள்* (SII,viii,75.)

எடுமனை (பெ) கட்டடம் எடுக்கப்பட்ட மனை (1267) *உள்ள கோத்த நல்லத்தில் எடுமனை நாலு சிறகில்* (EC,xiv,YI.113.)

எண் சதுரம் (பெ) எட்டுப் பட்டைகள் கொண்டது (1014) *பித்தளை கொண்டு ஈழப்பரிசு எண் சதுரமாகச் செய்வித்துக் குடுத்த* (SII,ii,36.)

எண்டிசை (பெ) எட்டுத் திக்குகள்; எல்லாவிடத்தும் (990) *குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும் எண்டிசை புகழ் தர...மண்டலமும்* (IPS,83.)

எண்ணரு எண்ணுதற்கரிய; பல (1050) *புறை கழலரைசரோடெண்ணரு மகளிரைத் திண்ணெநப் பிடிப்பித்து* (SII,v,641.)

எண்ணாப் பூரி (பெ) எண்ணெயில் செய்த ஒரு பணியாரம் (1046) *எண்ணாப் பூரி நிசதம் ஐவஞ்சும் சுட்டு* (SII,xiv,191.)

எண்ணி (வி) கணக்கிட்டு (1228) *அடைவுகளில் இந்றொள்ள ஆளெண்ணி* (TAS,viii,p.23-24.)

எண்ணின்றது (பெ) எண்ணிக் கொள்வது (1225) *எண்ணின்றதிலும் எடுக்கின்றதிலும் உபனோடு சக்கரயோடு* (EI,iv,41.)

எண்ணைக் காப்பு (பெ) எண்ணைப் பூச்சு (1011) *சநிதோறும் எண்ணைக் காப்பு சாத்தி அருள* (SII,v,724.)

எண்ணை நடையன் (பெ) உடம்புக்கு எண்ணை தேய்ப்பவன் (936) *இராஜாதித்த தேᵤவர் எண்ணை நடையன் வண்ணக்கன் வடுகன்* (SII,vii,977.)

எண்ணைநெய்த் தீர்வை (பெ) ஒரு விற்பனை வரி (1533) *நெல்லுப்பொதி அரிசிப்பொதி உள்ளிட்ட பல தானியவற்கத் தீர்வையும் எண்ணைநெய்த் தீர்வையும்* (SII,xvii,264)

எண்ணைப் பந்தம் (பெ) ஒரு வரி (1400) *ஆசுபொதுமக்களைக் கொள்ளும் வரி எண்ணைப் பந்தம் உள்ளுட்ட இறைகளும்* (SII,vii,936.)

எண் பட்ட (வி) எண்ணில் மிகுந்த (1270) *காத்திலன் தாடலர்கோன் எண்பட்ட சேநையெதிர் பட்டொழுக* (SII,iv,618.)

எண்பிடிக்கோல் (பெ) எட்டுப்பிடி கொண்ட ஒரு நில அளவு கோல் (953) *எண்பிடிக் கோலாலொரு கோலாழமுன் நாற்கோல் நீளமுன் நாற்கோலகலமு மொரு குழி* (SII,xiii,74.)

எண்பெருங்களிறு (பெ) திக்குகளை தாங்கும் எட்டு யானைகள் (1192) *வெண்கோட் டெண் பெருங்களிறும் இசைமகளேற* (SII,v,301.)

எண்வர் (பெ) எட்டுப்பேர் (1000) *ஸ்ரீ கோயிலப் பணி செய்யும் மாணிகள் எண்வர்க்கு பலியால் குறுணியாக நெல்* (SII,viii,548.)

எத்தனையும் (பெ) பலவும் (833) *சோழ நன்னாட்டுளெத்தனையுந் திருத்துவித்தோன் இருப்பைக்குடி கிழவனென* (SII,xiv,44.)

எத்திறத்தும் (பெ) எவ்வகையிலும் (771) *எத்திறத்து மிகலழிக்கும்* (EI,xvii,16.)

எத்துணையோ (பெ) அளவில்லாதன (785) *ஆதிᵤவிக்ரமங்களெத்துணையோ பல செய்து* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

எத்தொரு (பெ) ஏதாவதொரு (1236) *மாசெனத் தினு எத்தொரு அழிவொண்டாகில்* (TAS,iii,p.59-63.)

எதிர் (வி) அடுத்த (810) *கோமாறஞ் சடையற்கு யாண்டு முப்பதைஞ்சு இதனெதிர் ஏழு இவ்வாண்டு* (SII,xiv,42.)

எதிர் கொள (வி) வரவேற்க (1061) *அந்தர வானத்தரம்பையர் எதிர் கொள இந்திரலோக மெய்தி* (SII,xvii,579.)

எதிர்ந்த (வி) எதிர்த்து வந்த (905) *சிலைச் செதிர்ந்த மன்மாயமா மிகுத்தர்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

எதிர்ந்தவர் (பெ) (தன்னுடன்) போரிட்டவர் (771) *கடுவிசையாலெதிர்ந்தவரை நெடுவயல்வாய் நிகரழித்து* (EI,xvii,16.)

எதிர்ப்பை (பெ) கைம்மாறு (1223) *வேண்டிக்கொண்டு நான் பல இடங்களிலும் எதிர்ப்பை குடுத்து பொருள்கள்* (CHEN,xvii,p.51-53.)

எதிர்பட்டு (வி) எதிரே வந்து (1270) *காடவர் கோன் எண்பட்ட சேனை யெதிர்பட்டொழுக வெழுந்த புண்ணீர்* (SII,iv,618.)

எதிர் மலைந்த (வி) முரண்பட்ட (771) *எதிர் மலைந்த காடவனை* (EI,xvii,16.)

எதிர் மொழி (பெ) பதில் (1259) *முற்கூற இம்மொழி கேட்டு எதிர்மொழி கொடுத்தோன்* (SII,xii,190.)

எதிர் வந்து (வி) அழைக்க வந்து (796) *காடக்க முத்தரையரும் எதிர்வந்து* (SII,iv,135; MASI,lxiii,p.54-59.)

எதிர்வாய் (பெ) முன்பக்கம் (1016) *மூவாயிரங் குழியும் மேலைஏரி எதிர்வாயிற் கழும்பருடையார்* (SII,iii,10.)

எதிரடை (பெ) ஆவணங்களைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதல் சான்று (1249) *திருமுகமும் திருக்கை ஒட்டிப் பண்டாரத்துப் புகவிட்டு எதிரடை இடவும் இப்படிக்குக் கல்வெட்டவும் கடவுதாகப் பண்ணுவதே* (SII,viii,47.)

எதிரடை ஓலை (பெ) உழுபவர் காணியாளர்க்குக் கொடுக்கும் ஒப்பந்த ஓலை (1288) *ஆண்டுதோறும் திருநாமத்துக்காணி பேசி நிலக்கூலிக்கும் விதைமுதலுக்கும் எதிரடை ஓலை காட்டினபடியாலும்* (SII,vii,759.)

எதிரணை (பெ) குளக்கரை (?) (122) *நல்லார்க் குளத்தில் எதிரணைக்கு வடக்கும்* (IPS,262.)

எதிரம்பலம் (பெ) முன்கோயில் (1120) *தில்லைச் சிற்றம்பலத்தார்க்கு தள்ளி எதிரம்பலந் தாதம் பாதம் புள்ளுண்ண* (SII,iv,225.)

எதிரமர் (பெ) எதிர்த்தாக்குதல் (1055) *கொல்லாபுரத்து ஜயஸ்தம்ப நாட்டி எதிரமர் பெறாது எண்டிசை நிகழ்* (SII,iii,55.)

எதிரா (வி) போரிடா (905) *மன்னெதிரா வகை வென்று* (PNDCP,p.95-115; TASSI,1962-65,p.1-31.)

எதிராமாண்டு (பெ) அடுத்த ஆண்டு (868) *ஸ்ரீ கோமாறன் சடையர்க்கு யாண்டு நாந்காமாண்டின் எதிராமாண்டின் எதிராமாண்டு* (SII,xiv,6.)

எதிரெழுந்து (வி) வரவேற்று (960) *ஸ்ரீ முகங் கண்டு எதிரெழுந்து* (EI,xv,5.)

எந்தம் (பெ) எங்களுடைய (811) *அருகந்த னெந்தமிடர் தீர்க்கு* (SII,xiv,41.)

எநிச்சிலும் (வி) என்றாலும் (771) *சீடப்படாரரெநிச்சிலும் உத்தமசீலனும் வரஸூந்தஶ்ரி எநிச்சிலும்* (SII,v,405.)

எப்பகவு (பெ) (= எட்பகவு) எள்ளின் பிளவைப் போன்ற சிறிய அளவு (1279) *வெம்புலிக் கொடியை புட்பசி மாற்றிய போர்மன்னர்க் கினி புவியிலெப்பகவன்ன பகையில்லை* (SII,xii,265.)

எப்பேர்ப்பட்டதும் (பெ) எவ்வகையானதும் (952) *வெட்டியும் குலையுங் குடியும் மற்றும் எப்பேர்ப்பட்டதும் இறுத்துஞ் செய்தும்* (SII,viii,611.)

எப்போதும் (பெ) எக்காலத்தும் (961) *சிதாரி எப்போதும் முட்டாமே இடுவதற்கு* (SII,xiii,109.)

எம் (பெ) எங்கள் (771) *மேனாளெங்குரவாற் பான்முறைஇற் றரப்பட்டதை* (EI,xvii,16.)

எம்பிமார் (பெ) (என்) தம்பிகள் (978) *நாராயணன் சோமதத்தநும் நாராயணனமுதனும் எம்பிமாரும் இவனைவோம்* (SII,xix,199.)

எம்பெருமான் (பெ) கடவுள் (772) *இவனேய் எம்பெருமானுக்கு திரு நொந்தாவிளக்கு* (SII,xiv,19.)

எம்மால் (பெ) எங்களால் (மரியாதைப் பன்மை) (771) *குரவராற் குடுக்கப்பட்ட பரிசேய் எம்மாலுங்(க்) கொடுக்கப்பட்டது* (EI,xvii,16.)

எம்மான் (பெ) இறைவன் (1120) *இட்டான் எழில் தில்லை எம்மாற் கிசை விளங்க* (SII,iv,225.)

எம்மில் (பெ) எங்களுக்குள் (772) *எம்மிலிசைந்த விலைப்பொருள் எலாம்* (SII,xiv,19.)

எமப்பனார் (பெ) என் தந்தை (879) *எமப்பனார் படைத்துடைய பங்கின் வழி* (SII,vi,294.)

எய்த (வி) சேர (950) *பொழியூடேய் தண்பொருநம் எய்த வந்து* (TASSI,1962-65,p.32-52.)

எய்த (வி) அடைய (785) *மேற் சென்றங்கிருவரைஉ மிருபாலும் மிடரெய்தப் படைவிடுத்து* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

எய்த (வி) உண்டாக (785) *கரவந்தபுரம் பொலிவெய்த* (PNDCP,p,55-62; IA,xxii,p.57-75.)

எய்தி (வி) சேர்ந்து (771) *பாண்டிக் கொடுமுடி சென்றெய்தி* (EI,xvii,16.)

எய்தின (வி) பெற்ற (815) *உத்தரமந்த்ரபதஂம் எய்தின பாண்டி மங்கல விசை அரையன்* (SII,xiv,2; EI,viii,33b.)

எய்து (வி) எறியப்பட்டு (613) *கத்தி எய்து பட்டான்* (CHHS,1971/63.)

எய்தும் (வி) அடையும் (785) *மைந்தர் புலம் பெய்தும்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

எய்துவான் (வி) அடைவான் (884) *குமரி இடை எழுநூற்றுக் காதமுஞ் செய்தார் செய்த பாவமும் எய்துவான்* (SII,vi,325.)

எய்யுமிடத்து (வி) சண்டையிட்டால் (1300) *நாங்கள்பகை கொண்டு எய்யுமிடத்து எங்கள் காவல் ஆன ஊர்களில்* (IPS,484.)

எயில் (பெ) கோட்டை (1026) *மனையூர் எயிற்றொன் மலையூரு* (IPS,98.)

எயிலகம் (பெ) மதிலிடம் (1076) *துக்கை நிலம் எயிலகத்துக்குக் கீழ்பார்கெல்லை* (SII,vii,137.)

எரிக்கக் கடவர் (வி) (954) *அரைக் காணங் கருப்புரந் தீயிலிட்டெரிக்கக் கடவர்* (TAS,iii,p.169-71.)

எரி கரும்பு (பெ) அடுப்பு விறகு (1376) *திருமஞ்சனக் குடம் சால்கரகம் எரிகரும்பு இவையும் வேண்டுவன குறைவறுத்து* (SII,vii,470.)

எரி கொளுவி (வி) தீமூட்டி (1012) *சூளிகை மாளிகை யுதைகை முன்னொள்ளெரி கொளுவி* (SII,vii,863.)

எரித்தான் (வி) தீயிட்டழித்தான் (800) *கொடும்பாளூர் காய்ந்தெரித்தான்* (EI,xiii,10.)

எரிப்பது (வி) (803) *இவை கொண்டு சந்திராதிதவற் சோதி விளகெரிப்பது* (SII,xiv,36.)

எரிப்பார் (வி) (872) *இவை காத்தெரிப்பார்* (SII,xiv,9.)

எரிப்பான் (வி) எரிக்க (873) *திரு விளக்கெரிப்பான் இப்பொன் கொண்டோம்* (SII,xiv,10.)

எரிப்பிப்பது (வி) விளக்கு எரியும்படி செய்வது (800) *தேவகருமிகளாய் நிற்பாரும் எரிப்பிப்பது* (TAS,iii,p.65-66.)

எரிப்பிப்பார் (வி) எரியச் செய்வார் (935) *இதி ஆராஞ்சி எரிப்பிப்பார்* (SII,viii,56.)

எரிப்பியாதான் (பெ) (985) *இ விளக்கு ஸ்ரீ வயிஷ்ணவரிரக்ஷை யிது எரிப்பியாதானும் அழிப்பானும்* (SII,xix,446.)

எரிப்போமானோம் (வி) (864) *திரு விளக்கெரிப்போமானோம்* (SII,vii,503.)

எரிய்விதாக (வி) ஒளிவிட்டு எரிவதாக (957) *சந்த்ராதிஂத்தவத் எரிய்விதாக வைய்த்த விளக்கு* (SII,xix,23.)

எரிய (வி) ஒளிர (867) *இரவும் பகலும் எரியக் கொண்டு சென்று* (SII,xiv,12a.)

எரியாது (வி) விளக்கு எரிக்காமல் (1012) *இப்பரிசு எரியாது விடில் அன்றாழ் கோவினுக்கு* (SII,v,756.)

எரியும் பொருள் (பெ) தூப தீபத்திற்குரிய பொருள் (907) *இவற்றுக் கெரியும் பொருள் கைக்குடுத்து* (SII,xii,93.)

எரிவதாக (வி) (780) *திருநொந்தாவிளக்கு ஒன்றுஞ் சந்திராதிச்சவர் எரிவதாக* (SII,xiv,17.)

எரிவீர தளம் (பெ) (= எறிவீர பட்டணம்) (1300) *ஆற்றூர்நாட்டு ஆற்றூரான எரிவீர தளத்துமேல்பால்* (AVNM,4,p.35)

எரு (பெ) உரம் (805) *இவ்வனைத்தினாலும் வந்த எருவிலையால்* (SII,vi,359.)

எருக்கு (பெ) ஒரு செடி (1000) *வார்சடைமேல் வெள்ளெருக்கும்* (SII,iv,167.)

எருத்துக்கூலி (பெ) எருதுகள் மேல் சுமை ஏற்றிச் செல்ல கூலி (1001) *மணலியிநிந்றும் திருவக்கரைக்கு எருத்து கூலி பொதி ஒன்றினால் னெல்லு இருகலனேய்தூணிபதக்கு --- தொண்ணூற்று நாலு எருத்துக்கு எருத்துக் கூலி* (SII,xvii,222.)

எருத்துப் பொதி (பெ) மாட்டின் முதுகில் ஏற்றிச் செல்லும் மூட்டை (1300) *தலைச் சுமைக்கும் எருத்துப் பொதிக்கும் பேர் ஒன்றுக்கு* (SII,xvii,141.)

எருமப் புறம் (பெ) (= எருமைத்தொறு) (614) *கருந்தேவக் கத்தி தன்னெருமைப் புறத்தே வாடி பட்டான்* (CHHS,1971/59.)

எருமைத் தொறு (பெ) எருமை மாடுகளின் மந்தை (872) *பாசாற்றெருமைத் தொறு எயினாட்டார் கொள்ள* (CHHS,1971/56.)

எருமைப் பொன் (பெ) எருமை மீதான ஒரு வரி (962) *சென்னீரமஞ்சியும் எருமைப் பொன்னுந் தண்டங் குற்றமுள்ளிட்டு* (SII,vi,324.)

எல் (பெ) சூரியன் (1048) *எல்லொளி சுடர்மணி முடியும்* (SII,viii,199.)

எல் (பெ) இரவு (1237) *களங்கொளரு நிருத்தோன் மாலை கழித்தெல் வழங்கி யருளிய பினொரு நாள்* (SII,v,431; EI,xxii,10.)

எல்கை (பெ) எல்லை (1236) *கீழ் எல்கை கொற்றவன் வாள் கொள்ளி ஊற்றுக்கரைப் பற்றில் எல்கைக்கும்* (SII,v,408.)

எல்லாப் படியாலும் (பெ) எல்லாவகையாலும் (1175) *ஈழ மண்டலத்துக் காரியம் எல்லாப்படியாலும் இவன் அழியச் செய்வித்தபடிக்கும்* (EI,xxii,14.)

எல்லாம் (பெ) முழுவதும் (550) *உடும்போடி ஆமை தவழ்ந்த தெல்லாம்* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

எல்லாவிற்றின் (பெ) அனைத்தின் (768) *நிலம் எல்லாவிற்றின் மேலும் விற்க்கிலும்* (SII,xii,34.)

எல்லை (பெ) (நில) வரம்பு (550) *அறையோலைப்படிக்கெல்லை* (TASSi,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

எல்லைக்கல் (பெ) நில எல்லையைக் குறிப்பதற்கு நடப்பட்ட கல் (953) *எல்லைக் கல்லுக்குக் கிழக்கு* (SII,viii,651.)

எல்லை தெரி (வி) எல்லையை நிர்ணயி (950) *கல் நாட்டி எல்லைதெரிச்ச* (TASSI,1962-65,p.32-52 .)

எல்லைப் புரவாய் (பெ) ஊரின் கோடியில் உள்ள இறை நிலம் (1215) *இந்நகரத்து எல்லைப் புரவாய்க் கடைத்தரமாதலால்* (IPS,170.)

எல்லை போய் (வி) எல்லையைச் சுற்றி வந்து (792) *எல்லை போய்க் கல்லுங் கண்ணியுந் நாட்டி* (EI,xviii,14.)

எல்லைவரம்பு (பெ) எல்லைக்கோடு (888) *தென்பாற்கெல்லை முப்பத்து வேலி எல்லை வரம்புக்கு வடக்கடய* (SII,v,684.)

எல்லைவல்லை (பெ) சுற்று எல்லைகள் (974) *எல்லை வல்லை தெரிச்சு* (SII,viii,692.)

எல்லைவாய் (பெ) எல்லையிடத்து (905) *திசையனைத்தின்னெல்லைவாய்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

எலவு (பெ) தண்டம் (?) (922) *கோச் செய்து எலவு கொண்ட பொன்னிடுவது* (SII,vi,291.)

எலும்பிச்சை (பெ) மர வகை (1120) *தென்னமரம் மாதளை எலும்பிச்சை நாரத்தை* (EI,vii,18)

எவ்வகைப்பட்டன (பெ) எல்லா வகை (789) *கோத்தொட்டுண்ணப்பாலன எவ்வகைப்பட்டனவுமிறாது* (SII,ii,99.)

எவ்விப் பத்திரம் (பெ) குறுவாள்(?) (872) *உரையிலம்புமாள எவ்விப்பத்திர முருவி* (CHHS,1971/56.)

எழ (வி) தோன்ற (1000) *கதவிடப்பாகு கமுகெழ* (SII,iv,167.)

எழிச்சி (வி) ஏற்றுகை (1024) *த்$_3$வஜமெழிச்சிநாள்* (EC,x,Kl.112a.)

எழில் (பெ) புகழ் (990) *திண்டிரைவென்றித் தண்டாற்கொண்ட தன்னெழில் வளரூழியுள்* (IPS,83.)

எழில் (பெ) அழகு (771) *எழிலமைந்த நெடும் புரிசை* (EI,xvii,16.)

எழு (பெ) 7 (எண்) (745) *தவசிகளுக்குப் பிச்சை எழு கழஞ்சு பொன்* (TAMIZ,1970,p.122.)

எழு (வி) தோன்றுகின்ற (1134) *கடலிடை யெழு சுடரன்ன* (SII,v,645.)

எழு கடல் (பெ) உப்புக்கடல் முதலிய ஏழுகடல்கள் (1096) *எண்கிரி சூழ்ந்த எழுகடல் லெழுபொழில் வெண்குடை நிழற்ற* (SII,v,302.)

எழுகு (வி) எழுதும் (750) *நாட்டார்க்கும் மெழுகு திருமுகம் அருளச் செய்து* (EI,v,8.)

எழுத்தாணி (பெ) ஓலையில் எழுதுதற்குரிய ஊசி போன்ற கருவி (1149) *திருவாழியு மெழுத்தாணியும் லாஞ்சனமான கல்லுந் நாட்டிக் குடுத்து* (TAS,vii,p.5-6.)

எழுத்திட்டு (வி) கையெழுத்திட்டு (954) *எழுத்திட்டு குடுத்த* (SII,vii,37.)

எழுத்திருவித்து (வி) எழுத்தில் பதிவு செய்து (1239) *மஹாஸபா$_4$ நியோகம் எழுதி...குறைவற எழுத்திருவித்துக் கொண்டு செலவழிப்பதாகவும்* (SII,vi,48.)

எழுத்து (பெ) கையெழுத்து (1190) *எண்ணரியான் கொண்ட பிரமாணத்திலே சீயத்தனும் இவன் மக்கள் எழுத்துக் கிடக்கையாலும்* (SII,v,706.)

எழுத்து (பெ) இசைக்குறியீடு எழுத்துக்கள் (400) *எழுத்துப் புணருத்தான்* (ARE,1961-62,280-82.)

எழுத்து (பெ) ஓலை: ஆணை (866) *ஸ்வஸ்தி ஸ்ரீ நதிவர்ம்ம மஹாராஜந்நெழுத்து* (SII,vii,40.)

எழுத்துப்பட்டார் (பெ) குறிக்கப்பட்டவர் (921) *மஹாபாதகத்திலும் மெழுத்துப்பட்டாரையும்* (ARASI,1904-05,p.131.)

எழுதி (வி) ஓலையில் எழுதி (750) *எழுதி விடுந்த அறையோலைப்படி* (EI,v,8.)

எழுதி (வி) பொறித்து (905) *கண்ணிமையிற் கயலெழுதியும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

எழுதிட (வி) எழுத (885) *கணத்தாருள் யாமெழுதிட மெங் கைமாட்டாமையாற் பிறரால்* (SII,xii,105.)

எழுதித்து (வி) எழுதியது (1271) *இப்படிக்கு தேவர் இராயஸம் எழுதித்து* (SII,iv,434.)

எழுதிய (வி) குறித்த (833) *பலகைமிசை முன்னெழுதிய* (SII,xiv,44.)

எழுதியது (வி) குறிக்கப்பட்டது (800) *மீயாட்சி நிலக்கடமுன் அட்டின நிலமெழுதியது* (IPS,237.)

எழுதிவித்து (வி) எழுதச் செய்து (1248) *சிற்றம்பல முடையன்னேன் இப்பரிசு இவர் பணிக்க எழுதிவித்து எழுதி முடித்தேன்* (SII,viii,714.)

எழுதின (வி) எழுதிய (771) *இய் தெழுதின* (EI,xvii,16.)

எழுதினேன் (வி) (768) *சவை பணிக்க எழுதினேன்* (SII,xiv,27.)

எழுதுகின்றேன் (வி) (917) *ஊர் கணக்கு எழுதுகின்றேன்* (SII,viii,620.)

எழுதுவித்தது (வி) எழுதச் செய்தது (833) *பதினெட்டா மாண்டெழுதுவித்தது* (SII,xiv,44.)

எழுதுவித்து (வி) எழுதச் செய்து (885) *எங்கை மாட்டாமையாற் பிறராலெழுதுவித்து* (SII,xii,105.)

எழுந்த (வி) தோன்றிய (990) *இந்நிலம் மெழுந்த மரமும் மரப்பயனும்* (SII,v,679.)

எழுந்த (வி) மேலே பறந்த (800) *புறங்கூர்வாய்க் கொண்டெழுந்த புள்* (EI,xiii,10.)

எழுந்தருள (வி) கொண்டாட (978) *திருக்கேட்டை தோறும் பெரும்பலி எழுந்தருள* (SII,iii,151)

எழுந்தருளி (வி) வந்து (961) *மண்டகத்தின் முன்பேய் எழுந்தருளி பெருங்குறி கூடி இருந்து* (SII,xiii,109.)

எழுந்தருளி நிற்கும் (வி) வீற்றிருக்கும் (960) *திருவூறலாழ்வார் கோயிலுள் ளெழுந்தருளி நிற்கும் துர்க்காபடாரிக்கு* (SII,iii,173.)

எழுந்தருளிவித்த (வி) கட்டிய (846) *திருவேங்கடத்து எம்பெருமானடிகளுக்கு எழுந்தருளுவித்த திருவிளங்கோயிற் பெருமானடிகளுக்கு* (SII,xii,43.)

எழுந்தருளிவித்தாந் (வி) வீற்றிருக்கச் செய்தாந் (1007) *சித்திரயாளி ஆடவல்லார்க்கு உமாபடாரகியை எழுந்தருளுவித்தாந்* (SII,xvii,238.)

எழுந்தருளிவித்தான் (வி) அமைப்பித்தான் (987) *ஸ்ரீவிமானம் கல்லாலே எழுந்தருளிவித்தான்* (SII,xiii,76.)

எழுந்தருளி இருந்து (வி) வீற்றிருந்து (983) *...பரகேசரி பந்மர் பழையாற்று எழுந்தருளி இருந்து* (SII,xix,329.)

எழுந்தருளு நாள் (பெ) கொண்டாடும் நாள் (1014) *கொடியேற்ற வலஞ்செய்யுநாள் எழுந்தருளுந் திருவிழாவொன்றும் ஆட்டைத் திருவிழா எழுந்தருளுநாள் ஒன்பதும்* (SII,ii,28.)

எழுந்தருளும் திருமேனி (பெ) உற்சவ மூர்த்தி (911) *ஸ்ரீபலி எழுந்தருளும் திருமேநியும்* (SII,xix,99.)

எழுந்தருளும் போது (வி) நடத்தும் போது (987) *ஸ்ரீபலி எழுந்தருளும் போது* (SII,xiii,3.)

எழுந்தருளுவித்த (வி) கோயிலில் நிறுவிய (943) *உமா படாரகியாரைய் எழுந்தருளுவித்த சிறுவாயி நாட்டு நாட்டு மன்றாடி* (SII,iv,547.)

எழுந்திருந்து (வி) நின்று (957) *ஸபையில் எழுந்திருந்து பணித்தானையும்* (SII,xiii,165.)

எழுந்து (வி) கிளர்ந்தெழுந்து (771) *பூர்வ்வராஜர் புகன்றெழுந்து* (EI,xvii,16.)

எழுந்து (வி) தயாராகி (785) *பவ்வம்மெனப் பரந்தெழுந்து குடபாலுங் குணபாலும் மனுக வந்து* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

எழுநிலைத் தீபமாலை விளக்கு (பெ) ஏழடுக்கு விளக்கு (1566) *மண்டபமும் கட்டி நமக்கு எழுநிலைத் தீப மாலை விளக்கு இரண்டு மற்றும் பல திருப்பணிகளும்* (TAS,ix,p.37-38.)

எழு பொழில் (பெ) ஏழு உலகம் (1176) *ஏகவாணை அரசுரிமை எழுபொழில்களும் பெற்றதென்னப் பார்க்கடலில்* (SII,xvii,585.)

எழும் (வி) வளரும் (1012) *நெல்லாலித்தெழும் புல்லாலிப் புறமஞ்சோடுங் கூட்டி* (SII,vii,863.)

எழுவர் (பெ) ஏழுபேர் (973) *நிசதம் உழக்கு நெய்யும் எழுவர்க்குமாக* (SII,xix,40.)

எழுவன (வி) மேலோங்கி வளர்வன (1050) *மற்றும் எழுவன முளைப்பன தெங்க்கு பனையும்* (SII,iv,413.)

எழுவோம் (பெ) நாங்கள் ஏழுபேர் (923) *இத்தளிப்பட்டுடையோம் எழுவோம்* (SII,xix,402.)

எள்ளு (பெ) தானிய வகை (984) *எள்ளு நானாழியும் உழுந்து நானாழியும்* (SII,xix,341.)

எள்ளுப் புன்பயிற் (பெ) புன்செய் பயிராக விளைந்த எள் (1300) *எள்ளுப்புன்பயிற்கு மாத்தால் இரண்டு பணம்* (IPS,589.)

எள்ளும் (வி) இகழும் (1012) *பசும்பரிவெள்ளும் நெடுஞ் சுவற்றெடுத்த* (SII,vii,863.)

எள்ளெணை (பெ) நல்லெண்ணை (1168) *உப்பு நாநாழியும் மிளகு உரியும் எள்ளெணை நாழியும் குடுக்கவும்* (SII,viii,291.)

எளர்புர நிறை (பெ) ஒரு பொன் எடைக்கல் (921) *நந்தாவிளக்கெரிப்பதற்கு தந்த பொன் எளர்புரநிறை பன்னிரு கழஞ்சரை* (SII,vi,372.)

எளிது (பெ) சுலபம் (905) *தன்தொடித் தோளில்லெளிது தாங்கிய* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

எள் எண்ணை (பெ) நல்லெண்ணை (985) *நெய்யாதல் எள் எண்ணைய்யாதல் அட்டிய்* (SII,xiii,35.)

எற்ச்சோறு (பெ) (= எச்சோறு) (1497) *இன்னிலத்தால் வரும் எற்ச்சோறு கூற்றருசியும் மற்றும் பல உவாதியுங் கழித்துக் குடுத்து* (IPS,464.)

எற்சோறு (பெ) (= எச்சோறு) (1203) *இந்நிலத்தால் வந்த இறைவரி சிற்றாயம் எற்(ச்)சோறு* (SII,iii,24.)

எற்றைக்கும் (பெ) எப்பொழுதும் (961) *எற்றைக்கும் இப்பூமிக்கு வேண்டுமிறை த்ரவ்யமும்* (SII,xiv,91.)

எறக்கிச்சு (வி) கீழே இறக்கி (1251) *ஸ்ரீ பண்டாரம் செய்வாகளே கை ஏள்ப்பிச்சு கொடியும் எறக்கிச்சு அடியும் திரியும் நோக்கி* (TAS,iv,p.86-89.)

எறமணி (பெ) (= எறிமணி) சேகண்டி (1200) *யக்ஷரையும் யக்ஷியாரையும் எழுந்தருளு வித்து எறமணியும் இட்டு* (EI,vi,34a; SII,i,75.)

எறி (வி) (அலை) வீசுகின்ற (1028) *வெறி மலர் தீர்த்ததெறி புனற் கங்கையும்* (SII,v,464.)

எறிகாடு (பெ) பட்டுப்போன காடு (750) *பீடிலிகையும் உழுகொல்லையும் எறிகாடும்* (EI,v,8.)

எறிஞ்சு (வி) வென்று (1014) *சேரமானையும் பாண்ட்யர்களையும் எறிஞ்சு கொண்டமாட்டில்* (SII,ii,3.)

எறிந்த (வி) வென்ற (856) *தெள்ளாற்றெறிந்த நந்திப் போத்தரையர்* (SII,viii,309.)

எறிந்து (வி) பகைவரைத் தாக்கி (583) *வரமு கொண்ட ஞான்றெறிந்து* (CHHS,1971/30.)

எறிந்தும் (வி) வீசியும் (815) *தூணிபலபடத் தோளோச்சிஉம் ஓத மீள வேலெறிந்தும்* (SII,iii,206b.)

எறிப்ப (வி) விளங்க (1197) *சக்கரவெற்பில் புகழெறிப்ப* (SII,iii,88.)

எறிமணி (பெ) ஒலிக்கின்ற மணி: சேகண்டி (911) *எறிமணி திருவடி நிலை யிருபதின் பலத்தால்* (SII,xix,99.)

எறிய (வி) தாக்க (681) *போரிற்சிறை நாடெறிய* (EI,vii,4(iii).)

எறியா நிற்றிது (வி) ஒலித்து (1123) *வாயிற்ப்புறத்து ஒரு பசு மணி எறியா நிற்றிது எந்று சொல்ல* (SII,v,456.)

எறி விசும்பு (பெ) ஒளிர்கின்ற வானம் (800) *எறிவிசும்பும் இருநிலமாய்த் தென்ப* (EI,xiii,10.)

எறிவீர பட்டணம் (பெ) எறிவீரர் என்று அழைக்கப்பட்ட காவல் வீரருக்கு சிறப்பு உரிமைகள் வழங்கப்பட்ட வணிக ஊர் (1050) *பநியா நாட்டை நானாதேசி எறிவீரபட்டணம் சேது குடுத்த பரிசாவது* (AVNM,2,p.6-8)

எறிவீரபடை ஆசரியன் (பெ) வணிகக் குழுவினரின் காவல்வீரர் குழுவால் பெருமைப் படுத்தப்பட்ட தச்சன் (1050) *இவை எறிவீர படை ஆசரியன் எழுத்து* (AVNM,2,p.6-8)

என் (இ) இகழ்ச்சிக் குறிப்பு (800) *பருதிக் கென்போதர விடுமோ* (EI,xiii,10.)

என் (இ) என்ன (796) *நீங்கள் போந்த வாறெனென* (SII,iv,135; MASI,lxiii,p.54-59.)

என்ப (வி) என்று சொல்ல (796) *நாம் போதோமென்ப* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

என்பது (பெ) என்று சொல்லப்படுவது (831) *கிழவனேரி என்பது* (SII,xiv,43.)

என்பார் (பெ) என்று பெயருள்ளவர் (796) *ஸங்க்ராம மல்லநு பல்லவமல்லநு என்பார்களை* (SII,iv,135; MASI,lxiii,p.54-59.)

என்றல் (பெ) ஆவது (994) *சிவப்ராஹ்மண ரென்றல் கணக்கார் என்றல்* (EI,xxii,32.)

என்றார் (வி) சொன்னார் (895) *நிலமனைத்து இறைகொள்க என்றார்* (SII,xii,309.)

என்று (வி) என்று சொல்லி (550) *விடுதகவென்று நாட்டார்க்குத் திருமுகம் விட* (TASSI,1958-59,p.41-83.)

என்றென்று (வி) என்று சொல்லி (800) *முல்லைக் கேய் முற்படுமோ என்றென்று* (EI,xiii,10.)

என்றோம் (பெ) என்று சொன்ன நாங்கள் (850) *இதன்றென்றோம்* (SII,vii,80.)

என்னப்பட்டது (பெ) என்று பெயர் கொண்டது (771) *வேள்வி குடி என்னப்பட்டது* (EI,xvii,16.)

என்னுதாய் (பெ) எனக்கு உரிமையுடையதாய் (1202) *விலை கொண்டு உடையேநாய் என்னுதாய் இருன்த* (SII,xvii,630.)

என்னும் (வி) எனப் பெயர் கொண்ட (614) *கோவிவன்னெனுந் நாய்* (CHHS,1971/59.)

என்னேய் (இ) என்ன (771) *என்னேய் நுங்குறை என்று முன்னாகப் பணித்தருள* (EI,xvii,16.)

என (இ) போல (உவம உருபு) (1279) *கடலென நிறைந்து* (SII,viii,69.)

என (இ) என்று சொல்லும்படி (833) *திருத்துவித்தோன் இருப்பைக்குடிகிழவனென நிலவி* (SII,xiv,44)

ஏ

ஏக போகம் (பெ) பங்காளிகளில்லாமல் உரிமையை ஒருவரே அநுபவித்தல் (988) *இவர் ஏகபோகம் பெற்றுடைய பன்னிரு வேலியும்* (SII,xiii,61.)

ஏகபோ$_4$க$_3$ ப்$_3$ரஹ்மதே$_3$யம் (பெ) ஒரே பிராமணரின் அனுபவத்தில் உள்ள பிரமதேய ஊர் (921) *ஏகபோ$_4$க$_3$ ப்$_3$ரஹ்மதே$_3$யமாக நன்கு கொடுத்தருளின* (SII,iii,206a.)

ஏகபோ$_4$க$_3$ம் (பெ) (= ஏகபோகம்) (905) *ஏகபோ$_4$க$_3$மதுவாக எழிற் செப்பேட்டொடு* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

ஏகவாணை (பெ) ஒரே ஆணை (1176) *போகமெல்லாம் வந்தீண்டி ஏகவாணை அரசுரிமை* (SII,xvii,585.)

ஏகாக்$_3$ரம் (பெ) ஒரு வேளை உணவு (958) *ஏகாக்$_3$ரம் ஒரு வேத$_3$ப்$_3$ராஹ்மணன் உத்தமாக்$_3$ரம்* (SII,iii,119.)

ஏகாத$_3$ஸி (பெ) பதினோராந்திதி (885) *திருவேகாத$_3$ஸிதோறும்* (SII,xiii,232.)

ஏகாவல்லி (பெ) ஒரு நகை (1014) *ஏகாவல்லி ஒன்றிக் கோத்த* (SII,ii,6.)

ஏகாவல்லி வடம் (பெ) ஒரு நகை (991) *முத்து அஞ்சு ஏகாவல்லிவடம் இரண்டு* (SII,xiii,144.)

ஏங்கினார் (வி) மனம் வாடினார் (1200) *வழுதியர்கள் தாங் கலங்கி யேங்கினார் பாரிழந்தோமென்று* (SII,viii,97.)

ஏசுபட்டு (வி) இகழப்பட்டு (1202) *எங்களில் பகைகொண்டு ஏசுபட்டு கெட்டும் போனோமாகிலும்* (IPS,156.)

ஏணிக்காணம் (பெ) ஈழவர் மீதான வரி (849) *தளைக் காணமும் மேணிக் காணமும்* (TAS,ii,p.67-68.)

ஏத்த (வி) பாராட்ட (711) *நாமகளு நலனேத்த* (EI,xvii,16.)

ஏத்தக் காணம் (பெ) நீரேற்றத்தின் மீதான ஒரு வரி (765) *உல்லியக் கூலியும் ஏத்தக் காணமும்* (EI,xxxvi,20.)

ஏத்தக் காலில் நிலையுரிமை (பெ) ஏத்தக்கால் நிற்குமிடத்தை பயன்படுத்த உரிமை (986) *துலையுரிமையும் நிலையுரிமையு மேத்தக்காலில் நிலையுரிமையும் நீரோடு காலுரிமையும்* (SII,xix,404.)

ஏத்த நிலை (பெ) ஏற்ற மரம் நிற்கும் இடம் (1254) *மேலை ஓடையில் ஒரு வாய்த்துரவும் ஏத்தமும் ஏத்தநிலை சிக்குழியும்* (SII,xii,166.)

ஏத்தநீர்கால் (பெ) ஏற்றம் இறைத்து நீர் செல்லும் வாய்க்கால் (1017) *கிணறும் ஏரிநீர்க்காலும் ஏத்தநீர்க்காலும்* (SII,iv,327.)

ஏத்தப் பாடு (பெ) ஏற்றம் இறைத்துப் பயிர் செய்யும் நிலம் (750) *சென்றுழுபாழும் ஏத்தப் பாடு மறுகாடும் பீடிலிகையும்* (EI,v,8.)

ஏத்தப் புலம் (பெ) ஏற்றம் இறைத்துப் பயிர் செய்யும் நிலம் (880) *கறைநிலமும் ஏத்தப்புலம்* (SII,xii,102.)

ஏத்தம் (பெ) நீர் இறைக்கும் எந்திரம் (550) *மும்மூலை ஏத்தத்தெல்லை* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

ஏத்தார் (வி) போற்றற்குரிய (905) *ஏத்தார் புகழ் ஏகஸந்தி$_4$ காத்யாயனஸூத்திரத்து* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

ஏத்தி (வி) சேர்த்து (809) *துடவை தடி 3 ஏத்தித் தடி* (SII,xiv,40.)

ஏத்தி (வி) புகழ்ந்து (771) *பாத$_3$ம் பணிந்தேத்தி* (EI,xvii,16.)

ஏத்திறைவை (பெ) ஏற்றம் மூலம் நீர் பாயும் நிலம் (1235) *இப்போகங்கள் ஏத்திறைவை நாலில் ஒன்று இறுப்பதாகவும்* (IPS,305.)

ஏத்து (பெ) வாழ்த்து (1148) *ஏத்தருங் கீர்த்தி* (TAS,vii,p.55.)

ஏத்து மரங்கள் (பெ) ஏற்றம் செய்ய உதவும் மரங்கள் (1202) *ஏத்து மரங்களை அழிவு செ[ய்]தாருண்டாகில்* (IPS,156.)

ஏத்தொழில் (பெ) அம்பெய்யும் தொழில் (1012) *கூத்தொழில் கேளாதேத் தொழில் முனைந்த* (SII,vii,863)

ஏதக்கிரி (பெ) ஒரு மலை (1044) *ஆங்கவந் ஏதக்கிரியில் ஓங்கிகல் உழுவை ஏறெழுதி* (SII,v,465.)

ஏதம் (பெ) குற்றம் (905) *ஏதமில் சோமாசிகுறுச்சி* (TASSI,1962-65,p.1-31.)

ஏதம் (பெ) இடையூறு (1000) *நின்பாதம் பணிந்தவரேதமஞ்ச* (SII,iv,167.)

ஏதும் (பெ) எப்படிப்பட்டதும் (876) *இடையூறேதும் படன் முரை* (SII,xii,63.)

ஏதும் (பெ) ஒன்றும் (919) *ஏதும் உருவறியாத்தாந் ஒருபா$_3$லனை* (ARASI,1904-05,p.131.)

ஏதேநும் (பெ) ஏதாவது (1168) *நீர் நமக்கு முன்பேதேநும் குறைவாகச் செய்ததுண்டோ* (SII,vi,456.)

ஏதொன்றும் (பெ) எதுவும் (1016) *ஏதோன்றும் காட்டிக் கொள்ளப் பிறாதோமாகவும்* (SII,iii,54.)

ஏந்த (வி) ஓங்க (771) *இகலமருள் இடியுறுமென வலனேந்த* (EI,xvii,16.)

ஏந்தலேரி (பெ) ஆழமில்லாத ஏரி (550) *ஏந்தலேரியின் கீழைக் கடற்றின்* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

ஏந்தி (வி) கையில் தூக்கி (771) *கொற்றவேல் வலனேந்திப் பொருதூருங் கடற்றானையை* (EI,xvii,16.)

ஏந்து (வி) தாங்குகின்ற (1220) *பருதி தனிக்குலம் விளங்கக் கொடியேந்து புலியிமயக் குலவரைமேல்* (CHEN,xiv,p.362-64.)

ஏந்தும் (வி) மிகுந்த (771) *மாவேந்தும் கடற்றானை* (EI,xvii,16.)

ஏந்தெழில் (பெ) மிக்க அழகு (905) *ஏந்தெழிற் றோள் இளன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

ஏம்பல் (பெ) நீர்த்தேக்கம் (1020) *கல்லஃ‍ந் தானேரி கீழை ஏம்பலின் தென் கடைக்கேய்* (SII,v,747.)

ஏய் (இ) விரைவுக் குறிப்பு (771) *மருதூருண் மாண்பழித் தாய்வேளை அகப்பட ஏயென்னாமை எறிந்தழித்து* (EI,xvii,16.)

ஏய் (இ) வினாப் பொருள் ஏகாரம் (771) *என்னேய் நுங்குறை என்று* (SII,xvii,16.)

ஏய்ந்து (வி) பொருந்தி (1068) *விசைமணி மகுடம் ஏய்ந்து குசைகொள் தத்து மாபுரவி* (EI,xxi,38.)

ஏர் (பெ) தோற்றம் (1045) *திங்களேர் தரு தன்றொங்கல் வெண்குடைக்கீழ்* (SII,iv,867.)

ஏர் (பெ) அழகு (950) *தென் வீரதரமங்கலத்தேர் திகழும் பெருந்தனமராதி$_2$தர* (TASSI,1962-65,p.32-52.)

ஏர் (பெ) உழவு (900) *இந்நிலத்துக்கு ஏருமஞ்சியும் இவனேய் செய்து கொண்டு* (SII,xii,114.)

ஏர் (பெ) உழும் ஏர் (1168) *உடலாக வைத்துக் குடுத்தபடி ஆட்டைக்கு ஏரால் பதக்கு நெல்லும் ஆளால் குறுணி நெல்லு* (SII,viii,291.)

ஏர் (பெ) ஓர் ஏர் உழவு நிலம் (1460) *நிலம் ஒரு மாவுக்குப் பன்னிரண்டு அரியும் பதக்கு*

நெல்லும் புஞ்சைப் புரவுக்கு ஏருக்குத் தூணித் தானியமும் வருஷந்தோறும் இட்டு (IPS,799.)

ஏர்க் காசு (பெ) ஏர் மீதான வரி (1113) *தறிப் புடவைய் ஏர்க்காசு வீடுமாடு ஆசிபொதுமக்கள் பேரால்க் குலதிறையும்* (EC,ix,Nl.38a.)

ஏர்க் காடி (பெ) ஒரு ஏருக்கு ஒரு காடி நெல்லாக இறுக்கும் வரி (962) *ஆயம் ஏர்க்காடியும் தலையரையும்* (SII,vi,324.)

ஏர்த் தேவை (பெ) ஏருழவாகத் தரப்படும் கட்டாய ஊழியம் (1532) *வயலுக்கு வரும் இறைமுறைமை வெட்டிமுட்டாள் ஆள்த்தேவை ஏர்த்தேவை கூற்றரிசி யினவருசி* (IPS,746)

ஏர் நூல் (பெ) கட்டிட வரம்பு குறிக்கும் நூல்கயிறு (833) *ஏர்நூலிட் டேறுவித்த சீர்மேவு திருமாலேரியும்* (SII,xiv,44.)

ஏர்ப் பொந் (பெ) ஏருக்குப் பொன்னாக்ச் செலுத்தும் வரி (962) *ஏர்ப்பொந்னும் வாற்காணமும் ஆடுக்கிறையும்* (SII,vi,324.)

ஏர் வரி (பெ) ஏருக்கு இறுக்க வேண்டிய வரி (1273) *நாட்டு வினியோகம் ஆள்வரி ஏர்வரி இனவரி* (SII,vii,145.)

ஏர்வை (பெ) பாய்ச்சல் (நிலம்) (1400) *இன்த ஏரி கீழும் மற்றும் இன்த நீர்கு ஏர்வை ஆன இடங்களிலும்* (SII,i,65.)

ஏரி (பெ) நீர் நிலை (691) *பல்லவ பரமேசுரகரம் எடுத்தும் ஏரி தொண்டி* (SII,i,151; EI,xvii,22.)

ஏரிக் காடி (பெ) ஏரியின் பராமரிப்புக்குச் செலுத்தும் ஒரு வரி (880) *விளைந்த நிலத்தால் பட்டியால் ஒரு காடி நெல் ஏரிக்காடி ஆக* (SII,xii,102.)

ஏரிக் கால் (பெ) ஏரி நீர் செல்லும் கால்வாய் (997) *இளைய அய்யந் பெருமாநு நிலத்துக்கு மேற்க்கு ஏரிக்காலுக்கு வடக்கு* (SII,vii,809.)

ஏரிக் குனிக்கல் (பெ) ஏரியைக் சுற்றி வளைவாக உள்ள இடம் (?) (1251) *ஏரித் தென் பக்கத்தும் மேல் பக்கத்தும் ஏரிக்குனிக்கலான நிலத்து* (SII,viii,48.)

ஏரி கோள் (பெ) ஏரியின் நீர்த்தேக்கப் பகுதி (1168) *நூற்றுபத்தேழு வேலியும் ஏரிகோளும் நத்தமும் குட்டமும் கிணறும்* (SII,vi,456.)

ஏரி செறு (பெ) (= ஏரிப்பட்டி) (845) *இவ்வூர் வெள்ளேரிக்கு ஏரிசெறுவாக வைத்தேன்* (EI,xi,22b.)

ஏரிநீர்க் கால் (பெ) (= ஏரிக்கால்) (1017) *இப்பூமிக்கு முன்புடைய கிணறும் ஏரிநீர்க் காலும் ஏத்த நீர்க்காலும்* (SII,iv,327.)

ஏரிப் பட்டி (பெ) ஏரியின் பராமரிப்புக்காக விடப்பட்ட நிலம் (895) *இம்மூன்றும் ஏரிப்பட்டி செய்து கொடுத்தேன்* (SII,iii,93.)

ஏரிப் பாசி (பெ) ஏரி மீன்கள் மூலம் வரும் வருவாய் (1445) *இந்த ஏரிகளில் ஏரிப்பாசியில் விலையில் பணம் உள்ளது* (SII,xxiii,69)

ஏரிமீன் விற்பணம் (பெ) ஏரிமீன் விற்பனை மீதான வரி (1374) *செக்குக்கடமை வெட்டிவரி திருப்புதியிது ஏரிமீன் விற்பணம் தளையாரிகம்* (SII,iv,351.)

ஏரியமஞ்சி (பெ) ஏரிப் பராமரிப்புக்காகச் செய்யும் கட்டாய ஊழியம் (1058) *இன்னிலம் உழுகுடிகள் சென்னீரமஞ்சி உள்ளிட்ட ஏரியமஞ்சி செய்யக்கடவரல்லாதாக* (SII,vii,947.)

ஏரியாயம் (பெ) ஏரிப்பராமரிப்புக்காகச் செலுத்தும் வரி (996) *பதக்குநெல்லு சந்திராதித்தவல் ஏரி ஆயமாவதாகவும்* (SII,vii,805.)

ஏரிவாய் (பெ) ஏரிநீர் பாயும் நிலம் (922) *முல்லைவாயில் ஏரிவாய் இவர்...ஒரு நந்தாவிளக்கு எரிப்பதாக வைத்த பூமி* (SII,vi,291.)

ஏரி வாரிகம் (பெ) ஏரிவாரியம் (969) *ஏரி வாரிகஞ் செய்யும்* (SII,iii,99.)

ஏரிவாரியப் பெருமக்கள் (பெ) ஏரி தொடர்பான செயல்களை மேற்பார்க்கும் குழு: சபையின் உட்குழு (879) *ஏரி வாரியப் பெருமக்களே கடைக்கண்டு* (SII,vi,294.)

ஏல்வு (பெ) சுலபம் (1139) *எல்லையில் இன்பம் ஏல்விநிலெய்தி* (SII,vii,85.)

ஏல்வை (பெ) காலம் (869) *இவ்வேல்வை இளநீர் வாழை பழஞ் சற்கரை* (SII,vii,525.)

ஏலம் (பெ) ஏலக்காய் (1014) *ஏலத்துக்கும் இலாமச்சத்துக்கும் நெல்* (EI,xxi,38.)

ஏலவரிசி (பெ) ஏலக்காயின் உள்ளீடு (1014) *பெருஞ் செண்பக மொட்டுக்கும் ஏலவரிசிக்கும் இலாமச்சத்துக்கும்* (SII,ii,24.)

ஏலாமை (வி) பொறுக்காமல் (771) *வியன் பறம்பு மேலாமை சென்றெறிந்தழித்தும்* (EI,xvii,16.)

ஏவ (வி) கட்டளையிட (925) *ஊரேவ எழுதினேனும்* (SII,viii,696.)

ஏவத் தேவை (பெ) ஒரு வரி (1276) *மற்று முள்பட்ட அனைத் தாயங்கள் கடமை குடிமை ஏவத்தேவை எப்பேற்பட்டனவும்* (SII,vii,916.)

ஏவமாதி இப்படிப்பட்ட (785) *நெடுமதிலை வடிவமைத்தும் ஏவமாதி விக்ரமங்க ளெத்துணையோ பல செய்து* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

ஏவல் (பெ) கட்டளை (956) *காடன் பரமேச்$_{0}$வரன் ஏவலால்* (SII,xiii,344.)

ஏவல்த்தேவை (பெ) ஒரு வரி (1223) *கடமை ஏவல்த்தேவைய் நெல்லு காசு உள்ளிட்ட மற்றும்* (JOR,xx,Appx,p.21-22.)

ஏவலாள் (பெ) பணியாள் (1021) *இரவியிராமன் ஏவலாளாய் கையெழுதியறிவேன்* (EI,xvi,27.)

ஏவல் எழுத்து வினிவோகம் (பெ) ஒரு வரி (1289) *வாசல் வினியோகம் ஏவல் எழுத்து வினிவோகம் செக்காணிக்கை* (SII,viii,751.)

ஏவற்தீட்டு (பெ) ஆணை ஓலை (1246) *இவை சோழ கோன் எழுத்தென்று வந்த ஏவற் தீட்டின் படி கல் வெட்டியது* (SII,viii,53.)

ஏவாதிதாக (வி) கட்டளையிடப்படாததாக (1042) *சங்க்கிரணடுதுவாராகவும்....ம் பணிவிடையும் ஏவாதிதாகவும்* (SII,v,726.)

ஏவி (வி) கட்டளையிட்டு (992) *செய்ய ஏவி அருளின ஆச்சன் கம்பநாகிய* (SII,xiii,170.)

ஏவிந (வி) கட்டளையிட்ட (1029) *ப்$_{3}$ரஹமாதி ராயர் ஏவ இவரேவிநபடியெ* (EC,x,Kl.111.)

ஏவிமுதல் (பெ) முற் பாண்டியர் அரசாங்கத்தில் ஓர் அலுவலர் (967) *அரையன் மானாபரணன் ஏவி முதலாகவும்* (SII,xiv,95; EI,xxv,6.)

ஏழகத்தார் (பெ) ஒரு போர் மரபுச் சாதி (1182) *வீரபாண்டியன் மக்கள் பட ஏழகத்தார் பட மறப்படை பட* (SII,vi,436.)

ஏழச்சம் (பெ) ஏழு தலைமுறை (1050) *இது இறக்குவான் வழி ஏழச்சம் மொழியாம லறுவான்* (SII,iv,416.)

ஏழாநரகத்து கீழா நரகம் (பெ) மிகவும் கீழான நரகம் (895) *ஏழா நரகத்து கீழா நரகம் புகுவோம்* (SII,iii,93.)

ஏழு (பெ) 7 (எண்) (637) *சிங்கபருமற்கு யாண்டேழாவது* (CHHS,1971/68.)

ஏழெச்சம் (பெ) ஏழு தலைமுறை (1529) *ப்ரஹ்மத்தி பண்ணுவான் ஏழெச்சம் அறுவான்* (SII,iv,164.)

ஏள்ப்பிச்சு (வி) ஏற்றி (1251) *வெட்டக்கம்பும் சாத்தி திரியெ ஏள்ப்பிச்சு* (TAS,iv,p.86-89.)

ஏற்க (வி) அதிகமாக (985) *இருபத்தைய்ங் கழஞ்சும் அல்லாது ஏற்கத் தரஞ் செய்யாததாகவும்* (SII,xix,378.)

ஏற்கும் (வி) கொள்ளும் (1018) *நீரேற்குமளவும் ஏற்று* (SII,iii,205.)

ஏற்ற (வி) பொருந்திய (950) *ஏற்ற பேருடை ஏகபோ$_{4}$க$_{3}$ப்$_{3}$ரஹ்மதே$_{3}$யமாய்* (TASSI,1962-65,p.32-52.)

ஏற்றங்கள் (பெ) மரியாதைகள் (1171) *உள்ளிட்டு முதலிகள் பெறக்கடவ ஏற்றங்களும் பெற்று நின்று* (EI,xxi,31.)

ஏற்றஞ் செய்விப்பார் (வி) தடைசெய்வார் (1328) *இப்படி நடத்தாமல் இதில் ஏற்றஞ் செய்விப்பார் உண்டாகில்* (SII,vii,122.)

ஏற்றப் பெறாதார் (வி) அனுமதிக்கப்படாதவர் (804) *முழுச்சிராவணை இல்லாதாரை எவ்வகைப்பட்ட வாரியமும் ஏற்றப் பெறாதாராகவும்* (SII,xiv,37.)

ஏற்றம் (பெ) கூடுதல் (1009) *ஏற்றம் அருளிச் செய்த நெல்லு குறுணி* (CHEN,xxi,p.425-28.)

ஏற்றம் (பெ) சிறப்பு (8621) *திருவேற்றஞ் செய் பாவை* (SII,xiv,45.)

ஏற்றம் (பெ) மடங்கு (1050) *சோறு ஒருநாள்ளைக்கு குடுப்பதாகவும் இரண்டேற்றமுடையநாய்* (AVNM,2,p.6-8)

ஏற்றமாக (வி) அதிகப்படியாக (985) *திருத்தி முந்நடை மேல் இவந் ஏற்றமாக அடுத்த நெல்லு முப்பதிந் கலமும்* (SII,xix,102.)

ஏற்ற வண்ணம் (பெ) பொருந்தியவாறு (1008) *தன் குடிக் கேற்றவண்ணம் முரைசும்* (EI,xxii,34.)

ஏற்றா (பெ) கொடுக்காத (1286) *இவர்க்கு இட்ட கோலறைக்கு ஆள் ஏற்றா குற்றத்துக்கு தெண்டமா நிச்சயித்தருளின பொன்னாய்* (SII,viii,591.)

ஏற்றார் (பெ) பெற்றுக்கொண்டார் (885) *நகரத்துக்கு காராளராக நீரேற்றார்* (TAS,ii,p.80-82.)

ஏற்றி (வி) சேர்த்து (759) *முதல் முப்பதிருவரும் இப்பன்னிருவரேற்றி* (SII,iv,827.)

ஏற்றி (வி) விளக்கேற்றி (985) *இவ்வெண்ணை நிசத ஆழாக்காக உதித்தவாறே ஏற்றிநால் அஸ்தமிக்கும் அளவுக்கும்* (SII,xix,340.)

ஏற்றிக்கொண்டு (வி) சேர்த்துக் கொண்டு (946) *இந்நிலம் ... அரைக்காலும் பறடையோம் பேரில் ஏற்றிக் கொண்டு* (SII,iii,110.)

ஏற்றிக்கொண்டு (வி) முதுகில் அமர்த்திக்கொண்டு (796) *யானை ஏற்றிக்கொண்டு* (SII,iv,135; MASI,lxiii,p.54-59.)

ஏற்றிவித்தார்கள் (வி) குடி ஏறச் செய்தார்கள் (1284) *மடை விளாகமாகக் கட்டி இருப்பாராக..இவர்கள் பிள்ளைகள் ஏற்றிவித்தார்கள்* (NI,n.31.)

ஏற்று (வி) முனைந்து (771) *மேவலோர் கடற்றானைஒடேற்றெதிரேய் வந்தவரை* (EI,xvii,16.)

ஏற்று (வி) மேற் கொண்டு (1145) *தன் அன்னுவயத்தார் கூட்டம் ஏற்றுக் குத்தி திருவமுதரிசியும்* (TAS,iv,p.20-21.)

ஏற்றுக்கொண்ட (வி) பெற்றுக்கொண்ட (892) *எங்கள் குருக்கள் இறையிலியாக ஏற்றுக்கொண்ட பூமி* (SII,iv,531.)

ஏற்றுக் கொள்வானாகவும் (வி) பெற்றுக் கொள்வானாகவும் (921) *உள்ளங் கையிலே ஏற்றுக் கொள்வானாகவும்* (ARASI,1904-05,p.131.)

ஏற்றுகிற (வி) குடியேற்றுகிற (1251) *திருவம்பலப் பெருமாள் புரமென்னும் சிவநாமாத்தல் ஏற்றுகின்ற நகரத்துச் சாலிகர்க்கு* (SII,xii,154.)

ஏற்றும் (வி) உயர்த்திக் கட்டும் (1014) *திருக் கொடியேற்றும் நான்று* (SII,ii,25.)

ஏற (வி) மரத்தின் மேலே செல்ல (789) *தெங்கும் பனையு மீழவரேறப் பெறாதாராகவும்* (SII,ii,99.)

ஏற (வி) மேலே (865) *ஸ்ரீ விமானத்திலே ஏற வெட்டினமையில்* (SII,xii,55.)

ஏற (வி) அதிகப்படியாக (960) *படிமாற்று கேட்டு ஏற நிவந்த செய்து* (SII,iii,203.)

ஏற (வி) உயர (1000) *குழியின் மண் ஏரி உள்ளேய் குத்தி கொண்டு கரை ஏற* (SII,vi,353.)

ஏறச் சங்கு (பெ) ஒரு மரியாதைச் சின்னம் (1477) *நமக்கு உண்டான வரிசை பாவாடை சேமயிர் அடக்கம் நாடகசாலை பகல்விளக்கு ஏறச் சங்கு இறங்கச் சங்கு* (IPS,715.)

ஏறட்டு (வி) பொறுப்பு ஏற்று (1124) *இந்த மும்முடி சோழ நல்லூரிலே ஈஞ்சு ஏறட்டுக் கொண்டு நாநே இறுக்க* (SII,xvii,590.)

ஏறடுகை (பெ) உயரத் தூக்குதல் (1299) *இக்கோயில் திருமண்டபம் திருப்பணி பாக்கல் ஏறடுகைச்சிலேய் கல்லு விழுந்து பட்ட தச்சன்* (IPS,411.)

ஏறற்கு (வி) மரத்தின் மேல் ஏறுவதற்கு (800)

எண்கின் இருங்கிளையுமேறற்கரிய (EI,xiii,10.)

ஏறாத (வி) பாயாத (985) *குளத்தில் நீரேறாத தோட்ட பாழுக்கு* (SII,xiii,333.)

ஏறி (வி) அதிகமாகச் சேர்த்து (895) *குறுணி நெல்லும் பூவில் ஏறி வைத்தேன்* (ARE,1935-36,p.73.)

ஏறி (வி) அமர்ந்து (815) *அர்த்$_3$தா$_4$ஸநம் அவனோடேறி* (SII,iii,206b.)

ஏறிடப்பண்ணி (வி) சேர்க்கச் செய்து (1199) *கடைத்தரமாந..றாந் தரத்திலே ஏறிடப்பண்ணி* (SII,vii,796.)

ஏறிய (வி) உயர்த்திக் கட்டிய (833) *வள்ளை குளத்திழித் தேறிய வெள்ளப் புனற் கிழவனேரியும்* (SII,xiv,44.)

ஏறியருளும் (வி) அமரும் (1014) *உமாபரமேச்$_0$வரி யாருந் திருவிழா எழுந்தருளும் போது ஏறியருளுந் திருவரங்கணியக் குடுத்த* (SII,ii,6.)

ஏறில் (வி) அதிகமானால் (893) *நாற்கழஞ் சரையாலும் ஏறிலுஞ் சுருங்கிலும்* (SII,xii,75.)

ஏறி வந்த (வி) கூடிய (1002) *அளந்த படியில் ஏறிவந்த நிலத்தால் இறை கட்டிந நெல்லு* (SII,viii,217.)

ஏறின (வி) கூடிய (765) *பணியாலேறின பங்கு பதினைந்து* (EI,xxxvi,20.)

ஏறின (வி) பதித்த (970) *திருக்கழுத்தின் மாலையிலேறின வயிரம் 14ம்* (TDI,i,8.)

ஏறினார் (பெ) சவாரி செய்தவர் (921) *கழுதை ஏறினாரையும்* (ARASI,1904-05,p-131.)

ஏறு (பெ) காளை (985) *கூவத்து பெருந்தச்சன்நிட்ட ஏறு* (SII,xvii,717.)

ஏறுகால் (பெ) குளத்துக்கு நீர் ஏற்றும் கால்வாய் (911) *ஏறு காலோடடைத்த கற்குட்டம்* (SII,viii,640.)

ஏறு சரக்கு (பெ) ஏற்றுமதிப் பொருள் (1279) *இவ்வூர்த் துறையில் ஏறு சரக்கு இரங்கு சரக்குகள்* (NI,g.45.)

ஏறு சாத்து (பெ) சரக்குகளை வெளியூருக்கு கொண்டுசெல்லல் (1300) *ஏறுசாத் திறங்குசாத்துத் திசை விளங்கு திசையாயிரத் தைஞ்நூற்றுவரோமும்* (SII,viii,442.)

ஏறுண்டு (வி) துளைக்கப்பட்டு (1109) *வேட்டை போய் பந்றி குத்தி இதநால் ஏறுண்டு பட்டமையில்* (EC,x,Sd.82.)

ஏறும் (வி) குடி ஏறும் (1420) *நத்தத்தில் ஏறும் உழவுகுடி காசாயக்குடி பலபட்டடைக்குடி செக்குக்கடமை* (SII,viii,275.)

ஏறுவித்த (வி) உயர்த்திக் கட்டிய (833) *மாறனூர்ப் பெருங்குளத்திழித் தேறுவித்த கிழவனேரி யும்* (SII,xiv,44.)

ஏறுவித்தன (பெ) (833) *ஏர் நூலிட்டேறுவித்தன சீர்மேவு திருமாலேரியு* (SII,xiv,44.)

ஏனப்பொறி (பெ) சாளுக்கியரின் பன்றி இலச்சினை (771) *வாளமருடன் வவ்விய ஏனப்பொறி இகலமருள்* (EI,xvii,16.)

ஏனாதி (பெ) படைத் தலைவர்க்குரிய ஒரு பட்டம் (771) *ப்ரச$_0$ஸ்தி பாடின சேனாபதி ஏனாதி ஆஇின சாத்தஞ்சாத்தற்கு* (EI,xvii,16.)

ஏனாதி (பெ) வீரர்க்குரிய ஒரு பட்டம் (550) *விசயமங்கலமாண்ட விண்ண பேரேனாதி கல்* (TAMIZ,1970,p.92-93.)

ஏனை (இ) மற்ற (905) *முடிசூடிய முரண் மன்னர் ஏனைப்பலரும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

ஏனையன பிறவும் மற்றவைகளும் (1056) *பாவையரீட்டமு மேனையன பிறவு* (SII,iii,29.)

ஐ

ஐங்கம்மாளர் (பெ) தச்சர், கொல்லர் முதலிய ஐந்து வகை கம்மாள சாதியார் (1225) *வாணியரும் ஐங்கம்மாளரெயும் அடிம குடுத்தோம்* (EI,iv,41.)

ஐங்கறியமிது (பெ) ஐந்துவகை மரக்கறியுணவு (956) *தேவாரத்தில் ஐங்கறியமிது கொள்வதாகவும்* (SII,xix,86.)

ஐச்வரியம் (பெ) செல்வம் (1344) *அநேக மைச்வரியத்தை யுடையரா யிருக்கிற இந்த மந்த்ரி* (UCR,xviii,p.16-23.)

ஐஞ்சந்தி (பெ) ஐந்து தெருக்கள் கூடுமிடம்(?) (991) *ஆடு தொளாயிரமும் கச்சிப்பேட்டு ஐஞ்சந்தி துர்க்கா பட்டாரகிக்கு* (SII,xiii,149.)

ஐஞ்சு நாட்டவர் (பெ) சுருதிமான் இனத்தவரின் சமூக நிலப்பகுதிகளின் கூட்டமைப்பு (1278) *இசைந்து ஒருமைப் பிடிபாடு பண்ணினோம் பழவூர்ப்பற்று ஐஞ்சுநாட்டவரும் கண்டராதித்தன்பிடாகை ஐஞ்சுநாட்டவரும்* (AVNM,6,p.33)

ஐஞ்சு வாரம் (பெ) வேதம் இசைத்துப் பாடும் ஒரு முறை (955) *ஐஞ்சுவாரமும் மோதி தானம் புக்கார்* (SII,xiv,81.)

ஐஞ்ஞாழி (பெ) ஐந்து நாழி (869) *நெய் பால் தயிர் ஐஞ்ஞாழிச் சேதும் இளநீர் இருபது* (SII,vii,523.)

ஐஞ்ஞூற்றுவர் (பெ) இடைக்காலத்தில் தென்னிந்தியா முழுவதும் இயங்கிய ஒரு பெரிய வணிகக் கூட்டமைப்பு (900) *தோட்டம் வளஞ்சியர் ஐஞ்ஞூற்றுவர் பேர் ஐஞ்ஞூற்றுவன்* (AVNM,10,p.16)

ஐந்தலை மணி (பெ) ஐந்து மணிகளையுடைய கொத்துமணி (1202) *பசு விடுகையாலும் ஐந்தலை மணியிடுகையாலும் சக்கிலிக்கு தெரிசனம் காட்டி* (SII,viii,151.)

ஐந்திரண்டு வண்ணம் (பெ) ஐந்துபடி நெல்லுக்கு இரண்டு படி அரிசி வீதம் (898) *வேண்டு நெல் ஐந்திரண்டு வண்ணத்தால்* (SII,viii,560.)

ஐந்திர பூஜை (பெ) இந்திரனை வழிப்படும் பூஜை (?) (1288) *ஐந்திர பூஜைக்கு அரிசி நாழியும்* (EC,ix,Kn.78.)

ஐந்து (பெ) 5 (எண்) (849) *யாண்டைந்து* (TAS,ii,p.67-68.)

ஐந்தோளம் (பெ) பல்லக்கு (1225) *பகல்விளக்கும் பாவாடையும் ஐந்தோளமும் கொற்றக் குடையும்* (EI,iv,41.)

ஐந்நாழி (பெ) ஐந்து நாழி (884) *மார்கழித் திருவாதிரை ஐந்நாழியும்* (SII,xiii,237.)

ஐந்நூற்றுவர் (பெ) (= ஐஞ்ஞூற்றுவர்) (1050) *நான்குதிசைப் பதினெண்பூமி நானாதேசித் திசையாயிரத் தைந்நூற்றுவரும்* (AVNM,2,p.6-8)

ஐப்பிகை (பெ) ஐப்பசி மாதம் (899) *ஐப்பிகை முதலாறாறு திங்கள்* (SII,xii,87.)

ஐப்பிகை விஷு (பெ) ஐப்பசி மாதப் பிறப்பு (869) *இப்பொன் கொண்டு ஐப்பிகை விஷுவும்* (SII,vii,525.)

ஐம்படைப் பருவம் (பெ) குழந்தைப் பருவம் (1125) *கனலெரி பருகவும் ஐம்படைப் பருவத்து* (SII,v,703.)

ஐம்பத்தாறு (பெ) 56 (எண்) (787) *ஸ்ரீ நந்திப் போத்தரைசர்க்கு யாண்டு ஐம்பத்தாறாவது* (TAMIZ,1970,p.124.)

ஐம்பத்திரண்டு (பெ) 52 (எண்) (783) *யாண்டு ஐம்பத்திரண்டாவது* (EI,xxii,18; TASSI,1985-59,p.20.)

ஐம்பத்தேழு (பெ) 57 (எண்) (600) *ஐம்பத் தேழனசனந் நோற்ற* (SII,xvii,262.)

ஐம்பதின்வர் (பெ) ஐம்பது பேர் (771) *ஐம்பதின்வர் ப்ராஹ்மணர்க்கு* (EI,xvii,16.)

ஐம்புலன் (பெ) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐந்துவகை யுணர்வுகள் (1193) *ஐம்புலன்கட்க்கு மருமை சாலறுசுவைச் செம்பொருட் சமையம்* (SII,v,428.)

ஐம்பூதம் (பெ) நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், என்பன (1168) *புனைந்தருளி அறுசமையமும் ஐம்பூதமும் நெறியில் வந்து பாரிக்க* (SII,vi,456.)

ஐம்மடி (பெ) ஐந்தாம் தடவை (1068) *அக்குந்தள தரைசனு மக்களும் ஐம்மடி அஞ்சித் தந் புரைசை யானையில்* (EI,xxi,38.)

ஐய்யஞ்சு (பெ) பேருக்கு ஐந்து வீதம் (804) *ஐய்யஞ்சு காசு தண்டங் கொண்டு* (SII,xiv,37.)

ஐய்யனர் (பெ) ஓர் அரச குலம் (1047) *வங்கணர், கொங்கணர், சிந்துரர், ஐய்யனர், சிங்களர்* (SII,iii,28.)

ஐயபொழில் (பெ) (= ஐந்நூற்றுவர்) (1142) *ஸ்ரீவல்லவந் கோட்டனாத வாடுறை கூடி வளர்ந்த ஐயபொழில் அத்தாணி சித்திரமேழி மூன்று* (SII,xiv,251.)

ஐயம் (பெ) சந்தேகம் (1224) *ஐயப்படாத அருமறை தேரந்தணர்* (SII,iv,372.)

ஐய்யம் (பெ) தானம் (815) *யானையாயிரமைய்யமிட்டும்* (SII,iii,206b.)

ஐய்யன் (பெ) தந்தை (1068) *கங்கையுங் கடார முங் கொண்டருளிந ஐய்யற்கு யாண்டு இருபத்து நாலாவது* (SII,iv,529.)

ஐய்யன் (பெ) அய்யனார் (தெய்வம்) (1014) *ஸ்ரீ கோயிலும் ஐய்யன் கோயிலும் பிடாரி கோயிலும்* (SII,ii,4.)

ஐய்வேள்வி (பெ) ஐந்துவகை யாகம் (905) *ஐய்வேள்வி நலம் படுத்து* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

ஐவ்வுழக்கு ஐந்து உழக்கு (894) *நெய்யும் ஐந்து கறியும் ஐவ்வுழக்குத் தயிரும்* (SII,iii,1.)

ஐவர் (பெ) ஐந்து பேர் (759) *மந்த்ராசார்ய்யர் ஐவர் விளக்கு* (SII,iv,827.)

ஒ

ஒக்க (வி) சமமாக (1149) *நிரையிலும் வரையிலும் ஒக்கக் கொள்ளக் கடவதல்லவாக* (IPS,186.)

ஒக்க (வி) பொதுவாக: சம்மதமாக (922) *இவர்களெல்லா ஜனத்துக்கு மொக்க பொன் காண்பர்களாகவும்* (SII,vi,295.)

ஒக்கத் திருத்தி (வி) பண்படுத்தி (1228) *வயலும் ஒக்கத் திருத்தி* (IPS,281; SII,xvii,394.)

ஒக்க இட்டு (வி) சமன் செய்து (1090) *காடு வெட்டி கட்டை பறித்து மேடும் தாழ்வும் ஒக்க இட்டு* (SII,viii,138.)

ஒக்கும் (வி) சம்மதமானது (849) *வேள்குல சுந்தரனுக்கு மொக்கும்* (TAS,ii,p.67-68.)

ஒக்கும் (வி) சமமானது (873) *பிழையா நாழியொடொக்கும்* (SII,xiv,Appx.,2.)

ஒட்டக நிரைகள் (பெ) ஒட்டகக் கூட்டங்கள் (1054) *குதிரையும் ஒட்டக நிரைகளும்* (SII,vii,827.)

ஒட்டச்சு (பெ) நிலவரி (1300) *இந்நிலத்துக்கு ஒட்டச்சு ஆராட்ச்சி எலவை* (SII,v,260.)

ஒட்டர் (பெ) ஒட்டு என்ற அரசாங்க வரிகளை வசூலிக்கும் அலுவலர் (1225) *கோயிலுக்கு நிர்வாஹதராய் பதினமு செய்து போந்த பத்துப் பேருமாக அவவர் காலத்து ஒட்டரோடே கூடி நின்று கோயிலிலும் நிமந்தக்காறர் பக்கலிலும் ஒட்டுக்காசு கூட்டி குடுக்கையாலும்* (SII,iv,500.)

ஒட்டர் (பெ) மண் கட்டிட வேலை செய்யும் ஒரு தொழில் சாதி (1418) *இவ்வூர் ஏரி பெரிய மடை உடைப்பு அடைத்த ஒட்டர்க்கு வாங்க இட்ட பணம் 10ம்* (SII,vii,856.)

ஒட்டலர் (பெ) பகைவர் (1054) *புலிக் கொடிப் படைஞ ரொட்டலர் வாரணவரைசை* (SII,iv,539.)

ஒட்டவந்து (வி) சேர்ந்து (950) *பெருங்காலதனை ஒட்டவந்ததன் கிழக்கும்* (TASSI,1962-65,p.32-52 .)

ஒட்டி (வி) உடன்பட்டு: சம்மதித்து (731) *திரு அமிதுக்கும் ஒட்டிப் பொலியூட்டு வைத்த பரிசாவது* (SII,viii,331.)

ஒட்டிசைவு கைத்தீட்டு (பெ) ஒப்பந்த ஆவணம் (1057) *நகரத்தோம் எங்களில் ஒட்டிசைவு கைத்தீட்டு இட்ட* (IPS,112.)

ஒட்டிய (வி) ஒப்புக் கொண்ட (1000) *ஒட்டிய காலத்து கொண்டு வாராக்கில் முட்டிரட்டி ஆட்டுவிது* (TAS,ii,p.173-207.)

ஒட்டியது (வி) சம்மதித்தது (768) *பயினூர்க் கணத்தோம் ஒட்டியது* (SII,xii,34.)

ஒட்டியர் (பெ) ஒட்ட/ஒரிய நாட்டரசர் (1768) *ஒட்டியர் தளவிபாடன் ஒட்டியர் மோகந் தவிள்த்தான்* (IPS,763.)

ஒட்டின (வி) ஒப்புக்கொண்ட (873) *இவ் வொட்டின பரிசு நெய் அட்டி* (SII,xiv,10.)

ஒட்டினோம் (வி) ஒப்புக்கொண்டோம் (745) *இவ்வறமூரோங் காப்போமாக ஒட்டினோம்* (TAMIZ,1970,p.122.)

ஒட்டு (பெ) அரசாங்கத்துக்குச் செலுத்த ஒப்பந்தமான வரி (1174) *கடமை இறுக்கும்மிடத்து முன்பு ஒட்டு படியாய் இறுத்து வருகிற நெல்..* (SII,vi,438.)

ஒட்டுக் கடமை (பெ) (= ஒட்டு) (1249) *ஊரார் செய திருவாய் மொழிந்தருளினபடி தங்களுக்கு இவூர்கள் முன்பு ஒட்டுக் கடமையாக இறுத்துப் போதுகையாலே* (CHEN,xii,p.265-67.)

ஒட்டுக் கடைத்து (வி) குத்தகைக்குக் கொடுத்து (1217) *திருவிளக்குப் புறமாய் ஒட்டுக் கடைத்து கோயில்த்தானத்தாற் உடல் கொண்டு வருகின்ற* (SII,xvii,604.)

ஒட்டுட்டி (பெ) ஒரு பாத்திரம் (939) *ஒட்டுட்டி ஒன்றும் சடுவம் ஒன்று அடுவான்னொருவனுகு* (SII,iii,106.)

ஒட்டு வட்டில் (பெ) ஒரு வகை பாத்திரம் (1009) *ஒட்டு வட்டில் ஒன்று அலகு நிலைப்படி பொந் இருநூற்றுக் கழஞ்சும்* (SII,v,521.)

ஒட்டை (பெ) சம்மதம் (803) *ஸபை$_4$யொட்டை ஸாமந்யமல்லாதது* (SII,vi,365.)

ஒட்டை (பெ) ஒரு நீட்டல் அளவு (982) *நிலை விளக்கு இரண்டு திரா மூவொட்டை உசரம் நிறை* (SII,v,681.)

ஒட்டையர் (பெ) ஏவலாட்கள் (1178) *எந்நொட்டையற்க்கு எந் மிணாட்டியைக் குடுபேந்* (ARE,1934-35,p.61.)

ஒட்டை வன்னிமார் (பெ) ஏவல் தொழில் புரியும் வீரர் (1191) *எங்களொட்டை வன்னிமார்க்கும் செருப்புங் கலசப்பானையும் எடுக்க* (SII,xvii,245.)

ஒட்டோலை (பெ) ஒப்பந்த ஆவணம் (987) *பரமஸ்வாமிக்கு ஒட்டி இறைகாவல் லொட்டோலை இட்டுக் கொடுத்த பரிசாவது* (SII,xiii,76.)

ஒடங்படி (பெ) சம்மதம் (909) *நாள் இருபதும் இவநநுபவிக்க நாங்கள் மூவரொடநபடி* (SII,v,1412.)

ஒடம்பட்டு (வி) ஒப்புக் கொண்டு (985) *ஆணை மறுத்த ஒடம்பட்டு பிந்நையும் இநிலம்* (SII,xix,290.)

ஒடல் (பெ) (= உடல்) முதல் (995) *பொன்னுக் குட்பட்டச் சந்திவிளக்கு கொடலாவதாகவும்* (SII,vi,21.)

ஒடுக்க (வி) (கணக்கு) எழுத (921) *மற்றுக் கணக்கர் புக்கு ஒடுக்கப் பெறாதாராகவும்* (ARASI,1904-05,p.131.)

ஒடுக்கி (வி) சேர்த்து (1100) *மாவும் கொட்டை யும் எப்பேர்ப்பட்டதும் குறவர பறஞ் ஞொடுக்கி கொடுத்து* (TAS,viii,p.41.)

ஒடுக்கித்து (வி).சேர்ப்பித்து (1249) *ஆக இவுருக்கள் ஸ்ரீபண்டாரத்து ஒடுக்கித்து* (SII,xii,150.)

ஒடுக்கின (வி) கொடுத்த (1070) *ஆதி$_3$தா$_3$ஸ ச$_0$ண்டேச்$_0$வர பக்கல் இலாரையன் ஒடுக்கின தெ...ற்பதின் கழஞ்சு* (SII,vii,439.)

ஒடுக்கு (பெ) படையல் (பிரசாதம்) உணவில் பங்கு (1293) *பாத்ரசே$_0$ஷ அரிசி ஒரு குளகமு மாஹேச்$_0$வரற்கு இரண்டு ஒடுக்கும் நாட்டவற்கு ஒரு ஒடுக்கும் நித்தம் இப்படிச் செல்வதாக* (EC,x,Bp.24.)

ஒடுக்குவிது (வி) கொடுக்க வேண்டியது (1000) *அஞ்சு நாழிகைக்கு துடங்ஙி மூன்று நாழியையின் முன்னே ஒடுக்குவிது* (TAS,ii,p.173-207.)

ஒடுங்க (வி) செயலிழக்க (1122) *மணினா வொடுங்க விசையமு புகழுமேல்லோங்க* (SII,ii,68.)

ஒடுங்கா (வி) பணியாத (771) *ஒடுங்கா மன்னரொளி நகரழித்த* (EI,xvii,16.)

ஒண் (பெ) மிகுதியான (862) *ஒண்டிறல் நதி வணியத்தரண்பை மூதூர்* (SII,xiv,45.)

ஒண்கண் (பெ) ஒளி பொருந்திய கண் (1086) *வாளரவொண்கண் மடந்தையரீட்டம்* (SII,vii,1032.)

ஒண்டமிழ் (பெ) விளக்கமிக்க தமிழ் மொழி (921) *ஒண்டமிழும் வட மொழிஉம் பழுதறத்தா னாராய்ந்து* (SII,iii,206a.)

ஒண்டாக்கின்றவர் (பெ) உண்டாக்குகின்றவர் (1235) *ஊண் ஒண்டாக்கின்றவர்க்கிருநாழி அரி* (TAS,vii,p.65-66.)

ஒண்டாய் (வி) சேர்த்து (1019) *அட்டி யூணுங் கறியுந் நெய்யு மொண்டாய்ப் பிராமணர் ஊட்டி* (TAS,v,p.189.)

ஒண்டாயில் (வி) ஏற்பட்டால் (885) *இவகள்க்கு அன்னியாயம் மொண்டாயில் உல்கு துலாக்கூலி தடுத்தும்* (TAS,ii,p.80-82.)

ஒண்ணாமை (வி) இயலாமை (1240) *சிறை மீட்கையில் பின்பு இம்முதல் எங்களால் இறுக்க ஒண்ணாமையால்* (IPS,548.)

ஒண்பாதுகைத்தளை (பெ) சிறைக்கைதியைப் பிணைக்கும் ஒரு வகைக் கைவிலங்கு (1150) *வேணாடுடையார் பிடித்துச் சிறைசெய்து ஒண்பாதுகைத் தளை இழுப்பின் போது* (AVNM,9,p.33-34)

ஒண்புனல் (பெ) தூய்மையான நீர் (1054) *துறை மூன்றிலும் ஒண்புன லூட்டி ஆங்கவந் ஏநகிரியில்* (SII,iv,539.)

ஒத்த (வி) சம்மதமான (771) *தங்களோடொத்த நான்கு படாகாரங் கொடுத்தார்* (EI,xvii,16.)

ஒத்தது (வி) ஒப்புக்கொண்டது (771) *மூர்த்தி எயினன் ஸவைஓடொத்தது* (EI,xvii,16.)

ஒத்தி (வி) கட்டி (985) *ப்ரஹ்மதே$_3$வமாக அவர் காட்டின சேரியிலே யில்லம் ஒத்திக் குடியிருந்து* (SII,vii,742.)

ஒத்து (வி) உடன்பட்டு (966) *மாஹாஸபை$_4$ திருவடி பேரம்பலத்தேய் குறி கூடி இருந்து வினாப் போக்கி ஒத்தெழுத்திட்டு குடுத்த பரிசாவது* (SII,vii,811.)

ஒதுக்கி (வி) தள்ளி (1176) *ஆழ் வரை வரப்பாக அடற்கலியை பிலத்தொதுக்கி ஊழிதொறும் புகழோங்க* (SII,xvii,585.)

ஒப்பது (வி) சம்மதமானது (866) *மூன்று சரணத்தார்க்கு ஒப்பது* (TAS,i,p.1-14.)

ஒப்பது (வி) நிகராவது (813) *காசின்னொடுரை ஒப்பது* (SII,vii,931.)

ஒப்பம் (பெ) தோற்றம் (1012) *ஒப்பத் திருவனையர் முப்பத்திருவர் பாடல் பயின்ற நாடக மகளிற்கும்* (SII,vii,863.)

ஒப்பம் (பெ) ஒப்புதல் (1044) *வந்த இறை எப்பேர்ப்பட்டதும் ஸபையொப்பமேய் இறுக்க கடவோமாகவும்* (SII,v,633.)

ஒப்பம் (பெ) கையெழுத்து (1298) *கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளவும் சொன்னோம் இப்படிக்கு தேவர் ஒப்பமிட்டது* (SII,iv,422.)

ஒப்பரிய ஒப்பிடுவதற்கரிய (1220) *ஒப்பரிய மறைநாலும்* (CHEN,xiv,p.362-64.)

ஒப்பன் (வி) மெருகிடப்பட்ட (1014) *ஒப்பன் திருக்கைக்காறை ஒன்று* (SII,ii,1.)

ஒப்பாகி (வி) போலத் தொன்றி (1125) *மகுழுங் கங்கை யொப்பாகித் தெரிவையர் திலகம் தியாக பதாகை புரிகுழல் மடப்பிடி* (SII,v,703.)

ஒப்பிட்டு (வி) சரிபார்த்து (978) *மூவேந்தவேளானும் வேளானண்ணாவனும் ஒப்பிட்டுப் புக்க கேள்விப்படி* (SII,iii,151-151a.)

ஒப்பித்து (வி) சமப்படுத்தி (911) *மேடும் பள்ளமும் ஒப்பித்து நாலு வேலியும் அமைத்து* (SII,viii,640.)

ஒப்பிது (வி) ஒப்பானது (1000) *பழங்காசினோடு ஒப்பிது முப்பத்து அறு கழைஞ்சு பொன்* (TAS,iii,p.176-77.)

ஒப்பில் (வி) ஒப்பற்ற (1056) *ராஜ பரிச்சந்தமும் ஒப்பில் சப்பியவ்வைய் சகப்பை யென்றிவர் முதல் தேவியர்* (SII,iii,29.)

ஒப்பு (பெ) சரிபார்த்தல் (1008) *மதுராந்தக மூவெந்தவேளானும் ஒப்பினாலும் புக்க நந்தீட்டின்* (EI,xxii,34.)

ஒப்பு (பெ) இசைவுக் கையெழுத்து (1024) *ப்$_3$ரஹமாதிராஜன் ஒப்பு உதையமார்த்தாண்ட ப்$_3$ரஹமாதிராஜன் ஒப்பு* (EC,xvii,Kl.44.)

ஒப்புகொண்டு (வி) ஏற்றுகொண்டு (947) *இப்பொன் 10ம் எங்கள் பங்கின் வசமேய் ஒப்புகொண்டு* (SII,viii,69.)

ஒப்பு முத்து (பெ) முத்தின் ஒரு வகை (1014) *முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்பு முத்துங் குறுமுத்தும் நிம்போளமும்* (SII,ii,3.)

ஒப்புரவு ஓலை (பெ) உடன் படிக்கை (1714) *ஆச்சிராமத்துக் கோவிக்கலில்க் கூடியிருந்து ஒப்புரவு ஓலை எழுதிக் கொண்ட பரிசாவிது* (TAS,v,p.217-18.)

ஒபாதி (பெ) நிலவரி (926) *முன்பிலான ஒபாதி 120 கலமும்* (SII,viii,668.)

ஒபாதி (பெ) பங்கு விழுக்காடு (985) *திருக்கற்றளியில் நாலொபாதி திருக்கற்றளி எடுப்பித்தார்* (SII,xix,459.)

ஒம்மச்சு (பெ) இரத்தினக் கற்களைப் பதித்துக் கட்டும் வேலை (1513) *நவரத்நமிட கிரீடம் ஒன்றுக்கு ஒம்மச்சு பொந் தூக்கம் 1555* (TDI,iii,35.)

ஒரு (பெ) ஒன்று (691) *தண்ணீர்க்குந் தீக்கும் ஒரு பங்காகவும்* (SII,i,151; EI,xvii,22.)

ஒரு கால் (பெ) ஒருமுறை (870) *இவ்வக்$_3$ரம் ஒரு கால் முட்டிலும்* (SII,xix,163.)

ஒருங்க (வி) அடங்க (1400) *இசைந்த பகை ஒருங்க சந்திராதித்தவரைக்குக் சந்துயிட்டு* (IPS,619.)

ஒருங்கு (வி) சேர்த்து (785) *இருங்கயலாணை ஒருங்குடனடா ஒலிகெழு முந்நீர்* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

ஒருத்தர் (பெ) ஒருவர் (804) *ஒரு பங்கினுக்கு ஒருத்தரே* (SII,xiv,37.)

ஒருத்தி (பெ) ஒரு பெண் (1015) *பதியிலாள் ஒருத்திக்கு நிலன் முக்காலேய்* (TMPL,xviii,p.151-55.)

ஒருதநி (பெ) ஒப்பற்ற (1047) *ஒருதநித் தண்டால் பொரு கடலெடுத்த இலங்கையர்* (EC,ix,Dv.75.)

ஒரு தன்மை (பெ) மாறாத நிலைமை (950) *ஒரு தன்மை இரு பிறப்பில் முச்செந்தீ நால் வேதத்தரு மரபில்* (TASSI,1962-65,p.32-52.)

ஒரு திரளே (பெ) ஒரு சேர (800) *நாலுபட்டி நிலமொருதிரளே* (SII,vi,355.)

ஒருப்புறவன் (பெ) முத்தின் ஒரு வகை (1014) *குறுமுத்தும் நிம்போளமும் ஒருப்புறவனும் ஆக முத்து* (SII,ii,51.)

ஒருபதா நாள் (பெ) பத்தாம் நாள்(?) (1050) *நற்கவனவதரித்த ஒருபதா நாளால்* (SII,v,520.)

ஒரு பூக்காசு (பெ) ஒரு போக விளைச்சலின் பேரில் இறுக்கும் ஒரு வரி (1118) *ஒரு பூக்காசும் பசாநக் காசும் ஆண்டாசறுதியாக நேராக இறுக்கக் கடவோமாகவும்* (SII,vi,57.)

ஒருமை மனம் (பெ) உண்மை பேசும் உள்ளம் (1257) *ஒருமை மனத்திரு பிறப்பின் முத்தீயின் நால்வேதத் தருமறை* (SII,v,459.)

ஒருமை முறி (பெ) ஒற்றுமை உடன்படிக்கை (1376) *இரண்டு கரை நாட்டையுங் குவித்து ஒருமை முறியும் இட்டு* (IPS,960.)

ஒரு மொழி (பெ) ஒரே ஆணை (771) *அறை கடல் வளாகம் ஒரு மொழிக் கொளீஇய* (EI,xvii,16.)

ஒருவரையும் (பெ) எவரையும் (921) *அன்றுள்ளூரிலிருந்த நம்பிமார் ஒருவரையும் ஒழியாமே* (ARASI,1904-05,p.131.)

ஒருவன் (பெ) ஓர் ஆண் (885) *ஒருவன் பேரெயிற்குடிச் சாத்தனக்கன்* (SII,xiv,31.)

ஒருவாய்த் துரவு (பெ) ஒரு பக்கத்தில் மட்டும் நீர் இறைப்பதற்குரிய பாசனக் கிணறு (1254) *இன்னிலம் 9பது மாவும் மேல் ஓடையில்*

ஒருவாய்த் துரவும் ஏத்தமும் ஏத்த நிலை சிக்குழியும் (SII,xii,166.)

ஒரோசணி (பெ) உரோகிணி நட்சத்திரம் (957) *சிங்கனாயற்றுச் சனிக்கிழமை பெற்ற ஒரோசணி நான்று* (SII,xiii,165.)

ஒல்கல் (பெ) தளர்ச்சி (1045) *ஒல்கலில் வேணாட்டரசை சேணாட் டொதுக்கி* (SII,iv,537.)

ஒல்காத (வி) தளராத (771) *ஒல்காத வேற்றானை* (EI,xvii,16.)

ஒல்லென் (வி) ஓசை செய்யும் (800) *ஒல்லென் கடனீர்* (EI,xiii,10.)

ஒல்லை (வி) சீக்கிரமாக (1120) *ஒல்லை வடவேந்தர் செல்வமெலாம் வாங்க* (SII,iv,225.)

ஒலி (பெ) ஓசை (785) *ஒடு புறங் கண்டவனொலி உடை மணித்தேராடல்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

ஒலிக்கும் (வி) துணி வெளுக்கும் (1068) *ஒலிக்கும் மீரங்கொல்லிக்கும்* (EI,xxi,38.)

ஒலியல் (பெ) ஒருவகை ஆடை (1328) *திருப்பரி வட்டம் 10ம் புலியூர்ப்பட்டு 10ம் பச்சைப்பட்டு 10ம் திருவொலியல் 4ம்* (SII,viii,175.)

ஒலியற் பரிசட்டம் (பெ) விக்கிரகத்துக்கு சாத்தும் ஆடை (1045) *நெய்சாத்தி சாத்தும் ஒலியற் பரிசட்டம் ஒன்றுக்குப் பொன்* (SII,iv,867.)

ஒலிவண்ணார்ப்பாறை (பெ) துணி வெளுப்போர் செலுத்தும் வரி (1465) *பச்சை பாட்டம் ஒலிவண்ணார்ப்பாறை கொடியாயம்* (TAS,vi,82.)

ஒலோக நாத$_2$ர் (பெ) அரசர் (815) *பாண்ட்$_3$ய வம்ச$_0$த்தொலோக நாத$_2$ர் பலர் கழிந்தபின்* (SII,iii,206b.)

ஒலோகாசநம் (பெ) சிங்காதனம்(?) (1066) *மகர தோரணமும் ஒட்டகநிரைகளும் ஒலோகாசநமும் புஷ்பகப் பிடியும்* (SII,v,976.)

ஒலோமி (பெ) மண் பாண்ட வகை (985) *நித்தற்ப் படி புது மடாவும் புத்தொலோமியும் இடும் குசவனுக்கு* (SII,xiii,35.)

ஒழிகில் (வி) விட்டுவிட்டால் (861) *இரண்டும் செயாதொழிகில்* (TAS,ii,p.85-86.)

ஒழிகின்றார்கள் (வி) ஒதுங்குகிறார்கள் (985) *ஸபை$_4$யார் பற்றியுண்டு தேவர்க்கு இறையிறா தொழிகின்றார்கள் என்று* (SII,xiii,142.)

ஒழிச்சு (வி) நீக்கி (962) *நாட்டினும் வாழ்க்கைக்கு பணிக்குங் கொடுக்குங் கோள்குடையு மொழிச்சு கொடுத்தான்* (TAS,iii,p.171-73.)

ஒழிச்சுவதற்கு (வி) நீக்குவதற்கு (922) *இவ்வூர் இறை ஒழிச்சுவதற்கு பூர்வாசாரங் கொண்டு* (SII,vi,297.)

ஒழிஞ்ச (வி) செய்து முடிந்த (919) *நிரம்ப வாரியம் ஒழிஞ்ச அனந்தடம் இடும் வாரியங்கள்* (ARASI,1904-05,p.131.)

ஒழிஞ்சார் (வி) தவிர்ந்தார் (1000) *பண்டில்லாதது கொள்ள வேண்டாதென் றொழிஞ்சார்* (SII,v,784.)

ஒழிஞ்சாள் (வி) இறந்து போனாள் (967) *பந்னிரு கழஞ்சரை பொன் தந்து ஒழிஞ்சாளென்று* (SII,vi,374.)

ஒழித்து (வி) விட்டு (1000) *ஊன்றோயுடலிங் கொழித்துயிர் போக்கும் உறைப்பினரே* (SII,iv,167.)

ஒழித்துவதாகவும் (வி) நீக்கி விடுவதாகவும் (921) *அபராதங்கண்ட போது அவனை யொழித்து வதாகவும்* (ARASI,1904-05,p.131.)

ஒழிந்த (வி) பணியிலிருந்து நீங்கிய (921) *இவர்கள் ஒழிந்த அனந்தரமிடும் வாரியங்களும்* (ARASI,1904-05,p.131f.)

ஒழிந்தோம் (வி) நீக்கிவிட்டோம் (755) *எப்பேர்ப்பட்ட இறையுமொழிந்தோம்* (SII,vi,356.)

ஒழிய (வி) தவிர (962) *பட்டிகாடி ஒழிய எப்பேர்ப்பட்ட ஆயமும்* (SII,vi,324.)

ஒழியாமல் (வி) விடாமல் (905) *உண்ணிலம் ஒன்றொழியாமல்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

ஒழியில் (வி) முடிந்து போனால் (1014) *அடுத்த முறை கடவாரின்றி யொழியில்* (SII,ii,65.)

ஒழியுமவன் (பெ) செய்யாதவன் (1000) *ஒழியு மவன் ஒரோத்தர் கால்க் காணம் பொன் தண்டம்* (TAS,ii,p.173-207.)

ஒழிவதாகவும் (வி) நீங்குவதாகவும் (921) *வாரியப் பெருமக்களும் முன்னூற்று அறுபது நாளும் நிரம்பச் செய்து ஒழிவதாகவும்* (ARASI,1904-05,p.131.)

ஒழிவிது (வி) எஞ்சியது (1236) *ஒழிவிது கடமை சென்று செல்லாத்ததின்னு* (TAS,iii,p.59-63.)

ஒழிவின்றி (வி) முழுவதும் (550) *உண்ணிலனொழிவின்றி* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

ஒழுக்கம் (பெ) நல்ல குணம் (950) *கோ₃த்ரத்திலளப்பரிய பேரொழுக்கத் தாச்₀வலாயந ஸூத்ரத்து* (TASSI,1962-65,p.32-52.)

ஒழுக்கம் (வி) நடைமுறை (951) *மூழிக்களத் தொழுக்கப்படி கச்சம் பிழைச்சாராவது* (TAS,i,p.288-89; TAS,v,p.6-7.)

ஒழுக்கமாக (பெ) முறையாக (985) *இப்பொன் னின் பலிசைக் கொண்டு ஆண்டுதோறும் ஒழுக்கமாக* (SII,xiii,261.)

ஒழுக்கவி (பெ) கோயிலில் நாடோறும் படைக்கும் சமைத்த உணவு (691) *ஒழுக்கவிக்கு விளைநிலமாகவும்* (SII,i,151; EI,xvii,22.)

ஒழுக்கவிப்புறம் (பெ) ஒழுக்கவிச் செலவின் பொருட்டு விடப்பட்ட மானிய நிலம் (890) *இவ்வூர்க் காளாபடாரியார்க்கு ஒழுக்கவிப்புறமாக பத்து செய்யும்* (SII,v,572.)

ஒழுக்கவும் (வி) நிறைவேற்றவும் (950) *குளத்தூர் அரையன் திருச்சிராப்பள்ளி ஆணை ஒழுக்கவும்* (TASSI,1962-65,p.32-52.)

ஒழுக்கி (வி) கொட்டி (1293) *மணல் ஒழுக்கி கட்டின பொன்னம்பலப் புத்தேரியில்* (EC,x,Mr.99.)

ஒழுக்கி (வி) வரிசையாக நட்டு (1008) *நீரிறைத்துக் களை வெட்டி வேலியொழுக்கி* (SII,xvii,234.)

ஒழுக்குநீர்ப் பாட்டம் (பெ) ஒரு வரி (1265) *இடைவரி ஒழுக்குநீர்ப்பாட்டம்* (SII,xvii,143.)

ஒழுக்குநீர்மீன் பாட்டம் (பெ) ஒரு வரி (1300) *ஒழுக்குநீர் மீன் பாட்டம் செக்காயம் வண்ணார் பாறை..உள்ளிட்ட அனைத்து ஆயவற்க்கமும்* (SII,viii,245.)

ஒழுக்கை (பெ) வழி (979) *மேல்பாற்க்கெல்லை தேர்போகு ஒழுக்கைக்குக் கிழக்கும்* (SII,xix,237.)

ஒழுக (வி) செயலாற்ற (1270) *சேனை யெதிர் பட்டொழுக* (SII,iv,618.)

ஒழுகல் (பெ) (= ஒழுகு) (1238) *காணி அறு போகம் எழுதுகிற இடத்து தரமிலியாய் ஒழுகல் மாட்டெறிந்து வருகிற குளங்கள்* (SII,viii,206.)

ஒழுகு (பெ) ஊரில் நிலம், நிலவரி ஆகியன பற்றிய கணக்கு (1185) *கீழ்நோக்கிந கிணறும் ஒழுகிந்படி பொந்வரி சில்வரி ஆயம்* (SII,vii,120.)

ஒழுகு (வி) வடியும் (?) (905) *கடைக் கொம்பிற்கும் ஒழுகு கள்ளி முரம்புக்கும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

ஒழுகும் (வி) முறைப்படி நடக்கும் (1051) *தன் கழல் பணிந் தொழுகும் அரைசர்களோடு* (SII,vii,1046.)

ஒழுங்கை (பெ) இடுக்கு வழி (1106) *வடபாற் கெல்லை அம்மணரை வட வொழுங்கைக்குத் தெற்கும்* (SII,v,1381.)

ஒள்ள (வி) உள்ள (885) *உலகும் சந்திராதித்தி யரும் ஒள்ள நாளெல்லாந் செலவு பத்திரந் செய்து* (TAS,ii,p.80-82.)

ஒள்ளவர் (பெ) பெற்றிருப்பவர் (1200) *காராண்மை ஒள்ளவர்* (TAS,vi,140.)

ஒள்ளியது (வி) உள்ளது (1000) *சிரிபலிக்கு கைவிளக்கினுத் திருவடைக் காயமிதினு மொள்ளியது* (TAS,ii,p.173-207.)

ஒள்ளெரி (பெ) ஒளிரும் நெருப்பு (1012) *சூளிகை மாளிகை யுதைகை முன் னொள்ளெரி கொளுவி* (SII,vii,863.)

ஒளி (பெ) வெளிச்சம் (771) *விடுகதிரவிரொளி விலக வீற்றிருந்து* (EI,xvii,16.)

ஒளி செய்விது (வி) விளக்கு எரிப்பது (809) *விருத்தி விலைக்குக் கொண்டு ஒளி செய்விதாகக் கொண்டு* (SII,xiv,40.)

ஒளித்த (வி) மறைந்த (800) *கோ நாடர் புக் கொளித்த குன்று* (EI,xiii,10.)

ஒளிப்பற்று (பெ) ஒளியர் என்ற இனத்தாரின் உரிமை நிலம் (?) (1186) *வடசிறுவாயில் நாட்டு ஒளிப்பற்று வாளுவ மங்கலமும்* (IPS,145.)

ஒளிர் (வி) ஒளிவிடும் (905) *ஒளிரிலைவேல் உபாயப₃ஹூலன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

ஒற்றர் (பெ) உளவு பார்ப்பவர் (1044) *அவர் விடும் ஒற்றரை வெருவப் பிடித்தாங்கவர்* (SII,v,465.)

ஒற்றாடை (பெ) நீராடிய விக்கிரகத்தைத் துடைக்கும் துணி (987) *ஜலபவித்ரத்துக்கும் திருவொற்றாடைக்கும்* (SII,iii,151-151a.)

ஒற்றி (பெ) அடைமானம் (768) *நிலம் எல்லாவிற்றின் மேலும் விற்கிலும் ஒற்றி இடிலும்* (SII,xii,34.)

ஒற்றி கொள்ளுமவன் (பெ) அடைமானம் பெறுபவன் (988) *பொது ஆளும் ஒற்றி கொள்ளுமவன்* (TAS,v,p.178-80; TAS,ii,p.40.)

ஒற்றி இட்டு (வி) அடைமானம் வைத்து (808) *குலங்கிழார்கள் கருமாச் சேரிப் புலம் ஒற்றி இட்டு* (EI,viii,29.)

ஒற்றை (பெ) தனி (925) *கீழெல்லை ஒற்றைப்பனைக்கு மேக்கு நடுக்கல்லுக்கு மேக்கு* (TAS,i,p.187-93.)

ஒற்றைச் சங்கு (பெ) ஒரு வகைச் சங்கு (976) *ஒற்றைச் சங்கு ஒன்றூதுவதாகவும்* (SII,xix,169.)

ஒற்றைச் சேவகர் (பெ) படைவீரரில் ஒரு சாரார் (795) *உள் வீட்டி னொற்றைச் சேவகர் கோட்டை அழியாமை காத்தெறிந்து* (TAS,i,p.158-159)

ஒற்றைத் தாலி மணி (பெ) ஒரு நகை (1055) *நம்பிராட்டியார்க்கு சாத்தி அருள இட்ட ஒற்றைத் தாலி மணி பதின்று ஒருபது* (SII,v,512.)

ஒற்றை வெண்குடை (பெ) தன்னேரில்லாத அரசனின் வெள்ளைக்குடை (1012) *துங்கத் திக்கினிற் சேனை செலுத்தி மிக்க வொற்றை வெண் குடைக் கீழிரட்டை வெண்கவரி* (SII,vii,863.)

ஒறுப்பார் (வி) தண்டிப்பார் (1172) *கைத்தாயரேய் கடிந்தொறுப்பார்* (SII,xvii,592.)

ஒன்பதிற்றடி கோல் (பெ) ஒன்பது அடி நீளமுடைய அளவு கோல் (1217) *உபையமாக ஒன்பதிற்றடி கோலால் இருநூற்றைம்பத்தாறு குழி* (IPS,175.)

ஒன்பது (பெ) 9 (எண்) (678) *பரமேச்சுவர பருமற்கு யாண்டு ஒன்பதாவது* (CHHS,1971/78.)

ஒன்றலர் (பெ) பகைவர் (1200) *வாணனை னீ பேசுவாயே ஒன்றலர்தன் கொடிய பேரலர் விளம்புக* (SII,viii,134.)

ஒன்றாக (வி) சேர்த்து (905) *இரண்டும் தமிலெஃல்லை கலந்து கிடக்குமாதலில் ஒன்றாக வுடன் கூட்டி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

ஒன்றானமை (வி) ஒருருவாதல் (933) *இவ் விரண்டுரோமுங் கூடி ஒன்றானமையில் இதன்மேற்பட்டது ஒரூராய் வாழ்வோமானோம்* (EI,iii,23.)

ஒன்று (பெ) உண்மை (905) *கோன் ஒன்று மொழிந்திரண்டோம்பி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

ஒன்று (பெ) 1(எண்) (770) *வைச்சதிருவிளக்கு ஒன்று* (SII,xiv,18.)

ஒன்றுபுரி நெஞ்சம் (பெ) உண்மையே பேசும் உள்ளம் (1192) *தெய்வ மேருவிற் செயல் விளயாட வொன்று புரி நெஞ்சத் திருவருகைப் பிறப்பின்* (SII,v,301.)

ஒன்னலர் (பெ) பகைவர் (1120) *தன்னொன்னலர்க்கு கண்களிடனாடச் செல கூத்தனீண்டு மண்டபமும்* (CHEN,xxiii,p.93-96.)

ஒன்னார் (பெ) பகைவர் (1000) *உற்றார் தலையிட வொன்னார் முகந்த உண்டு மிக்க* (SII,iv,167.)

ஓ

ஓங்க (வி) வளர (1076) *வெற்றிக் கொயோடு வீரமும் ஓங்க* (SII,vii,137.)

ஓங்கி (வி) உயர்ந்து (785) *பாழி நீண்மதில் பரந்தோங்கி* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

ஓங்கியல் (வி) உயர்ந்து விளங்குகின்ற (1051) *ஆங்கவந் நேத்திகிரியில் ஓங்கியல் உழுவை[யே]றெழுதி* (EC,ix,Dv.76.)

ஓங்கு (வி) பரவும் (950) *உத்தரம் திசை ஓங்கெல்லை நாட்டுப் பெருங்காலினின்றுங் கிழக்கு* (TASSI,1962-65,p.32-52.)

ஓங்கு (வி) உயர்ந்து எழுகின்ற (905) *ஓங்குதிரை வியன் பரப்பில்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

ஓங்குயர் (பெ) மிக உயர்ந்த (1017) *ஆங்கவந் றேவியர் ஓங்குயர் முடியும்* (SII,vii,860.)

ஓங்குரிமை (பெ) நெருங்கிய உரிமை (1237) *ஓங்குரிமைக் குழாம் மொருகை திசைய் கொண்டு* (SII,v,431; EI,xxii,10.)

ஓச்சி (வி) செலுத்தி (771) *செங்கோலோச்சி* (EI,xvii,16.)

ஓச்சி (வி) உயர்த்தி (815) *தூணி பலபடத் தோளோச்சியும்* (SII,iii,206b.)

ஓசை (பெ) ஒலி (832) *இருக்கோசை மலி முதலூரீச்சுவரன்* (SII,xiv,44.)

ஓட்டன் (பெ) விரைவாகச் செய்தி கொண்டு செல்பவன் (1150) *கவறையுங் காத்ரிபனுங் காமுண்டச்ஃவாமியும் ஓட்டனும் உள் பசும்பைக்காறனும்* (AVNM,9,p.33-34)

ஓட்டி (வி) விரட்டி (771) *கொல்யானை பல வோட்டி* (EI,xvii,16.)

ஓட்டுண்டு (வி) விரட்டப்பட்டு (1279) *பகை பற்றப் புறங்கை யோட்டுண்டு வெட்டுண்டதே* (SII,xii,265.)

ஓட்டையடைக்குமவன் (பெ) (பாத்திரங்களின்) துளைகளை அடைப்பவன் (1000) *சரக்கு ஓட்டையடைக்குமவனுக்கும் விச்சநெல்பதின் பறையும்* (TAS,iv,p.ii-16.)

ஓட (வி) தோற்றோட (771) *ஆளமருள்எழிந்தோட வாளமருளுடன் வவ்விய* (EI,xvii,16.)

ஓடக் கடவர் (வி) விரைந்து செல்லக் கூடியவர்கள் (985) *ஓலை தூதோடக் கடவர்களை ஓலைத்தூ... ஓலைதூது போங்கவென்று* (SII,xiii.342.)

ஓடக் கூலி (பெ) ஓடம் இயக்குவார் மீதான வரி (978) *வாலமஞ்சாடியும் உல்கும் ஓடக்கூலியும் நீர்க் கூலியும்* (SII,iii,151-151a.)

ஓடநாயன்மார் (பெ) ஓடம் செலுத்துவோர் (919) *ஏரி கரை மண்ணட்டுகின்ற ஓட நாயன்மார்க்கிடுவதற்கு* (SII,iii,99.)

ஓடம் (பெ) தோணி (950) *ஓடம் ஒன்றுக்கு ஓடம் இசக்கி* (SII,viii,652.)

ஓடமுடையார் (பெ) ஓடம் செலுத்துவோர் (1236) *காரிச்சாத்தன்குறையிற் காணிஉடைய ஓடமுடையாரில் பொல்லாதான்* (SII,viii,336.)

ஓடன் (பெ) ஓடம் (833) *நாடிநேர்தமக்கில்லா மோடனியங்கு மாறனேரியும்* (SII,xiv,44.)

ஓடாணி (பெ) திருகு ஆணி (1014) *ஓடாணியும் நிலையாணியும் உள்ப்பட* (SII,ii,9.)

ஓடி (பெ) விளை நிலத்தின் பொதுப்பெயர் (1000) *கிழானடிகளமைச்ச தலையோடியாலுந் தென்னோடியாலுஞ் ... கொள்ளும் பாட்டநெல்* (TAS,ii,p.173-207.)

ஓடி (வி) விரைந்து சென்று (550) *உடும்போடி ஆமை தவழ்ந்ததெல்லாம்* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

ஓடிப்போகை (வி) தோற்றோடிப் போவது (1168) *பூசலிலே பட்டு ஓடிப்போகைக்கு மீள யாவர்* (SII,vi,456.)

ஓடிப்போன (வி) தலைமறைவான (1148) *நிலை நில்லாத்தே ஓடிப்போன புணைப்பட்ட கவினித் தேவகள்* (SII,vii,944.)

ஓடு (பெ) கூரைவேயும் ஓடு (691) *தளி எடுப்பதற்கு ஓடு சுடக்கொண்ட நிலம்* (SII,i,151; EI,xvii,22)

ஓடு புறங்கண்டு (வி) தோற்றோடச் செய்து (785) *திகழ் வேலதியனை ஓடு புறங் கண்டவனொலி உடை மணித் தேராடல்* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

ஓடை (பெ) நீரோடை (792) *காடும் ஓடையும்* (EI,xviii,14.)

ஓணச் செலவு (பெ) ஓண விழாச் செலவு (1236) *இமுதலில் பட்ட விருத்தி ஓணச் செலவினு* (TAS,iii,p.59-63.)

ஓணம் (பெ) திருவோண நட்சத்திரம் (861) *ஆவணியோணம் அடுவான் கொடுத்த பூமி* (TAS,ii,p.85-86.)

ஓத்து (பெ) வேதப் படிப்பு (866) *த்ரை ராஜ்ய வ்யவஹாரத்துக்கு வேண்டும் ஓத்துடையன்* (TAS,i,p.1-14.)

ஓத்து கேட்பார் (பெ) வேதபாடம் கேட்கும் மாணவர் (1068) *ஐநநாதன் மண்டபத்தோத்து கேட்பார்க்கு* (EI,xxi,38.)

ஓத்துரைக்கும் (வி) வேதமோதும் (985) *காட்டாம்பள்ளியில் ஓத்துரைக்கு மண்டபத்திற்கு* (SII,vii,828.)

ஓதவேலி (பெ) (கடலை வேலியாகவுடைய) உலகம் (771) *வேற்றானை ஓடோத வேலி உடன் காத்த* (EI,xvii,16.)

ஓதி (வி) வேதமோதி (955) *ஐஞ்சுவாரமு மோதி தானம் புக்கார்* (SII,xiv,81.)

ஓதும் (வி) வேதபாடம் ஓதும் (866) *வாரம் ஓதும் பரிசு* (TAS,i,p.1-14.)

ஓதுவது (பெ) வேதபாடம் ஓதுவது (866) *இரண்டு கிரமவாரம் அடுத்தோதுவது* (TAS,i,p.1-14.)

ஓதுவார் (பெ) வேத ஆசிரியர் (1068) *ஓதுவாரும் ஓத்துக் கேள்பாருமாக அறுபதிநமர்க்கு* (EI,xxi,38.)

ஓதுவித்தறிவான் (பெ) வேதம் கற்பிக்கத் தெரிந்தவன் (921) *மந்தர ப்ஃராஹ்மணம் வல்லாந் ஓதுவி(ய்)த்தறிவானைக் குடவோலை இடுவதாகவும்* (ARASI,1904-05,p.131.)

ஓம்பி (வி) பாதுகாத்து (815) *அவனி மண்டஃலமுடனோம்பி* (SII,iii,206b.)

ஓம்பு (வி) பேணும் (1000) *சிராமலையாளி கழனோம்பு கதிர்த்திருவருள்* (SII,iv,167.)

ஓமம் (பெ) வேள்வித் தீயில் நெய் முதலியன பெய்கை (1024) *ஓமம் ஒன்றுக்கு வேண்டும் திரவியமும்* (SII,xvii,320.)

ஓமம் (பெ) ஒரு மரம் (994) *இங்குள்ள ஓமம் தெங்கும் புளியும் முட்பட்ட* (SII,xiii,203.)

ஓமை (பெ) ஒரு மரம் (550) *மேற்கும் ஓமைக்கொல்லை எல்லை* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

ஓர் (பெ) ஒரு (785) *குன்ற மன்னதோர் கோஇலாக்கி* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

ஓர்ப்பவளை (பெ) ஒரு நகை (1013) *தேவர்க்கு ஸ்ரீஹஸ்தம் 4க்கு ஓர்ப்பவளையில் செய்துச் சாத்தி* (SII,v,981.)

ஓர்ப்பு (பெ) தெளிந்த உணர்வு (1176) *மனுவொழுக்க மதியாம்படி நிலைநிற்க ஓர்ப்பினுந் தமுறு கனவிலும்* (SII,xvii,585.)

ஓரணை (பெ) ஒரு சோடி; இரட்டை (887) *ஓரணை ஒரு காசு பெற்றன* (SII,xiv,16a.)

ஓராட்டை (பெ) ஓர் ஆண்டு (871) *ஓராட்டை நாளைக்கு நெல்* (SII,viii,581.)

ஓராத (வி) அறியாத (811) *ஓராத முன்னேய் திருத்தலை தொழுமின்* (SII,xiv,41.)

ஓராளி (பெ) ஒரு ஆள் பங்கு (900) *அமஞ்சியும் இவனேய் செய்து கொண்டு ஓராளி நீர் முறை தோறு மடைத்துக் கொள்வதாக* (SII,xii,114.)

ஒரோ (பெ) ஒவ்வொரு (1113) *அறங்காவலுக்கு படைப்படையால் ஒரோ சேவகரையும் ஒரோ வேலி நிலமும் இட்டுக் குடுத்து* (SII,iv,1396; EI,xviii,38; EZ,ii,p.242-55.)

ஒரோ (பெ) ஒவ்வொரு (815) *பாடுகால் லோரோவயல் பதக்கு நெல்* (SII,xiv,26.)

ஒரோத்தர் (பெ) ஒவ்வொருவர் (953) *இதில்ப் பாதியாக ஓரோத்தர் முந்நாழி முழாக்காக திங்களறுதி அட்டுவதாகவும்* (SII,xiii,45.)

ஒரோதோம் (பெ) ஒவ்வொருவரும் (957) *இவ்விருவோம் பாதிப்பாதி நெய் திங்கள் ஒரோதோமுன்னாழி முழாக்காக* (SII,xix,7.)

ஒரோந்தரமும் (பெ) ஒவ்வொரு தடவையும் (957) *இவை யிற்றினால் நிசதமாழாக்காக ஒரோந்தரமும்* (SII,xix,8.)

ஒரோபேர் (பெ) ஒவ்வொருவர் (921) *இப்பரிசே முப்பது குடும்பிலும் ஓரோபேர் கொள்வதாகவும்* (ARASI,1904-05,p.131.)

ஒரோ பொழுது (பெ) ஒவ்வொரு வேளையும் (844) *ஆனாழி நெல்லோரோ பொழுது தண்டம்* (TAS,ii,p.13-14.)

ஒலக்க கூடம் (பெ) கொலு மண்டபம் (1039) *திருவண்ணாமலை உடையார் கோயிலினுள்ளால் ஒலக்க கூடத்தில் முன்பிருந்து கணக்கு கேட்டு* (SII,viii,68.)

ஒலக்கம் (பெ) கொலுவிருத்தல் (1009) *ஸ்ரீ பலி ஒலக்கத்துக்கு எண்ணை நானாழியும்* (CHEN,xxi,p.425-28.)

ஒலை (பெ) செய்தி தாங்கிய ஓலை (1068) *ஆக வென்றியாவருமறிய வெழுதிய சபதமே வருமோலை விடையோடுங் குடுத்து* (EI,xxi,38.)

ஒலை (பெ) எழுத்துச் சான்று (923) *தனிசு குடுத்துடைய பொன் ஓலை இரண்டாற் பொன் அறு கழஞ்சு* (SII,xix,394.)

ஒலை (பெ) எழுதிய பனையோலை (772) *விலையாவண ஓலை எழுதி விற்று* (SII,xiv,19.)

ஒலைக் குற்றம் (பெ) எழுதப்படும் ஓலையின் தன்மையிலுள்ள குறைப்பாடு (1112) *ஓலைக் குற்றம் எழுத்துக் குற்றஞ் சொற்பிழையென்று சொல்லப் பெறாதோமாகவும்* (SII,vi,434.)

ஒலைத் தூது (பெ) செய்தி ஓலையைக் கொண்டு செல்லும் பணி (985) *ஓலை தூதோடக் கடவர்களை ஓலைத்தூ...ஓலைத்தூது போங்களென்று* (SII,xiii,342.)

ஒலை நாயகன் (பெ) அரச ஆணைகளையெழுதும் அலுவலர்க்குத் தலைவன் (911) *உத்தரமந்திரி பட்டாலகம் எழுத்திநாலுமே ஓலைநாயகன் சிக்கருடையான் நக்கன்* (SII,xix,92.)

ஒலை வாரியன் (பெ) ஓலை எழுதும் பணிபுரிபவன் (1300) *உருத்திரன் விடுத்த ஓலைவாரியனும் உன்னியது முடிக்கும் ஒண்டிறல் வீரர்* (SII,viii,442.)

ஒலை எடுப்பு (பெ) ஒரு வரி (1273) *ஓலை எழுத்து வினியோகம் ஓலை எடுப்பு இலச்சினை வினியோகம் பஞ்சி பீலி* (SII,vii,145.)

ஒலை எழுத்து (பெ) அரசன் வாய் ஆணைகளை யெழுதுவோன் (967) *அரையன் மானாபரணர் ஏவி முதலாகவும் இடையாற்று நாட்டு...ம் ஓலை எழுத்தாகவும்* (SII,xiv,95; EI,xxv,6.)

ஒலை எழுத்து வத்தனை (பெ) எழுத்தர்/ கணக்கர் பொருட்டுச் செலுத்தும் வரி (1466) *ஓலைஎழுத்துவத்தனை அவதரவத்தனை அதிகாரிபேறான கொற்றிலக்...* (SII,xvii,532)

ஒலை எழுதுவான் (பெ) அரச ஆணையை ஓலையில் எழுதுபவன் (500) *கேட்டு வந்து கூறினோலை எழுதுவான் நமன் காரி* (AVNM,1,p.67-69)

ஒவா (வி) ஓயாத (1300) *முழவொலி வளர்க்கும் முத்தமிட் பாடலோடாடல் ஓவா விழவும்* (SII,viii,442.)

ஔ

ஔஷதம் (பெ) மருந்து (1257) *உதயங் கொண்டு வைஜ்ய பரிசாரகற்க்கும் ஔஷதத்துக்கும் சந்தராதித்ய வரை செல்வதாக* (EI,xxiv,12b.)

க

கங்கபூமி (பெ) கருநாடகத்தின் தென்பகுதியில் இருந்த கங்க நாடு (785) *கங்கபூமி அதனளவுங் கடிமுரைசு தன்பியரறைய* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

கங்காணி (பெ) மேற்பார்வை (978) *கங்காணி வரிப்பொத்தகம் விள்ளைப்பாங்கிழான்* (SII,iii,151-151a.)

கங்காணித்து (வி) மதிப்பிட்டு (1225) *இவ்வயலில் விளைஞ்ச நிலத்திலே நெல் பதக்கு கங்காணித்து வாரங் கொள்ளக் கடவதாக* (IPS,271.)

கங்காணி நாயகம் (பெ) ஓர் அரச அலுவலர் (1012) *இன்நாட்டு உள்ளிட்ட நாடுகள் கங்காணி நாயகம் செய்கின்ற வைப்பூர் உடையான் அடியன்* (SII,xvii,328.)

கங்காளம் (பெ) எலும்புக் கூடு (1279) *மனைதொறும் பலிகொளக் காட்டிய வடிவிற் கங்காள வேடமும்* (SII,viii,69.)

கங்கில் (பெ) காளச் சின்னத்தின் உறுப்பினுள் ஒன்று (1014) *கங்கில் ஒன்றும் குழல் இரண்டும் மோதிரம் ஐஞ்சும் உடைய பொன்னின் காளங்கள்* (SII,ii,1.)

கங்குல் (பெ) இருள் (1012) *கங்குற் குழம்பு படு பேரிருட் பிழம்பு* (SII,vii,863.)

கங்கை (பெ) கங்கையாறு (764) *கங்கையிடைக் குமரிஅடைச் செய்தான் செய்த பாவமாக ஒட்டினோம்* (TAMIZ,1970,p.124.)

கங்கையிடை குமரிஅடை நாடு முழுவதும் (764) *இவ்வறத்து மேலன்றிப் பேசினான் கங்கையிடைக் குமரி அடைச் செய்தான் செய்த பாவமாக* (TAMIZ,1970,p.124.)

கச்சம் (பெ) தீர்மானம் (804) *இக்கச்சத்தில் பட்ட பரிசே* (SII,xiv,37.)

கச்சவோலை கரணம் (பெ) உடன்படிக்கை ஆவணம் (1200) *காட்டு வாயிர வேலிக் கச்சத்தோடொக்குங் கரயும் வயலும் மற்றெழுதிய கச்சவோலைக் கரணமாவது* (TAS,vi,142.)

கச்சிப்பேடு (பெ) காஞ்சிபுரம் (852) *கச்சிப்பேட்டு ஐம்மனைச் சேரி* (SII,ii,98.)

கச்சுக் கட்டில் (பெ) பின்னிய கட்டில் (1316) *திருவாலத்தித் தட்டி 1ம் கச்சுக்கட்டில் 1ம்* (EI,vii,18.)

கச்சுக் கோரம் (பெ) ஒரு பாத்திரம் (1140) *வெள்ளிக் கச்சுகோரம் ஒன்றினால் இடை இருநூற்று இருபத்து நாற்கழஞ்சும்* (SII,vii,1004.)

கச்சையிட்டு (வி) ஆடை அணிந்து (1000) *நீராட்டு பள்ளிக்கு கொட்டுமவகள் பதினாறினு மேல் புக்கோரலகு கச்சையிட்டு ஐவர் கொட்டுவிது* (TAS,ii,p.173-207.)

கச்சோணம் (பெ) ஒரு பாத்திரம்(?) (928) *நிலக் கடக்காலால் ... முக்குறுணியும் கச்சோணமும்* (SII,xix,414; IPS,63.)

கச்சோலம் (பெ) சிறு பாத்திரம் (1014) *கச்சோலம் ஒன்று வெள்ளி இருபத்தொன் பதின் கழஞ்சேய்கால்* (SII,ii,46.)

கசம் (பெ) (= கயம்): நீர் நிலை (1048) *மேற் பார்கெல்லை கசத்துக்கு கிழக்கும் வடபார் கெல்லை ஆற்றுக் காலுக்கு தெற்கும்* (SII,viii,199.); (1123) *இன்நிலத்துக்குப் பாயக்கடவ கசம் பண்டோடு பழநடை நீர்பாயப் பெறுவதாகவும்* (SII,vi,434.)

கசு (பெ) கஃசு; ஒரு சிறிய எடை (1014) *சற்கரை முப்பலனெ கசரைக்கு நெல்லு இரு நாடுரியாழாக்கெ நாற் செவிடும்* (SII,ii,26.)

கஜபதி (பெ) யானைப் படைக்குத் தலைவன் (1012) *நரபதி அச்வபதி.....கஜபதி* (SII,vii,863.)

கஜம் (பெ) யானை (887) *அயிராவணமென்னு மஹாமதஜ்ம் கஜத் தீண்டி* (EI,xxxii,31b.)

கஞ்சி (பெ) சோற்றுக் கஞ்சி (960) *அரி கொண்டு கஞ்சியுஞ் செலுத்த* (TAS,iii,p.159-69.)

கஞ்சி தானம் (பெ) கோயில் ஊழியரில் ஒருவன் (1200) *ஒஸனம் யிரண்டு நட்டுவன் ஒன்று கஞ்சிதானம் ஒன்று நிமந்த்த படன் கரியான் ஒன்று* (EC,xv,Hn.186.)

கஞ்ஞிப் புடவை (பெ) கஞ்சிப் பசையில் தோய்த்த புடவை (1200) *செய்யு கீழியக்க மாவிது கஞ்ஞிப் புடவை என்று உடுக்குமது இழிவிது பவித்திர இட்டிருப்பிது* (TAS,iii,31-33.)

கஞலி (வி) நெருங்கி (1012) *கருப்பொலி மேகமுங் கடலுமெனக் கஞலி திருப்பலி சிநத்து* (SII,vii,863.)

கட்கம் (பெ) வாள் (1266) *அரிஆசனமும் முடியுங் கட்கமும் முழுமணியாரமும்* (IPS,366.)

கட்ட (வி) பிடுங்கிய (905) *களப்பாழரைக் களை கட்ட...கடுங்கோன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கட்டங்கரை பறிச்சுப்பட்டு (வி) ஓலைக் குலுக்கலில் பெயர் குறிப்பிடப்பட்டு (957) *பெருங்காவில் இளையசேத்தன் ஸ்ரீத$_{4}$ரன் கட்டங்கரை பறிச்சுப்பட்டு* (SII,xiii,165.)

கட்டணம் (பெ) கட்டிடம் (1144) *மாடக் குளக்கீழ் மதுரைக்கோயிற் கட்டணத்துப் பள்ளியறையில்* (SII,xiv,257.); (1249) *கூரைக்கட்டணங்களுக்கு இடும் வைக்கோலும்* (SII,vii,1039.)

கட்டளை (பெ) பொன் எடைக்கல் (880) *ஸபையார் கொண்ட தந்ம கட்டளையால் பொன்* (SII,xii,64.)

கட்டளை (பெ) நிலத்தீர்வைத் தரம் (1239) *மடக்கு ஊரிலே கூட்டங்களிலே சேரவும் பிறித்து கட்டளைக் கூட்டம் என்று செய்யக் கடவதல்லாததாகவும்* (SII,vi,58.)

கட்டளைக் கணக்கு (பெ) நிலத்தரங்களை எழுதும் கணக்கன் (1260) *திருநாமதால் வேறு பிறிந்த நிலத்துக்கு கட்டளைக்கணக்கு* (SII,viii,56.)

கட்டளைக் கல் (பெ) பொன் எடைக்கல் (997) *பொந் துளை நிறை த$_{4}$ந்ம கட்டளைக் கல்லால் முதல் முப்பத்து முக்கழஞ்சும்* (SII,i,146.)

கட்டாயம் (பெ) ஒரு வரி (1329) *காணிக்கை கட்டாயம் இத்தன்னையும் சந்த்$_{3}$ராதித்த வரையாக* (EC,xvii,Hr.23.)

கட்டி (வி) கட்டிடம் அமைத்து (1243) *இவர் செய்த காழிக்கற்பகம் குகை கட்டி மேய்ந்து* (SII,viii,205.)

கட்டி (வி) கோத்து (866) *இண்டையும் மாலையுங்கட்டி* (TAS,i,p.1-14.)

கட்டிக் கொடு (வி) பிணைத்துக் கொண்டு (1000) *திருமுரட்கயிற்றாற் கட்டி கொண்டாளுங் கருமஞ் சொன்னோம்* (SII,iv,167.)

கட்டிகை (பெ) செய்தி சொல்லுவார் பொருட்டு செலுத்தும் வரி (1387) *செக்குக்கடமை வெட்டிவரி கட்டிகை அவஸரம்* (EI,viii,31.)

கட்டிய (வி) பிணித்த (1000) *கொற்ற மன்னர் முடிக் கட்டிய முகைசேர் கழல் மூவாயிரவர்* (SII,iv,167.)

கட்டில் (பெ) அரியணை (888) *தென்னவன் மஹாதே$_{3}$வியார் திருநாற்கட்டிற்காலில்* (SII,v,684.)

கட்டிலேறு (வி) மணவினை செய் (961) *ஒரு ஆடுகுடுத்துக் கட்டிலேறுவோமாகவும்* (SII,vii,804.)

கட்டிவராகன் (பெ) ஒரு பொன் நாணயம் (1546) *கொண்டவீட்டுச் சீர்மையில் சேந்தலூரு கிறாமம் 1க்கு ரேகை கட்டிவரா்கன் 500* (TDI,v,71.)

கட்டிற்று (வி) பிணைத்தது (1014) *குற்றுடைவாள் ஆசுங் கண்டமும் மலரும் பொன் கட்டிற்று ஒன்று* (SII,ii,51.)

கட்டின (வி) செலுத்தின (1014) *இறை கட்டின நிலம்* (SII,ii,4.)

கட்டின (வி) பதித்த: கோத்த (897) *நயபாளம் 1 இதனிற் கட்டின வயிரம்* (SII,xiii,319.)

கட்டின (வி) இழைத்த (1018) *கற்கட்டின மோதிரமொன்று* (SII,vii,891.)

கட்டு (பெ) சரக்குக் கட்டு (1521) *கரைதுறை களிலே தொங்கு கப்பலுக்கு எற்றுகிற*

புடவைக் கட்டுக்குப் பணம் ஒன்றும் (SII,xvii,679.)

கட்டு (பெ) நிவந்தம் (1200) *எம்பெ....தே$_{3}$வர் கட்டிந கட்டுபடி இரட்ட மாதத்துகு திருவிளக்கு* (EC,ix,Bn.13.)

கட்டு (பெ) அணைக்கட்டு (1100) *குலோத்துங்க சோழ மாதமங்கலமுடையாந் தந்பேரால் வீம கட்டெந்று கட்டுவித்து* (EC,x,Ct.9.)

கட்டுக் குத்தகை (பெ) (= கட்டுக்குத்தொகை) (1420) *சந்திறாதித்தவரையும் கட்டுக்குத்தகை ஆகக் கொள்ளும் பணம் 10* (SII,viii,275.)

கட்டுக் குத்தொகை (பெ) நிலையான/மாறாத மொத்த வரி: (= நின்றிறை) (1374) *எப்பேற்பட்ட உபாதிகளும் உட்படக் கட்டுக்குத்தொகையாக இன்னிலத்துக்கு* (SII,i,72.)

கட்டுப்பண்ணி (வி) உறுதிபண்ணி (1541) *மற்றுமுள்ள பயிற்கு மிப்ரகாரந் தீர்ந்து சந்த்$_{3}$ராதித்$_{3}$யவரை நடக்கும் படியுங் கட்டுப்பண்ணிக் குடுத்தேன்* (SII,vii,21.)

கட்டுவதற்கு (வி) நிரப்புவதற்கு (1005) *தண்ணீர் கட்டுவதற்கும்* (SII,vii,34.)

கட்டுவறை சேலை (பெ) பருத்திச் சேலை (1547) *உறிக்கு பட்டு சேலை 100 கட்டுவறை சேலை 100க்கு ரேகை பொன் 10* (TDI,v,99.)

கட்டுவான் (பெ) (932) *கொடி ஏறிக் கட்டுவானுக்கு நெல்லு குறுணி* (SII,v,588.)

கட்டுவிச்சு (வி) அமைப்பித்து (1044) *ராஜராஜ வேளாந் பட்டந்தூரேரி கட்டுவிச்சு மூந்று தூம்பும் மிடுவித்து* (EC,ix,Ht.142.)

கட்டுவித்து (வி) கட்டச் செய்து (1100) *குலோத்துங்கசோழ மாதமங்கல முடையாந் தந் பேரால் வீம கட்டெந்று கட்டுவித்து* (EC,x,Ct.9.)

கட்டை (பெ) மரத்தின் வேர்ப்பாகம் (1004) *காடு வெட்டுவித்துக் கட்டை பறித்து* (SII,vii,440.)

கடக்கை (பெ) வயல் (955) *இவ்விரண்டு கடக்கை நிலத்தாலும் விஷூ இரண்டு* (SII,viii,572.)

கடகம் (பெ) கங்கணம் (1014) *ரத்ந கடகம் ஒன்றிற் கட்டின வயிரம் முப்பத்தாறும்* (SII,ii,93.)

கடகளிறு (பெ) மதங்கொண்ட யானை (1068) *வடகட லென வகுத்த வத்தானையைக் கடகளிறொன்றால்க் கலக்கி* (EI,xxi,38.)

கடந்தன (வி) தாண்டிச் சென்றன (1186) *கங்கர்கள் கருவரை யிடந்தான் புகக் கடந்தன* (SII,xii,263.)

கடந்திட்டு (வி) தாண்டிச் சென்று (771) *காவிரி யைக் கடந்திட்டு* (EI,xvii,16.)

கடந்து (வி) வென்று (771) *பாழிவாயமர் கடந்து* (EI,xvii,16.)

கடந்தோந் (பெ) கடந்து சென்றவன் (1179) *தெந் திசைக் காவிரிச் செழுநீர் கடந்தோந்* (EC,x,Kl.132.)

கடம் (பெ) குத்தகை: நிலவருவாய் (961) *கோழ் பற்றியும் பொதுவாளும் கடங்கொண்டு செலுத்தக் கடவர்* (TAS,viii,p.43-44.)

கடம் (பெ) பால்ல நிலவழி (800) *கடத்தேகினான் பின்* (EI,xiii,10.)

கடம்பு (பெ) ஒரு மரம் (831) *கடம்பு சூட்டாதிக் கோல் வளையை* (SII,xiv,43.)

கடமை (பெ) நிலவரி (811) *இந்நில கடமையில்* (SII,xiv,41.)

கடமை (பெ) பொறுப்பு (985) *வாரியரையும் கரணத்தானையுமே கடமை கொள்வதாக* (SII,iv,516.)

கடமைச் செலவு (பெ) வரிக்கு அளிக்கும் தானியம் முதலியன (1112) *அன்தராயம் உதவினாயகந் தச்சுக்காலாலேய் கடமைச்செலவு பெற ஆட்டு 150–திந் கல நெல்லு* (SII,vii,776.)

கடமைத் தட்டு (பெ) கடமை செலுத்துவதில் தட்டுப்பாடு (1124) *சிறிது நிலம் விற்றாகிலும் கடமைத்தட்டுப் போக்கறுக்க வேணுமெந்று மஹாஸபையோம் ஸம்மதித்து* (SII,viii,303.)

கடமைபட்டு (வி) கடமை செலுத்த வேண்டியதாய் (1148) *இவுடையார் ஆட்கொண்ட தேவர்*

கோயிலிலே கடமைபட்டு நிலைநில்லாதே ஓடிப் போன (SII,vii,944.)

கடல் (பெ) சமுத்திரம் (771) *படுகடன் முளைத்த பருதி போல* (EI,xvii,16.)

கடல் வட்டம் (பெ) கடல் சூழ்ந்த நிலம் (1135) *பள்ளி நீங்கினாற் கடல் வட்டம் னாடொறுந்தாங்கி எண்டிசையானை தண்டு விடை நிற்ப* (SII,iv,818.)

கடலிடம் (பெ) உலகம் (1012) *க$_3$ஜபதி கடலிடங் காவலன்* (SII,vii,863.)

கடவ (வி) கடன் பட்டுள்ள (1011) *யாங்கள் முன் கொண்டு கடவ பொன்* (SII,vii,152.)

கடவ (வி) வேண்டிய (835) *காட்டக் கடவ நந்தி எரித்திருவமிர்துள்ளிடு* (TDI,i,4.)

கடவந் (பெ) கடமைப்பட்டவன் (996) *பொருள் மாவறுதிப் பொருள்ச் சிலவோலைக் காட்டக் கடவந் னல்லாதாநாகவும்* (SII,v,669.)

கடவரை (பெ) யானை (1000) *கடவரை மேகமுழக்குஞ் சிராமலை கண்ட* (SII,iv,167.)

கடவார் (பெ) செய்பவர் (1001) *வெறுங்காய்க்கும் நிவந்தங் கடவார்க்கு காசு கல்லால் சிலவான பொன்* (SII,xvii,222.)

கடவார் (வி) கடமைப்பட்டுள்ளார் (771) *செய்விக்கக் கடவார்* (SII,v,405.)

கடவாள் (பெ) கூரிய கத்தி (1012) *பாட்டொலிக் கருங்கைக் கடையர் பெருங்கைக் கடவாள் பசுந்தாட்டீயுஞ்* (SII,vii,863.)

கடவியர் (வி) பொறுப்பானவர் (844) *குடாதுவிடில் இரட்டி கடவியராவது* (TAS,ii,p.13-14.)

கடவியருளின (வி) ஆணையிட்ட (1570) *நமுடைய பேற்கு சுகாமி வீரநரசிங்கராய நாயக்கரால் தர கடவியருளின காணிக்கைக்கு குடுக்க* (IPS,726.)

கடவுள் (பெ) இறைவன் (905) *செங்கதிர்க் கடவுள் வழிவந்த* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கடவுளர் (பெ) முனிவர் (1279) *கானிற் பயிலுங் கடவுளர் தமக்கு வேனிற் தென்றல் வியன் பெருங்கவரி* (SII,viii,69.)

கடவேச$_0$ குலம் (பெ) பல்லவர் குலம் (796) *கடவேச$_0$குல ஹிரண்ய வர்ம மஹரஜ* (SII,iv,135; MASI,lxiii,p.54-59.)

கடவேன் (வி) கடமைப்பட்டுள்ளேன் (813) *கைக் கொண்டு கடவேனாக* (SII,vii,931.)

கடவோம் (வி) கடமைப்பட்டுள்ளோம் (863) *இப்பொன் பதினைங் கழஞ்சுங் கொண்டு கடவோம்* (EI,vii,20a.)

கடற்கரை (பெ) (1090) *கீழ்பாற் கெல்லை கடற்கரையில் மணற் குன்றுட்படமேற்கும்* (EI,xxii,35.)

கடற்காணி (பெ) கடல் பகுதி உரிமை (1258) *எங்கள் கடற்காணியான தேவர் உடையார் திருமறைக்காடுடையார்* (SII,xvii,545.)

கடற்றானை (பெ) கடல் போன்ற பெரிய சேனை (771) *வில்வேலிக் கடற்றானையை* (EI,xvii,16.)

கடற்றிரைகள் (பெ) கடலலைகள் (905) *போர்மிக்கெழுந்த கடற்றிரைகள் சென்று* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கடறு (பெ) சாய்வுப் பகுதி (550) *ஏந்தலேரியின் கீழைக்கடற்றின் மேற்கு மோமைக்கொல்லை* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

கடனீர் (பெ) சமுத்திர நீர் (800) *கல்லென்ன வொல்லென கடனீர் மாகங் கொண்டடெறிவர்* (EI,xiii,10.)

கடாம் கலசம் (பெ) ஒரு வகைக் கலம் (976) *கற்ச்சட்டியும் குடமும் கடாம் கலசமும்* (SII,xix,169.)

கடாரம் (பெ) கொப்பரை (886) *தடமிரண்டு கடாரம் ஒன்று* (SII,xiii,255.)

கடாரம் (பெ) தாமிரம் அல்லது செம்பு (963) *நிசதிப்படி கடாரத்து சூல உழக்கினால் அட்டக் கடவநெய் ஆழாக்கு* (SII,v,451.)

கடாவி (வி) செலுத்தி (1061) *கன்னாடகர் மேற்கூற்றெனக் கடாவித் தெரிகணை முதலியர்* (SII,v,647.)

கடி (உ) காவல் (800) *செம்பொன் மாறிக் கடி அரணம்* (EI,xiii,10.)

கடி (உ) மிகுதி (862) *கடி ஞாறு கவின் அலங்கல்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கடிகை (பெ) பிராமணர் குழு: வடமொழி கல்விக் கூடம் (793) *கடிகை எழாஇருவரையும்* (SII,iii,42.)

கடிகை (பெ) ஒரு பாத்திரம்(?) (982) *கூத்தன் வைத்த அன்தோளகத்தண்டும் பிடாயும் கடிகையும் இது கொடுபோயேறினார்* (SII,xix,303.)

கடிகைக் களம் (பெ) நேரம் கணிக்கும் இடம் (?) (938) *கடிகைக் களத்துக் கோலால் நானூற்றுக்கு* (SII,viii,10.)

கடிகைக் கோல் (பெ) ஒரு நில அளவு கோல் (970) *மூன்று பட்டி நிலமும் கடிகைக் கோலால் அளந்து* (TDI,i,8.)

கடிகைத் தாவளம் (பெ) காவலோடு கூடிய நிலையான சந்தை (1050) *கடிகைத் தாவளமும் தாவளத்திருந்து ஸமையத் தன்மை இனிது நடாதிருக்கின்ற* (AVNM,2,p.6-8)

கடிகை மாராயன் (பெ) கோயில் கடிகையானுக்குக் கொடுக்கப்பட்ட பட்டம் (1014) *திருவாய்க்கேழ்வி ஒன்றுக்குக் குமரன் ஜயமானனான மும்மடிசோழக் கடிகை மாராயன்* (SII,ii,66.)

கடிகையன் (பெ) காலக்குறிப்பு சொல்பவன்; கணி (1014) *திருவாக்கேழ்வித்தஞ்சுடைக் கடிகையன் தனக்கும்* (SII,vii,863.)

கடிகையார் (பெ) நாள், கோள் முதலிய காலக்குறிப்பு அறிவிப்பவர் (1014) *திருக்கொடியேற்று நான்று திருப்பறையறைவு கேட்பிக்குங் கடிகையார் ஐவற்கு* (SII,ii,25.)

கடித்து (வி) பல்லாற் கடித்து (614) *நாய் இரு கள்ளனைக் கடித்துக் காத்திருந்தவாறு* (CHHS,1971/59.)

கடிதிழைத்த (வி) விரைந்து செய்த (1232) *பொறாது கடிதிழைத்த உட்பகையும் புறப்பகையுமறக் கடிந்து* (SII,iv,424.)

கடிந்து (வி) போக்கி (700) *தா$_3$நங்களாற் கலி கடிந்து* (EI,xxxviii,4.)

கடிந்தொறுப்பார் (வி) கண்டிப்பார் (1171) *கைத்தாயரேய் கடிந்தொறுப்பார் இயற்புலவரேய் பொருள் வைப்பார்* (SII,xvii,592.)

கடிமுரைசு (பெ) வீர முரசு (785) *கடிமுரைசு தன்பியரறைய* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

கடியும் (வி) நீக்கும் (966) *கடற்பக்கத்தாரிருள் கடியும்* (SII,xiv,87.)

கடீய (பெ) கடுமையுள்ளன; வாசமுள்ளன (1171) *மாவேய் வடுப்படுவன மாமலரேய் கடீயவாயின வருபுனலேய் சிறைப்படுவன* (SII,xvii,592.)

கடு (இ) மிக்க (771) *கடுவிசையால் எதிர்ந்த வரை* (EI,xvii,16.)

கடுக்கின (வி) முலாம்பூசின (1009) *செம்பில் மேற் பொந் கடுக்கின பாவைக்கண்ணாடியில் ஆடுகிற பாவை* (SII,v,521.)

கடுக்குகைய்க்கு (வி) முலாம் பூசற்கு (1202) *திருவடி நிலைக்கு மே கடுக்குகைய்க்கு பத்துக்குப் போத செம்பொன் அறுகழஞ்சு* (SII,viii,151.)

கடுகு (பெ) ஒரு உணவுப் பொருள் (887) *சிறு கடுகமிது* (SII,xiv,16a.)

கடுங்குலைஞர் (பெ) வேடர் (1134) *புள்ளுமாவுமுடன் புணந்து கடுங்குலைஞர் குரம்பை நிழலிடும்பையின்றி* (SII,v,645.)

கடுத்து (வி) மிகுதியாகி(?) (941) *பொன் சுட்டு வெட்டிச் சூடுகடுத்து தீப்போக்கி* (SII,viii,529.)

கடு நெல்லி (பெ) ஒருவகை நெல்லிக்காய் (1300) *கடுநெல்லி தான்றிப் பொதி ஒன்றுக்குக் காசு ஒன்றும்* (SII,viii,442.)

கடும் (பெ) மிக்க (905) *கதிரார் கடுஞ்சுடரிலை வேல்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கடும் (வி) விரைந்து செல்லும் (771) *கடும்பரிஉங் கருங்களிறும்* (EI,xvii,16.)

கடு முரண் (பெ) மிகுந்த வலிமை (1028) *தொடு கடற்காவற் கடுமுரட் கடாரமு மாப்பொரு தண்டாற் கொண்ட* (SII,v,464.)

கடு விசை (பெ) மிக்க விரைவு (771) *கடு விசையாலெதிர்ந்தவரை* (EI,xvii,16.)

கடை (பெ) கடைசி (இடம்) (905) *விளைகழனி எரியந்தை வடகடைக் கொம்பிற்கும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கடை (பெ) கீழ் மக்கள் (1000) *கடையகத்துச் சென்று கானிமித்து நின்று* (SII,iv,167.)

கடை (பெ) பொருள்கள் விற்குமிடம் (864) *கடை ஏறி வாணிகம் செய்யப் பெறுவாராக* (MCCM,viii,p.98-104.)

கடை கடைசி (தரம்) (1007) *நீர்நிலத்திலே தலை நடுவு கடை கலக்க* (IPS,85.)

கடைக்கண்டு (வி) மேற்பார்த்து: கண் காணித்து (879) *ஏரிவாரியப் பெரு மக்களே கடைக்கண்டு* (SII,vi,294.)

கடைக்காட்சி (பெ) கண்காணித்தல் (886) *சிற்றம்பலத்துப் பெருமக்கள் கடைக்காட்சியாக* (SII,xii,104.)

கடைக்காண்கின்ற (வி) மேற்பார்க்கின்ற (1009) *இத்தேவர் ஸ்ரீகாரியங் கடைக்காண்கின்ற வீரசோழ வணுக்கன்* (SII,vii,988.)

கடைக்காண்பார் (வி) மேற்பார்வை செய்வார் (886) *ஊட்டுவிப்பதாகவிப் பெருமக்கள் கடைக்காண்பாரானார்* (SII,xii,104.)

கடைக்காண (வி) மேற்பார்க்க (999) *தேவற்க்கு ஸ்ரீ காரியம் கடைக் காண கடவ கரண பெருமக்களே* (SII,vi,267.)

கடைக்காணவும் (வி) மேற்பார்வை செய்யவும் (986) *இக்கச்சிப்பேட்டு இரண்டு சேரி இத்தேவருடைய ஸ்ரீ காரியங் கடைக்காணவும் அருளிச் செய்வதென்று* (SII,iii,128.)

கடைக்காணும் (வி) மேற்பார்க்கும் (985) *பட்டவ்ருத்தியாக வைத்த நிலம் கடைக் காணும் பரிசாவது* (SII,vi,322.)

கடைக்கூட்ட (வி) இறுதி வசூல் செய்ய (875) *இப்பொன் கடைக்கூட்ட வந்தாற்கு* (SII,xii,99.)

கடைக்கூட்டப் பெற்றார் (வி) கண்காணித்துச் செய்வார் (865) *இது நந்தில் பன்மாயேச்வரர் கடைக்கூட்டப் பெற்றார்* (SII,xii,55.)

கடைக்கூட்டர் (பெ) கண்காணி செய்வார் என்ற அரசு அலுவலர் (1445) *தேவமண்டல ஊர்கள் சீவிதகாரர் அதிகாரி கடைக்கூட்டர் தானத்தார் குத்தகை கொள்ளுகையாலும்* (SII,xvii,736.)

கடைக்கூட்டான் சோடி முகம்பார்வை (பெ) கடைக்கூட்டு அலுவலரைக் காணும்போது செலுத்தும் வரிகள் (1427) *தேவமண்டலங் களில் அதிகாரிசோடி முகம்பார்வையும் கடைக்கூட்டான்சோடி முகம்பார்வையும் அங்கசாலைகள் சம்படம்* (SII,xvii,736)

கடைக்கூட்டிலக்கை (பெ) கடைக்கூட்டு அலுவலர் பொருட்டு வாங்கும் வரி (1262) *கைக்காணி துலாபாரவரி கூற்றிலக்கை கடைக்கூட்டிலக்கை சிறை வினியோகம்* (SII,viii,753.)

கடைக்கூட்டு சோடி (பெ) கடைக்கூட்டு அலுவலர் பொருட்டுச் செலுத்தும் வரி (1564) *யிந்தபடிக்கு அரைமனைசோடி அதிகாரி கடைக்கூட்டு சோடி புறவகையும்* (SII,xvii,581)

கடை கட்டி கடை வைத்து (1168) *குடியிருந்து கடைகட்டிப் பரிமாறி வருகிற அவனிநாராயணப் பெருந்தெருவிற் செக்கார் ஒழுக்கைக்கு மேற்க்கும்* (SII,xvii,588.)

கடை கோப்பு (பெ) ஏரியின் கோடி (1524) *சிற்றேரி கடை கோப்பிற் போட்ட எல்லைக் கல்லுக்கு* (SII,xvii,684a.)

கடைத்தலை (பெ) கடைசியில் (1136) *இரண்டாஞ் சதுரத்துத் தெற்கில் எட்டில் கடைத்தலை மேலை நெடும் பாடகத்தில்* (SII,vii,477.)

கடைத் தெரு (பெ) வாணிகத்தெரு (873) *எங்களூர் கடைத்தெருவில்* (SII,iii,90.)

கடைத் தேவன் (பெ) சிறு தெய்வம் (1000) *சிராமலைப் பாடிருந்துங் கடைத் தேவனைத் தொழுமோ* (SII,iv,167.)

கடைத் தொழில் (பெ) பதக்கத்தில் ஓர் உறுப்பு (1191) *ஏகாவல்லி வடம் ஒன்றினால் நெல்லிக் காய்முத்து நூறும் கடைத்தொழில் இரண்டும் இவை கோத்த நூலும் உள்ப்பட்ட* (SII,viii,121.)

கடைந்து (வி) மத்தாற் கடைந்து (905) *கடல்கடைந்தமிர்து கொண்டு* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கடை நிலங்கள் (பெ) மேட்டு நிலங்கள் (1086) *நிலங்கள் பலதடிகளாயும் கடைநிலங்களாய் நீர் பாயாதேய் போகம் வாராதேய் ஒழிந்தமையில்* (SII,vii,1032.)

கடை நீர் (பெ) கடைசி முறையாகப் பாயும் நீர் (984) *இன்னிலத்துக்கு எங்கள் ஏரியில் தலைநீரும் கடைநீரும் பாச்சிக் கொள்ள* (SII,iii,141.)

கடைப் பாட்டம் (பெ) கடைகளின் மீதான வரி (1189) *உடையார் ஊருடையார் பெருமாளுக்கு கொள்ளுங் கடைப்பாட்டத்தால் உள்ள இறை நீக்கி* (SII,viii,288.)

கடைப்பாடு (பெ) நிலங்கள் கிடக்கை (1254) *இரண்டு கடைப்பாட்டாலும் கொல்லையும் குளமும் விளைநிலமும் உள்பட வந்த நிலம்* (SII,viii,716.)

கடைப்பி ஓலை (பெ) அரசனின் இறுதி ஆணை கொண்ட ஓலை(?) (500) *இது கடைப்பி ஓலை காற் கண்டெழுதிக் கொடுத்தேன்* (AVNM,1,p.67-69)

கடைபோகிற வாய்க்கால் குளம் நிரம்பிய பின் மிகுதியாக வழிந்தோடும் நீர் செல்லும் வாய்க்கால் (1275) *ஆம்பொற்க்குடு குளகரைக்கு மேற்க்கு அக்குளத்தில் கடைபோகிற வாய்க்காலுக்கு* (JOR,xx,Appx.,p.12-13.)

கடை யடைக்காய் (பெ) விற்பனைப் பாக்கின் மீது செலுத்தும் வரி (789) *கடைஅடைக்காயும் புதாநாழியும்* (SII,ii,99.)

கடையாக (பெ) இறுதியாக (864) *கருப்பூரந்தலையாக செருப்பு கடையாக* (MCCM,viii,p.98-104.)

கடையர் (பெ) உழுகுடிகளில் ஒரு வகை (1012) *கருங்கைக் கடையர் பெருங்கைக் கடவாள்* (SII,vii,863.)

கடையாவார்கள் (பெ) இழிந்தோர் (1344) *நாய் காக்கை யுள்ளிட்ட விலங்கு சாதிக்கும் கடையாவார்கள் ஆக* (UCR,xviii,p.16-23.)

கடையிறை (பெ) கடைகள் மீதான வரி (1211) *தறியிறை காசும் கடையிறையு கந்நாரிறையும்* (SII,vii,912.)

கடையீடு (பெ) அதிகார ஓலை (1001) *உடையார் படை கொங்கவாளாரை விடையிட்டுக் கடையீடுங் குடுத்து இராஜராஜ மாராயர் வரக்காட்ட* (SII,v,723.)

கடைவாயில் (பெ) கடைசி வாசல் (916) *கீழைக்கடைவாயில் நின்று கிழக்கு நோக்கிப் போன பெருவழிக்கு வடக்கு* (SII,xix,48.)

கடைவீட்டு வாய்க்கால் (பெ) (= கடை போகிற வாய்க்கால்?) (1115) *மேல்பார்க் கெல்லை தந்மல் குளத்து கடை வீட்டு வாய்க்காலுக்கும் வயலுக்கும் கிழக்கும்* (IPS,228.)

கடை அட்டிகை (பெ) ஒரு நகை (1513) *திரு வாபரணங்கள் பெயர் விபறம் உடிதாரம் 1க்கு முகப்பு 5 சிறு அட்டிகை 4 கடை அட்டிகை 2 னடு அட்டிகை 6* (TDI,iii,61.)

கடை ஈடு (பெ) இறுதி உத்தரவு (1116) *மண்டல முதலிகள் நுளம்பாதராயர் கடை ஈடு படியால் நாடு கூறு செய்கிற அணுக்க விழுப்பரையர்* (IPS,126.)

கடை ஏறி கடை வைத்து (864) *கடை ஏறி வாணிகம் செய்யப் பெறுவாராக* (MCCM,viii,p.98-104.)

கண் (பெ) பார்க்கும் உறுப்பு (785) *அரிநெடுங் கண்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

கண் (பெ) இடம் (771) *பெருங்கண் ஞாலம்* (EI,xvii,16.)

கண் (வி) சிறு வாய்க்கால் (950) *சூழ்புனலணி கண்ணிற்காய் பண்ணை தன்னைத் துன்ன வந்து* (TASSI,1962-65,p.32-52.)

கண் (இ) ஏழாம் வேற்றுமை உருபு (686) *யாண்டு*

பதினேழ்ழாவதன்கட் கனை ஊர் (EI,vii,4(ii).)

கண்காட்டிகள் (பெ) குருடர்களுக்கு வழிகாட்டிகள் (892) *கண்காட்டிகளிருவர்க்கும்* (SII,xiii,295.)

கண்காணி (பெ) மேற்பார்வை (768) *சவையார் கண்காணியாகச் செலுத்துவதாக* (SII,xiv,27.)

கண்காணிக் கணக்கு (பெ) மேல்கணக்கு எழுதுவோன் (976) *திருவிடைமருதுடை யாருக்குக் கண்காணிக் கணக்கு எழுதுகின்ற திருநாவுக்கரையன்* (SII,xix,162.)

கண்காணிக் கரணத்தாண் (பெ) தலைமைக் கணக்கன் (1010) *கண்காணிக் கரணத்தாந் நல்லுழான் ஏறன் இராய சிங்கனும் இருந்து* (SII,viii,234.)

கண்காணி கணக்க வரி (பெ) மேற்பார்வை செய்யும் கணக்கர் பொருட்டு வாங்கும் வரி (1243) *பாடிகாவல் கண்காணிகணக்கவரி எடுத்துக்கொட்டி அரிமுக்கை உள்ளிட்ட நெல்லாயங்களும்* (SII,i,64.)

கண்காணி கணக்கிலக்கை (பெ) கணக்கு மேற்பார்வையாளன் முகாம் தொடர்பாகச் செலுத்தும் வரி (1472) *வயலுக்குண்டான சுவந்திரங்கள் கண்காணி கணக்கிலக்கை ... ... பொதுமக்கள்பேறும் யிட்டு* (IPS,758)

கண்காணித் தட்டான்மை (வி) தலைமைத் தட்டான் தொழில் (1014) *கண்காணித் தட்டான்மை செய்ய ஓராளிட்டுப் பணி செய்வித்துக் கொள்ளப் பெறுவானாக* (SII,ii,66.)

கண்கூலி (பெ) ஒரு வரி (1300) *விடைப்பேர் மாதப்படி வட்டங் கண்கூலி அளப்பன* (SII,viii,313.)

கண் சிவந்து (வி) கோபித்து (921) *விழித் தெதிர்ந்த வீரர் கவந்தமாடக் கண் சிவந்தும்* (SII,iii,206a.)

கண் சோடு (பெ) ஒரு நகை (1533) *பொற்சோடு 2 நிச்சள் கண்சோடு 1 பொன் தானிக்காய் 1க்கு தூக்கம் 10* (TDI,iv,16.)

கண்ட (வி) உண்டாக்கின (886) *ஏரிக்குக் கண்ட ஆற்றுக்கால்* (EI,xxxiii,2.)

கண்டகம் (பெ) ஒரு நில அளவு (1034) *இருமடிச் சோழராஜர் குடங்கை விட்ட நெல் விளை பூமி நாற்கண்டகம்* (EC,x,Bg.7.)

கண்டகர் (பெ) கொடியவர் (1012) *கேளா தேத்தொழில் முனைந்த கண்டகர் கரிசறத் துரிசற* (SII,vii,863.)

கண்ட சற்கரை (பெ) கட்டிச்சர்க்கரை (1127) *தயிர் தூணி கண்ட சற்கரை முக்காசும்* (SII,iii,80.)

கண்டத் துடர் (பெ) ஒரு நகை (1014) *அடுத்து விளக்கின கண்டத்துடர் ஒன்று பொன் அறுபத்து இரு கழஞ்சு* (SII,ii,2.)

கண்ட நாண் (பெ) ஒரு கழுத்து நகை (1014) *கண்டநாண் ஒன்றில் உருத்$_3$ராக்ஷம் ஒன்றும்* (SII,ii,47.)

கண்டக நிஷ்டுரந் (பெ) கெட்டவர்களை அழிப்பவன் (771) *க்ருபாலயந் க்ருதபதா$_3$நந் கலிப்பகை கண்டக நிஷ்டுரந்* (EI,xvii,16.)

கண்டப் படை (பெ) கோயில் கட்டிடத்தின் ஓர் உறுப்பு (1015) *இதிற் குறை சதுஷ்கிகையில் தென் சதுரத்து உத்திரத்தின் கீழ்க் கண்டப் படையில் வெட்டிச்சு* (SII,ii,8.)

கண்டப் பலகை (பெ) ஒரு நகை (1009) *தாலி இருபத்தேழும் கண்டப்பலகை இரண்டும் உட்பட* (SII,v,521.)

கண்டம் (பெ) கோயில் கட்டிடத்தில் ஒரு பகுதி (932) *பட்டிகை–இலுங் கண்டத்திலும் இதன் கீழைக் குமுதத்திலும்* (SII,v,588.)

கண்டம் (பெ) துண்டு வயல் (923) *திரு வுண்ணாழிகைப் புறத்து வடகண்டத்து எங்கள் இரண்டு மாவும் தென் கண்டத்து மேற்கடைய ஒரு மாவும்* (SII,iii,123; SII,xix,392.)

கண்டம் (பெ) நாடு போன்ற ஒரு சிறு நிலப்பிரிவு (1014) *இந்நாட்டு வெண்கோன்குடிக் கண்டத்து வெண்கோன் குடி* (SII,ii,5.)

கண்டம் (பெ) (1238) *நிலம் ஒரு மாவும் நீக்கி எழுமா நிலம் கண்டஞ் சேர விட்டு திருச்சூலக்கல் நாட்டிக் குடுத்து* (IPS,327.)

கண்டமாலை (பெ) ஒரு நகை (1453) *தமக்கு நாம் ஏறும் பல்லக்கும் நாம் இருக்குங் குடையும் நாம் பூணும் கண்ட மாலை ஆபரணங்களும்* (CHEN,v,p.437-41.)

கண்டமுதல் (பெ) கண்கூடான நில விளைச்சல் (1264) *பார்த்துக்கண்ட முதலுக்கு அகளங்க நாடாழ்வார்களுக்கு* (SII,iv,435.)

கண்டர் (பெ) வீரர் (870) *அமரபு$_4$ஜங்கன் முப்புளியான கண்டருள் கண்டப் பல்லவரையன்* (SII,xix,163.)

கண்டருளா நிற்க (வி) பார்த்திருக்க (1119) *தலைக்கோலியை ஆட்டங் கண்டருளா நிற்க* (SII,xvii,606.)

கண்டழிவு (பெ) செலவு (956) *பங்குனி உத்திரத்திருவிழாவுக்குக் கண்டழிவாகவும்* (SII,xiv,86.)

கண்டன் (பெ) வீரன் (1012) *திண்டிறற் கண்டன்* (SII,vii,863.)

கண்டனன் (வி) அமைத்தான் (862) *அழியாவகையாற் கண்டனனே* (SII,xiv,45.)

கண்ட$_3$கசோ$_0$த$_4$நை (பெ) குற்றம் கடிதல் (785) *கண்ட$_3$கசோ$_0$த$_4$நை தான் செய்து* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

கண்ட$_3$ழி (பெ) ஐந்நூற்றுவர் வணிகர்கள் தம் குலமுதல்வராகக் கருதிய தெய்வங்களுள் ஒன்று (1050) *ஸ்ரீ வாஸுதே$_3$வ கண்ட$_3$ழி மூலபத்திரோற்பவ* (AVNM,2,p.6-8)

கண்டாயம் (பெ) ஒரு வரி (1346) *மேற் பொன் காணிக்கை கண்டாயம் தெண்ட முண்டிகை தறியிறை தட்டார்ப்பாட்டம் ஆசுவக் கடமை எப்பேர்ப்பட்ட பலவரியும்* (EC,x,Ct.90.)

கண்டார் (பெ) படைத்தவர் (805) *ஸ்ரீ கண்டார் காணாவுலகத்திற் காதல் செய்து நில்லாதேய்* (SII,xii,40; EI,xi,15.)

கண்டால் (வி) பார்த்தது (800) *செந்தீத்தாது கண்டாலன்ன* (EI,xiii,10.)

கண்டான் (வி) உண்டாக்கினான் (700) *கண்டான் சரமிக்க வெஞ்சிலையான் சத்துருமல்லேச்$_0$வ ராலையம்* (EI,xii,27; SII,xii,10-11.)

கண்டி (பெ) ஒரு நகை (1000) *வெள்ளித் தளியையும் மாணிக்கக் கண்டியும்* (TAS,ii,p.173-207.)

கண்டிகை (பெ) சபதமிடும் கங்கணம் (1069) *சோமீச்$_0$வரந் கட்டிய கண்டிகை அவிழ்ப்பதன் முந்நம் கம்பிலி சுட்டு* (SII,ii,83.)

கண்டிகை (பெ) ஒரு நகை (1014) *கண்டிகை உருத்$_3$ராக்ஷம் ஒன்றும் சூரி ஒன்றும் உட்பட* (SII,iii,83.)

கண்டிலாமை (வி) தொலைந்து போனமை (985) *இக்கைய்யெழுத்து இரண்டும் கண்டிலாமையால் கண்டபொழுது சாவாக ஒட்டிக்குடுத்தேன்* (SII,xiii,64.)

கண்டு (பெ) பாசிமணி (1014) *புல்லிகை நாண் ஒன்றிற் கட்டின கண்டு ஒன்று* (SII,ii,93.)

கண்டு (வி) பார்த்து (550) *திருமுகங்கண்டு தொழுது* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

கண்டு (வி) உண்டாக்கி (900) *திருமுகங்கண்டு தூம்பு இடுவித்தார்* (ARE,1934-35,p.75.)

கண்டுகம் (பெ) ஒரு நில அளவு (1008) *நிசதம் இருநாழி அரிசி திருவமிர்துக் குடுத்த நிலம் முக்கண்டுகம்* (EC,ix,Cp.128.)

கண்டு காட்சி (பெ) கண்காணிப்பு: மேற்பார்வை (992) *தே$_3$வர்கந்மிகள் கண்டு காட்சி யாவதாகவும்* (SII,xiii,170.)

கண்டு காழ்ச்சி (பெ) (= கண்டு காட்சி) (992) *இன்நிலம் நிவந்தஞ் செய்த படி கண்டு காழ்ச்சியாந நிலத்தில்* (SII,xiii,170.)

கண்டுகொண்டு (வி) காப்பாற்றி (891) *இந்நூறாடுங் கண்டு கொண்டு* (SII,v,686.)

கண்டுகொள்க (வி) அறிந்து கொள்க (932) *வைய்காசித் திருவிழாப்புறம் வெட்டினபடி கண்டு கொள்க* (SII,v,588.)

கண்டுகொள்விது (வி) மேற்பார்த்துக் கொள்வார்களாக (998) *கணத்தாருஞ் சாந்தி செய்யுமவளுங் கண்டு கொள்விது* (TAS,v,p.178-80; TAS,ii,p.40.)

கண்டுழவு (பெ) (குத்தகைதாரர் இல்லாமல்) நேரடி வேளாண்மை செய்தல் (1541) *வடகரை அப்பனோடை நம் கண்டுழவில் னாம் நம்மை ஆராதனை செய்யும் பேர்க்கு* (SII,v,750.)

கண்டை (பெ) ஒரு வாத்தியக் கருவி (1009) *மத்தளம் எட்டும் தாளம் ஒன்றும் கரடிகை யொன்றும் கண்டை யாறும் திமிலை யொன்றும்* (CHEN,xxi,p.425-28.)

கண்டோர் (பெ) பார்த்தவர்கள் (862) *கண்டோர் மருளுங் காமரு விழுச்சீர்* (SII,xiv,45.)

கண்ணப்பன் (பெ) கண்ணப்ப நாயனார் (1000) *செம் மனத்துக் கண்ணப்பனுக்கருள் செய்த* (SII,iv,167.)

கண்ணம்பு (பெ) கண்ணாகிய அம்பு (785) *அரவிந்த$_3$முக$_3$த்திளையவரரி நெடுகண் ணம்புகளாற் பொர* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

கண்ணாடி (பெ) பளிங்கு (1009) *செம்பில் மேற் பொந் கடுக்கின பாவைக் கண்ணாடியில் ஆடுகிற பாவை ஒன்று* (SII,v,521.)

கண்ணாலக் காணம் (பெ) கல்யாணத்துக்குக்காகச் செலுத்தும் வரி (789) *கண்ணாலக் காணமும் ஊரெட்டும்* (SII,ii,99.)

கண்ணாறு (பெ) சிறு பாசன வாய்க்கால் (877) *ஒன்பதாங் கண்ணாற்று முதற் சதுக்கத்து* (SII,vi,287.)

கண்ணாறுகள் (பெ) கிளைக்கால்கள் (1400) *குளங்கள் ஏந்தல்கள் ஆற்றுக்கால் கண்ணாறுகள் வாய்க்கால்கள் உள்ளிட்ட ஸமஸ்த ப்ராப்திகளும்* (SII,vii,936.)

கண்ணி (பெ) பூமாலை (771) *நறுங்கண்ணிக் க$_3$ங்க$_3$ராஜனது* (EI,xvii,16.)

கண்ணிக்கால் (பெ) கிளை வாய்க்கால் (1076) *வாய்க்காலுக்கு வடக்கும் மேல்பார்க்கெல்லை கண்ணிக்காலுக்கு கிழக்கும்* (SII,vii,137.)

கண்ணியர் (பெ) பெண்கள்(?) (1068) *இரட்டரைக் கவர்ந்த கண்ணியர் களிற்றொடுங் கட்டிப் பண்ணப் பிடியொடு* (EI,xxi,38.)

கண்ணீட்டுக்காணம் (பெ) ஒரு வரி (765) *கண்ணீட்டுக் காணமும் கால்கோட்டுக் காணமும்* (EI,xxxvi,20.)

கண்ணுதல் (பெ) சிவபெருமான் (1012) *முன் னூற்றுக் கலத்தினில் மற்றக் கண்ணுதற்காக* (SII,vii,863.)

கண்படுத்த (வி) தூங்கிய (905) *கண்படுத்த கார் வண்ணன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கண்பு (பெ) ஒரு வகை புஞ்செய் தானியம் (1481) *புஞ்செய் வரகு சாமை கண்புக்கு ஆறிலொன்றும்* (IPS,820.)

கண்மட்ட வரி (பெ) நாணயச்சாலை பொருட்டான ஒரு வரி (1341) *செட்டிகள் வாணிகர் சேனையங்காடிகள் இவர்கள் பேற்கடமை கண்மட்டவரி கருவூலவரி* (SII,vii,109.)

கண்மடை (பெ) சிறிய மடை (833) *ஆங்கதன் கண்மடை தன்னொடு வாங்கமைந்த பத்தன் மடையும்* (SII,xiv,44.)

கண்மணி (பெ) ஓர் அணி (1017) *இட்ட பொன்னால் பட்டங்களும் பொற்பூக்களும் கண்மணிகளும் நெரிஞ்சிப் பூக்களும்* (SII,v,1413.)

கண்மாலை (பெ) கம்மாளர் மீதான ஒரு வரி (1265) *ஆள்வரி சுற்றாயக்காசு வால் மஞ்சாடி கண்மாலை நாவிசர் வண்ணார்கற்காசு உள்ளிட்ட கடமைகளும்* (SII,xii,221.)

கண்மாளர் (பெ) தச்சர், கொல்லர், தட்டார், கன்னார் ஆகிய தொழில் சாதியினர் (1100) *உடந்கூட்டத்து வீரசோழ விச்$_0$வகமாவும் கண்மாளரும்* (IPS,766.)

கண்வாய் (பெ) நீர்போகும் மடை (1163) *காடனேரிக் கண்வாய்க்கு வடக்குத் தேர்க்குளத்தில் நின்றும்* (TAS,vi,131.)

கணக்க பண்டாரம் (பெ) கருவூலக் கணக்கு (967) *கணக்க பண்டாரஞ் செய்கின்ற சேரலை விரு...பெரியானுக்கு* (SII,xiv,95; EI,xxv,6.)

கணக்க பேறு (பெ) கணக்கர் பொருட்டு வாங்கும் ஒரு வரி (1222) *அந்தராயம் நாடேன்றவரி வாரமாக்கலம் கணக்கபேறும் மற்றும் எப்பேற்பட்ட சில் ஆய கடமை உள்ளவயிற்றுக்கும்* (IPS,250.)

கணக்க மிகுதி (பெ) (= கணக்க பேறு?) (1260) *கண்காணி எடுத்துக்கொட்டி அரிமுக்கை கணக்கமிகுதி உள்பட பல நெல்லாயங்களும்* (SII,xii,202.)

கணக்க மேர்வை (பெ) (= கணக்க பேறு) (1333) *காணிக்கை வேண்டுகோள்வரி மலைஅமஞ்சி குதிரைவரி கணக்கமேர்வை நாட்டு வரி நிலைக்காணி.... டார் வைத்த காணிக்கை* (TDI,i,100.)

கணக்கர் (பெ) கணக்கு எழுதுபவர் (900) *திருநந்திக்கரைப் பெருமக்களுந் தளியாள்வாநுங் கணக்கருங் கூடி மாடக்கோயில் கல்* (TAS,iv,p.144.)

கணக்கர் சோடி (பெ) கணக்கர் பொருட்டு பெறும் ஒரு வரி (1636) *...சிக்கமூர் தலைஆரிக்கம் புல்வரி பிறதானிசோடி அதிகாரிசோடிக் கணக்கர்சோடி கல்லணை காடுவெட்டு மற்றும் எப்பேற்பட்ட பல உபாதி* (SII,vii,4.)

கணக்க விருத்தி (பெ) கணக்கு எழுதுபருக்கு வாழ்க்கைச் செலவுக்குக் கொடுத்த நிலம் (1237) *கணக்க விருத்தி நெல்....மும் ஆனைக்கு நெல் அமுதுபடியும்* (TAS,vii,p.127.)

கணக்கறுத்து (வி) அளவிட்டு (941) *கணக் கறுத்துக் குடுக்கக் கடவ இவ்வூர் மத்$_4$யஸ்த னுக்கு நெல்லு இருபதின் காடியும்* (SII,viii,529.)

கணக்காட்டி பச்சை (பெ) ஒரு வரி (1229) *கடமையும் வரிகளும் நாடேன்ற எலவைகளும் கன்மிகள் கணக்காட்டி பச்சை* (IPS,263.)

கணக்கிலக்கை (பெ) ஒரு வரி (1503) *ககநூத்திலும் உள்ள கடமை விநியோகம் உகாதி கணக்கிலக்கை உள்பட்ட வகையும்* (TAS,ix,p.7-8.)

கணக்கு (பெ) கணக்கன் (987) *வைக்கப்பட்ட வாரிகரும் கணக்கும் இருந்து* (SII,xii,3.)

கணக்கு (பெ) வரவு செலவு கணக்கு விவரம் (921) *அர்த்த$_2$ சௌ$_0$ச$_0$முடையானே கணக்கெழுதுவானாகவும்* (ARASI,1904-05,p.131.)

கணக்குச் செய்வாங் (பெ) கணக்கு எழுதுபவன் (973) *இவூர்க் கணக்குச் செய்வாந் ... சுந்தர சோழ முத்தரையராந* (SII,xix,63.)

கணக்கு நூல் (பெ) கணித நூல் (905) *கணக்கு நூல்பயில் கணக்கராகவும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கணக்குப் பிசகு (பெ) வரிக்கணக்கில் பிழை (1714) *கேள்விக்காறர் கணக்கும்படிக்கு குடிச்சைப்பணம் அடைக்கிறதே அல்லாமல் ஒழுகு என்றும் கணக்குப்பிசகு என்றும் சொன்னதே உண்டானாலும்* (TAS,v,p.217-18.)

கணக்கு வாரிய பெருமக்கள் (பெ) சபைக் குழுக்களுள் ஒன்று (959) *கணக்கு வாரிய பெருமக்கள் கலிங்குவாரிய பெருமக்களும்* (SII,iii,156.)

கணக்கெழுதுவான் (பெ) கணக்கன் (992) *கணக்கெழுதுவான்னுக்கு நிசதம் நெல்லு நானாழியும்* (SII,xix,357.)

கணக்கெழுதுவான் (பெ) கணக்கன் (986) *திரு மெய்க்காப்பனையும் கணக்கெழுதுவானையும் நகரமே ஜவஸ்தை$_2$ செய்து* (SII,iii,128.)

கணத்தார் (பெ) கிராம சபைகளில் ஒன்று (998) *திருகடித்தானத்து பரிடையுங் கணத்தாரும் பொதுவாள்மாரு நன்றுழநாடு முந்நூற்றுவரும்* (TAS,v,p.178-80; TAS,ii,p.40.)

கணப் பெருமக்கள் (பெ) கணத்தின் உறுப்பினர் கள் (885) *செலுத்துவோமானோங் கணப் பெருமக்களோம்* (SII,xii,69.)

கணபதியார் (பெ) விநாயகர் (944) *கணபதியார் நிவேத்$_3$யமும்* (SII,v,783.)

கணம் (பெ) பிரமதேய ஊர்களிலும், கோயில்களிலும் ஒரு நிர்வாகக்குழு (768) *பயினூர்க் கணத்தேம் ஒட்டியத்து* (SII,xii,34.)

கணம் (பெ) வேதம் ஓதும் வகைகளுள் ஒன்று (866) *கற்பத்திலுங் கணத்திலுந் துருச் சொல்லி* (TAS,i,p.1-14.)

கணவதி (பெ) விநாயகர் (898) *கணவதியார்க்கு இரு நாழி* (SII,viii,560.)

கணவாய் (பெ) (= கணுவாய்) (1289) *நுறுங்கஉல் கணவாயில்* (EI,xxxvii,32.)

கணவாரியப் பெருமக்கள் (பெ) ஒரு கோயில் நிர்வாகக் குழு (891) *ஸ்ரீகோயில் கணவாரியப் பெருமக்களே* (SII,xiii,292.)

கணிக் கூறு (பெ) கணி என்ற பஞ்சாங்கம் சொல்பவருக்குக் கொடுக்கப்பட்ட நிலம் (780) *இவ்வொன்றரை வேலி நிலமுங் கணிக்கூற்றோடு நீர் பெறுவதாகவும்* (SII,xiv,17.)

கணிசம் (பெ) மிக்கது (905) *களமகணிசமென மிளிர்ந்திலங்கு* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கணி முற்றூட்டு (பெ) பஞ்சாங்கம் சொல்பவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மானிய நிலம் (960) *பள்ளிச் சந்தம் தேவதாநக் கணிமுற்றூட்டிலோமும்* (EI,xv,5.)

கணுவாய் (பெ) மலைகளுக்கு நடுவே குறுகலான வழி (1069) *பச்ஶாத் நத்துவந் குறுக்கையும் பச்ஶாத்க் கோட்டுக் கணுவாயும் புழுகியாறும் சிறுகணுவாய்க்கு* (EI,xxv,25.)

கணை (பெ) அம்பு (921) *திண் சிலைவாய்க் கணைசிதறிஉம்* (SII,iii,206a.)

கத்த (வி) செய்விக்க (?) (1200) *நாழி அரி கொடுத்து கத்தக் கடவன் கத்தாவிடில் பந்திரண்டரைக் காணம் பொன் தண்டம்* (SII,vii,167.)

கத்தர் (வி) பொறுப்பானவர் (1462) *சந்திரகிரி ராஜ்யத்தில் சாதத்துக்கு கத்தரான மாணிக்கனாயினார் மகன்* (TDI,ii,12.)

கத்தளை (வி) கல்லால் செய்த விலங்கு (1286) *நாலாயிர விழுப்பரையன் வசமாகச் சிறையில் இருந்து கத்தளை முறித்து ஓடிப்போன படியாலே* (SII,viii,591.)

கத்தற் பச்சை (பெ) ஒரு வரி (1321) *வினியோகம் கைக்காணி கார்த்திகைப்பச்சை கத்தற்பச்சை ஆனைச்சாலை குதிரைப்பந்தி கோயிற் கட்டணத்தேவை* (SII,v,411.)

கத்தி (பெ) வாள் (613) *இளமகன் பொங்கியார்மகன் கத்தி எய்துபட்டான்* (CHHS,1971/63.)

கத்திக் காணம் (பெ) ஒரு வரி (691) *கூலமும் தரகும் கத்திக் காணமும்* (SII,i,151; EI,xvii,22.)

கத்திகாறர் (பெ) கத்தி பிடிப்பவர் (1307) *பள்ளிச்சிவிகையாரும் திருமுன்கோட்டிகளும் தழையெடுப்பாரும் கத்திகாறரு* (EC,ix,An.78.)

கதம் (பெ) சினம் (1044) *தன் கதப் புலி தண்டிந் முந்நோர் தமியந்நெறி* (SII,v,465.)

கதம் (பெ) ஓடும் (1012) *பொன்னியல் விசும்பரிற் கதமும் பசும்பரி* (SII,vii,863.)

கதலிப் பழம் (பெ) வாழைப்பழ வகை (1471) *தேங்காய் ஒன்றும் கதலிப்பழம் பத்தும்* (TAS,iv,p.92-98.)

கதவம் (பெ) கதவு (1200) *அயிராபதம் வந்தது வந்ததென்று கதவந் திருத்தியிடார்* (IPS,675.)

கதளி வாழை (பெ) சிறு வாழை (1200) *மோர் மடை 1 1/2 கதளிவாழைக்கா 12* (TAS,vi,47.)

கதி (பெ) விரைவு (905) *களிறொன்று வண குடந்தைக் கதிகாட்டி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கதிர் (பெ) தானியக் கதிர் (1070) *இந்நிலத்துக்கு கதிரிட களமும் உண்ணிடம் ஒழிவின்றிக்கே* (TAS,iv,131-34.)

கதிர் (பெ) பயிர்க்கதிர் (833) *கதிர்ச் செந்நெல்* (SII,xiv,44.)

கதிர் (பெ) ஒளி (771) *வெளிற்பட்டு விடுகதிரவி ரொளி விலக வீற்றிருந்த* (EI,xvii,16.)

கதிர்க் கடவுள் (பெ) சூரியன் (1050) *கதிர்க் கடவுள் போல் குலம் விளங்கத் தோன்றி* (SII,viii,82.)

கதிர்க் களம் (பெ) தானியக் கதிர்களை அடிக்கும் களம் (1439) *தரவு எழுதிக் குடுத்த நிலம் எழுபத்து அஞ்சுமா முக்காணியும் கதிர்க்களமும் தோட்டக் கூறுகளும்* (TAS,viii,p.3-5.)

கதிர்க் காணம் (பெ) ஒரு வரி (753) *கண்ணீட்டுக் காணமும் கதிர்க் காணமும்* (SII,ii,73.)

கதிரவிய (வி) தானியம் பதராக (1209) *குட மண்டபங் கழுதையேரிட இழுது புகழக் கதிரவியத் தவடி விச்சி* (IPS,163.)

கதிர் அறுக்க (வி) தானியங்களை அறுவடை செய்ய (1703) *நமுடய உற்பத்திகளையும் விரைக்கவும் கதிர் அறுக்கவும் ஒட்டாமல் உபத்திரிக்கிறபடியினாலே* (TAS,v,p.215-16.)

கதிராங்கன் (பெ) சூரியனை ஒப்பவன் (1056) *காதலர் தம்முள் மேதகு கதிராங்கனை கழல் மதுராந்தகனை* (SII,iii,29.)

கதுமென திடீரென (1012) *மோது மோது திரை விலகி கதுமென வன்கரை பொருது வருபுனற் பெண்ணை* (SII,vii,863.)

கந்தம் (பெ) வாசனை (907) *கந்தத்திற்குந் தூபத்திற்கு* (SII,xii,93.)

கந்தாயம் (பெ) தவணை (1374) *ஆண்டு ஒன்றுக்கு கடமைக்கு பொன் 10 இப்பொன் பத்தும் மூன்று கந்தாயம் ஆகத் தரக் கடவராகவும்* (SII,i,72.)

கந்ந புஷ்பம் (பெ) ஒரு காதணி (1061) *கந்ந புஷ்பமாக இட்ட பொற்பூ 2னால் பொந் 11 மா* (SII,v,647.)

கந்ந மாத்ரை (பெ) காதுகுத்தல் சடங்கு (1544) *ஆசாரி அஸ்தமாத்ரை கந்ந மாத்ரைக்கு பணம் 4* (TDI,v,25.)

கந்நாரிறை (பெ) கன்னாரத் தொழில் செய்வோர் மீதான வரி (1211) *கடையிறையு கந்நாரிறையும் ஆசுவிகாசும்* (SII,vii,912.)

கந்நி (பெ) கன்னியாகுமரி (1094) *மத்த வெங்கரி படுமையச் சயயமும் கந்நியும் கைக்கொண்டு* (TDI,i,23.)

கந்நி நாயறு (பெ) கன்னிராசியில் சூரியன் இருக்கும் புரட்டாசி மாதம் (955) *இவ்வாண்டு கந்நி நாயற்று உத்திரட்டாதி நான்று* (IPS,30.)

கந்யாரத்நம் (பெ) சிறந்த மகள் (771) *கஙங்கராஜனது கந்யாரத்நம் கொங்கர் கோற்கு* (EI,xvii,16.)

கநகராசி₀ (எ) பொன் குவியல் (771) *கநகராசிஉங் கதிர் மணிஉம்* (EI,xvii,16.)

கப்படம் (பெ) ஆடை (953) *நெல்லுக்குங் கப்பட முதல் கழஞ்சரை பொன்னும்* (SII,xiii,74.)

கப்பம் (பெ) அரசர்க்குக் கொடுக்கும் திறை (1532) *திருவடி கையிலே கப்பமும் வாங்கிக் கொண்டு* (SII,vii,53.)

கப்பான் (பெ) ஒரு மரியாதைச் சின்னம் (849) *பார்க்கோலுங் கப்பானும் பைஞ்சக் கண்டியும்* (TAS,ii,p.67-68.)

கபாலம் (பெ) இரப்போர் கலம் (1005) *திருவெண்காட தேவர்க்கு தன்த பொன்நின் கபாலம் 1* (SII,v,1366.)

கபி (பெ) ஒரு கோத்திரத்தின் பெயர் (789) *கபி கோ₃த்ரத்து* (SII,ii,99.)

கபிலன் (பெ) ஒரு புலவர் (1012) *முத்தமிழ் நான்மைத் தெய்வக் கவிதை செஞ்சொற் கபிலன் மூரி வண்டடக்கைப் பாரி* (SII,vii,863.)

கபிலை (பெ) குராற் பசு (1051) *இச் சந்தை அழிப்பார் கபிலையும் வாணராசியும் அழித்தான்* (EC,ix,Nl.25.)

கபோதம் (பெ) கட்டிட உறுப்பு; கொடுங்கை (1400) *தபன மண்டபத் திருப்பணியில் கபோதப் படை கருவிக் கூலிக்கு* (IPS,770.)

கம்பம் (பெ) தூண் (1100) *வீரகாமுண்டந் செய்வித்த கம்பம் இது* (EC,xiv,TN.36.)

கம்பி (பெ) பொன் கம்பி (1532) *முத்து 10007க்கு அரக்குமுக்கு பிஞ்சு கல்லு குண்டு கம்பி கேவணம் உள்பட தூக்கம் 3119* (SII,vii,53.)

கம்பி (பெ) ஒரு காதணி (1009) *மேற்படியார் சாத்தியருளும் கம்பி ஓரணையினால் துண்ட மிரண்டும்* (SII,v,521.)

கம்மாண் சேரி (பெ) கம்மாளர்கள் வசிக்கும் ஊர்ப்பகுதி (1008) *பறைச்சேரியுங்*

கம்மாண்சேரியுங் சுடுகாடும் பெறுவதாகவும் (EI,xxii,34.)

கம்மாள மகழ்மை (பெ) கம்மாளர் மீதான வரி (1068) *அந்தராயமும் கம்மாள மகழ்மையும் தறியிறையும் ஆள்வரியும்* (SII,vii,467.)

கம்மாளர் பேறு (பெ) ஒரு வரி; நிலவிளைச்சலில் கம்மாளருக்கு அளிக்கப்படும் பங்கு (1280) *கம்மாளர்பேறு கணக்கப்பேறு பறையர்பேறும் ஊரில் குடி நிலங்கள் செய்த மரிசாதி பெறுவார்களாகவும்* (IPS,421.)

கம்மியர் (பெ) பணியாளர் (1100) *நால்..வரு...பள்ளியில் கம்மியருங் கூடி நின்று* (SII,iv,1405.)

கமண்டலு (பெ) கரகம் (905) *களமகணிசமென மிளிர்ந்திலங்கு சடைமுடி ஒடளவியன்ற கமண்டலுவோடக்ஷமாலை* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கமலப் பூ மகள் (பெ) இலக்குமி (1075) *தென்றிசைத் தேமரு கமலப் பூமகள் புதுமையும் பொன்நி யாடையும்* (SII,iii,68.)

கமலம் (பெ) தாமரை (771) *காயலுட்கமலம் மலரும்* (EI,xvii,16.)

கமலயோனி (பெ) பிரமனின் கொப்பூழ் (905) *கமழ் மலர்க் கமலயோனி மனந்தந்த மாமுனி அத்ரி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கமலவனம் (பெ) தாமரைக்காடு (921) *ஸத்$_3$கு$_3$ணாலயந் படைக்கமலவனச் செங்குடிக் கௌஸிகந் பராந்தகன்* (SII,iii,206a.)

கமழ் (வி) வாசனை வீசுகின்ற (800) *கமழ் கண்ணிக் கோமாறன்* (EI,xiii,10.)

கமழ்ந்தன (வி) மணம் வீசின (1186) *பசுந்சாந்தெழக் கமழ்ந்தன* (SII,xii,263.)

கமாத்தம் பழம் (பெ) பழவகை (1547) *கொம்மடி மாதளம் பழம் 300 சோமாகணை 300 கமாத்தம் 300 ஆகப் பழம் 1200க்கு ரேகை பொன் 1 பணம் 5* (TDI,v,92.)

கமிகு (பெ) கமுகு (895) *நூற்றைம்பது கமிகி நால்* (SII,xiii,309.)

கமுகு (பெ) பாக்கு மரம் (753) *கமுகும் தெங்கும் உள்ளிட்ட* (SII,ii,73.)

கமுகு கடமை (பெ) கமுகு மரத்துக்கான வரி (1223) *நெற்கடமை காசுகடமை கமுகுகடமை பயிர்க்கடமை* (SII,viii,753.)

கமுகு தறை (பெ) கமுகந் தோட்டமுள்ள இடம் (1245) *கூடின நிலத்துக்கு கமுகு தறையும் சுற்றுக் குலையும் உள்ப்பட* (SII,viii,55.)

கமுகு வெட்டுப் பாழ் (பெ) கமுகு பயிர் அழித்துக் கிடந்த தரிசு (1237) *கமுகு வெட்டுப் பாழிலும் புன்பயிரினும் திருத்தியும் கமுகும் கொடியும் உள்ளிட்டு செய்யலாம்* (SII,iv,419.)

கயக்கால் (பெ) ஆழமான வாய்க்கால் (1016) *சோமாசி நிலத்துக்கும் கயக் காலான பல்லவையப் பெருவாய்க்காலுக்கு தெற்க்கும்* (SII,iii,54.)

கயகளிறு (பெ) யானை (796) *கயகளிறின் றலயன்று* (SII,iv,136; MASI,lxiii,p.54-59.)

கயம் (பெ) நீர் நிலை; குளம் (550) *இன்னும் பாண்டியன் கயத்தெல்லை* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

கயல் (பெ) கெண்டை மீன் (771) *சிலைஉம் புலிஉம் கயலும்* (EI,xvii,16.)

கயலாணை (பெ) கயல் சின்னம் பெற்ற பாண்டியன் ஆட்சி (1123) *திரைக்கடலேய் எல்லையாகப் பார்முழுதுங் கயலாணை பரந்து செங்கோலுடன் வளர* (SII,xiv,198.)

கயிறு பிடித்து (வி) கயிற்றை வரம்பு வைத்து (1260) *நாவலூர் காலளவும் கயிறு பிடித்துக் கரை சுமந்து கொள்வாராவும்* (IPS,363.)

கர்கடக ஞாயிறு (பெ) கற்கடக ராசியில் சூரியன் இருக்கும் மாதம் (968) *இடபத்தில் வியாழந் நிற்கக் கர்கடக ஞாயிற்றுச் செய்தகருமமாவது* (TAS,iii,p.179-182.)

கர்ண்ண ப்ராவ்ருதர்கள் (பெ) காதுகளைப் போர்வையாக மூடிக் காட்சியளிக்கும் குள்ளர்கள் (1014) *கனமாகச் செய்த கர்ண்ணப்ராவ்ருதர்கள் இருவர்* (SII,ii,50.)

கர்ணவில்லேக்கத் தோளம் (பெ) ஓர் ஆயுதம்(?) (1009) *இருமுடி சோழவீரரில் காரி குளிர் வாகை ஸ்ரீ ராஜராஜதேவர் கர்ண வில்லேக்கத் தோளம் எய்து காரி குளிர்வாகை பட்டமையில்* (SII,v,1411.)

கர்த்தா (வி) தலைவன் (1225) *நகரத்துக்கு கர்த்தாவாய் இரவி கோர்த்தனுக்கு பறகொண்டளந்து* (EI,iv,41.)

கர்ப்பூரம் (பெ) சூடம் (903) *சந்தனமும் தூபமுங் கர்ப்பூரமுமாக* (SII,xii,92.)

கர்ம்மம் (பெ) தொழில் (785) *த$_4$ர்ம்மமேய் தனக்கென்றுங் கர்ம்மமாகத் தான் கருதி* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

கர்ம்மார்ச்சனை (பெ) சிறப்புப் பூசை (970) *ஸ்ரீ வேங்கடத்து எழுந்தருளி நின்ற பெருமானடிகளுக்கு கர்ம்மார்ச்சனை கொண்டருளி* (TDI,i,8.)

கர்ம்மி (பெ) அலுவலர் (1010) *அருளிச் செய்ய உடன் கூட்டத்துக் கர்ம்மி கோவலூருடையான் காடன்* (SII,viii,234.)

கர்மக் கிழவர் (பெ) ஊர் நிர்வாகம் செய்பவர் (903) *திருவொற்றியூர்க் கர்மக் கிழவராயின ஊரோம்* (SII,xii,92.)

கர்மி (பெ) கீழ் அலுவலர் (1015) *பெருந்தரத்து ஸேநாபதி ராஜேந்த்ர சோழ ப்$_3$ரஹ்ம மஹாராயர் கர்மி திருமுனைப் பாடி கீழான்மூர் நாட்டுச் சிறுபுத்தூர்ப் புதுவையுடையான் கந்தன்* (SII,viii,745.)

கரக்ஷேத்ரங்கள் (பெ) வீட்டு மனைகள் (1346) *விட்ட கரக்ஷேத்ரங்கள் இவூர் நடுவில் தெருவில் கீழ் சிறகில் தெற்கடைய மனை* (SII,iv,353.)

கரகம் (பெ) ஒரு வகைக் குடம் (991) *செப்புக் குடம் 1 செப்புக் கரகம் 1 இவைச்சுக்கு மூடச் செப்பகல் 118* (SII,xiii,144.)

கரடிகை (பெ) ஒரு வாத்தியம் (866) *தட்டழி மத்தளி கரடிகை தாளம்* (TAS,i,p.1-14.)

கரண்ட முகுடம் (பெ) பானையடுக்கு போன்ற மகுடம் (1269) *பொற்பண்டாரத்துக்கு முதலாக ஒடுக்கின ரத்நங் கட்டின கரண்ட முகுடம் ஒன்றும்* (SII,iv,499.)

கரணத் தண்டம் (பெ) நீதிமன்றத்தில் செலுத்தும் அபராதம் (753) *கரணத்தண்டமும் அதிகரத்தண்டமும்* (SII,ii,73.)

கரணத்தர் (பெ) கணக்கர் (900) *ஸ்ரீ பொற்கோட்டுக் கரணத்தர் ரக்ஷை* (SII,xiv,101.)

கரணத்தாந் (பெ) கணக்கன் (985) *இவை தலைச்சங்காட்டு கரணத்தாந் பறடை காவிதி கலமநேந் நெழுத்து* (SII,xix,102.)

கரணத்தான் குசவன் (பெ) கணக்குத் தொழில் செய்யும் குசவன் (978) *பூங்குடியிலொன்பது மாவரைக்காணி கரணத்தான் குசவனொருவனுக்கு நிசதம் பதக்காக* (SII,iii,151-151a.)

கரண நாயன் (பெ) படைவீரன்(?) (938) *ராஜாதித்ததே$_3$வர் கரணநாயன் குமாரடி* (SII,vii,964.)

கரண பெருமக்கள் (பெ) கணக்கர் (999) *ஸ்ரீகார்ய்யம் க்டைக்காண கடவ கரண பெருமக்களே முட்டாமைக் கடைக்கண்டு குடுப்பார்கள்* (SII,iv,267.)

கரணம் (பெ) கணக்கன் (750) *கோயிக் கரணத்துக்குக் கோயில் ஆனைக்கும்* (EI,v,8.)

கரணம் (பெ) சடங்கு; மங்கலவினை (896) *எப்பேர்ப்பட்ட கரணங்களும் ஸங்க்$_3$ராந்தியும் உவாவும்* (SII,xiii,312.)

கரணம் (பெ) பஞ்சாங்க உறுப்புகளில் ஒன்று (1222) *ஸுகர்ம்மயோகம் கஜகரணம் பெற்ற அத்தத்து நாள்* (SII,v,733.)

கரணவர் (பெ) நாட்டியத்தில் கரணங்கள் பயிற்றும் ஆசிரியர் (1015) *நட்டுவன் ஒருவனுக்கு நிலன் இரண்டேய் எட்டு மாவும் கரணவர்க்கு நிலன் ஒன்றேய் நான்கு மாவும்* (TMPL,xviii,p.151-54.)

கரணன் (பெ) கணக்கன் (934) *கரணனுக்கு மொரவியனுக்குங் பதினாறு கலம்* (TAS,viii,43-44; EI,xxviii,37.)

கரணிக்க சோடி (பெ) (1455) *தங்கள்*

அகரங்களுக்கு அவதரவத்தனை ராஜஸ வத்தனை ப்ரதாநிஜோடி கரணிக்க சோடி தலையாரிக்கம் மாவடை மரவடை குளவடை மற்றும் எப்பேர்ப்பட்ட உபாதிகளுமிழித்து (SII,ii,23.)

கரணிக்கர் வத்தினை (பெ) அரசங்கக் கணக்கர் (கரணிக்கர்) பொருட்டுச் செலுத்தும் ஒரு வரி (1530) *தாங்கள் நமக்குக் குடுக்கும் வற்த்தினையும் வஸவப்பர் வற்தினையும் நரசயர் வற்தினையும் கரணிக்கர் வத்தினையும் உண்டான பல வத்தினையும்* (SII,vi,273)

கரணிகெ ஜோடி (பெ) (= கரணிக்க சோடி) (1432) *கட்டிகெ வர்த்தநை கரணிகெ ஜோடி நீராணிவரி நாட்டு கணக்கு வரி* (EI,xviii,17.)

கரதலம் (பெ) கை (905) *கற்பமைந்த கரதலத்துச் சிற்பமாத்தாண்டற்க்கும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கரத்$_3$ரவ்யம் (பெ) இறைகாவல் (1085) *பூர்வாசாரமும் க்ரயத்$_3$ரவ்யமும் கரத்$_3$ரவ்யமும் இவர் பக்கல் கொண்ட* (SII,v,1003.)

கரந்து (வி) கெடுத்து (1012) *கலியைக் கரந்து* (SII,vii,863.)

கர பத்திரம் (பெ) யானை வகை (1060) *செருக் களத்தவந் விடு சத்துரு பயங்கரக் கரபத்திர முதற்பத்திர ஜாதி பகட்டரைசநேகமும்* (SII,v,644.)

கரம்பு (வி) தரிசு நிலம் (1004) *கட்டை பறித்து மேடு கல்லியுங் குழி தூர்த்து கரம்பறுத்து* (SII,vii,440.)

கரம்பை (பெ) தரிசு நிலம் (789) *காடுங் கரம்பையும்* (SII,ii,99.)

கரவா (வி) ஒளிக்காத (1012) *புலியைப் பயந்த பொன்மான் கலியைக் கரந்து கரவாக் காரிகை சுரந்த முலை மிகப் பிரிந்து* (SII,vii,863.)

கராம் (பெ) ஆண் முதலை (1000) *கராமலை நீர்க் கங்கை பாலுடன் வாழ்கின்ற கண்டனரே* (SII,iv,167.)

கரி (பெ) நிலம் (பொதுப்பெயர்) (844) *கீரங் கடம்பனார் கரி* (TAS,ii,p.13-14.); (1000) *வட்டக் கரியால்ச் செல்லுந் திருவிளக் கொன்றினு கொள்ளும் பாட்டநிலம்* (TAS,ii,p.173-207.)

கரிகுலம் (பெ) யானைக் கூட்டம் (921) *கைந் நிலத்தோய் கரிகுலமும்* (SII,iii,206a.)

கரிங்கல் (பெ) கருங்கல் (1441) *மனுழ்ச்சம் பள்ளிமன்றத்து நாராயணன் திரிவிக்கிரமன் அதிட்டான கரிங்கல்லும் யிரும்பு தாழியும் குடமும்* (TAS,vii,p.105.)

கரிசு (பெ) குற்றம் (1012) *முனைந்த கண்டகர் கரிசறத் துரிசற* (SII,vii,863.)

கரிஞ்சு (வி) கருகி (1723) *தீஞ்சு கரிஞ்சு போகையில்* (TAS,v,p.222.27.)

கரிடு (பெ) சிறு குன்று (960) *கல்லுங்கரிடும் காஞ்ஞிரக்குற்றியும்* (TAS,iii,p.159-69.)

கரிதுரகபதாதி ஸங்க$_4$ம் யானை, குதிரை, காலாப்படை முதலியன (921) *தென்றஞ்சை காவலனது கரிதுரகபதாதி ஸங்க$_4$ம் களத்தவிய* (SII,iii,206a.)

கரிய நெல் (பெ) நெல் வகை (1015) *கோடையில் கரியநெலு ஐப்பதின் கலமும்* (EC,ix,Cp.129.)

கரினை (பெ) கருணைக் கிழங்கு (1068) *ஊர் நத்தத்து கரினையும் வழுதலையும் நடலாந் தோட்டம்* (SII,iv,529.)

கரு (பெ) கருமையான (1080) *தெந்னவந் கருந்தலை பருந்தலைத்திட* (EC,x,Mb.47.)

கரு (பெ) கருவேலமரம் (960) *பிடிசூழ்ந்துற்ற நிலங் கருவுங் கள்ளியு நாட்டி* (EI,xv,5.)

கரு (பெ) கொடிய (1045) *செங்கோலோச்சி கருங்கலி கடிந்து* (SII,iv,537.)

கரு (பெ) அடித்தளம் (905) *கருவமைந்த கனக மாளிகை* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கரு (பெ) உட்பொருள் (980) *இவ்விளக்கு எரிய நிலைவிளகு கருவுள்பட இருநூற்று பலம்* (SII,xix,261.)

கருக்கு (பெ) புடைப்புச் சித்திரம் (1014) *தாரைத்தாள் வட்டில் ஒன்று கருக்கிரண்டு சிங்கபாதமிரண்டும்* (SII,ii,1.)

கருங்கல் பணிக்காறர் (பெ) கல் தச்சர் (1200) *கெருப்பு போதகமும் கருங்கல் பணிக்காறருட வளிபாடு சுவாமிக்கு* (SII,v,771.)

கருங் களம் (பெ) போர்க்களம் (1061) *அக்கருங் களத்தேய் விசைஅபிஷேகம்* (SII,v,647.)

கருங் காசு (பெ) ஒரு வகை நாணயம் (970) *சேந்த நக்கபிரான் பட்ட ஸர்வக்ரதுயாஜியார் குடுத்த கருங்காசு 20* (SII,xiii,250.)

கருங் காய் (பெ) மருந்துச் சரக்கு (1068) *மருந்து ப்$_3$ராஹ்ம்யம் கடும்பூரி யொன்றும் கருங்காய் நீங்க* (EI,xxi,38.)

கருங் காலி (பெ) மரவகை (1018) *வடபாற் கெல்லை இக்கருங்காலி மரத்தை யிடத்திட்டு* (SII,iii,205.)

கருங் கை (பெ) வலிய கை (1012) *பாட்டொலிக் கருங்கைக் கடையர் பெருங்கைக் கடவாள்* (SII,vii,863.)

கருஞ் சரக்கு (பெ) உலர்ந்த பொருள் (?) (1270) *பாக்கு மிளகு உட்ப்பட்ட கருஞ்சரக்குக்கு....ப்பணமும்* (SII,viii,405.)

கருஞ் செய் (பெ) கரிசல் நிலம் (900) *நெற்சுற நாட்டுப் பெருங்கொல்லனுக்கு கருஞ் செய் கால்* (SII,v,357.)

கருடக் கொடி (பெ) கருடன் உருவம் வரையப்பட்ட கொடி (1000) *தூழாய் முடிக் கொற்ற கருடக் கொடித் தேவும்* (SII,iv,167.)

கருடன் (பெ) கருடாழ்வார் (1800) *...கருடன் சிறப்பு படி அடைவிலே பெற்று* (TDI,vi.140.)

கருணி (பெ) கருணைக் கிழங்கு (1068) *கருணியும் வழுதலையும் விளையும் நிலந் ஒந்பது மா* (SII,iv,529.)

கருணை (பெ) இரக்க உணர்வு (1074) *புகழுந் தருமமும் புவி தொறுத்தி வீரமுந் தியாகமு மாநமும் கருணையும் தந்னுரிமை சுற்றம் பிரியாது* (SII,viii,701.)

கருத்தளவாக (பெ) குத்துமதிப்பாக (1246) *இன் நான்கெல்லையிலும் உட்பட கருத்தளவாக மிகுதிக்குறை வுள்ளடங்க வந்த விளைநிலங்களும்* (SII,viii,707.)

கருதாதவர் (பெ) பகைவர்கள் (921) *க$_3$ரகி$_3$ரிஇற் கருதாதவர் வரகரிகுலநிரை வாரிஉம்* (SII,iii,206a.)

கருதாது (வி) முன்யோசனை இல்லாமல் (771) *கருதாது வந்தெதிர்மலைந்த* (EI,xvii,16.)

கருதி (வி) எண்ணி (785) *கர்ம்மமாகத் தான் கருதி* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

கருப்பாலை (பெ) கரும்பாலை (1012) *வீதி விடங்கன் மென் கருப்பாலை தலந் தருத் தண்டலைத் தடநீர்* (SII,vii,863.)

கருப்பிணியர் (பெ) சூலுற்ற பெண்கள் (800) *தேவிமார் கருப்பிணியருளாராக அவர்களைக் காத்திருந்து* (SII,vii,581.)

கருப்பு (பெ) கருமை நிறம் (1012) *கருப்பொலி மேகமும்* (SII,vii,863.)

கருப்பு கட்டி (பெ) பனைவெல்லக் கட்டி (1217) *கருப்பு கட்டி கல்நெல்லி முளிந்த மஞ்சள்* (SII,xvii,178.)

கருப்பு சாறு (பெ) கரும்புச் சாறு (984) *தினை நானாழியும் கருப்பு சாறு நானாழியும் இளநீர் நானாழியும்* (SII,xix,341.)

கருப்பூரம் (பெ) (= கற்பூரம்); ஒரு தூப தீபப் பொருள் (864) *கருப்பூரந் தலையாகச் செருப்பு கடையாக* (MCCM,viii,p.98-104.)

கரும் பகடு (பெ) எருமை (800) *செங்கட் கரும்பகடு சென்றுழக்க* (EI,xiii,10.)

கரும்பு (பெ) கரும்புப்பயிர் (831) *தோட்டார் கரும்பிரைக்கும்* (SII,xiv,43.)

கருமச் சேதம் (பெ) கையூட்டுபணம் (?) (1723) *மணியக்காறன் கையிலே அகப்பட்டுப் பணம் வைய்த்தால் அவனுக்கு கருமச் சேதமும் வைச்சுக்குடாமல்* (TAS,v,p.222-27 .)

கருமப்பேர் (பெ) ஒரு சாதி(?) (1258) *செட்டிகளும் வாணிகரும் கணக்கரும் கருமப்பேரும் பன்னாட்டவரும்* (SII,vii,118.)

கருமம் (பெ) பணி (691) *இத்தளிக்கு வேண்டும் தேவகரும நவகருமஞ் செயிவதற்கும்* (SII,i,151; EI,xvii,22.)

கருமம் ஆராச்சி மேலெழுத்து ஓர் அரச அலுவல்/அலுவலர் (967) *உட்பட எங்கருமம் ஆராச்சி மெலெழுத்துச் செய்கின்ற....* (SII,xiv,95; EI,xxv,6.)

கருமம் ஆராயும் (பெ) (சோழ) அரசனின் பணியைச் செய்யும் (1008) *வரியிலிட்டுக் கொள்க வென்று நம் கருமமாராயும் ஆரரன் அரவணையானான* (EI,xxii,34.)

கரு மாளிகை (பெ) உள் மாளிகை(?) (1018) *நம் வீட்டினுள்ளால்க் கரு மாளிகை மதுராந்தக தேவனில் தெற்கில் மறைவிடத்து* (SII,iii,205.)

கருமான் (பெ) கொல்லன் (1090) *இப்படி அறிவேந் இவ்வூர் கருமாந்* (SII,iii,71.)

கரு முகை (பெ) இருவாட்சிபூ (1081) *மல்லிகையும் கருமுகையுமுள்ள தோட்டமென்றளந்த நிலத்தில்* (ARE,1931-32,p.51-54.)

கரு முத்து (பெ) முத்து வகை (1533) *கருமுத்து 709 பச்சை 3ம்* (TD!,iv,16.)

கருவாடு (பெ) உலர்ந்த மீன் (1300) *மிளகும் கூடைக்கும் ஒன்றாக வந்த காசு பெறவும் கருவாட்டு தலைச்சுமைக்கு* (SII,xvii,141.)

கருவி பணம் (பெ) நாவிதர் செலுத்தும் வரி (?) (1430) *ஆடிகாத்திகை பச்சை கருவிபணம் ஆசுபொதுமக்கள் பேர்கடமை காணிஆட்சி பேறு* (SII,viii,349.)

கருவுகரத்துப் பிள்ளைமார் (பெ) கருவூலக் கணக்கர் (1723) *முறிகளுக்கு வைச்சுதென்று கருவுகரத்துப் பிள்ளைமார் கணக்கிலும் எழுதிவிச்சு நீட்டும் தந்தபடிக்கு* (TAS,v,p.222-27.)

கருவுகலம் (பெ) அரசாங்கக் கருவூலம் (1252) *தங்கள் ஒட்டுக்குடலாக நினைப்பிட்டதென்று இக்காசு நற்காசு கருவுகலத்தே ஒடுக்க வேணுமென்று* (SII,xvii,452.)

கருவுயிர்த்த (வி) பெற்றெடுத்த (905) *மநிமகள் அக்களநிம்மடி திருவயிறு கரு[வுயிர்த்த] ஸ்ரீ பராந்தக மஹாராஜன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கருவூல வரி (பெ) கருவூலம் பொருட்டுச் செலுத்தும் ஒரு வரி (1341) *கண்மட்ட வரி கருவூலவரி புழுகு கடமை செக்குக் கடமை ஏரிமீன்காசு* (SII,vii,109.)

கருவெழு தூபம் (பெ) நிறந் தோன்றுகின்ற நறும்புகை (1120) *நன்னாளால் தூய கருவெழு தூபத்தால் பொய்யொளி சேர்வான் மறைக்கண்* (SII,iv,225.)

கருனிலம் (பெ) கரிசல் நிலம் (1492) *பொன் இட்டு கால்வாய் கல்லுவித்து கருனில திருத்தி அச்சுக்கட்டு* (TDI,ii,97.)

கருனை (பெ) கிழங்கு வகை (1380) *மஞ்சள் இஞ்சி கருனை வெற்றிலைப்பயிர்* (IPS,454.)

கருஆழ்த் தாழ்வு (பெ) கொல்லர் மீதான ஒரு வரி (1300) *குதிரைப்பந்தி கருஆழ்த்தாழ்வு தச்சு தாழ்வு தறி இறை* (SII,vii,22.)

கரை (பெ) நில அடிப்படையில் ஏற்படுத்திய பங்குத் தொகுதி (1272) *இந்நாட்டு மேலை வகையில் கரைக்கடைப்பு எழுமூர் கிழவன்* (SII,vii,759.); (866) *இதனோடு செல்லுங் கரையுங் காராண்மை* (TAS,i,p.1-14.)

கரை (பெ) வரப்பு (750) *காலும் கரையும்* (EI,v,8.)

கரை (பெ) அரசாங்கத்தின் மொத்த வருவாய் (1056) *அந்தராயங்கள் கரைக்குடலாய் வருகின்றபடி* (TAS,i,p.164-68.)

கரைக் காடு (பெ) நில வகைகளில் ஒன்று (1179) *செம்முதை மாம்பள்ளம் பூமியும் புரையிடமும் அதின்று படுங் கரைக் காடும் எப்பேர்ப்பட்டதும்* (TAS,vii,p.24-26.)

கரைகண்ட (வி) முழுதுங்கற்ற (785) *சா₀ஸ்த்ரங்களைக் கரை கண்ட* (IA,22,p.57-75; PNDCP,p.55-62.)

கரைகண்டு (வி) எல்லையறிந்து (905) *நூற்கடலைக் கரைகண்டு* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கரை சுமந்து கொள்வார் (பெ) கரையை உயர்த்துவார் (1260) *நாவலூர் காலளவும் கயிறுபிடித்துக் கரை சுமந்து கொள்வாராகவும்* (IPS,363.)

கரை செய்து (வி) கரை அமைத்து (831) *நிலத்திட்டு கரை செய்து* (SII,xiv,43.)

கரைத் தேவை (பெ) கரைப் பராமரிப்புக்காக வாங்கும் ஒரு வரி (1273) *கடை வரி இனவரி சாட்டு வரி ஊசிவாசி காலத்தேவை கரைத்தேவை அணைதேவை உள்ளிட்ட அனைத்துபாதிகளும்* (SII,vii,145.)

கரைதுறை (பெ) துறைமுகம் (1521) *அனந்தராயன் பட்டணமான பழவேற்காடு முதலாக கரைதுறைகளிலே தொங்கு கப்பலுக்கு எற்றுகிற புடவைக் கட்டுக்கு* (SII,xvii,679.)

கரைப் பரிப்பு (பெ) கரையை யொட்டிய சாய்வுப் பகுதி (1214) *நெற்குன்றத்து மேலெல்லையுமான கரைப்பரிப்பேய் வடமேற்கு நோக்கிச் சென்று* (EI,xxv,11.)

கரைப் பற்று (பெ) இறை நிலம் (?) (1014) *கீழ்பிலாற்றுப் பணமங்கலவன் கரைப்பற்றுச் சாத்தந்பாடி* (SII,ii,5.)

கரைப் பறிச்சு (வி) (= கரை பறித்து) (970) *ஸாமவேதத்து மேற் பாதத்து ஒரு துருவும் கீழ்பாதத்து ஒரு துருவும் கரைப் பறிச்சுப் பட்டம் கடத்துப் பிழையாமே சொன்னார்* (SII,xiii,250.)

கரைப் புன்சை (பெ) குளத்துக்குள் நீரில்லாபோது செய்யப்படும் புன்செய்ப் பயிர் (1183) *நன்சை புன்சை நத்தம் நத்த புன்சை கரைப்புன்சை மேனோக்கின மரம் கீழ்நோக்கிய துரவு உட்பட்ட நிலத்தில்* (SII,viii,279.)

கரை பறித்து (வி) ஓலை குலுக்கித் தேர்ந்தெடுத்து (921) *முன்னம் செய்த குடும்பன்றிக்கே நின்ற குடும்பிலே கரைபறித்துக் கொள்வதாகவும்* (ARASI,1904-05,p.131.)

கரை பாடு (பெ) கரையோர நிலம் (885) *வடவரம்பு கரைபாடாக* (SII,xii,105.)

கரை போந்து (வி) ஓலைக்குலுக்கலில் குறிப்பிடப்பட்டு (955) *ஸபை₄யார் பணியால் கரையிட்டு இவூர்ப் பொலத்தூர் நாராயணன் பத்மநாப₄னுக்கு கரைபோந்து இவர் பணிக்க* (SII,xiii,110.)

கரையார் (பெ) மீனவ வணிகர் குழு (1305) *பதிநெண் விஷயத்தாரும் கரையாரும் நிச்சயித்தபடி* (SII,iv,399)

கரையிட்ட (வி) ஓலைக் குலுக்கலில் பெயர் குறிப்பிடப்பட்ட (957) *கரையிட்ட அகத்தியன் ஆதி₃த்த நீலகண்டன் பணிக்க* (SII,xii,164.); (1011) *பெருங்குறி கூடியிருந்து....க்கரையிட்டுக் கரை போந்த பெருமக்கள் ஸ்ரீ உத்தம சோழசேரி கோமடமட்டு தோக்கி பட்டநும்* (SII,vii,412.)

கரையிட (வி) ஊர் நிலங்களை குடும்பத் தொகுதிகள் வழி பங்கு பிரித்தல் (1231) *நாலாட்டை நாள் கழிச்சு ஊருக்கிசையக் கரையிடக் கடவதாகவும்* (AVNM,3,p.28)

கரை இட்டு (வி) பங்கிட்டு (1288) *உழுது இறுத்து ஆண்டு மாறி இவர்கள் உடனுங்கூடக் கரை இட்டு உழுது போந்த படியாலே காணிஆட்சி அல்ல என்றும்* (SII,vii,759.)

கல் (பெ) நவமணிகளில் ஒன்று (985) *இதில் ஏறின கல்லுக்கு விலைகாசு இரண்டு அக்கம் இரண்டு* (SII,xix,90.)

கல் (பெ) பாறையில் பிளந்த கல் (700) *செய்வித்த கற்றிருக்கோயில்* (ARE,1959-60,358.)

கல் (பெ) பொன் உரைகாணும் கல் (400) *பெரும்பதன் கல்* (AVNM,3,p.83)

கல் (பெ) மலை (800) *புகழிப்பொருதார் கற்புக விற்புக* (EI,xiii,10.)

கல் (பெ) இறந்துபட்ட வீரருக்கு நடப்பட்ட வீரக்கல் அல்லது நடுகல் (550) *பூசலுப்பட்டகல்* (CHHS,1971/85.)

கல் (பெ) எல்லைக்கல் (550) *கல்லுங் கள்ளியுந் நாட்டி* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

கல் (உ) அச்சக் குறிப்பு (800) *நாகங் கண்டஞ்ச வென்னெஞ்சங் கல்லென்ன* (EI,xiii,10.)

கல்காரப் பணிகள் (பெ) கற்கட்டிட வேலைகள்

(1212) ...கல்காரப் பணிகள் அழிவு சோர்வு சந்திராதித்த வரை செல்வதாக (SII,viii,378.)

கல் காரம் (பெ) கருங்கல்லாலான கட்டிடம் (1234) *கீழைப் புலிமுகமான சோபானத்துக்கு வேண்டும் பொன்னிட்டுக் கல்காரஞ் செய்வித்தான்* (SII,iii,39.)

கல் தச்சன் (பெ) கல் வேலை செய்வான் (1087) *இவ்வூர் கல்த்தச்சன் அரவிந்த லோசநன் சந்த்$_3$ர சே$_2$கரன் ஆன ராஜேந்த்$_3$ர சோழ கிழலை நாட்டாசாரி* (EC,ix,Cp.77.)

கல்நாடு (பெ) இறந்தவர் நினைவாகக் கல் நடுதல் (800) *தகடூரில் பட்டார் நாகத்தை சிறுகுட்டியார் கல்நாடு* (SII,vii,581.)

கல் நெல்லி (பெ) நெல்லிக் காயின் வகை (1217) *கருப்புக்கட்டி கல்நெல்லி முளிந்த மஞ்சள்* (SII,xvii,178.)

கல்ப் படை (பெ) கல் அடுக்கு (1544) *வெள்ளையப்பன் உபையமாகத் தம்பிக்கிணறு கல்ப்படை பதினெட்டும் படியும் கட்டுவித்து* (IPS,968.)

கல்ப் பணி (பெ) கற்களால் செய்யும் வேலை (1646) *கோவிலில் மரப்பணி பொளிச்சு கல்ப்பணி முகித்து தேரும் திருநாளும்* (TAS,iv,p.152-60.)

கல்ப்பித்து (வி) ஏற்பாடு செய்து (1100) *மேல்ச்சாந்தியும் கீழ்ச்சாந்தியும் விழுவின்னொளமுங் கல்ப்பித்து* (TAS,iv,p.145-46.)

கல்ப்பு (பெ) முறை (950) *காராண்மையும் மீசாய்ச்சியும் முள்ளடங்கக் கல்ப்பமைய* (TASSI,1962-65,p.32-52.)

கல்பகம் (பெ) கேட்டதைத் தரும் ஒரு கற்பனை மரம் (815) *கல்பகத்தின் வ்ரதம் கொண்டு* (SII,iii,206b.)

கல்ப காலம் (பெ) நீண்ட காலம் (1182) *சக்கரமும் செங்கோலும் திக்கனைத்தும் செல நடப்ப கல்பகாலம் புவிகாக்க* (SII,vi,436.)

கல்படி (வி) கல்லில் எழுதியிருந்தபடி (873) *பழைய கல்படி இந்த ஸ்ரீ விமாநத்திலே ஏற வெட்டிநமையில்* (SII,xiv,Appx.,2.)

கல்படுத்த (வி) கல்லாகச் செய்த (1264) *மடைகாலும் கல்படுத்த கற்தச்சன் கறைக்கண்டேர்ச்சரத்து தேவரடியான் பெற்றான்* (TAS,vii,p.31.)

கல்பம் (பெ) கருவறை (1717) *திருகோயில் அட்டபெந்தனம் முதல்லாக கல்பமுதலிறந்து போனத்தை பண்ணிவித்த பலன்* (SII,xvii,580.)

கல்ப மந்தரம் (பெ) கற்ப சூத்திரத்திலுள்ள மந்திரம் (1535) *ஸ்ரீ ஸூக்தம் கல்பமந்தரம் ஜபத்து..* (TDI,iv,54.)

கல்பனம் (பெ) ஏற்பாடு (1696) *ஆதிமா தோண்டி வெட்டுமாறும் இந்த கல்பனமறுத்து பிலப் பேடியும்* (TAS,vii,p.26-29 .)

கல் பொறிப்பிச்சான் (வி) நினைவுக் கல் நட்டு எழுத்துப் பொறித்தான் (953) *ஆயிரவன் கல்பொறிப்பிச்சான் தந்தையாரைச் சாத்தி* (AVNM,7,p.29)

கல் மேடு (பெ) க்ல்லாலான மேடை (889) *கல்மேடு செய்தாராவிக்கு* (SII,xii,106.)

கல்யாண திருமேனி (பெ) நோயற்ற உடல் (1223) *உலகுடைய பெருமாள் திருமேனி கல்யாண திருமேனியாகவும்* (SII,viii,248.)

கல்யாணம் (பெ) திருமணம் (1147) *பல்லக் கேறி கல்யாணத்திரு கெட்டி* (TAS,viii,p.7-8.)

கல்யாண லவணம் (பெ) மருந்துச் சரக்கு (1068) *கல்யாண லவணந் துாணிப் பதக்கும் இவையடுகைக்கு வேண்டும் மருந்துகளுக்கும்* (EI,xxi,38.)

கல்ல (வி) தோண்ட (953) *இந்நிலத்தில் புன்செய் இரண்டு மட்டங்கல்ல நானிட்ட பொன்* (SII,xiii,74.)

கல்லகழ் (பெ) கருங்கல்லினால் கட்டப்பட்ட அகழி (785) *கண்ணகன்றதோர் கல்லகழொடு விசும்பு தோய்ந்து* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

கல்லடிச்சு (வி) கல்லில் எழுதி (1411) *நடக்கக் கடதாகக் கல்லடிச்சு குடுத்தேன்* (EC,ix.Ht.149.)

கல்லடிப்பிக்க (வி) கல் பெயர்த்துவர (1287) *திருக்கற்ச்சாத்த வாங்கி கோவளத்து கல்லடிப்பிக்கவும் படவுகூலிக்கும் போக விட்டோம்* (SII,xvii,561.)

கல்லணை (பெ) கல்லால் கட்டிய அணைக்கட்டு (1131) *பராக்கரம பாண்டிய கல்லணைக்கு கல்லிறக்கும் கற்க்களத்துக்கு கிழக்கும்* (SII,xiv,223.)

கல்லணை காடுவெட்டு (பெ) கல்லணைப் பராமரிப்புக்காக காடுவெட்டும் ஊழியம் (1460) *அதிகாரிசோடிக் கணக்கர்சோடி கல்லணை காடுவெட்டு மற்றும் எப்பேற்பட்ட பல உபாதியும்* (SII,vi,4)

கல்லம்பல (பெ) கற்கோயில் (1664) *மேற்படி விளையில் கல்மடமு கல்லம்பலவும் கெட்டிச்சு* (TAS,v,p.128-34.)

கல்லம்பலம் (பெ) கல்லால் கட்டிய அம்பலம் (927) *சந்த்ராதி$_3$த்தவல் கல்லம்பலத்து ஆற்றுத் தண்ணீறட்டுவதாகக் குடுத்தேன்* (SII,viii,607.)

கல்லறை (பெ) கல்லால் கட்டிய புதை குழி (1161) *உத்தமராமன் காலுக்கு தெற்கு கல்ல்றைக்கு மேக்கு புன்கரைக் காலுக்கு வடக்கு* (TAS,vii,p.6-7.)

கல்லாணக் காணம் (பெ) கல்யாணத்தின் மீதான வரி (753) *செங்கொடியக் காணமும் கல்லாணக் காணமும்* (SII,ii,73.)

கல்லி (வி) தோண்டி (995) *பனங்காட்டில்...றும் வெட்டி கல்லி மசக்கி* (SII,v,523.)

கல்லி (வி) தோண்டி (883) *அடிமண்ணைய் கல்லி மணலட்டி* (SII,viii,633.)

கல்லிக் கொள்ள (வி) தோண்ட (1004) *இச் செய்க்குப் பாயக் கல்லிக் கொள்ளப் பெறுவதாக'* (SII,vii,440.)

கல்லியாண அழிவு (பெ) திருமணச் செலவு (1369) *நான் விவாகம் பண்ணுகையில் கல்லியாண அழிவுக்குக் இடுவதான பணம் இருநூற்றுக்கும்* (IPS,460.)

கல்லில் (பெ) கல்மேல் (960) *பாயும் வாய்க்காலும் கல்லில் பல்மாஹேச்$_0$வர ரக்ஷையாக வெட்டிக் கொடுத்தோம்* (SII,xiii,89.)

கல்லிவிட்ட (வி) தோண்டின (953) *ஸ்ரீமுகங் குணந்து கல்லிவிட்ட கிளியூர் வாய்க்காலுக்கு கிழக்கும்* (SII,xiii,51.)

கல்லிறக்கும் (வி) கற்களைப் பேர்த்தெடுக்கும் (1131) *பராக்க்ரம பாண்டிய கல்லணைக்கு கல்லிறக்கும் கற்க்களத்துக்கு கிழக்கு* (SII,xiv,223.)

கல்லுப் போட்டு (வி) எல்லைக்கல் நட்டு (1600) *இந்த கட்டளைக்கு கட்டளை இட்டு கல்லுப் போட்டுக் குடுத்த நிலம் கால்* (SII,viii,598.)

கல்லுவதற்க்கு (வி) தோண்டுவதற்கு (957) *எங்களூர்க் குளத்துக்கு சந்த்ராதி$_3$த்தவற் கல்லுவதற்க்கு விசமாக குறுணி நெல்லு* (SII,xiii,165.)

கல்லுவார் (பெ) பிடுங்குவார் (1003) *திரு விழுத்துக்கு நீரிறைச்சு களை கல்லுவார் இருவருக்கு புடவை முதல்* (SII,xvii,243.)

கல்லுவிக்க (வி) தோண்டச் செய்ய (996) *ஸம்வத்ஸரந்தோறுங் கொண்டு ஏரி கல்லுவிக்க கடவாராக(வு)ம்* (SII,vii,805.)

கல்லுவிச்ச (வி) தோண்டுவித்த (772) *சோமாசியார் கல்லுவிச்ச அறக்குளத்து* (SII,xiv,19.)

கல்லுவிப்போம் (வி) (926) *எம்மூரேரிக்கேய் ஆட்டாண்டு தோறும் மட்டிக் கல்லுவிப்போமானோம்* (SII,v,1371.)

கல்லூரி (பெ) கல்மேடை (1006) *தென் பக்கத்துக் கோயிலிந் உள்ளால் மாளிகை மேலைக் கல்லூரியில் எழுந்தருளி* (SII,viii,222.)

கல்லை காரி (பெ) தைத்த இலை வழங்குபவள் (1547) *மெகறையற்க்கு கட்டு 600க்கு 6ம் பாய் அலகு கூடைக்கு பணம் 3 கல்லை காரிக்கு பணம் 1* (TDI,v,92.)

கல்வரி (பெ) ஒரு வரி (1415) *ஆள்வரி மநைப் பணம் புல்வரி கல்வரி வேண்டுகோள்*

ஒழுகுநீற்பாட்டம் பாசிப்பாட்டம் (IPS,623.)

கல்வி (பெ) நூல்களைக் கற்றல் (905) *ஸ்ரீ நாராய ணந் கேச$_0$வன் கல்விக் கடல் கரை கண்டும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கல்வெட்டு (பெ) கல்லில் பொறித்த எழுத்து (868) *இது கல்வெட்டுப் படி* (SII,xii,58.)

கலக்க (வி) ஒன்று சேர (1007) *நீர் நிலத்தில் தலை நடுவு கடை கலக்க* (IPS,85.)

கலக்கல (பெ) ஒவ்வொரு கலம் அளவுள்ள (1008) *எண்ணாழிக் காலால்க் கலக்கல அரிசி அமுது செய்வித்து* (SII,vii,142.)

கலக் கிழமை (பெ) ஒரு வகை நில உடைமை (500) *கொங்குநாட்டும் மவரு காராண்கிழமையுங் கலக்கிழமையும் மேல்லாண்மை கொண்டனவும்* (AVNM,1,p.67-69)

கலக்குவது (வி) கலங்கச் செய்வது (1200) *தெவ்வர் பாய்பரித்தானை கலக்குவதே* (SII,vii,123.)

கலகம் (பெ) குழப்பம் (1121) *...கலகத்தில் சேமந் தப்பினமையில் இவரை ஆராந்து எழுந்தருளிவித்து* (SII,iv,387.)

கலங்க (வி) நடுங்க (905) *காடவனைக் கருவூரில் கால் கலங்கக் களிறுகைத்த* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கலங்கா (வி) கலக்கமடையாத (1015) *ஆழ்கடலகழ் சூழ் மாயிருடிங்கமும் கலங்கா வல்விநை யிலங்காசோகமும்* (SII,xvii,329.)

கலச்சோறு (பெ) எச்சில் சோறு (1083) *இது இறக்குவான் மதுராந்தக வேளான் கலச்சோற்றைத் தின்பான்* (SII,viii,137.)

கலசப்பானை (பெ) குடம் (982) *செப்பு கலசப்பானை நிறை ஐம்பதின்ம் பலம் அழிவு சொல* (SII,xix,303.)

கலசம் (பெ) குடம் (1014) *நாளதினாலேய் குடுத்த பொன்னின் கலசம் ஒன்று* (SII,ii,1.)

கலசோகரை (பெ) ஒரு படையல் உணவு (1547) *எட்டே முக்கால் கலசோகரை வகை தயிரோகரை வகை 12* (TDI,v,92.)

கலத்துட்டி (பெ) ஒரு வரி (1483) *இவர்களுக்கு இந்த கலத்துட்டி பணம் கழித்த அளவுக்கு கலத்துட்டி பணம்* (SII,xvii,220.)

கலந்த (வி) அடைந்த (800) *மன்னண்ணல் வாயில் கலந்த நாள்* (EI,xiii,10.)

கலந்தங்ங. கலந்தாற் போல் (796) *அம்ருதமுங் நஞ்சி கலந்தந்ந* (SII,iv,135; MASI,lxiii, p.54-59.)

கலந்து (வி) சேர்ந்து (905) *சொல்லியவூர் இரண்டும் தம்மிலெல்லை கலந்து கிடக்குமாதலில் ஒன்றாகவுடன் கூட்டி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கலந்து (வி) ஒன்றாக (938) *நற்கால வற்கால மெல்லாங் கலந்து சந்த்ராதி$_3$த்யவத்* (SII,viii,10.)

கலப்பாடு (பெ) கலநெல் விதைக்கக் கூடிய நிலப்பரப்பு (932) *நாற்கலப் பாடு இளங்கண்டு* (SII,vii,173.)

கலப்பை (பெ) உழுபடை (1800) *தச்சற்கு புதுக் கலப்பைக்கு முன்னாழி நெல்லு* (IPS,1073.)

கலம் (பெ) கப்பல் (1076) *வார் கடற்றீவாந்தரத்து பூவா நிறை விடு கலஞ்சொரி களிறு முறை நிற்ப்ப* (SII,iv,813.)

கலம் (பெ) தட்டு (870) *இவ்வக்$_3$ரமுண்ண இட்ட கலம் நாலு நிறை நூற்றிருபது* (SII,xix,163.)

கலம் (பெ) பொறுப்பு (731) *மூன்று செறுவின்றலையுமாக உடைய கலம் அறுகழஞ்சும் நெல் அறுபதின் காடியும்* (SII,viii,331.); (914) *இச்சேரி மேல் முன்னாள் உள்ள கலம் முப்பது காசும்* (SII,xix,191.)

கலம் (பெ) மண்கலம் (879) *கலம் இடும் குசவனுக்கு* (SII,xiii,187.)

கலம் (பெ) முகத்தல் அளவுகளில் தலைமையானது (887) *நின்றமதி நாராயத்தால் இருகல நெல் லாக வந்த நெல்லு இருநூற்று நாற்பதின் கலம்* (SII,xiv,16a)

கலம் (பெ) ஆவணம் (1044) *விற்று விலைக் கலம்ஞ் செய்து குடுத்தோம்* (SII,v,307.)

கலம் (பெ) ஒருவர் உண்ணும் உணவு (866) *இச் சாலைக்குப் பெய்த கலத்தில்* (TAS,i,p.1-14.)

கலம்பாடு (பெ) ஒரு கல விதை விதைத்தற்குரிய நிலம் (800) *சூழிக் குண்டறைக் கலம்பாடு* (TAS,iii,p.203-05.)

கலமறுத்து (வி) போட்டியில் வென்று: தடை நீக்கி(?) (970) *மெய்காட்டுத் தீட்டினாரெல்லாரும் தம்மில் அஞ்சுபுரியிலுந் சொல்லிக் கலமறுத்து நல்லாரானாரொருவற்கு* (SII,xiii,250.)

கலமிடும் (வி) மண்பாத்திரம் கொடுக்கும் (941) *கலமிடுங் குசவனுக்கு நெல் முப்பதின் காடியும்* (SII,viii,529.)

கலய்க்க (வி) கூட்டைக் கலைக்க (1300) *முக்கால் வட்டத்து வைச்சு கூட்டவும் கலய்க்கவும் செலவும் பெற்றார்* (TAS,iii,p.194-95.)

கலயப்பானை (பெ) குடம் (985) *வ்யாபாரி குணவன் வடவாயிலேன் குடுத்த கலயப்பானை நிறை செருவிடையால் எழுபது* (SII,v,674.)

கல வாணியன் (பெ) மட்கலங்கள் வியாபாரி (1000) *விறகிடுமவனு இருபதினாழியரி கலவாணியனு இருபதிநாழி* (TAS,ii,p.173-207.)

கலன் (பெ) கலம் என்ற முகத்தல் அளவு (866) *விதை கலனேய் தூணி ஏற்றி* (TAS,i,p.1-14.)

கலன் (பெ) வில்லங்கம் (1220) *இவூர்க்கு எப்பேர்ப்பட்ட கலனுமில்லை கலனுளவாய்த் தோற்றில் நாங்களே தீர்த்துக் குடுக்க கடவோமாகவும்* (SII,vii,430.)

கலனை (பெ) கூட்டம் அல்லது தொழில் சாதி (957) *நிசதம் உழக்கு நெய் அட்டுவதாநோம் மன்றாடி கலனையோம்* (SII,xix,13.)

கல் ஆயம் (பெ) ஒரு வரி (1430) *ஒழுக்கு நீற்பாட்டம் கல் ஆயம் திரிகை ஆயம் காத்திகை பச்சை* (SII,viii,349.)

கலாரி வட்டி (பெ) தட்டு வகை(?) (1599) *கெம்புராவுக்கு வட்டி 2 1/4 பனி நீர் செம்பு இரண்டுக்கு கால் கிறையும் கலாரி வட்டி 1/2 சாம்பிறாணி வட்டி 1* (SII,viii,534.)

கலி (பெ) வறுமை (700) *மஹாதா$_3$நங்களாற் கலி கடிந்து* (EI,xxxviii,4.)

கலி (பெ) ஓர் அரச குலப் பெயர் (771) *கலி அரைசன் கைக்கொண்டதனை* (EI,xvii,16.)

கலி (வி) ஒலிக்கும் (833) *கரும்புயருங் கலிக் கழனி* (SII,xiv,44.)

கலி கலுஷம் (பெ) வறுமையாகிய களங்கம் (815) *கலிகலுஷமற நீக்கி* (SII,iii,206b.)**கலி காலம்** (பெ) (= கலியுகம்) (1176) *கோமானிவனென்று கவ்வை தீரக் கலிகாலத்தாதிகாலங் காட்டின* (SII,xvii,585.)

கலிங்கன் (பெ) கலிங்க தேசத்தவன் (1012) *செஞ்சிலைக் கலிங்கன்* (SII,vii,863.)

கலிங்கில் (பெ) (= கலிங்கு) (1400) *பெரிய ஏரியில் தெற்குக் கரையில் கலிங்கிலுக்கு தெற்க்கே னட்ட எல்லைக் கல்லு* (TDI,i,176.)

கலிங்கு (பெ) மிகுதி நீர் வடியும் அணை (900) *தண்டலத் தேரிக் கலிங்கமைத்தான்* (EI,vii,5.)

கலிங்குக் கால் (பெ) கலிங்கினின்றும் வரும் வாய்க்கால் (1106) *இந்நிலம் ஐவேலிக்கும் போந்து போதாததுக்கு இக்கலிங்குக் காலுக்கு மேற்கு நிந்றும்* (SII,v,1381.)

கலிங்கு வாரிய பெருமக்கள் (பெ) கலிங்கு களை மேற்பார்க்கும் வாரியம் (959) *பஞ்சவார வாரிய பெருமக்களும் கணக்கு வாரிய பெருமக்களும் கலிங்குவாரிய பெருமக்களும்* (SII,iii,156.)

கலிச்சக்காய் (பெ) கழற்சிக் காய் (1537) *கலிச்சக்காய் 1...படி 1 கடுகு மண்டை 1* (TDI,iv,100.)

கலிஞ்சு (பெ) (= கலிங்கு) (881) *மருதாட்டேரிக் கலிஞ்சு செய்வித்து* (SII,xii,65.)

கலிப் பகை (பெ) வறுமைக்குப் பகைவன் (771) *கீ$_3$திகிந்நரந் க்ருபாலயந் க்ருதாபதா$_3$நந் கலிப்பகை* (EI,xvii,16.)

கலியாண திருமேனி (பெ) நோயற்ற உடல் (1108) *குலோத்துங்கசோழ தேவர் திருமேனி*

கலியாணதிருமேனி யாவ வேணுமென்று (TAS,i,p.243-44.)

கலியாண மண்டபம் (பெ) கோயிலிலுள்ள திருமண மண்டபம் (1713) ஆஸ்தான மண்டபம் கலியாண மண்டபம் கட்டி (SII,vi,430.)

கலி யாறு வறுமை என்னும் ஆறு (1075) தொந்நில வேந்தர் சூடப் பொந்னி மதுவாறு பெருக கலியாறு வறப்ப செங்கோல் திசை தோறுஞ் செல்ல (SII,iii,68.)

கலி யுகம் (பெ) கி.மு.3102ல் தொடங்கி வரும் கால வரிசை (866) கலியுகக் கோட்டு நாள் பதினான்கு நூறாயிரத்து (TAS,i,p.1-14.)

கலி உகம் (பெ) (= கலியுகம்) (943) கலிஉக வர்ஷம் நாலாயிரத்து நாற்பத்துநாலு (ARASI,1905-06,p.171-84.)

கலுஷம் (பெ) குறை (815) கலிகலுஷமற நீக்கி (SII,iii,206b.)

கலுழி (வி) (= கல்லூரி) (1012) தென்றிருக் கோவலூரீசரந் தன்றக் கவன்றது மீசரங் குடக்குக் கலுழி குணக்கு கால் பழுங்க (SII,vii,863.)

கலை (பெ) கல்வி (905) கலைபயில் கிழவங்கோனும் (TASSI,1962-65.)

கலைகள் (பெ) கல்வி (1000) நெல்லிக் கனிபோல் கலைளெல்லா மெத்தலைப் பாடு விதியுணர்ந்தோர் (SII,iv,167.)

கலைசம் (பெ) கலசம் (869) கலைசத்தால் திருநமனம் (SII,vii,523.)

கலைத்தக்கோர் (பெ) கற்றறிந்தோர் (1025) கலைத்தக்கோர் புகழ் தலைத் தக்கோலமும் (EC,ix,Cp.84.)

கலை மடந்தை (பெ) சரசுவதி (1196) வயப்போர் மடந்தை ஜயப்புயத் திருப்ப மாக்கலை மடந்தை வாக்கினில் விளங்க (SII,v,302.)

கலை வஞ்சி (பெ) சரசுவதி (1257) நாமலர் வளர் கலைவஞ்சி நலமிகு மாமனத்துறைய (SII,v,459.)

கவ்வ (வி) வாயினால் பற்ற (800) கமுகு கொழுங்குடர் கவ்வ (EI,xiii,10.)

கவ்வி (வி) கைப்பற்றி (1012) கங்கபாடி கவ்வி (SII,vii,863.)

கவ்வை (பெ) துன்பம் (1047) காற்களிறிழிந்து கவ்வையுற்றோடி (SII,v,978.)

கவசம் (பெ) உடம்பிலணியும் காப்புச் சட்டை (1012) நலமிகுங் கவசந் தொடுத்த (SII,v,863.)

கவடி (பெ) வெள்வரகு (1221) கழுதை கொடுழுது கவடி விச்சி செம்பியனை (SII,viii,394.)

கவந்தம் (பெ) தலையற்ற உடல் (921) விழித்தெதிர்ந்த வீரர் கவந்தமாட (SII,iii,206a.)

கவந்திகை (பெ) ஒரு வரி (1400) நல்லெருது நற்கிடா கோணிகை கவந்திகை பிள்ளையார் நோன்பு (SII,vii,936.)

கவர் (பெ) கிளை வாய்க்கால் (1203) தெக்கு நோக்கி நீர் பாய்கின்ற கவருக்குக் கிழக்கும் (SII,iii,24.)

கவர் (பெ) மதகு(?) (861) கைச்சப்படியே கவர் திறப்பதாகவும் (SII,xiv,78.)

கவர் (பெ) ஆற்றுக் காலில் பிரியும் கிளை வாய்க்கால் (1050) குடிக் காலினின்றும் நேர் கவரே கால் கல்லவும் (TAS,i,p.249-50.)

கவர்காசி (பெ) ஒரு கோத்திரம் (983) கவர்காசி பிரமன் தாயனுக்கும் (SII,xix,321.)

கவர்ச்சை (பெ) பொருள் கவர்தல் (1697) படைக்கிலாதியிலும் கவர்ச்சையிலும் பொய்முறி வகையாகிலும் கரணகாரியமெங்கிலும் (KANDT,1968/26.)

கவர்ந்து (வி) கைப்பற்றி (771) இவுளிகளும் பல கவர்ந்து (EI,xvii,16.)

கவர்ந்து கொண்ட (வி) அகப்படுத்திக் கொண்ட (1241) இவர்கள் பெண்டிர் பண்டார முள்படக் கவர்ந்து கொண்ட இதுக்கு ப்ராயச் சித்தமாக (SII,xii,124.)

கவர்விது (வி) அபகரிப்பது (1000) அக் கோயில் கன்மிப் பொருள் கவர்விதுஞ் செய்யு மூராளன் (SII,v,784.)

கவர (வி) அபகரிக்க (992) புக்கு விலக்கவும் பொருள் கவரவு முட்டிக்கவும் பெறார் ஊராளரும் (TAS,ii,p.34-37.)

கவரவும் (வி) வலிந்து எடுத்துக் கொள்ளவும் (947) பொருள் கவரவும் பெறார் (TAS,vi,52,p.64.)

கவரி (பெ) சாமரை (833) கதிர்ச் செந்நெல் கவரி காட்டும் (SII,xiv,44.)

கவரிகை (பெ) சாமரை (985) கவரிப் பிணாக்கள் இருபத்து நால்வர்க்குக் கவரிகைய்யும் தேவராயமேய் கொண்டு (SII,iii,143.)

கவரிப் பிணாக்கள் (பெ) கவரி வீசும் பெண்கள் (985) கவரிப் பிணாக்கள் இருபத்து நால்வர்க்குக் கவரிகைய்யும் தேவராயமேய் கொண்டு (SII,iii,143.)

கவருமவர் (பெ) பற்றுபவர் (1100) கரியில்ப்புக்கு விலக்குமவரும் பொருள் கவருமவரும் இதண்டம் படக் கடவியர் (TAS,v,p.34-37.)

கவளிகை (பெ) கட்டு (1330) மிளகு பொதி ஒன்றுக்கு ஆழாக்கும் வெற்றிலை பொதிக்கு ஒரு கவளிகையும் (EC,x,Kl.70.)

கவறு (பெ) பனை விட்டம் (985) இத்தளி உவச்சன் நம்பன் சுப்பிரமணியன் கடவனான துடக் கொட்டாலும் கவற்றாலுந் தூணாலும் (SII,v,584.)

கவறை (பெ) ஐந்நூற்றுவர் வணிகக்கூட்டமைப்பில் ஒரு முக்கிய வணிகக் குழு (1050) ஸமைய தன்மை இனிது நடாதிருக்கின்ற செட்டியும் செட்டிபுத்திரனும் கவறையும் காமுண்டஸுவாமியும் (AVNM,2,p.6-8)

கவறை (பெ) ஒரு வணிகக் குழு/சாதி (1545) பாளையம் வியாபாரியள் 1 பஞ்சாளத்தார் 1 கவறையள் 1 கைக்கோளர் 1 இளங்கொல்ல நாழி பரதேசியள் மூன்றெ முக்கால் (TDI,v,47a.)

கவிச் சக்கரவத்தி (பெ) பாவலருக்கு தலைவர் (1250) காணியுடைய மலரி உடையார் இந்தக் கவிச்சக்கரவத்திகள் பேரனார் கவிப் பெருமாளான ஓவாத கூத்தர் (CHEN,xxv,p.347.)

கவிசியன் (பெ) கவுசிக கோத்திரத்தைச் சேர்ந்தவன் (922) தலைச்சங்காட்டு கவிசியன் மிதுனித்தஞ்சன் (SII,xxiii,27.)

கவிஞர் (பெ) பாவலர் (1134) பெரும் புலவரு மருங்கவிஞரு நாப்புறு நல்லிசைப் பாணரும் (SII,v,645.)

கவிணியன் (பெ) கவுண்டினிய கோத்திரத்தான் (895) கவிணிய இளைய அங்கி காடப் பட்டரும் கவிணியன் நாரண தத்தபட்டரும் (SII,xiii,309.)

கவித்த (பெ) வளைந்து மூடிய (1014) கனமாகச் செய்து கவித்த ப்ரபை ஒன்று (SII,ii,29.)

கவித்து (வி) சூடி (950) தமிழ்க் கடலில் மன்னிய மணிமுடி கவித்து (TASSI,1962-65,p.32-52.)

கவிதை (பெ) பா (1012) தெய்வக் கவிதைச் செஞ்சொற் கபிலன் (SII,vii,863.)

கவிப்ப (வி) ஆள (1168) ஒற்றை வெண்குடை உலகு தனி கவிப்ப வாழி பல்லூழி ஆழி நடாத்தி (SII,v,646.)

கவிப்பது (வி) மூடுவது (1123) அகில புவநமுங் கவிப்பதோர் புதுமதி போல் வெண்குடை (SII,v,456.)

கவிப்பித்து (வி) முடிசூடச் செய்து (1171) அருளின நாளிலே மண்டை கவிப்பித்து (EI,xxi,31.)

கவிரப்பால் (பெ) கவிர இனத்தினர்(?) வாழும் நாட்டுக்கூறு (784) வல்ல நாட்டு கவிரப்பால் கல் குறிச்சி வரகுணவதி அரையன் (SII,xiv,25.)

கவிரிப் பிணாக்கள் (பெ) (= கவரிப் பிணாக்கள்) (953) கவிரிப் பிணாக்கள் கல்மேல் வெட்டுக (SII,v,716.)

கவின் (பெ) அழகு (905) கவின் அலங்கற் களப்பாழர் (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கவைஞர் (பெ) வேடர் (1000) கவியலைத் துண்ணுங் கவைஞர் தங்காமாறு (SII,iv,167.)

கழஞ்சு (பெ) நகை எடைகளில் ஒன்று (731) பொன் கழஞ்சம் (SII,viii,331.)

கழநிகோல் (பெ) ஒரு நில அளவு கோல் (959) *இந்நிலம் கழநிகோலால் ஆயிரத்து நாநூறு குழி* (SII,iii,156.)

கழநி வாரிய பெருமக்கள் (பெ) கழநி வாரியத்தின் உறுப்பினர்கள் (959) *கழநி வாரிய பெருமக்களும் ஸ்ரீ வடவீரநாரண பெருமக்களும்* (SII,iii,156.)

கழநி வாரியம் (பெ) சபையின் வாரியங்களுள் ஒன்று (959) *கழநிவாரிய கணக்கன் மணிமங்கலமுடையான் கங்காதர மாயிலட்டியேன்* (SII,iii,156.)

கழலன் (பெ) வீரக் கழலை அணிந்தவன் (1000) *கழியும் முடம்பு கழித்தவர் காணுங் கழலன் கண்டீர்* (SII,iv,167.)

கழலை (பெ) திரட்சி (1134) *மணி நிறைவொடு கழலைப் பொன்னார் தந்த* (SII,v,645.)

கழவாரிப் பச்சை (பெ) ஒரு வரி (1280) *இப்படி விற்ற வயலுக்கு கழவாரிப் பச்சை வெட்டி முட்டாவாள் கூற்றிலக்கை கொற்றிலக்கை தறியிறை* (IPS,421.)

கழனி (பெ) வயல் (771) *பூவிரிஉம் புனற்கழனி* (EI,xvii,6.)

கழனிக் குளங்கள் (பெ) வயலுக்கு நீர் பாய்ச்சுங் குளங்கள் (1014) *கழனிக் குளங்களும் பறைச் சேரி நத்தமும் இறைஇலி நிலம்* (SII,ii,3.)

கழனி வாரியம் (பெ) (= கழநி வாரியம்) (895) *கழனிவாரியப் பெருமக்களும் ஸ்ரீகோயில் வாரியப் பெருமக்களும்* (SII,xiii,307.)

கழி (பெ) உப்பங்கழி (1061) *மேல்பாற் கெல்லை கழிக்குக் கிழக்கும்* (SII,iv,377.)

கழிகில் (வி) தவிர்ந்தால் (1000) *செய்யாதே இப்பொழுது கழிகில் இரட்டி தண்டம் படுவது* (TAS,ii,p.173-207.)

கழிகின்றாள் (வி) சாகின்றாள் (967) *ப்$_3$ராஹ்மணி சிறிய நங்கைக் சானி தான் கழிகின்றாள்* (SII,vi,374.)

கழிச்சு (வி) நீக்கி (966) *ஈழக்காசுக்கு நூற்றுக்குமிறை கழிச்சுக் குடுத்த நிலம்* (EI,xxviii,17b.)

கழிஞ்ச (வி) இறந்த (870) *கண்டரு கண்டப் பல்லவரையன் கழிஞ்ச பின்* (SII,xix,163.)

கழிந்த (வி) தோன்றி மறைந்த (815) *பாண்ட்$_3$ய வம்ச$_0$த் தொலோகநாத$_2$ர் பலர் கழிந்தபின்* (SII,iii,206b.)

கழிந்தால் (வி) முடிவடைந்தால் (817) *மூன்று ஸம்வத்ஸரமும் கழிந்தால்* (SII,vi,344; EI,xxiv,7a.)

கழிந்து (வி) கடந்து (796) *வநக$_3$ஹநகளைக் கழிந்து* (SII,iv,135; MASI,lxiii,p.54-59.)

கழிநீர் (பெ) சாய்க்கடை நீர் (1366) *நம்பி தலை கழிநீர் புகட்டுவாந் கடையாக கொண்டு* (EC,ix,Bn.66.)

கழியாட்டம் (பெ) கள்ளுண்டு ஆடும் ஆட்டம் (1636) *அம்பலத்துக்கும் மடைக்கும் பூதத்துலம் கழியாட்டத்துக்கும் கிடாயும் குறை அற நடத்துவான் ஆகவும்* (IPS,868.)

கழியிறை (பெ) இறையிலி நிலம் (1050) *கல்லுங் காஞ்சணமும் மற்றுக் கழியிறை உள்ளதும் தாநே அனுபவிப்பானாக* (SII,iv,413.)

கழிவு கோல் (பெ) கரையைச் சேர்ந்த வெற்றிடம் (1300) *கரைக்கு கழிவு கோல் விட்டுக் கிழக்கும் வடபார்க் கெல்லை இந்நில மளந்த கோல்* (SII,viii,213.)

கழுகு (பெ) ஒரு பறவை (800) *ஓடிக் கழுகு கொழுங்குடர் கவ்வ* (EI,xiii,10.)

கழுத்தின் வளையில் (பெ) ஒரு கழுத்தணி (970) *திருக்கழுத்தின் வளையில் 4ம்* (TDI,i,8.)

கழுது (பெ) பேய் வகை (1200) *வாய்தோறும் பிலவாய் மடுத்துப் பருகுங் கழுதுடன் செம்மை கொண்டாற்க்கும்* (SII,vii,123.)

கழுதை (பெ) ஒரு விலங்கு (921) *கழுதை ஏறினாரையும் கூடலேகை$_3$ செய்தானையும்* (ARASI,1904-05,p.131.)

கழுநீர் (பெ) கருங்குவளைப் பூ (1300) *பூங்குமுதம் புண்ணீர் கயாற்றிற் சேர் கழுநீராம்* (IPS,654.)

கழுநீர் (பெ) சாய்க்கடை நீர் (1202) *பூசிக்கு நம்பியார் தலையாகக் கழுநீர் போகயிடுவான் கடையாக* (SII,viii,151.)

கழுவ (வி) தூய்மையாக்க (1044) *திருமுளை விச்சுக் கழுவப் பால் இருநாழியும்* (SII,i,149.)

கழுவல் (பெ) வயலின் பொதுப் பெயர் (959) *மேல்பாற்கெல்லை பள்ளக் கழுவலின் கிழக்கும்* (SII,vii,73.)

கழுவி (வி) தூய்மையாக்கி (815) *தீந்தமிழிற் செவி கழுவியும்* (SII,iii,206b.)

கழுவும் (வி) (துணி) வெளுக்கும் (1015) *திருப்பரிசட்டங் கழுவும் வண்ணானுக்கு பழம்படி நிலன்* (TMPL,xviii,p.151-55.)

கழுவுவான் (பெ) வெளுப்பான் (1013) *திருப்பரி சட்டங் கழுவுவான்* (IPS,90.)

கழைஞ்சு (பெ) (= கழஞ்சு) (957) *விலைப் பொருள் தீப்போக்குச் செம்பொன் கழைஞ்சில் பேர்த்து உரையும் துளையும் வழுவாதது* (SII,xiii,164.)

கழைந்து (பெ) (= கழஞ்சு) (866) *ஐஞ்கழைந்து பொன்* (TAS,i,p.1-14.)

கள் (பெ) தேன் (905) *கள் அவிர் சடைமுடி அரன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கள் (பெ) மது; தேன் (1171) *காவுகளேய் கொடிய வாயின கள்ளுண்பன வண்டுகளேய்* (SII,xvii,592.)

கள்வர்கள்வன் (பெ) கள்வரில் சிறந்த கள்வன் (800) *ஸ்ரீ ச$_0$த்ருகேசரி ஸ்ரீ கள்வர்கள்வன்* (EI,xiii,10.)

கள்ளப்படு கலங்கள் (பெ) பொய் ஆவணங்கள் (1703) *நெடுநாட் சென்ற பல கலங்கள் மீட்டு முறிகள்க் கொள்ள ஓலைகள் கள்ளப்படு கலங்கள் அவரவது பேறாம் பேறாகக் கொண்டு குடுத்து* (TAS,v,p.215-16.)

கள்ளப் பற்று (பெ) கள்ளர் வீரருக்கு அடைத்த நிலங்கள் (1118) *ஸபா$_4$வ்யவஸ்தை$_2$ பண்ணிநபடி காடும் நாடும் நகரங்களும் கள்ளப்பற்று மகப்பட* (SII,vi,57.)

கள்ளப் பால் (பெ) கள்ளர் இனம் வாழும் நாட்டுக்கூறு (909) *வல்ல நாட்டுக் கவிற்பா கள்ளப்பால் நாடாய் இசைந்த* (IPS,38.)

கள்ளர் (பெ) திருடர் (930) *எருமைதொறு கள்ளர் கொள்ள* (CHHS,1971/75.)

கள்ளி (பெ) ஒரு செடி (550) *கல்லுங்கள்ளியுந்நாட்டி* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

கள்ளி (பெ) ஒரு மாட்டு நோய் (985) *பெருமானடிகளுக்கு குடுத்தா குடுத்த பசு கள்ளி கொள்ள காக்க மாட்டாது* (SII,xix,151; IPS,44.)

கள்ளிப்பூ (பெ) நகையின் ஓர் உறுப்பு (1009) *மேற்படியில் கோத்த நாண் ஒன்றும் படு கண்ணிரண்டும் கள்ளிப்பூ ஒன்றும்* (SII,v,521.)

களகம் (பெ) சுண்ணாம்புச் சாந்து (1012) *புளகப் புதவக் களகக் கோபுரவாயின் மாட மாளிகை* (SII,vii,863.)

களஞ்சு (பெ) (= கழஞ்சு) (905) *பொலிசையாற் பொன் நாற் களஞ்சினாற் கழஞ்சுக்கு நாற்பத்தையந் நாழிப்படி* (EI,xi,22e.)

களஞ் செதுக்குகை (பெ) கதிரடிக்கும் களத்தை அமைத்தல் (1800) *இவர்கள் முன்னமக்கு களஞ் செதுக்குகையில் இப்போ களஞ் செதுக்க...ங்களுக்கும் ஆற்றாதென்கையில்* (IPS,948.)

களத்திரம் (பெ) மனைவி (1000) *விலக்குமவன் தந்தையைக் கொன்று தள்ளையைக் களத்திரம் வைச்சாராவிது* (TAS,ii,p.173-207.)

களப்படை (பெ) போர்ப்படை (1061) *வளவந் மும்மடி சோழநையும் களப்படை வீர சோழநையும்* (SII,v,647.)

களப்பாழர் குலம் (பெ) (= களப்$_4$ரர்); ஒரு போர்மரபுப் பழங்குடி (905) *களப்பாழர் குலங் களைந்தும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

களபம் (பெ) சந்தனம் (1473) *களபஞ் சாத்தியருள மெதித்த சாத்துப்படிபலம் 5ம்* (TDI,ii,68.)

களப்$_4$ரன் (பெ) ஒரு போர் மரபுப் பழங்குடி; அதன் தலைவன் (771) *களப்$_4$ரனெனும் கலி அரைசன்* (EI,xvii,16.)

களம் (பெ) நெற்களம் (1000) *கூறை விலையாக களத்திலெ கூறிட்டு கொள்வது* (EI,xxxiii,33.)

களம் (பெ) போர்க் களம் (800) *தென்னன் வேழங் களப்பட்டது* (EI,xiii,10.)

களம் (பெ) அலுவல் இடம் (989) *கடிகைக் களத்து பதினாறு சாண் கோலால்* (SII,viii,521.)

களம் (பெ) இடம் (873) *தான் வேண்டு களத்து* (SII,iii,91.)

களம் (பெ) உள்ளம் (833) *எச்சமையத்தவர் தமக்கு மியல்வின் களவிரோத மின்மையின்* (SII,xiv,44.)

களமகணிசம் (பெ) வளமிக்க நெற்கதிர் (905) *பொற்றாமரை மலர் மிசைவிளைவுறு களமகணிசமென மிளிர்ந்திலங்கு சடைமுடி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

களர் (பெ) உவர் நிலம் (550) *புன்செய்யும் களரும்* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

களர் திடல் (பெ) தரிசு மேடு (1074) *நீக்கி நின்ற களர் திடல் மாகாணி முந்திரிகை கீழரையும்* (SII,viii,701.)

களர் நிலம் (பெ) தரிசு நிலம் (1012) *பழனக் காடேறு மாநில மஞ்சுங் களர் நிலம் பத்தும்* (SII,vii,863.)

களர்ப் பாழ் (பெ) பாழாக இருந்த உவர்ப்பு நிலம் (1300) *நிலத்துக் களர்ப் பாழாய் இவ்வூர்க் கிசைந்த வளவன் பக்கல் விலைகொண்ட நிலத்தில்* (SII,viii,213.)

களவப்ரஸாதம் (பெ) சந்தனக் காப்பு (1468) *அரை பல களவப்ரஸாதமும் பதினேழு பாக்கும்* (SII,xvii,275.)

களவிரோதம் (பெ) உள்ளத்தின் கண் பகைமை (833) *சமையத்தவர் தமக்கு மியல்வின் களவிரோதமின்மையின்* (SII,xiv,44.)

களவு (பெ) திருட்டு (941) *கொள்கையும் பட்டமும் களவுக...ந்து கடவாரை* (SII,xxiii,251); (1300) *நம்மிலொருவர் களவுகாண கடவதல்ல* (IPS,491.)

களறு (பெ) நிலப் பெயர் (950) *வடக்கு நோக்கிக் களறுக்கேய் புகக்கல்லிந வாய்க்காலை* (TASSI,1962-65,p.32-52.)

களாவம் (பெ) இடையணி (1014) *களாவம் ஒன்றிற் கோத்த முத்து வட்டமும்* (SII,ii,56.)

களாவம் வடம் (பெ) இடையணிச் சரடு (1014) *இவர்க்குக் குடுத்தன களாவம் வடம் மூன்றிற்க் கோத்த முத்து* (SII,ii,55.)

களி (வி) மகிழ்வடையும் (833) *களியன்னங் கிளை பயில்* (SII,xiv,44.)

களிக்கறி (பெ) உண்ணும் காய்கள் (?) (1134) *வருநாணமும் களிக்கறியும் பருவமாரியும் பல விளைவும் பழுதின்றி* (SII,v,645.)

களிப்ப (வி) மகிழ (1168) *மண் களிப்பவும் மனங்களிப்பவும் மலர் மடந்தையர் முதல் மங்கயர் கண் களிப்பவுந் தண்ணளிப்ப* (SII,vii,890.)

களிறு (பெ) யானை (771) *சிலைத் தடக்கைக் கொலைக் களிற்று* (EI,xvii,16.)

களை (பெ) பயனற்ற பூடு (1008) *திருநந்தவாநத்துக்குப் பணி செய்து நீரிறைத்துக் களை வெட்டி* (SII,xvii,234.)

களைகட்ட (வி) வேரறுத்த (905) *களப்பாழரைக் களைகட்ட* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

களைந்து (வி) வேரறுத்தும் (905) *களப்பாழர் குலங்களைந்தும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கற்கட்டி கல்லால் கட்டி (1209) *உடைந்த மடை களும் அடைத்து ஏரியும் கல்லி கரையும் கற்கட்டி மதகுகளும் மட்டுத்து கலிங்குகளும் செய்தபடி* (SII,xii,126.)

கற்கடக நாயறு (பெ) கற்கடகராசியில் சூரியன் இருக்கும் ஆடி மாதம் (946) *இவாட்டை கற்கடக நாயற்று* (SII,vii,35.)

கற்கடக நாயிறு (பெ) ஆடி மாதம் (939) *இவ்வாட்டை கற்கடக நாயிற்று வெள்ளிக் கிழமை* (SII,iii,106.)

கற்கடகம் (பெ) கற்கடக ராசி (1000) *கற்கடகத்தில் வியாழந் நின்ற யாண்டு விருச்சிக ஞாயிற்று* (TAS,iii,p.45-46.)

கற்கடை (பெ) கற்குவியல் (1300) *தென் வடமான பெருவழிக்கும் கற்கடைக்கும் மேற்க்கும்* (IPS,559.)

கற்கண்டு (பெ) ஒரு நகை (1014) *சங்கிட்டு அடைத்த கற்கண்டு ஒன்றில் தடவிக் கட்டின பளிங்கு இரண்டும்* (SII,ii,89.)

கற்கப்படுவது (வி) கற்றுக்கொள்வது (700) *பரிவாதிநிஏ கற்கப்படுவது* (IPS,4-5.)

கற்கழம் (பெ) (= கற்களம்) (1132) *கல்லணைக்கு கல்லிறக்கும் கற்கழத்துக்கு கீழக்கும் பராக்கிரமபாண்டியப் பேராறுக்கு தெற்கும்* (SII,xiv,229.)

கற்களம் (பெ) கற்கள் பேர்த்தெடுக்குமிடம் (1131) *பராக்கிரம பாண்டிய கல்லணைக்கு கல்லிறக்கும் கற்(க்)களத்துக்கு கிழக்கு* (SII,xiv,223.)

கற்கிடை (பெ) கல் திட்டு (1014) *வெள்ளான் சுடுகாடும் பறைச்சுடுகாடும் கற்கிடையும் ஆக இறையிலி நீங்கு நிலம்* (SII,ii,5.)

கற்குடிகள் (பெ) கல் தச்சு செய்யும் குடிகள் (1132) *மூவாயிரநல்லூர் கற்குடிகளுக்கு விட்ட புந்செய்க்கு வடக்கும்* (SII,xiv,229.)

கற்குமிழி (பெ) கல்லால் கட்டிய குமிழி (756) *கடம்பன் செய்வித்த கற்குமிழி* (IPS,16.)

கற்குறும்பு (பெ) கல் மேடு (922) *கிழக்கு நோக்கியிழிய துரிஞ்சிலோடடை கற்குறும்பும்* (SII,ii,76.)

கற்கோதி (வி) கற்களைப் பொருத்தி (815) *குளமாக்கிக் கற்கோதி குமுழி செய்வித்து* (SII,xiv,26.)

கற் செக்கு (பெ) கல்லாலான செக்கு (1179) *நல்விளக்கோர் பத்தாக்கிக் கற்செக்கிரண்டில்* (EC,x,Ct.83.)

கற்பக நாள் (பெ) நெடுங்காலம் (1220) *அனந்த கற்பகநாள் பிரியாது* (CHEN,xiv,p.362-64.)

கற்பகம் (பெ) கற்பக மரம் (1128) *செம்பொற் கற்பகத்தோடு பரிச்சின்நமும் அளவில்லாதன ஒளி பெற* (SII,vii,773.)

கற்படுத்தும் (வி) கற்கள் பொருத்தியும் (833) *வெப்பமடை கற்படுத்தும்* (SII,xiv,44.)

கற் பணி (பெ) கற் கட்டிட வேலை (1239) *ஜீர்ணித் திருந்த கோயிலை இழிச்சி கற்பணியாக செய்வித்தான்* (EC,iii,TN.103.)

கற்பம் (பெ) கற்பசூத்திரம் (866) *சாகையிலுங் கற்பத்திலும்* (TAS,i,p.1-14.)

கற்பற்று (பெ) மாணிக்கத் தன்மைகளுள் ஒன்று (1015) *மாணிக்கம் குழிவும் ப்ரஹரமும் வெஜ்ஜமும் லசுஂநியும் த்ராஸமும் கற்பற்றும் உடையன* (SII,ii,7.)

கற்பாறை (பெ) சிறுகுன்று (1018) *இரட்டைக் கயல் பொறித்துக் கிடந்த கற்பாறையே யுற்று* (SII,iii,205.)

கற்பிக்கை (வி) ஏற்பாடு செய்கை (1669) *அம்மான் நிலிங்கரையர் உடன் கற்பிக்கையில் இம்மரியாதியிலெ உடையார்* (SII,iv,348.)

கற்பித்த (வி) கொடுத்த (1414) *589 வருஷம் ஆனிமாதம் 28ம் தேதி குமரிப்பகவதிக்கு அடிமை கற்பித்த தட்டான் தம்பி* (TAS,viii,p.26.)

கற்பித்த (வி) ஏற்படுத்திய (1145) *தென்வள நல்லூரில் கற்(ப்)பித்த பன்னிரு நாழி அரிசி நானாழியிலும்* (TAS,iv,p.20-21.)

கற்பித்து (வி) எண்ணி (1200) *கருவளர் கந்தனைக் கற்பித்தடியிணை கண்டன்னே* (SII,vii,121.)

கற்பினள் (பெ) கற்புடையவள் (1128) *சொற்றிறம் புணர்ந்த கற்பினளாகி விருப்பொடு* (SII,vii,773.)

கற்பு (பெ) தேர்ச்சி; வேலைப்பாடு (905) *கற்பமைந்த கரதலத்துச் சிறப மாத்தாண்டற்க்கும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கற்பூரக் காப்பு (பெ) கற்பூரத்தால் விக்கிரகங் களுக்குப் பூசுதல் (1339) *அடைக்காய் அமுது இலை அமுது சந்தனக்காப்புக் கற்பூரக்*

காப்பு திருவிளக்கு எண்ணை (TDI,i,104.)

கற்பூர தயிலம் (பெ) கற்பூரம் சேர்ந்த எண்ணை (1088) *கற்பூரதயிலம் ஒரு செவிடரையும்* (SII,iii,70.)

கற்பூரம் (பெ) ஒரு தூப தீபப் பொருள்; சூடம் (887) *அகிலுட்பட கற்பூரமும்* (SII,xiv,16a.)

கற்பூர வரி (பெ) ஒரு வரி (1300) *கடமை குடிமை கற்பூர வரி அந்தராயம் வினியோகம்* (SII,viii,213.)

கற்பூர விலை (பெ) கோயில் நிலத்து மீது உரிமை பெற கொடுக்கப்படும் குறைந்த விலை (993) *இத்தேவர்க்கே இக்காட்டுக்கு கற்பூர விலைக்கு ... இத் தேவர் பண்டாரத்து வைத்த காசு 30* (SII,xiii,182.)

கற்பூரவிளக்கு (பெ) கற்பூரங்கொண்டு எரியும் விளக்கு (895) *இக்கற்பூரவிளக்கும் நொந்தாவிளக்கும்...* (SII,iii,48.)

கற்றளி (பெ) கற்கோயில் (800) *இளங்கோதி அரையர் எடுப்பித்த கற்றளி* (ips(trAn.),11a.)

கற்றறிந்தோர் (பெ) அறிஞர் (905) *கற்றறிந்தோர் திறல் பரவக் களப்பாழரைக் களைகட்ட* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கற்றுப்புல் (பெ) கன்று உண்ணும் புல் (1050) *ஆமைதவழு நிலங் கற்றுப்புல் போகா முற்றூட்டும் திருத் தொண்டீச்வரமுடைய பிடாரற்கு* (SII,iv,416.)

கற்றுப்புல் போகா முற்றூட்டு ஒரு நிலத்தின் வருவாய் முழுவதும் (1050) *ஆமைதவழு நிலங் கற்றுப்புல் போகா முற்றூட்டும் திருத்தொண்டீச்வரமுடைய பிடாரற்கு* (SII,iv,416.)

கற்றை (பெ) திரள் (905) *கற்றைச் செங்கதிர்க் கடவுள்* (TASSI,1962-65,p.1-31.)

கற்றை (பெ) தென்னங்கீற்று (1249) *கூரைக் கட்டணங்களுக்கு இடும் வைக்கோல்லும் கற்றையும் தவிரக் கடவதாகவும்* (SII,vii,1039.)

கறங்க (வி) முழங்க (1055) *பறையது கறங்க ஆங்கது கேட்டு* (SII,iii,55.)

கறடிகை (பெ) ஒரு பறை வகை (978) *கைய்மணி ஈரணைக்கும் கறடிகைய் ஒன்றுக்கும் சேகண்டிகை ஒன்றுக்கும் திமிலை ஒன்றுக்கும்* (SII,iii,151-151a.)

கறடு (பெ) முத்து வகை (1014) *குறுமுத்தும் நிம்போளமும் பயிட்டமும் அம்புமுதுங் கறடும்* (SII,ii,3.)

கறண்டிகைச் செப்பு (பெ) சுண்ணாம்புச் சிமிழ் (1014) *கறண்டிகைச் செப்பு ஒன்று அடியும் முழலும் உட்பட பொன்* (SII,ii,1.)

கறணிக்கர் (பெ) கணக்கர் (1592) *வீட்டில்க் காரியஞ்சேவார் கறணிக்கர் உழ்பட்ட அனைத்து கொத்தும் கூடி* (SII,v,751.)

கறவைக் காணம் (பெ) ஒரு வரி (1415) *ஒழுகு நீற்பாட்டம் பாசிப்பாட்டம் கறவைக்காணம் மற்றும் எப்பேற்பட்ட பலவரியும் வினியோகமும்* (IPS,623.)

கறவை காணம் (பெ) சேரநாட்டில் ஒரு வகை நில உடைமை (1616) *சித்தாத்தங்கரை கறவை காணம் கீள்பறு மாயமான் குறிச்சி* (TAS,i,p.148.)

கறாய் (பெ) கருஞ்சேற்று நிலம் (1246) *எங்கள் நிலமாய் கறாய்யாய் நீர் நிலையுமாய்* (SII,viii,713.)

கறாய் (பெ) வயலின் பொதுப்பெயர் (1017) *காவிதி நாராயணன் ஆயிரவன் அட்டிக் குடுத்த நிலம் பளங் கறாய் முன்றுமாவும்* (SII,xix,128.)

கறி (பெ) காய்கறிகள் (869) *அமிர்து கறி சற்கரை* (SII,vii,523.)

கறி (பெ) மரக்கறியுணவு (941) *சாலைக்குக் கறிக்கு கொள்ளும் நிசதி இரு காடிக்கு நெல்* (SII,viii,529.)

கறி (பெ) மிளகு (954) *ஒரு தேங்காயும் கறியும் உப்பும் கூட* (TAS,iii,p.169-71.)

கறி (பெ) உணவு (955) *காய்க்கறி புளிங்கறி பொரிக் கறி தயிரமுதுக்கு* (SII,vii,513.)

கறிக் கால் (பெ) பாத்திர வகை (1060) *வெண்கல*

சட்டுவம் 1நால் நிறை ஐம்பலம் தரா கறிக்கால் 1நால் நிறை ஐம்பது (SII,v,644)

கறிச்சட்டி (பெ) காய்கறிசமைக்கும் சட்டி (976) *திருவமுதுபானையும் கறிச்சட்டியும் குடமும் கடாம் கலசமும்* (SII,xix,169.)

கறிய் பாட்டம் (பெ) மிளகு மீதான வரி (1300) *கடையில் எடுக்கும் கறிய் பாட்டம் உடையார்* (SII,viii,136.)

கறி விஞ்சனம் (பெ) உணவிற்கு சேர்க்கும் கறி முதலிய பொருள்கள் (1245) *திரு அமுதரிசி அறுநாழிக்கும் கறி விஞ்சனத்துக்கும் திருவிளக்கு எண்ணைக்கும் உடலாகவும்* (SII,xii,132.)

கறி அமிது (பெ) காய்க்கறி உணவு (871) *கறி அமிதுக்கு நாழி* (SII,viii,581.)

கறு (பெ) கர்வம் (771) *கறுவுடைந்த மனத்தவரை* (EI,xvii,16.)

கறை (பெ) கறுப்பு நிறம் (833) *கறைகண்டனுறை கோஇலு* (SII,xiv,44.)

கறை (பெ) சிறு வரிகள் (1030) *இன்நிலத்தால் வந்த இறையு நீக்கி கறையு மற்றும் மெப்பேர் பட்டிது நாங்களே இறுக்க* (SII,viii,67.)

கறை (பெ) நஞ்சு (1000) *நுனப்பியற் கணிந்த கறைவாயரவங் கடியாவகை* (SII,iv,167.)

கறை (பெ) முத்துத் தன்மைகளுள் ஒன்று (1015) *சிவந்த நீரும் குளிர்ந்த நீரும் வரையுங் கறையுங் குருவும் சுப்பிரமும் உடையன* (SII,ii,7.)

கறை (பெ) வரி (765) *பன்னிராட்டைக் கறையிறாமையும்* (EI,xxxvi,20.)

கறை கண்டன் (பெ) சிவபெருமான் (833) *கற்றூண் செய்தம்பலத்தொடு கறைகண்டனுறை கோஇலும்* (SII,xiv,44.)

கறை நிலம் (பெ) வரி நிலம் (880) *விளைநிலமாயிறைவயல் நிலமும் அடை நிலமும் கறை நிலமும் ஏத்தப்புலமும்* (SII,xii,102.)

கறைபடுவது (வி) களங்கப்படுவது (1176) *தள்ளுண்பன பூங்கொடியே கறை படுவது நிறை மதியே* (SII,xvii,585.)

கன்நி காவலர் (பெ) பாண்டியர் (1051) *மணிமுடி சூட்டிக் கன்நி காவலர் தென்னவர்* (SII,vii,1046.)

கன் மடை (பெ) கல்லால் செய்த மடை (833) *மற்றிதன்கட் கன்மடையு மணிமாடச் சிறுப்புத்தூர்* (SII,xiv,44.)

கன்மி (பெ) ஏவலாள் (926) *ஸ்ரீமுகம் வர இவர்தங்கன்மி உறத்தூர்த்திணையை* (SII,viii,668.)

கன்மிகள் (பெ) கோயில் ஊழியர் (910) *இவ்விளக்கு சந்த்ராதித எரிப்போமானோம் கன்மிகளோம்* (SII,xix,50.)

கன்மிப் பேறு (பெ) ஒரு வரி (1185) *பட்டிக்காசு காணிக்கை கன்மிப்பேறும் மற்றும் எப்பேர்ப்பட்ட வரிகளும் அகப்பட* (SII,viii,379.)

கன் முழை (பெ) கல் குகை (1100) *தென்றி முக்கூட்டுக் கன்முழை சுனையதற்கு மேற்கு* (SII,vii,144.)

கன்று (பெ) கால்நடை (550) *களரும் கன்றுமேய் பாழும்* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

கன்று (பெ) பசுவின் கன்று (916) *பசு ஒன்று கன்றும் குடுத்தே* (SII,xiv,56.)

கன்று (பெ) இளமரம்; செடி (911) *வேலியடைத்து நீரிறைத்து கன்று வைத்தமை* (SII,viii,640.)

கன்று கால் (பெ) கால் நடை (1300) *களவு காணுதல் கன்றுகால் குள.ட விடுதல் செய்யில்* (IPS,491.)

கன்று காலி (பெ) கால் நடை (1274) *படைகூட்டிவித்து சிறையும் பிடித்துக் கன்று காலியும் பிடித்துக் கொண்டு* (IPS,380.)

கன்றுமே கழனி (பெ) கால்நடைகள் மேயும் நிலம் (796) *கன்றுமே கழனியாக கொண்ட நிலம்* (SII,xii,38; MASI,xxvi,p.10-11.)

கன்றுமேய் பாழ் (பெ) கால்நடைகள்

மேய்ச்சலுக்கென்று ஒதுக்கப்பட்ட தரிசு நிலம் (550) *களரும் கன்றுமேய் பாழும்* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

கன்ன புஷ்பம் (பெ) ஒரு நகை (1204) *கன்ன புஷ்ப 3னால் 8 1/2 மாறி பொன் இருகழஞ்சே கால்* (SII,iii,211.)

கன்ன மாத்ரை (பெ) காது குத்தல் (1464) *ஆசாரியனுக்கு அஸ்தமாத்ரை கன்ன மாத்ரைக்கு பணம் 10* (TDI,ii,18.)

கன்னரம்பு (பெ) ஒரு மரம் (922) *பெரிய கன்னரம்பும் மிதன் கிழக்கு நோக்கியிழிய* (SII,ii,76.)

கன்னல் (பெ) கரும்பு (1100) *கன்னநய குடைத் தடக்கைப் பாருண் நிதி* (SII,viii,187.)

கன்னாடு (பெ) வீரர் நினைவாக நட்ட கல் (715) *சோழிகர் எறிந்து பட்டாரிது கன்னாடு* (EI,vii,4(i).)

கன்னாரிறை (பெ) செம்பு வெண்கலப் பாத்திரங்கள் செய்வோர் மீதான வரி (1276) *கடை இறை கன்னாரிறை காவடை மரவடை* (SII,vii,916.)

கன்னான் (பெ) உலோகப் பாத்திரங்கள் செய்பவன் (1014) *கன்னான் ஒருவனுக்கு இடைக்கரை காரியான க்ஷத்ரியசி$_0$கா$_2$மணிப் பெருங்கன்னானுக்குப் பங்கு ஒன்றும்* (SII,ii,66.)

கன்னி (பெ) கன்னி ராசி (946) *கன்னியில் வியாழந் நின்ற* (TAS,i,p.293-94.)

கன்னி நாயறு (பெ) புரட்டாசி மாதம் (954) *பராந்தக தேவர்க்காக கன்னி நாயற்று* (SII,viii,676.)

கன்னிப் போர் (பெ) முதல் போர் (1125) *குலவிழிஞங் கைக்கொண்டு கன்னிப்போர் செய்தருளிக் காந்தளூர்ச் சாலை* (TAS,i,p.21.)

கன்னி மாதர் (பெ) மணமாகாத பெண்கள் (1243) *பொருமாலை முடி அரசர் கன்னிமாதர் போற்றிசையும் புவந முழுதுடையார் தாமுந் திருமாதும்* (EI,xxiii,27.)

கன்னி மூலை (பெ) தென்மேற்கு மூலை (1623) *தெற்கு தெருவில் கன்னி மூலையில் குலசேகரப் பெருமாள் பிள்ளையாரை பிரதிட்டை* (TAS,vii,p.129.)

கன்னியா பூஜை (பெ) கன்னிப் பெண்கள் செய்யும் பூசை (1024) *நெல்லு நாற்கலநே தூணி கன்னியா பூஜைக்குப் பெண் பிளைகளெழுவர்க்கும்* (EC,x,Kl.112a.)

கனகத் துலை (பெ) பொன்னைக் கொண்டு செய்த துலாபாரம் (1251) *திருவை மணந்த தொக்கும் கனகத்துலையுடன் முத்தத் துலையிற் கலந்ததுவே* (SII,iv,620.)

கனக ராசி$_0$ (பெ) பொற்குவியல் (771) *கனகராசி$_0$உம் கதிர் மணியும்* (EI,xvii,16.)

கனபொள்ளலாக (பெ) கெட்டியாகவும் கூடாகவும் (1014) *கன பொள்ளலாகச் செய்த ருஷப$_4$ம் ஒன்று* (SII,ii,46.)

கனம் (பெ) தடிமன் (1245) *மேற்கே தச்சன் முழக்கோலாலே ஒரு முழ அகலம் சுவற் கனமாகத் திருமதிள் இடவும்* (IPS,341.)

கனல் (பெ) நெருப்பு (908) *புத்தேள் மாருதம் கனல்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கனற்பட (வி) எரிய (921) *மதிள் வஞ்சிக் கனற்பத விழித் தெதிர்ந்த* (SII,iii,206a.)

கனன்று (வி) மனங் கொதித்து (800) *செருவேன் மாறன் கனன்று* (EI,xiii,10.)

கனி (பெ) பழம் (800) *தொண்டைக் கனி புகுதுமதி* (EI,xiii,10.)

கனிஷ்ட$_2$ர் (பெ) இளையவர் (1266) *சி$_0$ஷ்யர்களில் இவள் கனிஷ்ட$_2$ராய் இம்மடத்திலே வர்த்தித்து* (SII,vi,59.)

கஸ்தூரி (பெ) மான்மதம் (1225) *உபனோடு சக்கரயோடு கஸ்தூரியோடு விளக்கெண்ண யோடு* (EI,iv,41.); (1380) *கஸ்தூரிக் காப்பும் குங்குமக் காப்பும்* (TDI,i,184.)

கஸ்தூரி (பெ) வாசனைப்பொருள்கள்(?) (1088) *கஸ்தூரி விலைமுதலகப்பட* (AVNM, 4,p.118-19)

கா

கா (பெ) விளை நிலப் பொதுப் பெயர் (550) *வடபாலெல்லை பல்லாங் குழிக்காவின் தெற்கும்* (TASSI,1958-59,p.41-83.)

காக்கக் கடவோம் (வி) காப்பாற்றக் கடமைப்பட்டுள்ளோம் (1113) *பரிவாரமும் பண்டாரமும் அப$_4$யம் புக்காரையும் பட்டுங் கெட்டுங் காக்கக் கடவோமாகவும்* (SII,iv,1396.)

காக்கப் பெறுவதாக (வி) (961) *எப்பேர்ப் பட்டதுங் கொள்ளாமேய் காக்கப் பெறுவதாகவும்* (SII,xiii,114.)

காக்க மாட்டாது (வி) (985) *பெருமானடிகளுக்கு குடுதா குடுத்த பசு கள்ளி கொள்ள காக்க மாட்டாது விற்று கொண்ட பொன்* (SII,xix,15l; IPS,44.)

காக்கின்ற (வி) ஆள்கின்ற (905) *உலகங் காக்கின்ற நாளில்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

காக பி$_3$ந்து$_3$ (பெ) கருப்புப் புள்ளிகள் (1015) *வயிரம் பொறியும் முறிவும் ரக்தபி$_4$ந்து$_3$வும் காகபி$_3$ந்து$_3$வும் வெந்தனவும் உடையன* (SII,ii,7.)

காகமுகிழ் (பெ) பாத்திர வகை (1009) *இலை தட்டு ஒன்று நிறை முப்பலம் காகமுகிழ் ஒந்று நிறை ஐம்பலம்* (SII,v,521.)

காக விருந்தம் (பெ) வயிரமணி வகை (1014) *கட்டின வயிரஞ் சப்படியுங் காக விருந்தமும் ஆக மூன்றும்* (SII,ii,32; SII,v,1383-1401.)

காகளம் (பெ) வாத்தியக் கருவி (866) *தாளங் காகளம் ஏற்றி* (TAS,i,p.1-14.)

காகாளம் (பெ) எக்காளம் என்ற வாத்தியம் (1000) *கைத்தாளமு மிரண்டு காகாளமும் ஒன்பது பணியமைச்சான்* (TAS,ii,p.173-207.)

காச்சுவன் (பெ) காச்$_0$யபக் கோத்திரத்தான் (983) *இவ்வூர்க் காச்சுவன் ப்$_3$ரஹ்ம நாராயண ப$_4$ட்ட ஸோமயாஜியார்* (SII,xix,321.)

காச்சுவன் (பெ) ஈயம் பூசுபவன்(?) (1015) *காச்சுவனுக்கு நிலன் அறுமாவும் கொல்லனுக்கு நிலன் ஆறுமாவும்* (TMPL,xviii,p.151-55.)

காச்சுவான் (பெ) ஈயம் பூசுபவன்(?) (1009) *பிராண உபகாரிக்குப் பங்கு அரையும் காச்சுவானுக்குப் பங்கு அரையும்* (CHEN,xxi,p.425-28.)

காசட்டாங் கல் (பெ) பொன் நிறுக்கும் ஓர் எடைக்கல் (946) *நொந்தாவிளக்கு எரிவதாக வைத்த பொன் காசட்டாங் கல்லால் ஐய்ங்கழஞ்சு* (SII,xix,438.)

காசாயக் குடி (பெ) வரிகளை நாணயமாகச் செலுத்தும் கைத்தொழில் செய்பவர், வணிகர் முதலியோர் (1441) *இன்னான்கெல்லைக்குட்பட்ட நிலத்தில் ஏறும் உழவுகுடி கைவினைக்குடி காசாயக்குடியிற் கொள்ளும் சிற்றாயம் காணிக்கை கட்டாயம்* (SII,v,257.)

காசாய வர்கம் (பெ) காசாகச் செலுத்தும் வரி (1289) *கடமை பொன்வரி காசாய வர்கம் கார் புன்பயிர் சித்திரைக் கார் வெட்டி னிலைஆள் காத்திகைப் பொன்வரி* (SII,viii,751.)

காசிக்காய் (பெ) ஒரு வகை நைவேத்தியம் (1512) *காசிக்காய் படி 1க்கு கொதி 1 மரக்கால் எள்பருப்பு 1 மரக்கால் சக்கரையமுது பலம் 100 நெய்யமுது இருநாழி* (TDI,iii,21.)

காசிநி (பெ) பூமி (1332) *கண்டவர்கள் உளமகிழக் காசிநியில் கலிதீரச் சம்பரைண் பலவழித்து* (EI,xxviii,28(2).)

காசினி (பெ) பூமி (1250) *பல்லவன் காசினிமேற் பழுதியலாத் தனிச் செங்கோல் நடாத்தி* (SII,xii,125.)

காசு (பெ) ஒரு பொன் நாணயம் (768) *பதினைந்து ஏற்றிக் காசு முப்பது* (SII,xiv,27.)

காசுக் கடை (பெ) நகைக்கடை வாணிகர் (1544) *காசுக்கடை மண்டபபடிக்கும் முந்னாள் கட்டின திருவேணம் ஒன்பது* (TDI,v,25.)

காசு கடமை (பெ) காசாகச் செலுத்தும் வரி (1262) *இந்நிலத்தால் வரும் நெற்கடமை காசுகடமை கமுகுகடமை* (SII,viii,753.)

காசுகல் (பெ) தங்கம் முதலியவற்றை நிறுக்கும் எடை (1001) *ஓராட்டைக்கு காசு கல்லால் பொன் ஆறு மஞ்சாடியும்* (SII,xvii,222.)

காசுநிறைக் கல் (பெ) (= காசு நிறைகல்) (923) *மாயை வட்டில் காசு நிறைக்கல்லால் எண் கழஞ்சே* (SII,xix,397.)

காசுநிறை கல் (பெ) பொன் நிறுக்கும் எடைக்கல் (1003) *காசு நிறை கல்லாற் பொன் முப்பதிந் கழஞ்சு* (SII,vii,1000.)

காசெட்டாங் கல் (பெ) ஒரு பொன் நிறுக்கும் எடைக்கல் (923) *விலைபொருள் காசெட்டாங் கல்லால் முக்கழஞ்சரை பொன்* (SII,xiii,211.)

காச்$_{0}$யபன் (பெ) காச்$_{0}$யப கோத்திரத்தான் (1002) *இவ்வூர் வைகானஸன் காச்$_{0}$யபன் ஸ்ரீவாஸுதேவன்* (SII,v,1409.)

காஞ்சணம் (பெ) உலோகம் (1050) *நான் கெல்லைக்கு உட்பட்ட கல்லுங் காஞ்சணமும் மற்றுக் கழியிறை உள்ளதும்* (SII,iv,413.)

காஞ்சி (பெ) ஒரு நகை (1176) *மறைபடுவன சூழ் காஞ்சியே* (SII,xvii,585.)

காஞ்சி (பெ) ஒரு புறத்துறை; காவல் (1012) *வஞ்சியிற் காஞ்சி வகுத்த* (SII,vii,863.)

காஞ்ஞிரக் குற்றி (பெ) எட்டிக் கட்டை (960) *கல்லுங்கரிடும் காஞ்ஞிரக் குற்றியும்* (TAS,iii,p.159-69.)

காட்சி (பெ) காணிக்கை (1114) *ஸ்ரீ ராஜேந்த்$_{3}$ரசோழ தேவற்கு காம்போசராஜன் காட்சியாகக் காட்டின கல்லு* (EI,v,13c.)

காட்சி காட்டின (பெ) பதிவானவை (1014) *உடையார் ஸ்ரீராஜராஜீச்$_{0}$வரம் உடையார் பண்டாரத்துக் காட்சி காட்டின நீக்கி* (SII,ii,3.)

காட்சிப்படி (பெ) பார்த்துச் சோதித்த படி (1328) *இப்பணம் முப்பதும் வண்ணக்கு ஆதிச்சதேவர் காட்சிப்படி காட்டி ஏற்றிக் கைச்செலவறக் கொண்டு* (SII,viii,178.)

காட்சிஎருது காசு (பெ) பொலி எருது வளர்ப்புக் கான வரி(?) (1014) *நிலன் காசும் காட்(ச்)சி எருது காசும் ஊர்க் கழஞ்சு காசும் உட்பட்ட இவ்வூர் இறை கட்டின காணிக்கடன்* (SII,ii,92.)

காட்ட (வி) காண்பிக்க (953) *பொருட் செலவு காட்டக் கடவன் அல்லானாகவும்* (SII,viii,651.)

காட்ட (வி) மெய்ப்பிக்க (771) *பழமையாதல் காட்டினா னங்கப்பொழுதேய் காட்ட* (EI,xvii,16.)

காட்ட (வி) வசூலிக்க (883) *எப்பேர்ப்பட்ட இறையுஞ் சோறு மாட்டுங் காட்ட பெறாதோ மாக* (SII,vii,420.)

காட்டப்பட்ட (வி) பொறுப்பான (896) *காட்டப் பட்ட பருஷரைய் கொண்டு போருவராகவும்* (SII,xiii,312.)

காட்டாகரம் (பெ) மரத் தச்சு (978) *கீழட்கு விலையில் நான்கு மா காட்டாகரப் பணி செய்த தில்லையாசாரியன்* (SII,iii,151-151a.)

காட்டாதிதாக (வி) கணக்கில் காட்டி வசூலிக்காததாக (916) *இறை காட்டாதிதாக விலை கொண்டு வசக்கி* (SII,xiv,56.)

காட்டாது (வி) வசூலிக்காது (1070) *உழுங் குடிகளை யாதானும் ஒரு குடிமை காட்டா தொழிவிதாகவும்* (TAS,iv,p.131-34.)

காட்டாதே (வி) சான்றாகக் காட்டாமல் (802) *உண்டிகையும் பட்டிகையுங் காட்டாதே* (SII,xii,42.)

காட்டாதோமாக (வி) வசூலிக்காமல் இருப்போமாக (894) *எப்பேர்ப்பட்ட இறையும் காட்டாதோ மாக* (SII,xiii,303.)

காட்டாரம்பம் (பெ) காட்டு நிலம் (1058) *காட்டாரம்பம் அஞ்சி லொந்று போ$_{4}$க$_{3}$ம் கொள்வதாகவும்* (EC,x,Mb.107.)

காட்டாவிட்ட (வி) ஒப்புவிக்காத (973) *தான் வந்து கணக்கு காட்டாவிட்ட குற்றத்தாலும் நம்பிமார் முன்னின்று பணி செய்ய விட்ட குற்றத்தாலும்* (SII,xix,63.)

காட்டாள்க் காசு (பெ) குடிமையில் சேர்ந்த ஒரு

வரி (1207) *காட்டாள்க்காசு 205 இப்படி குடிமைகள் இருபதெட்டாவது வரையும் இப்படி தண்டி* (SII,viii,263.)

காட்டி (வி) மெய்ப்பித்து (771) *நாட்டானின் பழமையாதல் காட்டி* (EI,xvii,16.)

காட்டிக் குடுத்தான் (வி) ஒப்படைத்தான் (921) *இவை ஐம்பதும் பரடை ஸபை$_{4}$யார்க்கும்(க்) காட்டிக் குடுத்தான்* (TAS,iv,p.120.)

காட்டிக் குடுத்து (வி) ஒப்படைத்து (887) *வரகுண மஹாராஜனுக்கு நவாத$_{3}$ஸ க$_{3}$ஜம் கொண்டுசென்று செந்நிலத்துக் காட்டிக் குடுத்து* (EI,xxxii,31b.)

காட்டிக் குடுத்தேன் (வி) ஒப்படைத்தேன் (953) *இவூர் நகரத்தார் வழிக் காட்டிக் குடுத்தேன்* (EI,vii,26d.)

காட்டிலும் (வி) உள்ளதென்று சொன்னாலும் (898) *இந்நிலஞ் சுட்டியெப்பேறப்பட்ட இறையே காட்டிலும்* (SII,xiii,325.)

காட்டின (வி) செய்த (896) *கரணங்கள் காட்டின விடத்து* (SII,xiii,312.)

காட்டின (வி) ஒப்படைத்தன (921) *சூலபாணி பருடை ஸபை$_{4}$க்கு காட்டின* (TAS,iv,p.120.)

காட்டினான் (வி) மெய்பித்துக் காட்டினான் (771) *நாட்டாற்றன் பழமையாதல் காட்டினான்* (EI,xvii,16.)

காட்டினார் (பெ) வரி வசூலித்தவர் (986) *இவர்களை இதன்றி மற்று இறை காட்டினார்* (SII,iii,128.)

காட்டுக் குறும்பு (பெ) காடாகிய அரண் (771) *காட்டுக் குறும்பு சென்றடைய* (EI,xvii,16.)

காட்டுப் போகம் (பெ) காட்டு விளைச்சல் மீதான வரி (1510) *தறிக்கடமை உலாவுகாட்சை தரகு கொடிக்கடமை பட்டிவாரம் காட்டுப்போகம் ஆக இதுவும் நீக்கி உள்ள பணவகையாய் உள்ளதிலும்* (TAS,vi,83.)

காட்டும் (வி) வீசும் (833) *கதிர்ச் செந்நெற் கவரி காட்டும்* (SII,xiv,44.)

காட்டும் (வி) எரிக்கும் (885) *அப்போது காட்டும் விளக்கினுக்கு* (SII,xii,69.)

காட்டு மிடத்தும் (வி) செய்யுமிடத்தும் (896) *எப்பேர்ப்பட்டன காட்டுமிடத்தும்* (SII,xiii,312.)

காட்டுவதாகவும் (வி) படைப்பதாகவும் (955) *தயிரமுதும் குறையாமைச் சி....க் காட்டுவதாகவும்* (SII,viii,9.)

காட்டுவாரானார்கள் (வி) தரக் கடமைப் பட்டவர்கள் (808) *இராப் போனகஞ்... காட்டுவாரானார்கள்* (EI,viii,29.)

காட்டுவான் (வி) படைப்பான் (755) *இரண்டு பொழுதுந் திருவமிருது காட்டுவானாக* (SII,vi,356.)

காட்டுவிப்பார் (வி) படைக்கச் செய்வார் (884) *மஹாதே$_{3}$வர்க்கு நாள்த் திரு அமிது காட்டுவிப்பார்* (SII,vi,314.)

காட்டேற்றி (வி) காண்பித்துக் கொடுத்து (1173) *காசு ஆவணக்களியே காட்டேற்றிக் கைச் செலவறக் கொண்டு* (SII,vii,1035.)

காடவன் (பெ) பல்லவன் (771) *எதிர் மலைந்த காடவன்* (EI,xvii,16.)

காடி (பெ) ஒரு முகத்தலளவு (731) *மகிழரேத்தது மேல் உடைய அஞ்நூற்றுக் காடியும்* (SII,viii,331.)

காடு (பெ) மரங்கள் நிறைந்த இடம் (550) *கன்று மேய் பாழும் காடும்* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

காடுகாவல் (பெ) ஒரு வரி (1400) *காணியாட்சிப் பேறு சாமுதாயப் பேறு காடுகாவல் பட்டினிப் பகுதி* (SII,vii,936.)

காடுகாள் (பெ) துர்க்கை; கொற்றவை (922) *காடுகாள் நொந்தாவிளக்கொன்றுக்கு வைத்த துளைப்பொன்* (SII,iii,101.)

காடுகோள் (பெ) மரஞ்செடிகள் முளைத்தல் (1011) *அரிகேசரி மங்கலத்து ஏரி உடைகுளமாய் காடுகோளாய் கிடந்தமையில்* (SII,v,724.)

காடுபாழ் (பெ) காடெழுந்த தரிசு நிலம் (1500)

இம்மரியாதிக்கு தங்கள் பற்று காடு பாழுமாய் காணாப்புரவுமாய் (IPS,635.)

காடு வெட்டுவித்து (வி) காட்டையழிக்கச் செய்து (1004) *விசம் அட்டிக் காடு வெட்டுவித்துக் கட்டை பறித்து* (SII,vii,440.)

காடெழுந்து (வி) காடு ஆகி (911) *காடெழுந்து பாழ்கிடந்த நிலம்* (SII,viii,640.)

காண் (வி) அறிக (700) *கற்கப்படுவது காண்(ஞ்) சொல்லிய புகிற்பருக்கும்* (IPS,4-5.)

காண்க (வி) அறியவும் (500) *நாட்டார் காண்க* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

காண்பதற்க்கு (வி) கண்டறிவதற்கு (922) *பரிமாறும் பொன் ஸமஞ்ஜஸங் காண்பதற்க்குச் செய்த* (SII,vi,295.)

காண்பதாக (வி) சரிபார்ப்பதாக (986) *திருவிழாச் செய்தவளவே கணக்கு காண்பதாகவும்* (SII,iii,128.)

காண்பிது (வி) (கணக்கில்) காட்டப்பட வேண்டியது (1000) *காராண்மை விடக்கடவியன் கடமை கூட காராண்மை காண்பிது* (TAS,iii,p.176-77.)

காண (வி) பார்க்க (796) *அப்பரிகர் வந்து ஹிரண்யவர்ம்ம மஹாராஜரைக் காண* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

காண நாழி (பெ) ஒரு முகத்தல் கருவி (873) *காண நாழியால் நிசதி அட்டக் கடவ* (SII,xiv,10.)

காணப் பெற (வி) செய்ய (896) *உவாவும் ப்ரதிபதமும் இந்நாளால் காணப் பெறப் பெறாததாகவும்* (SII,xiii,312.)

காணம் (பெ) ஒரு நாணயம் (500) *வேறுவேறு ஆஇரத்தறுநூறு காணந்..று...டு* (AVNM,1,p.67-69)

காணம் (பெ) ஒரு நாணயம்; பொருள் (691) *விலெக் காணம் கெயிக்கொடுத்து* (SII,i,151; EI,xvii,22.)

காணாவுலகம் (பெ) சொர்க்கம்; மேலுலகம் (805) *கண்டார் காணாவுலகத்திற் காதல் செய்து* (SII,xii,40; EI,xi,15.)

காணி (பெ) நிலத்தின் மீது பரம்பரை உரிமை (1002) *கீழ்ப்பட்ட ஜாதிகளில் காணிகளில் பணிசெய் மக்கள் பணிசெய் காணி யொழிய நின்றார் காணி விற்க* (SII,v,1409.)

காணி (பெ) உடைமை (813) *அவனுக்குக் காணியாக அட்டின பூமி* (SII,xiv,26.)

காணி (பெ) ஒரு சிறு நில அளவு; வேலியில் எண்பதில் ஒரு பாகம் (772) *நடுவு கிடந்த நிலன் காணிச் செய்யும்* (SII,xiv,19.)

காணிக் கடந் (பெ) (= காணிக் கடன்) (993) *இத்தேவர்க்கே காணிக்கடந் ஆண்டு வரை யளப்பதாந நெல் 150* (SII,xiii,182.)

காணிக் கடமை (பெ) காணியாளர் அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலவரி (926) *காணிக் கடமையாகக் செய்து குடுக்க* (SII,viii,668.)

காணிக் கடன் (பெ) காணியாளர் அரசுக்குச் செலுத்த வேண்டிய நிலவரி (969) *வேலி நூற்றிருபதின் கலம் காணிக் கடனாக வந்த நெல்லு* (SII,xiii,236.); (1008) *அரையே இரண்டு மாவினால் இறை கட்டின காணிக்கடன் நெல்லு* (EI,xxii,34.)

காணிக் குடி (பெ) காணி உரிமை உடைய குடி (998) *தூதுவன் கரம்பிய காணிகுடியாய் இந்நிலங் கொண்டு* (SII,vi,3.)

காணிக்கை (பெ) வரி வகை (1257) *குதிரை வரி பலகாணிக்கை புறக்கலனை தறி இறை தட்டார்ப்பாட்டம்* (SII,vii,55.)

காணி செய்வார் (பெ) (= காணியாளர்) (1142) *குச்சியும் அலகும் எடுத்து இக்கோயிலில் புகுந்து காணிசெய்வாரே* (SII,vi,340.)

காணித் துகை (பெ) ஒரு வரி (1312) *சிங்கப் பிரான் பட்டர் காணித்துகை மாப்பணம் மனைப்பணம் வேபணம் பாட்டம் எப்பேறப்பட்டனவும் தவிர* (SII,viii,251.)

காணிப் பற்று (பெ) ஒருவர் காணியாகப் பற்றியுள்ள நிலம் (1202) *ஆவுடையாநாந கல்வாயி னாடாழ்வாநேன் நங் காணிப்பற்று புதுவண்டாங் குடியாந ஆவுடை நல்லூர்* (IPS,331.)

காணி ப்ரமாணம் (பெ) காணி விற்பனை (1273) *சோலையாற்கும் காணிப்ரமாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது* (IPS,386.)

காணி பற்று (பெ) (= காணிப்பற்று) (1228) *திருவம்பலம் உடையானுக்கு நங் காணிபற்றில் நெல்வாயிலில்* (IPS,277.)

காணி மாடு (பெ) காணியாகக் கொண்ட கால்நடை (1209) *இவ்வெருமை பத்தும் காணி மாடாகக் கைக்கொண்டு அருமொழிதேவன் உழக்கால்* (SII,vii,539.)

காணியாட்சி (பெ) பரம்பரை நிலக்கிழமை உரிமை (1250) *சேரபாண்டிய தேவற்கு காணியாட்சி பண்ணி குடுத்த பரிசாவது* (IPS,343.)

காணியாமைப் பேறு (பெ) (= காணியாள் பேறு) (1290) *கடமை காசுகடமை காணியாமைப் பேறு சீகாரியப் பேறு வெட்டி நிலையாள் பணிக்கொத்துப் பாடிகாவல்* (SII,xvii,128.)

காணியாள்ப் பேறு (பெ) காணியாளர் பொருட்டு செலுத்தும் ஒரு வரி (1289) *பாடிகாவல் ஊர்க்கணக்குப் பேறு காரியப் பேறு காணியாள்ப் பேறு ஓலைஎழுத்து வினியோகம் வாசல் வினியோகம்* (SII,vii,793.)

காணி வெட்டி (பெ) காணியாளருக்காக செய்யும் கட்டாய ஊழியம் (1085) *மாவிறை என்றும் உள்ச்சேவக மென்றும் காணி வெட்டி என்றும் இவைச்சுக்குத் தலைமாறு ஊரோம் இட்டு..* (SII,v,1003.)

காணிஆள்ப் பேறு (பெ) காணியாளர் பொருட்டு வாங்கும் ஒரு வரி (1288) *பணிக்கொத்து பாடிகாவல் ஊர்க்கணக்குப் பேறு காணிஆள்ப் பேறு சீகாரியப் பேறு* (SII,vii,795.)

காணிஆளர் (பெ) காணியாட்சி உரிமை உடையவர் (1090) *பள்ளிச்சந்தங்கள் காணியுடைய காணிஆளரைத் தவிர இப்பள்ளிச்சங்கத்தார்க்கே காணியாகப் பெற்றமைக்கும்* (EI,xxii,35.)

காணும் ஆற்றால் பார்க்கும் படி (921) *எல்லாஜ்ஜனமுங் காணும் ஆற்றால் எடுத்துக் கொண்டு* (ARASI,1904-05,p.131.)

காத்த (வி) பாதுக்காத்த (771) *ஓடாத வேலி உடன் காத்த* (EI,xvii,16.)

காத்தல் (பெ) (1219) *அறங்காத்தல் வேண்டும்* (EC,x,Kl.120.)

காத்தாண்டான் (பெ) காத்து வளர்த்தவன் (895) *இது காத்தாண்டான் அடி என் முடிமேலன* (SII,iii,93.)

காத்தார் (பெ) பாதுகாப்பவர் (709) *இது காத்தார் கான் மேலவென்றலை* (EI,iv,22a; SII,i,135.)

காத்திகைக் காத்திகை (பெ) கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரம் (898) *பங்குனி உத்திரம் முதலாகக் காத்திகைக் காத்திகையளவும்* (SII,iv,360.)

காத்திகை கடமை (பெ) ஒரு வரி (1400) *பீலி பஞ்சு ஆயவற்க்கம் நந்தப்பச்சை காத்திகை கடமை* (SII,viii,355.)

காத்திகைத் திங்கள் (பெ) கார்த்திகை மாதம் (953) *யாண்டு 3வது [இவ்வா]ண்டு காத்திகைத் திங்கள் கீழ்க்கோட்டத்து* (SII,xiii,45.)

காத்திகைத் திருவிழா (பெ) கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரத்தில் வரும் திருவிழா (980) *காத்திகை காத்திகைத் திருவிழாவுக்கு சாலைப்புறமாகச் செய்த நிலம்* (SII,xix.274.)

காத்திகைப் படி (பெ) ஒரு வரி (1294) *ஊர்ப் படிச்சம் காத்திகைப்படி நாட்டார் வரிவு...எப்பேர்ப்பட்ட வரிவுகளும்* (EC,x,Ct.88.)

காத்திகைப் பொன் (பெ) ஒரு வரி (1343) *பயிற்செய்த நிலத்துக்கு வேலி ஒன்றுக்குப் பொன்வரிக்கு பணம் பதினேழரையும் சந்திவிக்கிரமத்துக்கு பணம் இரண்டரையும் காத்திகைப்பொன்னுக்கு பணம் ஒன்றும்* (SII,viii,72)

காத்திகைமாத இரட்டி (பெ) ஒரு வரி (1401) *நத்தவரி காத்திகைமாத–இரட்டி மற்றும் இப்பற்றில் கொள்ளும் பலவரிகளும்* (SII,iv,343)

காத்திருந்து (வி) காப்பாற்றியிருந்து (800) *அவர்களைக் காத்திருந் தாண்பிள்ளைப் பெறுவதும்* (SII,vii,581.)

காத்து நோக்கி (வி) பாதுகாத்து (1800) *ஒரு பொல்லாப்பற காத்துநோக்கி போதக்கடவதாகவும்* (IPS,898.)

காத்தும் (வி) (944) *இந்நிலத்தால் எப்பேர்ப்பட்ட இறையும் இறுத்துங் நாங்களேய் காத்துங் குடுபோமாக* (SII,viii,689.)

காத்தும் (வி) அழிவு வாராமல் தடுத்தும் (1139) *இவகரத்துக்கு அழிவு செய்வாரை காத்தும் காபிச்சும்* (SII,xiv,243.)

காத்தூட்டுவார் (பெ) காத்து வளர்ப்பவர் (938) *இது காத்தூட்டுவார் இவ்வூர் பதிபாத மூலத்தார்* (SII,v,547.)

காத்தூட்டுவான் (பெ) (798) *இதுகாத்தூட்டு வான் அடி எம் தலைமேலந* (SII,xii,39.)

காதம் (பெ) ஒரு நீட்டல் அளவு (879) *கங்கெ இடைக் குமரி[யி]டை எழுநூற்றுக் காதத் தூள்ளும்* (SII,iii,8.)

காதல் (பெ) விருப்பம் (805) *காணாவுலகத்திற் காதல் செய்து* (SII,xii,40; EI,xi,15.)

காதலர் (பெ) (ஒருவரின்) மக்கள் (1056) *கருது காதலருள் இத்தலம் புகழ் ராஜேந்த்ர சோழனை* (SII,iii,29.)

காதலர் காதலர் (பெ) பேரர் (1056) *மன்னுதன் காதலர் காதலர் தம்முள் மேதகு கதிராங்கனை* (SII,iii,29.)

காதலியர் (பெ) மனைவியர் (800) *தென்னாடர் காதலியர்* (EI,xiii,10.)

காந்தர்பிகள் (பெ) பாடுபவர்கள் (934) *காந்தர்பிகட்கு நங்கைமார்க்கும் அரியக்கு* (TAS,viii,p.43-45; EI,xxviii,37.)

கானல் (பெ) மலை சார்ந்த சோலை (1000) *நண்ணுதலர் கானற் படு மலரு நறுங்குடுமி விண்ணுதல் போடுஞ் சிராமலை* (SII,iv,167.)

காப்ப (வி) பாதுகாக்க (771) *குளிர் வெண்குடை மண்காப்ப* (EI,xvii,16.)

காப்பது (வி) பாதுகாப்பது (866) *அற மருசாதிக் காக்கும் பரிசினாற் காப்பது* (TAS,i,p.1-14.)

காப்பார் (வி) பாதுகாப்பவர் (885) *முக்கியரும் இது காப்பார்* (SII,iii,92.)

காப்பான் (பெ) காவல் செய்கின்றவன் (765) *நாடு காப்பானும் வியவனும் புகாமையும்* (EI,xxxvi,20.)

காப்பியந் (பெ) காப்பிய கோத்திரத்தைச் சேர்ந்தவன் (941) *காப்பியந் சேந்தந் மாடமுடியாறும்* (SII,viii,196.)

காப்பு (பெ) காவல் (1068) *மாப்பெருந்தானை யேற்றக் காப்புடைக் கடல் வலையரணத்து* (SII,xxi,38.)

காப்போம் (வி) பாதுகாப்போம் (745) *இவ்வற மூரோங் காப்போமாக* (TAMIZ,1970,p.122.)

காம்பு (பெ) தண்டு (1008) *இரு பறை நிலைக் கண்ணாடி அடியும் காம்பும் தரா வுட்பட நிறை 117 பலம்* (SII,v,638.)

காம்போச ராஜன் (பெ) காம்போஜ நாட்டு மன்னன் (1114) *ஸ்ரீ ராஜேந்த்ர சோழ தேவற்கு காம்போசராஜன் காட்சியாகக் காட்டின கல்லு* (EI,v,13c.)

காமக்காணி (பெ) ஒரு பிராமண கோத்திரம் (771) *கொற்கைகிழான் காமக்காணி நற்சிங்கற்கு* (EI,xvii,16.)

காமக்கோட்டம் (பெ) சமணர் அம்மன் கோயில் (745) *இவ்வற மூரோங் காப்போமாக ஒட்டினோங் காமக் கோட்டமழித்த பாவமாக* (TAMIZ,1970,p.122.)

காமர் (பெ) அழகு (905) *சோமாசி குறுச்சி என்னுங்காமர் வண்பதி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

காமரப் பேரையன் (பெ) இசை வல்லுநரின் பட்டம் (1014) *கான பாடி மூவர்க்கு...ஆச்சன் கீர்த்தி பூஷணனான அறிஞ்சிகை காமரப் பேரையனுக்கு* (SII,ii,66.)

காமியம் (பெ) நினைத்த பொருள் (1198) *தம்முடைய இட்ட காமியம் முடிகைக்கு* (SII,vii,496.)

காமுண்டன் (பெ) (கன்னட நாட்டில்) நிலக்கிழார் பட்டம் (1015) *ஊர்க்கு சமந்த கோத்தயன் உத்தமநான சோழ விச்சாதிர காமுண்டனும் இடவ காமுண்டனும்* (EC,ix.Cp.127.)

காமுண்டஸுவாமி (பெ) ஐந்நூற்றுர் வணிகக் கூட்டமைப்பில் ஓர் உறுப்பாகக் காணப்படும் நிலக்கிழார்கள் (1050) *ஸமையதன்மை இனிது நடாதிருக்கின்ற செட்டியும் செட்டிபுத்திரனும் கவறையும் காமுண்டஸுவாமியும்* (AVNM,2,p.6-8)

காமுண்டுகள் (பெ) ஊர் நிலக்கிழார்கள் (1110) *ஊரமுங் காமுண்டுகளும் இந்த தர்மத்தை* (EC,iv,ch.197.)

காமுற்று (வி) ஆசையுற்று (1135) *பூமன்னுபாவை காமுற்று முயங்க* (SII,vii,43.)

காய் (பெ) பாக்கு (880) *வெற்றிலையுங் காயு மித்தனைக்குமாக* (SII,xii,103.)

காய் (பெ) வாழை முதலிய காய் (1000) *வாழைக் காய் ஏழுகுலை ஓரோகுலை அறுபது செய்து காயுளவாயிருப்பிது* (TAS,ii,p.173-207.)

காய்க்கறி (பெ) காய்கொண்டு சமைத்த உணவு (878) *காய்க்கறி ஒன்று* (SII,xiv,13.)

காய்ச்சுவக் காணி (பெ) காய்ச்சுவன் (ஈயம் பூசுவான்) வாழ்க்கைச் செலவுக்குக் கொடுத்த நிலம் (1015) *காய்ச்சுவக் காணியால்...பழம்படி நிலன்* (TMPL,xviii,p.151-55.)

காய் ஞுழுகின (வி) காய்க்கத் தொடங்கின (1011) *கிடங்கறுத்து வாழையிட்டுக் காய் ஞுழுகின ஆண்டு முதல் இவ்வண்ண மிறை கொள்வோமாகவும்* (SII,vii,412.)

காய்த்தி (வி) வெட்டி (800) *வண்கைச் செருமாறன் வாள் காய்த்தி...சேய் நாடு தாமூர்ந்த* (EI,xiii,10.)

காய்ந்து (வி) சுட்டு (800) *கொடும்பாளூர் காய்ந்தெரித்தான்* (EI,xiii,10.)

காயம் (பெ) பெருங்காயம் (878) *கூட்டுக்கு பசுவின் தோய்தயிருரிக் காயம் இரு செவிட்டு* (SII,xiv,13.)

காயல் (பெ) உப்பங்கழி (771) *காயலுட் கமலம் மலரும்* (EI,xvii,16.)

கார் (பெ) கார் காலம் (800) *வண்டளவங் கார் தோற்றும்* (EI,xiii,10.)

கார் (பெ) ஒரு குறுவை அறுவடைப்போகம் (969) *கார் பாதியும் பிசானம் பாதியும்* (SII,xiii,236.)

கார்க் கடல் (பெ) கரிய கடல் (1176) *பார்க் கடலிற் கார்க் கடலப்படி வாழ முடி சூடி* (SII,vii,403.)

கார்த்திகை (பெ) கார்த்திகை நட்சத்திரம் (956) *தநு ஞாயிற்றுத் திங்கட்கிழமை பெற்ற கார்த்திகை* (SII,vii,499.)

கார்த்திகை திங்கள் (பெ) கார்த்திகை மாதம் (935) *இவ்வாண்டை கார்த்திகை திங்கள்* (SII,xix,431.)

கார்த்திகைய் (பெ) கார்த்திகை மாதம் (910) *கார்த்திகைய் அகப்பட முப்பதின் கலமும்* (SII,iii,96.)

கார்த்திகை விளக்கு (பெ) கார்த்திகை மாதத்தில் எரிக்கும் விளக்கு (1003) *உத்தியும் கார்த்திகை விளக்கும் இட விளக்கினுக்கு* (SII,xvii,243.)

கார்திகைக் கணத்தார் (பெ) கோயிலில் கார்த்திகைத் திருநாளைக் கவனிக்கும் குழு (894) *எம்மூர் இளமக்கள் கார்திகைக் கணத்தாரிடை* (SII,xiii,303.)

கார் நிலம் (பெ) கார் போகம் விளையும் நிலம் (959) *உவச்ச கார் நிலம் காலும் நீக்கி* (SII,vii,501.)

கார்பசான நிலம் (பெ) கார், பசானம் ஆகிய இரு போகமும் விளையும் நிலம் (1056) *குக்கநூர் எல்லை யேத்த மகப்படக் கார் பசான நிலத்துக்கும்* (SII,v,489.)

கார் மறு (பெ) காரும் மறுவும் ஆன இரு போகங்கள் (1142) *ஐய்வேலியும் கார்மறுவோடு வேலி ஒன்றுக்கு நூற்றிருபதின் கலமாக* (SII,xvii,598.)

கார்முக$_3$பார்த்த$_2$ந் (பெ) (அர்ஜுனனைப் போல்) வில்லாளி (771) *கண்டக நிஷ்டுரந் கார்யத$_3$த்ஷிணந் கார்முக$_3$ பார்த்த$_2$ந்* (EI,xvii,16.)

கார்ய்த$_3$த்ஷிணந் (பெ) செயல் வல்லவன் (771) *க்ருதாபதா$_3$நந் கலிப்பகை கண்டக நிஷ்டுரந் கார்யத$_3$த்ஷிணந்* (EI,xvii,16.)

கார்வண்ணன் (பெ) திருமால் (905) *கண்படுத்த கார் வண்ணன்* (TASSI,1962-65,p.1-31.)

காரடை (பெ) ஒரு வரி (1387) *உழவன் சோடி காரடை மாவடை குளவடை* (EI,viii,31.)

காரணப்பட (வி) கணக்கெழுத (1453) *நம்மோடு கூடக் கூலிச்சேவகம் சேவிக்கருதென்றும் காரணப்பட அருதென்றும் காரியம் பறைய அருதென்றும்* (TAS,v,p.90-92.)

காரணப்பேற் (பெ) கணக்கர் (1426) *பிள்ளைவரியும் காரணப்பேற்குக் கழித்து நின்றபேற்குக் கொள்ள* (IPS,784)

காரணம் (பெ) சான்று (1122) *முகத்தீடு மேறுகைக்குக் காரணங்கண்டு வண்ணாரெயிட்டுச் செய்வித்தமையில்* (EZ,iii,33(1).)

காரணவமார் (பெ) (சேரநாட்டில்) குடும்பத் தலைவரான நிலக்கிழார் (1714) *பண்டு முன்னாள் நம்முடய காரணவமார் நடத்தி வந்தபடிக்கு தானமானமாய்* (TAS,v,p.217-18.)

காரணவர் (பெ) உரிமை உடையவர் (1175) *மதுரைக்குக் காரணவரான பராக்கிரம பாண்டியர் மகனார் வீரபாண்டிய தேவரை* (EI,xxii,14.)

காராண் காணி (பெ) பயிரிடும் உரிமையோடு கூடிய காணி (1264) *மருசாதிப்படி கடமை இறுத்து காராண்காணியும் அனுபவிப்பதாக* (SII,viii,212.)

காராண் கூறு (பெ) பயிரிடும் உரிமையில் பங்கு (1000) *கோயில்க் கரிப் பொற் கணபதியார் வாழ்க்கைக் காராண் கூற்றால்ச் செல்லும்* (TAS,ii,p.173-207.)

காராண்மை (பெ) பயிரிடும் உரிமை (500) *கொங்குநாட்டும் மவரு காராண்கிழமையுங் கலக்கிழமையும்* (AVNM,1,p.67-69)

காராண்மை (பெ) (771) *காராண்மை மீயாட்சி உள்ளடங்க* (EI,xvii,16.)

காராம்மை (பெ) (= காராண்மை) (962) *ஓராண்டு தெகிய முட்டிக்கில் காராம்மை விடக் கடவியர்* (TAS,iii,p.171-73.)

காராமணி (பெ) ஒரு வகைப் பயறு (1545) *காராமணி 1 மரக்காலுக்கு பணம் 1* (TDI,v,34.)

காராழர் (பெ) உழுது பயிரிடுவோர் (885) *பூமிய்க்கு காராழர் னாலு குடி வெள்ளாளரும்* (TAS,ii,p.80-82.)

காராளர் (பெ) உழுது பயிரிடுவோர் (951) *காராளரால் செலித்திச்சுகொள்ளக் கடவியர்* (TAS,i,p.289; TAS,v,p.7.)

காரியப்பேர் (பெ) ஊழியர் (1274) *இவ்வூரில் மாவிலிவாணா...ர் காரியப்பேர் படை கூட்டிவித்து சிறையும் பிடித்து* (IPS,380.)

காரியப் பேறு (பெ) ஒரு வரி (1289) *பாடிகாவல் ஊர்க் கணக்குப் பேறு காரியப் பேறு காணியாள்ப்பேறு ஓலை எழுத்து வினியோகம்* (SII,vii,793.)

காரியம் (பெ) செயல் (1012) *நித்தவிநோதன் காரிய மல்லதோர் காரிய நினையாதா ராண்டலைமை* (SII,vii,863.)

காரியம் (பெ) செயல் (845) *ஸ்வாமி காரியம் எக்காரியமும்* (TAS,ii,p.80-82.)

காரியம் பறைய (வி) நிர்வாகஞ் செய்ய (1453) *நம்மோடு கூடக் கூலிச்செவகம் சேவிக்கருதென்றும் காரணப்பட அருதென்றும் காரியம் பறைய அருதென்றும்* (TAS,v,p.90-92.)

காரியவாராட்சி (பெ) அரசு அலுவலர் பொருட்டுச் செலுத்தும் ஒரு வரி (1100) *கற்பூரவிலையும் காரியவாராட்சியும் வெட்டிப் பாட்டமும் பைஞ்சிபிலி சந்திவிக்கிரப்பேறும்* (TAS,vi,3.)

காரியவிசம் (பெ) காரியச் செலவு (966) *திறப் பிடுவனென திறப்பிடாமலும் இக்கா*

சொழிக்கவும் காரியவிசத்துக்கு யாம் (EI,xxviii,17b.)

காருண்யம் (பெ) கருணை (1250) *நெடுங்காலங் கிடந்த குறைகளை வெட்டிவிட்டருளிக் காருண்யம் பண்ணி அருளி* (SII,xii,129.)

காரு வ்ருத்தி (பெ) கொல்லர் வாழ்க்கைச் செலவுக்கு விட்ட நிலம் (1439) *குலால வ்ருத்தி நிலம் முக்காணியும் காரு வ்ருத்தி நிலம் முக்காணியும்* (TAS,viii,p.5-7.)

காரை (பெ) மர வகை (1018) *இவ்வெல்லையிற் காரையோடு நின்ற புற்றே யுற்று* (SII,iii,205.)

காரை கடறு (பெ) முள் படர்ந்த இடம் (922) *கிழக்கு நோக்கியிழியக் காறை கடறும்* (SII,ii,76.)

காரை பண்ண (வி) திருத்த (1614) *வஸந்தன் தோட்டம் திருமஞ்சனத் தோட்டம் காரை பண்ணவும் சொப்பநிடவும் பணம் 4ம்* (TDI,vi.18.)

கால் (பெ) தடவை (913) *...ஒரு காலாவதும் இருகாலாவது முக்காலாவதும் விற்று விலையாவணம் செய்து குடுத்த* (SII,xix.170.)

கால் (பெ) நாலில் ஒரு பாகம் (804) *கால் சிராவணையும்* (SII,xiv,37.)

கால் (பெ) மரக்கால் (992) *இறை ஸ்ரீ கோயிற்கால் ஊர்க்கால் பழுவூர் நக்கனால்* (SII,xix,357.)

கால் (பெ) வயலின் பெயர் (1000) *துடந்தலைக் காலால் வாழுந் தரணிவர்ம்மர் அமைச்ச திருச்சந்தனத்திலுள்ள பூமி ஞாறலூர்க்கால் நால்க்கலம்* (TAS,ii,p.173-207.)

கால் (பெ) வாய்க்கால் (691) *நோக்கி நாட்டுக் காலுக்கே* (SII,i,151; EI,xvii,22.)

கால் (வி) ததும்புகின்ற (1200) *ஆர்வத் தாலின்ன மறங்கால் வேலண்ணல்* (IPS,676.)

கால் கலங்க (வி) நடுங்க (905) *காடவனைக் கருவூரில் கால் கலங்கக் களிறுகைத்த* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கால் காறை (பெ) ஒரு நகை (1009) *மேற்படியார் சாத்தும் பொன்னின் காற்காறை ஒந்றினால்* (SII,v,521.)

கால் கூலி (பெ) முகத்தல் கால் மீது ஒரு வரி (1056) *திங்கள்க் காசும் காலளவு பாட்டமும் பாடிகாவல் கூலியும் கால் கூலியும் கோல் கூலியும்* (TAS,i,p.164-68.)

கால்கோட்டிறாமை (வி) தெங்கு கமுகு நட்ட புதிதில் கொடுக்கும் வரி செலுத்தாமை (765) *தெங்கு கமுகும் இட்டன கால் கோட்டிறாமையும்* (EI,xxxvi,20.)

கால்கோட்டுக் காணம் (பெ) பயன் மரங்கள் நடும்பொழுது செலுத்தும் ஒரு வரி (765) *கண்ணீட்டுக் காணமும் கால்கோட்டுக் காணமும்* (EI,xxxvi,20.)

கால்கோடு (பெ) நடுகை (753) *பல்லுருவில் பலய மரமும் கால்கோட்டிறாமயியும்* (SII,ii,73.)

கால் கோள் (பெ) பாழ்(?) (1044) *உட்பட்ட நிலம் காற்கோளாய்க் கிடந்தமையில் இறையிலி யாக* (SII,v,465.)

கால் பறிந்தோடி (வி) வேகமாக ஓடி (1056) *வெனுற நெளித்துப் பின்னுற நோக்கி கால் பறிந்தோடி* (SII,iii,29.)

கால் மாடு (பெ) பசு முதலிய கால்நடை (923) *கால் மாட்டாற் பொன் இரு கழஞ்சுக்கும்* (SII,xix,394.); (1014) *ராஜராஜதே$_3$வர் குடுத்த கால் மாட்டிலுங் குடுத்தார் குடுத்த கால் மாட்டிலும்* (SII,ii,63&94.)

கால் மோதிரம் (பெ) கால் விரலில் அணியும் மோதிரம் (1014) *திருக்கால் மோதிரம் பத்திநால்* (SII,ii,2.)

கால் வளைத்து (வி) அம்பை வளைத்து நாணேற்றி (785) *கொடிஞ்சிலை அன்று கால் வளைத்தும்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

கால் வாசி (பெ) அளப்பதில் அல்லது அளக்குங்காலில் ஏற்படும் குறைபாடு (1068) *அருமொழி தேவந் மரக்காலாக்கிக் கால் வாசியுங் காலளவு கூலியுங் கொற்றளவு வாசியுமுட்பட* (EI,xxi,38.)

கால் வாய்த்தலை (பெ) கால்வாயின் தலை மதகு

(1300) *காலுங் கால் வாய்த்தலையுங் கிணறு மரமு* (IPS,665.)

காலகதப் பாட்டம் (பெ) ஒரு வரி (1298) *நீர்நிலக் காசு தறியிறை கடையிறை காலகதப்பாட்டம் தட்டார்ப் பாட்டம் ஆசுவக்கடமை செக்குக் கடமை* (SII,i,61.)

கால குறையா (வி) காலம் முழுவதிலும் அணையாத (1008) *இப்பூமியால் கால குறையா மூன்று நந்தாவிளக்கு செலுத்திக்க கடவர்* (IA,xx,p.290-91.)

காலஞ் செய்த (வி) இறந்து போன (1249) *இவ்வூருக்குப் பழியாக காலஞ் செய்த திருமேனி தையாண்டார்* (SII,viii,193.)

காலஞ்செய்தருளுகை (வி) உயிர்விடுகை (1311) *மூன்று திருமேனிகள் காலஞ்செய்தருளுகையில்* (IPS,546.)

காலத் தேவை (பெ) ஒரு வரி (1273) *கடை வரி இனவரி சாட்டு வரி ஊசிவாசி காலத் தேவை கரைத் தேவை அணைத் தேவை உள்ளிட்ட அனைத்துபாதிகளும்* (SII,vii,145.)

கால தோ$_3$ஷம் (பெ) பஞ்சம் (1152) *யாண்டு மூன்றாவது காலதோ$_3$ஷ முண்டாய் ஊர் பயிர்ரேற்றுகைக்கு* (SII,vi,440.)

காலப் போகம் (பெ) பெரும் அறுவடைப்போகம் (1235) *ஒரு மாவுக்குக் காலப்போகம் நெல் இரு கலமும் திரம்மு காலும் கோடைப் போகம் நெல்* (IPS,306.)

காலம் (பெ) குறித்த பொழுது (700) *கொற்றாயரைச நாண்ட காலத்து* (SII,xiv,97.)

காலளவு (பெ) முகத்தலளவுப் பொருள்கள் மீது விதிக்கும் விற்பனைவரி (1009) *இத் தேவர்க்கேய் முதலாய்க் காலளவாலும் கோலால் வந்ததும்* (SII,xvii,235.)

காலளவு கூலி (பெ) முகந்து விற்கும் தானியம் முதலானவற்றின் மீதான வரி (986) *இக்கச்சிப்பேட்டுக் கோல்நிறை கூலியும் காலளவு கூலியும்* (SII,iii,128.)

காலளவு பாட்டம் (பெ) (= காலளவு) (1056) *இலைவாணியப் பாட்டமும் திங்கள்க் காசும் காலளவு பாட்டமும் பாடிகாவல் கூலியும்* (TAS,i,p.164-68.)

காலாசம் (பெ) கால்நடைகள்(?) (500) *கலக்கிழமையும் மேல்லாண்மை கொண்டனவும் மவருடைய காலாசமுந் தோட்டங்களும்* (AVNM,1,p.67-69)

காலாயன் (பெ) காலாய் கோத்திரத்தைச் சேர்ந்தவன் (973) *அறிவேன் காலாயன் வடுகந்தாயனேன்* (SII,xix,63.)

காலாள் (பெ) (கால்) வீரர்கள் (921) *காலாளுஞ் செந்நிலத்தினிலஞ் சேர* (SII,iii,206a.)

காலியுங் கன்றும் (பெ) கால்நடைகள் (924) *பரமேச்$_0$வரவதி நிராயிட்டு காலியுங் கன்றும் உள்ளிட்டு* (SII,vi,292.)

காலை (பெ) காலைப் பொழுது (985) *திருவிளக்கு காலை மாலை இரு பொழுது ஏற்றி எரிக்க* (SII,xiii,212.)

காவடை (பெ) ஒரு வரி (1127) *அங்காடி பாட்டம் ஆட்டிறை பாட்டம் கடை இறை கன்னாரிறை காவடை மரவடை மற்று முள்பட்ட அனைத்தாயங்கள்* (SII,vii,916.)

காவணம் (பெ) பந்தலோடு கூடிய மேடை (985) *கோயிலில் பெரிய காவணத்தே இருந்து* (SII,xix,300.)

காவதியார் (பெ) காவதி (அல்லது காவிதி) பட்டம் பெற்றவர் (768) *கடத்திருக்கை காவதியார் முள்ளி நாட்டு* (SII,xiv,27.)

காவமுறி (பெ) நட்பு உடன்படிக்கை (1376) *பகை தீந்து காவமுறி குடுத்த பரிசாவது* (IPS,960-61.)

காவல் (பெ) காவலாள் (1001) *இப்படையா ரோடும் தூதரோடும் காவலோடும் அதிகாரஞ் செய்வாரிடைக்கேய் செல்லக் காட்ட* (SII,v,723.)

காவல் (பெ) பொறுப்பு (885) *இதுவெல்லாந் தங்கள் காவல்* (SII,iii,92.)

காவல் (பெ) ஆட்சி (1036) *ஆங்கவன் றிருமகனாகிய விரு நிலங்க் காவலாள வந்த பெருமாளையும்* (SII,iv,223.)

காவல் கொள்ள (வி) அரசு செலுத்த (1176) *திருவாணையுஞ் செங்கோலுந் திசை யெட்டுங் காவல் கொள்ளப் பெருவாழ்வு பெற்று* (SII,xvii,585.)

காவல்ச் சேவகம் (பெ) ஒரு வரி (1068) *காலளவு கூலியும் காவல்ச் சேவகமும் உட்பட்ட அந்தராயங்களும்* (SII,vii,467.)

காவல் சோர்வு (பெ) காவல் செய்வதில் தவறு (1255) *சிவப்பிராமணருங்க் காவல் சோர்வுக் குடல்ப்படுகையால் லிவகள் பற்றான இலுப்பைக்குடிக் குளம்* (IPS,601.)

காவல் நெறி (பெ) ஆட்சி நெறி (1171) *இவன் காக்குந் திருநாட்டினியல் விதுவென னின்று காவல் நெறி பூண்டு* (SII,xvii,592.)

காவல்ப் பேறு (பெ) காவல் புரிபவர் பெறும் ஊதியம் (1236) *ஊர் காவல்ப் பேர் கொள்ளும் காவல்ப் பேறு நீக்கி நாங்கள் கொள்ளக் கடவ அரிப்பாடி காவல்* (SII,xii,120.)

காவல் பூண்டு (வி) அரசு செய்து (1168) *பெருங்கருணையால் முதல்க் காவல் பூண்டு* (SII,vii,890.)

காவல் விருத்தி (பெ) காவலாள் வாழ்க்கைச் செலவுக்குக் கொடுத்த மானிய நிலம் (1000) *வெண்பல நாட்டு பண்டாரியார்க்கு காவல் விருத்தி எண்ணாழியால் ஐம்பறை* (TAS,ii,p.173-207.)

காவலந் (பெ) அரசன் (885) *காவலநுகு பிழைத்தாராவார்* (SII,iii,92.)

காவலர் (பெ) அரசர் (1249) *கற்றை கவரி காவலர் வீச* (SII,v,440.)

காவி (பெ) கருங்குவளைப் பூ (1221) *செந்தழல் கொளுவி காவியும் நீலமும் நின்று* (SII,viii,394.)

காவிதி . (பெ) கணக்கரின் ஒரு பட்டம் (895) *பெரு நகரகரக் கொண்ட காவிதி அகளங்கத்துவராயர் மகன்* (EI,iv,23a.)

காவிதிக் காணி (பெ) கணக்கருக்காக விட்ட மானியநிலம் (973) *திருவெண்காட் டடிகளான 754வனும் தம்பிமாரும் காவிதிக் காணியால் பிறந்துடைய இம்மூன்று மாவிலே* (SII,xix,63.)

காவிதிமை (பெ) கணக்கு வேலை (1014) *காவிதிமை செய்ய ஒருவனுக்கு அரையன் மணலிலிங்கனன் செம்பியன் பெருங் காவிதிக்குப் பங்கு அரையும்* (SII,ii,66.)

காவிரிக் குலை (பெ) காவிரியாற்று கரை பராமரிப்புக்குச் செலுத்தும் வரி (962) *பொன்னுங் காவிரிக் குலை... வாயில் போந்த குடிமை* (SII,xiii,151.)

காவிரி குலை (பெ) காவிரி (காவேரி) ஆற்றின் கரை (900) *நிபந்தத்துக்கு வ்ரோத$_4$ஞ் செய்தான் காவிரி குலை குத்தினான் பாவங்கொள்வான்* (AVNM,6,p.14)

காவிலந் குறும்பில்லர் (பெ) கொங்குநாட்டில் ஒரு தாயாதிக் கூட்டம் (1156) *ஈங்கையூரில் இருக்கும் காவிலந் குறும்பில்லரில் போத்தன் செய்யானான* (AVNM,7,p.34)

காவு (பெ) தோப்பு (789) *காவு தெங்கிடப் பெறுவதாகவும்* (SII,ii,99.)

காவும் (வி) தோளால் பல்லக்குச் சுமக்கும் (986) *தே$_3$வர் பள்ளிச்சிவிகை காவுஞ் சிவிகையார்க்கும்* (SII,iii,128.)

காவேரி கல்லணை காடுவெட்டி (பெ) காவேரியாற்றுக் கல்லணைப் பராமரிப்புக்குக் காடுவெட்டச் செய்யும் கட்டாய ஊழியம் (1532) *காவேரி கல்லணை காடு வெட்டி நல்லெருது நற்பசு எப்பேற்பட்ட சகலாதாயமும்* (SII,v,1402.)

காளப் பங்கு (பெ) காளம் ஊதுபவர்களுக்குரிய பங்கு (1032) *உவச்சக்காணி முந்புடைய பெருந்துறை எட்டி உள்ளிட்டாரையும் காளப் பங்கு முந்புடைய* (SII,viii,644.)

காளப் புறம் (பெ) காளம் ஊதக் கொடுத்த நிலம் (1014) *உகைச்சர்கள் நிலப் புதுக்குளங்கரை 14ம் காளப்புறம் 2ம்* (SII,v,660.)

காளம் (பெ) ஊது கொம்பு (871) *போனகமுங் காளமும்* (SII,iii,89.)

காளமூதி (வி) (956) *திருமஞ்சுணனீர் காளமூதிக் கொண்டு மூன்று சந்திக்கும்* (SII,viii,697.)

காளம் ஊதிகள் (பெ) காளம் ஊதுவார் (991) *திருமெழுக்கிடுவார்ரெண்வர் காளமூதிகள் நால்வர்* (SII,v,610.)

காளமூதி புறம் (பெ) (= காளப் புறம்) (1013) *மேபால்கெல்லை காளமூதிபுறத்துக்கு கிழக்கும்* (IPS,90.)

காளம் ஊதுவார் (பெ) காளம் ஊதி ஒலிப்பவர் (978) *காளம் ஊதுவார் நால்வர்க்குத் திருநல்லத்தில்* (SII,iii,151-151a.)

காளர்சச் சூத்திரம் (பெ) பிராமணரின் ஒரு சூத்திரத்தின் பெயர் (789) *காளர்சச் சூத்திரத்து* (SII,ii,99.)

காளவாய் (பெ) பெரிய வாய் (800) *காளவாய்க் கோளனேய் கண்டு* (EI,xiii,10.)

காள விளக்கு (பெ) பெரிய தீவட்டி விளக்கு (1506) *காள விளக்குக்கு எண்ணை 700 நாழி ப்ரதிகை...* (TDI,iii,13.)

காளா கரு (பெ) ஒரு மரம் (1012) *குடக்குக் கலுழி குணக்கு கால் பழுங்கக் காளா கருவும் கமழ் சந்தனமும்* (SII,vii,863.)

காளாஞ்சி (பெ) தாம்பூலக் கலம் (927) *இவனேய் குடுத்த வெண்கலக் காளாஞ்சி கொம்பு* (SII,viii,557.)

காளா பிடாரி (பெ) ஒரு தேவி (1014) *கனமாக எழுந்தருளுவித்த காளா பிடாரி திருமேனி ஒன்று* (SII,ii,81.)

காளார் (பெ) ஒரு சாதியினர் (?) (1000) *ஆட்டொருவர் பணிசெய்வது காளாரும் மன்றாடிகளும் குடியில் மூத்தான் பணி செய்வது* (EI,xxxiii,33.)

காளாஷ்டமி (பெ) தேய்பிறை எட்டாம் திதி (1000) *மூன்றுமா...ற்றுங் காளாஷ்ட$_2$மி நான்று* (SII,viii,647.)

காளி (பெ) துர்க்கை (1179) *பண்டு வெங்காளி பரிகலம் பறித்தோந்* (EC,x,Kl.132.)

காளி கணத்தார் (பெ) காளி கோயில் நிர்வாகக் குழு (985) *இது காளி கணத்தார் ரக்ஷை* (SII,viii,655.); (1321) *வட வெல்லை முன்பு காளிகணத்து வெள்ளாளர் குடியிருந்த இடம் அகரமாகையால்* (SII,v,411.)

காளியாங்கம் (பெ) ஒரு கூத்து வகை (1000) *ரோயணிநாள்க் காளியாங்கங் கூத்தாடுமவனு இருபத்தைம்பறை* (TAS,ii,p.173-207.)

காற்கண்டு கவனமாகப் பார்த்து(?) (500) *இது கடைப்பி ஓலை காற்கண்டெழுதி கொடுத்தேன் வேண்ணாட்டான்* (AVNM,1,p.67-69)

காற்திகை அரிசி (பெ) ஒரு வரி (1238) *சில்வரி பெருவரி காற்திகை அரிசி காற்திகைப் பச்சை மற்றுமுள்ள பலகாசாயம்களும்* (SII,i,59.)

காற் மடக்கி (வி) மண்டியிட்டு (1181) *வீர வல்லாளக் கிழலாதிராய பம்மி தேவந் வாய் புதைத்து காற்மடக்கி அடி வீட்சி விண்ணப்பம் செய்த பரிசாவது* (EC,ix,Cp.167.)

காறை (பெ) காலில் அணிந்துள்ள அணி (970) *திருக்கழுத்தின் வளையில் 4ம் திருக்கால்லுக் கழுத்தின காறை 2ம்* (TDI,8.)

காறை கண்டி (பெ) ஒரு நகை (1055) *திருக்காதுக்கு சாத்த இட்ட காறை கண்டி இரண்டினால்* (SII,v,512.)

கான் (வி) காடு (1012) *சந்தனவனத்தது சண்பகக் கானது நந்தன வனத்தினடுவது* (SII,vii,863.)

கானகம் (பெ) காடு (1044) *கானகமிருவருக் களித்து* (SII,v,465.)

கானபாடி (பெ) இசை பாடுவோர் (1014) *கானபாடி மூவர்க்கு முண்டதாரி அணுக்கனுக்குப் பங்கு நாலரையும்* (SII,ii,66.)

கானாறு (பெ) காட்டாறு (1131) *கருமாணிக்க வசக்கலேறவந்த கானாற்றுக்கு வடக்கு* (SII,xiv,223.)

கானிலை (பெ) பாதம் (1278) *கருங்கலி முருங்கவும் பெரும் புகழ் விளங்கவும் கானிலை செம்பியன் கடும்புலியாளவும்* (SII,iv,426.)

காஷ்ட$_2$காரி (பெ) தச்சன் (852) *காஷ்ட$_2$காரி மகன் பெயரன் எழுத்து* (SII,ii,98.)

கி

கிங்கிணி (பெ) சதங்கை (1014) *படுகண்ணுங் கள்ளிப் பூவுங் கிங்கிணி பெரும் நாணும் மாங்காய் நாணுடையனவும்* (SII,ii,93.)

கிஞ்சுகம் (பெ) ஒரு பூச்செடி (1120) *கேதகை மல்லிகை கிஞ்சுக மஞ்சரி பாதரி புன்னை* (EC,x,Sd.9.)

கிட்டரும் (வி) அணுகற்கரிய (1024) *கிட்டருஞ் செறிவிளை ஒட்ட விஷையமும்* (SII,xvii,305.)

கிடக்க (பெ) நிலத்துண்டு (909) *விலை கொண்ட தோட்டம் யிரண்டு கிடக்க நிலம்* (SII,viii,619.)

கிடக்க (வி) இருக்க (944) *ஆறேழாட்டைக் கால் பயிர் ஏறாதே பாழ் கிடக்க* (SII,viii,689.)

கிடக்கும் (வி) இருக்கும் (871) *கல்மேல் வெட்டிக் கிடக்கும்* (SII,xiii,335.)

கிடக்கை (பெ) நிலத்துண்டு (955) *இவ்வனைத்துக் கிடக்கையுமாக வந்த நிலம்* (SII,xiii,110.)

கிடக்கை (பெ) நிலப்பரப்பு (771) *பழனக் கிடக்கை நீர் நாட்டு* (EI,xvii,16.)

கிடங்கறுத்து (வி) பள்ளம் தோண்டி (1011) *கிடங்கறுத்து வாழையிட்டு* (SII,vii,412.)

கிடங்கு (பெ) பள்ளம் (550) *பீடிலிகையும் கிடங்குங் கேணியும்* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

கிடங்கு (பெ) விரிசல் (978) *களரும் உவரும் கிடங்கும் கேணியும் ஓடையும் முடைப்பும் ஆறும்* (SII,iii,151-151a.)

கிடங்கு (பெ) அகழி (771) *கொடும் புரிசைந் நெடுங் கிடங்கில்* (EI,xvii,16.)

கிடத்தி (வி) இருக்கச்செய்து (1188) *அம்பலத்தில் வாய்ப்படிமேல் திருமேனி காவலையும் திருப்பள்ளித் தாமமுடைவ்வளையுங் கிடத்தி* (TAS,iv,p.22-65.)

கிடந்த (வி) இருந்த (772) *நீர் பெறுவதாகக் கிடந்த* (SII,xiv,19.)

கிடந்ததனை (வி) இருந்ததை (905) *முது கொம்பர்க் கோடெழுந்து கிடந்ததனை* (TASSI,1962-65,p.1-31.)

கிடந்தவாறே (வி) இருந்த படியே (1008) *சென்று இவ்வாய்க்கால் தான் கிடந்தவாறே மேற்கு நோக்கி* (EI,xxii,34.)

கிடந்து விற்பன (பெ) தரையில் கொட்டி விற்கப் படுவன (873) *கிடந்து விற்பன குவாலால் நாழி கொள்ளப் பெறுவதாகவும்* (SII,iii,90.)

கிடப்ப (வி) தரையில் கிடக்க (1075) *தெந்நவ நருந்தலை பருந்தலைத்துக் கிடப்ப* (SII,iii,68.)

கிடப்பு (பெ) கிடக்கை (961) *விலைகொண்டுடைய அரைமாவும் ஆக இவ்விரண்டு கிடப்பி னாலுமாக* (SII,xiii,109.)

கிடா (பெ) ஆண் ஆடு (1192) *சாவா மூவாப் பேராடு 96ம் பொலிகிடா 1ம் பொலி மோத்தையும்* (SII,viii,381.)

கிடாக் கன்று (பெ) ஆண் (எருமைக்) கன்று (985) *இத் தேவர்கு பகல் விளக்கு குடுத்த எருமை நாலும் கிடாக் கன்று ஒன்று ஆக* (SII,xix,340.)

கிடாக் காசு (பெ) ஒரு வரி (1168) *காட்சிப் பேறும் கூரைக்காசு கிடாக்காசும் மற்றும் எப்பேறப்பட்ட ஆயமும்* (SII,vii,890.)

கிடாய் (வி) செதுக்கி (771) *புலியும் கயலும் சென்று நிலையமை நெடுவரை இடவயிற் கிடாய்* (EI,xvii,16.)

கிடாய் காசு (பெ) ஒரு வரி (1228) *ஆடைக் காசு எண்பது கிடாய் காசு நூறும்* (IPS,281; SII,xvii,394.)

கிடாரத்தரையங் (பெ) கடார (ஸ்ரீவிஜய) நாட்டு அரசன் (1015) *சங்கிராம விசையோத்துங்க பந்மநாகிய கிடாரத்தரையநை* (SII,xvii,329.)

கிடாரம் (பெ) கொப்பரை (பாத்திரம்) (1007) *கிடாரம் ஒன்று சாண்ணே ஒரு விரல் உசரத்து* (TMPL,xviii,p.100-101.)

கிடாரி நாகு (பெ) ஈனாத இளம் பசு (1161) *பால் பசு பத்தும் சினைப் பசுப் பன்னிரண்டும் வறள் பசு ஆறும் கிடாரி நாகு நாலும்* (SII,iv,822.)

கிடைக் கண்காணி (பெ) வேத பாடசாலை மேற்பார்ப்பவர் (1068) *சாத்திரக் கண்காணியோடும் கிடைக் கண்காணியோடும் செல்லக்கடவதாக* (EI,xxi,38.)

கிடைகள் (பெ) வேதம் ஓதும் பிராமணர் குழாம் (1068) *இம் மண்டபத்துண்ணுஞ் சாத்திரர்க்குங் கிடைகளுக்கும் பணி செய்யும் பெண்டுகளிருவர்க்கு* (EI,xxi,38.)

கிடைப் புறம் (பெ) வேதம் ஓதுவார்க்குக் கொடுத்த நிலம் (1016) *பவிழியக் கிடைப்புறத்துக்கு வைத்த பூ₄மி ஆவது* (SII,vi,312.)

கிடை விருத்தி (பெ) (= கிடைப்புறம்) (1188) *கிடை விருத்திக்குஞ் சுற்று விளக்கின்னும்* (TAS,iv,p.22-65.)

கிணறிறைவை (பெ) கிணற்று நீர் பாயும் நிலம் (1500) *கிணறிறைவை குழியெறை கொண்டதுக்கு* (IPS,596.)

கிணறு (பெ) நீர் சுரக்கும் ஆழமான குழி (771) *ஆஹாரதா₃நமாகத் தன் முதல் குடுத்தடிப்பித்த கிணறு* (SII,v,405.)

கிந்நரர் (பெ) இசைபாடுபவர் (1014) *கனமாகச் செய்த கிந்நரர் இருவர்* (SII,ii,50.)

கிம்பிரி முகம் (பெ) மீன் முகம் (1014) *திருப் பட்டிகை ஒன்றிற் கிம்பிரி முகம் ஒன்றும் மட்டப்பூப் பத்தும்* (SII,ii,46.)

கிம்புரி (பெ) யானை தந்தத்தில் இடும் மீன்வடிவப் பூண் (1243) *கனமகர கிம்புரி வன்கோட்டுப் பெருங்களிற்று* (EI,xxiii,27.)

கிரணம் (பெ) ஒளி (905) *ப₂ணமணி கிரணம் விளக்கிமைப்ப* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கிரமம் (பெ) ஒழுங்கு முறை (1000) *முதல் வட்ட முன்ன மெண்ணிக் கிரமத்தாலாட்டுவிது இரண்டாம் வட்டம்* (TAS,ii,p.173-207.)

கிரமவாரம் (பெ) வேத பாடங்களைக் கிரமமாக ஓதுதல் (866) *இரண்டு கிரம வாரம் அடுத்தோதுவது* (TAS,i,p.1-14.)

கிரமவித்தன் (பெ) வேதத்தின் கிரம பாடத்தில் வல்ல பிராமணர் பட்டப் பெயர் (772) *காட்டுக்குறி சேந்த ஸ்வாமிக் கிரமவித்தச் சோமாசியார்* (SII,xiv,19.)

கிராணம் (பெ) கிரஹணம் (939) *சூற்றியக் கிரணவேலைக் குரை கிராணம் பற்றின அன்று முதலாக* (SII,iii,106.)

கிராம கிழவர்கள் (பெ) கிராம நிலக்கிழார்கள் (1000) *தேவ கன்மிகளும் கிராம கிழவகளும் கண்க்காணியும்* (SII,xvii,492.)

கிராமம் (பெ) பிராமண ஊர் (5939) *விடேல் விடுகு விக்கிரமாதித்தச் சதுர்வேதிமங்கல யென்னும் பேரால் கிராமமாக* (SII,iii,43.)

கிரி பிறதக்ஷணம் (பெ) மலையை வலம் வருதல் (1562) *பள்ளிகொண்ட பெருமாள் பாடிவேட்டை திருனாள் கிரிபிறதக்ஷணம் எழுந்தருளுகையில்* (SII,xvii,257.)

கிரியை (பெ) தொழில் (1068) *சல்லியக் கிரியை பண்ணுவார் இருவருக்கும்* (EI,xxi,38.)

கிரினாவல் பழம் (பெ) பழ வகை (1547) *விளாம்பழம் 600க்கு பணம் 9னால் 300க்கு பணம் 5 கிரினாவல் பழம் 300க்கு பணம் 9* (TDI,v,92.)

கிரெயச் செலவு (பெ) விலைப்பணம் (1246) *கிரெயச் செலவு குடுத்த பரிசாவது* (SII,viii,708.)

கிலேசித்தபடி (வி) வருந்தியபடி (1316) *நெடுநாள் பட விடாதொழிகையில் இவரும் குவாலாக சிறையிலே கிடந்து கிலேசித்தபடி* (SII,viii,247.)

கிழக்கின் திருவடி (பெ) கோயிலில் கிழக்குப் பக்கத்தில் வைக்கப்பட்டுள்ள திருமால் உருவம் (1000) *கிழக்கின்றிருவடிக்கு திருவமிர்து செய்வது* (TAS,ii,p.173-207.)

கிழக்கு (பெ) கிழக்குத் திசை (550) *மா வேத்தத்து வதியின் கிழக்கும்* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

கிழக்கை புரவு (பெ) ஒரு வரி (1511) *இந்த வயலுக்கு வெட்டி முட்டி வேகாரி சூலவரி இனவரி எற்சோறு இனியோகம் கிழக்கை புரவு காணிக்கை மற்று முண்டான இறைகளும்* (IPS,730.)

கிழமை (பெ) வார நாள் (915) *மதிநாட்பக்கம் பஞ்சமி நாள் மூலம் கிழமை வெள்ளிப் பொழுது* (SII,viii,636.)

கிழமை (பெ) ஒரு வாரம் (1100) *சநியும் புதனும் சாத்த எண்ணைக் காப்புக்கு நாளால் எண்ணையிரு பிடியாக கிழமைக்கு எண்ணை உழக்கு* (SII,viii,235.)

கிழவன் (பெ) நிலக்கிழமை உடையவன் (900) *ஸ்ரீ திருநெச்சுறத்து நெச்சுற நாடு கிழவனாயின கொடியங்கண்ண.ரத்தி கொற்றங் கொடியன்* (SII,v,382.)

கிழவோன் (பெ) தலைவன் (1012) *பொன்னின்நாடு கிழவோனே வேலியர் கோன் வீதி விடங்கன்* (SII,vii,863.)

கிழன் மேலாய் கிழக்கு மேற்காக (1030) *செப்பேத்தத்துக்கு துணை நிலமாக இட்ட கிழன் மேலாய்க் கிடக்கும் வரவைக்கும்* (SII,viii,67.)

கிழான் (பெ) ஊர் நிலத்துக்கு உரிமை யுடையவர்களில் ஒருவன் (500) *கேட்டா ருலவியப் பெருந்திணை நல்லங்கிழான் எஇனங் குமானும்* (AVNM,1,p.67-69)

கிழி (பெ) பண முடிப்பு (986) *ஆவணக் களத்தேய் ஒரு திரன் ஒரு கிழி கைச்செல்ல ஒருநாற்றேய் கொண்டு* (SII,xix,404.)

கிழி (பெ) (1406) *தூணிநிற சோதியார் கையிலெ ஒரு கிழி பணம் பற்றிக் கொண்டு விலைப்பிரமாணம் பண்ணி* (SII,iv,825.)

கிழி (வி) ஆவணத்தை கிழித்து அழித்தல் (1600) *நிலத்துக்கு ஒற்றிசாதன மென்று கொண்டுவந்தால் திறவும் கிழியும்பட்டு அவதாரப்பட* (IPS,894.)

கிழி (வி) (1697) *கண்ட களத்திலெ கீற்றும் கிழியும் பட்டு போமாறும்* (KANDT,1968/26.)

கிழித்து (வி) ஆழமாக்கி (1545) *கிழியாறும் கிழித்து தென்திருகாவேரி மலடு செய்வித்து* (EI,xxix,9.)

கிழிப் புணை (பெ) பணமுடிப்புக்குப் பொறுப்பு (1242) *உதையபாலனாந தெறையராயனை கிழிப்புணையாக நிறுத்தி இக்காசு பன்னீராயிரமும்* (SII,viii,289.)

கிழிய (வி) பிளக்க (1270) *கொங்கருடல் கிழியக் குத்தி* (CHEN,iv,p.492-93(7).)

கிழிவதாக (வி) அழிப்பதாக (1010) *நிலமும் மனையும் கூறடைத்த பரிசே லக்ஷணஞ் செய்து குடுப்பதாகவும் முன்புள்ள லக்ஷணஞ் சாங்கம் கிழிவதாகவும்* (SII,i,40.)

கிள்ளை (பெ) கிளி (1069) *இரு நிலப் பாவையும் கீர்த்தியுங் கிள்ளையும் போர்த்தநிப் பூவையும்* (SII,viii,4.)

கிளக்குறிஞ்சி (பெ) பழவகை (1547) *னாவல் 300க்கு பணம் 5 கிரினாவல் பழம் 300க்கு பணம் 6 கிளக்குறிஞ்சிப் பழம் 300* (TDI,v,92.)

கிளந்தது (வி) பொங்கியெழுந்தது (1061) *கடல் கிளந்ததெநப் படை பரப்பி* (SII,v,647.)

கிளர்ந்து (பெ) வீறு கொண்டெழுந்தது (1036) *கடல் கிளர்ந்தெனக் கிளர் படை பரப்பி* (SII,iv,223.)

கிளிகெளெஞ்சி (பெ) பழவகை (985) *வாழைப் பழமும் பிலாப்பழமும் மாம்பழமும் கிளிகெளெஞ்சிப் பழமும்* (SII,xix,380.)

கிளை (பெ) சுற்றம் (800) *எண்கின் இருங் கிளையும்* (EI,xiii,10.)

கிறமாகதம் (பெ) முறையாக (1286) *பங்கு 12 இப்பங்கு பந்நிரண்டில் எங்களுக்கு கிறமாகதமாய் வருகின்ற பங்கு 4* (SII,viii,336.)

கிறாய் (பெ) புல் கறடு (953) *எல்லைக்கல்லுக்கு கிழக்குக் கிறாய் இருபதின் கோல் நிலம்* (SII,viii,651.)

கிறையம் (பெ) பொருள் (பணம்) (1388) *மற்றும் கிறையமாகக் கொள்ளும் முதல்களும் ஊரிய மாகக் கொள்ளும் எடுத்தளவு* (SII,viii,156.)

கீ

கீணடை (பெ) (= கீழ்நடை) (961) *இக் காவுக்குப் பொலியூட்டாக கீணடை அளந்து வருகின்றபடி* (SII,xiii,108.)

கீணீர் (பெ) கடைசி முறை நீர் (1018) *இன்னிலத்துக்கு முன்பு நீர்பாயும் பரிசேய் மீய்ஞீரும் கீணீரும் பாயப் பெறுவதாகவும்* (SII,vii,889.)

கீர்த்தி (பெ) புகழ் (907) *அசைவில் கீர்த்தி அபராஜித விக்ரம பருமற்க்கி* (SII,xii,93.)

கீழ் (பெ) உட்பிரிவு (954) *சோளாந்தக நாராயத்தின் கீழ் உழக்கினால் நெய் உழக்காழாகு* (SII,xiv,79.)

கீழ் (பெ) ஏவல் நிலை (964) *அடிக் கீழ் நிற்ப்பாரையும் மத்யஸ்தர்களையும்* (SII;vi,362.)

கீழ் (வி) ஏரிப்பாசனத்துக்குச் சேர்ந்த ஆயக்கட்டு (772) *ஏரிக் கீழ் அரைமாக் கூற்றொடு* (SII,xiv,19.)

கீழ்க்கடை (பெ) கிழக்குப் பக்கம் (924) *முக்கோலகத்தால் வதியட்டிக் கீழ்க்கடை நீர் போவதாக* (SII,vi,292.)

கீழ்க்கணக்கு எழுதுவார் (பெ) உதவிக் கணக்கு எழுதுபவர் (1014) *இவனுக்குக் கீழ்க்கணக்கு எழுதுவார் இருவர்க்குப் பேராற் பங்கு* (SII,ii,66.)

கீழ்க் கரணத்தார்கள் (பெ) உதவிக் கணக்கர்கள் (1014) *கணக்கெழுதுங் கரணத்தான் ஒருவன் இவன் இடக்கடவக் கீழ்க் கரணத்தார்கள் இருவர்* (SII,ii,69.)

கீழ்க் கலனைகள் (பெ) ஏவல் தொழில் செய்யும் கைவினைச் சாதிகள் (1036) *தச்சர் கொல்லர் தட்டார் கோலியர் உள்ளிட்ட கீழ் கலனைகளுங் கொண்டு* (SII,iv,223.)

கீழ்ச் சாந்தி (பெ) உதவிப் பூசாரி (1000) *சாந்தியடிகள் படுமது பழாரர் திருவடி கொள்வது கீழ்ச் சாந்தி செய்யுமவரளு* (TAS,ii,p.173-207.)

கீழ்ச் சிகை (பெ) வசூலிக்கவேண்டிய வரியில் நிலுவை (922) *எம்மூர் யாண்டு 14ஆவது நெல்பொன் கீழ்ச்சிகை கடவ என்று* (SII,vi,294.)

கீழ் நடை (பெ) ஏற்கெனவே பழக்கத்தில் உள்ள (957) *இவூர் பிடாகை வட்டத்தும் உழுத குடிகளைப் பூவில் மாத்தாற் குறுணியாக நாங்கள் கீழ்நடை கொள்ளவுடைய மாக்குறுணி* (SII,xiii,165.)

கீழ் நீர் (பெ) (= கீணீர்) (1058) *முந்பு நீர் பாயும் பரிசே மீநீரும் கீழ்நீரும் பெறுவதாக* (SII,vii,886.)

கீழ்ப் பகல் (பெ) முன்னாள் (967) *மற்றும் எப்பேர்ப்பட்டாரையும் கீழ்ப்பகல் பட்ட மன்றுபாடும்* (SII,xiii,215.)

கீழ்ப்பட்ட (வி) தாழ்ந்துள்ள (1002) *ப்ராஹ் மணர்க்கு கீழ்ப்பட்ட ஜாதிகளில் காணிகளில் பணிசெய்மக்கள் பணிசெய் காணியொழிய* (SII,v,1409.)

கீழ் பாதம் (பெ) பின்னுள்ள செய்யுளடிகள் (970) *இரா ஜைமிநிகள் ஸாமவேதத்து மேற்பாதத்து ஒரு துருவும் கீழ் பாதத்து ஒரு துருவும் கரைப் பறிச்சு* (SII,xiii,250.)

கீழ்வாரப் பச்சை (பெ) ஒரு வரி (1290) *எச்சோறு கூற்றரிசி சில்வரி பெருவரி கீழ்வாரப் பச்சை* (IPS,403.)

கீழ் வாரம் (பெ) (= குடிவாரம்) (1225) *நஞ்சை புஞ்சை பட்டி ஒரு வட்டி கீழ்வாரத்திலே யித்தேவர் இறையிலிலே யளக்கக் கடவர்களாகவும்* (SII,viii,509.)

கீழ் வாரம் (பெ) நில விளைச்சலில் நிலக்கிழாரின் பங்கு(?) (1051) *காட்டாரம் மேற்படி வாசியேற்றி மேல்வார மொந்றும் கீழ்வார மூந்றும்* (EC,ix,Dv.76.)

கீழற்று (வி) நலிந்து (1258) *பகை தேடிக் கீழற்றுப் போயிருக்க இவர்கள் செய்த பிழையும்* (SII,vii,118.)

கீழாடை (பெ) உள்ளாடை (1218) *புடவைக்கும் கீழாடைக்குமாக தந்த கால் சின்னமுமாக* (NI,g.39.)

கீழாண்டு (பெ) முன் சென்ற ஆண்டுகள் (1245) *நெடுங்கால் தடை கிடந்து கீழாண்டு உள்ள நாளில் இடையில் பயிரேறின ஆண்டுகளில்* (IPS,340.)

கீழாண்டைக் கணக்கு (பெ) முந்திய ஆண்டுக் கணக்கு (1009) *திருநாவலூரில்த் திரு தேர்க் கீழாண்டைக் கணக்குக் கண்டு கடமை நேராகக் கொண்ட பொன்னும்* (SII,v,988.)

கீழா நரகம் (பெ) ஏழு நரகங்களுக்கும் கீழ்ப்பட்ட நரகம் (892) *ஏழா நரகத்துக் கீழா நரகம் புகுவான்* (TSAD.20.)

கீழாள் (பெ) துணை ஆள் (980) *தலைப் பறை உழக்கும் கீழாள் ஆழாக்கும் தண்டம் எண்ணை கொள்வதாகவும்* (SII,xix,254.)

கீழிறை (பெ) சிறு வரிகள் (1068) *மீன்ப்பாட்டமும் கீழிறையும் காலளவு கூலியும்* (SII,vii,467.)

கீழின (பெ) கடைத் தரமானவை (968) *மரத்துழான் வேலி எட்டும் களர் மேடு கீழின பத்தும் மேலன இரண்டுமாவும்* (EI,vii,20g.)

கீழீட்டு காணம் (பெ) கீழீடு உரிமைக்காக கொடுக்கப்படும் பணம் (1000) *தேவத்துவமும் பிரம்மத்துவமும் அறுநூற்றுவர்க்கும் கீழீடு இதினுக்கு கீழீட்டு காணம் ஒரு நந்தாவிளக் கெரிக்க* (SII,v,784.)

கீழீடு (பெ) கீழ்க் குத்தகை (973) *திருச்செங் குன்றூர்ப் பட்டாரகர்க்கு கீழீடாய் சிற்றூர் நடையோடு கூட* (EI,ix,32; TAS,iv,p.1-11.)

கீழீடு (பெ) பொறுப்பு (1008) *புறைகிழா நாட்டு அஞ்ஞூற்றுவர்க்கும் ஐயாயிரவர்க்கு கீழீடு இச்சங்கேதம்* (IA,xx,p.290-91.)

கீழே (பெ) அடியில் (974) *அடிமனைக் கீழே இட்ட கல்லின்படி எடுத்துக் கொண்டு* (SII,iii,124; SII,xix,91.)

கீழை (பெ) கிழக்குப் பக்கம் (550) *ஏந்த லேரியின் கீழைக் கடற்றின்* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32 .)

கீழை (பெ) கிழக்குப்பக்கம் (550) *ஏந்தலேரியின் கீழைக் கடற்றின்* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

கீழோலை (பெ) செய்திக் குறிப்பு கொண்ட ஓலை (1289) *இவர்களுக்குக் கீழோலை விடுதல் இவர்களைக் காத்தல்* (SII,vii,118.)

கீற்று (வி) ஆவணத்தை செல்லாததாக்க ஓலையைக் கீறிவிடுதல் (1697) *யாதாமொருத்தர் பறில் காணு நாள் கண்ட களத்தில் கீற்றும் கிழியும் பட்டு போமாறும்* (KANDT,1968/26.)

கீற்றுவரி (பெ) தென்னங்கீற்றாகக் கொடுக்கும் வரி (1265) *காத்திகைப் பச்சை கீற்று வரி சந்துவிற்கறகம்பேறு வாசல் வினியோகம்* (SII,xvii,143.)

கு

குஇல் (பெ) ஒரு பறவை (771) *குஇலோடு ம- இலகவும்* (EI,xvii,16.)

குக்கில் (பெ) குங்கிலியம் என்ற நறுமணப் பொருள் (1000) *பிராமணர்க்கு பத்து காணம் குக்கில் திருப்புகைக்கு இரு கழஞ்சும்* (TAS,iii,p.186-188.)

குகா சேஷம் (பெ) மடம் பராமரிப்புக்காக (1238) *இன்நிலம் முக்காணியினால் மடக்கு நிலம் கீழ் இருமா வரையும் குகாசேஷமாக விட்டான்* (SII,viii,206.)

குகை (பெ) மடம் (1223) *புகலி வேந்தர் இருக்கிற ஆலாலசுந்தரன் குகை எடுத்துக்கட்டி மேய்ந்து* (CHEN,xlvii,p.51-53.)

குங்கிலியம் (பெ) குங்கிலிய மரப் பிசின் (869) *நறும்பூச்சாந்து குங்கிலியம்* (SII,vii,525.)

குங்குலியம் (பெ) (= குங்கிலியம்) (994) *சந்தனத்துக்கும் குங்குலியத்துக்கும் வைத்த காசு* (SII,v,611.)

குச்சி (பெ) தர்ப்பை (1142) எங்களுக்குப் *பின்பும் குச்சியும் அலகும் எடுத்து இக்கோயிலில் புகுந்து காணிசெய்வாரே* (SII,vi,340.)

குச்சு (பெ) குஞ்சம் (1513) *இந்த திருப் பத்ரத்தில் குச்சு 1க்கு முத்து 3500 குச்சின்மேல் பெரிய முத்து 19* (TDI,iii,61.)

குச்சை (பெ) ஒரு காதணி (1233) *குச்சைக்கு இட்ட வெள்ளி எண்பத்தைங் கழஞ்சயே மஞ்சாடியும்* (SII,xvii,455.)

குசக் கலம் (பெ) மண்பாண்டம் (923) *எப்பேர்ப்பட்ட குசக்கலம்* (SII,iii,11.)

குசக் காணம் (பெ) குயவர் மீதான வரி (753) *விசக் காணமும் குசக் காணமும்* (SII,ii,73.)

குசத் திறை (வி) குயவர் மீதானவரி (997) *விலையறக் குசத்திறை யிழிச்சிக் கோயில் வாயிலாறு போந்த குடிமையும்* (TAMIZ,1970,p.126.)

குசவன் (பெ) மண்பாண்டம் செய்பவன் (875) *குசவனுக்கு ஒரு மாவரை புதுக்குப்புற மூன்று மாவும்* (SII,xiii,187.)

குச$_0$வர் (பெ) மட்பாண்டம் செய்பவர் (911) *குச$_0$வர் நிலமாறு போய்* (SII,viii,639.)

குசை (பெ) கடிவாளம்(?) (921) *திசை விளிம்பணவக் குசை மாவுங் கொலைக்குன்றமும்* (SII,iii,206a.)

குஞ்ச (பெ) அலங்காரப் பொருள் (1366) *முத்துக் குஞ்சவும் பவளக் குஞ்சவும்* (TAS,viii,p.20-22.)

குஞ்சி (பெ) குடுமி (800) *வாகைப் பூக் குஞ்சி* (EI,xiii,10.)

குஞ்சித்த (வி) வளைந்து நின்ற (1014) *குஞ்சித்த திருவடியின்* (SII,ii,51.)

குஞ்சிரர் (பெ) யானை வீரர் (958) *குஞ்சிரரில்ப் படைவள்ளுவற் காடன் ஆச்சனுக்கு விற்றுக் குடுத்த நிலமாவது* (SII,xix,6.)

குட்டம் (பெ) நீர்நிலை (866) *சட்டர் படைக்கலம் பிடித்துக் குட்டத்துக்குச் செல்லப் பெறார்* (TAS,i,p.1-14.)

குட்டம் (பெ) மடு (877) *இக்கறிகை குட்டத்து நீர் விட்டார்* (SII,vi,370.)

குட்டம் (பெ) ஒரு நகை (1533) *சிகரமன மேலுக்கு ரற்றிநமிட்ட குட்டம் 1 கருமுத்து 709* (TDI,iv,16.)

குட்டுண்டான் (பெ) (தலையில்) குட்டுப் பட்டவன் (866) *சாலை உண்பது குட்டுண்டானும்* (TAS,i,p.1-14.)

குட்டுவர் (பெ) ஒரு சாதி (1800) *இந்தத் தூண் அகத்தீச்சுரத்து குட்டுவரில் உலகுதொழ நின்றான் காரி உள்ளிட்டார் கணக்கு* (KANDT,1968/21.)

குட்டுவான் (பெ) தலையில் குட்டுவான் (866) *குட்டுவானாயில் ஒரு காசு தண்டம் இட்டு சாலை உண்பது* (TAS,i,p.1-14.)

குட்டை (பெ) சிறு நீர்நிலை (1145) *தன்மதாநமாக இக்குட்டையை நீர் வார்த்துக் குடுத்தேன்* (EC,ix,Ht.40.)

குட்டை (பெ) ஒரு வகை நெல் (964) *ஐம்பத்தாறு காடி குட்டை நெல்லும்* (SII,iii,186.)

குடக்கு (பெ) மேற்கு (950) *குடக்கெல்லை வன்னியோடு பொழியினின்றும்* (TASSI,1962-65,p.32-52..)

குட குட்டுவர் (பெ) (மேற்கிலுள்ள) சேரர் (905) *குடகுட்டுவர் குணசோழர் தென் கூபகர்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

குடங்கை (பெ) கொடை (1034) *இருமடிச் சோழராஜர் குடங்கை விட்ட நெல் விளைபூமி நாற்கண்டகம்* (EC,x,Bg.7.)

குடங்கை திறை (பெ) ஒரு வரி (1160) *மனைக்கும் குடங்கைதிறை மனைபணம் நீர்கூலி* (EC,ix,Cp.81.)

குடதிசை (பெ) மேற்குத் திசை (907) *நிர்மலன் கோயிற் குடதிசை* (SII,xii,93.)

குடநாழி (பெ) ஒரு குடத்துக்கு ஒரு நாழி வீதம் செலுத்தும் வரி (849) *இரவு சோறுங் குடநாழியும்* (TAS,ii,p.67-68.)

குடபால் (பெ) மேற்குப் பக்கம் (789) *குடபாலுங் குணபாலும்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

குடம் (பெ) ஒரு கலம் (866) *பந்நிரு குடநீராக* (TAS,i,p.1-14.)

குடர் (பெ) வயிற்றுக் குடல் (800) *கழுகு கொழுங் குடர் கவ்வ* (EI,xiii,10.)

குடர் மடிக்கொண்டு (வி) குடல் பதறி: *அச்சங்கொண்டு (1047) வில்லவந் குடர் மடிக்கொண்டு தந்நாடு விட்டோடி* (SII,v,978.)

குடலை துரவு (பெ) உறை கிணறு (1388) *தீணீர் உள்ள இடத்திலே குடலை துரவு இட்டு இறைத்துக் கொள்ளக் கடவர்களாகவும்* (SII,xvii,732.)

குடவர் (பெ) திருமால் கோயில் பணியாளரில் ஒரு வகை (1453) *நம் வீட்டில் குடவர் கோவணர் பூவிடுவார் தழையிடுவார்* (CHEN,v,p.437-41.)

குட விளக்கு (பெ) குடவடிவத்தில் தொங்கும் விளக்கு (1009) *ஆர் குடவிளக்கு ஒன்று* (SII,v,521.)

குடவோலை (பெ) சபையோரைத் தேர்ந்தெடுக்கக் குடத்திலிடும் ஓலை (919) *பெரு மக்களுக்கு அணிய பந்து$_3$க்கள் அல்லாதாரைக் குடவோலைக்குப் பேர் தீட்டி* (ARASI,1904-05,p.131.)

குடவோலை வாரியம் (பெ) குடவோலை முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட வாரியம் (921) *என்றும் குடவோலை வாரியமே இடுவதாக* (ARASI,1904-05,p.131.)

குடாது (வி) கொடாது (844) *குடாது விடிலிரட்டி கடவியராவது* (TAS,ii,p.13-14.)

குடாராகில் (வி) கொடுக்காமல் இருப்பாராகில் (955) *ஆட்சியிடையூறு தீர்த்துக் குடாராகில்* (SII,iii,7.)

குடி (பெ) குடிமை (வரி) (952) *குலையுங் குடியு மற்றும் எப்பேர்பட்டதும் இறுத்துஞ் செய்தும்* (SII,viii,611.)

குடி (பெ) குடும்பம் (1000) *மன்றாடிகளும் குடியில் மூத்தான் பணிசெய்வது இச்சேரி குடிகள் கால் செய்யால் அரைக்கழஞ்சு பொன்* (EI,xxxiii,33.)

குடி (பெ) குலம் (833) *துழாயூரவர் குடித்தோன்றல்* (SII,xiv,44.)

குடி (பெ) சபை உறுப்பினர் (804) *குடி மன்றாடுவதனுக்குச் செய்த வ்யவஸ்தை* (SII,xiv,37.)

குடி (பெ) சாதி (1008) *தன் குடிக் கேற்ற வண்ணம் முரைசும் முப்படித் தோரணம் நாட்டப் பெறுவதாகவும்* (EI,xxii,34.)

குடி (பெ) உயர்ந்த குடி (905) *திருந்து பதிக்குடித் தலைவன் தென்னவந்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

குடி (பெ) உழுகுடி (550) *கோவும் பொறியும் மாற்றி குடிநீக்கி இவ்வூர் பெற்ற* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.); (866) *தேவதானத்திலுங் குடியை வலியக் கொண்ட முதல் ஒன்றுக்கு* (TAS,i,p.1-14.)

குடி (பெ) ஏவல் தொழில் செய்யும் குடும்பம் (849) *நாலு குடி ஈழவரும்...ஒரு வண்ணாரக் குடியும்* (TAS,ii,p.67-68.)

குடிக்காடு (பெ) ஊர்க் குடிகளுக்குப் பொதுவான பயிர் நிலம் (?) (959) *இதற்றிறம்பில் த$_4$ர்ம்மாஸநத்தில் நிசதம் ஊ[ராக] நூற்றெட்டுக் காணம் படுவதாகவும் குடிக்காட்டில் நிசதம் இருபத்துநாலே கால் தண்டப்படுவதாகவும்* (SII,vii,73.)

குடிக் குற்றம் (பெ) குடிகள்தம் கடமையில் குறைபாடு (1192) *குடிக் குற்றம் படாமற் செய்து அளக்கடவாராகவும்* (SII,v,989.)

குடிகள் (பெ) நிலக்கிழார்கள் (817) *எம்மூர் பூ$_4$மி உடைய குடிகள் பூ$_4$மி ஸாமந்து செய்க என்று வந்தன* (SII,vi,344; EI,xxiv,7a.)

குடிகள் (பெ) உழுகுடிகள் (500) *தோட்டங்களும் மவரு தமரையும் மவரு குடிகளையும் ...* (AVNM,1,p.67-69)

குடிகாடுகள் (பெ) விளை நிலங்கள் (1139) *இச்சுற்று முற்றும் உள்படு குடிகாடுகளும்* (SII,xiv,243.)

குடிகாவல் நாயகன் (பெ) பாண்டி நாட்டில் ஓர் அரசு அலுவலன் (921) *கீழ் வெம்பனாட்டுக் கூரக்குமரனை குடிகாவல் நாயகனாகவும்* (SII,iii,206a.)

குடி கிடந்து கொள்ளவும் (வி) குடியிருக்கவும் (1526) *அஞ்சினா புகலிடமாக குடிகிடந்து கொள்ளவும்* (TAS,vi,129.)

குடிச் சிகை (பெ) குடிகள் செலுத்தவேண்டிய வரியில் நிலுவை (1725) *மேல்வாரம் பாட்டம் உபயம் பலிசை அளந்து நீக்கி ஒள்ள குடிச்சிகை எற்ப்பேர்ப்பட்டதும்* (TAS,v,p.228.)

குடிச்சைப் பணம் (பெ) ஒரு வரி (1714) *மேற்படி வருஷம் கார் கோட்டைப்பணம் அனுச்ச குடிச்சைக்கு கேள்விக்காறர் கணக்கும் படிக்கு குடிச்சைப்பணம் அடைக்கிறதே அல்லாமல்* (TAS,v,p.217-18.)

குடிஞைக் கல் (பெ) ஒரு பொன் எடைக்கல் (948) *பொன் குடிஞைக்கல்லால்* (SII,viii,686.)

குடித் தாநம் (பெ) குடியுரிமை(?) (1472) *இரண்டு வகை நாட்டவரும் மூன்று குடித்தாநமாக விற்கக் கொண்டு விட்ட நிலமும்* (IPS,805.)

குடி நிலம் (பெ) பிராமண நிலக்கிழார் தனித்து அனுபவிக்கும் நிலம் (983) *நிலத்துக்கு வடக்கும் மீய்பாற்கெல்லை குடி நிலத்தின் கீழருகேய்* (SII,xix,321.)

குடி நின்ற (வி) குடியாக இருந்த (1041) *ஸ்ரீ குறுங்குடி தேவர் குடி நின்ற வாரநாட்டானேன்* (SII,xiv,165.)

குடி நீக்கா காணி (பெ) குடி உரிமையோடு பயிரிடும் நிலம் (988) *ஸ்ரீ உத்தமசோழரிடை குடிநீக்கா காணியாகப் பெற்றுடைய தேவதானம்* (SII,xiii,52.)

குடிநீக்கா சாவாமூவாப் பேராடு (பெ) (நிலையான) குடியுரிமையோடு கூடிய ஆடுகள் (1006) *இவ்வாடு நூற்றுத் தொண்ணூற்று இரண்டுங் குடிநீக்காச் சாவா மூவாப் பேராடு ஆகக் கொண்டு* (SII,v,517.)

குடிநீக்கா தேவதாநம் (பெ) பழைய உழுகுடிகளை நீக்காமல் கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலம் (926) *குடி நீக்கா தேவதாநக் காணிக் கடமையாகச் செய்து குடுக்க* (SII,viii,668.)

குடி நீக்கா தேவதானம் (பெ) முன்னுள்ள குடிகளை நீக்காமல் கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலம் (969) *தேவதாநம்.. கோவிந்தன் கடம்பனுக்கு குடிநீக்கா தேவதானமாக சந்திராதித்தவற் காணி செய்து குடுத்த நிலம்* (SII,xiii,236.)

குடி நீக்கிய தேவதானம் (பெ) பழைய உழு குடிகளை நீக்கிக் கோயிலுக்கு அளித்த நிலம் (926) *நீர் நிலம் மூவேலி இந்நிலங் குடி நீக்கிய தேவதானமாகச் செய்து குடுத்தேன்* (SII,viii,668.)

குடி நீங்காக் காராண்மை (பெ) முந்தைய உழுகுடிகளே தொடர்ந்து பயிரிடும் உரிமை (1037) *பதிற்று வேலியும் உள்ப்படக் குடிநீங்காக் காராண்மையாக வாடாக்கடன்* (SII,xiv,154.)

குடி நீங்காத் தேவதானம் (பெ) (= குடிநீக்கா தேவதானம்) (967) *இவ்வாண்டின் எதிராண்டு முதல்க் குடி நீங்காத் தேவதானம் ஆக குடுத்தோம்* (SII,xiv,95; EI,xxv,6.)

குடி நீங்காப் பள்ளிச்சந்தம் (பெ) குடியுரிமை நீக்கப்படாத பள்ளிச்சந்தம் (1000) *செலேட்டி குடியன் வழியிலார்க்கேய் குடிநீங்காப் பள்ளிச்சந்தமாகவும் இவர்களே இப்பள்ளியுடையார்க்கு குடி செய்விதாகவும்* (TASSI,1958-59,p.102-08.)

குடிப் பற்று (பெ) குடிகளின் உரிமையில் இருந்த நிலம் (1214) *பத்தாமாண்டுவரை குடிப்பற்றாய் வந்த நீர் நிலமும்* (EI,xxv,11.)

குடிப் பேர் (பெ) உழுகுடிகள் (1300) *பயிர் பாற்து செய்கடமை செயிலே குடிப்பேர் வசந் தங்கள் தரவிட்டு* (IPS,496.)

குடிப் பேறு (பெ) குடியுரிமை (988) *குடியோடு குடிப்பேறும் விலைக்கு விற்றுத் தாலத்திடுக* (EI,xxi,27.)

குடி பற்றாமை (வி) பயிரிடும் குடிகள் இல்லாமை (1019) *திருவிளக்கு 2 நீக்கி இத் திருமுண்டியம் குடி பற்றாமையில் திருச்சுகனூரில் அகப்பட்ட முதலுக்கு* (SII,iv,293; TDI,i,19.)

குடி புகுதுகை (வி) குடி ஏறுதல் (1350) *ஆளும் பட்டு ஊரும் அழிந்து வேண்டின திக்கே போய் மீண்டும் ஊரிலே குடி புகுதுகையில் எங்களில் கூடி இராதபடியாலே* (IPS,670.)

குடி பூமிகள் (பெ) (= குடி நிலம்) (922) *வைத்த குடி பூமிகள் விற்றுப் பொன் கொண்டு* (SII,vi,291.)

குடிமக்கள் மாங்யம் (பெ) குடிகளுக்கு இறையிலியாக விட்ட நிலம் (1524) *க்ராம தேவதைகள் மாந்(ந்)யமும் குடிமக்கள் மாந்நியமும் குழி...* (SII,xvii,684a.)

குடி மகன் (பெ) உழுகுடி (1118) *குடிமகனை இறைக்கூலி கொண்டாநை* (SII,vi,57.)

குடிமை (பெ) உழுகுடிகள் செலுத்தும் வரி (975) *ஸ்ரீ கரணப் பெருஞ்சேரி யென்று குடியேற்றி இச்சேரியிருக்குங் குடிகள்...சயுங் குடிமையாவது* (SII,xvii,260.)

குடிமை செய்யில் (வி) குடிகள் மீது வரி வசூலித்தல் (895) *இது இறங்க குடிமை செய்யில்* (SII,iii,93.)

குடிமைப் பணம் (பெ) குடிமை பொருட்டுச் செலுத்தும் பணம் (1312) *நிலத்துக்கு வரிசை பேசி அடை ஓலை எழுதி குறைந்த வூர்கள் குடிமைப்பணம் குறைந்த படி கொள்ள* (SII,viii,251.)

குடிமைப்பாடு (பெ) (= குடிமை) (1200) *எலவையும் உகவையும் கொள்ளாதோமாக விட்டு மற்றுள்ள குடிமைப்பாடும் எப்பேற்ப்பட்டிதும் செய்து* (SII,iii,26.)

குடிமை வற்கம் (பெ) உழுகுடிகள் செலுத்தும் வரித் தொகுதி (1500) *நாடநற மரியாதி குடிமைவற்கத்துக்கு வகை முந்நாள்* (IPS,596.)

குடியிருக்கை (பெ) வாழுமிடம் (961) *குளமுங் குளத்தலையுங் குடியிருக்கைகளும்* (SII,xiv,91.)

குடியிலார் (பெ) பிராமணக் குடிகள் (999) *பரடைக் குடியிலாகளாய்யிட்டுப் பரடைக்குடியிலாரும் இத்தேவற்கு* (TAS,ii,p.1-7.)

குடியிலார் (பெ) உழுகுடிகள் (1100) *இந் நிலன் செய்த நாரணந் காடன் குடியிலார்க்கே சண்டேச்வர அருளால் குடிநீங்காத் தேவதானமாகச் செய்து* (SII,xvii,496.)

குடியேற்றி (வி) ஊரில் குடிகளைப் புதிதாக அமர்த்தி (975) *ஸ்ரீகரணப் பெருஞ்சேரி யென்று குடியேற்றி இச்சேரியிருக்கும் குடிகள்* (SII,xvii,260.)

குடி யோம்பி (வி) நாட்டுமக்களைப் பாதுகாத்து (1046) *நாடுவளம் படுத்து நைய குடி யோம்பி ஆறில் ஒன்று கொண்டல்லவை கடிந்து* (EI,xxx,19(vi).)

குடி வாங்கி (வி) குடியுரிமை பெற்று (1703) *நாம் கூடியும் குடி வாங்கியும் பிலத்து நம்முடைய சோத்தியம் சோதிப் பிச்சுக்கொண்டு* (TAS,v,p.215-16.)

குடிவாரம் (பெ) நிலத்தின் வருமானத்தில் உழுபவர் பங்கு (953) *முன் தேவர் குடிவாரம் பெற்ற இன் நிலத்துக்கும்* (SII,xiii,51.); (1518) *பசலை மரத்துக்கும் குடிவாரம் மூன்று பங்கு விட்டு மேல்வாரம் ஒரு பங்கு கொள்ளக் கடவோமாகவும்* (SII,iv,368.)

குடினைக் கல் (பெ) ஒரு எடைக்கல் (1001) *பட்டம் குடினைக் கல்லால் பொன் 52 கழஞ்சு* (TDI,i,14.)

குடி இருக்க (வி) குடிகள் வசிக்க (950) *நீர் நிலன் மூவேலியுங் குடி இருக்க முருகூர் பொழில் புடை சுற்றிய* (TASSI,1962-65,p.32-52.)

குடி இருக்கின்ற (வி) வசிக்கின்ற (952) *குடி இருக்கின்ற கொட்டில்களுக்கும்* (TAS,iv,p.18.)

குடி இருந்து (வி) வசித்து (1004) *இவ்வூரிலெ குடி இருந்து எண்ணாழிக் காலோடொக்கும் நாழியால்* (SII,v,854.)

குடி இருப்பார் (வி) வசிப்பவர் (991) *தேவர் மனையிற் குடி இருப்பார் நிசதம் வந்து விளக்குப் பிடிப்பார்* (SII,v,610.)

குடி இருப்புத் திடல் (பெ) குடியிருக்கும் மேட்டு நிலம் (1185) *இன்னான்கெல்லையுள் நடுவுப்பட்ட நிலத்து குடி இருப்புத் திடலும்* (SII,v,983.)

குடி ஏற்றுவித்த (வி) வசிக்கச் செய்வித்த (916) *கொற்றவாயிலின் முன்பு குடி ஏற்றுவித்த* (EI,xxiii,45c.)

குடி ஓடிப்போய் (வி) குடிகள் வெளியேறி (1129) *நம்மூர் அழிந்து குடி ஓடிப்போய்க் கிடந்தமை* (SII,vii,496.)

குடு (வி) கொடு (796) *குடு என்பார் நின்று தாம் ராஜ்யம் செயவர* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

குடுக்க (வி) கொடுக்க (759) *தவசிகளுண்ணக் குடுக்க* (SII,iv,827.)

குடுக்கப்பட்ட (வி) (771) *எங்குரவராற் குடுக்கப்பட்ட பரிசேய்* (EI,xvii,16.)

குடுக்கப்பட்டது (வி) (785) *நீரோட்டிக் குடுக்கப்பட்டது* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

குடுங்கோள் (வி) கொடுங்கள் (1252) *இப்படி செய்வதாகச் சொல்லி உங்கள் ஓலை குடுங்கோள் என்று திருவாய் மொழிந்தருளுகையில்* (SII,iv,511.)

குடுத்தது (வி) (800) *அண்டகுடி குடுத்தது* (IPS,13.); (908) *சிரீமுகம் குடுத்தபடி* (EI,xxviii,17a.)

குடுத்தமையில் (பெ) கொடுத்தமையில் (955) *ஸ்ரீமுக$_3$ப்படி சோழ சி$_0$கா$_2$மணிப் பல்லவரையர் குடுத்தமையில்* (SII,viii,739.)

குடுத்தருளினன் (வி) கொடுத்தான் (905) *திருமங்கலமும் உடன் கூடப் பிடி சூழ்வித்துலகறியக் குடுத்தருளினன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

குடுத்தார் (பெ) கொடுத்தவர் (1014) *நாங்குடுத்தநவும் அக்கன் குடுத்தநவும் நம் பெண்டுகள் குடுத்தநவும் மற்றும் குடுத்தார் குடுத்தநவும்* (SII,ii,1.)

குடுத்தான் (வி) கொடுத்தான் (800) *ஆயிரம் பொன் பலித்தாலம் படிமமு குடுத்தான்* (SII,iv,131.)

குடுத்தேன் (வி) கொடுத்தேன் (755) *அவிப்புறமாகக் குடுத்தேன்* (SII,vi,356.)

குடுப்பது (பெ) (844) *குடுப்பது குடாது விடிலிரட்டி கடவியராது* (TAS,ii,p.13-14.)

குடுப்பிப்போம் (வி) (1003) *வண்ணம் பிடாரி கோயிலில் கல்லில் வெட்டி குடுப்பிப்போமாநோம்* (TAS,vi,103.)

குடுப்பிப்போமாநோம் (வி) (884) *திருஅமிது குடுப்பிப்போமாநோம்* (SII,vi,314.)

குடுப்போம் (வி) (866) *அர்ச்சிப்பார்க் களந்து குடுப்போமாய்* (SII,xiv,20.)

குடுப்போலை (பெ) (= குடும்பு ஓலை): கிராம நிலத்தைப் பங்கு பிரித்துக் குடுத்த ஆவணம் (955) *எம்மூர்ப்படாகை வட்டத்து குடுப்போலை மேற்பட்ட நிலங்களுக்கு* (SII,iii,7.)

குடும்பாட (வி) உழுகுடிப் பணி செய்ய (500) *வேள்கூருப் பெயப்பட்ட குடும்பியர் வழியல்லது வேறொரு குடும்பாடப் பெறாமையும்* (AVNM,1,p.67-69)

குடும்பிட்டு (வி) குடும்பில் சேர்ந்து (875) *முதற்க்குடும்பிட்டு தலைப் பாடகம்* (SII,vi,347.)

குடும்பியர் (பெ) பூசாரிகளான குடிகள் (856) *திருவீரட்டானத்துக் குடும்பியருள் காளிச்$_0$ச$_0$ர்மனேன்* (SII,viii,309.)

குடும்பியர் (பெ) உழுகுடிகள் (500) *தேவகுலத்துக்குக் குடும்பியராவாரு* (AVNM,1,p.67-69)

குடும்பிலார் (பெ) குடும்பைச் சேர்ந்தவர்கள் (919) *குடும்பு முப்பதாய் முப்பது குடும்பிலும் அவ்வவ் குடும்பிலாரேய் கூடி கானிலத்துக்கு மேல் இறை நிலம் உடையான்* (ARASI,1904-05,p.131.)

குடும்பு (பெ) பிராமண ஊரின் விளை நிலங்களின் பாகுபாடு (875) *முதற் குடும்பிட்டு தலைப் பாடகம்* (SII,vi,347.); (1239) *ஆண்டுதோறும் குடும்பு மாறி இடவும் இடுமடத்து கட்டளைக்குப் பொருந்தினாரை இடவும்* (SII,vi,58.)

குடும்பு செய்தல் (வி) குடும்பு அமைத்தல் (1239) *பிடாகைகளுக்கு ப்$_3$ராஹமணர் குடும்பு செய்தல் குடிமை அனுஸரித்தல் செய்யா தொழியவும்* (SII,vi,50.)

குடும்பு செய்வார் (பெ) (= குடும்பு வாரியம்) குடும்பு தொடர்பான செயல்களை மேற் கொள்பவர் (1014) *அவ்வாண்டு ஊர்வாரியஞ் செய்வாரும் குடும்பு செய்வாரும் வரியிலே நில வசம் வரிகொண்டு* (CHEN,xv,p.174-76.)

குடும்பு வாரியம் (பெ) குடும்புகளை நிர்வகிக்கும் ஒரு சபைக்குழு (914) *நாராயணச் சதுர்வ்வேதி மங்கலத்து இவ்வாட்டை குடும்பு வாரியப் பெருமக்களும்* (SII,xix,179.)

குடுவை (பெ) வாய் குறுகிய குண்டுப் பாத்திரம் (979) *நிசதம் மூன்று குடுவையும் நிசதம் மூன்று சட்டியும் மற்றும் வேண்டும் கலமும்* (SII,xix,238.)

குடுவைகள் (பெ) கொடுக்கப்படுபவை (1272) *யாண்டு 4வது முதல் உள்ள இறை அந்தராய மற்றும் எப்பேர்ப்பட்ட குடுவைகளும்* (JOR,xx,Appx.,p.14-15.)

குடை (பெ) கொற்றக் குடை (815) *மதிபுரையுங் குடை நிழல் லற்றமின்றி அவனி மண்ட$_3$லமுடனோம்பி* (SII,iii,206b.)

குடைந்து (வி) குத்தித் துன்புறுத்தி (1123) *தந் செவிகளைத் தரையிலே குடைந்து கொடுபட்டது கண்டு த்$_3$வாரபாலகந் புகுந்து* (SII,v,456.)

குடைந்து (வி) துளைத்து (812) *திருவாலத்தூர் மலை தளியாக குடைந்து* (IPS,18.)

குடைந்து (வி) தோண்டி (800) *பட்டாருடல் குடைந்து* (EI,xiii,10.)

குடை மங்கலம் (பெ) கொற்றக்குடையைப் புகழ்தல் (1588) *மாறனுக்குச் சொற்புனைந்தா னாண்மங்கலமுநவிற்று குடை மங்கலமும் வாண் மங்கலமும் வகுத்து* (TAS,i,p.115-116.)

குடை மாங்யம் (பெ) சுவாமிக்குக் குடை பிடிப்பவர்களின் மானியம் (1524) *நீங்கல் வாசி குடைமாந்யம் குழி 1800* (SII,xvii,684a.)

குடைவித்த (வி) கல்லைக் குடைந்து செய்த (876) *சாத்தம் பழியிலி குடைவித்த ஸ்ரீகோயில்* (SII,xii,63.)

குண்டிகை (பெ) கமண்டலம் (1205) *சிவத் துரோகியுமாய் கோமாங்ஸத்தை ப$_4$க்ஷித்து சமணர்க்கு குண்டிகை எடுப்பான்* (SII,viii,150.)

குண்டில் (பெ) சிறு செய் (885) *அப்பனார் குண்டிலுக்கு வடக்கு* (SII,xii,105.)

குண்டில் (பெ) நிலத்தின் பொதுப் பெயர் (997) *தெந்பாற்கெல்லை கணிக்குண்டிலுக்கும் கிடங்ககள் செறுவிற் கொழுக் குத்திக்கு வடக்கும்* (TAMIZ,1970,p.126.)

குண்டு (பெ) நிலப் பொதுப் பெயர் (988) *வடபாற் கெல்லை அம்மணி தோட்டத்துக் குண்டுகளுக்கு* (SII,xiii,79.)

குண்டு (பெ) உருண்டையான பொன்மணி (1014) *பொன்னின் பட்டை மேற் குண்டு வைய்த்து விளக்கின வளையில்* (SII,ii,46.)

குணக்கு (பெ) கிழக்கு (1012) *குடக்குக் கலூழி குணக்கு கால் பழுங்க* (SII,vii,863.)

குண சோழர் (பெ) (கிழக்கிலுள்ள) சோழர் (905) *குண சோழர் தென் கூபகர் வடபுலவர்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

குணத்தான் (பெ) நல்ல குணத்தை உடையவன் (1012) *திரு வைய்யன் கோட்டமில் குணத்தாற் செம்பொற் புரிசை சிவபுரத்தாற்கு* (SII,vii,863.)

குணத்தோன் (பெ) குணங்களையுடையவன் (862) *கொள்கைப் பல் குணத்தோனேய்* (SII,xiv,45.)

குண திசை (பெ) கிழக்குத் திசை (1044) *குடதிசை மஹோதையும் குணதிசைக் கடாரமும்* (SII,v,633.)

குணதோழம் (பெ) நன்மை தீமைகள் (1663) *வெகுமானப்பெட்ட கும்பஞ்ஞியே கூட போதிப்பிச்ச குணதோழம் விசாரிச்சல்லாதே* (TAS,i,p.31.)

குணந்த (வி) கொண்டுவந்த (866) *பூ இடுவான் குணந்த பூ* (TAS,i,p.1-14.)

குணந்து (வி) கொண்டுவந்து (771) *கொங்கர் கோற்குக் குணந்து கொடுப்ப* (EI,xvii,16.)

குணபரன் (பெ) சிறந்த குணத்தை உடையவன் (630) *சத்துருமல்லன் குணபரன் மயேந்திரப் போத்தரெசரு* (SII,ii,72.)

குணபால் (பெ) கிழக்குப் பக்கம் (785) *குடபாலுங் குணபாலும்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

குணம் (பெ) பண்பு; ஒழுக்கத்தன்மை (811) *அந்தமில் பல் குணத்தாதி* (SII,xiv,41.)

குணர்வான் (பெ) கொண்டு வருவான் (1009) *திருப்பள்ளித்தாமம் பறித்துக் குணர்வான்* (SII,viii,571.)

குணரப்பட்டு (வி) கொண்டுவரப்பட்டு (771) *பல வளைக் கோன் குணரப்பட்டு* (EI,xvii,16.)

குணவியது (பெ) மேன்மையானது(?) (1014) *பற்றும் பல குழிவும் லசுநியும் உடையது குணவியது ஒன்று* (SII,ii,93.)

குணுக்குப்படி (பெ) பணியாரவகை (1539) *திருனாளில் அமுது செய்தருளும் குணுக்குப் படிக்கு ரேகை பொன் 2 பணம் 5* (TDI,iv,132.)

குத்த (வி) தோண்ட (984) *அன்னர் குறங்கறுத்து குத்தவும் குற்றேத்தம் பண்ணவும் கூடை நீர் இறைக்கவும்* (SII,xix,344.)

குத்தல் (பெ) குற்றித் தீட்டுதல் (808) *நெல்லாலிருந்நாழி தூக்குத்தல் அரிசியால்* (EI,viii,29.)

குத்தல் வாசி (பெ) அரிசி குத்துவதில் ஏற்படும் குறைவு (956) *குத்தல் வாசி ஏற்றி அரிசி இருபதினாழி மூழக்கினாலிரட்டி நெல்* (SII,xiv,88.)

குத்தலரிசி (பெ) குத்தித் தீட்டிய அரிசி (888) *நிலைத் திருவமிர்து குத்தலரிசி யிரு நாழி* (SII,iii,45.)

குத்தி (வி) ஆயுதத்தால் குத்தி (612) *வின்றண் வடுகன் புலிகுத்திப் பட்டான் கல்* (CHHS,1917/89.)

குத்திந (வி) கொன்ற (939) *புழலப்பன் புலி குத்திந கன்னாடு* (SII,i,137; EI,iv,22c.)

குத்தி விளக்கு (பெ) குத்து விளக்கு (1126) *தராக் குத்தி விளக்கு எடை பதிநெட்டும்* (SII,xiv,209.)

குத்துக்கல் (பெ) நட்டமான கல் (1044) *உயகிறைக்குத் தெநருகில் சிவகுறிக்கி அகப்பட்ட குத்துக்கல்லகப்பட* (EC,iii,TN.94.)

குத்துக்கால் (பெ) தடை (786) *குத்துக்காற் படாமைச் செலுத்துவதாக* (SII,xiv,27.)

குத்துத் திருவிளக்கு (பெ) குத்து விளக்கு (846) *இப் பொன்னுக்கும் கொண்டு குத்துத் திருவிளக்கு வைப்பித்தோம்* (SII,xii,43.)

குத்துதல் (பெ) ஆயுதத்தால் தாக்குதல் (1350) *இவர்கள் ஒரு வினைக் குறளை-இல் கொல்லுதல் குத்துதல் பகுதல்* (IPS,618.)

குத்து நெல் (பெ) அரிசிக் கான நெல் (946) *குத்து நெல் லிடங் கழியால் முந்நாழியும்* (TAS,i,p.293-94.)

குத்துவதாக (வி) தோண்டுவதாக (805) *குழி குத்துவதாக* (SII,iv,359.)

குத்துவாசி யரிசி (பெ) குத்தலில் ஏற்பட்ட குறைவுக்கு ஈடாக கொடுக்க வேண்டிய அரிசி (1129) *குத்துவாசியரிசி கலத்துக்கு குறுணி* (SII,v,458.)

குத்துவான் (பெ) (நெல்) குத்துபவன் (1000) *அரிகுத்துவானும் எச்சிலடிப்பானும்* (TAS,iii,p.186-188.)

குத்தொகை (பெ) குத்தகை; நிர்ணயிக்கப்பட்ட மொத்த அரசாங்கவரி (1426) *வெள்ளை இரண்டாயிரம் பொன்னாகத் தான் குத்தொகை ஆகக்கொண்டு உசாவடி இரேகையிலே கூட்டி* (SII,xvii,562.)

குத்ஸ (பெ) ஒரு கோத்திரத்தின் பெயர் (789) *குத்ஸ கோ$_3$த்ரத்து* (SII,ii,99.)

குதகளி (பெ) கறி வகை(?) (992) *குதகளி யொன்றுக்கும் பொரிக்கறியமு தொன்றுக்குமாக* (SII,xiii,170.)

குதம்பை (பெ) காதணி வகை (982) *ப$_4$ட்டாரகி யின் முத்தின் குதம்பை யிரண்டு முத்தின் வடம் இரண்டு* (SII,xix,302.)

குதிரம் (பெ) ஒரு எடை (1468) *சந்தனம் துலாம் அரை பச்சை கற்பூரம் குதிரம் அரை பனி நீருடன்* (TDI,ii,31.)

குதிரைச் சாரிகை (பெ) குதிரை மீதான சுங்கம் (1280) *தொறுவுணிசு நடைவழி குதிரை யாறுக்கும் கிம்பம் குதிரைச் சாரிகையும்* (EC,x,Kl.122.)

குதிரைச் செட்டி (பெ) குதிரை வணிகம் செய்யும் செட்டி (1300) *மண்டல சுவாமி குதிரைச் செட்டிகளில் வணிகர் நாராயணன் எழுத்து* (SII,viii,442.)

குதிரைச் சேவகன் (பெ) குதிரை வீரன் (936) *ராஜாதித்த தே$_3$வர் குதிரைச் சேவகன் கடம்பூர் மூர்க்கன்* (SII,vii,956.)

குதிரைப் பந்தி (பெ) குதிரைப்படையின் பொருட்டு வாங்கும் வரி (1265) *இலாஞ்சினைப் பேறு ஆனச்சாலை குதிரைப்பந்தி ஆண் டெழுத்து தேவை வெட்டி* (SII,xvii,127.)

குதிரைப்பந்தித் தேவை (பெ) (= குதிரைப் பந்தி) (1300) *உலைந்தன தேவை ஆனைச்சாலை குதிரைப்பந்தித் தேவை உட்பட மற்றும் எப்பேற்பட்ட இறைகளும் தேவைகளும்* (IPS,559.)

குதிரைப் பேட்டை (பெ) குதிரைச் சந்தை (1299) *குதிரைப் பேட்டைகளும் இவையிற்றின் வயிற்றிற் பிறந்த மறிச் சாரிகையும்* (EC,xvii,Kl.328.)

குதிரை மாற்று (பெ) ஒரு நாணயம் (1271) *அரைமனைக்கு ஒடுக்க நிச்சயித்த காசாயமான குதிரைமாற்றுக்கு* (SII,iv,434.)

குதிரை யாழ் (பெ) குதிரை வீரன் (1171) *அங்கய நாயக்கந் குதிரையையுங் குதிரை யாழையுங் குத்தி* (EC,ix.Kn.44.)

குதும்பை (பெ) (= குதம்பை) (1009) *மேற்ப்படியார் சாத்தும் குதும்பை யொன்று பொந்நிரு கழஞ்சும்* (SII,v,521.)

குந்தளம் (பெ) ஒரு நகை வேலை (1513) *கிரீடம் ஒன்றுக்கு ஒம்மாச்சு பொந் தூக்கம் 1555 குந்தளம் தூக்கம் 1076* (TDI,iii,35.)

குந்தாலி (பெ) ஒரு வரி (1090) *வீரசே$_{\circ}$ஷையும் பன்மை பண்டை வெட்டியும் குந்தாலியும் சுங்க[மோர]மும் உள்ளிட்டன* (EI,xxii,35.)

குப்பம் (பெ) சிற்றூர்; உட்கிடைக் கிராமம் (1524) *படைனாட்டு சீர்மையில் சியலபாண்டூர் க்$_3$ராமம் ஒன்றும் இதில் குப்பம் பசுவாசமும் ஆக இந்த பதினாலாயிரம்* (TDI,iii165.)

குப்பி (பெ) ஒரு நகை (991) *இத்தேவர்க்குச் செய்த ஆபரணங்கள் குப்பி இரண்டும் உழுத்து ஈரணையும்* (SII,xiii,144.)

கும்ப குடம் (பெ) பெரிய கலசம் (1464) *வண்ணானுக்கு பணம் 1/2 கும்பகுடம் பாலிகை உள்ளிட்ட மண்கல வகைக்கு குசவற்கு பணம் 7* (TDI,ii,18.)

கும்ப தேவதை (பெ) தேவதைகளாக வணங்கும் மந்திரக் கலசங்கள் (1024) *நெல் குறுணி நாநாழி கும்ப தேவதைகள் பதின்மர்க்கும் அஸ்த்ர தேவர்க்கும்* (EC,x,Kl.112a.)

கும்ப நாயறு (பெ) மாசி மாதம் (888) *கும்ப நாயற்று நாயிற்றுக் கிழமை* (SII,v,684.)

கும்ப ஸூத்ர (பெ) கும்பத்தைச் சுற்றும் நூல் (1251) *மேச்சாந்தி நம்பியே கொண்டு கும்பஸூத்ரவும் கொடுப்பிச்சு கொடி ஏற்றிச்சு* (TAS,iv,p.86-89.)

கும்ப$_4$கூடம் (பெ) யானையின் நெற்றிப்பகுதி (905) *திசையானை கும்ப$_4$கூடத்துலவிய* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கும்ப$_4$ தாரை (பெ) கும்பத்திலிருந்து நீரை வார்த்தல் (943) *கும்ப$_4$தாரையால்* (ARASI,1905-06,p.171.)

கும்ப$_4$ நாயறு (பெ) மாசி மாதம் (956) *கும்ப$_4$ நாயறு முதல் ஐஞ்சு திங்களுக்கு* (SII,viii,612.)

கும்பிட்டு (வி) வணங்கி (960) *எதிரெழுந்து கும்பிட்டு தலையில் வைத்து* (EI,xv,5.)

கும்போ$_4$த்$_3$ப$_4$வந் (பெ) அகத்தியன் (815) *கும்போ$_4$த்$_3$ப$_4$வநது தீந்தமிழில்* (SII,iii,206b.)

கும்மரசுருபம் (பெ) கலசம் (1535) *யாக சாலைக்கு திருப்பணிப்பிள்ளைக்கு பணம் 5 கும்மரசுருபத்துக்கு ரேகை 1* (TDI,iv,54.)

கும்மரி (பெ) (= கும்மறி) தீமூட்டி யழித்த மலைக் காட்டில் செய்யும் வேளாண்மை (1051) *மேல்வார மொந்றும் கீழ்வார மூந்றும் கும்மரி*

யொன்றுக்கு வாசி யேற்றி நிலமும் (EC,ix,Dv.76.)

கும்மறிக் கடமை (பெ) மலைப்பயிர் மீது வரி (1110) *இவ்வூர் விளையிற் சுற்றும் நஞ்சை புஞ்சை கோடை பைய்யனம் கார் வரகு கும்மறிக்கடமை பருத்திப்புடவை* (EC,ix,Nl.3.)

கும்மாயம் (பெ) குழையச் சமைத்த பருப்பு (878) *கும்மாயத்துக்குப் பயற்றுப் பருப்புரி* (SII,xiv,13.)

கும்மாய அமுது (பெ) (= கும்மாயம்) (989) *கறியமுதுக்கும் மூன்று ஸந்தி$_4$க்குங் கும்மாய அமுதுக்கும்* (SII,vii,521.)

குமர கச்சாணம் (பெ) குயவர் மீதான வரி (1008) *தேவகந்மிகளோம் இந்நிலத்துக்கு திருவாசலில் போந்த குடிமையும் ஊர் கழஞ்சு குமரகச்சாணமும்* (SII,v,638.)

குமரன் (பெ) முருகக்கடவுள் (921) *கண் சிவந்துஞ் சேவலுயர் கொடிக் குமரனெனச் சீறி* (SII,iii,206a.)

குமரி (பெ) கன்னியாகுமரி (764) *கங்கையிடைக் குமரி அடைச் செய்தான் செய்த பாவமாக ஒட்டினோம்* (TAMIZ,1970,p.124.)

குமாரர்கள் (பெ) ஆண் மக்கள் (1261) *பஞ்ச நதிவாண நிலகங்கரையர் குமாரர்களில் அருணகிரிப் பெருமாள்* (SII,xii,212.)

குமிழி (பெ) குளத்திலிருந்து நீர் கொப்புளித்து வெளிவரும் ஓட்டை (756) *கடம்பன் செய்த கற்குமிழி* (IPS,16.)

குமிழிக்கால் (பெ) குளத்திலிருந்து குமிழிக்கு நீர் போகும் நிலத்தடிக்குழாய் தொடங்கும் தொட்டியின் இருபக்கமும் நடப்பட்ட தூண்கள் (1000) *குமிழிக்கால் நாட்டிவித்தேன் இந்நாட்டு வடவகைத் தட்டாந்* (AVNM,3,p.13)

குமுதகம் (பெ) குமுதப்படை (1218) *வடபாரிசத்து செகதியிலும் குமுதகத்திலும் வெட்டிக் கிடந்த கல்வெட்டான இடம்* (IPS,248.)

குமுதம் (பெ) கோயில் விமான உறுப்புகளுள் ஒன்று (932) *கண்டத்திலும் இதன் கீழைக் குமுதத்திலும்* (SII,v,588.)

குமுழி (பெ) (= குமிழி) (815) *புள்ளனேரி என்று குளமாக்கிக்கற் கோதி குமுழி செய்வித்து* (SII,xiv,26.)

குயிலவர் (பெ) ஒரு வகை இசைக்கலைஞர் (1134) *நல்லிசைப் பாணரும் கோடியவருங் குயிலவரும்* (SII,v,645.)

குரகதம் (பெ) குதிரை (1200) *கடலளவு நடந்த தவந் கனை குரகதம் கதிவேல் மன்னருடலளவு நடந்தது* (IPS,677.)

குரத்திகள் (பெ) சமணப் பெண் துறவி (896) *பேரயக்குடி அரட்டநேமி படார மாணக்கிகள் குணந்தாங்கிக்குரத்திகள்* (TAS,i,p.193-95.)

குரப்பு வெட்டி (பெ) குரம்பு கட்ட கட்டாய உழைப்பு (985) *எச் சோறும் குலைவெட்டியும் குரப்பு வெட்டியும்* (SII,viii,631.)

குரம்படைந்து வெட்டி (பெ) (= குரப்பு வெட்டி) (1118) *மடக்கிலே குரம்படைந்து வெட்டிக் கொள்ளக் கடவோமாகவும்* (SII,vi,57.)

குரம்பு (பெ) சிறு அணைக்கட்டு; ஆற்றிலிருந்து பாசனக் கால்களுக்கு நீரைத் திருப்பும் தற்காலிக அணை (750) *காலும் கரையும் பரிசும் குரம்பும்* (EI,v,8.); (1152) *குலைகள் அட்டுகைக்கும் குரம்புகள் கொள்கைக்கும்* (SII,vi,440.)

குரம்பை (பெ) சிறு குடில் (1134) *கடுங் குலைஞர் குரம்பை நிழலிடும்பை* (SII,v,645.)

குரல் (பெ) பேச்சுப் படி(?) (890) *தாங்கள் வேண்டு குரல் ஏரிவாரிய பெருமக்கள்ளே கொள்ள ஒட்டி குடுத்தோம்* (SII,vi,369.)

குரவடிகள் (பெ) சமண மதத்தில் ஆண் துறவி (900) *உத்தணந்திக் குரவடிகள் மாணாக்கர் சாந்தி சேனப் பெரியார்* (SII,v,316.)

குரவர் (பெ) சமண மதத்தில் ஆண் துறவியின் பட்டப்பெயர் (550) *வஜ்ரநந்தி$_3$க் குரவர்க்கு* (TASSI,1958-59,p.41-83; PLCP,$p_2$6-32.)

குரவர் (பெ) முன்னோர் (771) *என்னேய் நுங்குறை என்று முன்னாகப் பணித்தருள மேனாணின் குரவராற் பான் முறை–இன் வழுவாமை* (EI,xvii,16.)

குராலா (பெ) கபிலை நிறப் பசு (870) *கெங்கை*

கரை ஆயிரங் குராலாக் கொன்ற மஹா நரகம் புகுவதாகவும் (SII,xix,163.)

குராற் பசு (பெ) கபிலை நிறப்பசு (973) *திருமணஞ்சேரி நம்பி குடுத்த குராற்பசுவும்* (SII,xiii,277.)

குரிசில் (பெ) தலைவன் (833) *குளத்தூரவர் குலக்குரிசில்* (SII,xiv,44.)

குரிசு (பெ) கல் சிலுவை (1566) *இணங்ஙரும் கூடி குரிசும் நாட்டி தம்மதிச்சு குறுவானெயும் செய்து* (TAS,vii,p.144-45.)

குரு (பெ) முத்துத் தன்மைகளுள் ஒன்று (1015) *சிவந்த நீரும் குளிர்ந்த நீரும் வரையுங் கறையுங் குருவுங் சுப்பிரமும் உடையன* (SII,ii,7.)

குருக்கள் (பெ) ஆசாரியர் (892) *எங்கள் குருக்கள் இறையிலியாக ஏற்றி கொண்ட பூமி* (SII,iv,531.)

குருத்து (பெ) இளவாழை யிலை (1014) *போனக குருத்து பன்னிரண்டுக்கு* (SII,ii,26.)

குருத்ரோஹம் (பெ) குருவுக்கு எதிராதல் (1417) *கோவஹதியும் கு$_3$ருத்$_3$ரோஹம் செய்தவனும்* (SII,viii,209.)

குருதி (பெ) இரத்தம் (800) *செங்குருதி மண் பரந்த* (EI,xiii,10.)

குருதை (பெ) குதிரை (1061) *அவனானையும் குருதையும் பெண்டி பண்டாரமும்* (SII,iii,22.)

குருந்து (பெ) குருக்கத்தி மரம் (928) *குருந்துக்கு தெற்கு* (TAS,i,p.187-93.)

குரு பரம்பரம் (பெ) குரு சீடர் வழி (1034) *நாங்கள் குரு பரம்பரம் பெற்றுடையோமாய் அனுப$_4$வித்து வருகிற* (SII,xiv,148.)

குரு வாரம் (பெ) வியாழக்கிழமை (1514) *கு$_3$ருவாரமும் பெற்ற உத்திராடத்து நாள்* (TDI,iii,73.)

குருவிந்தம் (பெ) நகைக்கல் வகை (1014) *பதக்கம் ஒன்றிற் கட்டின குருவிந்தம் ஒன்றும்* (SII,ii,93.)

குரை கழல் (பெ) ஒலிக்கும் வீரக் கழல் (905) *ஸ்ரீபராந்தகன் குரைகழற் கோச் சடையற்கு* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

குரை உறு (வி) ஒலிக்கும் (771) *குரை உறு கடற் படைத் தானை* (EI,xvii,16.)

குல்லா (பெ) தொப்பி (1521) *முத்தும் மாணிக்கமும் நீலமும் பச்சையும் இட்ட குல்லா 1ம்* (TDI,iii,84.)

குலகரி (பெ) சிறந்த யானைகள் (1220) *குலகரி யெட்டும் பரித்த குலவட்ட மலர் கவிதைச் சக்கரவர்த்தி* (CHEN,xiv,p.362-64.)

குலகுல குலைந்து (வி) மிகவும் நிலை கெட்டு (1056) *வெஞ்சின வரைசரோடஞ்சி சளுக்கி குலகுல குலைந்து தலைமயிர் விரித்து* (SII,iii,29.)

குலங் கிழார் (பெ) கோயில் பூசாரிகள் (808) *திருவல்லிக்கேணி குலங்கிழார்கள்* (EI,viii,29.)

குல த$_3$நமணி (பெ) சிறந்த பொன்னும் மணியும் (1068) *அளப்பெருங் குலத$_3$நமணி இனம் குடியோடும்* (EI,xxi,38.)

குல த$_4$நம் (பெ) சிறந்த செல்வம் (785) *கூந்தன் மாவுங் குலத$_4$நமும் நன்நாடும் அவை கொண்டும்* (IA,22,p.57-75; PNDCP,p.55-62.)

குல தெய்வம் (பெ) ஒரு குலத்தின் கடவுள் (1125) *தென்னவர்தங் குலதெய்வம் தென் குமரி கன்...* (TAS,i,p.21f.)

குலப் பியர் (பெ) பட்டப் பெயர் (871) *தமிழவேளென்னுங் குலப்பியரும்* (SII,iii,89.)

குலம் (பெ) குடிப்பெயர் (1036) *திருமுடி சூட்டித் தென்னவர் இருவர் முதலினர்க்குத் தன் குல மளித்து* (SII,iv,223.)

குலம் (பெ) கூட்டம் (905) *செழு மகரக் குலம்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

குலம் (பெ) கோயில் (630) *கந்தசேனன் செயிவித்த தேவகுலம்* (SII,ii,72.)

குலம் (பெ) சாதி (745) *இப்பொன் றட்டார் குலம் படாது* (TAMIZ,1970,p.122.)

குல முதல் (பெ) குலத்தலைவன் (862) *பஞ்சவர்*

குல முதலார் கெழுவை வேல் அவனிப சேகரன் (SII,xiv,45.)

குலவ (வி) விளங்க (1242) *தமிழுந் தொல்வளங் குலவப் பொருதிறலாழி* (SII,viii,404.)

குலவர்த்$_3$த$_4$னர் (பெ) முடி சூடிய மன்னர்கள் (921) *குருதி ஆரமுங் குணர்ந்தும் குலவர்த்$_3$த$_4$னர் அடிவணங்க* (SII,iii,206a.)

குலவரை (பெ) உயர்ந்த மலை (1128) *உலகு வலங் கொண்டொளி விளங்கு நேமி குலவரை உதைய குன்றமொடு* (SII,vii,773.)

குலவு (வி) தாங்கும் (1186) *பலங்குலவு மதசானை பத்தி களம் விடுகின்றானிலங்கு* (SII,xii,263.)

குலாலர் திருகைக் கடமை (பெ) குயவரின் சக்கரம் மீதான வரி (1547) *குலாலர் திருகைக் கடமை யாயுள்ளதும் தட்டுக் கடமை யாயுள்ளதும்* (TAS,ix,p.16-18.)

குலால விருத்தி (பெ) குயவன் வாழ்க்கைச் செலவுக்காக விட்ட நிலம் (1439) *சல்லிய விருத்தி குலால விருத்தி காரு விருத்தி கையாளும் பேற்குக் குடியிருப்புக்கும்* (TAS,viii,p.3-5.)

குலை (பெ) கரை (946) *காவிரி பெருகிக் குலை உடைத்து மணல்லிட்டுப் புன்செய்யாக கிடக்க* (SII,viii,689.)

குலை (பெ) கொலை (785) *குன்ற மன்ன குலைக் களிறும்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

குலை (பெ) கொலைத் தொழில் (1066) *குலை புரியும் படை அரைசர்* (SII,i,66.)

குலை (பெ) ஒரு வரி (952) *வெட்டியும் குலையுங் குடியு மற்றும் எப்பேர்ப்பட்டதும் இறுத்துஞ் செய்தும்* (SII,viii,611.)

குலைஞ்சு (வி) நிலை கெட்டு (1061) *அப் பகடிழிந்து குலகுல குலைஞ்சு தலைமயிர் விரித்து* (SII,v,647.)

குலைஞர் (பெ) வேடர் (1134) *கடுங்குலைஞர் குரம்பை நிழலிடும்பை யின்றி* (SII,v,645.)

குலைத்து (வி) குலுக்கிக் கலைத்து (921) *மற்றொரு குடத்துக்கேய் புகவிட்டுக் குலைத்து* (ARASI,1904-05,p.131.)

குலைதர (வி) சிதறிப்போக (1077) *மணி முடி சூடித் தென்னவர் நிலைகெட மீனவர் குலைதர* (SII,v,1356.)

குலைந்து (வி) சிதறி (1219) *சினப்புலியுங் கொடுஞ்சிலையுங் குலைந் தொளிப்ப வாளார்ந்த பொற்கிரிமேல்* (IPS,250.)

குலைய் வெட்டி (பெ) ஆற்றுக்கரைகளை உயர்த்தச் செய்யும் கட்டாய உழைப்பு (911) *எச் சோறும் வெட்டியும் குலைய் வெட்டியும்* (SII,viii,621.)

குலைய (வி) அழிய (1012) *நெடுநற் கோபுரங் கோவை குலைய* (SII,vii,863.)

குலை யட்டுகை (வி) கரை அமைத்தல் (1148) *இவ்வூர் குடி இருக்க மாட்ட...கைக்கும் குலையட்டுகைக்கும்* (SII,xiv,265.)

குலை அட்டி (வி) கரை அமைத்து (992) *ப்$_3$ராஹமணர் இருபத்தைவற்கு திருத்தி குலை அட்டிக் கமுகம்...று இட்டு அநுபவிக்க* (SII,xiii,170.)

குவடு (பெ) மலையுச்சி (1012) *மலைநாட்டுத் தாவடிக் குவட்டின் பாவடிச்சுவட்டு* (SII,vii,863.)

குவலைய தலம் (பெ) உலகம் (921) *குரைகழற் கால் அரைசிறைஞ்சக் குவலையதலந் தனதாகின* (SII,iii,206a.)

குவலையம் (பெ) உலகம் (1066) *வெண்குடை நிழல் குவலையத் துயிர்களைப் பெற்றதாயினும் பேண* (SII,v,976.)

குவலைய ஸூரன் (பெ) பிராமணன் (921) *செட்டி குலமதலை குவலையஸூரந் நலமிகு பா$_4$ஸ்கரநந்த$_3$நந்* (SII,iii,206a.)

குவளெக் காணம் (பெ) (= குவளைக் காணம்) (753) *குவளெ நடுவரிங் குவளெக் காணமும்* (SII,ii,73.)

குவளைக் காணம் (பெ) குவளைப் பயிர் மீதான ஒரு வரி (756) *நாவிதக் காணமுங் குவளைக் காணமும் வண்ணா காணமும்* (EI,xxxvi,20.)

குவால் (பெ) குவியல் (873) *கிடந்து விற்பன குவாலால் நாழி கொள்ளப் பெறுவதாகவும்* (SII,iii,90.)

குவாலாக் (பெ) அசையாதிருத்தல் (1316) *நெடுநாள் பட விடாதொழிகையில் இவரும் குவாலாக சிறையிலே கிடந்து கிலேசித்தபடி* (SII,viii,247.)

குவித்த (வி) தொகுத்த (1128) *திறை நிரைத்துக் குவித்த செம்பொற்குவையால்* (SII,vii,773.)

குவித்தபட்ட (வி) கூப்பிய (1344) *ப$_3$த்$_3$தா$_4$ஞ்ஜலில் தச$_0$நக$_3$ப்ரமை4யாலே விளங்கி குவித்தபட்ட அஞ்சலியை யுடையராய* (UCR,xviii,p.16-19.)

குவிந்து (வி) கூம்பி (1000) *வானெழுந்து குவிந்தழிந்து பங்கயம் பாதங்கள் பொன்மலர் பெறாதவர்* (SII,iv,167.)

குவிப்ப (வி) (கை) கூப்ப (1176) *களிறாரெயிற் கரங்குவிப்ப* (SII,xvii,585.)

குவை (பெ) குவியல் (1024) *நிறை குலதனக் குவையுஞ் சிட்டருஞ் செறிமிளையொட்ட விஷயமும்* (SII,i,68.)

குழல் (பெ) காள வாத்தியத்தின் ஊது குழல் (1014) *ஸ்ரீ ராஜராஜனென்றும் திருநாமம் வாங்கி கங்கில் ஒன்றும் குழல் இரண்டும் மோதிரம் ஐஞ்சும் உடைய* (SII,ii,1.)

குழல்பணி (பெ) ஒரு பூ வேலை(?) (1300) *திருக்குழல்பணி செவாற்க்கும்* (SII,v,241.)

குழவி (பெ) குழந்தை (1046) *பெற்ற குழவிக் குற்ற நற்றாய் போல* (EI,xxx,19(vi).)

குழற் சுருள் (பெ) சுருண்ட கூந்தல் (1176) *குறைபடுவன குழற் சுருளே* (SII,xvii,585.)

குழாம் (பெ) கூட்டம் (771) *கூடா மன்னர் குழாந்தவிர்த்த* (EI,xvii,16.)

குழி (பெ) குளத்தைத் தூரெடுக்கத் தோண்டிய குழி (805) *வயிரமேக தடாகத்துட்க் குழி குத்துவதாக* (SII,vi,359.)

குழி (பெ) நிலத்தை ஆழமாக்க இடும் குழி (கன அளவு) (953) *புஞ்செய் இரண்டு மட்டங்கல்ல ... எண்பிடிக் கோலாலொரு கோலாழமுன் நாற்கோல் நீளமுன் நாற்கோலகலமு மொரு குழி ...– இக்குழி 200 கொண்டதொரு மா* (SII,xiii,74.)

குழி (பெ) வயலின் பொதுப் பெயர் (731) *கொண்டணங் குழி நடுவில் இரண்டு குழியின்றலையும் கொண்டணங் கிழவர்* (SII,viii,331.)

குழி (பெ) ஒரு சிறு நிலப்பரப்பளவு (691) *ஆயிரத் திருநூற்றுக் குழிப் படியால்* (SII,i,151; EI,xvii,22.)

குழிக்க (வி) ஆழமாக்க (993) *உசர்ப்பிலி உசர்க்கவும் குழிப்பிலி குழிக்கவும் பெறுவாநாக* (SII,xiii,182.)

குழிக் காணம் (பெ) ஒரு நிலவரி (1681) *இப்பறம்பில் வச்சாக்குந்ந பலங்ஙள்க்க தேசவக்கம் குழிக்காணம் கொடுக்கவும் கொள்ளவும் கடவர்* (TAS,vi,70.)

குழிக் கோல் (பெ) ஒரு நில அளவு கோல் (1192) *அளவில் குழிக் கோலால் நாற்பது குழி* (SII,vii,393.)

குழி குத்தி (வி) ஆழப்படுத்த பள்ளம் பறித்து (845) *இவ்வெள்ளேரியிலே குழி குத்தி அட்டுவதாக வைத்தேன்* (EI,xi,22b.)

குழித் தட்டு (பெ) உட்குழிவாகச் செய்யப்பட்ட தட்டு (986) *இட்ட பொன்னின் குழித்தட்டு ஒன்றினால்* (SII,iii,145.)

குழித்து (வி) தோண்டி (1389) *காடு வெட்டி ஏந்தலும் கண்டு கிணறும் குழித்து நத்தமும் கண்டு* (SII,viii,72.)

குழிப்பிலி (பெ) பள்ளமாக்க வேண்டிய இடம் (993) *உசர்ப்பிலி உசர்க்கவும் குழிப்பிலி குழிக்கவும் பெறுவாநாக* (SII,xiii,182.)

குழி வந்தவாறு குழிக் கணக்கு (877) *குழிவந்தவாற்றால் ஆயிரத்திருநூறு குழியும்* (SII,vi,288.)

குழி வரி (பெ) நிலவரி (955) *மத்யமமாய்க் கிட்ந்த நிலங்கள் குழிவரியேற்றி* (SII,iii,7.)

குழிவு (பெ) மாணிக்கத் தன்மை (1015) *நீலகந்தி*

பதிநொன்றும் தளம் பத்தும் ஆக மாணிக்கம் குழிவும் ப்ரஹாரமும் வெஜ்ஜமும் (SII,ii,7.)

குழுமி (பெ) (= குமிழி) (1238) *சேரபாண்டிய நல்லூர் அகவயலில் பெருங் குளத்துப் பெருங் குழுமியால் நீர்பாய்ந்து விளையும்* (IPS,327.)

குழுமிய (வி) கூடிய (1100) *குசை விளங்கு மறையவர்கள் குழுமிய வக்கரைமாலின் கோயில்* (SII,xvii,230.)

குழை (பெ) தளிர் (1176) *பொற் குழைக் கொம்பென்ன உளமகிழ* (SII,xvii,585.)

குழைக்க (வி) சேர்த்துக் கலக்க (985) *மாவில் குழைக்க முப்பலமும்* (SII,viii,547.)

குழைந்து (வி) மனமிளகி (1120) *பெருமான் நாம ஞாநங் குழைந்தளித்த* (SII,iv,225.)

குளக்கரை பரப்பு (பெ) குளக்கரையை ஒட்டிய நிலம் (1013) *குளமுங் குளகரை பரப்புங் குள வாரியும் புற்றுந் தெற்றியும்* (IPS,90.)

குளக் குழி (பெ) சிறு குளம் (1014) *பறைச்சேரியும் வண்ணாரச்சேரியும் பறைக் குளக்குழியும்* (SII,ii,4.)

குளக் கோப்பு (பெ) குளத்தின் நீர்ப்பிடிப்புப் பகுதி (985) *நிலம் கீழ்பாற்கெல்லை குளக் கோப்புக்கு மேக்கும்* (SII,xiii,42.)

குளக் கோவை (பெ) குளத்தின் நீர்ப்பிடிப்புப் பகுதி (1115) *வடபாற்கெல்லை குளக்கோவைக்கும்* (IPS,228.)

குளகம் (பெ) குளகம் அளவு வித்து கொள்ளும் நிலம் (1270) *இம்மூவருக்கும் அர்ச்சநாவ்ருத்தி நிலம் நாற்கண்டகத்துப் பத்துக் குளகம்* (EC,x,Mb.187.)

குளகம் (பெ) ஒரு முகத்தல் அளவு (1137) *அநுசந்தித்து நிச்ச ஒரு குளக அரிசி* (EC,ix,Cp.94.)

குள குந்தங் மஞ்சள் (பெ) மஞ்சள் வகை (1068) *குளகுந்தங் மஞ்சள் ஐம்பதிந் பலத்துக்குக் காசு காலும்* (EI,xxi,38.)

குளச் சுவந்திரம் (பெ) குளத்தைப் பராமரித்தலுக்கு கொடுக்கவேண்டிய விளைச்சல் பங்கு (1431) *கோயில் சுவந்திரமும் குளச் சுவந்திரமும் அழகிய திருவானைக்காவுடைய நாயனர்* (IPS,702.)

குளத்தகம் (பெ) ஏரியின் உள்பகுதி (1034) *ஏரி புறங்கரை ஒரு பூ நிலன் அரையும் இக் குளத்தகம் புநீர் கோவை நிலன் அரையும்* (SII,xvi,144; EI,xi,30.)

குளத் தரம் (பெ) குளப்பாய்ச்சலுடைய நிலத்தின் தரம் (1200) *கொல்லை குளத்தரத்தினால் நெல் இறுக்கக் கடவேனாக* (CHEN,xxv,p.342.)

குளத் தலை (பெ) குளத்தைச் சேர்ந்த இடம் (961) *கிணறுகளுங் குளமுங் குளத்தலையுங் குடியிருக்கைகளும்* (SII,xiv,91.)

குளந்தை வங்கூழ் (பெ) இளந் தென்றல் (771) *குளத்தை வங்கூழ் வந்தைசெக்கும்* (EI,xvii,16.)

குளப் பட்டி (பெ) (873) *வயலகத்து குளத்துக்கு குளப்பட்டி செய்த நிலம்* (AVNM,10,p.15)

குளப் பரிச்சு (பெ) (= குளப் பரிப்பு): குளக்கரையின் சாய்வுப்பகுதி (1273) *பெருநான் கெல்லைக்குட்பட குளமும் குளப்பரிச்சும் வயலும் வயல்பரிச்சும் புஞ்சைபாடும்* (IPS,386.)

குளப் பிடி (பெ) குளத்தில் நீர் தங்குமிடம் (1168) *திருவேங்கை வாயில் குளத்து குளப் பிடிக்கும்* (IPS,139.)

குளப் புரவு (பெ) குளத்தின் நீர் பாய்ந்து விளையும் நிலம் (1148) *தேவதானமாக குடுத்த நிலமாவது அவ்வூர் குளப்புரவு நிலம் நீர் பாய்ந்து* (SII,xiv,264.)

குள ப்ரமாணம் (பெ) நிலவரி (1406) *அகரபற்று ஆன்திநாடு வேப்பம்பட்டு ஊர் ஒன்றுக்கு குளப்ரமாணம் பொன்* (SII,i,55.)

குளம் (பொன்) (பெ) நிலவரி (1406) *ஸர்வ்வ மாந்நயம் ஆக குடுத்த ஊர் பாதிக்கு குளப்ரமாணம் பொன் 12 1/2 நீக்கி ஊர் பாதிக்கு குளம் பொன் 121* (SII,i,55.)

குளம் (பெ) நீர் நிலை (800) *இளவரையன் செய்த குளம்* (IPS,17.)

குளம் பட்டி (பெ) குளப் பராமரிப்புக்காக கொடுத்த நிலம் (994) *கவிர்க் குளத்துக்கு குளம் பட்டியாக இறையிலி சோணாட்டு தென்கரை* (IPS,28; SII,xvii,336.)

குளம்பு (பெ) மாட்டின் காற் குழம்பு (1014) *இவர் எழுந்தருளி நின்ற இருவிரலரை உசரம் உள்ள பத்மம் ஒன்று குளம்பில் நின்றுங் கொம்பளவுஞ் செல்ல* (SII,ii,46.)

குளமடிக்குமவன் (பெ) குளம் தோண்டுபவன் (?) (1188) *கூத்தாளங் கோட்டால் குளமடிக்குமவன் சீவிதத்தின்னு கொள்ளு நெல்* (TAS,iv,p.22-65.)

குளமீன் பாட்டம் (பெ) குளத்து மீன் மூலம் வரும் வருவாய் (1430) *மாவடை மரவடை கோயிற்சுதந்தரங் குளமீன்பாட்டம் ஆடிகாத்திகைச் சுதந்தரம்* (IPS,801)

குளவடை (பெ) குள வருவாய் (1298) *மாவடை மரவடை குளவடை ஆசுவதிபேர்க்கடமை* (SII,xvii,253.)

குளவாய் (பெ) மதகு (833) *கற்பிளந்த குளவாயில் அமைப்பித்த இறப்பணம்பும்* (SII,xiv,44.)

குள வாய்தலைகள் (பெ) குளத்தின் மதகுகள் (1222) *கலியப்பண்ணை வுட்பட குளங்களுங் குளவாய்தலைகளும் பெருநான் கெல்லையுள்ளகப்பட்ட நிலம்* (IPS,265.)

குளவாரி (பெ) குளத்துக்கு நீர் கொணரும் ஓடைகள் (1013) *குளமுங் குளகரைப்பரப்புங் குளவாரியும் புற்றுந் தெற்றியும்* (IPS,90.)

குளிகை பணம் (பெ) ஒரு நாணயம் (1300) *நெல்லு ஏழுகலமும் குளிகை பணம் பத்தும் பத்திலாறும்* (IPS,638.)

குளிகை வாளால் வழி திறந்தாங் பணம் (பெ) ஒரு நாணயம் (1342) *இற்றை நாள் விலை நிற்செயித்த குளிகை வாளால் வழிதிறந்தான் பணம் அஞ்ஞூற்றம்பது* (IPS,440.)

குளிப்ப (வி) மூழ்க (921) *குருதிப் பெரும்புனற் குளிப்ப* (SII,iii,206a.)

குளிர் (பெ) குளிர்ச்சியான (771) *குளிர் வெண் குடை* (EI,xvii,16.)

குளிறும் (வி) ஒலிக்கும் (1012) *சேடகச் சண்டையுங் கண்டையுந் தாளமுங் காளமுங் கொண்டதிர் படகமுங் குளிறு மத்தளங்களும்* (SII,vii,863.)

குளுர்ந்த நீர் (பெ) முத்தில் ஒரு வகை (1014) *முத்து...,இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்தும் குளுர்ந்த நீரும்* (SII,ii,3.)

குற்றத் தண்டம் (பெ) தவறு செய்தவரிடமிருந்து பெறும் அபராதப் பொருள் (985) *இவ்வூர் நகரக் கரணத்தான் பனையுருடையானைக் குற்றத்தண்டக் கொண்ட பொன்* (SII,v,592.)

குற்றத் தண்டி (வி) குற்றத்தின் பேரில் அபராதம் வசூலித்த (967) *குற்றத்தண்டி கொண்ட பொன்* (SII,xiii,214.)

குற்ற தெண்டம் (பெ) (= குற்ற தண்டம்) (1185) *அந்தராயம் தறியிறை தட்டார்ப்பாட்டம் குற்ற தெண்டம் மற்றும் எப்பேர்ப்பட்டநவும்* (SII,vii,120.)

குற்றங் தோஷம் (பெ) தவறு செய்தல் (944) *இவ்வூர்க் குடிகளைக் குற்றந் தோஷ மன்று பாடு தேவரேய் தண்டித்துக் கொள்வ தாகவும்* (SII,iii,12.)

குற்றப் படாமை (பெ) தவறாமை (985) *திருநந்தவானத்துக்கு வேண்டும் உழப்புக் குற்றப்படாமை உழப்பானாகவும்* (SII,xiii,342.)

குற்றம் (பெ) பிழை (771) *குற்றமின்றிக் கூறுங் காலை* (EI,xvii,16.)

குற்றமஞி (பெ) குறுகிய நாள் செய்யும் அமஞ்சி (1518) *ஊர் விநிஓகம் எற்சோறுபடி போட்டு சோறு இடுகிறது நெட்டமஞ்சி குற்றமஞி மானியமாக நடத்தக் கடவோமாகவும்* (SII,iv,368.)

குற்றி (பெ) மரக்கட்டை (960) *காஞ்ஞிரக் குற்றியு முள்ளு முயிறுமாக* (TAS,iii,p.159-69.)

குற்றி மரம் (பெ) ஒரு மரம் (1690) *பிரமாங் குழியில் மேற்கு தெக்கு ஆக நிக்கும்*

குற்றிமரம் ஒன்றுங் கூட (TAS,v,p.86-89.)

குற்றுடைவாள் (பெ) சூரிகைக் கத்தி (1014) *குற்றுடைவாள் ஆசுங் கண்டமும் பொன் கட்டிற்று ஒன்று* (SII,ii,46.)

குற்றேத்தம் (பெ) நீர் இறைக்கும் சிறிய ஏற்றம் (550) *விலாடன் குற்றேத்தத் தெல்லை* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

குற (வி) குத்துவதற்கு (1234) *நெற் குறுசாலைக்கு நெற் குறக் கொண்டு விட்ட பெரிய நாச்சியையும்* (SII,iv,558.)

குறங்கறுத்து (வி) கரையின் குறுக்கே வெட்டி (978) *வாய்க்காலை அந்யர் குறங்கறுத்துக் குத்தவும் குற்றேத்தம் பண்ணவும் கூடை நீரிறைக்கவும்* (SII,iii,151-151a.)

குறங்கு (பெ) கரை (753) *கூடை இறைத்துங் குறங்கறுத்தும்* (SII,ii,73.)

குறடு (பெ) திண்ணை (1116) *ஆருடையார் கோயிலில் திருவெதிரம்பலத்துக் குறடு பொ்ந் செய்யுமிடத்து* (SII,iv,222.)

குறடு நெற்றி (பெ) தாழ்வாரத்தின் கூரை (1485) *இந்த குறடு நெற்றிக்கு விலையாக* (TDI,ii,83.)

குறத்தலை (பெ) முண்டம் (921) *கொலை வாளிற் றலை துமித்துக் குறத்தலையின் கூத்தொழித்தும்* (SII,iii,206a.)

குறவர் (பெ) குறிஞ்சி நில மக்கள் (1000) *குடியரைசாளு குறவருஞ் சாலக் கொடுமையரே* (SII,iv,167.)

குறவு (பெ) குறைபாடு (1000) *ஊராளர் இச் செலவு குறவு சொல்லி விலக்கப் பெற்றார்* (TAS,ii,p.173-207.)

குறளர் (பெ) குள்ளமானவர்கள் (1168) *ஆவூர் கூற்றத்து திருவிளக்குப் பிடிக்கு கூனர் குறளர் இறையிலியாந முந்நியூரில்* (SII,viii,204.)

குறளை (பெ) தகாதீட்டிய பொருள் (1615) *இவன் திருடி விற்றுக்கொண்ட பட்டைக்காறை விலைக்கும் குறளைப் பணத்துக்கும் பத்துப் பொன் சுமந்து* (IPS,867.)

குறளை (பெ) நிந்தனை (1350) *அயிலையராயனை அழகியசோழ நாடாழ்வானும் வகை.கலவனும் கொல்லுதல் குத்துதல் வினைக் குறளை செய்யுதல்* (IPS,618.)

குறி (பெ) சபைக் கூட்டம் (763) *இப்படிக்கு குறியிலிருந்து* (SII,xii,34.)

குறி (வி) ஆவணம் (1441) *ஆண்டு ஒன்றுக்கு கோட்டை காலாக ஆண்டு தோறும் கூட்டி முதலாகிற முதல் பிடாகை தோறுங் குறி எழுதிக் கொள்ளும் படியும்* (SII,v,736.)

குறிக்கப்பட்ட (வி) சுட்டப்பட்ட (1048) *கீழை நாற்றங்கால் ஒரு மாவும் ஆக குறிக்கப்பட்ட நிலம் அரையே* (SII,viii,199.)

குறிகள் (பெ) பத்திரங்கள் (1603) *பெருமான் சீ பண்டாரத்தில் நின்றும் குறிகளும் எழுதிப் பணங்களும் வேண்டிப் பூசையும் நடத்திக் கொண்டு* (TAS,vi,100.)

குறி கொள் (வி) மனத்திற் கொள் (862) *சிரிவல்லுவனுக் கென்றிப் பலவுங் குறிகொளினிதவை* (SII,xiv,45.)

குறி கொள் (வி) கூர்த்த மதியுள்ள (1047) *திருத்தமையனையும் குறிகொள் தந்னிளங்கோக்களையும்* (SII,v,978.)

குறிச்சு (வி) எழுதி (975) *இவகளறியக் குறிச்சு வைச்சறிவேன்* (TAS,ii,p.38-40.)

குறிஞ்சி (பெ) குறிஞ்சிச் செடி (1012) *காளா கருவும் கமழ் சந்தனமுந் தாளார் திரள்ச் சாளமு நீளார் குறிஞ்சியுங் கோகுடியு* (SII,vii,863.)

குறித்து (வி) எண்ணி (921) *கொங்கலர் பொழிற் குட மூக்கிற் போர் குறித்து* (SII,iii,206.)

குறிமாட்டெறிந்து (வி) கைநாட்டுக்குச் சாட்சி எழுத்திட்டு (1400) *இக்கோயிலில் தானத்தார் தற்குறிக்கும் குறி மாட் டெறிந்தே... ணிகசேமன் எழுத்து* (IPS,644.)

குறுக்கி (பெ) குறுகலான வழி(?) (922) *இதன் வடக்கு நோக்கிச் சென்று முப்பெண்டிர் குறுக்கியும்* (SII,ii,76.)

குறுகலர் (பெ) பகைவர் (1084) *தநித்தலைவரை குறுகலர் கோட்டாறுட்ப்பட நெறிதொறு நிலைகளிட்டருளி* (SII,iii,69.)

குறுகவும் (வி) அணுகவும் (1279) *காதற் குமரன் குடதிசைக் கருநடர் தென்புலங் குறுகவும்* (SII,viii,69.)

குறு கூலி (பெ) நெல் முதலியன குற்றுங்கூலி (937) *எச்சிலெடுப்பானுக்கும் குறு கூலி அடங்க* (SII,v,693.)

குறுங்கு (பெ) (= குறங்கு) (1008) *இவ் வாய்க் கால்கள் அன்னியர் குறுங்கறுத்துக் குத்தவும் விலங்கடைக்கவும்* (EI,xxii,34.)

குறுசாலை (பெ) தானியம் குற்றுமிடம் (1234) *நாயனாற்கு நெற்குறுசாலைக்கு நெற்குறக் கொண்டு விட்ட* (SII,iv,558.)

குறுணி (பெ) ஒரு முகத்தலளவு; 1/12 கலம் (858) *நிசதி முக்குறுணி நெல்லாக* (SII,vi,447.)

குறு தாதிச்சிகள் (பெ) சிற்றேவல் செய்யும் வேலைக்காரிகள் (1366) *அருளாளப் பெருமாள் கோயிலில் ஒறிற் குறுதாதிச்சிகளில் தும்மாண்டி அக்கச்சி மகள்* (SII,iv,356.)

குறுந் தகடு (பெ) சிறிய தகடு (1050) *திருக்கொடுக்கில் தகடு இரண்டும் உள்ளவை குறுந்தகடு ஒன்றும் செருந்தி பூ பதின்னொன்றும்* (SII,v,520.)

குறுபவள் (பெ) நெல் குத்துபவள் (1012) *தூநிறக் குத்தலரிசியிலான நெல்லு வரிசையிற் குறுபவள் கூலியேற்றி* (SII,vii,863.)

குறும்பர் (பெ) குறுநில மன்னர்(?) (771) *ஆய் வேளைஉங் குறும்பரைஉம் அடலமருளழித் தோட்டி* (EI,xvii,16.)

குறும்பு (பெ) குறு நில மன்னர் (771) *கோவுங் குறும்பும் பாவுடன் முருக்கிச் செங்கோ லோச்சி* (EI,xvii,16.)

குறும்பு (வி) தொல்லை கொடுப்பவர் (1181) *இன்னாயனார்க்கு குறும்பெறியக் காவேரிக்கு வடகரையில்* (SII,viii,284.)

குறும்புள்ளர் (பெ) கொங்குநாட்டில் ஒரு தாயாதிக்கூட்டம் (1090) *குறும்புள்ளரில் எந் மணவாளந் காவன் அரையனைச் சாத்தி* (AVNM,7,p.32)

குறு மடல் (பெ) விபூதி வைக்கும் சிறிய கலம் (1014) *நாளதினாலேய் குடுத்த பொன்னின் குறுமடல் ஒன்று* (SII,ii,1.)

குறு முத்து (பெ) முத்துக்களில் ஒரு வகை (1014) *முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்பு முத்துங் குறுமுத்தும்* (SII,ii,3.)

குறு முளை (பெ) வித்தினின்றுங் கிளம்பும் சிறிய முளைச்செடி (800) *பிறையின் குறுமுளைப் போந்தீரிலைக் கொள்ளும்* (EI,xiii,10.)

குறு முனி (பெ) அகத்தியர் (1200) *திடவாசகக் குறுமுனிபால் செந்தமிணூல் தெரிந்தருளி* (TAS,ii,p.15-21.)

குறுவர் (பெ) பகைவர் (1150) *கொண்ட குறுவரைக் குத்துவித்து* (AVNM,9,p.37)

குறுவாள் (பெ) நெற்குத்தும் பெண் (956) *குறுவாள் கூலி கலத்துவாய்க் குறுணியாக கூலி நெல்லு* (SII,xiv,88.)

குறுவேர் (பெ) ஒரு வகை வாசனை வேர் (1545) *சாத்துகிறத்துக்கும் திருப்பளி அறைக்கும் மல்லிகை குறுவேர் விலைக்கு ரேகை பொன் 2ம்* (TDI,v,51.)

குறுவைய் (பெ) ஓர் அறுவடைப் போகம் (861) *ஸ்ரீ கண்டவாய்க்கால் கீழ் பூமி முந்நீடாய் குறுவைய் விளைய்ந்த* (SII,xiv,78.)

குறை (பெ) தீவு (1197) *நம் வரியிலிடுவார்க்கு நம் குறை பற்றில் பூ* (SII,iii,88.)

குறை (பெ) துண்டு (1020) *தெற்கு பதினாறாஞ் செய்க்குறை நிலன் காணி முந்திரிகையும்* (SII,v,747.)

குறை (பெ) மனக்குறை (771) *மறை நாவினோர் குறை தீர்த்தும்* (EI,xvii,16.)

குறைப்பணி (பெ) முடிவு பெறாதிருந்த வேலை (815) *குறைப்பணி நின்றது* (SII,xiv,26.)

குறைமை (பெ) குறைவு (915) *இரண்டுமா மிகுதிக் குறைமை உள்ளடங்க* (SII,xix,211.)

குறையா (வி) குறைவில்லாத (887) *நிறைகுறையாப் பழங்காசு* (SII,xiv;16a.)

குறையா (வி) அணையா (1008) *கால குறையா மூன்று நந்தாவிளக்கு செலுத்திக்க கடவர்* (IA,xx,p.290.)

குறையாதன (பெ) அளவான (768) *நிறை குறையாதன பழங்காசு* (SII,xiv,27.)

குறையாது (வி) முழுதும் (771) *வளாகம் குறையாதாண்ட மன்னர்* (EI,xvii,16.)

குறைவற்றது (வி) குறைவில்லாதது (994) *ஆகப் பொன் தொண்ணூற்று முக் கழைஞ்சும் குறைவற்றது* (SII,v,692.)

குறைவற குறைவில்லாமல் (866) *குறைவறக் குடுப்பது* (TAS,i,p.1-14.)

குறைவறுத்து (வி) குறைபாடு நீக்கி (961) *வேண்டுவன எல்லாம் குறைவறுத்து கொண்டு சிதாரி எப்போதும் முட்டாமே இடுவதற்கு* (SII,xiii,109.)

குறைவு (பெ) குறைபாடு (961) *தளியாள்வான் விளிக்கச் செல்லா தொழியிலும் குறைவு தீர்த்தே கூடி* (TAS,viii,p.43-44.)

குறோ (பெ) பெண் ஆட்டுக் குட்டி (?) (1206) *குலாடும் வெட்டி வலைக்கண்ணுங் குறோவையும் அறுத்து பிள்ளைகளையும் பிடித்துக் சத்தியம் பண்ணிக் குடுத்து* (ARE,1934-35,p.62.)

குன்றம் (பெ) மலை (785) *குன்றமன்னதோர் கோஇலாக்கி* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

குன்றி (பெ) ஒரு நிறுத்தலளவு (913) *கழஞ்சின்வாய்த் திங்கள் குன்றிப் பலிசையால் வந்த பொன்* (SII,xix,161.)

குன்று (பெ) சிறிய மலை (800) *கோ நாடர் புக்கொளித்த குன்று* (EI,xiii,10.)

குனிசிலை (பெ) வளைந்தவில் (1050) *சோழனும் கொண்டைய ராஜநும் குனிசிலை முஞ்சனும்* (SII,v,520.)

குனித்து (வி) வளைத்து (815) *அஸுர க$_3$ணந் தலைஅழியச் சிலை குனித்து* (SII,iii,206b.)

குனையாமல் (வி) வளையாமல் (950) *பொழியினின்றும் குனையாமல் வடக்கு நோக்கிக் களறுக்கேய் புகக் கல்லிந* (TASSI,1962-65,p.32-52.)

கூ

கூகை (பெ) ஒருவகைச் செடி (768) *கல் நாட்டி கூகை புகுத்தி* (EI,xxxvi,20.)

கூச்சம் (பெ) வெட்கம் (1258) *இவர்கள் செய்த பிழையும் பொறுத்து இவர்கள் கூச்சந் தீர்த்துத் திருவெழுத்துச் சாத்தின திருமுகமும் குடுத்து* (SII,vii,118.)

கூட்ட (வி) சபையைக் கூடும்படி செய்ய (987) *ஸ்ரீ கோயிலின் முன்பில் கூடத்தேய் பெருங்குறி கூட்ட குறைவறக் கூடி இருந்து பணிபணியால் பணித்து* (SII,xiii,76.)

கூட்டக் கணக்கு (பெ) சபைக் கணக்கன் (1118) *பட்டர் பணியாலும் கூட்டக் கணக்கு நாணலுடையாந் எழுத்து* (SII,vi,57.)

கூட்டத்தான் (பெ) ஒரு தாயாதிக் கூட்டத்தைச் சேர்ந்தவன் (880) *இக்கீழ்புத்தூர்க் கூட்டத்தான்* (SII,xii,102.)

கூட்டம் (பெ) ஊர்ச்சபைக் கூட்டம் (911) *கூட்டக் குறைவற கூடி இருந்து* (SII,viii,640.)

கூட்டாதொழியவும் (வி) வரியில் சேர்க்காது விடவும் (1249) *உறைநாழி கோ[யி]ற்றமப் பேறு உள்ளிட்டுக் கூட்டுவன கூட்டாதொழியவும்* (SII,vii,1039.)

கூட்டி (வி) சேர்த்து (796) *கூட்டி விடேல்விடுகென்னு* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

கூட்டு (பெ) கூட்டுக் கறி (878) *பசுவினறு நெய் அழாக்குக் கூட்டுக்கு* (SII,xiv,13.)

கூட்டுண்ண (வி) சேர்ந்து உண்ண (1120) *கோடிக் குறித்தாருடல் பருந்து கூட்டுண்ணக் காட்டி மறித்தானந் தொண்டையர் மன்* (CHEN,xxiii,p.93-96; SII,iv,225.)

கூட்டு நிறை (பெ) மொத்த எடை (991) *இவை இத்தனையுமாய்க் கூட்டு நிறை இக் கோயிலில் வெள்ளிக் கோலால் இரண்டாயிரத்து நாற்பத்தெண் பலம்* (SII,xiii,144.)

கூட்டும் (வி) சேர்க்கும் (925) *இதனகம் தொளிக்கோட்டோடு கூடப் புன்செய் கூட்டுந் தறிக்கூறை* (TAS,i,p.187-93.)

கூட்டும் வற்கம் (பெ) ஒரு வரி (1312) *கடமையும் கூட்டும் வற்கமுங் கொள்ளும் படிக்கு* (SII,viii,251.)

கூட்டுவன (பெ) வரியில் சேர்ப்பன (1249) *உறைநாழி கோ...ற்றமப் பேறு உள்ளுட்டுக் கூட்டுவன கூட்டா தொழியவும்* (SII,vii,1039.)

கூட்டுவான் (பெ) ஆட்களை அழைத்துக் கூட்டுபவன் (923) *ஸபை கூட்டுவானிலம்* (SII,iii,123; SII,xix,392.)

கூட்டுவிக்கின்ற (வி) மேற்பார்க்கின்ற (1042) *ஜயசிங்ககுலகால விழுப்பரையன் கூட்டுவிக்கின்ற தனத்து வண்ணக்கு* (SII,vi,76.)

கூட்டொற்றி (பெ) கூட்டாகச் சேர்ந்து பெற்றுள்ள அடைமானம் (985) *காழிக நாராயண நாராயணன் கூட்டொற்றியாக பற்றியாள்கின்ற தோட்டத்துக்கும்* (SII,xiii,158.)

கூட (வி) சேர்த்து (691) *மண்டகம் எடுத்த நிலத்தொடுங் கூட* (SII,i,151; EI,xvii,22.)

கூட (வி) மிகுதியாக (1439) *புறக் குடியாக இருக்கும் பேறக்கு குடியிருப்புக்கும் கூடவிட்ட நத்தத்துக்கும் இவ்வகைக்கு விடுமாறு கற்பித்த நிலம்* (TAS,viii,p.3-5.)

கூடகசாலம் (பெ) தாழ்வாரம் (1128) *கோபுரவாசலில் கூடகசாலமு உலகு வலங் கொண்டொளி விளங்கு நேமி....பசும் பொன் மேய்ந்து* (SII,vii,773.)

கூடசாலை (பெ) தாழ்வாரம் (1133) *திருமாளிகையும் கோபுரவாசல் கூடசாலைகளும் உலகு வலங் கொண்டொளி* (SII,iii,79; SII,v,642.)

கூடம் (பெ) சிறு மண்டபம் (982) *ஆடவலாரை ஆட்டுகின்ற செம்பொற் கூடம் இட்டது* (SII,v,681.)

கூடம் (பெ) தாழ்வாரம் (964) *ஆள்வார் கோயிலில் முன்பில் கூடத்தே திருவிடைமருதில்* (SII,iii,203.)

கூடம் (பெ) மண்டபம் (1029) *கோயிலுநுள்ளால் ஆட்டத்து வெளிக் கூடத்து* (EC,x,Kl.111.)

கூடம் (பெ) அம்பலம் (946) *திருவாய்ப்பாடி ஸ்ரீ கூடத்தே குறைவற கூடியிருந்து* (SII,vii,35.)

கூடல் (பெ) பாண்டியர் தலை நகர் ஆன மதுரை (771) *கூடல் வஞ்சி கோழி என்னும்* (EI,xvii,16.)

கூடலர் கோன் (பெ) பாண்டியன் (905) *களிறுகைத்த கூடலர் கோன் ஸ்ரீ பராந்தகன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கூடலேகை$_3$ (பெ) பொய்க் கணக்கு (921) *கழுதை ஏறினாரையும் கூடலேகை$_3$ செய்தானையும்* (ARASI,1904-05,p.131.)

கூடனகர் (பெ) மதுரை (905) *ஸித்$_3$தி$_4$ செய்த கடிக் கூடனகர்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கூடஸ்த$_2$ர் (பெ) குலத்தலைவர் (1125) *ஸ்ரீவல்லவப்$_3$ரஹ்மாராயனும் உள்ளிட்டார் கூடஸ்த$_2$ர் எழுத்தருளுவித்த கூத்தாடும் தேவற்கும்* (SII,v,295.)

கூடா (வி) நட்பு சேரா (771) *கூடா மன்னர் குழாந்தவிர்த்த* (EI,xvii,16.)

கூடா (வி) இசையாத (771) *கொல் யானை பலவோட்டிக் கூடா மன்னர் குழாந் தவிர்த்த* (EI,xvii,16.)

கூடாத மன்னர் (பெ) பகையரசர் (800) *தண் கொடும்பைக் கூடாத மன்னர்* (EI,xiii,10.)

கூடார் (பெ) பகைவர் (771) *கூடார் கடும் பரிஉம்* (EI,vii,16.)

கூடி (வி) சேர்ந்து (861) *கூடிச் செய்த* (TAS,ii,p.85-86.)

கூடித்து (வி) அடைந்தது (1069) *பச்$_0$சாதி பெரும்*

பள்ளமுள்ளாகக் கடத்தி மலையிலே கூடித்து சீ$_0$மாந்தரம் ஸமாப்தி (EI,xxv,25.)

கூடியிருக்க (வி) கூட்டம் கூடியிருக்க (895) *மஹாஸபை$_4$ கூடியிருக்க* (SII,xiii,309.)

கூடு (பெ) விலங்கு அடைக்கும் கூடு (1477) *வலயர் ஆடிக்கு ஒரு கூடு முசலும் காத்திகைக்கு ஒரு கூடு முசலும்* (IPS,715.)

கூடும் (வி) பொருந்தும் (905) *வடங் கூடு முலை மகளிர்* (TASSI,1962-65,p.1-31; PNDCP, p.95-115.)

கூடை (பெ) பொருள்கள் வைத்து விற்கும் கூடை (873) *கூடையால்லிரண்டு பாக்கும் கொள்ளப் பெறுவதாக* (SII,iii,90.)

கூடை நீர் (பெ) கூடையால் இறைக்கும் நீர் (960) *இந்நீரில் குற்றேத்தமும் கூடை நீரு மற்றும் பெறாதாராகவும்* (EI,xv,5.)

கூத்த பிள்ளைகள் (பெ) நடனம் ஆடுபவர்கள் (968) *கூத்த பிள்ளைகள் இருபத்து நால்வோம்* (SII,xiii,230.)

கூத்தர் (பெ) சிவன் (1006) *ஸ்ரீ கோயிலில் ஆடியருளுகிற கூத்தர்க்கு இடுவித்த பாத பீடம்* (SII,vii,998.)

கூத்தாடினார் (பெ) நடனம் ஆடினவர் (941) *கூத்தாடினார்க்கும் பாடினார்க்குமாக* (SII,viii,529.)

கூத்தாடுகை (பெ) (1132) *சித்திரைத் திருநாளுக்குக் கூத்தாடுகைக்கு சாந்திக் கூத்தாடுகின்ற* (IPS,128.)

கூத்தாடுமிடம் (பெ) நடன சாலை (1120) *சிற்றம்பலத்திலே செந்று பொன்நம்பலக் கூத்தாடுமிடம்* (SII,iv,225.)

கூத்தி (பெ) நாடகக் கணிகை (759) *பன்னிருவர் கூத்திகளை மெய்து குடுத்தேன்* (SII,iv,827.)

கூத்தி கால் (பெ) கூத்திகள் செலுத்தும் வரி(?) (1068) *வாவிறையும் தீயெரியும் ஈழம்பூட்சியும் கூத்திகாலும் உள்ளிட்டு* (EI,xxii,34.)

கூத்து (பெ) நடனம் (921) *குறத்தலையின் கூத்தொழித்தும்* (SII,iii,206a.)

கூத்து மாடிச்சு (வி) நாடகம் நடத்தி (1019) *பிராமணரை ஊட்டிப் பத்து கூத்து மாடிச்சு பணி மானிடத்தின்கு* (TAS,v,p.189.)

கூத்தொழில் (பெ) ஏவல் தொழில் (1012) *கூத்தொழில் கேளா தேத்தொழில் முனைந்த கண்டகர்* (SII,vii,863.)

கூந்தன் மா (பெ) குதிரை (785) *கூந்தன் மாவுங் குலத$_4$நமும் நன்நாடும் அவை கொண்டும்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

கூபகர் (பெ) ஓர் அரச குலம் (905) *குணசோழர் தென்கூபகர் வட புலவர்* (TASSI,1962-65, p.1-31.)

கூபங்கள் (பெ) கிணறுகள் (1145) *வகுத்தமைத்து கூபங்கள் பல தொட்டு* (SII,vii,1044; IPS,120.)

கூம்ப (வி) சுருங்க (800) *பேரிலைப் பங்கயங் கூம்ப* (EI,xiii,10.)

கூர்ப்பு (பெ) பகை (771) *குறுமடைவாய்க் கூர்ப்பழித்து* (EI,xvii,16.)

கூர்வாய் (பெ) அம்பு (800) *செருவில் மறங் கூர்வாய்ப் பட்டாருடல் குடைந்து* (EI,xiii,10.)

கூரைக் கட்டணங்கள் (பெ) கூரை வேய்ந்த கட்டிடங்கள் (1249) *கூரைக் கட்டணங்களுக்கு இடும் வைக்கோல்லும் கற்றையும் தவிரக் கடவதாகவும்* (SII,vii,1039.)

கூரைக் காசு (பெ) ஒரு வரி; பொதுக்கட்டிடங்கள் கூரைவேயும் பொருட்டுச் செலுத்துவது (1168) *புதியிது மனை காட்சிப் பேறும் கூரைக்காசு கிடாக்காசும்* (SII,vii,890.)

கூலம் (பெ) தானியங்கள் மீதான வரி (691) *தறியும் கூலமும் தரகும் கத்திக் காணமும்* (SII,i,151; EI,xvii,22.)

கூலி (பெ) சுமை கூலி (967) *இருபதின் கலநெல்லும் தூயவாக்கி கூலிப் பரம்பட்டு திருமுற்றத்துக்கே* (EI,vii,20h.)

கூலிக்குச் செய்திருப்பார் (பெ) கூலிவேலை செய்து வாழ்பவர் (1014) *கூலிக்குச் செய்திருப்பாரை அரைக் கால் பொன்னும்* (SII,i,40.)

கூலிச் சேவகர் (பெ) கூலி பெற்றுப் போரிடும் வீரர் (1258) *கூலிச்சேவகரும் கொந்தவிச்சாதிரரும் நவிரமலைத் தென்பற்று நாட்டவரும்* (SII,vii,118.)

கூலிச் சேவகன் (பெ) (921) *கூலிச்சேவகன் மாறம்பட்டன் இவ்வூர் படுகாலப்பட்டு இன்றிவிட* (SII,xiv,65.)

கூவப்படும் (வி) அழைக்கப்படும் (923) *மூங்கில் செய்யென்று பேர் கூவப்படும்* (SII,viii,602.)

கூவளை (பெ) வில்வ மரம் (1179) *சாரற் கொங்கலர் கூவளை கூநதறிடை யுமையோடு* (EC,x,Kl.132.)

கூவி (வி) அழைத்து (771) *தெற்றென நன்கு கூவி* (EI,xvii,16.)

கூவிவரும் (வி) சொல்லப்படும் (1035) *மஞ்சள் தோட்டமெந்று பேர் கூவிவரு நிலத்துக்கு தெற்கும்* (SII,viii,316.)

கூழ் (பெ) கஞ்சி (1210) *கூடக் கூழுமிட்டு அகத்து பந்திரடிக்கு ஒரு பெரு அமிர்து* (TAS,iv,p.66-68.)

கூழ் (பெ) பயிர் (915) *கூழ் பெற்ற சுரியென்று பியரிட்டு* (SII,xiv,56.)

கூழ்க்கடை (பெ) தானியக் கடை (1682) *ஆறு தெண்டு நீளத்தில் மூந்று தெண்டு வீதியில் கூழ்கடையும் ஆக இவ்வகைப் படியொள்ள தறையில் கடையும்* (TAS,iii,p.219-22.)

கூழுங் குறுணியும் உணவுச்செலவு (1800) *வாடாமாலயும் மேலைவாசல் காவலும் கூழுங் குறுணியும் கட்டளையிட்டோம்* (IPS,991.)

கூளி (பெ) பெருங்கழுகு (1200) *கொல்லி விடுமுதகாதிபர் கூளி கருதிலர் ஊர் புக* (SII,vii,123.)

கூற்றம் (பெ) (= நாடு): பல ஊர்களை உட்கொண்டு இருந்த வேளாண் சமூக நிலப்பகுதி (771) *தும்பூர்க் கூற்றத்துக் காடந்தைகுடி த$_4$ர்மம சித்தந்* (SII,v,405.)

கூற்றரிசி (பெ) எச்சோறு வழங்கத் தேவைப்படும் அரிசி குற்றும் ஊழியம் (1520) *இத்தேவ தானத்தை நோக்கிவரும் வேண்டுகள் இனியோகம் எற்சோறு கூற்றுஅரிசி வெட்டி முட்டாளும்* (IPS,733)

கூற்றற்ற (வி) விவரிக்க இயலாத (1476) *ஆட்பட்டுத் தழும்பு பட்டும் கூற்றற்ற வினையா யிருக்கையில்* (IPS,815.)

கூற்றார் (பெ) பிரிவைச் சேர்ந்தவர் (988) *திருக்கோயிலுடைய நாராயணமங்கலத் திரண்டு கூற்றாரும் இது முட்டுகில்* (TAS,ii,p.40-41.)

கூற்றிலக்கை (பெ) ஒரு வரி (1280) *விற்ற வயலுக்கு கழவாரிப் பச்சை வெட்டி முட்டாவாள் கூற்றிலக்கை கொற்றிலக்கை தறியிறை தட்டார்ப்பேறு மற்று மெப்பேறபட்டன தேவைகளும்* (IPS,421.)

கூற்று (பெ) எமன் (1000) *உறைப்புடைக் கூற்றையுதைத் துயிர் மாற்றி* (SII,iv,167.)

கூற்று (பெ) ஒப்பந்தம் (985) *ஆட்டாண்டு தோறும் தொண்ணூற்றுக் காடி நெல்லும் கூற்று வகை வழுவாமே ஆட்டாண்டு தோறும் எங்களூர்* (SII,i,85.)

கூற்றுக்காறன் (பெ) பங்காளி (1646) *காரியதுறை கண்ணெனனும் மேம்படியான்றெ கூற்றுக்காறனாகிய வீயெனூர் புளிம்பள்ளிக் கோணத்து* (TAS,iv,p.152-60.)

கூற்று வரி (பெ) ஒரு வரி (1000) *இப்பங்கு மூன்றுக்கும் வந்த இறையு மெச்சோற்றுக் கூற்றுவரியும் இரவும் வெட்டி* (EI,xxx,19(ii).)

கூற்று ஓலை (பெ) நாட்குறிப்பு ஏடு: பஞ்சாங்கம் (992) *இருபத்தேழு நாள்க் கூற்று ஓலை கரபுரத்து தூக்க நிசதம் நெல்லு குறுணியாக* (SII,xix,357.)

கூற்றோலை (பெ) பங்கு உரிமை ஆவணம் (1139) *தாநாத$_4$மந விநிமயங்களுக் குரித்தாமண்ணம் இருபது கூற்றோலையும் குடுத்து* (SII,xiv,243.)

கூறடைத்த (வி) பங்கிட்டு கொடுத்த (1014) *கூறடைத்த நிலங்களில் நின்ற பல்லுருவில்* (SII,i,40.)

கூறி (வி) சொல்லி (750) *இக்கூறி அகப்பட்ட பெரு நான்கெல்லையின்* (EI,v,8.)

கூறிட்டு (வி) பங்கிட்டு (901) *திருவொற்றியூ ராணிக் கீழே கொண்டு கூறிட்டுக் குடும்போமானோம்* (SII,xii,90.)

கூறிடாது (வி) நில உரிமை பங்கிடாமல் (895) *ஆடலம்பூண்டித் தெற்குக் கூறிடாதே கிடந்த கீழ்ப்பூண்டியும்* (SII,vi,368.)

கூறிடாமை (வி) பங்கிடாமை (1201) *நெல்லும் நிலமும் தங்களில் ஒக்க கூறிடாமையாலே* (SII,xvii,599.)

கூறீடு (பெ) பங்கு நிலம் (772) *சோமாசியார் அட்டகத்தின் கூறீட்டுக்கு வடக்கு* (SII,xiv,19.)

கூறு (பெ) நிலப் பிரிவு (877) *காலியூர் கோட்டத்து தன் கூற்று உத்திரமேரு சதிர்வ்வேதிமங்கலத்து* (SII,vi,290.)

கூறு (பெ) நிலப் பொதுப் பெயர் (772) *வாசுதேவ ஏரிக்கீழ் அரைமாக் கூற்றொடு* (SII,xiv,19.)

கூறு (பெ) பங்கு (731) *இச்செறுவினுள் பொற்றத்தனா கூறாயதும்* (SII,viii,331.)

கூறுகொள் பொருள் (பெ) (அரசாங்க) பங்காக வசூலிக்கும் பொருள் (1047) *திறைகளு மாறிலொன்றவனியுள் கூறு கொள் பொருள்களு முகந்து* (SII,iii,28.)

கூறுங்காலை சொன்னால் (771) *மற்றிதற் காணத்தி குற்றமின்றிக் கூறுங்காலை* (EI,xvii,16.)

கூறு செய்வார் (பெ) காரியங்களை வகை செய்து நிர்வகிப்பவர் (1523) *கந்தாடை மாத$_3$வயங்கார் திருப்பதி கூறு செய்வார்களுக்கு சி$_{\text{ல}}$லாஸாஸநம் பண்ணிக் குடுத்தபடி* (TDI,iii,153.)

கூறுடையான் (பெ) பங்கு பெற்றவன் (1014) *கூறுடைத்த நிலங்களில் நின்ற பல்லுருவில் பழமரங்கள் அவ்வவ் கூறுடையானே பெறுவானாகவும்* (SII,i,40.)

கூறுபடி (பெ) பங்கு நிலம் (1145) *ராஜராஜன் பெருவழிக்கு மேற்கு என் கூறுபடியான ஊர்களில்* (SII,viii,319.)

கூறுபாடு (பெ) பங்கீடு (1118) *விழலுங் காடுகோளுமாய்ப் பயிர் செய்யாதும் கூறுபாடும் பரப்புந் தரமும் இறை ஏற்றுமின்றி ஸபைப் பொதுவாய்க் கிடந்தமையில்* (SII,iv,134.)

கூறை (பெ) ஆடை (887) *மேற் கட்டுக்கு வெண்கூறை இணை ஏழரைக் காணம்* (SII,xiv,16a.)

கூறைத் தரகு (பெ) நெய்வோர் மீதான வரி (1223) *இக்கூறைத்தரகு ஆயத்தில் முதலாய் வருங்காசு தேவர் பெறுவாராகவும்* (SII,xvii,452.)

கூன் (பெ) பெரும் பாத்திரம் (1355) *இலை அமுது 600ம் முறம் பெரும்பாய் கூடை கூனும் திருநாள்கள் தோறும் ஸ்ரீ பண்டாரத்திலே விட்டுப் போதக் கடவதாகவும்* (TDI,i,106.)

கெ

கெங்கை (பெ) கங்கையாறு (870) *கெங்கை கரை ஆயிரங் குரலாக் கொன்ற மஹாநரகம் புகுவதாகவும்* (SII,xix,163.)

கெட்டமையில் (வி) அழிந்து போனதால் (1001) *தேவர்க்கு முன்பு செய்த சா$_{\text{ஸ}}$நம் கெட்டமையில் இத்தேவர் தேவதாநம்* (SII,vii,843.)

கெட்டி (வி) கட்டி (1147) *மனையும் கோயிக்கலும் கெட்டி வெத்து கொடுக்கையில் அடுக்கள சிலவு* (TAS,viii,p.7-8.)

கெட்டி கூறை (பெ) தரமான புடவை (1147) *கல்(ல)யாணத்திறு கெட்டி கூறையும் பட்டுச் சுவந்திரவும் பற்றி* (TAS,viii,p.7-8.)

கெட்டு (வி) அழிந்து (921) *து$_{\text{ஷ}}$ஷ்டர் கெட்டு விஷிஷ்டர் வத்$_3$தி$_4$ப்பதாக* (ARASI,1904-05,p.131.)

கெட்டு கிடந்த (வி) பாழான (959) *மணல் இட்டு கெட்டு கிடந்த பூ$_4$மி* (SII,iii,156.)

கெட்டுப் போகின்றது (வி) நசிகிறது (993) *இலாட ராஜர்கள் கற்பூரவிலை கொண்டு இத்த$_4$ர்மங் கெட்டுப்போகின்றதென்று* (EI,iv,14b.)

கெட்டுமவரள் (பெ) தொடுப்பவர் (1000) *திருப்பள்ளித் தாமங் கெட்டுமவரள் நால்வர்க்காயரி எண்ணாழி* (TAS,ii,p.173-207.)

கெட (வி) அழிய (800) *தென்னன் முனையைக் கெடச் சென்ற மாறன்* (EI,xiii,10.)

கெடாமல் (வி) அழியாமல் (1100) *முதல் கெடாமல் நிசதி ஒரு திருவமிர்து* (SII,iv,1404.)

கெடாமை (பெ) அழியாமை (768) *முதல் கெடாமை பொலிஊட்டுக் கொண்டு* (SII,xiv,27.)

கெடுத்தான் (பெ) அழித்தவன் (900) *இத$_4$ந்மங்கெடுத்தான் கெங்கை இடைக் குமரி இடை* (SII,xii,111.)

கெடுத்தும் (வி) அழித்தும் (771) *குறு நாட்டவர் குலங் கெடுத்தும்* (EI,xvii,16.)

கெடுபாதை (பெ) ஒரு வரி (1400) *தோணிக்கடமை கெடுபாதை யுறுபாதை மரமச்சாதி விலைப் பதுவாரம்* (SII,viii,403.)

கெண்டி (பெ) மூக்குள்ள செம்பு (894) *பிரதிபதியார் குடுத்த வெள்ளிக்கெண்டி* (SII,v,1368.)

கெணயப$_4$டாரி (பெ) ஒரு கிராம தேவதை (959) *கெணயப$_4$டாரிகளுக்கு திருவமிதுகளும்* (SII,iii,155.)

கெண்டைப் பொறி (பெ) மீன் சின்னம் (815) *வலார சூளிகை மணிக்கெண்டைப் பொறி சூட்டியும்* (SII,iii,206b.)

கெம்பு (பெ) நவமணிகளில் ஒன்று (1533) *முத்து 122 கெம்பு 16 பச்சை 2* (TDI,iv,16.)

கெம்பூரா கற்பூரம் (பெ) சூடவகை (1551) *திருமுக மண்டலத்துக்கு கற்பூர தூளுக்கு கெம்பூரா கற்பூரம் தூக்கம் 1க்கு பணம் 2* (TDI,v,133.)

கெல்லுவித்து (வி) (= கல்லுவித்து) (1255) *காசு இட்டுக் கெல்லுவித்து இவ்வேரி கீழ் திருத்தி விட்ட நில...* (TDI,i.34.)

கெல்லை (பெ) பழ வகை (1544) *கடலை 1 மரக்கால் கெல்லை 1000 சந்த$_3$னம் பலம் 60* (TDI,v,25.)

கெழுதகு (பெ) சிறந்த (950) *க$_3$ணபதியோடுடந் கெழுதகு கண்காணி ஆகவும்* (TASSI,1962-65,p.32-52.)

கெளர்குழி (பெ) வாணவெடிக் குழி (1547) *பெட்டிலு பா$_4$ணம் ரேகைபொன் 1 பணம் 2 கெளர்குழி கெல்லவும் சாந்து இடவும் தூறக்கவும் பணம் 8* (TDI,v,92.)

கே

கேட்க (வி) விண்ணப்பிக்க (771) *கேள்வி அந்தணாளர் முன்பு கேட்க* (EI,xvii,16.)

கேட்ட (வி) உடன்பட்ட (817) *மீளப் பணி கேட்ட மத்$_3$த்$_4$யஸ்த$_2$ னுளனாயில்* (SII,vi,344; EI,xxiv,7a.)

கேட்டருளி (வி) உசாவி (992) *நடுவிற்றளிதேவர் நிவந்தம் கேட்டருளி* (SII,v,612.)

கேட்டார் (வி) அரச ஆணையைக் கேட்டார் (500) *எழுதி வைக்கென்று அருள்ளித்தாரு கேட்டா ருலவியப்பெருந்திணை நல்லங்கிழான்* (AVNM,1,p.67-69)

கேட்டு (வி) செவியால் கேட்டு (796) *சொன்ன இடம் அது கேட்டு* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

கேட்டை (பெ) கேட்டை நட்சத்திரம் (978) *செம்பியன் மாதேவியார் திருநக்ஷத்ரமான திருக்கேட்டை தோறும் பெரும் பலி* (SII,iii,151-151a.)

கேட்பிக்கில் (வி) அறிவித்தால் (1014) *இரண்டும் ஒருவனே கேட்ப்பிக்கிலும் பேரால் காசு ஒன்று இடவும் ஆக* (SII,ii,25.)

கேட்பிக்கும் (வி) அறிவிக்கும் (1014) *திருக்கொடி யேற்று நானன்று திருப்பறையறைவு கேட்பிக்குங் கடிகையார்* (SII,ii,25.)

கேணி (பெ) கிணறு (550) *வேள்வடுகன் கேணியின் வடக்கும்* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

கேரளன் (பெ) சேரன் (771) *தனிச் செங்கோற் கேரளனை* (EI,xvii,16.)

கேவணம் (பெ) மணி பதிக்குங்க் குழி (1014) *திருக்கைக் காறை பொன்னின் பட்டை மேற் குண்டுங் கேவணமும் வைய்த்து* (SII,ii,51.)

கேவிகள் (பெ) ஒருசார் மீனவர் (1088) *மரக்கல நாயநும் கேவிகளும்* (AVNM, 4, p.118-19.)

கேழ்ப்பிச்சு (வி) மற்றவர் கேட்கச் செய்து (960) *இவகள் வேண்டக் கேட்டுக் கேழ்ப்பிச்சு கைய்யெழுதி அறிவேன்* (TAS,iii,p.159-69.)

கேழ்பை (பெ) கேழ்வரகு (1380) *கேழ்பை தினை விளைஞ்ச நிலத்துக்கு* (IPS,454.)

கேழ்வரகு (பெ) தானியவகை (1305) *குறுவைக் கேழ்வரகு ஒன்றுகாலும் ஆக* (SII,viii,171.)

கேழ்வி (பெ) அரசன் வாய்மொழி உத்தரவு (978) *ஒப்பிட்டுப் புகுந்த கேழ்விப்படியேய் வரியிலிட்டுக் குடுக்க வென்று* (SII,iii,151-151a.)

கேழ்வித்து (வி) கேட்கச் செய்து (976) *இருமாடுஞ் சாற்றிய் மும்மாடு கேழ்வித்து* (SII,xix.162.)

கேழ்வி நிவந்தி (பெ) ஒரு வரி (1281) *ஆசுவிக கடமை யிராச நிவந்தி கேழ்வி நிவந்தி மற்றும் உள்ள பலவரிவுகளும்* (EC,x,Hr.37.)

கேழல் (பெ) பன்றி (1073) *திருமால் கேழலா யெடுத்தன்ன* (SII,vii,392.)

கேள் (பெ) கணவன் (905) *வேய்போலும் தோளியர் கேள்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கேள்குவிர் (வி) கேட்பீர் (796) *அதுரணரு சேவக நிடுவித்தக் கேள்குவிர்* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

கேள்வி (பெ) விண்ணப்பம் (771) *கேள்வியிற் றரப்பட்டதனை* (EI,xvii,16.)

கேள்வி (பெ) வேதம் (771) *கேள்வி அந்தணாளர் முன்பு கேட்க* (EI,xvii,16.)

கேள்வி நிமந்தி (பெ) ஒரு வரி (1294) *யிராயச னிமந்தி கேள்வி நிமந்தி வாசல் அழிவும்...எப்பேர்ப்பட்ட வரிவுகளும்* (EC,x,Ct.88.)

கேளலர் (பெ) பகைவர் (1074) *தந்தோளும் வாளும் துணைஎன கேளலர் வஞ்சனை கடந்து* (SII,viii,701.)

கேளாது (வி) கீழ்ப்படியாது (1012) *புயத்துரவோன் கூத்தொழில் கேளா தேத்தொழில் முனைந்த* (SII,vii,863.)

கை

கை (பெ) கைப்பிடி (1009) *சாமரைக்கை ஒன்று* (SII,v,521.)

கை (பெ) யானைத் துதிக்கை (771) *கைந் நலத்த களிறுந்தி* (EI,xvii,16.)

கை (பெ) வசம் (768) *சவையார் கைய்யில் குடுத்த* (SII,xiv,27.)

கை (பெ) ஒரு நீட்டல் அளவு; முழும்(?) (990) *தென்கை 16 கீழ்கை 300 கை வந்த வாறால் நிலம்* (SII,xiii,115.)

கை (பெ) ஓர் உறுப்பு (800) *என் கையளவிற்றேய் பாண* (EI,xiii,10.)

கைக் காறை (பெ) ஒரு நகை (1014) *திருக்கைக் காறை ஒன்று பொன் ஐம்பத்து ஒரு கழஞ்சு* (SII,ii,i.)

கைக்கூலி (பெ) (ஒரு வேலையின் பொருட்டு) ஊதியம் (992) *ஊராளரும் பரடையாரும் இச் செலவு செலுத்தவும் பாட்டமாளவுஞ் சாந்திக்கு மாபாரிதத்தினுங் கைகூலி கொள்ளப் பெறார்* (TAS,ii,p.34-47.)

கைக்கூலி (பெ) விலை (?) (844) *மற்றொருத்தர்க்கு காராண்மை கொடுக்கவும் பாட்டமிடவுங் கைக்கூலி கொள்ள வேண்டுமென்னவும்* (SII,v,783.)

கைக்கொண்டார் (வி) பெற்றுக் கொண்டார் (1004) *இன்னாட்டுப் பருக்கல்லுடையாந் அனுப்பகந் பிரிதி வலி இவ்வாடு கைக்கொண்டார்* (SII,vii,987.)

கைக்கொண்டு (வி) கைப்பற்றி (771) *கலி அரைசன் கைக்கொண்டதனை இறக்கிய பின்* (EI,xvii,16.)

கைக்கோண் முதலிகள் (பெ) கைக்கோளர் சாதித் தலைவர்கள் (1300) *சோழ மண்டலத்து திருப்பனங்காட்டுக் கைக்கோண் முதலிகளில் உடையரான* (IPS,551.)

கைக்கோள்மை (பெ) கைக்கோளப் பதவி (1364) *முதல்மையும் அடைப்பும் தேவர் அடிமையும் கைக்கோள்மையும் தாங்கள் நின்ற அடைவுகளிலே விற்றும்* (SII,i,87.)

கைக்கோளர் (பெ) ஒரு போர்மரபு இனம்; அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வீரர் (953) *பரமஸ்வாமிக்கு வீரசோழ தெரிஞ்ச கைக்கோளரில் தஞ்சாவூர் கூற்றத்து கைக்கோளன்* (SII,xiii,45.)

கைக்கோளன் (பெ) கைக்கோளர் படை வீரன் (953) *பரமஸ்வாமிக்கு வீரசோழ தெரிஞ்ச கைக்கோளரில் தஞ்சாவூர் கூற்றத்து கைக்கோளன்* (SII,xiii,45.)

கைகண்ட (வி) அனுபவித்துணர்ந்த (1000) *மெய்ம்மை கைகண்ட யோகங் கடலிடத்தே* (SII,iv,167.)

கைகலந்து (வி) கூடி (1012) *கழனியிலெட்டுங் கைகலந் துரைப்பிற்றுழனி* (SII,vii,863.)

கை காவல் (பெ) உடன் காத்தல் (800) *பாகூருங் கூழைக்கோட்டு வூராருங் கைகாவலால் புறநின்று ரக்ஷிப்பது* (TAS,iii,p.65-66.)

கைகுடுத்து (வி) உதவி செய்து (1800) *சண்டை பண்ணினால் கைகுடுத்து குடுப்பானாகவும்* (IPS,913.)

கைச்சம் (பெ) ஒப்பந்தம் (861) *கைச்சப்படியே கவர் திறப்பதாகவும்* (SII,xiv,78.)

கைச் செக்கு (பெ) கையால் ஆட்டும் சிறிய செக்கு (976) *சீபலிக்கு கைச்செக்குக்கு எண்ணையாட்டுவதாகவும்* (SII,xix,169.)

கைச்செல்ல (வி) கைமேல் செலுத்த; நேரில் செலுத்த (877) *விலைக் காணங் கைச்செல்லக் கொண்டு விற்றுக்குடுத்தோம்* (SII,vi,370.)

கைச்செலவு (பெ) நேரடியாக செலுத்தும் பணம் (996) *இக் கழஞ்சு பொந்நும் ஆவணக்களியே கைச்செலவறக் கொண்டு இந்நிலம் ஆவணஞ் செய்து விற்றுக் குடுத்தேந்* (SII,v,669.)

கைச்சோலம் (பெ) ஒரு வகைப் பாத்திரம் (1009) *வெள்ளிக் கைச்சோலம் ஒன்று மேற்ப்படி நிறை முப்பத்தெண் கழஞ்சு* (SII,v,521.)

கைத்தடி (பெ) ஊர் நில விவரம் அடங்கிய புத்தகம் (953) *பெருமக்கள் கைத்தடி மேல்ப்பட்ட நிலம் முற்றும்* (SII,v,570.)

கைத்தடி ஓலை (பெ) நிலங்களைப் பற்றிய விவரங்கள் அடங்கிய ஓலை (1106) *நிலங்க[ள்] கூடிக் குடுத்த கைத்தடி ஓலை* (CHEN,xii,p.190-91.)

கைத் தப்புகை (பெ) தவறிப்போதல் (1300) *ராஷ்ட்ர க்ஷோபங்களிலே கைதப்புகையில் முன்பு வைத்துக் குடுத்த படியே* (SII,vii,129.)

கைத்தழை (பெ) கைவிசிறி (1014) *மூவிரற்ச் சுற்றிற் செய்த கைத்தழை ஒன்று* (SII,ii,50.)

கைத் தாயர் (பெ) வளர்ப்புத் தாய் (1171) *கயற்குலமேய் பிறந்தொழுகுங் கைத்தாயரேய் கடிந்தொறுப்பார்* (SII,xvii,592.)

கைத் தாளம் (பெ) ஜால்ரா (1000) *ஓரணை கைத்தாளமு மிரண்டு காகாளமும்* (TAS,ii,p.173-207.)

கைத் தீட்டு (வி) கையெழுத்து (961) *சிங்கபுர நாட்டு மீய் வழித் தாயனூரூரார்க்கு ஒட்டிக் கைத்தீட்டிட்டு குடுத்த* (SII,iii,175.)

கை தாராது (வி) உதவாது (1018) *அறமறவற்க அறமல்லது கைதாராதே* (SII,v,578.)

கைங் நடுமரம் (பெ) நட்டு உண்டாக்கப்பட்ட மரம் (961) *காவுங் கைந்நடுமரமும் பனையும் புற்றும்* (SII,xiv,91.)

கைப் பணி (பெ) குற்றேவல் (1000) *யாக்கையைக் கைப்பணி கோடல்* (SII,iv,167.)

கைப் பிழைபாடு (பெ) கை தவறுதல் (1077) *பச்சை பள்ளியைக் கைப் பிழைபாடே யெய்ய* (SII,xvii,200.)

கைப் பெட்டி (பெ) ஓலை ஆவணங்கள் வைக்கும் பெட்டி (1703) *அவரவரே் சுவாசனம் இட்டவிடத்திலே கைப்பெட்டிகளைத் திறந்து ஓலைகள் கொண்டு வந்து உபத்திரிக்கிறபடியினாலெயும்* (TAS,v,p.215-16.)

கை படுத்து (வி) தன்வசப்படுத்தி (1103) *கலிங்க மண்டலம் கைபடுத்து திறல் கொளாரமும் திருப்புயந் தலங்களும் போல* (EC,x,Mb.54.)

கை பிழை குற்றம் (பெ) கைத் தவறால் உண்டான குற்றம் (1145) *மன்றாடி குளத்தூர் பன்னிருவந் கை பிழை குற்றத்தை திருவாய்ப்பாடி நாட்டு இவர்கள் மகநான* (SII,vii,462.)

கை புக்க (வி) பல க்கு வந்த (1290) *கொடிக் கால் விளைந்த னிலத்துக்கு கை புக்க நாள் முதல் பசானக் கடமையும்* (IPS,403.)

கைம் மணி (பெ) கையாலாட்டும் மணி (1012) *கரடிகைத் தொகுதியுங் கைம்மணிப் பகுதியு* (SII,vii,863.)

கைம்மா (பெ) யானை (1000) *பிறை கோட்டுக் கைம்மா வுரிஞ்சிலை* (SII,iv,167.)

கைம்மாட்டாங்கு (பெ) தற்குறி (1199) *வடசேரியுடையாந் பக்கந் ஆளுடையாநும் கைம்மாட்டாங்காநமைக்கும் எநக்கும்* (SII,vii,797.)

கைம்மாட்டாமை (வி) எழுத்தத்தெரியாமை (885) *யாமெழுதிட மெங்கைம்மாட்டாமையாற் பிறராலெழுதுவித்து* (SII,xii,105.)

கைமணி (பெ) கையால் ஆட்டுகின்ற சிறியமணி (986) *சேகண்டிகை ஒன்றும் காளம் இரண்டும் கைமணி ஒன்றுமாக ஆள் ஒன்பதினுக்கு* (SII,iii,128.)

கைமாட்டாமை (பெ) தற்குறி (1237) *முனையந் ஊரநாந துலையாநிலைப் பேரையந் கைமாட்டாமையும் இட்டு நாநுமறிவேந்* (IPS,309.)

கைய்க்கோளர் (பெ) (= கைக்கோளர்) (913) *தானதொங்க தெரிஞ்ச கைய்க்கோளரில் பிராந்தன் புருஷோத்தமன்* (SII,xix,166.)

கைய்கையர் (பெ) கேகய நாட்டு அரசர் (1136) *மத்திர கங்கர் சோனகர் கைய்கையர் ஜீனரென்றறை கழல்* (SII,vii,1038.)

கைய்ச் (பெ) கஃசு: ஒரு சிறிய எடை (988) *நிசதம் கைய்சு குங்கிலியமு* (SII,xiii,52.)

கைய்யகல (வி) விட்டு நீங்க (1224) *வெம்மை யெலாங் கைய்யகலத் தானோதகம் பண்ணி* (SII,iv,372.)

கைய்யடை (பெ) நிலங்களை உழுகுடிகளுக்கு ஒப்படைக்கக் கொடுக்கும் ஆவணம் (1201) *திருமுத்தின் சிவிகை பெற்றானும் எழுத்திட்ட கைய்யடைய் படியே இவர்களுக்கும் இவர்கள் வற்க்கத்தாற்கும்* (SII,xvii,599.)

கைய்யார் சக்கரத்து நாள் (பெ) ஒரு திருவிழா (1447) *திருநாள் ஒன்பதிலும் கைய்யார் சக்கரத்துநாள் நாச்சிமாரும் கூட ஏறி அருளித் திருமஞ்சனஞ் செய்துஅருளி* (TDI,i,222.)

கைய்யுருவிச் சுவர் (பெ) சிறிய சுவர் (1245) *தெற்கிற் மேலாக போந்த திருவீதி வட சுவருக்கு வடக்கும் கைய்யுருவிச் சுவருக்குத் தெற்கும்* (IPS,340.)

கைய்யுற்ற (வி) பெற்றுக் கொண்ட (1064) *காமக் கோடன் செல்வந் கைய்யுற்ற ஆடு* (SII,iv,378.)

கைய்யுறை (பெ) காணிக்கை (1048) *உப்பு முதலிலும் செலவிலும் கலத்துவாய் நாழி கைய்யுறை கொண்டு இச்சாலைக்கு முன்பு* (TAS,i,p.162-64.)

கைய்யூட்டு (பெ) லஞ்சம் (921) *எப்பேர்ப்பட்ட கைய்யூட்டுங் கொண்டான்* (ARASI,1904-05,p.131.)

கைய்யெழுத்து (பெ) உரியவன் கையெழுத்திட்ட உடன்படிக்கை (877) *விலையாவணக் கைய்யெழுத்து* (SII,vi,370.)

கைய்யெழுத்தோலை (பெ) ஒப்பந்த ஓலை (927) *பெருமானடிகளுக்கு முன் கைய்யெழுத் தோலையாற் கடவ பொன்* (SII,xvii,643.)

கைய்யெழுதி (வி) கையால் எழுதி (960) *வேண்டக் கேட்டுக் கேழ்ப்பிச்சு கைய்யெழுதி அறிவேன்* (TAS,iii,p.159-69.)

கைய் லிகிதம் (பெ) கை எழுத்து (1774) *இந்தப்படிக்குத் தாம்பிற சாஸநமெழுதினது மதுரை சட்டையப்ப நாலங்கராயன் குமாரன் சட்டையப்பன் கைய் லிகிதம்* (TAS,v,p.7-17.)

கைய் வசம் (பெ) கையில் (998) *இது திருவுண்ணாழிகை ஸபை$_4$யார் கைய்வசம்* (SII,vii,866.)

கைய் வட்டகை (பெ) (= கைவட்டகை) (1014) *கைய் வட்டகை ஒன்று வெள்ளி ஐஞ்ஞூற்று அறுபத்தேழு கழஞ்சரை* (SII,ii,91.)

கைய் வளர (வி) போற்றப்பட (1224) *கன்னி சூழ் நாட்டிற் கயலாணை கைய்வளர* (SII,iv,372.)

கைய் விளக்கு (பெ) சிறு விளக்கு (1000) *திருப்பலிக்குக் கைய் விளக்கிரண்டு* (SII,viii,647.)

கைய் வெண்சாமரை (பெ) கைப்பிடியோடு கூடிய வெண் சாமரை (985) *பஞ்சவன் மஹாதே$_3$வியார் இட்ட பொன்னின் கைய்வெண் சாமரை* (SII,xix,382.)

கையற (வி) முற்றும் (1263) *இப்பொன் இருபத்து நாற்கழஞ்சும் கையற கைய்கொண்டு* (SII,vii,91.)

கையாண்டு (வி) அ பவித்து (1147) *நிலம் ஏழுமாக்காணியும் கோயில் கல்மனயும் கையாண்டு மேல்ப்படி ஊரில் காணி குறையும்* (TAS,viii,p.7-8.)

கையாண்டு கொள்ளவும் (வி) அ பவிக்க (1453) *இவ்வாலையம் உள்ள அளவுந் தேவதானமாகக் கையாண்டு கொள்ளவும் பாற்க* (SII,v,759.)

கையாள (வி) தகாது சேரல் (1453) *வெள்ள நாடார் தமிழ்ப்பாகத்துப் பெண்ணை கெட்டருதென்றும் கைய்யாளருதென்றும் நம்மோடு கூட* (TAS,v,p.90-92.)

கையீடு (பெ) கையெழுத்திட்ட ஓலை (1196) *பெறுமடத்து கோயில் தரவின்றியே கையீடு குடுத்து கொண்டவன் ஆகவும் இக்கையீடே குடிமக்களுக்கு சிலவாவதாகவும்* (SII,vii,1041.)

கையுற்று (வி) பெற்று (985) *இவன் மருமக்களும் கையுற்று நின்று* (SII,vi,270.)

கையெழுத்து (பெ) ஒப்பு (802) *அருவாகூரோங் கையெழுத்து* (SII,xii,42.)

கையெழுத்தோலை (பெ) ஒப்பந்த ஓலை: ஆவணம் (985) *தேவவிடங்கந் பேராலும் கிடக்கும் கையெழுத்தோலையால் கடவ பொன்னாலும்* (SII,vi,11.)

கையேவி (வி) அடைந்து (1800) *கங்கைக் கரையிலே காராம்பசுவையும் பிராமணரை யுங் கொன்ற தோழங் கையேவிக் கொள்ளுவராகவும்* (KANDT,1968/295.)

கையேற்று (வி) பொறுப்பு ஏற்று (1251) *ஸ்ரீ பண்டா$_3$ரவும் பெண்ணும் பிள்ளையும் கையேற்று எழுந்நெள்ளிப்பிச்சு* (TAS,iv,86-89.)

கையோலை (பெ) ஒப்பந்த ஓலை (995) *ராஜேந்திர வாய்க்காலுக்கு மேற்கு நின்று சம்மதித்து கையோலை செய்து கொடுத்தோம்* (CHEN,xxv,p.341-42.)

கைவ்வழி (பெ) வசம் (869) *அறுகை வாணிகர் கைவ்வழி வைத்து* (SII,vii,523.)

கை வட்டகை (பெ) சிறு கிண்ணம் (1009) *செம்பின் கை வட்டகை மூக்கிலாதிது ஒன்று நிறை பதிநெண்பலம்* (SII,ii,91.)

கை வழி (இ) வசம்; இடம் (886) *நம்பிராட்டியார் கைவழி கொண்ட காசு* (SII,v,608.)

கைவிட (வி) விட்டுவிட (1070) *சோமிச்$_0$வரன் கன்னரதேசம் கைவிடத் துரத்தி* (SII,iii,84.)

கைவித்தாரம் கற்மன் (பெ) கொல்லன் (?) (1553) *கைவித்தாரம் கற்மன் பணம் 1/2 பூவுக்கு பணம் 3* (TDI,v,141.)

கைவிலக்கடைப்பு (பெ) ஒரு வரி (1339) *வாசல் வரி கீற்றுவரி ஏரிமீன்காசு எடுத்தளக்கும் அரிசிகாணம் கைவிலக்கடைப்பு மற்றும்* (AVNM,7,p.61)

கைவிலை காணம் (பெ) ஒரு வரி (1341) *அரிசி காணம் கைவிலை காணம் நல்லெருது நற்கிடா* (SII,vii,109.)

கைவினைக் குடி (பெ) (உழவு தவிர்ந்து) கைத்தொழில் செய்து வாழ்வோர் (1441) *இன்னான் கெல்லைக்குட்பட்ட நிலத்தில் ஏறும் உழவுகுடி கைவினைக்குடி காசாயக்குடியிற் கொள்ளும் சிற்றாயம்* (SII,v,257.)

கைவீடொற்றி (பெ) ஒரு வகையான ஒற்றி (731) *கன்னிமை ஊருணி அகத்து கையீடொற்றி உடைய கலம் பொன் அறுகழஞ்சும் கைவீடொற்றி கொறுத்தலைப் பொற்றாழி யாரிடை ஊருணி அகத்தும் கொண்ட* (SII,viii,331.)

கைஎழுத்தோலை (பெ) ஒப்புதல் ஓலை (934) *நிலத்தின் மேற்பட்ட கைஎழுத்தோலை* (SII,v,590.)

கொ

கொக்கு வாய் (பெ) கொக்கி (1009) *தாளிம்பம் இரண்டும் படுகண் ஒன்றும் கொக்குவாயொன்றும்* (SII,v,521.)

கொங்கபூ$_4$மி (பெ) கொங்கு நாடு (785) *கொங்கபூ$_4$மி அடிப்படுத்துக் கொடுஞ்சிலை பூட்டிழிவித்து* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

கொங்கம் (பெ) கொங்கு நாடு (785) *குடகொங்கத் தடன் மன்னனை* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

கொங்கர் (பெ) கொங்கு நாட்டார் (771) *கொங்கர் வந்நறுங் கண்ணிக் கங்கராஜனோடு ஸம்பந்தஞ் செய்தும்* (EI,xvii,16.)

கொங்கவாள் (பெ) (1050) *கொற்றக்குடை பந்மை முன்னூற்றுவரும் கொங்கவாள் ளெழுநூறும் அங்ககாறனும் ஆவணக்காறனும் உலகனும் உழ்பசும்பைக்கா[றனு]* (AVNM,2,p.6-8)

கொங்க வாளார் (பெ) கொங்கு வாள்வீரர் (1001) *உடையார் படை கொங்க வாளாரை விடை யிட்டு கடையீடுங் குடுத்து* (SII,v,723.)

கொங்கு (பெ) பூந்தாது (771) *கொங்கலருந் நறும்பொழில்* (EI,xvii,16.)

கொங்கு நாடு (பெ) தமிழகத்தின் மரபு வழி ஆட்சிப்பகுதிகளில் ஒன்று (500) *பாண்டி நாட்டும் கொங்குநாட்டும் மவரு காராண் கிழமையுங் கலக்கிழமையும்* (AVNM,1,p.68.)

கொங்கு (பெ) பூந்தாது (771) *கொங்கலருந் நறும்பொழில்* (EI,xvii,16.)

கொட்ட (வி) கொண்ட (870) *தஞ்சை கொட்ட கோப் பரகேசரி* (ARE,1935-36,p.72.)

கொட்டகாரம் (பெ) தானியக் களஞ்சியம் (1000) *அறுநூற்று நாழி நெல் கொட்டகாரத்தி அளவு கொடாகில் காராண்மை விடக் கடவியன்* (TAS,iii,p.176-77.)

கொட்டம் (பெ) இறுமாப்பு (1774) *து$_3$ஷ்டரில் து$_3$ஷ்டந் து$_3$ஷ்டர் கொட்டமடக்கி* (TAS,v, p.7-17.)

கொட்டி (வி) உருவாக்கி (932) *இப்பொன் தே$_3$வர்க்கு பட்டங் கொட்டி இட்டது* (SII,v,588.)

கொட்டி மத்தளம் (பெ) பெரிய மத்தளம் (1014) *கொட்டி மத்தளம் வாசிக்குங் குணப்புகழ்* (SII,ii,65.)

கொட்டில் (பெ) குடிசை (952) *குடி இருக்கின்ற கொட்டில்களுக்கும்* (TAS,iv,p.118.)

கொட்டில் (பெ) கொட்டகை (876) *இஷவமும் இஷவக் கொட்டிலும்* (SII,xii,63.)

கொட்டில் (பெ) கோயிலில் ஒரு பகுதி (973) *கொல்லத்து பனைங்காவின் கோயிலுளுயரிய கொட்டிலுள் திருச்செங்குன்றூர்ப் பருடைப் பெருமக்கள்* (EI,ix,32; TAS,iv,p.1-11.)

கொட்டில் (பெ) தாழ்வாரம் (1019) *திருச்சுகனூரில் நாம் விட்ட வீட்டில் முன்பு கொட்டிலிலே இருந்து கோயிற் காரிய மாராந்த இடத்து* (SII,v,293; TDI,i,19.)

கொட்டிவித்து (வி) பறை முதலியன கொட்டுவித்து (1245) *தங்களுக்கு வேண்டும் உகச்சிட்டு பண்டாரங்களிலே தனித்தனியே சீவன மிட்டுக் கொட்டிவித்து கொள்வார்களாகவும்* (IPS,340.)

கொட்டுகிற (வி) வாசிக்கிற (1009) *மத்தளம் கொட்(ட்)டுகிற பாவையொன்று* (SII,v,521.)

கொட்டுகின்ற (வி) வாத்தியம் முழக்குகின்ற (961) *பஞ்சமா ஸப்$_3$த$_3$ம் கொட்டுகின்ற உவச்சகளுக்கு* (SII,iii,213.)

கொட்டு சென்று (வி) கொண்டு போய் (871) *ஸ்ரீ கோயிலுக்கே கொட்டு சென்று அளப்போமானோம்* (SII,xii,61.)

கொட்டும் (வி) வாத்தியம் வாசிக்கும் (1003) *இத் தேவர்க்கு கொட்டும் உகச்சந் சேடந் கடம்பனும்* (SII,xvii,243.)

கொட்டுமவகள் (பெ) வாத்தியம் வாசிப்பவர்கள் (1000) *நீராட்டு பள்ளிக்கு கொட்டுமவகள் பதினாறினு மேல் புக்கோரலகு கச்சையிட்டு ஐவர் கொட்டுவிது* (TAS,ii,p.173-207.)

கொட்டுவது (வி) வாத்தியம் முழக்குவது (900) *இவ்வூரில் அரயணிச்சிங்க உவைச்சன் கொட்டுவதாக வைத்தோம்* (SII,xii,114.)

கொட்டுவான் (பெ) முழக்குவார் (759) *தட்டழிவு யிவரைக் கொண்டு கொட்டுவான்* (SII,iv,827.)

கொட்டுவித்தான் (வி) செதுக்கிவித்தான் (781) *பொன்னியக்கியார் படிமம் கொட்டுவித்தான்* (EI,iv,14a.)

கொட்டுவிது (வி) வாத்தியம் முழக்குவது (961) *ஸ்ரீபலிப் போகம் அஞ்சாட் கொண்டு கொட்டுவிதாக* (SII,iii,178.)

கொட்டை கூலி (பெ) ஒரு வரி (1311) *கூட்டும் வற்கத்துக்கு மாக்கலம் புறவெட்டி கொட்டைகூலி உள்ப்பட கார் மருவும்* (IPS,403.)

கொட்பு (பெ) வளையம் (1014) *கொட்பு ஒன்றுங் கோத்த பொன்னும் உட்பட நிறை கழஞ்சேய்* (SII,ii,56.)

கொடாக்கால் (வி) கொடுக்காவிட்டால் (1000) *கொடுக்கக் கடவியவன் அன்று கொடாக்கா லவ்வூர் தடுத்து வைச்சு* (TAS,ii,p.173-207.)

கொடாத்தவகள் (பெ) செலுத்தாதவர்கள் (1008) *போம் ஆட்டைத் திசை கொடாத்தவகள் தண்டப்படக் கடவர்* (IA,xx,p.290-91.)

கொடி (பெ) பறக்கும் துணிக்கொடி (785) *கொடி அணி மணி நெடுமாடக் கூடல்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

கொடிக்கால் (பெ) வெற்றிலைப் பயிர் (1290) *கரும்பு கொடிக்கால் விளைந்த னிலத்துக்கு கைபுக்க நாள் முதல் பசானக் கடமையும்* (IPS,403.)

கொடிஞ்சிலை (பெ) கொடிய வில் (781) *கொடிஞ்சிலை அன்று கால் வளைத்தும்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

கொடி தூக்கம் (பெ) ஒரு நகை (1014) *பொன்னின் கொடிதூக்கத்தில் தலையில் தைச்ச பூப் பதினாறு உட்பட* (SII,ii,1.)

கொடிப் படை (பெ) முன்னணிப் படை (1054) *பொன் நணி முடித்தலை தடிந்து தன் கொடிப் படை யேவிக் கன்நாடகர் விடு கடகிரிபுரள* (SII,v,607.)

கொடியான் (பெ) கொடியை உடையவன் (800) *வேல் கொடியான் வாண் மாறன்* (EI,xiii,10.)

கொடியீடு (பெ) ஒரு வரி (1545) *மாவடை மரவடை பனைங்கடமை கொடியீடு ஊத்தைப்பாட்டம் பாசிவிலை* (TAS,ix,p.38-39.)

கொடி எடுப்பார் (பெ) கொடியேந்துபவர் (986) *திருவிழாவுக்கு விளக்கு பிடிப்பாரும் கொடி எடுப்பாரும்* (SII,iii,128.)

கொடிஏற்றம் (பெ) விழாத்தொடக்கம் (970) *திருக்கொடி ஏற்றத்து திருமுளை அட்டி* (TDI,i,9.)

கொடிஏறிக் கட்டுவான் (பெ) கொடியை யேற்றுபவன் (932) *கொடி ஏறிக் கட்டுவானுக்கு நெல்லு குறுணி* (SII,v,588.)

கொடுக்கப்பட்டது (வி) (771) *எம்மாலுங் கொடுக்கப்பட்டது* (EI,xvii,16.)

கொடுக்கப் பிள்ளைகள் (பெ) படைவீரர் (?) (850) *நந்திப்போத்தரையர் கொடுக்கப் பிள்ளைகளுக்கு உழல்லூரார் மகள்மைப்படி பெருமானடிகளுக்கு விண்ணப்பஞ்செய்து* (SII,vi,453.)

கொடுக்கர் (பெ) ஒரு நெருங்கிய வீரர் குழு(?) (888) *பங்களநாடுடையார் கொடுக்கர் வீரத்தொழிலர் பேராற் பங்கள நாடுடையார்* (AVNM,7,p.18)

கொடுக்கில் (வி) கொடுத்தால் (1000) *கடன் கொடுக்க பெறார் கொடுக்கில் பெருமானடிகள்க்கு* (TAS,iii,p.174-175.)

கொடுக்கு (பெ) ஒரு நகை (1042) *திருக்கொள்கையுந் திருக்கொடுக்கும் திருக்கோசரமுமாக* (SII,vi,33.)

கொடுக்குமவன் (பெ) கொடுப்பவன் (1000) *ஆட்டிய எண்ணை கொள்ளுமவன் ஏற்று கொடுக்குமவனு நாழி நாழியரி கொடுத்து எண்ணை கொள்ளக் கடவியன்* (TAS,ii,p.173-207.)

கொடுங்கை (பெ) கோயில் கட்டிட உறுப்புக்களுள் ஒன்று (1120) *திருக்கொடுங்கை பொன் மேந்தாந் திண்மைக் கலியிந் தருக்கொடுங்க* (SII,iv,225.)

கொடு சென்று (வி) கொண்டு போய் (891) *திருமுற்றத்துக்கே கொடு சென்றிட்டு* (SII,viii,634.)

கொடுத்த (வி) தந்த (768) *பேரேரி பொலியூட்டினாற்.றோண்டுவதற்கு கொடுத்த நெல்* (SII,xii,34.)

கொடுத்தது (பெ) (753) *கல்லுங் கண்ணியுந் நாட்டிக் கொடுத்ததற்கெல்லை* (SII,ii,73.)

கொடுத்தமை (வி) கொடுத்தது (771) *அப்பொழுதேய் நீரோடட்டிக் கொடுத்தமையா னீடு பு$_{4}$க்தி துத்தபின்* (EI,xvii,16.)

கொடுத்தன்றி (வி) செலுத்தினாலல்லாமல் (932) *நூற்றுக் கழஞ்சு பொன்றண்டங் கொடுத்தன்றி கூடக் கடவரல்லர்* (SII,vii,173.)

கொடுத்தான் (வி) தானமாகத் தந்தான் (771) *ப்$_{3}$ராஹ்மணர்க்கு நீரோடட்டிக் கொடுத்தான்* (EI,xvii,16.)

கொடுத்து (வி) தந்து (550) *அறையோலை செய்து கொடுத்து விடுதக* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-52.)

கொடுத்தேம் (வி) தந்தோம் (709) *பிரமதாயங்கொடுத்தேம்* (SII,i,135; EI,iv,22a.)

கொடுத்தோம் (வி) தந்தோம் (550) *குரவர்க்குப் பள்ளிச் சந்தமாக கொடுத்தோம்* (TASSI,1958-69,p.41-83; PLCP,p.26-32.)

கொடுப்ப (வி) தர (771) *கொங்கர் கோறகுக் குணந்து கொடுப்ப* (EI,xvii,16.)

கொடுப்பதற்கு (வி) தருவதற்கு (691) *பிரமதேயங் கொடுப்பதற்கும்* (SII,i,151; EI,xvii,22.)

கொடுப்பான் (வி) தருவான் (1000) *கலந் நெல்லாட்டுங் கொடுப்பா னமைஞ்ஞட்டிக் கொடுத்தான்* (TAS,ii,p.173-207.)

கொடுப்பிக்க (வி) (951) *முக்கால் வட்டத்து கொடுப்பிக்க கடவியர்* (TAS,v,p.6-7; TAS,i,p.288-89.)

கொடுப்பிச்சு (வி) (1188) *தாழக்காலும் புறத்தெதுவாள் பக்கல் கொடுப்பிச்சு செம்மு போக்கிச்சு* (TAS,iv,22-65.)

கொடுப்போர் (பெ) கொடுப்பவர் (1228) *விலயும் கொடுப்போருளராகில்* (TAS,viii,23-24.)

கொடும்பாவி (பெ) பெரியபாவி (1113) *தேவர் பூதர் மாதவத் தோர்க்குக் குடுத்தன கொள்ளும் கொடும்பாவியும்* (EI,xviii,38; ez.ii,242-55; SII,iv,1396.)

கொடும்புரிசை (பெ) காவலுடைய மதில் (771) *கொடும்புரிசைந் நெடுங்கிடங்கில்* (EI,xvii,16.)

கொடுவந்து (வி) கொண்டுவந்து (867) *கோயிலுக்கேய் கொடுவந்து* (SII,xiv,Appx.,1.)

கொடுவர (வி) கொண்டுவர (1121) *எழுந்தருளிவித்து கொடுவர தானத்தார் குடுத்த பணம்* (SII,iv,387.)

கொடுவருக (வி) கொண்டு வருக (960) *திரைமூர் தேவதானம் சேதபடி ஸாதநம் கொடுவருக என்று ஸாதநம் கேட்டு* (SII,iii,203.)

கொடை (பெ) தானம் (905) *நிதி வழங்கு கொடையாலும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கொடைக் கொடி (பெ) வள்ளன்மையைக் காட்டுங் கொடி (1076) *கொற்றக்குடைக் கீழ் கொடைக் கொடியேந்தி பெற்றக் கோன்* (SII,vii,137.)

கொண்ட (வி) கைப்பற்றிய (583) *வரமு கொண்ட நான்றெறிந்து* (CHHS,1971/30.)

கொண்ட (வி) மேற் கொண்ட (771) *நற்கொற்றன் கொண்ட வேள்வி* (EI,xvii,16.)

கொண்டருளி (வி) பெற்று (870) *இப்பொன் இதே$_{3}$வர் தாமே கொண்டருளி ஆட்டை விட்டமும்* (SII,xix,163.)

கொண்டன (பெ) கொண்டவை (909) *புணை கொண்டனவும்* (SII,viii,619.)

கொண்டாடி (வி) போற்றி (785) *கு$_{3}$ருசரிதம் கொண்டாடி* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

கொண்டாடும் (வி) பாராட்டும் (1006) *குலை புரியும் பகை அரைசர் கொண்டாடும் பாதன்* (SII,i,66.)

கொண்டாங் (பெ) இறை பெற்றுக் கொண்டவன் (961) *ஸபை$_{4}$யில் பணித்தானையும் கொண்டாநையும்* (SII,xiii,114.)

கொண்டார் (பெ) அ பவித்தவர் (765) *குறங்கறுத்துங் கொள்ளப்பெறாதாராகவும் கொண்டார் கோவினால் தண்டிக்கப் படுவாராகவும்* (EI,xxxvi,20.)

கொண்டிடுகை (பெ) விலைக்கு வாங்குகை (1144) *திருக் கோசாலைச் சுரவிகளுக்கு வைக்கோல் கொண்டிடுகைக்கும் இறுப்பதாக* (SII,xvii,597.)

கொண்டு (வி) பற்றிக் கொண்டு (800) *புறங்கூர் வாய்க் கொண்டெழுந்த புள்* (EI,xiii,10.)

கொண்டு (வி) பூண்டு (815) *த$_{4}$நவர்ஷ பொழி தற்கு வலாஹத்தின் வ்ரதம்கொண்டு* (SII,iii,206b.)

கொண்டு (வி) பெற்று (691) *புறம்கொண்டு வழிபாடு செய்து* (SII,i,151; EI,xvii,22.)

கொண்டு (வி) விலைக்கு வாங்கி (772) *இவனேய் எம்பெருமானுக்கு திருநொந்தாவிளக்குக்கு கொண்டு வைச்ச குழிச்செய்க்கு மேக்கும்* (SII,xiv,19.)

கொண்டு செலுத்தும் (வி) நடைபெறச் செய்யும் (1228) *கொண்டு செலுத்தும் ஆண்டார்க்குக் கழனி ஐங்கண்டகமும்* (EC,xvii,Mb.73.)

கொண்டு சென்று (பெ) எடுத்துச் சென்று (867) *எரியக் கொண்டு சென்று அளப்போமாநோம்* (SII,xiv,12a.)

கொண்டுடையன (பெ) வாங்கினவை (755) *யானிவர் பக்கல் விலைக்கு கொண்டுடையன* (SII,vi,356.)

கொண்டு போந்து (வி) அழைத்துச் சென்று (896) *ஸ்த்ரிகளைக் கொண்டு போந்து* (SII,xiii,312.)

கொண்டு போந்து (வி) இட்டுச் சென்று (785) *மன்னனைக் கொல்களிற்றோடுங் கொண்டு போந்து* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

கொண்டோம் (வி) பெற்றுக் கொண்டோம் (768) *இக்காசு கொண்டோம்* (SII,xiv,27.)

கொத்தம் (பெ) எல்லை(?) (993) *மாதேவந் மயக்கந் கண்ணாற்று தென்வரப்புக் கொத்தம் கிழக்கு மேற்கு எல்லையளவு* (SII,xiii,182.)

கொத்தம்பரி (பெ) கொத்தமல்லி (887) *கொத்தம்பரி அமிது* (SII,xiv,16a.)

கொத்தாரம் (பெ) ஒரு மரம் (?) (1111) *தெறகிலீஞ்சலில் மேற்கு நோக்கின கொத்தாரத்துக்கு வடக்கும்* (SII,vii,409.)

கொத்திலக்கை (பெ) (= கொற்றிலக்கை) (1460) *தங்கள் கோயில் சூலவரி கொத்திலக்கை நாட்டுக்காணிக்கை* (SII,vi,4)

கொத்து (பெ) பூங்குலைகள் (921) *புத்தூரெனப் பெயரெய்திய கொத்தார் பொழிற் க்$_{3}$ராமத்தில்* (SII,iii,206a.)

கொத்து (பெ) வேலையாள் தொகுதி (1164) *ஆண்வழி அற்று பெண்வழியான கொத்துக்கு அமுது செய்விக்கும்படி* (SII,iii,120.)

கொத்து (பெ) ஊழியர் தொகுதி (1422) *உத்ஸவ பர்யந்தமாயுள்ள கர்ம்மங்களும் நடத்தி அனைத்துக் கொத்தில் வேண்டுவாரையுங் கற்பித்து* (SII,v,762.)

கொதி (வி) கோபத்தைப் புலப்படுத்தும் (939) *மறைக் காட்டுளாற்கு கொதிநுதிவேல்* (SII,xvii,501.)

கொதுவை (பெ) அடைமானம் (1864) *மடத்துச் சொத்துக்களை யேதேனும் கொதுவை வைக்க விக்கிரயஞ் செய்ய தானங் கொடுக்க எவ்வித சுதந்திரமுங் கொள்ளக்கூடாது* (TSAD.1967/171.)

கொந்தவர் (பெ) குந்தப்படை (வேல்) வீரர் (1013) *உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் படை வில் வாள் கொந்தவரில் சோமாசி குட்ட தாழியும்* (SII,v,652.)

கொந்த விச்சாதிரர் (பெ) வேல் படையினர் (1258) *கூலிச்சேவகரும் கொந்தவிச்சாதிரரும் நவிர மலை தென்பற்று நாட்டவரும்* (SII,vii,118.)

கொந்தளம் (பெ) குழப்பம் (869) *ஆனையாடின கொந்தளத்து இவ்வூரழிந்த நாட் பட்டான்* (SII,xii,112.)

கொந்தள அரைசர் (பெ) சளுக்கிய அரசர் (1075) *அயில் முனைக் கொந்தளவரைசர் தந்தந* (SII,iii,68.)

கொந்து (பெ) பூக்கொத்து (905) *கொந்தார் பூம்பொழிற் குன்றையும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கொப்பு (பெ) காதணி (970) *திருக்காதில் பொன்னின் மகரம் இரண்டும் பவழத்தின் கொப்பு ஒன்றும்* (TDI,i,8.)

கொம்பர் (பெ) கொம்பு (905) *முதுகொம்பர் கோடெழுந்து* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கொம்பறுத்து (வி) காட்டுச் செடிகளை வெட்டி (1115) *சோழவிச்சாதிர விளாகமென்று பேரிட்டு கொம்பறுத்துப் பயிர்செய்து நிசதி பத்துக் கலம்* (ALB,vii,263-65.)

கொம்பிற் கொள்கை (பெ) தந்தத்தின் பூண் (1014) *கொம்பிற் கொள்கை ஒன்றில் தடவிக் கட்டின மாணிக்கம் எட்டுந் தடவிக் கட்டின பளிங்கு இரண்டும்* (SII,ii,86.)

கொம்பு (பெ) கொள்கலமாகப் பயன்படும் மாட்டுக் கொம்பு (1300) *சாந்து புழுகு சாவாது கொம்பு ஒன்றுக்குக் காசு* (SII,viii,442.)

கொம்பு (பெ) மாட்டுக் கொம்பு (1014) *இரு விரலரை உசரம் உள்ள பத்மம் ஒன்று குளம்பில் நின்றுங் கொம்பளவுஞ் செல்ல* (SII,ii,46.)

கொம்பு (பெ) ஊது கொம்பு (1140) *கொம்பு ஓரணையால் தரா இடை முப்பத்தறு பலமும்* (SII,vii,1004.)

கொம்மடி (பெ) ஒரு காய் (1263) *கரும்பு தலை கொம்மடி கடையாக தாம் வேண்டும் பயிர்ச்செய்து கொள்வாராகவும்* (IPS,351)

கொம்மடி மாதளம்பழம் (பெ) பழ வகை (1547) *கிரினாவல் பழம் 300க்கு பணம் 6 கிளக் குறிஞ்சிப் பழம் 300 கொம்மடி மாதளம் பழம் 300* (TDI,v,92.)

கொமரகௌசி$_0$க (பெ) ஒரு கோத்திரப் பெயர் (921) *கொமரகௌசி$_0$க கோ$_3$த்ரதிலாக்$_3$நி வேச்$_0$ய கல்பத்தி லொம்பாழ்வரில்* (SII,iii,206a.)

கொய்சகம் (பெ) ஒரு நகை (1050) *குறுந்தகடு ஒன்றும் செருந்தி பூ பதின் னொன்றும் கொய்சகம் இரண்டும்* (SII,v,520.)

கோயில்த்துறைப்பேர் (பெ) கோயில் தானத்தார் (1800) *கோயில்த்துறைப்பேரைச் சண்டை பண்ணினவர்கு பன்னண்டு பணம் வாங்கவும்* (IPS,969.)

கொல் (பெ) கொல்லர் இறுக்கும் வரி (1274) *நல்லெருது நற்பசு உள்ளிட்ட அனைத் தாயங்களும் ஆளமஞ்சி தேவையும் தைச்சும் கொல்லும் குசமும் தோலொட்டும் வேறு தண்டும்* (SII,viii,79.)

கொல் (பெ) கொலைத்தொழில் (771) *கொன்னவின்ற நெடுஞ்சுடர் வேல்* (EI,xvii,16.)

கொல் (வி) கொல்லுகின்ற (771) *கொல் யானை பலவோட்டி* (EI,xvii,16.)

கொல்கில் (வி) கொலை செய்தால் (1300) *சூத்திரன் சூத்திரனைக் குறைக்கில் அறுகழைஞ்சு பொன் குடுப்பிது கொல்கில் பந்தரு கழைஞ்சு பொன் குடுப்பிது* (TAS,iii,p.191-96.)

கொல்லம் (பெ) கி.பி.824இல் தொடங்கும் ஒரு கால வரிசை (1516) *ஸ்வஸ்தி ஸ்ரீ கொல்லம் 691 வருஷம்* (TAS,ix,p.31-33.)

கொல்லர் (பெ) இரும்பு வேலை செய்பவர் (952) *தைச்சருங் கொல்லரும் குடி இருக்கின்ற கொட்டில்களுக்கும்* (TAS,iv,p.118.)

கொல்லன் (பெ) இரும்பு வேலை செய்பவன் (700) *கொல்லன் ஸேமகன்* (SII,xii,23a)

கொல்லுதல் (பெ) கொலை செய்தல் (1350) *இவர்கள் ஒரு வினைக் குறளைஇல் கொல்லுதல் குத்துதல் புகுதல்* (IPS,618.)

கொல்லை (பெ) தோட்ட நிலம் (550) *வடபாலெல்லை பெருங் கொல்லையின் றெற்கு* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

கொல்லைப் பொன்வரி (பெ) ஒரு வரி (1495) *தறிக்கடமை பேற்கடமையிலும் கொல்லைப் பொன்வரியிலும்* (TDI,ii,133.)

கொலை (பெ) உயிரைப் போக்கல் (771) *சிலைத் தடக்கைக் கொலைக் களிறு* (EI,xvii,16.)

கொலைக் குன்றம் (பெ) யானை (921) *குசைமாவுங் கொலைகுன்றமுங் குருதி ஆரமும்* (SII,iii,206a.)

கொழ்வது (வி) (= கொள்வது) (1194) *பசான முதல் இறை கட்டாக கொழ்வது* (SII,xvii,135.)

கொழு (பெ) கலப்பை நுனி (1012) *நீங்கிய நிலத்தானீங்கா நேற்றுகை ஆங்கொருமாவிற் கறுகலமாகக் கொழு நூற்றுவரோடுங் கூட்டியளந்த* (SII,vii,863.)

கொழுஞ்சி (பெ) ஒரு செடி (1304) *புளி ஆத்தி ஆவிரை கொழுஞ்சி மற்றும் மேனோக்கிய மரமும்* (SII,viii,172.)

கொழுந்தன் (பெ) கணவனின் தம்பி (1009) *கொற்றத்தின் மகள் கண்டன் பொற்காரியும் இவள் கொழுந்தன் குட்டி பொன்னாடையும்* (SII,v,1411.)

கொழுந்து (பெ) மருக்கொழுந்து (1400) *நன்செய் புன்செய் வாழை கொழுந்துள்ளிட்ட வான் பயிரும்* (SII,iv,373.)

கொழுந்துக் கடமை (பெ) மருக்கொழுந்துக்குரிய வரி (1486) *நாம் விட்டுக்குடுத்த எல்லைப் படியே உள்ள பற்றில் மாவடை மரவடை கொழுந்துக்கடமை மற்றும் நாம் கொள்ளும் கொள்முறைப்பாடு எற்பேற்பட்டதும் கையாண்டுகொண்டு* (TAS,ix,p.25-26.)

கொழுந்து விட்டு (வி) தளிர் விட்டு (1171) *எடுத்தாதியுகங் கொழுந்துவிட்டுத் தழைத்தோங்க* (SII,xvii,592.)

கொழுநன் (பெ) கணவன் (1171) *புலமடந்தை கொழுநனாகி போர்மடந்தையை மணம் புணர்ந்து* (SII,xvii,592.)

கொழு நிழல் (பெ) குளிர்ந்த நிழல் (1012) *தெற்றுங் கொழு நிழல் சிவபுரத்தாற்கு* (SII,vii,863.)

கொழு நூற்றுவர் (பெ) உழவர் (1012) *மாவிற் கறுகலமாகக் கொழுநூற்றுவரோடுந் கூட்டியளந்த* (SII,vii,863.)

கொழு வாரம் (பெ) (= குடிவாரம்?): பயிரிடுவோருக்குரிய வாரம் (1474) *முக்கூறு விலைகொண்டு விட்ட நிலத்தில் நீக்கிக் கொழுவாரத்தாலே பூசை நடக்கும்படியும்* (SII,viii,444.)

கொள்கை (பெ) கவசம்; லிங்கத்தின் மீது கவிக்கும் மூடி (991) *இவ்வுடையாரே குடுத்த பொன்னின் கொள்கை* (SII,xiii,144.)

கொள்முறைப்பாடு (பெ) ஒரு வரி (1316) *அழிவு பிழையும் கொள்முறைப்பாடும் கூட விட்டுக் கொடுத்தார்* (TAS,iv,p.89-92.)

கொள்வதாக (வி) ஏற்றுக் கொள்வதாக (922) *குடவோலையில் போந்தாரைக் கொள்வதாகவும்* (SII,vi,295.)

கொள்வரி (பெ) ஒரு வரி (1224) *சரிகையும் வெட்டிவரி கொள்வரியும் வேண்டுகோள்* (SII,iv,648a.)

கொள்வார் (வி) அடைவார் (878) *கெங்கையிடை குமரி இடை நடுவு செயிதார் செய்த பாபங் கொள்வார்* (SII,xiii,187.)

கொள்விது (வி) பெற்றுக் கொள்ள வேண்டியது (961) *உக்கிரமங்கலம் பாட்டம் ஆட்டைக் காணங் கொள்விது* (TAS,viii,p.43-44.)

கொள்வீர் (பெ) வாங்குவீர்கு (944) *இந்நிலத்தை விலைக்குக் கொள்வீரில்லையோவென்று* (SII,viii,689.)

கொள்ள (வி) கவர (694) *சன்மதுரரு கொள்ள தொறு மீட்டுப் பட்டார்* (EI,vi,52; SII,i,134)

கொள்ள (வி) பெற்றுக் கொள்ள (921) *திருப்புறம்பியமுடைய பட்டாலகர்க்கு கொள்ளக் குடுத்த பசு* (SII,vi,24.)

கொள்ள (வி) வசூலிக்க (991) *இறையும் எச்சோறும் வெட்டியுங் கொள்ளப் பெறாதிதாக ஸர்வபரிஹாரம்* (SII,xiii,149.)

கொள்ளப்பெறாதோம் (வி) வசூலிக்கமாட்டோம் (944) *இக்குடிகளை வெட்டியும் வேதினையும் வாலக் காணமும் கொள்ளப் பெறாதோமாகவும்* (SII,iii,12.)

கொள்ளலுறுவான் (பெ) விலைக்கு வாங்குவான் (764) *கொள்ளுலுறுவான் உளனாயிலும்* (TAMIZ,1970,p.124.)

கொள்ள வேண்டும் (வி) பெற வேண்டும் (924) *இப்பரிசு குடிகள் பக்கல் கொள்ள வேண்டும்* (SII,vi,292.)

கொள்ளா (வி) வசூலிக்காத (868) *பொலி கூலிக்குச் செலவாக காசு கொள்ளா ஊர்கீழ் இறையிலி* (SII,xii,58.)

கொள்ளாதமை (வி) பகையானமை (885) *தாபிஸிகள் நாநூற்றுவர்க்கும் கொள்ளாதமையில்* (SII,iii,92.)

கொள்ளாதிதாகவும் (வி) வசூலிக்காதவாறு (961) *வெட்டி வேதினையுங் கொள்ளாதிதாகவும்* (SII,xiv,91.)

கொள்ளாமேய் (வி) வசூலிக்காமல் (961) *இத்தேவஸ்வம் எப்பேர்ப்பட்டதும் கொள்ளாமேய் காக்கப் பெறுவதாகவும்* (SII,xiii,114.)

கொள்ளி (வி) கொள்ளும் அளவு (உள்ள) (875) *தூணி கொள்ளி குடம்* (SII,xiii,88.)

கொள்ளிலும் (வி) உட்கொண்டாலும் (962) *இஞ்ஞிலம் ஆறு கொள்ளிலும் ஆரையான் கொள்ளிலும்* (SII,xiii,151.)

கொள்ளின்றவர் (பெ) பெறுகின்றவர் (1235) *இச் சோறு கொள்ளின்றவர் இலையும் விறகு கொடுபிது* (TAS,vii,65-66.)

கொள்ளு (பெ) ஒரு பருப்பு வகை (941) *சாலைக்குக் கறிக்கு கொள்ளு நிசதி இருகாடிக்கு* (SII,viii,529.)

கொள்ளுகின்ற (வி) பெறுகின்ற (796) *கொள்ளு கின்ற இடம்* (SII,iv,135; MASI,lxiii,p.54-59.)

கொள்ளும் (வி) வசூலிக்கின்ற (849) *மனைமேய்ப்பான் கொள்ளுமிறையும்* (TAS,ii,p.67-68.)

கொள்ளுமவன் (பெ) பெற்றுக் கொள்பவன் (1000) *ஆட்டிய எண்ணை கொள்ளுமவன் ஏற்று கொடுக்குமவனு நாழி நாழியரி கொடுத்து* (TAS,ii,p.173-207.)

கொள்ளை கொண்டு (வி) வலிந்து பொருள் கொண்டு (1232) *குடிக்கால்களும் சுட்டும் அழி[த்தும்] பெண்டுகளை பிடித்தும் கொள்ளை கொண்டும்* (EI,vii,23.)

கொள்ளை போச்சாகில் (பெ) கொள்ளையில் இழந்து போனால் (1205) *இவை நாடரியக் கொள்ளை போச்சாகில் இடக்கட வோம் வாணிகரோம்* (SII,vii,537.)

கொளித்த (வி) தோண்டிய (1200) *செவ்வல்லூர் மறவந் சொக்கந் கொளித்த ஊருணி* (AVNM,3,p.16)

கொளித்தி (வி) எரித்து (959) *மூந்நு ஸந்தியும் ஒரு விளக்கு கொளித்தி கொண்டு* (SII,iii,156.)

கொளீஇய (வி) கொண்ட (771) *ஒரு மொழிக் கொளீஇய* (EI,xvii,16.)

கொளுவி (வி) தீமூட்டி (1012) *யுதைகை முன்னொள்ளெரி கொளுவி உதைகை வேந்தை* (SII,vii,863.)

கொற்கையர் (பெ) பாண்டியர் (1300) *கொற்கையர் கோமான் பரிக்குத் தோற்ற கழல் வளவன்* (IPS,654.)

கொற் தேவை (பெ) கொல்லர் செய்யும் ஊழியம் (1500) *வீட்டுதேவை ஆட்தேவை மதிட்தேவை தச்சுத்தேவை கொற்தேவை ஆனைச்சாலை குதிரைப்பந்தித்தேவை* (IPS,656.)

கொற்றக் குடை (பெ) வெற்றியின் அறிகுறியான குடை (1014) *வண்ணிகைத் திருக் கொற்றக்குடை மகுடம் மொட்டு அடுத்து விளக்கின பறளை யுட்பட* (SII,ii,1.)

கொற்றட்டுக (வி) உணவு படைக்க (1039) *சிவ சோகிகள் உள்ளிட்ட அடியாரை ஊட்டுக வென்றும் புறதடியார்க்கு கொற்றட்டுக வென்றும்* (SII,viii,68.)

கொற்றப் பேராழி (பெ) வெற்றியைத் தரும் பெரிய சக்கராயுதம் (1250) *நின்ற கொற்றப் பேராழி வெற்பிவன் செங்கோல் நடக்கும் பெருவழியே* (SII,xii,125)

கொற்றம் (பெ) வெற்றி (771) *கொற்ற மூன்றுட னியம்ப* (EI,xvii,16.)

கொற்றமுற்றி (வி) வெற்றி கொண்டு: முடிசூடி (700) *கொற்றமுற்றித் திருவிராச்சியஞ் செல்லாநின்றது* (ARE,1959-60,358.)

கொற்றவன் (பெ) அரசன் (771) *கொற்றவனேய் மற்றவரைத் தெற்றென நன்கு கூவி* (EI,xvii,16.)

கொற்றவாசல் (பெ) (அரச) அரண்மனை வாசல் (1007) *கொற்றவாசலில் போந்த குடிமை எல்லாம் நாங்களே இறுப்பதாக* (SII,xvii,470.)

கொற்றவாயில் (பெ) கோட்டை வாயில் (916) *இவ்வூர்க் கொற்றவாயிலின் முன்பு குடி ஏற்றுவித்த* (EI,xxiii,45c.)

கொற்றளவு வாசி (பெ) அளப்பவர் கூலிக்காக ஒதுக்கப்பட்ட தானியம்(?) (1068) *அருமொழி தேவந் மரக்காலாக்கிக் கால்வாசியுங் காலளவு கூலியுங் கொற்றளவு வாசியுமுட்பட* (EI,xxi,38.)

கொற்றிலக்கை (பெ) சோறும் தங்குமிடமும் (ஒரு வரி) (1280) *விற்ற வயலுக்கு கழவாரிப் பச்சை வெட்டி முட்டாவாள் கூற்றிலக்கை கொற்றிலக்கை தரியிறை தட்டார்ப்பேறு மற்று மெற்பேறபட்டன தேவைகளும்* (IPS,421.)

கொற்று (பெ) உணவு (887) *தட்டளி கொட்டி களுக்குக் கொற்று நெல்லுத் திங்கள் நாற்கலனேய் பதின் குறுணி நாழி உரியாக* (SII,xiv,16a.)

கொன்ற (வி) கொலை செய்த (793) *கொன்ற பாவத்து படுவான்* (SII,iii,42.)

கொன்றான் (பெ) கொலை செய்தவன் (873) *ஆயரங் குராலாக் கொன்றான் பாவங் கொள்வதாகவும்* (SII,iii,91.)

கொன்னவில் படை (பெ) கொலை குறித்த படை (1057) *கொன்னவில் படை குண்டமயநும்* (IPS,172.)

கோ

கோ (பெ) அரசன் (550) *கோ விசைய ஸிம்ஹ வர்மற்கு* (TASSI,1958-59,p.41-83; PLCP, p.26-32.)

கோக்கப் பெறுவதாக (வி) தேக்குவதாக (765) *நீர் கோக்கும் அளவுங் கோக்கப் பெறுவதாகவும்* (EI,xxxvi,20.)

கோக்கும் (வி) (நீர்) தேங்கும் (765) *தோண்டினால் சென்று நீர் கோக்கும் அளவு* (EI,xxxvi,20.)

கோக்கொள்ளும் (வி) அரசன் விதிக்கும் (753) *கோக்கொள்ளும் தண்டப்படுவாராகவும்* (SII,ii,73.)

கோகுடி (பெ) முல்லைக் கொடி வகை (1012) *திரள்ச் சாளமு நீளார் குறிஞ்சியுங் கோகுடியு* (SII,vii,863.)

கோச்செய்து (வி) அரச ஆணைக்குட்படுத்தி (922) *கோச் செய்து எலவு கொண்ட பொன்னிடுவது* (SII,vi,291.)

கோச்சேவது செயிது (வி) அரசன் ஆணைக்குட்படுத்தி (808) *கோச் சேவது செயிது செலுத்த வொட்டி குடுத்தோம்* (EI,viii,29.)

கோசகம் (பெ) ஒரு நகை (1042) *திருக் கோசகம் 2நால் கல் வெட்டிநபடி காசு நிறைக் கல்லால்* (SII,vi,33.)

கோசர் (பெ) ஒரு போர்மரபு இனம் (700) *கோசரும் மழுவரும் வடமா தண்டத்தோடு* (AVNM,10,p.7)

கோசரம் (பெ) ஒரு நகை (1042) *திருக் கொடுக்கும் திருக்கோசரமுமாகப் பண்ணி* (SII,vi,33.)

கோட்ட (பெ) கோட்டை (1663) *கோப்பொழிச்ச கொச்சியில் ஆதியியிட்ட பறுங்கி இட்டிரிந்ந கோட்டகளும்* (TAS,i,p.31.)

கோட்டகம் (பெ) நீர் நிலை (954) *குளமும் கோட்டகமும் மன்றும் கன்றுமே பாழும்* (SII,xiii,92.); (1000) *குழலூர் வாழப்பகைக் கோட்டகமென்று பேர் கூவப்பட்ட கோட்டகக் கரையேய் கிழக்கு நோக்கிச் சென்று* (TASSI,1958-59,p.84.); (1176) *தடுப்புண்பன கோட்டகமே* (SII,xvii,585.)

கோட்டகரை (பெ) நீர் நிலை (984) *ஆறிடு படுகையும் மீன் பயில் பள்ளமும் கோட்டகரையும்* (SII,xix,344.)

கோட்டகாரம் (பெ) நீர் நிலை (792) *குளமுங் கோட்டகாரமும்* (EI,xviii,16.)

கோட்டத்தார் (பெ) கோட்ட நிலப்பகுதியைச் சேர்ந்த பெருங்குடிகள் (750) *கோட்டத்தார்குந் நாட்டார்க்கும் மெழுகு திருமுகம் அருளுச் செய்து* (EI,v,8.)

கோட்ட நாள் (பெ) சென்ற நாள் (919) *யாண்டு பன்னிரண்டாவது கோட்ட நாள் நூற்றிருபத்தொன்பது* (SII,iii,99.)

கோட்டம் (பெ) கோணல் (1012) *திருவையன் கோட்டமில் குணத்தாற் செம்பொற் புரிசை* (SII,vii,863.)

கோட்டம் (பெ) கோயில் (500) *செஇவித்த தாபதப்பள்ளியுள் [வா]சிதேவனாரு கோட்டமும்* (AVNM,1,p.67-69)

கோட்டம் (பெ) தொண்டைநாட்டில் சில நாடுகளை உள்ளடக்கிய பெரிய நிலப்பிரிவு (550) *வென்குன்றக் கோட்டத்து* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

கோட்ட மதிள் (பெ) ஒரு வரி (1222) *நல்ல எருது நல்ப்பசு விடுவேலை கோட்ட மதிள் மற்றும் நாங் கொள்ளும் கோமுறைகளும்* (SII,v,733.)

கோட்டாகாரம் (பெ) (= கோட்டகாரம்): நீர்நிலை (978) *மன்றுங் கன்று மேய் பாழும் குளமும் கோட்டாகாரமும் புற்றும் தெற்றியும் காடும்* (SII,vii,151-151a.)

கோட்டி (பெ) கடவுள் முன்னிலையில் பாடும் குழு (986) *ஏழு நாளும் கோட்டி செய்யும் தேவரடியார்க்கு* (SII,iii,128.)

கோட்டு நாள் (பெ) (= கோட்ட நாள்) (866) *கலியுகக் கோட்டு நாள்* (TAS,i,p.1-14.)

கோட்டை (பெ) காப்புடைய அரண் (795) *கோட்டை அழியாமை காத்தெறிந்து* (TAS,i,p.158-59.)

கோட்டை (பெ) ஒரு முகத்தலளவு (1366) *ஒரு கோட்டை நெல்லுக் குடுக்கவும்* (IPS,456.)

கோட்டை விரைப்பாடு (பெ) ஒரு கோட்டை நெல் விதைக்கக் கூடிய பரப்புள்ள நிலம் (1719) *நன்செய்த் திருத்துக்கால் 12 கோட்டை விரைப்பாடும் நாராசக்கால் 8 கோட்டை விரைப்பாடும்* (CHEN,xi,p.234-36.)

கோடம் (பெ) ஒரு நகை (1015) *தனி தூக்கம் இரண்டுங் கோடங்களிலுங் கறண்டிகையிற் கோத்த வடம் மூன்றிலுமாக* (SII,ii,8.)

கோடல் (பெ) காந்தள் பூ (800) *செம்புல நாட்டு வெண் கோடல் விண்ட போது கொண்டாயர்* (EI,xiii,10.)

கோடாத (வி) வளையாத (921) *கோடாத செங்கோனடாவி* (SII,iii,206a.)

கோடாலி (பெ) பிளக்கும் கருவி (1679) *மண்வெட்டி கோடாலி வெட்டுக்கத்திக்கும்* (TAS,vii,p.42.44.)

கோடி (பெ) புதிய ஆடை (1096) *பரிமாறகடவ பரிகல பரிச்சின்னம்கழும் ஆடைகோடி திருவாபரணங்கழும் மூலப் பண்டாரமு உள்ளிட்ட* (SII,v,753.)

கோடி (பெ) 1,00,00,000 (எண்) (1250) *இம் மண்டலத்துக்கு நெடுங்கோடி காசு சிகை இழந்தருளி இநாட்டுக்கு இருபத்து நாலு கோடி காசு சிகை இழந்தருளி* (SII,xii,129.)

கோடியர் (பெ) கூத்தர் (1134) *நல்லிசைப் பாணரும் கோடியருங் குயிலவரு* (SII,v,645.)

கோடிற்று (வி) தவறியது (1081) *நிற்பிழை யென்னுஞ் சொல்லெதிர் கோடிற்றல்லது* (SII,iii,78.)

கோடு (பெ) தந்தம் (1242) *ஒருகை யிருசெவி மும்மத நாற்கோட்டு அயிராபதமுதல்* (SII,viii,404.)

கோடு (பெ) வரம்பு (1279) *குளிர் புனற் காடவ குமாரன் தடாகமுங் குன்று கரையன்ன கோடுயர் நெடுங்கரை வென்று* (SII,viii,69.)

கோடை (பெ) கோடைப் பருவத்தில் பயிர்செய்யும் நெல் (1218) *கீழிறை பசாநம் சிறு கோடை புந்பயிர் இவ்வூரிறுக்கும்* (IPS,549.)

கோடை பைய்யனம் (பெ) கோடைப் பருவத்தில் அறுவடையாகும் ஒரு வகை நெல் (1110) *தே$_3$வற்கு தே$_3$வதாநமாக இவ்வூர் விளையிற் சுற்றும் நஞ்சை புஞ்சை கோடை பைய்யனம் கார் வரகு கும்மறிக் கடமை* (EC,ix,NI.3.)

கோணிகை (பெ) ஒரு விற்பனை வரி (1340) *நல்லெருது நற்பசு கோணிகை விரிமுட்டு தறி இறை* (SII,iv,415.)

கோணிகைப்பட்டு (பெ) ஒரு வகைப் பட்டு: (சணல் நூல்?) (1300) *தலைச்சுமை ஒன்றுக்கும் காசு ஒன்றும் கோணிகைப் பட்டுப் பொதி ஒன்றுக்குக் காசு இரண்டும்* (SII,viii,442.)

கோத்த (வி) தேங்கிய (1233) *நீர் கோத்த இடமெல்லா மெல்லையாவுதாகவும்* (IPS,304.)

கோத்த (வி) தொடுத்த (1014) *கண்ட நாண் ஒன்றிற் கோத்த நீலங் கோமளம் ஒன்றும்* (SII,ii,93.)

கோத்துக் கொள்ளவும் (வி) அணிந்து கொள்ளவும் (1300) *தாங்கள் புறப்பட வேண்டும் இடங்களுக்கு பாத$_3$ரக்ஷை கோத்துக் கொள்ளவும்* (SII,iii,25.)

கோத்தெடுக்கை (பெ) கலப்பது (1469) *இந்த திருப்போநகம் கோத்தெடுக்கைக்கு வடிதயிர் அமுதும்* (TDI,ii,38.)

கோத்தொழில் (பெ) அரசாள் வினை (1068) *கோத்தொழில் உரிமையினெய்தி அரைசு வீற்றிருந்து* (EI,xxi,38.)

கோத்ரிகள் (பெ) கோத்திரத்தைச் சேர்ந்தவர் (1370) *சதுர்வ்வேதி$_3$ மங்கலிய னானா கோத்ரிகளாந பாரத* (SII,v,857.)

கோதாரை (பெ) ஒரு நகை (1547) *ஆசாரியற்கு அஸ்தமாத்திரை கன்னமாத்திரை கோ$_3$தாரை பணம் 6* (TDI,v,99.)

கோதி (வி) பொருத்தி (815) *கற்கோதிக் குமுழி செய்வித்து* (SII,xiv,26.)

கோதிலாத (வி) குற்றமில்லாத (1145) *கோ மன்னிய கொடைத்தடக்கைக் கோதிலாத நிதியாளர்* (SII,vii,1044;IPS,120.)

கோதுமை (பெ) ஒரு தானியம் (1539) *கோதுமைத் திருப்பண்ணியாரப்படி* (TDI,iv,122.)

கோந் (பெ) தலைவன் (991) *வைத்துகந்தாள் சீரார் மழவர்கோந் பெற்ற நஞ் செம்பியற் மாதேவியே* (SII,xiii,144.)

கோ நீக்கி (வி) பழைய அரச ஆணையை நீக்கி (891) *காராண்மை மீதாட்சி உள்ளடங் இ...லி கோ நீக்கி செம்மருதர் குடியாக* (TAS,i,p.17.)

கோநேரின்மை கொண்டான் (பெ) தன்னிகரற்ற

அரசன் (அரசனின் நேரடி ஆணை ஓலைகளில் அரசன் பெயருக்கு மாற்றாக வரும் சொல்) (1008) *ஸ்வஸ்தி ஸ்ரீ கோநேரின்மை கொண்டான் க்ஷத்ரியசிகாமணி வளநாட்டு* (EI,xxii,34.)

கோப் பதவாரம் (பெ) அரசர்க்குரிய பத்தில் ஒரு பாக நிலவிளைச்சல் (885) *கோப்பதவாரங் கோயில் கொண்டு* (TAS,viii,p.80-82.)

கோப்பு (பெ) கொள்ளுமிடம் (993) *நீரோடுகாலுக்கு வடக்கும் இக்குளத்து நீர்க் கோப்புக்கு மேக்கும்* (SII,xiii,182.)

கோபிரசார பூமி (பெ) பசுக்கள் மேயுமிடம் (1124) *இருப்பத்தஞ்சு பாடகமும் கோபிரசார பூமியாய் எல்லோருக்கும் சாதாரணம் ஆதலால்* (SII,v,993.)

கோபுரம் (பெ) கோயில் சுற்றுமதிலின் நுழைவாயில் (873) *மௌன குமரமாதாண்டனான திருச்சுற்றாலைக்குங் கோபுரத்துக்கும்* (SII,iii,91.)

கோமகள் (பெ) அரசி (1136) *கோமகள் செவ்வாய் பவள சேய் ஒளி படைத்தன* (SII,vii,1038.)

கோமட்டியள் (பெ) ஒரு வணிக சாதி (1508) *பவுலிஸ்ய கோத்திறத்து பச்சைலிங்கு செட்டி முதலான கோமட்டியளுக்கு* (TDI,iii,16.)

கோமளம் (பெ) மாணிக்க வகை (1014) *தடவிக் கட்டின மாணிக்கங் கோமளம் ஒன்றும்* (SII,ii,42.)

கோமற்றவன் (பெ) (= கோயிற்றமன்): அரசு அலுவலர் (1161) *நாங்களே கோமற்றவற்கு போக்கறுக்க கடவோமாகவும்* (IPS,190.)

கோமன்னர் (பெ) சிறந்த அரசர்கள் (905) *கொடி எடுத்த குடை வேந்தன்றிருக் குலத்துக் கோமன்னர்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கோமாங்கிசம் (பெ) பசு இறைச்சி (1233) *கோமாங்கிசத்தை புஜிபானுமாய்* (SII,viii,80.)

கோமாங்ஸம் (பெ) பசு இறைச்சி (1198) *கோமாங்ஸத்தைத் தின்றானுமாய்* (SII,viii,123.)

கோமாது (பெ) தெய்வப்பசு (1171) *எடுத்தாதி யுகங் கொழுந்து விட்டுத் தழைத்தோங்க கோம்மாதறங் குளிர்தூங்க* (SII,xvii,592.)

கோமான் (பெ) அரசன்: தலைவன் (771) *கொங்கர் கோமான் கோச்சடையன்* (EI,xvii,16.)

கோமுகை (பெ) பசுவின் முகம் போன்ற நீர் விழும்வாய் (1154) *இந் நயனாற்குக் கோமுகை செவித்தேன் சிங்கப் பெருமாளான* (SII,xvii,658.)

கோமுதல் (பெ) அரசர்களுக்குள் முதன்மை யானவன் (1193) *மாமுதல் மதிக்குல விளக்கிய கோமுதல் கோச்சடைய பந்மரான* (SII,v,296.)

கோமுற்றவப் பேறு (பெ) ஒரு வரி: (அரசு ஊழியர் பெறும் பேறு) (1330) *மாவடை மரவடை ஏரிமீன்பாட்டம் கோமுற்றவப்பேறு பலதளி நாட்டு வரி மற்றும் எப்பேர்ப்பட்ட அமஞ்சி வகைகளும்* (TDI,i,99.)

கோமுற்றவற் (பெ) (கோமுற்றவர் = கோயிற்றமர்) (1245) *ஐநம ஹானியும் ப்ராணஹானியும் பட்டு அன்றாடு கோமுற்றவற்கு* (IPS,340.)

கோமுறை (பெ) அரசாங்க வரி (1489) *தேவதானமாக கையாண்டு நாம் கொள்ளும் கோமுறை எற்பேயப்பட்டதும் கொண்டு* (TAS,vi,96.)

கோமுறைபாடு (பெ) (= கோமுறை) (1517) *உவாதி வினிபோகம் மற்றும் நாம் கொள்ளும் கோமுறைபாடு எப்பேற்பட்டதும்* (TAS,vi,116.)

கோமேதகம் (பெ) நவமணிகளுள் ஒன்று (1014) *நவரத்ந மோதிரம் புஷ்யராகமும் ஒன்றுங் கோமேதகம் ஒன்றும் பவழம் ஒன்றும்* (SII,ii,93.)

கோயிக்கரணம் (பெ) கோயில் கணக்கன் (750) *கோட்டத்தாரும்(ந்) நாட்டாரும்த் தொழுது தலைக்கு வைதுக் கோயிக் கரணத்துக்குக் கோயில் ஆனைக்கும்* (EI,v,8.)

கோயிக்கல் (பெ) கோயில் (1147) *மத்தியூர் வேம்படி மனையும் கோயிக்கலும் கெட்டி வெத்து கொடுக்கையில்* (TAS,viii,p.7-8.)

கோயிங்மை (பெ) கோயில் நிர்வாகம் (1251) *மகதேவர் கோவிலில் மேல் கோயிங்மையும்*

ஊராண்மையும் ஸ்தாநம் எப்பேறும் (TAS,iv,p.86-89.)

கோயிமை (பெ) அரச அலுவலர் (1636) *இவ்வகைப்படியே கோயிமையும் ஊருங் காணியாளரு முன்பாக உதகபூறுவதன்ம* (TAS,vii,p.39-40.)

கோயில் (பெ) அரசன்: அதிகாரி (992) *பட்டாரகர்க்கு அன்றாடு கோயில்க்கும் பந்நிரு கழைஞ்சே அஞ்சு காணம்* (TAS,ii,p.34-37.)

கோயில் (பெ) அரண்மனை (796) *கோயில் கொண்டு புகந்த இடம்* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

கோயில் (பெ) ஆலயம் (670) *குமாரன் எடுப்பித்த கோயில்* (EI,xxxii,23.)

கோயில் கண்காணி (பெ) கோயில் காரியங்களை மேற்பார்ப்பவன் (989) *இத் தோட்டமுடையார் கோயில் கண்காணியாக தேவன்* (SII,xiii,98.)

கோயில் குடிமை (பெ) உழுகுடிகள் கோயிலுக்குச் செய்யும் ஊழியம் (1279) *இன்னிலத்துக்கு வரும் மடக்கு ஊரிலே ஏற்றிக் கொள்ளவும் கோயில் குடிமை திரு அரங்கு வீரபோகம் மட அரிசி உள்ளிட்டன தவிர்வதாகவும்* (SII,viii,44.)

கோயில் கேழ்வி (பெ) ஒரு கோயில் அலுவலர் (1516) *...ப்ரஸாதத்தில் கோயில்கேழ்வி திருவேங்கடஜீயர்...உள்ளதும்* (TDI,ii,107.)

கோயில் தரவு (பெ) கோயில் கொடுக்கும் ரசீது (1196) *பெறு மடத்து கோயில் தரவின்றியிலே கையீடு குடுத்து கொண்டவன் ஆகவும்* (SII,vii,1041.)

கோயில் நாயகம் (பெ) கோயிலதிகாரி (1172) *இப்படிக்கு இவை கோயில் நாயகம் படம்பக்கநாயக பட்டன் எழுத்து* (SII,v,1358.)

கோயில் மானிடம் (பெ) அரண்மனையைச் சேர்ந்தவர்கள் (944) *ஊராளனாக கோயில்மானிடமாக பொதுவாளாக* (SII,v,783.)

கோயில் வஸ்து (பெ) கோயில் வளாகம் (765) *இவூர் பெற்ற பரிஹாரம் கோயில் வஸ்துச் செக்குத் தறியும்* (EI,xxxvi,20.)

கோயில் வாரியம் (பெ) கோயில் நிர்வாகக்குழு (1015) *ஸ்ரீ கோயில் வாரியம் செய்வாரேய் முட்டின நெய்யிரட்டி அட்டுவிச்சு* (EI,v,6h.)

கோயில் ஸ்தாநாசார்யம் (பெ) கோயில் பூசை செய்வோரின் தலைமை: கோயிலைச் சேர்ந்த மடாதிபதி (1261) *திருவானைக்காவுடைய னாயனார் கோயில் ஸ்தாநாசார்யம் திருக்கடவூர் வாச்சியன் திருவாரூர் பண்டிதனெழுத்து* (SII,iv,427.)

கோயிலடி (பெ) கோயில் வளாகம் (1214) *திடலு மூரணியுங் கோயிலடியும் திருநந்தவனமும்* (EI,xxv,11.)

கோயில் அதிகாரிகள் (பெ) சேர நாட்டில் அரசனுக்கு அடுத்த நிலையில் இருந்த உயர் அலுவலர் (845) *கோயிலதிகாரிகள் வியராகணத் தேவர்* (TAS,ii,p.80-82.)

கோயிலாடி (பெ) கோயிலின் வாயில் காப்போர் (1546) *திருமலையில் பெரிய கோபுரவாசல் காற்கும் கோயிலாடியளில்* (TDI,v,70.)

கோயிற் குறி (பெ) கோயில் ஆவணம் (1179) *வேணாட்டுத் திருவடி திருநாமப்பேர் எழுதிய காரண திருமுகங் கோயிற் குறி எழுதிச்சுக் கொண்டு* (TAS,vii,p.24-26.)

கோயிற் கொத்து (பெ) அரண்மனை பரிவாரங்கள் (1171) *பெரியதேவர் ராஜராஜ தேவர் பேர்த்து கோயிற்கொத்தும் ஆர்வர்க் குதிரை அகம்படி நியாயம் உள்ளிட்ட துறைகளுக்கும்* (EI,xxi,31.)

கோயிற் சுவந்திரம் (பெ) கோயில் ஊழியர்களின் உரிமைகள் (1477) *கோயிற்சுவந்திரம் குளச்சுவந்திரம் வலையர் ஆடிக்கு ஒரு கூடு முசலும்* (IPS,715.)

கோயிற் சேவகர் (பெ) அரண்மனைக் காவலர் (885) *உள்வீட்டுக் கோயிற் சேவகரிருவர்* (SII,xiv,31.)

கோயிற் பிள்ளைகள் (பெ) சமணப் பெண் துறவிகள் (885) *இக்கோயிற் பிள்ளைகளைந் நூற்றுவர்க்கும்* (SII,iii,92.)

கோயிற்றமப் பேறு (பெ) கோயிற்றமர் (அரசு அதிகாரிகள்) பொருட்டு வசூலாகும் வரி (1193) *அரிமுக்கை எடுத்துக் கொட்டி கோயிற்றமப்பேறு முள்ளடி காத்திகைக் காணம்* (SII,vii,454.)

கோயிற்றமர் (பெ) அரசச் சுற்றம்; அரசு அலுவலர் (1118) *அம்பலத்திலே பெருங்குறி கொட்டிக் கூட்டங் குறைவறக் கூடிக் கோயிற்றமரோடுங் கூடி இருந்து* (SII,vi,57.)

கோயிற்றமன் (பெ) கோயிற்றமரில் ஒருவன் (1018) *இறை தண்டுகிற கோயிற்றமனே ஆடு ஒன்றுக்கு தண்டம்* (EC,x,Kl.25.)

கோயினம்பு (பெ) (= கோயில் நம்பு) (870) *ஸ்ரீ கோயினம்பு பெற்றார்* (SII,xix,163.)

கோரிவிடவும் (வி) நிரப்புவிக்கவும் (1782) *சாலில் குடி வெள்ளம் கோரிவிடவும் வென்னீர் ஊறுகாய் குடுக்கவும்* (TAS,v,p.134-38.)

கோரும் (வி) வேண்டப்படும் (1110) *கோரும் பல அந்தராயங்களு முட்பட* (EC,ix,Nl.3.)

கோல் (பெ) செங்கோல் (1120) *திக்களவு மாநடத்திக் கோல் நடத்து வாள் கூத்தன்* (SII,iv,225.)

கோல் (பெ) திரட்சி (831) *கோல் வளையை* (SII,xiv,43.)

கோல் (பெ) நில அளவு கோல் (753) *இக் கால்களுக்கு கோலகலமும் புழுதிப்பாடும்* (SII,ii,73.)

கோல் (பெ) அம்பு (771) *கோல் வளைக்கும் வேற்றானை* (EI,xvii,16.)

கோல் கூலி (பெ) துலாக் கோலால் நிறுக்கப்படும் பொருள்கள் மீது விற்பனை வரி (1036) *குணமேநகைபுரத்துக் காலளவு கோல்கூலி உள்ளிட்ட அங்காடிப் பாட்டத்துக்கு வைக்கக் கடவ* (SII,iv,223.)

கோல்நிறை கூலி (பெ) தாராசில் எடை இட்டு விற்கும் பொருள் மீதான வரி (986) *தேவர்க்கு இக்கச்சிப்பேட்டுக் கோல்நிறை கூலியும்* (SII,iii,128.)

கோல்லுரிமை (பெ) (மீன்) விற்பனை உரிமை (905) *வல்லெருமை வெருவு மீன்கள் விராலுகள் புனற்பதி இதனிற் கோல்லுரிமையிற் செம்பாகமும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கோல் விழுந்தவாற்றால் (வி) நில அளவு கோல் கொண்டு அளந்தபடி (985) ...*மேற்க்கு கோல் விழுந்தவாற்றால் பட்டி நிலங் கொண்டு* (SII,xiii,121.); (879) *கிழக்கு கோல் வீழ்த்தவாற்றால் திடல் நீய்க்கி* (SII,xiii,187.)

கோலகலம் (பெ) நீரோடும் வாய்க்காலின் ஒரு கோல் அகலம் (753) *இக்கால்களுக்கு கோலகலமும் புழுதிபாடும் பெறுவதாகவும்* (SII,ii,73.)

கோலஞ் சிறக்க (வி) மங்கல வாழ்த்துச் சொல் (985) *ஸ்வஸ்தி ஸ்ரீ கோலஞ் சிறக்க ...ப்பரகேய்சரிபந்மக்கு யாண்டு* (IPS,60.)

கோலறை (பெ) கரையட்டுதல் போன்ற ஊர்ப் பொது வேலையை ஊர் நிலக்கிழார் வழி பங்கீடு செய்தல் (1239) *காவேரிக் கரையில் நம்மூர் கோலறை செ...ல் ஓபாதிக்குக் குடிப்பற்றான நிலத்துக்கு* (SII,vi,50.)

கோலாட (வி) கம்புகளால் பொருத (1274) *அழகியபாண்டிய தேவனுக்கும் பரமென்று இருகோலாடக் குத்தக் கொண்ட வயிராகி* (IPS,380.)

கோலால் வந்தது (வி) தராசில் நிறுத்து விற்கும் பொருள்கள் மீது வசூலித்த வரி வருவாய் (1009) *இத் தேவர்க்கேய் முதலாய்க் காலளவாலும் கோலால் வந்ததும்* (SII,xvii,235.)

கோலி (வி) சேர்த்து (1014) *கறவை ஒன்றா லாழக்காங் கணக்குக் கோலிக் கொள் பால் பதிநெண்ணாழி முழக்கு* (SII,vii,880.)

கோலியத்தறி (பெ) ஒரு வகைத் தறி; அதற்கு இறுக்கும் வரி (1234) *செக்குக் கடமை வாணிகர் பேராற் கடமை சாலிகர் அச்சத்தறி கோலியத்தறி இனவரி உள்ளிட்ட கடமைகளும்* (SII,vii,98.)

கோலியர் (பெ) நெசவுத் தொழில் செய்வோர் (சாதி) (1036) *தச்சர் கொல்லர் தட்டார் கோலியர் உள்ளிட்ட கீழ் கலனைகளுங் கொண்டு* (SII,iv,223.)

கோலினமை செய்வார் (பெ) (அறுவை) மருத்துவர் (1014) *கோலினமை செய்வார் இருவருக்கு அரையன் பவருத்திரனான பஞ்சவன் மங்கலப் பேரையனுக்கு* (SII,ii,66.)

கோலீடு (பெ) ஒரு கோல் அளவு (877) *சுற்றும் கோலீடு நீக்கி* (SII,vi,370.)

கோவணவர் (பெ) விஷ்ணுகோயில் ஊழியர் வகை (1449) *பாடுவார் பத்திரம் பிடிப்பார் குடவர் கோவணவருடன் ஸௌந்த₃ரராஜந் மண்டபத்து இருந்து* (IPS,791.)

கோவதை (பெ) பசுக் கொலை (1200) *கெங்கைக் கரையில் கோவதை பண்ணினான் செய்த பாவத்திலே* (NI,n.22.)

கோவம் (பெ) ஒரு பூச்சி (800) *கோவங்கள் ஊர்கின்ற தாள் புறவேய்* (EI,xiii,10.)

கோவுங் குடியும் பொதுவேய் பெரிய குடியும் சிறிய குடியும் வேறுபாடில்லாமல் (860) *கோவுங் குடியும் பொதுவேய் விளைந்த* (SII,xii,102.)

கோவும் பொறியும் மாற்றி (ஆவணத்தில்) முன்கண்ட அரசன் பெயரையும் இலச்சினையையும் மாற்றி (550) *கோவும் பொறியும் மாற்றி* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

கோவை (பெ) சடை (1014) *தானைத் தூக்கம் பின்னுக் கோவைத் தலையில் மொட்டு ஒன்றில் தடவிக் கட்டின பளிங்கு ஒன்றும்* (SII,ii,51.)

கோவை (பெ) நீர்ப் பிடிப்பு (961) *இக்குளத்தால் நீர் கோவையும்* (SII,iii,213.)

கோவை (பெ) அமைப்பு (1012) *துடர் நெய்க் கனகந்துகளெழ நெடுநற் கோபுரங் கோவை குலைய மாபெரும் புரிசை வட்டம்* (SII,vii,863.)

கோவை (பெ) ஊரின் வரிகளிந் மொத்தம் (1406) *குளப்ரமாணம் பொன் 242 தகுக் கோவை பொன் 36* (SII,i,55.)

கோழி (பெ) உறையூர் (771) *கூடல் வஞ்சி கோழி என்னும்* (EI,xvii,16.)

கோழி கூவிந ஊர் (பெ) மக்கள் வசிக்கும் ஊர் (1286) *திருப்பணிக்கு வைத்துக் குடுத்தப்படி கோழி கூவிந ஊரெங்கும் ஊரால் ஒரு பணம் சந்த்₃ராதி₃த்யவரை செல்லக் கடவதாக* (EC,x,Kl.27.)

கோள் (பெ) புறங் கூறுதல் (1703) *இராசகரங் களுக்கு நம்முடைய நாட்டிலே இருந்து சிலர் கோளுங் குமண்டெயுஞ் சொல்லிவிச்சிரிக்கிற* (TAS,v,p.215-16.)

கோள்குடை (பெ) கொள்பவை கொடுக்கப்பட வேண்டியவை (962) *கொடுக்குங் கோள்குடையுமொழிச்சு கொடுத்தான்* (TAS,iii,p.171-73.)

கோளாளி (பெ) வலியவன் (சிங்கம் போன்றவன்) (800) *தஞ்சைக் கோன் கோளாளி* (EI,xiii,10.)

கோள் எழுதுக (வி) கொள்ள வேண்டிய பொருள்களை கணக்கில் எழுதுக (932) *முன் ஆராகின்றாரை கோள் எழுதுக வென்று நகரவாரிய கூட்டஞ் சாற்ற* (SII,v,588.)

கோற்குறி (பெ) சூரியன் நிழலை அளக்கும் கோலின் குறிப்பு (956) *கிழமை வெள்ளி போது முன் கோற்குறி* (SII,viii,612.)

கோற்பாடு (பெ) உரிமையான நிலம் (1018) *பெருஞ்சாத்தக் காவதிகள் கோற்பாட்டுக்கு மேற்கு* ... (SII,vii,889.)

கோன் (பெ) தலைவன் (900) *எங்கோன் இருப்பைக்குடி கிழவன்* (SII,xiv,43.)

கோன் (பெ) அரசன் (791) *நீண்முடி நேரிய கோன்* (EI,xvii,16.)

கோன் (பெ) அரசு அலுவலரின் ஒரு பட்டப் ெப்யா (934) *கிழார் கூற்றத்துக் கிளிநல்லூர் செம்பியன் கிழார்நாட்டுக் கோனாகிய கிளிநல்லூர் கிழவன்* (SII,xxiii,35.)

கோன் (பெ) இடையர், மன்றாடி, ஸ்ரீகோபாலர் முதலிய கால்நடை வளர்க்கும் தொழில் சார்ந்தோரின் சாதிப் பட்டப் பெயர் (1184) *வள்ளுவப்பாடி நாடு காணி உடைய ஸ்ரீகோபாலரோம் இந்நாட்டூர்களுக்குச் சமைந்த துறையூருடையான் சங்கரன் செல்வனான அமரகோனும் ஒத்தன் கூட்டேரியான அளகைக்கொனும்* (SII,xxiv,136)

கோனோலெ (பெ) அரசன் விடுத்த ஆணை ஓலை (753) *கோனோலெ யாண்டிருபத்திரண்டாவது* (SII,ii,73.)

கோஷ்ட$_2$ம் (பெ) கோயில் (1461) *கோஷ்ட$_2$மும் பை$_4$ரவாலயவும் ருஷபா$_4$தி$_3$ பரிவாரங்களும்* (TAS,viii,p.9-11.)

கோஷ்டி (பெ) (= கோட்டி) (986) *பருஷை நாயன்மாற்க்கு அரிசி தூணியும் கோஷ்டி செய்தானுக்கு அரிசி தூணிப்பதக்கும்* (SII,iii,128.)

கோஇல் (பெ) கோயில் (785) *திருமாலுக் கமர்ந்துறையக் குன்ற மன்னதோர் கோஇலாக்கியும்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

கோஇல் (பெ) அரண்மனை (745) *முட்டிற் கோஇற்கு நாள்வா யொரு காடி நெற்றண்டம்* (TAMIZ,1970,p.122.)

கோஇற் பிள்ளைகள் (பெ) அரண்மனையைச் சேர்ந்த வீரர் குழு (809) *இக் கோஇற் பிள்ளைகள் முன்னூற்றுவர்* (SII,xiv,40.)

கௌ

கௌஸ்துபம் (பெ) திருமால் மார்பில் அணியும் மணி (921) *செங்கதிரொளிக் கௌஸ்துப$_4$த்தொடும்* (SII,iii,206a.)

க்ர

க்ரமவித்தன் (பெ) வேதத்தின் கிரம பாடத்தில் வல்ல பிராமணரின் பட்டப்பெயர் (875) *பதின் கழஞ்சு பொன்னுக்கும் எம்மூர் ஸ்ரீ மலையஞ் சி குமார க்ரமவித்தன்* (SII,xii,98.)

க்ரய த்$_3$ரவ்யம் (பெ) விலைப்பொருள் (999) *நிலத்துக்கு க்ரய த்$_3$ரவ்யமும் இறை த்$_3$ரவ்யமும் அறக் கொண்டு* (SII,iii,3.)

க்ரயம் (பெ) விலை (985) *இந்நிலத்துக்கு க்ரயமாகவும்* (SII,xiii,64.)

க்ரஹணம் (பெ) சூரிய அல்லது சந்திர கிரகணம் (984) *பீடில்லிகைவாரி க்ரஹண ஸங்க்ராந்தி விஷ°ம்* (SII,xix,358.)

க்ருத ப்ராயச்$_0$சித்தம் (பெ) கொதிக்கும் நெய்யில் கைவைத்துக் கழுவாய் செய்தல் (921) *எப்பேர்ப்பட்ட கையூட்டுங் கொண்டான் க்ருத ப்ராயச்$_0$சித்தஞ்செய்து சு$_0$த்$_3$த$_4$ரானாரையு* (ARASI,1904-05,p.131.)

க்ருதஹாரோஹணம் (பெ) நெய் முழுக்கு(?) (1127) *க்ருதஹாரோஹணத்துக்கு நெய் மூவுழக்காழாக்கு* (SII,iii,80.)

க்ருதாபதா$_3$நந் (பெ) நற்பணிகள் செய்பவன் (771) *கி$_3$ரிஸ்தி$_2$ரந் கீ$_3$திகிந்நரந் க்ருபாலயந் க்ருதாபதா$_3$நந்* (EI,xvii,16.)

க்ருது (பெ) வேள்வி (815) *ஓராஇரங் க்ருதுச் செய்தும்* (SII,iii,206b.)

க்ருபாலயந் (பெ) கருணைக்கு இருப்பிடமானவன் (771) *மர்த்$_3$தி$_3$த வீரந் கி$_3$ரிஸ்தி$_2$ரந் கீ$_3$திகிந்நரந் க்ருபாலயந்* (EI,xvii,16.)

க்ரெயத்$_3$ரவ்யம் (பெ) விலைத்தொகை (953) *நாங்கள் விற்ற நிலத்துக்கு க்ரெயத்$_3$ரவ்யமும்* (SII,xiii,51.)

க்ரோத$_4$ந (பெ) அறுபது ஆண்டுகளுள் ஒன்று (1265) *க்ரோத$_4$ந ஸம்வத்ஸரத்துத் துலாநாயற்றில்* (SII,viii,532.)

க்ஷ

க்ஷத்ரியானு மதம் (பெ) அரசர்களுக்குரிய ஒழுக்கம் (905) *க்ஷத்ரியானு மத முணர்ந்து* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

க்ஷேத்திரபாலர் (பெ) பைரவர் (1011) *ஸ்ரீகையிலாயத்து க்ஷேத்திரபாலர்க்கு திருவமிது செய ஒரு போதைக்கு அரிசி* (SII,v,724.)

க்ஷேத்ரபாலன் (பெ) பைரவர் (983) *அங்ஙிகார்ய்யத்துக்கு முழாக்கும் க்ஷேத்ரபாலனுக்கு (அயி)உழக்கும்* (SII,xix.322.)

க$_2$

க$_2$ண்டீரம் (பெ) மிளகு (1068) *க$_2$ண்டீரம் படி யொன்றும் ப$_3$லாகெரண்ட$_3$தைலம் தூணியும்* (EI,xxi,38.)

கா$_2$டகசூலம் (பெ) பல்லவ குலம் (796) *கா$_2$டகசூல சிறக்க தோன்றிய* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

கி$_2$லமாகை (வி) சிதைந்து போகை (1493) *க$_3$ருட$_3$வாஹந ப$_4$ட்டர் நடத்திவந்த ஆரோகி$_3$ய சா$_0$லை வாணத்திலெ கி$_2$லமாகையில் இப்பொழுது ஆரோக்க்$_3$ய சா$_0$லையும் சமைப்பித்து* (EI,xxiv,12a.)

கி$_2$லோத்$_3$தா$_4$ரணம் (பெ) திருப்பணி செய்து புதுப்பித்தல் (1545) *இராயற்கும் இராஜாவுக்கும் த$_4$ர்ம்மமாக ஸமர்ப்பித்து இந்த கி$_2$லோத்$_3$தா$_4$ரணம் பண்ணின க்$_3$ராமத்தில்* (EI,xxix,9.)

க$_3$

க$_3$ங்க$_3$ராஜன் (பெ) ஓர் அரசகுலப் பெயர் (771) *நறுங் கண்ணிக் க$_3$ங்க$_3$ராஜனோடு* (EI,xvii,16.)

க$_3$ச்சாநம் (பெ) (= க$_3$த்$_3$யாணம்) (1117) *பட்டணசுவாமி கையிற்கொண்ட க$_3$ச்சாநம் நாலு* (EC,xiv,TN.225.)

க$_3$ஜ்யாணம் (பெ) (= க$_3$த்$_3$யாணம்) (1301) *பிராந்ப$_4$ட்டந் குடுத்த க$_3$ஜ்யாணம் நாலு* (EC,iii,TN.104.)

க$_3$ட்வாங்க$_3$த்$_3$த்$_4$வஜம் (பெ) மழு ஆயுதம் எழுதப் பெற்ற பல்லவர் கொடி (796) *ஸமுத்$_3$ரகோ$_4$ஷமு அ.ர க$_3$ட்வாங்க$_3$த்$_3$த்$_4$வஜமு வ்ருஷப$_4$ லாஞ்சநமும்* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

க$_3$ணம் (பெ) கூட்டம் (815) *அஸுரக$_3$ணந்தலை அழிய* (SII,iii,206b.)

க$_3$த்$_3$யாணம் (பெ) கழஞ்சு எடை உள்ள ஒரு நாணயம் (1179) *ஸ்ரீ பண்டாரத்தில் ஒடுக்கிந க$_3$த்$_3$யாணம் எட்டு* (EC,xiv,md.133.)

க$_3$ர்க்$_3$க$_3$ (பெ) ஒரு கோத்திரம் (789) *க$_3$ர்க்$_3$க$_3$ கோ$_3$த்ரத்து ஆபத்தம்ப சூத்திரத்து காரம்பிச்செட்டு மாதவத் திருவேதி பங்கொன்றும்* (SII,ii,99.)

க$_3$ஹநம் (பெ) காடு (796) *வந க$_3$ஹநகளைக் கழிந்து* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

கி$_3$ரி (பெ) மலை (796) *பல கி$_3$ரி நதி$_3$ வந க$_3$ஹநங்களைக் கழிந்து* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

கி$_3$ரிஸ்தி$_2$ரந் (பெ) மலைபோல் உறுதி கொண்டவன் (771) *மநூபமந் மர்த்$_3$தி$_3$த வீரந் கி$_3$ரிஸ்தி$_2$ரந்* (EI,xvii,16.)

கீ$_3$திகிந்நரந் (பெ) இசையில் புகழ் வாய்ந்தவன் (771) *வீரந் கி$_3$ரிஸ்தி$_2$ரந் கீ$_3$திகிந்நரந்* (EI,xvii,16.)

கு$_3$ணகணம் (பெ) குணத் தொகுதி (905) *கு$_3$ணகணங்கட் கிடமாகி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

கு$_3$ணக்$_3$ருஹ்யந் (பெ) உயர்ந்த குணமுள்ளவன் (771) *குரைஉறு கடற் படைத்தானை கு$_3$ணக்$_3$ருஹ்யந்* (EI,xvii,16.)

கு$_3$ருசரிதம் (பெ) ஆசாரியர்களுடைய வரலாறு (785) *மநுத$_3$ர்சி$_0$த மார்க$_3$த்தினால் கு$_3$ருசரிதம் கொண்டாடி* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

கு$_3$ருதா$_3$னம் (பெ) குருவுக்குக் கொடுக்கும் தானம் (815) *கு$_3$ருதா$_3$னம் பல செய்து* (SII,iii,206b.)

கூ3ட4 நிரண்ணயங் (பெ) அறிய முடியாததையும் அறியும் தகுதியுடைவன் (771) *குரை உறு கடற்படைத்தானை கு3ணக்3ருஹ்யந் கூ3ட4 நிர்ண்ணயந்* (EI,xvii,16.)

கெ3ங்கா3 கந்யாந்தரம் கங்கை முதல் குமரி வரை உள்ள நாடு முழுவதும் (960) *இதற்க்கு விரோத4 நின்றார் கெ3ங்கா3கந்யாந்தரத்திற் செய்தார் செய்த பாவத்திற் படுவாராகவும்* (SII,iii,14.)

கெ3ங்கா3 ஸேது பர்யந்தத்திடை கெங்கை முதல் சேதுவரை உள்ள நாடு முழுவதும் (985) *இத்த்3த4ர்மம் விரோதம் பண்ணுவார் கெ3ங்கா3 ஸேது பர்யந்தத்திடைப் பாவஞ் செய்தார்* (CHEN,i,p.86-87.)

கெ3ர்ப4க்ருஹம் (பெ) கருவறை (961) *திருவுண்ணாழிகைஇல் கெ3ர்ப4க்ருஹத்தில்* (TAS,iii,p.71-72.)

கோ3தி (பெ) ஒரு படையல் உணவு (1473) *அப்பபப்படி 1 அதிரஸப்படி 1 வடைப்படி 1 சுகியன்படி 1 கோ3திப்படி 1 திருக்கணாமடை 1* (TDI,ii,50.)

கோ3திமா (பெ) கோதுமை (1539) *மலைகிநியநின்றான் காலால் கோ3திமா இருநாழி நெய் அமுது* (TDI,iv,122.)

கோ3ப்ரசார பூ4மி (பெ) பசுக்கள் மேயுமிடம் (1300) *அகரநத்தமும் தே3வ யஜந பூ4மியும் கோ3ப்ரசார பூ4மியும் நிலம் ஆறு வேலியும்* (SII,ii,22.)

கோ3புரம் (பெ) (= கோ3புரம்) (982) *ஸ்நபந மண்டபமும் கோ3புரமும் சுற்றாலையும்* (SII,xix,302.)

கோ3மயம் (பெ) சாணம் (937) *கோ3மயம் முன் நாழி கோ3மூத்ர முன் நாழியும்* (SII,vii,517.)

கோ3முகம் (பெ) பசுமுகம் போலச் செய்யப் பட்ட நீர் விழும் வாய் (1014) *ஒரு விரல் உசரத்து கோ3முக3ம் ஒன்று* (SII,ii,44.)

கோ3மூத்ரம் (பெ) பசுவின் சிறுநீர் (937) *கோ3மூத்ர முன் நாழியும்* (SII,vii,517.)

கோ3ஸஹஸ்ரம் (பெ) ஆயிரம் பசு தானம் செய்யும் வேள்வி (700) *எண்ணிறந்தன கோ3ஸஹஸ்ர துலாபா4ரத்து மஹாதா3னங்களாற் கலிகடிந்து* (EI,xxxviii,11.)

கௌ3ட3தே3ச0ம் (பெ) வங்காளநாடு (1031) ஆர்ய்ய தே3ச0த்தும் மத்4ய *தே3ச0த்துத்தான் கௌ3ட3 தே3ச0த்துத்தான்* (SII,ii,20)

க்3ரந்த2ம் (பெ) ஆகம நூல்கள் (1200) *வைகாநஸ க்3ரந்த2ங்களிலும்* (SII,xvii,603.)

க்3ரஹ க்ஷேத்திரங்கள் (பெ) வீட்டு மனைகள் (1346) *வேத3விர்த்3தி3யாக விட்ட க்3ரஹ க்ஷேத்திரங்கள் இவூர் நடுவில் தெருவில் கீழ் சிறகில் தெற்கடைய மனை* (SII,vii,45.)

க்3ரஹதாடகம் (பெ) வீட்டை இடித்தல் (961) *க்3ரஹதாடகச்0 சைது வண்ணாரப்பாறை யிடுவோமாகவும்* (SII,xiii,114.)

க்3ராம கண்டகர் (பெ) ஊருக்கு எதிரிகள் (877) *கறிகை குட்டத்து நீர்விட்டார் க்3ராம கண்டகராக பிணித்தோம்* (SII,vi,370.)

க்3ராம கண்டகன் (பெ) ஊருக்கு எதிரி (817) *இவன் க்3ராம கண்டகனாவானாக* (SII,vi,344; EI,xxiv,7a.)

க்3ராம கார்ய்யம் (பெ) ஊர்ப் பொதுப் பணிகள் (896) *இராஜகார்ய்யமும் க்3ராம கார்ய்யமும் திருத்தப் பெறாததாகவும்* (SII,xiii,312.)

க்3ராமஞ் செய்கிற (வி) புது ஊர் அமைக்கிற (953) *ப்ருத்2விகங்கரையர்க்கு விண்ணபஞ் செய்ய உடையாரும் க்3ராமஞ் செய்கிற போழ்து* (EI,vii,26d.)

க்3ராம த்3ரோஹி (பெ) ஊருக்குப் புறம்பானவன் (1155) *இதுக்கு அநிச0யம் நினைத்தார் ராஜத்3ரோஹி க்3ராமத்3ரோஹி* (EC,iii,Sr.76.)

க்3ராமப் ப்ரத3க்ஷணம் (பெ) ஊரை வலமாக வருதல் (1173) *ஆநித்திருவாதிரை நாயகரை க்3ராமப் ப்ரத3க்ஷண மெழுந்தருள* (SII,viii,36.)

க்3ராமம் (பெ) (பிராமண) ஊர் (785) *ச0ப்3தா3ளி என்னுங்க்3ராமத்துள்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

க்3ராமாதி3காரம் (பெ) ஊர் ஆட்சி (1228) *இக்3ராமத்தில் க்3ராமதி3காரமுள்ள வாள்க்கெந்றி மேவுற ஒற்றியும் விலயும் கொடுப்போருளராகில்* (TAS,viii,p.23-24.)

க்3ருதம் (பெ) நெய் (917) *ஆடு 63நால் க்3ருதம் ஆழாக்கு* (CHEN,xxv,p.340.)

க்3ருஹ க்ஷேத்ரங்கள் (பெ) வீட்டு மனைகள் (1167) *நாங்கள் ஸர்வ (மாறியனி) மாந்நிய மாக்க விட்ட க்3ருஹ க்ஷேத்ரங்களுக்கு* (EC,ix,Cp.97a.)

க்3ருஹணம் (பெ) சந்திர சூரியர்களின் கிரகணம் (944) *அயனமும் விஷுவும் க்3ருஹணமும் ஸ்நபநஞ் செய்வதாகவும்* (SII,iii,12.)

க்3ருஹம் (பெ) கோயில் (813) *பரமேச்0வர விஷ்ணு க்3ருஹத்து* (SII,iv,132.)

க4

க4டகயார் (பெ) கடிகையைச் சேர்ந்த பிராமணர் (796) *ராஜ்யமுத்ஸந்நமக மத்தரகளு க4டகயாரு* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

ச

சக்கத்து (பெ) முத்து வகை (1014) *அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியுஞ் சக்கத்தும்* (SII,ii,3.)

சக்கர (பெ) சர்க்கரை (1225) *எண்ணின்றதிலும் எடுக்கின்றதிலும் உபனோடு சக்கரயோடு கஸ்தூரியோடு* (EI,iv,41.)

சக்கரம் பணம் (பெ) ஒருவகை நாணயம் (1432) *பாடிகாவலுக்கு விலை...செய்த்த அன்றாடு வழங்கும் சக்கரம் பணம் 300* (IPS,703.)

சக்கரவர்த்தி (பெ) அரசர்க்கரசன் (949) *சக்கரவர்த்தி கந்நரதே3வ வல்லப4ந்* (EI,vii,26c.)

சக்கரவாளம் (பெ) ஒரு கற்பனை மலை (1193) *திக்கிரு நாருஞ் சக்கரவாளமுஞ் சூழும் புவனமு மேழுங் கவிப்ப* (SII,v,296.)

சக்கர வெற்பு (பெ) (= சக்கரவாளம்) (1171) *பொதியச் சுடற் சக்கர வெற்பிற்றன் நடைச் சக்கரம் வெயிலெறிப்ப* (SII,xvii,592.)

சக்கிலி (பெ) தோல் வேலை செய்யும் தொழில் சாதி (1202) *சக்கிலிக்கு தெரிசனம் காட்டி தோலாலே செய்த திருவடிநிலைக்கு* (SII,viii,151.)

சக்கிலி திறை (பெ) ஒரு வரி (1375) *இரும்பு சக்கிலி திறை, வெற்றிலே..ம்மை மற்றும் மிவ்வூர்....* (EC,x,Ct.94.)

சக்ரவத்தி (பெ) அரசர்க்கரசன் (796) *சக்ரவத்தி ஆவானீ வருந்தேலென்று* (SII,iv,135; MASI,lxiii,p.54-59.)

சக (பெ) கி.பி. 78ல் தொடங்கும் கால வரிசை (898) *சக வருஷ எண்ணூற்றிருபதிநால்* (TDI,i,7.)

சகடை (பெ) முரசு (1014) *சகடை கொட்டிகளில் தாமோதிரன் செட்டிக்குத் தன்னேற்றம் ஆள்* (SII,ii,66.)

சகர யாண்டு (பெ) (= சக) (870) *சகரயாண்டு எழுநூற்றுத் தொண்ணூற்றிரண்டு போந்தன.* (SII,xiv,22.)

சகரை யாண்டு (பெ) (= சக) (953) *சகரை யாண்டு 875ஆவது* (EI,vii,19d.)

சகன் (பெ) சக ஆண்டு (1564) *சகன் காலமாயிரத்து நானூற்றெண்பத்தாறில்* (TAS,i,p,106.)

சகன்கலி (பெ) சக ஆண்டு (1455) *இனமேவு சகன்கலி யாயிரத்து முன்னூற்றெழுபதுடனேழின் மேலிசைந்த* (IPS,795.)

சகாயம் (பெ) துணை (1344) *வசநமாத்திரத் தாலேயாகிலும் சகாயப்பட்டு* (UCR,xviii,p.16-23.)

சங்கடுவான் (பெ) சுண்ணாம்புக்காக கிளிஞ்சல் சுடுவான் (1246) *நீற்றமது சங்கடுவானுக்கு* (SII,viii,50.)

சங்கத்தார் (பெ) புத்த சங்கத்தார் (1113) *ஸங்க$_4$ நியோக$_3$த்தால் திருமுடிசூடி அருமணத்தில் நின்றும் சங்கத்தாரை அழைப்பித்து* (SII,iv,1396; EI,xviii,38; EZ,ii,p.242-255.)

சங்கம் (பெ) சங்கு (1266) *குளிர் வெண்கவரியும் முரசுஞ் சங்கமும் தனமும்* (IPS,366.)

சங்கம் (பெ) புலவர் கூட்டு/குழு (905) *தென் மதுராபுரஞ் செய்தும் அங்கதனில்லருந் தமிழ் [நற்]சங்கம் இரீஇத் தமிழ் வளர்த்தும்* (TASSI,1962-65,p.1-31.)

சங்கமுகம் (பெ) ஆறு கடலுடன் கூடுமிடம் (1046) *அற்றை நாளால் சங்கமுகம் தி$_3$ர்த்த$_4$மாடி வந்த ப்$_3$ராஹமணர்* (SII,xiv,192.)

சங்கமுழி (பெ) ஒரு பாத்திரம் (1400) *நிலங்காணி ஸஹஸ்ரதா$_4$ரை சங்கமுழி பற்மமுழி சங்கிலிகை* (IPS,563.)

சங்கரப்பாடி (பெ) எண்ணெய் வணிகர் குழு (922) *சங்கரப்பாடியிலும் மூவரைக் கொள்வதாகவும்* (SII,vi,295.)

சங்க வெள்வளை (பெ) வெண்ணிறமான சங்கு வளையல் (921) *மணி முடி ஒடு சங்கவெள்வளைத்தரத்தும்* (SII,iii,206a.)

சங்கிரமம் (பெ) மாதப் பிறப்பு (1296) *உத்திராடமும் சங்கிரமுமான நாள் ஜயங்கொண்ட சோழமண்டலத்து* (NI,n.71.)

சங்கிராந்தி (பெ) சூரியன் ஒரு ராசியில் புகுங்காலம் (880) *சங்கிராந்தி தோறும் பத்தெட்டாகக் குத்தல்* (SII,xii,103.)

சங்கிலி (பெ) கைதியைப் பிணைக்கும் விலங்கு (1021) *இவன் சாவிலும் போகிலும் சிறைதளை சங்கிலி புகிலும் இவ்வனைவோ முன்பு நின்றோமே* (SII,iii,18.)

சங்கிலிகை (பெ) ஒரு பாத்திரம் (?) (1400) *சங்கமுழி பற்மமுழி சங்கிலிகை உட்பட எடை எண்பது* (IPS,563.)

சங்கு (பெ) ஊதுகின்ற சங்கு (890) *நக்கனாதித்தன் குடுத்த சங்கு இரண்டு* (SII,v,615.)

சங்குக் கால் (பெ) சங்கு வைக்கும் பீடம் (1009) *தரா சங்குக்கால் ஒந்று* (SII,v,521.)

சங்குசக்கர தூக்கன் (பெ) சங்கு சக்கரங்களைத் தூக்கிச் செல்பவர்கள் (1547) *சங்குசக்கர தூக்கனுக்கு பணம் 4 ஆக ரேகை பொன் 4 பணம் 9* (TDI,v,92.)

சங்கூதுமாள் (பெ) சங்கு ஒலிக்கின்றவன் (1012) *...ங்குப்புறமும் வைச்சு ஐஞ்சுக்கும் சங்கூது மாள் ஒன்றுக்குமாக* (IPS,89.)

சங்கூதுவார் (பெ) சங்கூதும் பணியைச் செய்பவர் (978) *சங்கூதுவார் இருவற்குத் திருநல்லத்தில் சங்கோடையில் நான்குமா முக்காணி* (SII,iii,151-151a.)

சங்கேதம் (பெ) உடன்படிக்கை (1008) *ஆட்டைத் திசை கொடாத்தவகள் தண்டப்படக் கடவர் இப்பண்ணிந சங்கேதம்* (IA,xx,p.290.)

சங்கேதிகள் (பெ) கூட்டங்களை ஏற்பாடு செய்யச் செய்திகளைப் பரப்பும் பணிசெய்வோர் (1244) *குலோத்துங்க சோழன் சங்கமுத்து முதலி சங்கேதிகளில் முற்பாடு சுவாயந்திரியன் பழியஞ்சிப் பெருந்தச்சனான* (IPS,198.)

சட்டம் (பெ) நகையில் கல்பதிக்கும் குழிவான பகுதி (1014) *ரத்நத்தின் திருவாப$_4$ரணங்கள் சரடுந் சட்டமும் நீக்கி* (SII,ii,3.)

சட்டர் (பெ) பிராமண மாணாக்கர் (866) *தொண் ணூற்று ஐவர் சட்டர்க்கு சாலையுஞ் செய்தான்* (TAS,i,p.1-14.)

சட்டன் (பெ) வேதம் ஓதும் பிராமணன் (952) *தேவதாநன் திருவிடைக்கழி நின்றோடு சட்டன் கொற்றன்பள்ளிக் கண்டன்* (SII,xiii,19.)

சட்டி (பெ) மண் பாண்டம் (979) *நிசதம் மூன்று குடுவையும் நிசதம் மூன்று சட்டியும் மற்றும் வேண்டும் கலமும்* (SII,xix,238.)

சட்டிக் கால் (பெ) பானை வைக்கும் பீடம் (1009) *தாராச் சட்டிக் கால் ஒன்று* (SII,v,521.)

சட்டிச் சோறு (பெ) ஒரு சட்டி அளவுள்ள கோயிற் பிரசாதம் (985) *அளந்து இவந் வச்ச சட்டிச் சோறு சட்டி ஒன்றுக்கு* (SII,xix,102.)

சட்டுவம் (பெ) அகப்பை (939) *ஒட்டுட்டி ஒன்றும்*

சட்டுவம் ஒன்று அடுவான் னொருவனு (SII,iii,106.)

சடி சரக்கு வடம் (பெ) நெய்வோரின் அச்சுக்கட்டு (?) (1538) *சடையும் கூடுகையில் னூல் 1ல் உடுத்த ப்ரகாரம் சடிசரக்குவடம் ஒரு பங்கும் னூல் இரண்டு பங்கும் கோற்க கடவோமாகவும்...* (TDI,iv,112.)

சடித்தம் பண்ணி (வி) (ஏலத்தில்) போட்டியிட்டு (1426) *வருஷம் தோறும் அதிகாரிகள் சடித்தம் பண்ணி விகாரிவருஷ வரைக்கும் வெள்ளை எண்ணூறு பொன்னாகச் செலுத்திக் கொண்டு வந்தார்கள்* (SII,xvii,562.)

சடை (பெ) பின்னிய கூந்தல் (905) *வரகு$_3$ணன் பிள்ளை பிறை சடைக் கணிந்த பிநாகபாணி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சடை முடி (பெ) பின்னிய குடுமி (905) *மிளிர்ந்திலங்கு சடைமுடி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சண்ட பராக்கிரமன் (பெ) கடுங்கோபமும் வீரமும் உடையவன் (1012) *வேந்தன் போற்றிருந் தண்டமிழ் நாடன் சண்ட பராக்கிரமன்* (SII,vii,863.)

சண்டால குலம் (பெ) மிகத் தாழ்ந்ததாகக் கருதப்படும் குலம் (1344) *பஞ்ச சண்டால குலத்துக்கும் அந்த்யர் ஆவார்கள்* (UCR,xviii,p.16-23.)

சண்டேசுரப் பெருவிலை (பெ) சிவன்கோயில் நிலத்தை ஏலத்தில் விற்பனை செய்தல் (1287) *தொளாயிரங் காசு ஒடுக்கி சண்டேசுரப் பெருவிலைய் கொண்ட நிலமாய் திருத்துக்கூலிக்கு* (SII,v,985.)

சண்டேச்$_0$வர ப்ரஸாதம் (பெ) சண்டேசுவரருடைய அருள் (1008) *இத$_4$ந்மம் ரக்ஷித்தார் சண்டேச்$_0$வரப் ப்ரஸாதம் பெறுவார்* (SII,xvii,234.)

சண்டே$_3$ச்$_0$வரப் பெருமாநடிகள் (பெ) சிவபெருமானின் ஆதிதாசர் (929) *திருப்பராய்த்துறைய் சண்டே$_3$ச்$_0$வரப் பெருமாநடிகளுக்கு விற்றுக்குடுத்த நிலமாவது* (SII,viii,570.)

சண்டை (பெ) ஒரு வாத்தியம் (937) *சண்டைய் நாலும் கைய்ம்மணி ஒன்றும்* (SII,xxiii,258.)

சண்பகக் கான் (பெ) சண்பகமரக் காடு (1012) *யோகிகளுள்ளது புணர்தற்கினியது பொய்கைக் கரையது சந்தன வனத்து சண்பகக் கானது நந்தன வனத்தினடுவது* (SII,vii,863.)

சண்பங்காறை (பெ) ஒரு நகை (1014) *மாணிக்கத்தின் தாலி பொன்னின் சண்பங்காறை சிறியது உடையது* (SII,ii,79.)

சண வலை (பெ) ஒரு தடவை வலையில் பிடித்த சண மீன்(?) (1524) *பள்ளிக்கு விளக்கு வைக்கும் படி வெளிச்செண்ணைக்கு மேற்படி துறையில் கடமை வகையில் மடிவலை ஒன்றும் வாளைவலை ஒன்றும் சாளைவலை ஒன்றும் சணவலை ஒன்றும்* (TAS,vi,128.)

சத்தக்காரர் (பெ) வண்டிக்காரர் (?) (1506) *கச்சை த$_3$க்ஷணை கும்பத்துக்கும் சத்தக்காரர்க்கும் பணம்* (TAS,vi,115.)

சத்தக் கூலி (பெ) வண்டிக் கூலி (985) *இவ்வெழுபதின் கலத்துக்கும் சத்தக் கூலிக்குமாக செய்த நிலன்* (SII,xix,194.)

சத்தானம் (பெ) (= சந்தானம்) குரு பரம்பரை (1268) *முற்றத்து முதல்லியார் சத்தானத்து எதிஒப்பில்லாதார் ஆன சோமனாதேவர்* (SII,xviii,556.)

சத்திமுகம் (பெ) உரிய ஆணை (866) *தேவதான மும் சத்திமுகம் இன்றி விலக்கப் பெறார்* (TAS,i,p.1-14.)

சத்தியம் (பெ) சபதம் (1168) *வல்லவரையந் சத்தியம் இது பன்மாஹேச்$_0$வர ரக்ஷை* (SII,vii,890.)

சத்தியவாசக தன்மவாணியர் (பெ) ஒரு வணிக சாதியினர் (1090) *திருவீதியில் உக்கிரர் சத்தியவாசக தன்மவாணியர் மடத்துக்கு மடப்புறமாக* (SII,viii,138.)

சத்திரம் (பெ) சோறிடும் சாலை (955) *உண்ண வைத்த சத்திரத்துக்கு இவர் விலைகொண்ட* (SII,xiii,10.)

சத்ரிகரி (பெ) சிறந்த யானை: பல்லவரின் ஓர் அரசச்சின்னம் (796) *தேர்க்கேய்ச் சத்ரிகரிவயும்* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

சதயத்தி நான்று (பெ) சதைய நட்சத்திர நாள் (891) *சதயத்தி நான்று....க்குத்தல்லரிசி* (SII,xiii,290.)

சதயம் (பெ) சதைய நட்சத்திரம் (875) *செவ்வாய்க் கிழமை பெற்ற சதயத்துநாள்* (SII,xiv,12b.)

சதய விழா (பெ) சதைய நட்சத்திர நாளில் நடத்தும் திருவிழா (1009) *உடையார் திங்கள் சதய விழா பன்னிரண்டினுக்கு* (CHEN,xxi,p.425-28.)

சதலிகைய் நங்கனை (பெ) ஒரு நகை (1014) *திருப்பட்டிகைய் சதலிகைய் நங்கனை ஒன்று* (SII,ii,34.)

சதா சேவை (பெ) எப்போதும் வணங்கி நிற்றல் (1300) *நல்லசிவன் செவித்த திருப்பணி சதா சேவை தாணுத் துணை* (TAS,viii,p.3.)

சதிரம் (பெ) வயல்களில் நான்கு சமபக்கங்கள் கொண்ட நிலப்பிரிவு (910) *சோழ சூளாமணி வாய்க்காலுக்கு தெற்க்கு 3றாம் சதிரத்து மேற்கடைந்த* (SII,xix,66.)

சதுக்கம் (பெ) (= சதிரம்) (877) *ஒன்பதாங்கண்ணாற்று முதற் சதுக்கத்து* (SII,vi,287.)

சதுகை (பெ) (= சதிரம்) (975) *வடபாற்கெல்லை எங்கணிலத்துக்கேய் தெற்கும் இச்சதுகையான கோதுகுலவன்* (SII,xix,134.)

சதுசீர்மை (பெ) நான்கெல்லை (1361) *பள்ள புரத்துக்கு பூர்வத்தில் செல்லும் நஞ்சை புஞ்சை நால்பால் எல்லையும் சதுசீர்மைக்கு கல்லும் னாட்டி விட்டோம்* (EC,x,Kl.203.)

சதுர்த்$_3$வயாக்ஷந் (பெ) எட்டு கண்களை யுடையவன் (905) *சதுர்பு$_4$ஜந் சதுர்வ்வக்த்ரந் சதுர்வ்வேதி சதுர்த்$_3$வயாக்ஷந் மதுக்கமழ் மலர்க்கமல யோனி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சதுர்ப்பேதி (பெ) (= சதுர்வேதி$_3$): நான்கு வேதங்களிலும் வல்ல பிராமணன் (691) *இரு பதின்மர் சதுர்ப்பேதிகளுக்குப் பிரமதேயங் கொடுப்பதற்கும்* (SII,i,151; EI,xvii,22.)

சதுர்பு$_4$ஜன் (பெ) நான்கு கைகளையுடையவன் (905) *அக்ஷமாலைஒடு தோன்றின சதுர்பு$_4$ஜன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சதுர்வ்வக்த்ரந் (பெ) நான்கு முகங்களையுடைய பிரமன் (905) *சதுர்வ்வகத்ரந் சதுர்வ்வேதி$_3$* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சதுர்வ்வேதி மங்கலம் (பெ) வேதப் பிரமாணர்களுக்குக் கொடையாகச் செய்த ஊரிந் பின்னொட்டுச் சொல் (850) *விடேல்விடுகு விக்கிரமாதித்தச் சதுர்வ்வேதி மங்கல மென்னும் பேரால்* (SII,iii,43.)

சதுர்வ்வேதி$_3$ (பெ) நான்கு வேதங்களிலும் வல்ல பிராமணன் (803) *முடும்பை ஸ்வாமி குமாரசதுர்வ்வேதி$_3$ ஸோமயாஜியார்க்கு* (SII,vi,365.)

சதுரங்கட்டின (பெ) நிலத்தைச் சதுர சதுரமாக்க் கூறிட்ட (1120) *ஸம்ஹாரம் பண்ணிச் சதுரங்கட்டின பதிநறுசாண் கோலால்* (SII,vii,542.)

சதுரம் (பெ) நான்கு பக்கம் (1014) *எண் விரல் ஆறு தோரைச் சமசதுரத்து நால் விரல் உசரத்து* (SII,ii,38.)

சதுராலை (பெ) நாலுகால் மண்டபம் (1011) *இன்னாளால் பகல் நம்மூர் ப்$_3$ரஹம ஸ்தானத்து சதுராலை ராஜராஜனிலேய்* (SII,vii,412.)

சந்த்ரம் (பெ) நிலா உரு (1014) *தோரணக்கால் இரண்டும் அர்த்தசந்த்ரம் ஒன்றுமாய்* (SII,ii,34.)

சந்தணம் (பெ) சந்தனம் (988) *நிச்சம் அரைப்பலச் சந்தணமும் நிசதம் கைய்சு குங்கிலியமு* (SII,xiii,52.)

சந்ததி (பெ) பரம்பரை (866) *சந்ததி சந்ததியாய்* (TAS,i,p.1-14.)

சந்ததிப்ரவேச$_0$ம் (பெ) தலைமுறை தலைமுறையாக (1147) *ஆசந்த்ரதாரமே சந்ததிப்ரவேச$_0$மே அடுக்களக் காணியாக ஸ்ரீதுல்யம்* (TAS,viii,p.7-8.)

சந்தனக் குழம்பு (பெ) அரைத்த சந்தனம் (887) *திருமேனி பூசும் சந்தனக் குழம்பு* (SII,xiv,16a.)

சந்தனத்தளிப் புறம் (பெ) சந்தனம் சாத்துவதற்கான செலவிற்கு விட்ட நிலம் (934) *சந்தனத்தளிப் புறத்திலங்க வரப்பெறார்* (TAS,viii,p.43-44; EI,xxviii,37.)

சந்தனம் பொதி (பெ) சந்தனக்கட்டை மூட்டை (1300) *சந்தனம் பொதி ஒன்றுக்குக் காசு முப்பதும்* (SII,viii,442.)

சந்தன முறி (பெ) சந்தனக் கட்டு (1532) *மஞ்சட்டிச்சேலை 2 சந்தனமுறி 13க்கு சந்தனம் 681 கற்பூரம் குதிரம்* (SII,vii,53.)

சந்தன வசந்தம் (பெ) சந்தனம் வழங்கும் ஒரு திருவிழா (1546) *திருநாள்படிக்கு சந்தன வசந்தத்துக்கு மலைகுநியநின்ற பெருமாளும் னாச்சிமாரும் சாத்தியருள சந்தனம் பலம் 50* (TDI,v,71.)

சந்தானம் (பெ) சந்ததி (966) *ஸுகித சந்தானம் துப்பன வறுவான்* (SII,iii,212a&b.)

சந்தி (பெ) பூசைவேளை (947) *உச்சம் போது சந்தியில் அறுநாழிகை எரிவதாகவும்* (SII,viii,698.)

சந்தி (பெ) ஒருநாளில் முக்கிய கட்டங்களாகக் கருதப்படும் காலை உச்சி மாலை ஆகிய பொழுதுகள் (991) *மூந்று சந்தியும் ஒரு சந்தி விளக்கு எரிப்பதற்கு* (SII,viii,197.)

சந்தியா தீபம் (பெ) அந்திப்பொழுது விளக்கு (985) *சந்தியா தீபத்துக்கும்* (IPS,20.)

சந்திரந் (பெ) நிலா (891) *சந்திரநும் உள்ளளவு* (SII,vii,521.)

சந்திரனது வழி (பெ) சந்திரகுலம் (950) *சந்திரனது வழித் தோன்றி இத்தராமண்டல முழுதாண்டு* (TASSI,1962-65,p.32-52.)

சந்திராதிச்சவலம் சந்திரனும் சூரியனும் உள்ள வரை (1000) *சந்திராதிச்சவலம் எரிவதாக வைச்ச திரு நொ...விளக்கு ஒன்று* (KANDT,1968/48.)

சந்திராதிச்சுவர் சந்திர சூரியன் உள்ள காலம் வரை (780) *திருநொந்தாவிளக்கு ஒன்றுஞ் சந்திராதிச்சுவர் எரிவதாக* (SII,xiv,17.)

சந்திராதித்தர் சந்திர சூரியர் (833) *அந்தரத்தினோ டியங்குஞ் சந்திராதித்தர் வழித் தோன்றி* (SII,xiv,44.)

சந்திராதித்தவல் சந்திரசூரியர் உள்ளவரை (770) *இதனுக்குச் சந்திராதித்தவல் நியதம் ஆழாக்கு நெய்* (SII,xiv,18.)

சந்திரோதையம் (பெ) சந்திரன் தோன்றுதல் (1134) *பிருதிகுலந் தனி விளங்கப் பாரிலெழு சந்திரோதையம் திருவாணை வுடநாணை திசைநடாத்துந் தியாகவல்லி* (SII,v,645.)

சந்திவிக்கிரமம் (பெ) ஒரு வரி (1389) *பொன் வரிக்கு பணம் பதினேழரையும் சந்தி விக்கிரமத்துக்கு பணம் இரண்டரையும்* (SII,viii,72.)

சந்து (பெ) சமாதானம் (905) *த$_2$ச$_0$வத$_3$நன் ஸந்தா$_4$க்கச் சந்து செய்தும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சந்துவிக்கிரகப் பேறு (பெ) ஒரு வரி (1192) *வெட்டி பாட்டமும் பீலி சந்துவிக்கிரகப் பேறும்* (SII,v,301.)

சந்தை மகமை (பெ) சந்தை வியாபாரிகள் செலுத்தும் வரி (1495) *இராயர் பேராலே தாம் கட்டுவித்த னரசிங்கராய புரத்திலும் சந்தை மகமை குத்தகயிலும்* (TDI,ii,133.)

சந்தோக ஸாம வேதம் (பெ) ஸாம வேதத்தின் ஒரு பகுதி (992) *இத் தேவற்கு தலவுகார சாமவேதமும் தைத்ரீய வேதமும் சந்தோக ஸாம வேதமும் அத்தியயநம் பண்ணும்* (SII,xiii,170.)

சந்த்$_3$ரசே$_0$க$_3$ரத் திருமேனி (பெ) சிவன் உருவம் (991) *இக்கோயிலில் வச்ச பொன்னின் சந்த்$_3$ரசே$_0$கரத் திருமேனி* (SII,xiii,144.)

சந்த்$_3$ராதித்யர் (பெ) சந்திர சூரியர் (768) *சந்த்$_3$ராதித்யர் ருள்ளதனையும் நரகத்தி னிற்பானாகவும்* (SII,xii,34; .)

சந்த்$_3$ராதி$_3$த்யக$_3$தம் சந்திரன் சூரியன்

உள்ளவரை (845) *சந்த்$_3$ராதி$_3$த்ய க$_3$தஞ் செல்வதாய்த்து* (EI,xi,22b.)

சங்ஙணம் (பெ) சந்தனம் (951) *திருச் சங்ஙணமுந் திருப்புகையும் அமச்சான்* (TAS,i,p.289; TAS,v,p.7.)

சநி (பெ) சனிக் கிழமை (1011) *சநிதோறும் எண்ணைக் காப்பு சாத்தி அருள சநி ஒன்றினுக்கு* (SII,v,724.)

சப்படி (பெ) வயிரத்தின் வகை (1014) *கட்டின வயிரஞ் சப்படியுங் காக விருந்தமும்* (SII,ii,32; SII,v,1383-1401.)

சப்பத்தி (பெ) முத்து வகை (1014) *அம்புமுதுங் கறடும் இரட்டையுஞ் சப்பத்தியும்* (SII,ii,3.)

சப்பு (பெ) மரவகை (1344) *நாலெல்லைக்குட் பட்ட காடு தென்னமரம் சப்பு மாப்புளி யுள்ளிட்ட தோப்புகளும்* (UCR,xviii,p.16-23.)

சபதம் (பெ) சூளுறவு (1068) *பிரட்டர் ஆக வென்றி யாவருமறிய வெழுதிய சபதமே வருமோலை விடை யோடுங் குடுத்து* (EI,xxi,38.)

சபா நியோகம் (பெ) சபையின் கட்டளை (1116) *திருமுகப்படியும் மூலபருஷையர் சபா நியோகப் படியும் எட்டாந் தரமாக்கி* (SII,iv,222.)

சபை (பெ) பிராமண ஊர் நிலக்கிழார் மன்றம் (802) *இளங்கோய்க்குடி சபை வாரியரும்* (SII,xiv,36.)

சபையார் மேனாயம் (பெ) கோயில் அலுவலரில் ஒருவர் (1546) *வைஷ்ணவகாரி பணம் 2 சபையார் மேனாயம் பணம் 1* (TDI,v,71.)

சபை வாரியர் (பெ) சபையின் உட்குழுக்கள் (803) *இளங்கோய்க்குடி சபை வாரியரும்* (SII,xiv,36.)

சப்$_3$த$_3$ம் (பெ) வாத்திய ஒலி (937) *பஞ்சமா சப்$_3$த$_3$த்துக்கு ஒன்பது ஆள் கொட்டுவதற்கு* (SII,viii,624.)

சம்படச் சம்மாதம் (பெ) ஒரு வரி (1333) *சம்மா...கை சம்படச் சம்மாதம் செட்டிகள் வாணிகர்* (TDI,i,100.)

சம்பந்தம் (பெ) தொடர்பு (1592) *ஒற்றி பிரஸாதம் குறுணியும் ஊறணடன் தாங்கல் அக்கிராரத் தில் நில ஒற்றி சம்பந்தமும் தாராப் பூறுவம் பண்ணிக் குடுத்தோம்* (SII,i,58.)

சம்பளக் காணி (பெ) சம்பளத்திற்குப் பதிலாக அனுபவித்துக் கொள்ளும் நிலம் (1615) *திருமஞ்சனமெடுக்கச் சம்பளக் காணியாக விட்ட பாகம் 2* (IPS,866.)

சம்பாரம் (பெ) சாம்பார்ப் பொருள்கள் (1530) *அமுதுபடி கறியமுது பல சம்பாரம் நெய்யமுதுள்ப்பட தளிகை ஒன்றுக்கு பணம் ஒன்றாக* (SII,iv,503.)

சம்பானி (பெ) குதிரை வீரர் (1435) *இழம் அழிக்கை காரியம் ஆக சம்பானி வென யமைத்த குதிரை மனித்தர்* (SII,vii,778.)

சம்பை (பெ) ஒரு விற்பனை வரி (1547) *குடி இருக்கும் செட்டிகளுக்கும் கடமை வலங்கை தரகு நூல் உண்டிகை கருஞ்சரக்கு மருத்துப்பாட்டம் அளக்கந் இறுக்கப் பட்டதும் சம்பை பச்சைப்பாட்டம் எற்பேற்பட்டதும்* (TAS,ix,p.16-18.)

சம்மதித்து (வி) உடன்பட்டு (995) *நின்று சம்மதித்து கையோலை செய்து கொடுத்தோம்* (CHEN,xxv,p.341-42.)

சம்மதித்தோம் (வி) உடன்பட்டோம் (1000) *எரிப்போமாக சம்மதித்தோ மிவனைவோம்* (SII,xvii,509.)

சம்மதிப்பான் (பெ) இசைபவன் (1113) *இப்படி திறம்புவானும் திறம்பச் சொல்லுவானும் திறம்பச் சம்மதிப்பானும்* (SII,iv,1396; EI,xviii,38; EZ,ii,p.242-255; SII,vi,9.)

சம்மாதம் (பெ) ஒரு வரி (1400) *தண்கூலி சம்மாதம் வாசல் வினியோகம்* (SII,vii,936.)

சம சதுரம் (பெ) ஒரே அளவுள்ள நான்கு பக்கங்கள் கொண்டது (1014) *நான்கு தோரைச் சம சதுரத்து பத்ம பீடம்* (SII,ii,30.)

சமஞ்சிதன் (பெ) கணக்கன் (1000) *இப்பொழுது கழிகில் இரட்டி தண்டம் படுவது சமஞ்சித னிச்செலவு கண்டு செலுத்துவிது* (TAS,ii,p.173-207.)

சமத்த பிறாத்திகள் (பெ) எல்லாச் சொத்துக்கள் (1225) *பெருநான்கெல்லைக்கு ளகப்பட்ட எற்ப்பேற்பட்ட சமத்த பிறாத்திகளில்* (JOR,xx,Appx.,p.27-28.)

சமயக் காரியம் (பெ) ஒரு கூட்டத்தின் பொது முடிவு (1259) *நிறைவற நிறைத்து குறைவறக் கூடி இருந்து செய்த சமயக் காரியமாவது* (IPS,362.)

சமய மந்திரிகள் (பெ) கூட்டங் கூட்டுவோர் (1245) *விருதராஜப$_4$யங்கர வளனாட்டு நாடுகளோமும் நகரங்களோமும் க்$_3$ராமங்களோமும் சமய மந்திரிகளும்* (IPS,340.)

சமர் (பெ) போர் (1024) *வெஞ்சமர் வளாகத் தஞ்சுவித்தருள* (SII,i,68.)

சமரபீரு (பெ) போர் செய்ய அஞ்சும் கோழை (1046) *கடுமுரட் காங்கய்யனு முதலிநர் சமரபீரு வொத்துடைதர* (SII,viii,3.)

சமாராதனை (பெ) பூசை (1262) *நாயினார்க்கு முதலுமின்றிச் சமாராதனையும் முட்டி* (IPS,350.)

சமீபம் (பெ) அருகே (1119) *மஹாதேவர் கோயிலில் சமீபம் தீர்த்தகரையில்* (SII,iv,1227.)

சமுத்திர யாத்திரை (பெ) கடலில் பயணம் மேற்கொள்ளல் (1435) *சமுத்திர யாத்திரை தானம் ஆகக் குடுத்த ஆணத்தில்* (SII,vii,778.)

சமுதாய ப்ராத்தி (பெ) ஊர்ப் பொதுவாக அநுபவித்தல் (1539) *ப்ரதிக்கிறய தாயதாநங்களுக்கு மற்றும் எப்பேற்பட்ட சகலசமுதாய ப்ராத்திக்கும் உரித்தாக* (TDI,iv,123.)

சமைச்சு (வி) உண்டாக்கி (845) *செய்யக்கடவர் சமைச்சு இந்நகரங்கண்டு* (TAS,ii,p.80-82.)

சமைஞ்ச (வி) பொருந்திய (1225) *பிள்ளையாற்கு இவை முதலாம் படைக்கு சமைஞ்ச மானதனஞ்சிய பல்லவரையநேன்* (ARE,1932-33,68-69.)

சமைத்த (வி) ஆக்கப்பட்ட (1007) *ச...ங்களாற் சமைத்த பலகை கொண்டு பீடபூஜை செய்ய* (SII,xvii,470.)

சமைத்து (வி) உண்டு பண்ணி (1120) *வண் புகழால்தான் மறைக்கூத்தன் சமைத்து* (SII,iv,225.)

சமைந்த (வி) அமைந்த (1012) *உலகியல் சாண் பந்நிரண்டிற் சமைந்த தனிக் கோல்* (SII,vii,863.)

சமைந்து (வி) உடன்பட்டு (1091) *காசு இருபத்து மூன்றும் கொண்டு கோட்புலிக்கு சமைந்து இப்படி விற்று* (CHEN,xvii,p.315-16.)

சமைப்பித்தான் (பெ) உண்டாக்கிச் செய்தான் (1014) *ராஜராஜதே$_3$வர் திருநாமத்தால்க் கிணறுந் தொட்டியும் சமைப்பித்தான்* (SII,iii,4.)

சமைப்பித்து (வி) செய்வித்து (950) *சா$_0$ஸந மறையோலை[யு]ந் தனித்தனியே சமைப்பித்து* (TASSI,1962-65,p.32-52.)

சமையக்கணக்கன் (பெ) சமையம் அமைப்பின் கணக்கன் (1300) *இப்படிக்கு வைராகிகளும் சமையக் கணக்கனும் பலவட்டைகளிலும் தண்டிப் புகுந்த* (AVNM,6,p.38)

சமையத்தவர் (பெ) கொள்கையுடையவர் (833) *எச் சமையத்தவர் தமக்கு மியல்பின் களவிரோத மின்மையின்* (SII,xiv,44.)

சமைய தன்மம் (பெ) சமையம் (கூட்டமைப்பு) உறுப்பினர்களின் செயற்பாடுகளுக்கான மரபுவழி நெறிமுறைகள் (1300) *ஐந்நூற்றுவன் பெருங்காவில் குறைவறக்கூடி ...அமையச் செய்த சமையதன்ம காரியமாவது* (AVNM,6,p.37)

சமையப் பிடிபாடு (பெ) சமையம் கூடிச் செய்யும் ஒருமனதான தீர்மானம் (1300) *இம்மச்சாதி களிலே கொள்வதாகச் சமையப் பிடிபாடு பண்ணிக்குடுத்தோம்* (SII,viii,442)

சமையம் (பெ) கொள்கை; மதம் (1192) *சாலறு வகைச் செம்பொருட் சமையஞ் சீருடன் பரவ* (SII,v,301.)

சமையம் (பெ) கோயில் பணியாளர்களில்

ஒருவகையினர் (969) *பதிபாத மூலத்தோமும் பட்டுடையோமும் சமையத்தோமும் மற்றும் இத்தளி பங்குடையோம் எப்பேர்ப் பட்டோமும்* (SII,xiii,236.)

சமையம் (பெ) உண்மைப்பொருள் (1192) *ஐம்புலன்கட்கு மருமைசால் அறுவகைச் செம்பொருட் சமையஞ் சீருடன் பரவ* (SII,v,301.)

சமையம் (பெ) ஒரே தொழில் அல்லது சாதி சார்ந்தவர் கூடும் பெரும் கூட்டம்; (= ஸமையம்; பெருநிரவி) (1300) *இம்மச்சாதிகளிலே கொள்வதாகச் சமையப் பிடிபாடு பண்ணிக்குடுத்தோம்* (SII,viii,442)

சமைய முதலியார் (பெ) சமையத்தின் தலைவர் (1386) *கலவைபற்று நாட்டாரும் சமயமுதலியாருமாக எங்கள் குடியாந* (SII,xvii,256)

சமைவு (பெ) பொருந்தியவன்; பேராளன் (1225) *ஏழாம் படைக்கு சமைவு திருநூற்று சோழக்கோன் எழுத்து* (ARE,1932-33,68-69.)

சயஞ்ஞை (பெ) கையெழுத்து (1219) *ராஜராஜக் கங்கை நாடாழ்வானும் சயஞ்ஞை யாதன்மைக்கும் இப்படிக்கு இவை அரியநாயகவேளான் எழுத்து* (SII,xvii,541.)

சயனம் (பெ) நாற்றங்காலில் விதை தெளித்தல் (1506) *சயனத்துக்கு நெல்லு பத்து மரக்கால்* (TDI,iii,13.)

சயித்தம் (பெ) (= சயித்தியம்) புத்தர் ஆலயம் (1218) *திகழ் சாலையுஞ் சயித்தம் அன்னவை திகழ ஐவர்கண்டன்* (UCR,xviii,p.157-62; UCR,xx,p.15-18.)

சர்க்கரை (பெ) கரும்பு முதலியவற்றின் சாற்றினின்று செய்யும் இனிப்புத் தூள் (903) *வாழைப் பழமெட்டுஞ் சர்க்கரைப் பலமும்* (SII,xii,92.)

சர்க்கரையமிது (பெ) சர்க்கரை உணவு (929) *சர்க்கரையமிது முப்பலத்தினால் நெல் முன்னாழியும்* (SII,viii,627.)

சர்க்கரைவட்டு (பெ) வெல்லக் கட்டி (959) *சர்க்கரைவட்டு இரண்டும் வாழைப்பழம் இரண்டும்* (SII,xiii,44.)

சரக்கு (பெ) பாத்திரங்கள்(?) (1000) *திருக் கோயில்க்கால் சரக்கு ஓட்டையடைக்கு மவனுக்கும் விச்ச நெல்* (TAS,iv,p.11-16.)

சரக்கு (பெ) பொருள் (1175) *கொல்வாரையும் கொன்று பிடிப்பாரையும் பிடித்து இவர்களையும் சரக்காய் கைக்கொண்டளவும்* (EI,xxii,14.)

சரக்கு (பெ) வியாபாரப் பண்டம் (885) *உல்கு கூட்டுஞ் சரக்கு* (TAS,ii,p.80-82.)

சரக்கு (பெ) விற்பனைப் பொருள் (1043) *விலையிட்ட சரக் கெல்லாருங் கொள்விது* (IA,lviii,p.158-59; TAS,viii,p.39-40.)

சரடு (பெ) நூல் (1014) *ரத்நத்தின் திருவாப₄ரணங்கள் சரடுஞ் சட்டமும் நீக்கி* (SII,ii,3.)

சரண் (பெ) அடைக்கலம் (1044) *ஆங்கது மிழக்கமாட்டாது தந் பூங்குழல்·சரணென* (SII,v,465.)

சரணத்தார் (பெ) ஒரு சார் வேத சாகையை ஓதுவோர் (866) *இச்சாலைக்குப் பெய்த கலத்தில் பவிழிய சரணத்தார் உடைய கலம்* (TAS,i,p.1-14.)

சரணம் (பெ) வேத பகுதி (866) *மூன்று சரணத்திலும் மூவர் சென்று புக்கது பாடாவது* (TAS,i,p.1-14.)

சரணம் (பெ) அடைக்கலம் (1394) *நிறைவற நிறைந்து குறைவறக் கூடி கள்ள வேளைக்காறன் என்று சரணம் புகுதுகையில்* (IPS,689.)

சரதத்துடர் (பெ) ஒரு நகை (1012) *தேவர் நம்பிராட்டியாற்கு சரதத்துடர் 3 இத்துடர் மூந்றுக்குந் தாளிம்பம் ஒந்றாக* (SII,v,980.)

சரதமாயி (பெ) வழக்கமாக (1196) *அச்சும் பொலியும் தண்டிக்கொண்டு பின்னையும் சரதமாயி ஓரடத்து கொடுத்து பொலியுங் கொண்டு* (TAS,iii,p.46-52.)

சரம் (பெ) அம்பு (700) *சரமிக்க வெஞ் சிலையான்* (EI,xii,27; SII,xii,10-11.)

சரமண் (பெ) பற்றுத் தேய்க்கும் மண் (?) (1547) *எள் பருப்பு 1 மரக்காலுக்கு பணம் 1 சரமண் 1 மரக்காலுக்கு பணம் 1 பாகை கூந் 37க்கு ரேகை பொன் 1 பணம் 7* (TDI,v,92.)

சரவு (பெ) மாலை(?) (1000) *தோரணமும் தோரண விதானமும் சரவும் மிக்கும் எழுபத்திரண்டு வீடு பேறும்* (EI,iii,11.)

சரிகை (பெ) பொன் இழைகள் (1533) *காற்திகைவட்டி 10 பொன் சரிகை புணவர விட்ட ரேகை பொன் 31க்கு* (TDI,iv,16.)

சரிகை (பெ) ஒரு வரி (1222) *பொறகடமையும் பாடிகாவல் வெட்டி சரிகை செ.ன் வரி உள்ளிட்ட* (SII,xvii,299.)

சரிதம் (பெ) வாழ்க்கை வரலாறு (785) *மநு த$_3$ர்ஸித மார்க$_3$த்தினால் கு$_3$ருசரிதம் கொண்டாடி* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

சரிதலை (வி) சரிவாயிருப்பது (1255) *இக் கண்ணாற்று இரண்டாஞ் சதிரத்து இடித்திழவும் சரிதலையுமான நாற்றங்கால்* (SII,xii,175.)

சரீரம் (பெ) ஆள் (894) *ச₂ரீரம் ப்ரதி ஆழாக்கு நெய்யும்* (SII,iii,1.)

சரீராவதானம் (பெ) சாவு (1392) *தாமே பெற்றுப் போதக்கடவர் ஆகவும் தம்முடைய சரீராவதானத்துக்கு பின்பும்* (TDI,i,190.)

சரு (பெ) நெய்ப்பொங்கல் (1024) *ஏழு நாழிக்கு நெற் கலநெ பதக்கு ஹோமச்சரு வொன்றுக்கு அரிசி இருநாழி* (EC,x,Kl.112a.)

சருவச் சட்டி (பெ) ஒரு வாயகன்ற பாத்திரம் (1009) *சருவச் சட்டி ஒன்றிந் நிறை ஐம்பதின் பலம்* (SII,v,521.)

சருவம் (பெ) பானை (923) *தராச் சருவம் நிறை நூற்றுப் பத்தால்* (SII,xix,397.)

சருவரிசி (பெ) பலிச்சோற்றுக்கான அரிசி (1254) *நாளொன்றுக்கு நெல்லு பதக்குக்குச் சருவரிசி இரு நாழிக்கும் இளமுளைத் தாளைக்கு நெல்லுக் குறுணிக்கும்* (SII,viii,716.)

சல்லியக் கிரியை (பெ) அறுவை மருத்துவர் (1068) *சல்லியக் கிரியை பண்ணுவா னொருவனுக்கு* (EI,xxi,38.)

சல்லிய விருத்தி (பெ) நாவிதர் அல்லது மருத்துவர் வாழ்க்கைச் செலவுக்கு விட்ட நிலம் (1439) *மடங்கெட்ட உள்ளதலத்துக்கும் சல்லியவிருத்தி குலால்விருத்தி காருவிருத்தி கையாளும் பேற்குக் குடியிருப்புக்கும்* (TAS,viii,p.3-5.)

சல்லீசவரம் (பெ) ஒரு விற்பனைப் பொருள் (1541) *இரச குடுக்கை வெள்ளாட்டி தண்டிகைக் கொம்பு சல்லீசவரம் சிச்சிலிக்கட்டு இவைக்கெல்லாம் கூடின தீர்வையில்* (SII,vii,21.)

சலகை (பெ) ஒரு தானிய அளவு (1184) *மகல வூரில் நெல் சலகை 40தும்* (EC,xiv,Yl.143.)

சலத்தரம் (பெ) நீர் நிலை (1549) *நஞ்சை புஞ்சை மாவடை மரவடை சாரடை சலத்தரம் மற்றும் எப்பெயரற்பட்டனவும்* (IPS,754.)

சலாகை (பெ) ஒரு நாணய வகை (1500) *மஹாதே$_3$வர் திருவாதல் மாடத்தில் மெய்காட்டின அக்$_3$நிஹோத்ரி ஸபை$_4$க்கு கல்ப்பிச்ச இவ்வச்சு மூன்று சலாகையும் அச்சு பத்து* (TAS,iv,p.217.18.)

சலியா (வி) சோர்தல் இல்லாத (1072) *யாதுஞ்சலியா வகையினிதெடுத்து* (SII,iii,64.)

சவக்கம் (பெ) ஒரு வகை வைரம் (1010) *இடைக் கட்டுப் பன்னிரண்டில் கள்ளிப்பூ முப்பத்தாறு தவளைவாய் ஒன்றும் சவக்கம் ஒன்றும்* (SII,viii,234.)

சவடிகை (பெ) ஒரு நகை உறுப்பு (1513) *பச்சை 139 மாணிக்கம் 5 பழைய வஜ்ரம் 508 சிவப்பு 189 இதில் கோத்த சவடிகை 1க்கும்* (TDI,iii,61.)

சவம் (பெ) பிணம் (1523) *வலைச்சி முக்காட்டு இட்டுச் சவத்துக்கு முக்காட்டு இட்டு சவத்துக்கு முன்னே வயானத்துக்குக் கூட்டிப் போகிறதும்* (IPS,847.)

சவரிமயிர் (பெ) கவரிமான் மயிர் (1300) *சவரிமயிர்ச் சுமை ஒன்றுக்குக் காசு முப்பதும்* (SII,viii,442.)

சவி (பெ) பட்டிகையிலிருந்து தொங்கும் நூல் பின்னல் (1009) *முத்தின் பட்டிகை மேற்படியில் சவியிலும் தூக்கத்திலும் தச்ச பொத்தி பத்தொந்பதும்* (SII,v,521.)

சவுக்கம் (பெ) (= சவக்கம்) (1009) *தவளைவாய் னாலியில் சவுக்கம் ஒன்றும் பொந் கழஞ்சரையும்* (SII,v,521.)

சவைக் கடமை (பெ) சபைக்குச் செலுத்தும் வரி (866) *சவைக் கடமை கடவார் பக்கல் மூன்று சரணத்திலு மூவர் சென்று* (TAS,i,p.1-14.)

சவைக் கணக்கு (பெ) சபைக் கணக்கு வேலை (993) *தளிக் கணக்குஞ் சவைக் கணக்கும் இவனுக்கு விருத்தி..* (TAS,i,p.238.)

சவைப் பொது (பெ) சபையின் நிர்வாகத்திலுள்ள பொது நிலம் (772) *நீர் பெறுவதாகக் கிடந்த சவைப் பொதுக் கீழெல்லை* (SII,xiv,19.)

சவையார் (பெ) சபை உறுப்பினர் (768) *இளங்கோய்க்குடிச் சவையார்* (SII,xiv,27.)

சளுக்கி (பெ) சாளுக்கிய அரசன் (1036) *வந்திழி சளுக்கியங் கெய்தின* (SII,iv,223.)

சற்கரை (பெ) சர்க்கரை (869) *கறி சற்கரை வாழைப்பழம்* (SII,vii,523.)

சற்கரை வட்டு (பெ) வெல்லக் கட்டி (957) *தயிர் நாழியும் சற்கரை வட்டிரண்டும்* (SII,xix,22.)

சற்ப்பமாதிருக்கள் (பெ) ஏழு கன்னிமார் (898) *சற்ப்பமாதிருக்களுக்கு பதின் ஒரு நாழி* (SII,viii,560.)

சறுவமானியம் (பெ) முழுமையும் வரி நீக்கப்பட்ட மானியம் (976) *செய்யாற்றுக்குத் தெற்கு நாற்பாற் கெல்லையும் சறுவமானியம் இறையிலி தேவதானமாக செய்து குடுத்தேன்* (SII,xix,169.)

சறுவாணி (பெ) பிராமணர்க்குக் கொடுக்கும் ஒருவகைக் கொடை (1559) *கோவிலில் அம்பலம் ஆண்டுதோறும் கெட்டி மேவிப்பானும் அம்பலத்தில் சறுவாணிக்கும் பதினான்கு தோறும் தன்மக்கஞ்சி வைச்சு* (TAS,vi,35.)

சன்தாபனம் (பெ) ஒரு நகை (982) *வடமூன்று முத்தின் களாகவரம் பொன்னின் சன்தாபனக் கடையுந் நடுவு இட்ட படமு* (SII,xix,302.)

சன்தான பரம்பரை (பெ) வழிவழியாக (1200) *...தம்மிட சன்தான பரம்பரை சந்திராதித்த வரை நடத்தக் கடவோமாகவும்* (SII,viii,483.)

சன்நவடம் (பெ) ஒரு நகை (1009) *கோத்த திருச்சன்நவடம் மூன்றினால்* (SII,v,521.)

சன்னதி திருவீதி (பெ) கோயிலை நோக்கிப் போகும் தெரு (1155) *சன்னதி திருவீதி யிலாமையில் சன்னதி திருவீதி கிழக்க்கே விட்டு* (SII,xvii,560.)

சனிக் கிழமை (பெ) வாரத்தின் ஏழாவது நாள் (897) *துலா நாயற்றுச் சனிக்கிழமை* (SII,xiii,323.)

சனி மூலை (பெ) வடகிழக்கு மூலை (1237) *அணிஞ்சான் துடவலும் சனிமூலைச் சிங்களாந்தி வயக்கலும்* (IPS,316.)

சனிவாரம் (பெ) சனிக்கிழமை (992) *ஐம்பதின் வற்கு சனிவாரம் எண்ணைநாழி* (SII,xix,357.)

சா

சாக்கியப் பள்ளி (பெ) பௌத்தர் கோயில் (விஹாரை) (1000) *குழலூர்ச் சாக்கியப் பள்ளி எல்லைக் கரையே கிழக்கு* (TASSI,1958-59,p.84.)

சாக்கை (பெ) சாக்கைக் கூத்து ஆடுபவரின் பட்டப்பெயர் (960) *கீத்திமறைக்காடன் ஆன திருவெள் அறை சாக்கைக்கு நிவந்தம் ... தைப்பூசத்திருநாளிலே கூத்தாடுவதாகவும்* (SII,v,718.)

சாக்கை கூத்து (பெ) கூத்தின் ஒரு வகை (985) *அச்வதி திருவிழாவுக்கு வந்து சாக்கைகூத்து ஆடக்கடவ அடலையூர்ச் சாக்கைக்கு மூன்றங்கமாட* (SII,xix,171.)

சாகரம் (பெ) கடல் (1110) *சண்டீச்சரன் நோலை சாகரம்சூழ் வையகத்தில்* (EC,ix,Nl.3.)

சாகை (பெ) வேதத்தின் உட்பிரிவு (866) *சாகையிலுங் கற்பத்திலும்* (TAS,i,p.1-14.)

சாசுவதியம் (பெ) எப்பொழுதுமுள்ளது (1114) *சந்த்ராதித்தவற் சாசுவதியமாக விற்றுக்குடுத்த* (SII,xvii,586.)

சாட்சி (பெ) சான்று (995) *மஹேசுர சாட்சி* (CHEN,xxv,p.341-42.)

சாட்டிக் கொண்டு (வி) அறிவித்து (1000) *ஊர்கூடிச் சாட்டிக் கொண்டு* (TAS,ii,p.173-207.)

சாட்டு வரி (பெ) ஒரு வரி (1273) *ஆள்வரி இனவரி இடைவரி சாட்டுவரி ஊசிவாசி காலத்தேவை கரைத்தேவை* (SII,vii,145.)

சாண் (பெ) ஒரு நீட்டல் அளவு (955) *இஞ்சாண் நீளத்து நிலை விளக்கு* (SII,vii,509.)

சாணைய்பிட்டு (வி) கல்லில் தீட்டி (1532) *சங்கிலி உள் அரக்கமுக்கு உள்பட தூக்கம் 100 சாணைய்யிட்டு பச்சைவடம் 10 பட்டுசேலை 11* (SII,vii,53.)

சாத்த கணத்தார் (பெ) ஐயனார் கோயிலை நிர்வகிக்கும் குழு (1002) *எம்மூர் சாத்த கணத்தாரும்* (SII,iii,6.)

சாத்தவர் (பெ) சாத்து வாணிகர் (1123) *உப்பு...யு விலைக்குக் கொள்ளுஞ் சாத்தவர் உப்பு விலைக்கு* (SII,vi,167.)

சாத்தவும் (வி) அணிவிக்கவும் (994) *இவை சந்திராத்திரவற் சாத்தவும்* (SII,vi,28.)

சாத்தன் (பெ) அய்யனார் (993) *காடுகாள் கோயிலுஞ் சாத்தான் கோயிலு* (SII,xiii,191.)

சாத்தாதவாள் (பெ) சூத்திர வைஷ்ணவர் (1512) *மஹாஜெநங்களுக்கு மண்டை 1/2 அப்பம் 1 சாத்தாதவாளுக்கு ப்ரஸாதமும் 2 அப்பம் 1/2* (TDI,iii,27.)

சாத்தாத ஸ்ரீ வைஷ்ணவர்கள் (பெ) பூணூல் அணியாத (சூத்திர) வைஷ்ணவர் (1469) *இராமனுஜந் திருவீதியில் சாத்தாத ஸ்ரீ வைஷ்ணவர்கள் பெற்றுப் போதக் கடவர்களாகவும்* (TDI,ii,38.)

சாத்தாத ஏகாங்கி ஸ்ரீவைஷ்ணவர் (பெ) பூணூல் அணியாத (சூத்திர) ஸ்ரீ வைஷ்ணவர் (1496) *இராமனுஜந் திருவீதியில் சாத்தாத ஏகாங்கி ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு பணம் 4* (TDI,ii,135.)

சாத்தி (வி) அறிவித்து (961) *மஹாஸபையோங் கூட்டஞ் சாத்திக் கூட்டக் குறைவின்றி* (SII,xiv,91.)

சாத்திந ஸ்ரீ வைஷ்ணவர் (பெ) பிராமணரான ஸ்ரீவைஷ்ணவர் (1476) *பிறபந்தங்கள் அநுஸந்திக்கிற சாத்திந ஸ்ரீ வைஷ்ணவர் களுக்கும்* (TDI,ii,68.)

சாத்திய் (வி) ஒருவர் நலனை வேண்டி (900) *புரயன் சேந்தனை சாத்திய் சேந்த சேரிய்* (SII,v,311.)

சாத்திரக் கண்காணி (பெ) வேத சாலை மணாக்கர்களைக் கண்காணிப்போர் (1068) *சாத்திரக் கண்காணியோடும் கிடைக் கண்காணியோடும்* (EI,xxi,38.)

சாத்திரம் (பெ) சில்ப, ஆகம முறை (1196) *சாத்திராத்தம்மானபடியே ஸ்ரீபீடம் செய்து* (SII,vii,1041.)

சாத்திரர் (பெ) வேதம் ஓதும் மாணாக்கர் (950) *உத்தமாக்கிரத்தினு சாத்திரரை யேற்றிக் கொண்டு* (TAS,iii,p.189-91.)

சாத்தின (வி) அணிவித்த (985) *மஹாதேவரை அபிஷேகம் சேத போது குடுத்த முடுக்கும் மாலைக்கும் சாத்தின மாணிக்கம்* (SII,xiii,86.)

சாத்துக் கூறை (பெ) விக்கிரகங்களுக்கு அணியும் ஆடை (1076) *உடையார்க்குச் சாத்துக் கூறைக்கு காசு 1க்கும்* (SII,iv,813.)

சாத்துப்படி (பெ) விக்கிரகங்களுக்குச் செய்யும் அலங்காரம் (1103) *எம்பெருமானுக்கு அமுதுபடி சாத்துப்படிக்கு நான் இற்றை நாளிலே தன்மதாந இறையிலியாக* (IPS,124

சாத்துவித்து (வி) அணிவித்து (1016) *பொந்பூப் பத்தினால் நிறை இரு கழஞ்சரையும் சாத்துவித்து* (SII,xvii,739.)

சாதநம் (பெ) பட்டையம் (936) *இச் சாதநஞ் சேதான் இகற்றளி செய்த* (SII,vii,963.)

சாதம் (பெ) கால்நடைகள் மீதான வரி (1462) *சந்திரகிரி ராஜ்யத்தில் சாதத்துக்கு கத்தரான மாணிக்க னாயினார் மகன் கோநேரியும்* (TDI,ii,12.)

சாதனம் (பெ) எழுத்துச் சான்று கொண்ட ஓலை (1275) *நகரத்தார் தந்த சாதனத்தின் படியிலே அனுபவிக்கவும்* (IPS,390.)

சாதாரணம் (பெ) பொதுவானது (1124) *கோபிரசார பூமியாய் எல்லோமுக்கும் சாதாரணம் ஆதலால்* (SII,v,993.)

சாதி (பெ) பிறப்பால் ஒத்த குலத்தவர் (1157) *மலையமார்களும் நத்தமக்களும் இடங்கைத் தளத்திலே பாவாடை ஏறினோம் இடங்கைக்கு கண்ணுங் கையுமாய் புல்லும் பூமியுளளவு நிற்க கடவோம் இதில் பிழங்கில் மாறு சாதிக்கு தாழ்வு செய்தோமானோம்* (AVNM,11,p.32)

சாதி (பெ) உயிரினங்கள் (924) *எப்பேர்ப்பட்ட சாதியும் மிசங்குவதரிதாயிட்டு* (SII,vi,292.)

சாதி கேதகை (பெ) ஒரு மலர்ச் செடி (1400) *தமனகஞ் சாதி கேதகை வண்கழுநீருடன் மலர் பல வியற்றவும்* (SII,vii,62.)

சாதிவரி (பெ) சாதிகள் செலுத்தும் வரி (1466) *பாடிக்காவல் சாதிவரி இனவரி வெட்டிவரி மற்றும் உசாவடியில் கூட்டும்...* (SII,xvii,532.)

சாதுக்கள் (பெ) துறவிகள் (962) *இப்பரி அறியுஞ் சாதுக்கள் மாலைப் புறத்து தேவந்தேவனும்* (TAS,iii,p.171-73.)

சாந்தாடல் (பெ) சந்தன முழுக்கு (1050) *காத்திகை விழாவில் தேவர் அருளுமன்று சாந்தாடலுக்கு ஆடவலார்க்குச் சாத்தி அருள சாந்து* (SII,viii,82.)

சாந்தி (பெ) கோயில் பூசை (932) *சாந்திக்கு பல வயல் முப்பதின்றூணி* (SII,vii,173.)

சாந்திக் குலம் (பெ) ஒரு குறுநிலமன்னர் குலம் (866) *இருஞ்சோழ நாட்டவர் தலைவன் பெருஞ்சாந்திக்குல மன்னவன்* (SII,xiv,44.)

சாந்திக் கூத்திகள் (பெ) சாந்திக்கூத்து ஆடும் பெண்கள் (1238) *எங்களூர் சாந்திக் கூத்திகளில் சி..ர்த்தேமாங்குடிப் பெருந்திருவாட்டி கயிலைக்கிழத்திக்கு* (SII,xvii,463.)

சாந்தி செய்வான் (பெ) கோயிற் பூசாரி (866) *இதனுள் சாந்தி செய்வானுக்கு விருத்திக்காக* (TAS,i,p.1-14.)

சாந்திப் புறம் (பெ) பூசைக்காக விட்ட மானிய நிலம் (800) *இந்நிலத்திற் சாந்திப்புற நாற்கலமும்* (TAS,iii,203-05.)

சாந்திய் (பெ) கோயில் பூசை செய்வோர் (947) *திருப்பூணித்துறைப் பட்டாரகருடைய திருவாராதனைய் சாந்திய் தலைய்* (TAS,vi,52,p.64.)

சாந்தியடிகள் (பெ) கோயிற் பூசாரி (1000) *இத்திருவாராதனைக்கு காலம் பிழைக்கில் சாந்தியடிகள் குறவாகில் தண்டம் படுவிது* (TAS,ii,p.173-207.)

சாந்தி விருத்தி (பெ) கோயில் பூசாரியின் வாழ்க்கைச் செலவுக்குக் கொடுக்கும் பொருள் அல்லது நிலம் (1056) *ஆண்டு தோறும் கொடுக்கும் ...நெல் சாந்தி விருத்திக் கெழுநூற்று நாழியும் சித்திரை விழுவினாள் கொடுப்பது* (TAS,viii,p.40.)

சாந்தி விழா (பெ) திருவிழா (985) *பிராட்டியார் சாந்தி விழாவுக்கு மூட்டி இரண்டுகு...* (SII,xix.116.)

சாந்து (பெ) சந்தனக் கலவை (869) *நறும்பூ நூறு வடம் ஓரிலைச் சாந்தும்* (SII,vii,523.)

சாம்பல் (பெ) அடுப்புச் சாம்பல் (992) *கலம் சாம்பல் இடுவாள் ஒருத்திக்கு* (SII,xix,357.)

சாம்பல் இருவாள் (பெ) பாத்திரத்தை சாம்பலால் தேய்த்துக் கழுவுபவள் (992) *கலம் சாம்பல் இடுவாள் ஒருத்திக்கு நிசதம்* (SII,xix,357.)

சாம்பிராணி (பெ) ஒரு தூப, தீபப் பொருள் (890) *தீப மொன்றுக்குச் செம்பொன் சாம்பிராணி* (SII,v,572.)

சாமந்த கோபம் (பெ) குறுநிலத் தலைவரால் வரும் இடையூறு (1000) *சிரிகண்டன் அரைய கோபமுஞ் சாமந்த கோபமுந் நீக்கி ரக்ஷிசு ரக்ஷாபோகங் கொள்ள* (TAS,ii,p.173-207.)

சாமந்தர் (பெ) குறுநிலத் தலைவர் (1300) *வீரபாண்டிய சாமந்தரில் மலைமண்டலத்து நெடும்புறை நாட்டுச் சிக்கன் காசாநாந வழுதிநாட்டரையநேன்* (IPS,566.)

சாமநாயகம் (பெ) சதுரம் (1420) *தெற்கில் திருவீதியில் இவற்கு சாமநாயகமாகக் குடுத்த மனைக்குக் கிழக்கு மனை ஒன்றும்* (SII,viii,258.)

சாமம் (பெ) ஏழரை நாழிகை நேரம் (894) *இரண்டு விளக்கு நாயறு மட்டும் ஒரு சாமத்தளவும் எரிப்போமாகவும்* (SII,xii,108.)

சாமரை (பெ) கவரிமானின் மயிரால் அமைந்த விசிறி (871) *தவிசுஞ் சாமரையும்* (SII,iii,89.)

சாமரைக்கை (பெ) சாமரையின் கைப்பிடி (1009) *சாமரைக்கை ஒன்று பொன் அலகு நிலைப்படி பொன் முப்பதின் கழஞ்சும்* (SII,v,521.)

சாம விளக்கு (பெ) இரவில் எரியும் விளக்கு (1018) *திருமூலட்டானப்பிச்சி வச்ச சாம விளக்கு 1* (SII,vii,812.)

சாமாநிய (பெ) சம அளவுள்ள (753) *சாமாநிய இரண்டு பட்டிப் படியால்* (SII,ii,73.)

சாமுண்டா கும்பம் (பெ) துர்க்கையைக் குறிக்கும் குடம் (1024) *நெல் இருநாழி சாமுண்டா கும்பஞ் சூழப் புடவை ஒன்றுக் காசு* (EC,x,Kl.112a.)

சாமுண்டா ஹோமம் (பெ) துர்க்கைக்குச் செய்யப்படும் ஓமம் (1024) *சாமுண்டா ஹோமத்துக்கு ஸந்தி ஒன்றுக்கும்* (EC,x,Kl.112a.)

சாமுதாய கணக்கு (பெ) ஊர்ப்பொதுக் கணக்கு (1267) *கோயிலுக்கு நாயனார் நினைப்பிட் டருளின சாமுதாய கணக்கு காணியுடைய நெற்குப்பையுடையான்* (SII,v,658.)

சாமை (பெ) ஒரு புன்செய்த் தானியம் (1300) *புல்லு வரகு தினை சாமை இறுங்கு ஆவணக்குப் பருத்தி வழுதிலை பூசணி* (SII,vii,22.)

சாய (வி) வீழ (1125) *கொங்கணர் சாய* (SII,v,703.)

சார்த்தி (வி) ஒருவர் நலனுக்காக வேண்டி (800) *வீரகாடையனை சார்த்தி* (IPS,8.)

சார்த்திக் கொண்டு (வி) கணக்கு வைத்துக் கொண்டு (778) *விலைப்பொருளும் இறைப் பொருளுமாகச் சார்த்திக் கொண்டு* (SII,xiv,19.)

சார்த்தியருள (வி) அணிவிக்க (978) *பூங்குடியி லிரண்டேய் முக்கால் சார்த்தியருள பரிசட்டம் நாலணைக்கு ஓராட்டைக்கு நெல்லு* (SII,iii,151-151a.)

சார்த்துவிப்போம் (வி) அணிவிப்போம் (957) *ஓரிணைப்பரியட்டம் சார்த்துவிப்போமா னோம்* (SII,xix,15.)

சார்ங்கவர் (வி) அண்டியவர் (960) *இப்பூமி நாடுவாழுமவகளாக அவர்களுக்கு சார்ந்நவர்களாக பாட்டமாளப்பெறார்* (TAS,iii,p.159-69.)

சார்வு பட்டு (வி) உடன்கூடி (1175) *குல சேகரருடன் கூடநின்று உதவி செய்கை சூட்டி இவருடன் சார்வுபட்டு நின்றார்க்கு வரக்காட்டின ஓலைகளும்* (EI,xxii,14.)

சார (வி) அடைய (927) *பரமேச்வர ஸ்ரீ பாதமேய் சார* (SII,viii,607.)

சார (வி) ஒட்டி (1036) *வடக்கு சார கிழக்கு நோக்கிப் போன தெருவுக்கு* (SII,vii,141.)

சாரடை (பெ) மீன் பிடித்தல் வருவாய் (1300) *வாசல் வரி சாரடை குளவடை* (SII,iv,369.)

சாரா (வி) சென்றடையா (800) *பருந்து சாராவே* (EI,xiii,10.)

சாரிகை (பெ) ஒரு வரி (1276) *இறை தட்டார்ப்பாட்டம் ...மவிச்சுப்பாட்டம் சாரிகை மற்றும் எப்பேர்பட்ட வரிகளும்* (EC,x,Bp.68b.)

சால் (பெ) தண்ணீர் நிரப்பும் பெரிய பானை (1001) *கலசங்களும் மற்றுஞ் சால்களும்* (SII,xvii,222.)

சால் கரகம் (பெ) தண்ணீர் நிரப்பும் பானை (1376) *திருமஞ்சனக்குடம் சால்கரகம் எரிகரும்பு* (SII,vii,470.)

சால (பெ) நிரம்ப (833) *பெருங்கற் பிளந்து சாலப் புனல் வரக் கண்டு* (SII,xiv,44.)

சாலவும் (பெ) மிகவும் (922) *சாலவும் வ்ரித்$_3$த$_4$ரும் பா$_3$லரு மலாதார்* (SII,vi,295.)

சாலாபத்தியன் (பெ) சாலாபத்திய கோத்திரத்தைச் சேர்ந்தவன் (1012) *அதியராஜ மங்கலத்துச் சாலாபத்தியன் அனந்தமா தேவனும்* (SII,xvii,313.)

சாலாபோகம் (பெ) அன்ன சாலைக்குக் கொடுத்த நிலம் (866) *சாலாபோகமுந் தேவதானமும் சத்திமுகம் இன்றி விக்கப்பெறார்* (TAS,i,p.1-14.)

சாலாபோக மருசாதி (பெ) சாலாபோக மரபு (866) *சாத்தஞ் சடையன் கீழ்ப்பாதி சாலா போக மருசாதியினால்* (TAS,i,p.1-14.)

சாலி (பெ) ஒரு வகை நெல் (905) *சாலி விளைவயவளத்தால்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சாலிகர் அச்சத்தறி (பெ) ஒருவகைத் தறி: நெய்வோர் மீதான ஒரு வரி (1234) *நெல்லாயமுங் காசாயமுஞ் செக்குக்கடமை வாணிகர்பேரற்கடமை சாலிகர் அச்சத்தறி கோலியத்தறி இனவரி உள்ளிட்ட* (SII,vii,98.)

சாலிகைத் தறி (பெ) நெய்வோர் மீதான ஒரு வரி (1243) *முள்ளடிசின்னம் வேலிப்பயறு தாப்படிஅரிசி அச்சதறி சாலிகைத்தறி தூசகத்தறி பறைத்தறி செக்குக்கடமை* (SII,i,64.)

சாலியர் (பெ) ஒரு நெய்வோர் சாதி (1036) *வெள்ளாளரும் சங்கரப்பாடியாரும் சாலியரும் பட்டினவரும் உள்ளிட்ட குடிகளும்* (SII,iv,223.)

சாலை (பெ) சேர நாட்டில் பிராமண மாணவர்களுக்கு உணவும் வேதம் முதலிய வடமொழிக்கல்வியும் படைப்பயிற்சியும் கொடுக்கப்பட்ட கல்வி நிறுவனம் (866) *இச்சாலைக்குப் பெய்த கலத்தில் பவிழிய சரணத்தார் உடைய கலம் நாற்பது* (TAS,i,p.1-14.)

சாலை மண்டகம் (பெ) உணவுச் சாலை மண்டபம் (919) *தாமெடுப்பித்த சாலை மண்டகத்தேய்* (SII,iii,99.)

சாலையட்டுவான் (பெ) உணவுச் சாலையில் பரிமாறுபவன் (1076) *சாலையட்டுவானுக்கு நெல்லுப் பதக்கு* (SII,xiii,157.)

சாலையூட்டு (வி) அறச்சாலையில் உணவு அளித்தல் (985) *மாசி மகத்துக்கு சாலையூட்டாக சாத்தம் படாரி வைத்த பொன்* (IPS,77.)

சாலை வாசல் (பெ) கோயில் மண்டப வாசல் (1546) *எழாந்திருநாளில் சாலைவாசலில் அமுது செய்தருளும் சீடைப்படி 2ம்* (TDI,iii,127.)

சாவ (வி) உயிர்விட (1200) *நாயநான அழகியமணவாள மாராயநேந் இவற்கு உடன்வேளையாகச் சாவக் கடவேநாகவும்* (CHEN,iii,p.255.)**சாவடி** (பெ) (= உசாவடி) (1634) *காவேரியாற்றுக்குத் தெற்கு திருவாரூர்ச் சாவடி ஆவூர்ப் பற்று* (AVNM,7,p.77)

சாவதே (வி) இறப்பதே (1068) *பழியோடும் வாழ்வதில் சாவதே சால னந்றென்று ஏவ* (EI,xxi,38.)

சாவாக (வி) செல்லாததாக (985) *இக்கய்யெழுத்து இரண்டும் கண்டிலாமையால் கண்ட பொழுது சாவாக ஒட்டிக் குடுத்தேன்* (SII,xiii,64.)

சாவாது (பெ) (= சவ்வாது) ஒரு வாசனைப் பொருள் (1300) *சாந்து புழுகு சாவாது கொம்பு ஒன்றுக்குக் காசு பதினைஞ்சும்* (SII,viii,442.)

சாவாந்தி (பெ) ஒரு கோத்திரம் (973) *சாவாந்தி நாராயணன் மாறனேன்* (SII,xix,63.)

சாவா மூவா (வி) எண்ணிக்கை குறைபடாத (770) *சாவா மூவாப்பேர்....பன்னிரண்டரை* (SII,xiv,18.)

சாவாமூவா பேராடு (பெ) எண்ணிக்கையில் குறைபடாத ஆடுகள் (803) *நிசதி உழக்கு நெய் அட்ட வைச்ச சாவாமூவா பேராடு ஐம்பது* (SII,xiv,36.)

சாவாமை (வி) இறவாமல் (1004) *சாவாமூவாப் பேராடு தொண்ணூறு தொண்ணூறும் சாவாமைக் கெடாமை மேய்த்து* (SII,iv,854.)

சாவிநெல் (பெ) கருக்காய் நெல் (1023) *கல், பதர், செத்தல், சாவி நெல், முளை, மடி நீக்கி* (CHEN,xix,p.206-208.)

சாவில் (வி) இறந்து போனால் (1021) *இவன் சாவிலும் போகிலும் சிறை தளை சங்கிலி புகிலும்* (SII,iii,18.)

சாவு காணிக்கை (பெ) இறந்தவர்கள் பொருட்டு செலுத்தும் காணிக்கை (1698) *தனித்தெண்டம் சாவுகாணிக்கை வேண்டா எந்நும் சங்கேதப் பற்றிலும்* (TAS,vi,73.)

சாவேறு (பெ) அரசனுக்காக உயிர் துறத்தலை விரதமாகக் கொண்ட சேரநாட்டு வீரர் (1084) *கடல் மலைநாடுள்ள சாவேறெல்லாந் தநிவிசும்பேற* (SII,iii,69.)

சாவோலை (பெ) செல்லுபடியாகாத எழுத்துச் சான்று (961) *இவ்வோலை மேற்றோன்றப் படில் அவ்வோலை சாவோலையாக ஒட்டி* (SII,iii,175.)

சாளம் (பெ) குங்கிலிய மரம் (1012) *குணக்கு கால் பழுங்கக் காளா கருவும் கமழ் சந்தனமு தாளார் திரள்ச் சாளமு* (SII,vii,863.)

சாளம் (பெ) நிலப்பெயர் (870) *கீழைசாளம் நாமாவரையும்* (SII,xix,163.)

சாளை (பெ) கடல் மீன் வகை (1524) *மேற்படி துறையில் கடமை வகையில் மடி வலை ஒன்றும் வாளை வலை ஒன்றும் சாளை வலை ஒன்றும்* (TAS,vi,128.)

சாற்கரம் (பெ) (= சலத்தரம்?) (1526) *மாவடை மரவடை குளவடை சாரடை பற்றடை சாற்கரம் எக்கடமை* (IPS,744.)

சாற்ற (வி) அறிவிக்க (932) *நகர வாரிய கூட்டஞ் சாற்ற வாராவிட்டாரை வர கொண்ட தண்டப் பொன்* (SII,v,588.)

சாற்றி (வி) அறிவித்து (804) *பெருங்குறி சாற்றி* (SII,xiv,37.)

சாறு (பெ) இரசம் (984) *கருப்பு சாறு நானாழியும்* (SII,xix,341.)

சான்தியாயம் (பெ) விழா பொருட்டு வாங்கும் ஒரு சிறு வரி (1013) *அரிவாட் பதக்கு சான்தியாயம் மற்றும் சில்வரி* (IPS,90.)

சான்ற (வி) நிறைந்த (905) *கண்டமைத்துச் சீர் சான்ற* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சான்ற (வி) சிறந்த (1134) *தனிச் செங்கோல் கொள்கை சான்ற வறுசமையமும்* (SII,v,645.)

சான்றார் (பெ) பெரியோர்கள் (809) *பாப்பார் சான்றாரேய் காத்தூட்டுவதாக* (SII,xiv,40.)

சான்றான் மாட்டு மேனிப்பொன் (பெ) ஈழவர் மீதான ஒரு வரி (849) *சான்றான் மாட்டு மேனிப் பொன்னும்* (TAS,ii,p.67-68.)

சாஸ்த்ரர் (பெ) (= சாத்திரர்) (1068) *கிடைகளுக்குஞ் சாஸ்த்ரற்கும் ஆதுலசாலைக்கு வேண்டுங் கலமிடுங் குசவனுக்கு* (EI,xxi,38.)

சாஸ்தா (பெ) ஐயனார் (1054) *சாஸ்தா வேதியச்சாத்தன் கோயிலின்* (TAS,i,p.242.)

சாஸநம் (பெ) ஆவணம்: பட்டயம்: எழுத்துச்சான்று (867) *ஈச$_2$வரக்$_3$ருஹம் சாஸநத்தாலுடையோரும்* (SII,xii,56.)

சிக்கோல் (பெ) பெருக்கும் ஆள் (947) *திருவாராதனைப் சாந்தியும் தலையாய சிக்கோல் கடையாய்* (TAS,vi,52.)

சிகரம் (பெ) உச்சி, தலைப்பு (991) *பொன்னின் கொள்கை 1 நிறை ஆயிரத்தைஞ்ஞூற்றுக் கழஞ்சு இதில் சிகரத்திலும் நாலு முகத்திலுமாக ஏறின* (SII,xiii,144.)

சிகாமணி (பெ) முடியிலணியும் மணி (1113) *மூவுலகுக்குஞ் சிகாமணியாகிய த$_4$ளதா$_3$ பாத்ரதா$_4$து ஸ்வாமிதேவர்களுக்கு* (SII,iv,1396.)

சிகா$_2$மணி (பெ) தலை சிறந்தவன் (771) *மூவேந்த*

மங்கலப் பேரரைய னாகிய வைத்$_{3}$ய சி$_{0}$கா$_{2}$மணி மாறங்காரி (EI,xvii,6.)

சிகை (பெ) நிலுவை: எஞ்சியது (922) *நெல் பொன் கீழ்ச் சிகை கடவ என்று* (SII,vi,291.)

சிகை (பெ) வரிபாக்கி (1250) *இம்மண்டலத்துக்கு நெடுங் கோடிகாசு சிகை இழந்தருளி இந்நாட்டுக்கு இருபத்து நாலு கோடி காசு சிகை இழந்தருளி* (SII,xii,129.)

சிகை பட்டது (பெ) எஞ்சியது (1217) *நானாழி உரியும் நாள்தோறும் அளக்கவும் அளவாது சிகைப்பட்ட துண்டாகில்* (TMPL,vii,p.502-05.)

சிங்க நாயிறு (பெ) ஆவணி மாதம் (915) *சிங்க நாயிற்று* (KANDT,1968/222.)

சிங்க பாதம் (பெ) சிங்கத்தினடி போன்று அமைக்கப்படும் கால் (1014) *தாரைத் தாள் வட்டில் ஒன்று கருக் கிரண்டும் சிங்க பாத மிரண்டும் உட்பட* (SII,ii,i.)

சிங்கமுறை (பெ) விறகு கொடுக்கும் ஊழியம் (1515) *கடைக்கூட்டு பணம் 9 சிங்கமுறை பணம் 2 கைக்கோளர் பணம் 2* (TDI,iii,105.)

சிங்கமுறையான் (பெ) விறகுகொடுப்பவன் (1496) *ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு பணம் 4 சிங்க முறையானுக்கு பணம் 2 திருவேட்டுவகை பணம் 1* (TDI,ii,135.)

சிங்கவணை (பெ) சிங்காசனம் (1176) *பொன்னாசனஞ் சிங்கவணை பொலங் கற்பகப் பூஞ்சோலை முன்னேவல்* (SII,xvii,585.)

சிங்களம் (பெ) இலங்கை (921) *தேங்கமழ் பொழிற் குண்ணூரிலுஞ் சிங்களத்தும்* (SII,iii,206a)

சிங்காசநம் (பெ) அரசிருக்கை (1047) *ஒற்றை வெண்குடையும் கற்றை வெண்கவரியுஞ் சிங்காசநமும் வெங்களத்திழந்து* (SII,v,978.)

சிங்ஙம் (பெ) சிங்க ராசி (1000) *சிங்ஙத்தில் வியாழம் நின்ற கும்பஞாயற்று* (TAS,iii,p.173-174.)

சிச்சிலிக்கட்டு (பெ) ஒரு விற்பனைப் பொருள் (1541) *இரச குடுக்கை வெள்ளாட்டி தண்டிகைக்கொம்பு சல்லீசவரம் சிச்சிலிக் கட்டு இவைக்கெல்லாம் கூடின தீர்வையில்* (SII,vii,21.)

சிட்டப் பெருமான் (பெ) ஞானசம்பந்தர் (1120) *நட்டப்பெருமான் நாமஞானாங் குழைந்தளித்த சிட்டப்பெருமான் திருப்பதியம் முட்டாமை* (SII,iv,225.)

சிடுக்கு (பெ) ஒரு நகை (1014) *குடுத்தன முத்தின் சிடுக்கு ஓரணையில் கோத்த முத்து சப்பத்தியும்* (SII,ii,51.)

சித்தரமேழிப் பெரியநாடு (பெ) உழவர் மற்றும் நிலக்கிழார்களின் பெரிய கூட்டமைப்பு (1300) *உத்தமநிதி யுயர்பெருங் கீர்த்தி முத்தமிழ்மாலை முழுவது முணர்ந்த சித்தரமேழிப் பெரியநாட்டோம்* (SII,vii,129.)

சித்தாயம் (பெ) வரி (பொதுப்பெயர்) (1270) *கடமையும் இனவரி சித்தாயமும் மற்றும் எப்பேற்ப்பட்ட வரிகளும்* (SII,v,495; NI,n.61.)

சித்தாயம் (பெ) வருமானம் (1524) *நாற்பாற் கெல்லை வேண்டும் பயிரும் ஏற்றிக்கொண்டு இதில் உண்டான சித்தாயமுதலும் சகல ஆதாயமும்* (SII,v,1004.)

சித்திர கூடம் (பெ) அம்பலம் (900) *இவ்வூர்க் கணப்பெருமக்கள் எடுப்பித்த சித்திர கூடத்துக்குக் குடுத்தேன்* (SII,vi,354.)

சித்திர மண்டபம் (பெ) ஓலக்க மண்டபம் (986) *கச்சிப்பேட்டு கோயிலினுள்ளால் தெற்கில் சித்திர மண்டபத்தெழுந்தருளி இருக்க* (SII,iii,128.)

சித்திரமேழிப் பெரியநாடு (பெ) (பார்க்க-- சித்தரமேழிப் பெரியநாடு)

சித்திரமேழி விண்ணகர் (பெ) சித்திரமேழிப் பெரியநாட்டர் பேணிய திருமால் கோயில் (1421) *திருமேற்கோயில் எம்பெருமானான சித்திரமேழி விண்ணகர் எம்பெருமாநின் திருநாமத்துக்காணி* (AVNM,4,p.17)

சித்திரைத் திங்கள் (பெ) சித்திரை மாதம் (897) *சித்திரைத் திங்கட் சித்திரையும் பிரட்டாதி ஓணமும்* (SII,xiii,317.)

சித்திரைத் திருவிழா (பெ) சித்திரை மாதத்தில் நடக்கும் விழா (920) *பெருமாநடிகள் சித்திரைத்திருவிழா* (SII,vii,927.)

சித்திரைத் திருவோணம் (பெ) சித்திரை மாதத்தில் திருவோண நட்சத்திர நாள் (887) *ஆட்டாண்டு தோறும் சித்திரைத் திருவோணம் பெருவிழாவாக* (SII,vii,421.)

சித்திரை பெருந் திருவிழா (பெ) சித்திரை மாதத்தில் பல நாள் நடைபெறும் விழா (1009) *சித்திரை பெருந் திருவிழாவுக்குக் காசு முப்பத்திரண்டும் ஆக* (CHEN,xxi,p.425-28.)

சித்திரை விடு (பெ) (= சித்திரை விஷு) (934) *சித்திரை விடுத்தோறுங் குடிநீர் குடிச் சாந்தி* (TAS,viii,p.43-45; EI,xxviii,37.)

சித்திரை விஷு (பெ) மேஷராசியில் சூரியன் நுழையும் காலம் (869) *ஐப்பிகை விஷுவும் சித்திரை விஷுவும் திருமேனி யாட* (SII,vii,525.)

சித்ரபா$_{4}$நு (பெ) அறுபது ஆண்டுகளில் ஒன்று (1222) *ஸகரையாண்டு 1144 சென்ற சித்ரபா$_{4}$நு ஸம்வத்ஸரத்து* (EC,iii,nj.96.)

சித்ரமேழி (பெ) அழகான கலப்பை; உழவர் கூட்டத்தின் சின்னம் (1300) *செங்கோலே முன்னாகவுஞ் சித்(த்)ரமேழியே தெய்வமாகவுஞ்* (SII,vii,129.)

சித்ரமேளிப் பெருக்காளர் (பெ) (= சித்தரமேழிப் பெரியநாடு) (1057) *சித்திரமேழி தம்மம் இனிது நடாத்துகின்ற ஸ்ரீ ராஜேந்த்ர சித்ரமேளிப் பெருக்காளரோம்* (Tamarai, p.54-57.)

சிதம்பு (பெ) இழிவான செயல் (1218) *காலி பிடித்தல் மற்றுஞ் சில சிதம்புகள் செய்தாருண்டாகில்* (IPS,176.)

சிதல் (பெ) கறையான் (1106) *கைத்தடிஓலை வைச்ச விடத்தில் சிதலரிக்க அந்தரப்பட்டமையில்* (CHEN,xii,p.190-91.)

சிதலை (பெ) ஒரு பூச்செடி (1120) *மல்லிகை கிஞ்சுக மஞ்சரி பாதரி புன்னை பாரரையார மகிழ சிதலை மௌவல் செருந்தி* (EC,x,Sd.9.)

சிதறி (வி) செலுத்தி (921) *செந்நிலத்தில் சேரத் திண் சிலைவாய்க் கணை சிதறிஉம்* (SII,iii,206a.)

சிதாரம் (வி) (= செதாரம்) (1044) *இத்தேவர் சிதாரத்தே விட்ட சாவாமூவாப் பெரா....* (SII,xvii,306.)

சிதாரி (பெ) தூபப் பொருளாகப் பயன்படும் ஒரு செடி (850) *திருமெய்ப்பூச்சுக்கும் சிதாரிக்கும்* (SII,iii,43.)

சிதாரிப்புறம் (பெ) சிதாரித் தூபத்துக்காக விட்ட நிலம் (870) *இத்தே$_{3}$வர் நிலத்து சிதாரிப் புறத்தின்* (SII,xix,163.)

சிதிலம் (பெ) அழிவு (887) *இத$_{4}$ம்மத்து சிதிலஞ் செய்தான்* (SII,vi,348.)

சிதைக்கை (வி) சிதைந்து போனமை (1220) *இறைஇலி ஆக இட்ட நிலங்களில் சாதனங்கள் சிதைக்கையாலே* (SII,viii,207.)

சிதைத்த (வி) அழித்த (939) *மதுரை சிதைத்த கோப்பராந்தகற்கு* (SII,xvii,501.)

சிதைந்து (வி) அழித்து (1169) *மீனமுஞ் சிலையுஞ் சிதைத்து வான்னுயர் பொண்ணோடு* (SII,vii,1038.)

சிந்தாமணி (பெ) விரும்பிய அனைத்துங் கொடுக்கவல்ல தெய்வமணி (1012) *நிலத்தவர் நினைத்த தெற்றிக் கண்ணுஞ் சிந்தாமணியும் போல* (SII,vii,863.)

சிந்தியார் (வி) எண்ணிப்பாரார் (800) *அதனாற்ச் சிந்தியார் போலும்* (EI,xiii,10.)

சிந்தை (பெ) மனம் (833) *என்றதன் சிந்தையினானிய விங்கட்கு* (SII,xiv,44.)

சிந்தை செய்து (வி) தொழுது (1160) *சேடார் பொழித் தினைமானகர் ஈசரைச் சிந்தை செய்து* (SII,xii,262.)

சிந்தையான் (பெ) உள்ளத்தையுடையவன் (1100) *தீதிலருள்சுரக்குஞ் சிந்தையானாதி* (SII,iv,1405.)

சிங்ஙம் (பெ) சிறு அளவு (983) *அரையே*

நான்குமாச் சிந்நமும் (SII,xix,322.)

சிமையம் (பெ) உச்சி (905) பொன்னிமையச் சிமையத்தில் (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சிரச்சக்கரம் (பெ) ஒரு நகை (1204) சிரச்சக்கரம் 1னால் 9மாறி பொன் இருகழஞ்சு (SII,iii,211.)

சிராவணை (பெ) பங்கு (804) முக்கால் சிராவணையும் புகவும் பணிக்கவும் பெறாதாகவும் (SII,xiv,37.)

சிரி வயிண்ணவர் (பெ) திருமால் பக்தர் (1000) இருபத்தைஞ்சு பிராமண சிரி வயிண்ணவ ரமிர்து செய்விது (TAS,ii,p.173-207.)

சிரீதநம் (பெ) சீதனம்: பெற்றோர் மகளுக்குக் கொடுக்கும் சொத்து (921) வடஉலகு வாக்கால் செய் னான் சிரீதநம் பெற்று உடைய அரைக்காலும் (SII,viii,604.)

சிரீமுகம் (பெ) (அரச) ஆணை கொண்ட ஓலை (908) சீவல்லுவ தேவர் சிரீமுகம் குடுத்தபடி (EI,xxviii,17a.)

சிரை தேங்காய் (பெ) மட்டை உரித்த தேங்காய் (1140) சிரை தேங்காய் 1 சற்கரை நிறை 2 பலம் (SII,vii,485.)

சிரைப்பித்து (வி) மொட்டையடித்து (1044) பெண்ணுடை உடுத்தி ஒருவனை அஞ்சுசிகை பட சிரைப்பித்து (SII,v,465.)

சில் குடிமை (பெ) ஒரு குடிமை வரி (1032) மாத்தால் இரண்டு காசு சில் குடிமைக்கு இடுவதாகவும் (TAS,vi,8.)

சில்ப தொழில் (பெ) சிற்ப வேலை (1200) சில்ப தொழில்லும் தேர்(ர்) பண்ணும் இலக்கணமும் ஆகிற இந்த விஜைகள்ளாலே (SII,xvii,603.)

சில்பாசாரியக் காணி (பெ) சிற்பத் தொழில் செய்யும் உரிமை: அதற்காக விடப்பட்ட நிலம் (1174) இவ்வூர் சில்பாசாரியக்காணியுடைய ஸந்துயந் (SII,vi,438.)

சில்லிறை (பெ) ஒரு வரி (961) இந்நிலத்துக்குச் சில்லிறை சோறு மாடும் (SII,vii,64.)

சில்வரி (பெ) சிறிய வரிகள் (1013) மற்றும் சில்வரி வெட்டி எச்சோறு உள்ளிட்ட ஏதொரு இறையுங் காட்ட (IPS,90.)

சில் அந்தராயம் (பெ) சிறு உள்வரிகள் (1106) இந்நிலத்துக்கு வேலிக்காசு உட்பட்ட சில்லந்தராயம் காட்டவும் (SII,v,1381.)

சிலந்தி (பெ) கோமேதக வகை (1232) பவழம் 291 மாந்தொட்டுப் பொத்தி 30 சிலந்தி 1 (SII,viii,103.)

சிலம்பு (பெ) எதிரொலி (833) மணியரண் மலைச் சிலம்பன்ன (SII,xiv,44.)

சிலவர் (பெ) சிலர் (1213) பறப்புனாட்டு இளவெள்ளாளரிலே சிலவர் பக்கலும் (AVNM,7,p.52)

சிலவறுக்கும் (வி) செலவுக்குப் பயன்படும் (1263) கோயில் பூசை மிகுதியாய்ச் சிலவறுக்கும் பொந் நூற்று ஒன்றும் (IPS,353.)

சிலவு (பெ) செலவு (1001) நிவந்தங் கடவார்க்கு காசு கல்லால் சிலவான பொன் (SII,xxvii,222.)

சிலவு (பெ) செலவுக் கணக்கு (973) இப்பயறும் நெல்லும் காசும் முதலே சிலவு காட்டுக வென்றுந் தன்னை (SII,xix,63.)

சிலவு (பெ) செலுத்துவது (803) இதனுக்கு பொருட் சிலவுமறக் கொண்டோம் (SII,vi,365.)

சிலவு (பெ) பணச் செலவு (912) த்ரவ்ய வ்ருத்$_3$தி$_4$க்குச் செலவாக (SII,xix,121.)

சிலாமுறி (பெ) கல்வெட்டு ஆவணம் (1604) திருவாய் மொழிந்து அருளின படிக்கு சிலாமுறி வடகரை விந்தனூர் (TAS,v,p.193.)

சிலாலேகை (பெ) கல்வெட்டு (850) திருமண்டப மிழிச்சியெடுப்பதற்கு முன்புள்ள சிலாலேகைப்படி (SII,iii,43.)

சிலை (பெ) சேரர் சின்னமான வில் (771) அறை கடல் வளாகம் பொதுமொழி அகற்றிச் சிலைஉம் புலிஉம் (EI,xvii,16.)

சிலை (பெ) வில் (700) சரமிக்க வெஞ்சிலையான் (SII,xii,10-11.)

சிலைச்சு (வி) முழங்கி (905) சிலைச் செதிர்ந்த மன்மாயமா மிகுத்தவர் (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சிலைத்தளம் (பெ) கல்லால் ஆகிய தள வரிசை (1279) மலைத்தளம் பறித்தும் மன்னவர் சுமந்தச் சிலைத்தளங் கொண்டு செய்த (SII,viii,69.)

சிலை மதில் (பெ) கல்லாலான சுவர் (1044) சுலவும் சிலைமதில் சூழ் மணிமாடச் சிறையூராதிவனே (TMPL,xviii,p.93.)

சிவக்க (வி) செந்நிறம் அடைய (1250) சேவூரினிற் திருக்கண் சிவக்க (SII,xii,125.)

சிவ தர்ம்மம் (பெ) சிவன் கோயில் அறங்கள் (999) திருவாணை மறுத்தார் படுந் தீயமுந் பட்டு இத்தர்ம்மத்தைச் சிவதர்ம்மத்தை இறக்கினாரு மாவர் (TAS,iv,p.127-30.)

சிவந்த (வி) சிவப்பு நிறமாயிற்று (800) தீய் நாடவாய் சிவந்த மின்னாடு (EI,xiii,10.)

சிவந்த நீர் (பெ) ஒரு முத்து வகை (1014) முத்து வட்டமு சப்பத்தியுஞ் சக்கத்தும் குளுர்ந்தநீரும் சிவந்தநீரும் (SII,ii,3.)

சிவப்புச் சிலை (பெ) சிவப்புக்கல்: கெம்பு (1014) தாணித்த சிவப்புச் சிலையுஞ் சரடு நீக்கி (SII,ii,51.)

சிவ பண்டாரி (பெ) சிவாலயக் கருவூலத்தை நிர்வகிப்பவர் (997) சிவபண்டாரிகள் வசமும் ஆட்டாண்டு தோறு மறவளந்து (SII,i,146.)

சிவப்$_3$ராஹ்மணர் (பெ) சிவன் கோயில் பூசை செய்யும் பிராமணர் (1132) சிவப்$_3$ராஹ்மணர்க்கு ஸமைந்து அடைவு முதலிகள் பா$_4$ரத்$_3$வாசன் (SII,xiv,230.)

சிவமுத்தி (பெ) மோட்சநிலை (1253) பிக்ஷா மட ஸந்தானத்து இராவளர் பசுபதி தேவர் சி$_0$ஷ்யரில் சி$_0$வமுத்தி காட்டினார்க்கும் (SII,v,421.)

சிவயோகி$_3$ (பெ) சிவனடியார் (955) சிவயோகி$_3$கள் மூவருக்கும் ப்$_3$ராஹ்மணர் இருவர்க்கும் (SII,xiii,162.)

சிவயோகி$_3$ ப்$_3$ராஹ்மணர் (பெ) சைவத் துறவிகளான பிராமணர் (992) சிவயோகி$_3$ ப்$_3$ராஹ்மணர் முபதின்மரும் (SII,xix,357.)

சிவராத்திரைப்படி (பெ) சிவராத்திரியன்று செய்ய வேண்டிய செலவு (1217) இன்னாயனார்க்கு மாசிமாதஞ் சிவராத்திரைப் படிக்கு அளக்கு (SII,xvii,178.)

சிவலோக ப்ரார்த்தம் சிவலோகம் அடைதல் (1100) மூவேந்தவேளானுக்கு சிவலோக ப்ரார்த்தமாக சந்திராதித்தவற் நீரோடட்டிக் குடுத்த என் பூமி (SII,viii,460.)

சிவலோகம் (பெ) சிவன் கோயில் (1001) திருவக்கரை திருக்கற்றளி சிவலோகம் உடைய பரமஸ்வாமிக்கு (SII,xvii,222.)

சிவிகை (பெ) பல்லக்கு (796) சிவிகை மேனின்று மிழிந்து (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

சிவிகையார் (பெ) பல்லக்குச் சுமப்பவர் (986) தே$_3$வர் பள்ளிச்சிவிகை காவுஞ் சிவிகை யார்க்கும் சிறப்பு வந்த உவச்சர்க்கும் (SII,iii,128.)

சிற்பம் (பெ) சிலைவடிக்கும் தொழில் (905) கற்பமைந்த கரதலத்துச் சிற்ப மாத்தாண்டற்கும் (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சிற்றப்பன் (பெ) தந்தையின் தம்பி (1014) சிற்றப்பன் மகன் சோலை குரவநும் (SII,ii,63&94.)

சிற்றம்பலத்தான் (பெ) தில்லை நடராசர் (1120) தெள்ளுபுநற தில்லைச் சிற்றம்பலத்தானுக்கு தள்ளி எதிரம்பலந் (SII,iv,225.)

சிற்றவை (பெ) சிறியதாய்: தாயின் தங்கை அல்லது சிற்றப்பாவின் மனைவி (921) சிற்றவைப் பேறவை மக்களையும் (ARASI,1904-05,p.131.)

சிற்றாயம் (பெ) (= சித்தாயம்): முக்கிய வரி (1441) இன்னான்கெல்லைக்குட்பட்ட நிலத்தில் ஏறும் உழவுகுடி கைவினைக்குடி காசாயக்குடியிற் கொள்ளும் சிற்றாயம் காணிக்கை கட்டாயம் சுங்கம் (SII,v,257.)

சிற்றிராசி பணம் (பெ) ஒரு நாணயம் (1400) யிற்றை நாள் பற்றின சிற்றிராசி பணம் 11ம் குளிகை பணம் 36 (IPS,644.)

சிற்றிறை (பெ) சிறுவரிகள் (969) *நிலம் முற்றும் காராண்கிழமை உட்பட சிற்றிறை சிறு பங்கும்* (SII,xiii,236.)

சிற்றூர் நடை (பெ) ஒரு வரி (973) *திருச்செங் குன்றூர்ப் பட்டாரகர்க்கு கீழீடாய்ச் சிற்றூர் நடையோடு கூட நானாழியுச் செய்த திருவமுதி* (EI,ix,32; TAS,iv,p.1-11.)

சிற்றூர்நடைத் தண்டம் (பெ) சிற்றூர்க் கோயிலால் நிர்ணயிக்கப்படும் அபராதம் (973) *வெவ்வேற்று வகைச் சிற்றூர்நடைத் தண்டம் இருநூற்றுக் கழைஞ்சு பொன் தண்டப் படக் கடவியன்* (EI,ix,32; TAS,iv,p.1-11.)

சிற்றூராட்சி (பெ) ஊராட்சிச் செலவுக்காக வசூலிக்கப்படும் ஒரு வரி (912) *இந்நந்தா$_3$ விளக்குக்கு அவ்வாண்டு சிற்றூராட்சி கொள்வானையே கொண்டு* (SII,xix,121.)

சிறக்க (வி) விளங்க (796) *கா$_2$டகுல சிறக்க தோன்றிய* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

சிறக்கும் (வி) மேம்படும் (833) *புனன் மல்கி நாட்டவர்க்கு வளஞ்சிறக்கும்* (SII,xiv,44.)

சிறகு (பெ) பக்கம் (877) *மாதணி மங்கலவீதி தென் சிறகில் கிழக்கடைய* (SII,vi,290.)

சிறப்பமுது (பெ) சிறப்பாகப் படைக்கும் உணவு (1097) *மஹாதே$_3$வற்கு அயநவிஷுச் சங்கராந்தி ஆட்டு 4க்கும் சிறப்பமுது செய்விக்கவும்* (SII,xvii,625.)

சிறப்பு (பெ) திருவிழா போன்ற சிறப்பு நிகழ்ச்சி (986) *தே$_3$வர் பள்ளிச் சிவிகை காவுஞ் சிவிகையார்க்கும் சிறப்பு வந்த உவச்சர்க்கும்* (SII,iii,128.)

சிறப்பு (பெ) பெருமைப்படுத்தல் (1150) *குலத்தின் பேரிட்டுப் பெருஞ் சிறப்பு செய்தமையில் நாங்களும் நம் பெருமக்களுக்குச் சிறப்புச் செய்ய* (AVNM,9,p.33-34)

சிறப்பு (பெ) மேன்மை (833) *சிரீ வல்லவனின் அருளாற் பல் சிறப்பொடு* (SII,xiv,44.)

சிறப்புத் திருநாள் (பெ) முக்கியமான விழா நாட்கள் (1140) *ஸந்திவிளக்கு 12க்கு எண்ணை உழக்கு சிறப்புத் திருநாள் திருப்புதியி தமுதுக்கு* (SII,vii,485.)

சிறப்புத் திருவமிர்து (பெ) விழாக்காலத்துச் செய்யும் படையல் (1000) *சிறப்புத் திருவமிது பத்தெட்டுக் குத்தல் நானாழியாக* (SII,viii,647.)

சிறிய தாதை (பெ) தந்தையின் தம்பி (1047) *கருங்கலி கடிந்து தந் சிறிய தாதையையும் திருத் தமையனையும்* (SII,v,978.)

சிறிய தாய் (பெ) தாயாரின் தங்கை; தந்தையின் இளைய மனைவி (1267) *இன்னாயநார்க்கு எங்கள் சிறியதாய் இ.....ளை வைத்த சந்தி விளக்கு 1* (SII,xii,225.)

சிறுகட்டில் (பெ) சிறிய இருக்கை (985) *வெண் சாமரை ஒன்று பொந் 5 வெள்ளி... சிறுகட்டில் 1.* (SII,xix,464.)

சிறுகடுகு (பெ) கடுகு (887) *சீரக அமிது சிறு கடுகமிது* (SII,xiv,16a.)

சிறுகா (வி) குறையாத (905) *பொன் சிறுகா மணிமாடப் புரந்தரனது* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சிறுகாட்டி (பெ) அதிகாலை (892) *நொந்தா விளக்கும் சிறுகாட்டி ஒரு திருவமிர்துக்குமாக* (SII,iv,531.)

சிறுகாலை (பெ) அதிகாலை (875) *சிறுகாலை ஒரு திருவமிர்துங் காட்டி* (SII,vi,347.)

சிறுகாலை ஸந்தி$_4$ (பெ) சூரிய உதைய காலத்தில் செய்யும் கோயில் பூசை (985) *சிறுகாலை செய்யும் கோயில் பூசை சிறு காலை அந்தி$_4$யில் தீ$_3$பமாலை 16 விளக்கேற்ற* (SII,xix,210.)

சிறு கிழங்கு (பெ) ஒருவகைக் கிழங்கு (1400) *கருணை சிறு கிழங்குள்ளுட்ட வான் பயிர்களும்* (SII,vii,936.)

சிறு குடி (பெ) வசதியில் சிறிய குடும்பம் (975) *..டிமனைய்ரைக்காலும் சிறுகுடி மஞ்சாடியும் திங்கட் சோறும்* (SII,xvii,260.)

சிறுகுடி வாரம் (பெ) மொத்த நில வருவாயில் உழுகுடியின் பங்கு(?) (953) *இஞ்ஞிலத்தி லென் சிறு குடிவாரத்திலே இத்தேவர்*

கொள்வதாகவும் (SII,xiii,74.)

சிறு சுங்கம் (பெ) ஒரு வரி (1073) *சிறுசுங்கத் துக்கு ஆசுவிமக்கள் ஆசுவமுண்ணும் பேரால் ஒரு காசிடுவதாகவும்* (EC,x,Mb.49a.)

சிறு செண்பகம் (பெ) பூச்செடி வகை (911) *பெருஞ் செண்பகமும் சிறு செண்பகமும்* (SII,viii,640.)

சிறுதநம் (பெ) சொந்தப் பயன்பாட்டுக்காக சேமித்த பொருள்(?) (1014) *ராஜராஜதேவர் சிறுதநத்துக் குடுத்த பொன்னின் தளிகை* (SII,ii,i.)

சிறுதநம் (பெ) சோழ அரசாங்கத்தில் ஒரு படைப் பிரிவு (1017) *சிறுதநத்து எதிரிலிசோழ தெரிந்த வலங்கை வேளைக்காறரில்* (SII,xvii,315.); (1009) *ஸ்ரீ ராஜராஜதேவர் சிறுதனத்து சிங்களாந்தக தெரிஞ்ச குதிரைச் சேவகரில்* (SII,v,1411.)

சிறுதநம் (பெ) வேளைக்காறப் படையில் ஒரு பிரிவு (1113) *வலங்கை இடங்கை பரிவாரக் கொந்தம் சிறுதநம் பிள்ளைகள் தநம்....உள்ளிட்ட திருவேளைக்காறரோம்* (EI,xviii,38.)

சிறு நிலைவிளக்கு (பெ) சிறிய குத்து விளக்கு (1132) *தன்னை அணைஞ்சு நிற்க வாத்த சிறு நிலைவிளக்கும் இது எரிக்கைக்கு வைத்த ஆடு ஐம்பதும்* (SII,xiv,230.)

சிறு பங்கு (பெ) ஒரு வரி (969) *காராண்கிழமை உட்பட சிற்றிறை சிறு பங்கும் இவனேய் பெறுவதாக* (SII,xiii,236.)

சிறுபயற்று பருப்பு (பெ) பாசிப்பருப்பு (989) *கும்மாய அமுதுக்குச் சிறுபயற்று பருப்பு னாழிக்கு னெல்லு இருநாழியும்* (SII,viii,521.)

சிறுபயறு (பெ) பாசிப் பயறு (887) *நான்கு போதைக்குச் சிறுபயற்றுப் பருப்பு இரு நாழி* (SII,xiv,16a.)

சிறுபாடு (பெ) மனத்துக்குப் பிடித்த பொருள் (966) *அவர் ஸ்ரீமதா$_3$ஹத்துகுச் சிறுபாடு கல்லோடு குழிக்குத் தென்மேக்கு* (SII,ii,212a&b.)

சிறு முத்து (பெ) முத்தின் வகை (1232) *இவையிற்றில் ஆவேசித்து கட்டின கோமளம் 28 வயிரம் 1106 பருமுத்து 790 சிறுமுத்து 360* (SII,viii,103.)

சிறுமுறிகாசு (பெ) ஒரு வரி (1239) *வெள்ளாளர் பக்கல் நியோக மெழுதி கொள்ளக் கடவதல்லாதாகவும் சிறுமுறிகாசு இடக் கடவாரல்லவாகவும்* (SII,vi,48.)

சிறுமேனி (பெ) சிறிய உருவம் (905) *சிறுமேனி உயர் தவத்தோன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சிறுவன் (பெ) மகன் (905) *மாயானம்பி பட்டற்குச் சிறுவனாகிய* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சிறை (பெ) அணைக்கட்டு (905) *பெருந் நல்லூர்ச் சிறைக்கும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சிறைக் கோட்டம் (பெ) சிறைச் சாலை (1243) *சீயன் பொன்னிநாடனும் உரிமையும் அமைச்சரும் இருப்பதுன் சிறைக்கோட்டம்* (EI,xxii,27.)

சிறைகரை செஞ்ஞீர்வெட்டி (பெ) (= செந்நீர் வெட்டி) (1232) *கடமை அந்தராயமும் வினியோகமும் மாவிலீஞ்ச பொருள்களு சிறைகரை செஞ்ஞீர்வெட்டியும் மற்றும் எப்பட்ட இறை இந்நிலத்தால் வந்தன* (SII,viii,447.)

சிறைசெய்து (வி) (1150) *வேணாடுடையார் பிடித்துச் சிறைசெய்து ஒண்பாதுகைத் தளை இழுப்பின் போது* (AVNM,9,p.33-34)

சிறைத்த (வி) சீவிய (887) *மேற்றோல் சிறைத்த பற்று மஞ்சள்* (SII,xiv,16a.)

சிறை பிடித்தது (வி) சிறையில் அடைத்தது (1240) *வல்லாளதேவர் இறைகொண்ட நாளில் கந்நடியர் எங்களைச் சிறை பிடித்ததில்* (IPS,548.)

சிறை மாடு (பெ) பிடித்து அடைக்கப்பட்ட கால்நடை (1419) *அங்கும் இங்கும் நால்பது நூறு மனித்தரும் பட்டு சிறைமாடும் பிடித்து ஆறாப்பகையாக கிடக்கையில்* (IPS,698.)

சிறை மீட்கை (பெ) விடுதலை பெறல் (1240) *கன்னடியர் எங்களைச் சிறை பிடித்ததில்...ஸ்ரீ பண்டாரதில் நாங்கள் திருவாபரணங்களை அறவிட்டுக்குடுத்து சிறை மீட்கையில்* (IPS,548.)

சிறை வினியோகம் (பெ) ஒரு வரி (1262) *கடைக்கூட்டிலக்கை சிறைவினியோகம் வாசலொட்டு காத்திகைப் பச்சை* (SII,viii,753.)

சிறை அச்சு (பெ) ஒரு வரி (1265) *கீற்றுவரி வாசல்வினியோகம் சிறைஅச்சு இலாஞ்சினைப்பேறு ஆனைச்சாலை* (SII,xvii,127.)

சின்னங்கள் (பெ) பொருள்கள் அல்லது உருப்படிகள் (1014) *குடுத்த பொன்னின் சின்னங்கள் ஆடவல்லான் என்னும் கல்லால் நிறையெடுத்து* (SII,ii,1.)

சின்னபின்னம் (பெ) உருத்தெரியாமை (1067) *சாமந்தரைச் சின்னபின்னஞ் செய்து* (SII,iii,20.)

சின்னம் (பெ) சிறு அளவு; சில்லறை (956) *அஞ்நூற்றுச் சின்னம் பாத்தியும்* (SII,viii,612.)

சின்னம் (பெ) அரசச் சின்னங்கள் (1450) *பதினெண் பாஷைப் பார்த்திபரனை வருந் திறையுஞ் சின்னமு முறை முறை குணர்ந்து குறைபல விரந்து* (TAS,i,p.89-94.)

சினம் (பெ) கோபம் (771) *செருவென் றவர் சினந்தவிர்த்து* (EI,xvii,16.)

சினை (பெ) பூமொட்டு (771) *நளிர் சினை மிசை வண்டலம்ப* (EI,xvii,16.)

சினைப்பசு (பெ) கருவுற்ற பசு (1161) *பால்பசு பத்தும் சினைப்பசுப் பன்னிரண்டும் வறள்பசு ஆறும்* (SII,iv,822.)

சீ

சீகத்தம் (பெ) கை (1230) *ஆதி தண்டேச்$_{0}$வர தேவர் சீகத்தத்திலே நீர்வாத்துக் குடுத்தேன்* (IPS,291.)

சீகார்யம் (பெ) (= ஸ்ரீகாரியம்); அரசு சார்பாக கோயிலை நிர்வகித்தல் (993) *கற்பூர விலைக்கு ராஜராஜ ப்$_{3}$ரஹ்மமாராயர் சீ கார்யத்து இத்தேவர் பண்டாரத்து வைத்த காசு 30* (SII,xiii,182.)

சீகாரியப் பேறு (பெ) (= ஸ்ரீகாரியப் பேறு) (1250) *அரிக் காசும் சீகாரியப் பேறும்...படப் பண்டாரத்தில்* (IPS,335.)

சீகாரியம் (பெ) கோயிலை நிர்வகித்தல் (957) *தேவர் பண்டாரத்தேய் அன்று சீகாரியஞ் செய்யும் தேவர் கர்மிகளோம்* (SII,xix,15.)

சீட்டி (பெ) (1711) *நீக்கியுள்ள பாட்டம் இந்த பேர் 3ம் கூடி சீட்டி குடுத்து முதல் வேண்டி* (TAS,viii,p.30-32.)

சீட்டி (பெ) தீட்டு; ஆவணம் (1678) *நந்தவநமும் பயிற்செய்து நெல்வகைக்கு சீட்டிக்கு தன்மபத்தர் முன்னெழுத்தும்* (TAS,vi,78.)

சீடன் (பெ) மாணாக்கன் (900) *ஸ்ரீ குணசாகர படாரர் சீடன்* (SII,v,310.)

சீடை (பெ) ஒரு பணியாரம் (1517) *திருபோநகம் 30 மண்டபத்தில் சீடைப்படி 20க்கும்* (TDI,iii,121.)

சீதனம் (பெ) மனைவியின் சொத்து (1046) *எங்கள் பங்குகள் விற்குமிடத்தும் ஒற்றி வைக்கு மிடத்தும் சீதனங் கு...மிடத்தும்* (SII,xiv,190.)

சீபலி (பெ) (= ஸ்ரீ பலி) விக்கிரகங்களுக்கு நாள்தோறும் வைக்கும் உணவு (976) *சீ பலிக்கு கைச்செக்குக்கு எண்ணை யாட்டுவதாகவும்* (SII,xix,169.)

சீபீட வாரி (பெ) (= பீடிலிகை வாரி); உண்டியல் (1213) *திருக்கோயிலிலும் சீபீட வாரியிலும் மற்றும் எப்பேறப்பட்ட பல்லாயங்களிலும்* (SII,viii,148.)

சீமை (பெ) (= சீர்மை); நாயக்கரின் ஆட்சிப்பகுதி (1567) *இராயப்பரசர் திருவண்ணாமலைச் சீமை குத்தகை கட்டிக்கொண்ட னாளிலே* (SII,viii,158)

சீமை (பெ) எல்லை (1250) *ஏரி....வாய்க்குத் தெற்குஞ் சீமையாக விட்டுத் திருப்படி மாற்றுக்கும்* (EC,x,Bp.37c.)

சீயகாய் (பெ) எண்ணெய்க் குளியலுக்குத் தேய்க்கும் காய் (1545) *நெல்லெண்ணை மிடா 2 சீயகாய் வீசை 3ம்* (TDI,v,53.)

சீர் (பெ) நேர்மை (1150) *இப்பட்டினத்தில் பணமுண்ணாதிதாகவும் வீருஞ் சீருமாட்டுத்தாவும்* (AVNM,9,p.33-34)

சீர் (பெ) புகழ் (771) *சீரோடு திருவளரச் செய்தார்* (EI,xvii,16.)

சீர் கெழு (வி) புகழ் பொருந்திய (862) *சீர்கெழு செங்கோற் சிரீவல்லுவனுக் கென்றி* (SII,xiv,45.)

சீர்த்தனிச் செல்வி (பெ) இலக்குமி (1018) *போர்ச்செயப் பாவையும் சீர்த்தனிச் செல்வியுந்* (SII,iii,205.)

சீர்த்தி (பெ) புகழ் (905) *மாமதலை உலவு சீர்த்தி யோகே$_{3}$ச்$_{0}$வரப$_{4}$ட்டற்கு* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சீர்மை (பெ) விஜயநகர அரசில் நாயக்கர் மற்றும் குறுநிலத்தலைவரின் ஆட்சிப்பகுதி (1465) *மலைநின்றான் திருனந்தவனத்துக்குக் கடவ கொப்பய்யன் சீர்மையாக கட்டளை பண்ணுகையில்* (TDI,ii,23.); (1463) *தஞ்சாஊற் சீர்மை மணற்பிடினாடு* (SII,iv,506.)

சீரக அமிது (பெ) சீரக உணவு (887) *மஞ்சளமிது சீரக அமிது* (SII,xiv,16a.)

சீரழித்தோம் (வி) ஒழுங்கைக் கெடச் செய்தோம் (1107) *சீரழித்தோம் க$_{3}$ங்கை$_{3}$க் கரையில் ஆயிரங்குரால் பசுக் கொன்ற...* (SII,vi,201.)

சீரார் (வி) சிறப்புப் பொருந்திய (991) *வைத்துகந்தாள் சீரார் மழவர் கோந் பெற்ற நஞ்செம்பியந் மாதேவியே* (SII,xiii,144.)

சீராவி (பெ) நிலையான உயிர் (905) *வாதாவி சீராவியு மஹோத$_{3}$தி$_{4}$களின் சுருங்காத பெருந்தன்மையும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சீரிய (வி) சிறந்த (905) *சீரிய செழும் பணி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சீரியர் (பெ) குணஞ்செயல்களால் சிறந்தவர் (1120) *சீரியர் திருவுருவமான திருக்கோலம் பெருகொளியால் காட்டினான்* (SII,iv,225.)

சீலம் (பெ) நல்லொழுக்கம் (1070) *சீலஞ்சேர் கரமென்னச் சிறந்த தோன்றல்* (IPS,115.)

சீலன் (பெ) நல்ல ஒழுக்கமுடையவன் (905) *கொடைபயில் கற்பக சீலன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சீலை (பெ) துணி (1015) *திருவிளக்குச் சீலை யிடும் வண்ணானுக்கு* (TMPL,xviii,p.151-55.)

சீவயிட்டினவர் (பெ) (= ஸ்ரீ வைஷ்ணவர்) (1510) *இக் கோயிலில் சீவயிட்டினவரில் கூமூர் நாராயணன்* (TAS,vi,34.)

சீவன சேஷம் (பெ) வாழ்க்கைச் செலவு (1200) *உவச்சற்கும் பலபணி நிமந்தக்காறக்கும் சீவன சேஷமாக தென்கரை ஆந்தனூரான வீரசோழ நல்லூர் குடுத்து* (SII,iii,26.)

சீவிதகாரர் (பெ) வாழ்நாள்வரை நிலத்தை அனுபவிக்கும் உரிமை பெற்றவர் (1445) *தேவமண்டல ஊர்கள் சீவிதகாரர் அதிகாரி கடைக்கூட்டர் தானத்தர் குத்தகை கொள்ளுகையாலும்* (SII,xvii,736.)

சீவிதப் பற்று (பெ) வாழ்நாள்வரை அனுபவிக்கும் உரிமையோடு கூடிய நிலம் (1235) *நம் பற்றில் சீவிதப்பற்றில் விலைகொண்ட நிலம்* (IPS,307.)

சீவிதம் (பெ) (= சீவிதப்பற்று) (1435) *தொண்டைமானார் சீவிதத்துக்குப் பதிந்து நடந்து வந்த நிலம் உள்ளதும்* (SII,vii,777.)

சீவிதம் (பெ) வாழ்நாள் பணியுரிமை (1506) *ஸ்ரீ வைஷ்ணவர்கள் சீவிதத்துக்கு மாதமொன்றுக்கு பணம் இருபத்துனாலாக* (TDI,iii,96.)

சீற்றம் (பெ) கோபம் (800) *கடி அரணம் மூட்டின சீற்றம் முன் சென்றது* (EI,xiii,10.)

சீற (வி) கோபிக்க (800) *செருவேன் மாறன் கனன்று சீற* (EI,xiii,10.)

சீறி (வி) கோபித்து (921) *கண் சிவந்துஞ் சேவலுயர்கொடிக் குமரனெனச் சீற* (SII,iii,206a.)

சீனகம் (பெ) சீன நாடு (1242) *கலிங்க மீழங் கடாரங் கெடவுந் தெலிங்கஞ் சோனகஞ் சீனக முதலாய* (SII,viii,404.)

சு

சுக்கிற வார சந்தை (பெ) வெள்ளிக்கிழமைச் சந்தை (1551) *பல பட்டடையும் சித்தாயமும் செஞ்சிக்குள் நடக்கிற சுக்கிறவாரசந்தை ஆயமும் பெருங்காஞ்சி சீர்மையில் பொன் பற்றி* (SII,xvii,263.)

சுக்கு (பெ) உலர்ந்த இஞ்சி (1300) *சுக்குப் பொதி ஒன்றுக்கு* (SII,viii,442.)

சுகியன் (பெ) ஒரு வகை பணியாரம் (1468) *திருக்கணாமடை ஒன்றும் சுகியன் படி ஒன்றுக்கும்* (SII,xvii,275.)

சுங்கம் (பெ) விற்பனைப் பொருள் போக்குவரத்துக் காலத்தில் வசூல் செய்யும் வரி (985) *மிலாடும் வாணகப்பாடியும் மோரமுஞ் சுங்கமும் பாட்டத்துக்கு* (SII,xix,351.)

சுங்க மகமை (பெ) ஒரு வரி (1385) *புலைதிறை சொடிம்மைவியம் வேடுக்கோள் சுங்கமகமை தறவளிக்கை* (EC,ix,mt.93.)

சுங்கமாழ்வார் (பெ) சுங்கம் வசூலிப்பவர் (985) *முத்துறையில் சுங்கமாழ்வார் இதந்மம் ரக்ஷிக்க* (SII,xix,351.)

சுங்க மோரம் (பெ) விற்பனைப் பொருள் போக்குவரத்துக் காலத்தில் வசூல் செய்யும் வரிகள் (1090) *பன்மை பண்டை வெட்டியும் குந்தாலியும் சுங்க[மோர]மும் உள்ளிட்டன வெல்லாம் தவிர்ந்தமைக்கும்* (EI,xxii,35.)

சுங்க எண்ணை (பெ) ஒரு வரி (1330) *சாலியத்தறி பறைத்தறி செக்குக்கடமை சுங்களண்ணை இவகைகளுக்கு கொள்ளும் புறக்கலனை* (TDI,i,99.)

சுட்ட (வி) எரித்த (550) *தொல்தேவரு சுட்ட நான்று* (CHHS,1971/85.)

சுட்டப்பட்ட (வி) குறித்த (772) *இச்சுட்டப்பட்ட எல்லைகளில் நடுவு கிடந்த* (SII,xiv,19.)

சுட்டிய (வி) சேர்ந்த (1016) *ஈச்வரம் சுட்டிய தட்டார்க் காணியாக வெட்டிச்சு* (SII,v,515.)

சுட்டின (வி) குறிப்பிட்டது (877) *நிலம் சுட்டின போல பட்ட ஸாமந்துக் குடுவித்தோமானோம்* (SII,vi,370.)

சுட்டு (வி) நெருப்பில் காய வைத்து (941) *எங்கள் வழி வைத்த பொன் சுட்டு வெட்டிச் சுடுகடுத்து* (SII,viii,52.)

சுட்டோடு (பெ) சுட்ட ஓடு (852) *சுட்டோட்டால் மாடமாளிகை எடுக்கப் பெறுவதாகவும்* (SII,ii,98.)

சுட (வி) சூளையில் எரிக்க (731) *ஓடு சுடக் கொண்ட நிலம்* (SII,i,151; EI,xvii,22.)

சுடர் (பெ) சூரியன் (771) *உதயகிரி மத்யமத் துறு சுடர் போல* (EI,xvii,16.)

சுடர்கள் (பெ) நட்சத்திரங்கள் (939) *அருக்க னோடு மதியிழைந்து சுடர்களுளவளவு மற்றிதனைக் காப்ப* (SII,xvii,501.)

சுடலை (பெ) சுடுகாடு (1120) *தொல்லோர் வாழ் தில்லைச் சுடலையமந்தார்* (SII,iv,225.)

சுடுகாடு (பெ) ஈமக்காடு (976) *சுடுகாட்டுக்குக் கி...ன்பார்க்கெல்லை சுடுகாட்டின் வடவருகே* (SII,xix,162.); (1006) *இந்நிலத்தால் வந்தது மணம் புகுதவும் பிணம் போகவும் சுடுகாடு பெறுவதாகவும்* (SII,v,518.)

சுடுவார் (பெ) சமைப்பவர் (1088) *நீரட்டுவார்க்கும் விறகிடுவார்க்கும் அப்பமுது சுடுவார்க்கும் கு...கலத்துக்கும் உள்ளிட்டு* (SII,iii,70.)

சுடுவாள் (பெ) சுட்டு சமைப்பவள் (985) *அப்பஞ் சுடுவாளுக்கு நெல்லு* (SII,viii,547.)

சுண்டாயம் (பெ) விளையாட்டு; நட்புமுறை (1382) *பகையற்று வினைகுறளை சுண்டாயம் நடத்தக்கடவோமென்று* (IPS,683.)

சுண்ணம் (பெ) கந்தப்பொடி (941) *திருச்சுண்ணத்துக்கு மஞ்சளுக்கு* (SII,viii,529.)

சுத்தக் கிறையம் (பெ) எல்லா உரிமைகளோடும் விற்றல் (1600) *இந்த னானூறு குழியும் சுத்தக்கிறைய சாதனமாக வாங்கிப் பல விருக்ஷங்கள் முதலான பயிர் செய்து* (SII,viii,238.)

சுதந்தரங்கள் (பெ) (= சுவந்தரம்); உரிமைப் பேறுகள் (1284) *ஆதி சண்டேசுரதேவற்கு பறைமை பாடிகாவல் அரைசுகட்டு மற்று மெப்பேற்பட்ட சுதந்தரங்களும்* (IPS,395.)

சுதந்தரம் (பெ) (= சுவந்தரம்) (1465) *கோயிற் சுதந்தரம் குளமீன் பாட்டம் ஆடிகாத்திகைச் சுதந்தர மற்றும் அசறபாடி காவலுக்கு* (IPS,801.)

சுதை (பெ) சுண்ணாம்பு (1012) *சுதை மதிற் சூழகழ் புளகப் புதவக் களகக் கோபுரவாயின்* (SII,vii,863.)

சுதையிடுகை (பெ) சுண்ணாம்பு பூசுதல் (1200) *திருமண்டபத்துக்குச் சுதையிடுகைகுத் திருவாய்மொழி பாடுந் திருநறையூர்தாஸர்* (EC,xiv,Sr.228.)

சுந்தர (பெ) அழகிய (1017) *முந்நவந் பக்கல் தெந்நவந் வைத்த சுந்தர முடியும்* (SII,vii,860.)

சுப்பிரம் (பெ) முத்துத் தன்மைகளுள் ஒன்று (1015) *சிவந்த நீரும் குளிர்ந்த நீரும் வரையுங் கறியுங் குருவும் சுப்பிரமும் உடையன உட்பட பரியனவும் நெரியனவும் ஆக முத்து* (SII,ii,7.)

சுப்பிரமணியன் (பெ) முருகன் (898) *சுப்பிரமணியர்க்கு இருநாழி* (SII,viii,560.)

சுமக்கும் (வி) ஏற்றிச் செல்லும் (955) *திருப்பலி சுமக்கும் ஆனை* (SII,viii,738.)

சுமட்டு கூலி (பெ) சுமை கூலி (1236) *பூவழியுஞ் சுமட்டு கூலியுட்பட திருவிதான்கோட்டு கொடுக்குந் நெல்* (TAS,vii,p.112-114.)

சுமந்து (வி) தலையில் சுமந்து (992) *திருவமுதடவுந் திருமஞ்சன நீரும் தண்ணீரமுது சுமந்தட்டவும்* (SII,xiii,170.)

சுமந்து நின்ற (வி) தாங்கி நின்ற (1014) *பலி பாத்ரம் சுமந்து நின்ற பதின் ஐவிரலரை உசரம் உடைய* (SII,ii,34.)

சுமப்பார் (பெ) தலைமேல் எடுத்து வருபவர் (1144) *கடுவாய்த் திருமஞ்சனநீர் சுமப்பார்க்கும்* (SII,xvii,597.)

சுமப்பான் (பெ) தூக்கி வருபவன் (934) *திருமஞ்சன நீர் சுமப்பான் ஒருவனுக்கு* (SII,xxiii,35.)

சுமை கூலி (பெ) தலையில் சுமக்கக் கூலி (1142) *சுமைகூலி கொண்டு நீக்கி உள்ள நெல்லு* (SII,xvii,598.)

சுயம்பாகி (பெ) சமையற்காரன் (1603) *பரிசாலகனுக்கு நாழியும் சுயம்பாகிக்கு நாழியும்* (SII,viii,535.)

சுரக்க (வி) மிகுதியாகக் கொடுக்க (1120) *வாரி வளஞ் சுரக்க வானதிகை நாயகருக்கேரியும்* (CHEN,xxiii,p.93-96.)

சுரதரு (பெ) கற்பக மரம் (1147) *பருதிவழித் தோன்றிய சுரதருவென சுடர்முடி சூடி* (SII,v,643.)

சுரந்து (வி) ஊறி வெளிப்பட்டு (1069) *நின்றருள் சுரந்து னிறைனிழல் பரப்பி* (SII,viii,4)

சுரபி (பெ) பசு (1235) *வ்ருஷபமும் ஒன்றும் அனுக்கந் சுரபியில் பாலமுது தயிரமுதுக்குடலாக கூட்டி* (SII,iv,817.)

சுரம் (பெ) காடு (921) *விஜயனை வஸுசாப நீக்கிஉம் வெந்தழியச் சுரம் போகிஉம்* (SII,iii,206a.)

சுரம் இறக்கின (வி) காட்டுக்கு ஓட்டின (963) *பாண்டியனை சுரமிறக்கின பெருமாள் ஸ்ரீ சுந்தரசோழ தேவற்கு* (EI,xii,15.)

சுரர் தரு (பெ) கற்பகமரம் (1279) *சுரர் தரு நெருங்கிய சோலையு* (SII,viii,69.)

சுரவி (பெ) பசு (1120) *ஓங்கிய பொன்னம்பலத்தார்க் கோராயிரஞ் சுரவி*

ஆங்களித்தானேற்றெ (SII,iv,225.)

சுரி வளை (பெ) ஓர் ஆயுதம் (815) *சுரி வளையவன்றிரு முடி மிசைத் தூணி பலபதத் தோளோச்சியும்* (SII,iii,206b.)

சுருக்கமாக (வி) குறைவாக (985) *அம்பலமெடுத்தும் நிலஞ் சுருக்கமாகப் பற்றுப் பார்த்து* (SII,viii,547.)

சுருக்கவும் (வி) குறைக்கவும் (978) *பொன்னிலும் பஞ்சவாரத்திலும் யாண்டு எட்டாவது முதல் இறை சுருக்கவும்* (SII,iii,151-151a.)

சுருக்கி (வி) குறைத்து (908) *தேவதானம் இறை சுருக்கியும் நீர் பாயவும்* (EI,xxviii,17a.)

சுருக்கிந (வி) முலாம் பூசின (1014) *செப்புக் குடம் ஒன்று நிறை மூவாயிரத்து எண்பத்து முப்பலத்தில் சுருக்கிந தகடு பலபொன்* (SII,ii,1.)

சுருங்காத (வி) குறையாத (905) *மஹோத$_3$தி$_4$களின் சுருங்காத பெருந்தன்மையும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சுருங்கிலும் (வி) குறைந்தாலும் (893) *நாற்கழஞ்சரையாலும் ஏறிலுஞ் சுருங்கிலும்* (SII,xii,75.)

சுருங்கும் (வி) கணக்கிலிருந்து கழிக்கப்படும் (978) *நிலம் இத்தேவர்க்கேய் யெட்டாவது முதலிறைஇலியாய்ச் சுருங்கும் நிலனிரண்டரையேய்* (SII,iii,151-151a.)

சுருண்டு (வி) சோர்ந்து (1237) *பேரணியும் ஒக்கச் சுருண் டொதுங்கி* (SII,v,431; EI,xxii,10.)

சுருதி (பெ) வேதம் (1036) *சுருதி நன்குணருஞ் சோழபாண்டியனையும்* (SII,iv,223.)

சுருதிகள் (பெ) வேதங்கள் (1171) *பருதி முதற்குலம் விளங்கச் சுருதிகள்* (SII,xvii,592.)

சுரும்பினங்கள் (பெ) வண்டினங்கள் (1179) *புன்நை போதலரும் சோலை வயல்தோறுஞ் சுரும்பினங்கள் பண்பாட* (EC,x,Ct.83.)

சுருள் (பெ) தாம்பூலச் சுருள் (1232) *சுருள் நாற்பத்திரண்டுக்கு வெற்றிலைக் கட்டு* (CHEN,vi,p.500-501.)

சுவடு (பெ) தடம் (1012) *பாவடிச் சுவட்டுத் துடர் நெய்* (SII,vii,863.)

சுவடு (பெ) அடையாளம் (1136) *ஜயமகள் செழுஞ் சன்தனச் சுவட்டால் புயமிரு கயிலைட் பொருப்பென* (SII,vii,1038.)

சுவந்தரப் பிரமாணம் (பெ) சுவந்தரம் பற்றிய ஆவணம் (1406) *இப்படி இவர்கள் சொல்ல இந்த சுவந்தரப் பிரமாணம் எழுதினேன் கோயில் கணக்கு ஒடுவூருடையாந் பெரு பாடப்பிள்ளை மகந்* (IPS,690.)

சுவந்திரம் (பெ) அரச ஊழியர்களின் உரிமைகள் (1477) *கோயிற்சுவந்திரம் குளச்சுவந்திரம் வலையர் ஆடிக்கு ஒரு கூடு முசலும்* ips,715.

சுவர் (பெ) வேலியாக அமைந்த சுவர் (892) *தோட்டச் சுவர்க்கும் கிழக்கு* (SII,vi,535.)

சுவற்கம் (பெ) சொர்க்கம் (1171) *படைமுகத்தைக் கெடுத்து வீர சுவற்கம் பெற்றாந்* (EC,ix,Kn.44.)

சுவாமியம் (பெ) காணி (1141) *இத்திரு முற்றத்தில் முற்சுவாமியமும் முற்பிரஸாதமும் பெறுவாளாகவும்* (EC,xiv,TN.178.)

சுவானு போகம் (பெ) ஒருவரின் சொந்த ஆட்சி (1015) *சுவானு போகம் நிலன் இரண்டேய் எட்டுமாவும்* (TMPL,xviii,p.151-55.)

சுவியன் (பெ) (= சுகியன்) (1445) *திருநாள் ஒன்பதுக்குத் திருமுளைத் திருநாள்தோறும் சுவியன் படி ஒன்றும்* (TDI,i,213.)

சுழல் தூக்கல் (பெ) சுற்றுகின்ற அலங்காரத் தொங்கல் (1010) *முத்துடை ஒந்றிநில் சுழல் தூக்கல் உள்ளிட்டு* (SII,v,664.)

சுழன்று (வி) வளைந்து (1080) *ஏறின மலைகளு முதுகு நெளிப்ப இழிந்த நதிகளும் சுழன்றுடைந்தோடி* (EC,x,Mb.47.)

சுழன்றும் (பெ) சுற்றிலும் (1188) *கூட முக்கால்வட்டஞ் சுழன்றும் குடி இருக்கும் புரையிடங்களும்* (TAS,iv,p.22-65.)

சுள்ளி (பெ) உலர்ந்த மரக் கொம்பு (1014) *துடர் வநவேலிப் படர் வநவாசியுஞ் சுள்ளிச் சூழ் மதிள்க் கொள்ளிப் பாக்கையும்* (EC,ix,Cp.88.)

சுற்ற (வி) போர்த்த (985) *ப்ரதா$_4$நகலசம் சுற்ற புடவைய் 2* (SII,xix,380.)

சுற்றம் (பெ) உறவினர் (771) *உரிமைச் சுற்றமொடு* (EI,xvii,16.)

சுற்றாலை (பெ) சுற்று மதில் (887) *சுற்றாலை அழிவு செல்வதக்கு* (SII,xiv,28.)

சுற்றிய (வி) சுற்றியுள்ள (750) *சாருகூரு மதனைச் சுற்றிய சென்றுழுபாழும்* (EI,v,8.)

சுற்று (பெ) சுற்றளவு (1014) *ஆறு தோரைச் சுற்றும் உடைய* (SII,ii,1.)

சுற்று (வி) சூழ்ந்துள்ள (691) *வளெயில் சுற்று நிலம் அத்தநையும்* (SII,i,151; EI,xvii,22.)

சுற்றுப் பேழை (பெ) சுற்றுவளையம் (1014) *நா4பிக்குக் கீழ் முன்று சுற்றுப்பேழை செய் கொடு இருந்தாராக* (SII,ii,53.)

சுற்றும் (பெ) சுற்றிலும் (877) *எம்மூர்க் கறிகைக் குட்டத்தின் சுற்றும் கோலீடு நீக்கி* (SII,vi,370.)

சுற்று மண்டபம் (பெ) கர்ப்பக் கிருகத்தைச் சுற்றிய பிரகார மண்டபம் (923) *வாதில் மாடமுஞ் சுற்று மண்டபமும்* (TAS,i,p.287.)

சுற்று மாளிகை (பெ) பிரகாரச் சுவர்; மதில் (992) *திருக்கற்றளிக்கும் சுற்று மாளிகைக்கும் திருப்பள்ளிக் கட்டில் மண்டபத்துக்கும்* (SII,xvii,617.)

சுற்று முற்றிலும் (பெ) சுற்றியுள்ள இடம் முழுவதிலும் (1129) *நாவல் குளம் வளையில் சுற்றுமுற்றிலும் உள்ள புஞ்செய் நஞ்செய்* (SII,xiv,218.)

சுற்று முற்று (பெ) இடம் முழுவதும் (1218) *நான் இறையிலி தேவதானமாக வாத்த கலிப்படக்கி சுற்று முற்று கல்வெட்டி குடுத்தேன்* (IPS,178.)

சுற்று முற்றும் (பெ) சுற்றியுள்ள இடம் முழுவதும் (954) *கோயிற் சுற்று முற்றும் குடுத்தோம்* (SII,xiii,92.)

சுற்றுற்றி (பெ) ஒரு நகை (1007) *உசரத்து ஐஞ்சாணே மூவிரல் அரை பாதச் சுற்றுற்றி* (TMPL,xviii,p.100-101.)

சுறவு (பெ) மகர ராசி (1218) *தினகரன் சுறவிலணைந்த வத்தையியிலுத்திரட்டாதி யேழ் பக்கம்* (UCR,xviii,p.157-62; UCR,xx,p.15-18.)

சுனை (பெ) பாறை யூற்று (800) *சுனையச் சுனை மணிப்பாறை* (EI,xiii,10.)

சூ

சூகரக் கொடி (பெ) பன்றிச் சின்னங் கொண்ட கோடி (1066) *வெண் சாமரையுஞ் சூகரக் கொடியும் மகர தோரணமும்* (SII,v,976.)

சூட்டாது (வி) அணியாது (831) *கொங்கார் மலர்க் கடம்பு சூட்டாது* (SII,xiv,43.)

சூட்டி (வி) பொறித்து (815) *மணிக்கெண்டைப் பொறி சூட்டியும்* (SII,iii,206b.)

சூட்டுதிர் (வி) அணிவிப்பீர் (831) *தார் சூட்டுதிர் என்று* (SII,xiv,43.)

சூட (வி) பூண (1074) *தன்கழல் தராதிவர் சூடச் செங்கோல் நாவலம் புவி* (SII,iii,77.)

சூடகம் (பெ) கைவளை (1014) *முத்தின் சூடகம் ஒன்றிற் பொன்னின் பட்டை மேற்கு வைய்த்து* (SII,ii,79.)

சூடி (வி) அணிந்து (921) *வாகை சூடிக் கோடாத செங்கோனடாவி* (SII,iii,206a.)

சூடிய (வி) அணிந்த (905) *மூடி சூடிய முரண் மன்னர்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சூடு (பெ) (பொன்னைப்) புடம் போடல் (1000) *ரக்ஷாபோகம் பொன் சூடு முரையும் வருவிது பதினெண் கழைஞ்சு பொன்னாக ஒக்கும்* (TAS,ii,p.173-207.)

சூடுமுறையும் வருவிது தூய்மையானது (1100) *பொன் கொடுக்கில் சூடுமுறையும் வருவிது*

அறுகழைஞ்னு நிறைப் பொன் கொடுப்பிது (TAS,v,p.181-83.)

சூத்திரம் (பெ) கோத்திரத்தின் உட்பிரிவு (789) *இக்கோதிரத்து பவிழிய சூத்திரத்து* (SII,ii,99.)

சூத்திரம் (பெ) வேதபாடத்தில் ஒரு பிரிவு (866) *வாரம் ஓதும் பரிசு சூத்திரத்திலுஞ் சூத்திராரணம்* (TAS,i,p.1-14.)

சூத்திரர் (பெ) நான்காம் வருணத்தார் (1300) *ஊரகத்துக் குடியிருக்குஞ் சூத்திரர் பிராமணரைய் துர்வ்வாயகம் பறைகில்* (TAS,iii,p.194-95.)

சூத்திராரணம் (பெ) ஆரண்யகம் என்ற வேதப்பகுதி (866) *சூத்திரத்திலுஞ் சூத்திராரணத்திலும்* (TAS,i,p.1-14.)

சூதவனம் (பெ) பவளமல்லிகைக் காடு (1179) *சந்தனமே சூதவனமே தா புன்நை போதலரும்* (EC,x,Ct.83.)

சூது (பெ) பந்தய ஆட்டம் (866) *எச்சூது முக்கால் வட்டத்திலிருந்து* (TAS,i,p.1-14.)

சூலக் கல் (பெ) சூல அடையாளம் பொறித்த எல்லைக்கல் (917) *சூலக்கல் வரம்புக்கு வடக்கும்* (SII,viii,646.)

சூலக் கால் (பெ) சூலக் குறி பொறிக்கப்பட்ட முகத்தல் கால் (895) *நெல்லுச் சூலக் காலால்* (SII,viii,580.)

சூல நாழி (பெ) சூலக் குறியிட்ட நாழியளவு கொண்ட கால் (869) *சூல நாழியால் நிசதி உரிய்நெய்* (SII,xiv,5.)

சூலம் (பெ) சூலாயுதம் (1009) *மேற்படியார் சார்ந்தும் சூல மொன்று பொன் அரைக் கழஞ்சும்* (SII,v,521.)

சூலம் பொரிச்சு (வி) சூலக் குறியிட்டு (1021) *தாங்களே கொண்டு நாகீன்றிந சூலம் பொறிச்சு சாவாமூவாப் பெரும் பசுவாக காத்து* (SII,iv,393.)

சூல வரி (பெ) ஒரு வரி (1517) *அரங்குளநாதர் கோயிலிலே வருஷம் ஒன்றுக்கு சோடி சூல வரியாக இறுத்து வரும் பொன் 20* (IPS,842.)

சூலவுழக்கு (பெ) சூலக் குறியிட்ட உழக்கு அளவு கொண்ட முகத்தல் கால் (917) *நிசதம் சூலவுழக்கால் உழக்கு நெய்* (SII,iii,98; SII,xix,249.)

சூலாடு (பெ) கருவுற்ற ஆடு (1206) *பிடாரி கோயிலிலே பூதமுமிட்டுச் சூலாடும் வெட்டி வலைக் கண்ணுங் குறோவையு மறுத்து* (ARE,1934-35,p.62.)

சூழ் (வி) ஆலோசனை (800) *சூழ்வல்லக் கோ மாறன் செருவில்* (EI,xiii,10.)

சூழ்ந்த (வி) சுற்றிய (771) *வேலை சூழ்ந்த வியலிடத்து* (EI,xvii,16.)

சூழ்ந்த (வி) சேர்ந்த (1076) *புகழ் சூழ்ந்த புணரி அகழ் சூழ்ந்த புவியில்* (SII,iv,813.)

சூழ்ந்தான் (வி) சுற்றி வந்தான் (785) *வடிவமைய பிடிசூழ்ந்தான்* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)

சூழ்ந்து (வி) சுற்றி வரச் செய்து (866) *பிடிசூழ்ந்து ஸ்ரீ கோயில் எடுத்து* (TAS,i,p.1-14.)

சூழ்வர (வி) சுற்றிவர (1244) *வாழி பூதலஞ் சூழ்வர ஒருகைய் இருசெவி மும்மத நாற்கோட் டயிராபதமுதல்* (SII,v,734.)

சூழ (பெ) சுற்றிக் கொள்ள (1012) *உதைகை வேந்தைக் கடல் புக வெகுண்டு போந்து சூழ* (SII,vii,863.)

சூழி (பெ) யானையின் முகபடாம் (771) *சூழி யானை செலவுந்திப் பாழி வாயமர் கடந்து* (EI,xvii,16.)

சூளறவு (பெ) சபதம்; ஆணை (1051) *வல்லவரையந் சூளறவு* (EC,ix,Dv.76.)

சூளாமணி (பெ) முடிமணி (1220) *ஆதி இராஜந்மாதேவி வளர வங்க சூளாமணி மறையவர் தொழுஞ் சிந்தாமணி* (CHEN,xiv,p.362-64.)

சூளிகை (பெ) தலையில் அணியும் ஓர் அணி (815) *வடவரையது வலாரசூளிகை* (SII,iii,206b.)

சூளிகை (பெ) நிலா முற்றம் (1012) *புரிசை வட்டம் பொடிபடப் புரிசைச் சுதை கவின் சூளிகை மாளிகை யுதைகை* (SII,vii,863.)

சூளிற்று விடுவார் (வி) சபதம் செய்வார்கள் (922) *பசித்து வாழ்வோமென்று சொல்லிச் சூளிற்று விடுவார் களாகவும்* (SII,vi,295.)

சூறை (பெ) கொள்ளை (982) *ஆடு உத்தமசோழ மாராயந் சூறையில் போக* (SII,vii,114.)

சூறை வரி (பெ) ஒரு வரி (1268) *அளிய கேத.யற்க்கு சூறைவரியாக நிச்சயித்த காசில்* (IPS,373.)

சூன் மகளிர் (பெ) கருவுற்ற பெண்கள் (1176) *தடைபடுவன கோபுரமே ஊம்படுவன சூன்மகளிரே* (SII,xvii,585.)

சூனியம் (பெ) இன்மை (1393) *இக்கோயிலுக்கு முதலும் இன்றிப் பூசையும் சூனியமாய் திருப்பணியும் இன்றி* (SII,viii,254.)

செ

செக்காணிக்கை (பெ) (= செக்கு காணிக்கை) ஒரு வரி (1289) *வாசல் வினியோகம் ஏவலெழுத்துவினியோகம் செக்காணிக்கை துலாபாரவரி கூற்றிலக்கை கடைக்கூட்டு இலக்கை* (SII,viii,751.)

செக்கார் (பெ) செக்கு வாணியர் (1168) *பெருந்தெருவிற் செக்கார் ஒழுக்கைக்கு மேற்கும்* (SII,xvii,588.)

செக்காலை (பெ) எண்ணெய் பிழியும் எந்திரம் (911) *செக்காலைச் சேரி இருபதின் கழைஞ்சு பொன் குதுத்..* (SII,xix,92.)

செக்கிறை (பெ) செக்கு வரி (1148) *விண்ணகராழ்வார்க்கொரு செக்கிட்டுச் செக்கிறையால் வந்த கடமையாலே* (TAS,vii,p.55.)

செக்கிறைக் கடமை (பெ) (= செக்குக் கடமை) (1415) *விக்₃ரஹப்பேறு செக்கிறைக் கடமை தட்டொலிபாட்டம் மாக்கலம் பாடிகாவல் பறையறை ஆள்வரி* (IPS,623.)

செக்கு (பெ) செக்கு மீதான வரி (691) *ஊராள்ச்சி யும் செக்கும் தறியும்* (SII,i,151; EI,xvii,22.)

செக்கு (பெ) எண்ணெய் பிழியும் எந்திரம் (869) *இவ்வூர்ச் செக்குள்ளன எல்லாம் நட்டுத் திருவிளக்குக்கேய் வாய எண்ணை* (EI,xi,22a.)

செக்கு கடமை (பெ) செக்கின் மீதான வரி (1406) *ஸகல ப₄க்தா தாயமும் செக்குகடமை வெட்டிவரி திருப்புதியிது ஏரிமீன் விற்ப்பணம்* (SII,i,55.)

செகதி (பெ) (= ஜகதி); கட்டிட அடிப்பாகத்தில் ஓர் உறுப்பு (1218) *தவன மண்டபத்து வட பாரிசத்து செகதியிலும் குமுதகத்திலும் வெட்டிக்கிடந்த கல்வெட்டான இடம்* (IPS,248.)

செக மண்டல சுத்தி (பெ) உலகத்தைத் தூமையாக்கல் (1012) *கரிசறத் துரிசறக் கலி செகமண்டல சுத்தியில்* (SII,vii,863.)

செகுத்து (வி) திரட்டி (1014) *காசு கொண்டு பொலிசை செகுத்து இவன் வைத்த நிவந்தஞ் செலுத்துவதாகவும்* (SII,ii,24.)

செகுத்து (வி) நீக்கி (914) *பலிசை செகுத்து இறையிழித்த நிலம்* (SII,xix,183.)

செங்கடவுள் (பெ) சூரியன் (905) *கற்றைச் செங்கடவுள் வழி வந்த கழல் வேந்தன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

செங்கண் (பெ) சிவந்த கண் (800) *செங்கட் கரும் பகடு* (EI,xiii,10.)

செங்கண்மால் (பெ) திருமால் (905) *கோச் சடையற்குச் சேயாகி வெளிப்பட்ட செங்கண்மால் ஸ்ரீ வல்லப₄ன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

செங்கதிர்க் கடவுள் (பெ) சூரியன் (905) *செங்கதிர்க் கடவுள் வழி வந்த கழல் வேந்தன்* (TASSI,1962-65,p.1-31.)

செங்கமலம் (பெ) செந்தாமரை (1179) *தேநாருஞ் செங்கமல மாது* (EC,x,Ct.83.)

செங்கழுநீர் (பெ) அல்லிப்பூ வகை (765) *செங்கழுநீருந் தமனகமும் இடப் பெறுவாராகவும்* (EI,xxxvi,20.)

செங்கழுநீர் புறம் (பெ) செங்கழுநீர்ப்பூ பயிரிட விட்ட மானிய நிலம் (1300) *இரண்டாங் கண்ணாற்று மூன்றாம் சதிரத்து செங்கழுநீர் புறமாக விட்ட நிலம் அரைமாவும்* (SII,v,240.)

செங்கீரை (பெ) பச்சிளங் குழந்தை (1068) *கோளர் தங்குல செங்கீரையொடும் வேரறப் பறிந்தோடி* (SII,iii,30.)

செங்குருதி (பெ) சிவந்த நிறமுடைய இரத்தம் (800) *செங்குருதி மண்பரந்தவூர்* (EI,xiii,10.)

செங்கை (பெ) சிவந்த கை (1012) *கரங்கா லொன்றாற் செங்கை யிரண்டிட்டளந்த* (SII,vii,863.)

செங்கொடிய்க் காணம் (பெ) செங்கொடி என்ற மருந்துப் பயிர் மீதான வரி (753) *பிராமணராசக் காணமும் செங்கொடிய்க் காணமும்* (SII,ii,73.)

செங்கோல் (பெ) நல்ல ஆட்சியின் சின்னமாகிய நேர் கோல் (771) *செழியன் வானவன் செங்கோற் சேந்தன்* (EI,xvii,16.)

செங்கோலோச்சி (வி) நீதியோடு அரசாண்டு (771) *பாவுடன் முருக்கிச் செங்கோலோச்சி* (EI,xvii,16.)

செஞ்சடை (பெ) சிவந்த தலைமயிர் (910) *திருத்தணியில் செஞ்சடை ஈசர்க்கு கருங்கல்லால் கற்றளியா நிற்க விரும்பிய* (SII,xii,94.)

செஞ்சர மாரி (பெ) கூரிய அம்பு மழை (1056) *சென்றெதிரென்றமர் துடங்கிய பொழுதவன் செஞ்சரமாரி குஞ்சரமுகத்தினும்* (SII,iii,29.)

செஞ்சாலி (பெ) செந்நெல் (905) *செஞ்சாலி விளை கழனி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

செஞ்சிலை (பெ) கொடிய வில் (1012) *வஞ்சியிற் காஞ்சி வகுத்த செஞ்சிலைக் கலிங்கன்* (SII,vii,863.)

செஞ்சேவகன் (பெ) நல்ல வீரன் (1209) *நிலை பேரிலும் பேராத செஞ்சேவகன்* (CHEN,xiv,p.362-64.)

செஞ்சொல் (பெ) செம்மையான சொல் (1012) *முத்தமிழ் நான்மைத் தெய்வக் கவிதை செஞ்சொற் கபிலன்* (SII,vii,863.)

செஞ்சொற்திரு (பெ) சரசுவதி (1270) *திருவுடன் செஞ்சொற்திருவை மணந்ததொக்கும்* (SII,iv,620.)

செட்டி (பெ) ஐந்நூற்றுவர் கூட்டமைப்பின் உறுப்பினர் குழுக்களில் ஒன்று (1150) *தாவளத்துச் செட்டியும் செட்டிபுத்திரனும் கவறையும்* (AVNM,9,p.33-34)

செட்டிபுத்திரன் (பெ) ஐந்நூற்றுவர் கூட்டமைப்பின் உறுப்பினர் குழுக்களில் ஒன்று (1050) *ஸமையதன்மை இனிது நடாதிருக்கின்ற செட்டியும் செட்டிபுத்திரனும் கவறையும் காமுண்டஸுவாமியு* (AVNM,2,p.6-8)

செட்டு இறை (பெ) வியாபாரிகள் செலுத்தும் வரி (1430) *வாசல்பணம் வெட்டிவரி ஏரிமீந் செட்டுஇறை செக்குகடமை பட்டிதெண்டம்* (SII,viii,349.)

செடி (பெ) தாவரம்; சிறு மரம் (1014) *இரு விரலரை உசரத்து செடி ஒரு விரல் உசரத்து* (SII,ii,47.)

செண்டாடி (வி) பூப்பந்து விளையாடி (1051) *பணிந்தொழுகும் அரைசர்களோடு செண்டாடிப் பொருபுலி வீரக் கொடியோடு* (SII,vii,1046.)

செண்டு வாயில் (பெ) யானை, குதிரை முதலியவைகளைப் பழக்கும் பரந்த முற்றம் (1009) *தஞ்சாவூர்ப் பெரிய செண்டுவாயில்ச் சித்திரகூடத்து தெற்க்கில்* (SII,iii,9.)

செண்டு வெளி (பெ) பரந்த வெளி (1217) *திரு நந்தவனத்துக்கு வடக்கும் செண்டுவெளிக்குத் தெற்கும்* (TMPL,vii,p.502-05.)

செண்டை (பெ) ஒரு வகைக் கோட்டு வாத்தியம் (1000) *ஸ்ரீ பலிக்கு கொட்டுவான் நாலு செண்டையும் ஒரு திமிலை ஒரு சேகண்டி* (TAS,ii,p.173-207.)

செத்தல் (பெ) கருக்காய் முதலியன (992) *திரு முற்றத்து அளக்க கடவ நெல்லு வால்லி நெல் கற...ற் செத்தல் நீக்கி* (SII,xix,357.)

செத்தார் (பெ) இறந்தவர்கள் (1014) *இவர்களில் செத்தார்க்கும் அனாதேசம் போனார்க்கும்* (SII,ii,65.)

செத்து (வி) இறந்து (1316) *ஒக்கூருடையாரும் இவருடைய தம்பிமாரும் அனைவரும் அடியாரு....தும் செத்துங் கெட்டும் போய் அலைந்து* (SII,viii,247.)

செதாரம் (பெ) கோயிலில் கால்நடைக் கருவூலம் (985) *செத்த ஆடு பன்னிரண்டுக்கு செதாரம் புக்கன மழவடி கண்ணந் குடுத்த ஆட்டில்* (SII,xiii,122.)

செந்தமிழ் (பெ) இலக்கியத்தமிழ் (905) *செப்பேட்டுக்குச் செந்தமிழ் பாத் தொடை செய்தோன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

செந்தமிழர் (பெ) ஞானசம்பந்தர் (1120) *தென்வேந்தர் கூ[நிமிந்த] செந்தமிழர் தென்கோயில் பொன்மேந்து* (SII,iv,225.)

செந்தயிர் (பெ) நல்ல தயிர் (1012) *மூன்றினுக் கிழுதுபடு செந்தயிரொடு முன்னாழிக்கிரு* (SII,vii,863.)

செந்தரா (பெ) செந்நிறமுடைய தரா என்னும் உலோகம் (986) *செந்தரா பாத பீடம் நிறை எண்பதிந் பலமும்* (SII,xix,399.)

செந்தளிர் (பெ) சிவந்த கொழுந்து (1239) *செந்தளிர் சூழ்மருமன்னும் பொழில்* (SII,vii,437.)

செந்தாமரை (பெ) சிவந்த தாமரை (905) *செந்தாமரை மலர்ப் பழனச் செந்நிலத்தை* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

செந்திரிக்கச் சேலை (பெ) சேலை வகை (1562) *முக்கிற்றின் செந்திரிக்கச் சேலை 1க்கு ரேகை பொன் 1* (TDI,v,171.)

செந்தீ (பெ) சிவந்த நெருப்பு (809) *புதுமணன் மீது செந்தீத் தாது கண்டாலன்ன* (EI,xiii,10.)

செந்நடுவேய் (பெ) நட்ட நடுவே (950) *தணந்த காலின் செந்நடுவேய் வடக்கு நோக்கி* (TASSI,1962-65,p.32-52.)

செந்நடை (பெ) கோயில் அன்றாடச் செலவு வகை (910) *அமரேச்வர பெருமாளுக்கு செந் நடைக்கு யாங்கள் பணித்துக் குடுத்த நிலமாவது* (SII,xix,48.)

செந்நடைப்புறம் (பெ) செந்நடைச் செலவுக்குக் கொடுத்த நிலம் (924) *அமரேச்வர பெருமாளுக்கு செந்நடைக்கு நடைப்புறமாக தேவதனஞ் செய்து குடுத்தோம்* (SII,viii,695.)

செந்நி (பெ) தலை (1110) *அறங்காத்தான் பாதம் திறம்பாமைச் செந்நிமேல் வைத்து* (EC,ix,NI.3.)

செந்நிலம் (பெ) போர்க்களம் (771) *கைந்நலத்த களிறுந்திச் செந்நிலத்துச் செருவென்றும்* (EI,xvii,16.)

செந்நீர் (பெ) குருதி (921) *தெவ்வருடல் உகுத்த செந்நீர்* (SII,iii,206a.)

செந்நீர்க்ககவினை (பெ) (= செந்நீர் வெட்டி) (1006) *குலையும் குரம்பு செய்யாததாகவும் செந்நீர்க்ககவினை செய்யாததாகவும்* (SII,v,518.)

செந்நீர்ப் பொதுவினை (பெ) கால்வாய்ப் பராமரிப்புக்கான கட்டாய ஊழியம் (927) *இந்நிலஞ் சுட்டி செந்நீர்ப் பொதுவினை செய்யாததாகவும்* (SII,xvii,643.)

செந்நீர் பொதிவினை (பெ) (= செந்நீர்ப் பொதுவினை) (929) *வந்தயிறையு மெச்சோறும் செந்நீர் பொதிவினையுங் குடி...யுள்ளிட்டு* (SII,vii,558.)

செந்நீர் வெட்டி (பெ) கால்வாய்ப் பராமரிப்புக்கான கட்டாய ஊழியம் (985) *வெட்டி வேதினையும் செந்நீர்வெட்டி உள்ப்பட்டது எப்பேர்ப்பட்டதும்* (SII,xix,290.)

செந்நீர் அமஞ்சி (பெ) நீரோடும் கால்வாயைச் சீர் செய்யத்தரப்படும் கட்டாய உழைப்பு (1126) *சில்லறை சோறு மாட்டுச் செந்நீரமஞ்சி மற்றும்* (SII,vii,97.)

செந்நெல் (பெ) (833) *கதிர்ச் செந்நெல் கவரிகாட்டும்* (SII,xiv,44.)

செப்பாணிகள் (பெ) செம்பு உலோக ஆணிகள் (1014) *ரத்நங்கள் சரடுஞ் சட்டமுஞ் செப்பாணிகளும் அரக்கும் பிஞ்சும் நீக்கி* (SII,ii,6.)

செப்பாத (வி) கூறாத (1145) *பையூரே நாளையென்று செப்பாத வாய்மையாந்* (IPS,129.)

செப்பிய (வி) கூறப்பட்ட (1279) *செப்பிய கதிரவர் திசைவலம் போதும்* (SII,viii,69.)

செப்பியிருந்த (வி) கூறப்பட்டிருந்த (1093) *ஊர்களெல்லை செப்பியிருந்த செப்பேட்டு சா$_{0}$ஸநம்* (SII,v,473.)

செப்பில் (வி) கூறினால் (1100) *மதுராந்தகதேவன் கண்டபடி செப்பில் அம்பொன்விளை அரும்பாக்கம்* (SII,vii,144.)

செப்பு (பெ) ஓர் உலோகம் (849) *செப்புப் பத்திரஞ் செய்தட்டிக்குடுத்தேன்* (TAS,ii,p.67-68.)

செப்புக் கலசப்பானை (பெ) செம்பினால் செய்த பாத்திரம் (985) *இச் செப்புக் கலசப்பானை* (SII,v,674.)

செப்புக் கலையம் (பெ) செம்பு உலோகத்தால் செய்த பாத்திரம் (979) *யாண்டு 9 ஆவது சந்திராதிதவற் இட்ட செப்புக் கலையம் 108னால் நிறை* (SII,xix,235.)

செப்புக் குடம் (பெ) செம்பு உலோகத்தால் செய்த குடம் (942) *செப்புக்குடம் நிறை* (SII,vii,512.)

செப்புத் தளிகை (பெ) செம்பினால் செய்த தட்டு (923) *செப்புத்தளிகை நிறை ஐம்பதின் பலத்தால்* (SII,xix,397.)

செப்புத் திருமேநி (பெ) செம்பினால் செய்த திருவுருவம் (986) *ஸ்ரீ பலி எழுந்தருள வைத்த கொள்கை செப்புத் திருமேநி நிறை* (SII,xix,399.)

செப்பு நாழி (பெ) செம்பினால் செய்த நாழி கொள்ளும் முகத்தல் கால் (1115) *உடையார் பண்டாரத்து செப்பு நாழியால்* (SII,v,640.)

செப்புப் பத்திரம் (பெ) செப்பேட்டு ஆவணம் (849) *வீடுபேறாகச் செப்புப் பத்திரஞ் செய்தட்டிக் குடுத்தேன்* (TAS,ii,p.67-68.)

செப்புப் பீடம் (பெ) செம்பினால் செய்த பீடம் (991) *செப்புப்பீடம் நிறை நூற்றைஞ்பதிந் பலம்* (SII,xiii,144.)

செப்புப் பொட்டகம் (பெ) செப்புப்பெட்டி (1661) *846 வருஷம் சித்திரை மாதம் 10 பெரிய செப்புப் பொட்டகம் புகலடி பெரிய நாச்சியார் கிரீடம்* (TAS,vii,p.64.)

செப்புலம் (பெ) புன்செய் (961) *அவ்வூர் நன்புலமும் செப்புலமும் இவ்விசைத்த பெருநான்கெல்லையி னிலம்* (SII,iii,213.)

செப்பு வட்டகை (பெ) செம்புக் கிண்ணம் (1200) *செப்பு வட்டகை மூன்றும்* (TAS,iii,p.21-25.)

செப்பு விளக்கு (பெ) செம்பு உலோகத்தால் செய்த விளக்கு (917) *இவனே வைத்த செப்பு விளக்கு ஒன்று* (SII,xix,247.)

செப்பேட்டு சா$_{0}$ஸநம் (பெ) செப்பேட்டில் எழுதப்பட்ட ஆவணம் (1093) *ஊர்களெல்லை செப்பியிருந்த செப்பேட்டு சா$_{0}$ஸநம் திருக்கழுகுன்றம் நாப்பாலெல்லையும் பார்க்க* (SII,v,473.)

செப்பேடு (பெ) செப்பேட்டு ஆவணம் (905) *மீயாட்சி உள்ளடங்கக் கண்டமைத்துச் செப்பேடு செய்து* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

செப்பேடு (பெ) தாமிர ஏடு (1164) *முன்பு வெட்டின செப்பேடு படியில் உபையங் கொண்டு* (SII,iii,210.)

செம் (பெ) நேர்மை (833) *செந்தனிக்கோன்* (SII,xiv,44.)

செம்பாகம் (பெ) பாதிப் பாகம் (905) *இதனிற் கோல்லுரிமையிற் செம்பாகமும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

செம்பாதி (பெ) சரிபாதி (1044) *மும்மாவரை அரைக்காணியிநால் செம்பாதியால் நிலம்* (SII,v,633.)

செம்பியன் (பெ) சோழர் குலப் பெயர் (871) *செம்பியன் றமிழ வேள்* (SII,iii,89.)

செம்பு (பெ) தாமிர உலோகம் (1247) *இப்பொன்னும் உட்கருச் செம்பும் அரக்கும் உட்பட எடை* (SII,viii,77.)

செம்புலம் (பெ) செழிப்பான பூமி (750) *தஞ்சைச் செம்புல நாட்டு வெண்கோடல்* (EI,xiii,10.)

செம்பொன் வாரம் (பெ) வியாழக் கிழமை (1446) *காத்திகைத் திங்கள்த் தியதியைந்திற் செம்பொன் வார மன்னிய மார்கழி நாளில்* (TAS,i,p.95-98.)

செம்மணிச்சை (பெ) ஒரு மரம் (1018) *இவ் வெல்லையிற் செம்மணிச்சையோடு நின்ற புற்றேயுற்றுக் கிழக் கின்னும்* (SII,iii,205.)

செம்மயிர் (பெ) (= செமயிர்) (1476) *பஞ்சவராயர் நரசிங்க தேவர் உள்ளிட்டாற்கும் சோழ கோனார் பல்லவராயர் உள்ளிட்டாற்கும் செம்மயிருக் [காந] விரோதம் வந்து வெட்டிக் கொண்டு* (IPS,815.)

செம்மரி வெள்ளாடு (பெ) செம்மரி ஆடும் வெள்ளாடும் (956) *செம்மரி வெள்ளாடு நூறு* (SII,xiv,82.)

செம்மருதர் (பெ) நல்ல உழவர் (891) *கோ நீக்கி செம்மருதர் குடியாக* (TAS,i,p.17.)

செம்மல் (பெ) பெருமையிற் சிறந்தோன் (1250) *கைம்மலை வெள்ளக் கடற்படைப் பல்லவன் காடவர் தஞ் செம்மலை* (SII,xii,125.)

செம்மாந்து (வி) பெருமிதம் கொண்டு (771) *செம்மாந்தவ னெடுத்தருளி* (EI,xvii,16.)

செம்மை (பெ) தூய (924) *தந்த பொன் செம்மை பண்டாரக் கல்லால் 30ம்* (SII,iv,519.)

செம்மை பொந் (பெ) தூய தங்கம் (1086) *செம்மை பொந் நாற்பத்து முக்கழஞ்சே எட்டு மஞ்சாடியும்* (SII,viii,1032.)

செமயிர் (பெ) ஒரு மரியாதைச் சின்னம் (1477) *நமக்கு உண்டான வரிசை பாவாடை செமயிர் அடக்கம் நாடகசாலை பகல் விளக்கு ஏறச் சங்கு இறங்கச் சங்கு* (IPS,715.)

செமுனை (பெ) கூரிய முனை (957) *ஸ்ரீகண்டம் கோத்த செமுனைவாள்* (SII,xix,3.)

செய் (பெ) வயல் (771) *கொற்றன் புத்தூர்ரொடு மையிருப்பைச் செயிடை மேற்றலைப் பெருப்பிற்கு* (EI,xvii,16.)

செய் (பெ) வேலி (பரப்பளவு) (870) *செந்நிலத்து பத்து செய்யும்* (SII,xix,163.)

செய்க (வி) செய்யவும் (817) *குடிகள் பூமி ஸாமந்து செய்க என்று* (SII,vi,344; EI,xxiv,7a.)

செய்கடவோலைக் கரணம் (பெ) செய்ய வேண்டிய கடமையைக் குறிக்கும் எழுத்தோலை (1179) *இன்னாட்டில் காரியஞ் செய்கின்றவர் களும் கூடி எழுதிய செய்கடவோலைக் கரணமாவது* (TAS,vii,p.24-26.)

செய்கிற்று (வி) செய்யவேண்டியது (887) *அந்தியம்போது திருவமிது செய்கிற்று* (SII,xiv,16a.)

செய்கின்ற (வி) (890) *இவன் செய்கின்ற த$_{2}$ர்மத்துக்கு ஒட்டிக்குடுத்த பரிசாவது* (SII,vi,369.)

செய்கின்றார் (பெ) பணி செய்கின்றவர் (804) *இப்பரிசு செய்கின்றாரும் அன்றென்று குத்துக்கால் செய்யப் பெறாதாராகவும்* (SII,xiv,37.)

செய்த்தலைதிடர் (பெ) மேடான வயல் நிலம் (1570) *சதுர்சீர்மைக்கு உட்பட்ட நஞ்சை புஞ்சை நத்தம் செய்த்தலைதிடர் வாஸ்த்துசேஷம் மாவடை* (AVNM,7,p.69)

செய்த (வி) அடைந்த (764) *கங்கையிடைக் குமரிஅடைச் செய்தான் செய்த பாவமாக* (TAMIZ,1970,p.124.)

செய்தது (வி) (765) *பாற்சாத்தும் பரதத்தியுஞ் செல்வதாக வருளிச் சேது பரதத்தி செய்தது* (EI,xxxvi,20.)

செய்தமை (வி) (922) *வீர நாராயணச்சேரி யென்று ப்$_{3}$ரஹ்மதே$_{3}$யஞ் செய்தமையில்* (SII,iii,76.)

செய்தர (வி) அளவு (999) *குடிகள் துடரில் குடிகளால் ஐயம்பதின் கழஞ்சு செய்தர பொந் தண்டப் படுவதாகவும்* (TAS,ii,p.1-7.)

செய்தருளாவிருந்து (வி) (1014) *திரு மஞ்சநசாலை தா$_{3}$நஞ் செய்தருளாவிருந்து* (SII,ii,i.)

செய்த அளவே (வி) செய்த உடன் (986) *ஆண்டு தோறும் திருவிழாச் செய்தவளவே கணக்கு காண்பதாகவும்* (SII,iii,128.)

செய்தான் (பெ) (764) *கங்கையிடைய் குமரிஅடைச் செய்தான் செய்த பாவமாக ஒட்டினோம்* (TAMIZ,1970,p.124.)

செய்தி (பெ) ஏற்பாடு (1635) *பசானம் மேல்வாரமாக அளக்குமாறு கற்பிச்சு இச் செய்தி சொல்லி* (TAS,v,p.208.)

செய்திருந்த (வி) நடத்திய (796) *அபி$_4$ஷேகஞ் செய்திருந்த இடம்* (SII,iv,135; MASI,lxiii,p.54-59.)

செய்திலாமை (வி) செய்யாமை (986) *இத்தேவர்க்கு நிவந்தஞ் செய்திலாமையில் நிவந்தஞ் செய்யவும்* (SII,iii,128.)

செய்து (வி) உண்டாக்கி (550) *அறையோலை செய்து கொடுத்து விடுக* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

செய்து (வி) தொழில் செய்து (919) *மூவாட்டின் இப்புறம் வாரியஞ் செய்திலாத்தார் வாரியஞ் செய்தொழித்த* (ARASI,1904-05,p.131.)

செய்து (வி) நடத்தி (771) *துலாபா$_3$ராமும் மண்ணின் மிசைப் பல செய்து* (EI,xvii,16.)

செய்து (வி) ஆக (768) *பட்டியார் பதினறுகாடிச் செய்து* (SII,xii,34.)

செய்துகொள்ளப் பெறும் (வி) நிறைவேற்றிக் கொள்க (849) *தன் பணி செய்துகொள்ளப் பெறுந் தீயமாள்வானும்* (TAS,2,p.67-68.)

செய்தொழிந்த (பெ) வினை யாற்றி நீங்கிய (919) *வாரியஞ் செய்தொழிந்த பெருமக்குழு* (ARASI,1904-05,p.131.)

செய்தோம் (வி) ஆக்கினோம் (861) *இப்பரிசு கைச்சம் செய்தோம்* (SII,xiv,78.)

செய்யக் கடவ (வி) செய்ய வேண்டிய (884) *ஸபை$_4$யார் செய்யக்கடவ நிமந்தம்* (SII,xii,66.)

செய்யக் கடவியர் (வி) படைக்கக் கடமைப்பட்டவர் (950) *திருவமிர்து செய்யக்கடவியர்* (TAS,iii,p.189-91.)

செய்யப்பட்டது (வி) இயற்றப்பட்டது (771) *இப்ரச$_0$ஸ்தி வரோத$_3$ய ப$_4$ட்டனாற் செய்யப்பட்டது* (EI,xvii,16.)

செய்யப்பெற்ற (வி) செய்த (916) *களக்குடி மஹாநாசகஞ் செய்யப்பெற்ற* (EI,xxiii,45c.)

செய்யப்பெறுவாராக (வி) (864) *கடை ஏறி வாணிகம் செய்யப் பெறுவாராகப் பணித்தோம்* (MCCM,viii,p.98-104.)

செய்யவல்ல (வி) இயற்றக்கூடிய (950) *மேதகு சா$_0$ஸந ச$_0$லோகம் விதி கிடந்தவா செய்யவல்ல* (TASSI,1962-65,p.32-52.)

செய்யவும் (வி) (986) *இத்தேவர்க்கு நிவந்தஞ் செய்திலாமையில் நிவந்தஞ் செய்யவும்* (SII,iii,128.)

செய்யாது (வி) பண்ணாது (805) *விநியோக$_3$ஞ் செய்யாதே* (SII,vi,359.)

செய்யாதோமாக (வி) இயற்றா திருப்போமாக (955) *அந்நியோந்ய ஸஹாவாஸமும் சுப$_3$ஸ்பரிச$_0$ புண்யாஹங்களும் செய்யாதோமாகவும்* (SII,xiii,110.)

செய்யா நிற்க (வி) ஆட்சி செய்ய (796) *பெருமானடிகளாகி ராஜ்யஞ் செய்யா நிற்க* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

செய்யாநின்றார் (பெ) வேலை செய்தவர் (921) *வாரியஞ் செய்யாநின்றாரை அபராதங் கண்ட போது* (ARASI,1904-05,p.131.)

செய்யிச்சோன் (பெ) (= செய்வித்தோன்) (1008) *காரியம் உண்ணின்று செய்யிச்சோன்* (IA,xx.p,290.)

செய்யிலும் (வி) (849) *இவகளைப் பிழைசெய்யிலும் பள்ளியாரேய் ஆராந்து* (TAS,ii,p.67-8.)

செய்யும் (வி) (885) *தங்கள் செய்யும் பிழையுண்டாகில்* (TAS,ii,p.80-82.)

செய்யுமவன் (பெ) செய்கின்றவன் (1000) *நல்லிதுந் தீயிதுங் கண்டு செலுத்தக் கடவ உள்பாடு செய்யுமவன் இப்படாரக் கடுத்த தேவகாரியவந்* (SII,v,784.)

செய்யொளி (பெ) செந்நிற ஒளி (1000) *பாய் பரித்துகையோடும் பறித்தும் செய்யொளி விசைய மணிமகுடம்* (SII,v,976.)

செய்வதாக (வி) (691) *தேவகரும நவகருமஞ் செய்வதாகவும்* (SII,i,151; EI,xvii,22.)

செய்வாராக (வி) புரிவாராக (849) *தேவரே யனுக்கிராமஞ் செய்வாராக* (TAS,ii,p.67-68.)

செய்வான் (வி) வனைபவன் (900) *ஸ்ரீ கோக்கருநந்தடக்கற்கு ஆயுத$_3$ங்கள் செய்வான்* (TAS,i,xiii,p.197-206.)

செய்விக்க (வி) நடத்துக (921) *சோமாசி பெருமானுடன் இருந்து இப்பரிசு செய்விக்க* (ARASI,1904-05,p.131.)

செய்விக்கக் கடவர் (வி) (954) *உச்சைத்திருபலியின் முன்னையமிர்து செய்விக்கக் கடவர்* (TAS,ii,p.169-71.)

செய்விக்கிறபடி (வி) (1175) *ஊர்களிலே படைகளும் புகுதவிட்டு படவுகளுஞ் செய்விக்கிறபடி கேட்டு* (EI,xxii,14.)

செய்வித்த (வி) கட்டுவித்த (700) *செய்வித்த கற்றிருக்கோயில்* (ARE,1959-60,358.)

செய்வித்தது (வி) சொல்லிச் செய்தது (600) *பிரிதிவி விடபாங்குரதி அரைசந் செய்வித்தது* (SII,xii,p.53(fn.2).)

செய்வித்தார் (வி) நடைப்பெறச் செய்தவர் (870) *இத்$_3$த$_4$ர்மம் செய்வித்தார்* (SII,xix,163.)

செய்வித்தான் (வி) (771) *தாம்ர சா$_0$ஸநஞ் செய்வித்தான்* (EI,xvii,16.)

செய்வித்து (வி) (815) *கற்கோதிக்குமிழி செய்வித்து* (SII,xiv,26.)

செய்விப்பதான (வி) (1204) *திருநெல்வேலி உடையாரை இவர் அமுது செய்விப்பதான அனவரதானனால் அரிசி கலத்துக்கு* (SII,v,412.)

செய்விப்பது (வி) நடைபெறச் செய்வது (866) *பணி குத்துக்காற்படாது செய்விப்பது* (TAS,i,p.1-14.)

செய்வினை (பெ) செய்யும் முறை (1221) *ஐய்வகை வேழ்வியுஞ் செய்வினையியற்ற அறுவகைச் சமையமும் அழகுடன் திகழ* (IPS,256.)

செய்வுழி (வி) செய்யும் போது (905) *பல காலந் தவஞ் செய்வுழி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

செய்வேன் (வி) (883) *ஒரு த$_4$ர்மஞ் செய்வேனென்று* (SII,viii,633.)

செயகண்டிகை புறம் (பெ) சேகண்டிகை அடிப்பாருக்கு விட்ட நிலம் (1014) *காளப்புறம் 2ம் செயகண்டிகை புறம்* (SII,v,660.)

செயத் தம்பம் (பெ) வெற்றித் தூண் (1237) *செம்பொற் செயத்தம்பம் நாட்டி* (SII,v,431; EI,xxii,10.)

செயப்பட்டது (வி) (774) *நக்கங் கொற்றியாற் செயப்பட்டது* (SII,xiv,3; EI,xxxvi,15b.)

செயப்பாலன (பெ) செய்யவேண்டியவை (765) *இவர்கள் செயப்பாலன இவரும் இவர்கள் வழிக்கண்ணாருமே செய்வாராகவும்* (EI,xxxvi,20.)

செயல் (பெ) பணி (800) *ஸ்ரீ அச்சணந்தி செயல்* (SII,xiv,129-30.)

செயாது (வி) (861) *இரண்டும் செயாதொழிகில்* (TAS,ii,p.85-86.)

செயிதார் (வி) (879) *நடுவு செயிதார்* (SII,xiii,187.)

செயிது (வி) (955) *இப்பரிசு சிலாலேகை செயிது கொடுத்தோம்* (SII,xiii,110.)

செயிர் (பெ) போர் (1242) *செயிர்தரு கொற்றத் தெண்டிசையானை* (SII,viii,404.)

செயிவார் (பெ) (691) *இத்தளி வழிபாடு செயிவார்க்கு* (SII,i,151; EI,xvii,22.)

செயிவாராக (வி) நடத்துவாராக (765) *இவர் வழிக்கண்ணாருமே செயிவாராகவும்* (EI,xxxvi,20.)

செயிவித்த (வி) கட்டுவித்த (630) *கந்தசேனன் செயிவித்த தேவகுலம்* (SII,ii,72.)

செயிவு (பெ) மாசு (765) *செயிவு போகச் சிறந்த பொன்னும்* (EI,xxxvi,20.)

சொ்மரி (பெ) செம்மரியாடு (952) *அட்டிக்குடுத்த ஆடு சொ்மரிப் பாதியும் வெள்ளாடு பாதியும்* (SII,xiii,2.)

செரு (பெ) போா் (771) *நெல்வேலிச் செரு வென்று* (EI,xvii,16.)

செருக் களம் (பெ) போா்க்களம் (1056) *செருக்களத்தவன் விடு சத்துருபயங்கரன்* (SII,iii,29.)

செருகா (வி) இடைநுழையா (1186) *செருகாவிடையாமஞ் செலாதொரு காலும்* (SII,xii,263.)

செருத் தொழில் (பெ) போா்வினை (1068) *முதுவணன் ஓட விரித்த தலையோடு விக்கலன் ஓட செருத்தொழில் அழிந்து சிங்கணன் ஓட* (EI,xxi,38.)

செருந்திப் பூ (பெ) செருந்திப்பூ போன்ற அணி (1050) *செருந்திப்பூ பதின்னொன்றும் கொய்சகம் இரண்டும்* (SII,v,520.)

செருப்பு (பெ) மிதியடி (864) *கருப்பூரந் தலையாகச் செருப்பு கடையாக* (MCCM,viii,p.98-104.)

செருவலி (பெ) போா் வன்மை (1220) *நிலங்காவற்றொழில் பூண்டு செருவலியில் முருகனென்றும்* (CHEN,xiv,p.362-64.)

செல்கை (பெ) செலவாதல் (1102) *நாள் ஒன்றுக்குச் சந்தனக்காப்பு அரைக் கழஞ்சும் இன் நெல்லும் செல்கைக்கு இப்பெரிய வேளான் செய்வித்த திருநந்தவாநம்* (SII,vii,143.)

செல் நடை (பெ) (= செந்நடை), அன்றாடம் நடைபெறும் கோயில் பூசை (1000) *திருகுணவாய்ச் செல்லுஞ் செல் நடை முட்டிச்சோா்* (SII,v,784.)

செல்ல (வி) போதுமானதாக (1012) *முப்பிடிக்கு செல்லக் குடுத்த நெல்லஞ் ஞாழி* (SII,vii,863.)

செல்லக்கடவ (வி) நடக்க வேண்டிய (985) *பாற்ப் போனகத்துக்கு செல்லக்கடவபடிய்* (SII,xiii,35.)

செல்லக்கொண்டு (வி) செலவாகக் கொண்டு (987) *இப்பொன் இருநூற்று கழைஞ்சாக செல்லக் கொண்டு இதன் சுட்டப்பட்ட பல தடியா தன்தரத்து மடக்கி* (SII,xiii,76.)

செல்லப்பண்ணுக (வி) நடைபெறச் செய்க (1141) *திருப்படிமாற்றுள்ளிட்டு வேண்டும் நிமந்தங்கள் செல்லப்பண்ணுக* (SII,xiv,250.)

செல்லப்பெறாா் (வி) செல்லக் கூடாது (866) *சட்டா் படைக்கலம் பிடித்துக் குட்டத்துக்கு செல்லப் பெறாா்* (TAS,i,p.1-14.)

செல்லா (வி) போகாத (1000) *முப்பிடிக்கு செல்லக் குடுத்த நெல்லஞ்ஞாழியும்* (SII,vii,863.)

செல்லா (வி) உட்படாது (910) *இவை விலயு மொற்றியுந் செல்லா* (SII,xii,83.)

செல்லாத்தது (வி) செலுத்தப் படாதவை (1236) *கடமை சென்று செல்லாத்ததின்னு ஆண்டு வரையும் ஸபை$_{4}$யாரையும்* (TAS,iii,p.59-63.)

செல்லாநிற்க (வி) நடக்க (700) *ஐம்பதாவது ராஜ்ய ஸம்வத்ஸரஞ் செல்லாநிற்க* (EI,xxxviii,4.)

செல்லா நிற்ப (வி) நடைபெற (774) *ராஜ்ய வா்ஷம் ஆறாவது செல்லா நிற்ப* (SII,xiv,3; EI,xxxvi,15b.)

செல்லா நின்ற (வி) செல்கின்ற (844) *செல்லாநின்ற யாண்டு பந்நிரண்டு* (TAS,ii,p.13-14.)

செல்லா நின்றது (வி) நடைபெற்றது (700) *திருவிராச்சியஞ் செல்லா நின்றது பதினேழாக* (ARE,1959-60,358.)

செல்லாமை (வி) இயங்காமை (887) *இப்பரிசு ஸபை$_{4}$யாயுந் தனியாயுஞ் செல்லாமை காத்தாரை* (SII,vii,421.)

செல்லுக்கொண்டு (வி) செலுத்திக் கொண்டு (1008) *எப்போ்ப் பட்ட இறையும் இவன் காசு ஐம்பது மிட்டு செல்லுக்கொண்டு* (SII,v,638.)

செல்லும் (வி) சோ்ந்த (866) *இதனோடு செல்லுங் கரையுங் காராண்மை மீதாட்சி உள்ளடங்க* (TAS,i,p.1-14.)

செல்வதாக (வி) நடைபெறுவதாக (765) *பாற்சாத்தும் பரதத்தியுஞ் செல்வதாக* (EI,xxxvi,20.)

செல்வதாய்த்து (வி) நடைபெறும் (845) *இத்$_{3}$த$_{4}$ரம்மஞ் சந்த$_{3}$ராதி$_{3}$த்யகத$_{3}$ஞ் செல்வதாய்த்து* (EI,xi,22b.)

செல்வம் (பெ) பொருள் (905) *செப்பரிய செழுஞ் செல்வத்து* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

செல்வி (பெ) பெண் தெய்வம் (1081) *பழியுகந்து குடுத்த புகழின் செல்வியும்* (SII,iii,78.)

செல்விது (வி) நடப்பது (800) *அறுநாழி யரியு நந்தாவிளக்குஞ் செல்விது* (TAS,iii,p.203-05.)

செல (வி) செல்லுமாறு (771) *சூழியானை செலவுந்திப் பாழிவா யமா் கடந்து* (EI,xvii,16.)

செலவளவு வாசி (பெ) செலவு செய்யுங்கால் ஏற்படும் குறைப்பாடு (1201) *குறுணி அறுனாழி செலவளவு வாசி நெல்லு எழுகுறுணி இருனாழி* (SII,xvii,599.)

செலவறுக்கை (பெ) கணக்குத்தீா்க்கை (1300) *இவா்பேரால் இட்ட கிக்கி நிலை எனக்குப் பரமாய் நான் செலவறுக்கையில் இவா்க்கு நடுவில் மண்டலத்திலும்* (SII,viii,315.)

செலவாக்காதபடியால் (வி) செலுத்தாதபடியால் (1286) *கேரளாந்தக விழுப்பரையா் முன்நின்று கடமை செலவாக்காத படியாலே இவா் மருமக்களில்* (SII,viii,591.)

செலவாக்குவிப்பது (வி) செலுத்துவிப்பது (1286) *உற்பத்தி உள்ளது அற விலையாக்கி கொள்வாா்க்கு விற்றுக் கடமை செலவாக்குவிப்பதென்று* (SII,viii,591.)

செலவாக (வி) கொடுப்பதற்காக (868) *பொலிகூலிக்குச் செலவாக காசு கொள்ளா* (SII,xii,58.)

செலவின் (பெ) செலவிற்காக (954) *இச் செலவி னமைக்ஞ்ஞ பூமியாவது* (TAS,iii,p.169-71.)

செலவு (பெ) செலுத்துதல் (914) *சோற்றால் வந்த அழிவெல்லா மிவ்வேழாயிரவரிலுமேய் செலவு பெறுவதாகவும்* (SII,viii,529.)

செலவு (பெ) செலுத்தும் தொகை (914) *ஆவணக் களத்தேய் கச்செலவறக் கொண்டு சென்று* (SII,xix,191.)

செலவு (பெ) பூசை முதலிவைகளுக்கான பொருள் செலவுத் திட்டம் (800) *அறுநாழியரியு நந்தாவிளக்குஞ் செல்விது இச்செலவு விலக்குவாா் மூழிக்கள* (TAS,iii,p.203-05.)

செலவுந்தி (வி) படை நடத்தி (771) *மத்தயானை செலவுந்தி மான வேல் வலனேந்தி* (EI,xvii,16.)

செலவு பத்திரம் (பெ) நடைமுறை ஏற்பாடு பற்றிய எழுத்துச் சான்று (885) *செலவு பத்திரஞ் செய்துகுடுத்தேன்* (TAS,ii,p.80-82.)

செலவேய் (வி) நடப்பதாக (1120) *தருமம் நீடூழி செலவேய்* (SII,iv,1289.)

செலவோலை (பெ) (விலைப்பொருள்) செலுத்தியதற்கான இரசீது (914) *இதுவே விலை யாவணமும் இதுவே பொருள் மாவறுதிப் பொருள்ச் செலவோலையும் ஆவதாகவும்* (SII,xix,191.)

செலாநிற்ப (வி) நடைபெற (771) *மூன்றாவது செலா நிற்ப* (EI,xvii,16.)

செலித்துவித்து (வி) (= செலுத்துவித்து) (1123) *ஸ்ரீவைஷ்ணவா்களே செலித்துவித்து கொள்ளக் கடவதான* (SII,xiv,199.)

செலுத்த (வி) (808) *யாவரேனுங் கோச்சேவது செயிது செலுத்த வொட்டி குடுத்தோம்* (EI,viii,29.)

செலுத்தக்கடவா் (வி) கொடுக்கக் கடமைப்பட்டவா் (932) *மூத்தவகள் இருவருங் கண்டு செலுத்தக் கடவா்* (SII,vii,173.)

செலுத்தக் கடவன (வி) கொடுக்க வேண்டியன (887) *இந்நெல்லால் நியதிப்படி இவகள் கொண்டுவந்து செலுத்தக் கடவன* (SII,xiv,16a.)

செலுத்தாது (வி) கொடுக்காது (887) *செலுத்தாது குத்துக்காற்படில்* (SII,xiv,16a.)

செலுத்தி (வி) அனுப்பி (1012) *சேனை செலுத்தி* (SII,vii,863.)

செலுத்திக்கப் பெறார் (வி) செலுத்தக் கூடாது (951) *ஊரா ரவிரோதத்தால்க் கூடியு மிச்செலவு மற்றொன்றினுக்கு செலுத்திக்கப் பெறார்* (TAS,v,p.288-89.)

செலுத்திச்சு (வி) செலுத்துவித்து (1000) *பல நூறாயிரத் தாண்டுஞ் செலுத்திச்சு கொண்டருளுக* (TAS,ii,p.173-207.)

செலுத்திய (வி) அனுப்பிய (1051) *நன்கெழுதி செலுத்தியப் பின்னை* (SII,vii,1046.)

செலுத்தினான் (வி) நடைபெறச் செய்தவன் (845) *இத்தர்மமஞ் செலுத்தினான்* (EI,xi,22B.)

செலுத்துகில் (வி) நடத்தினால் (944) *நிச்ச நடையே செலுத்துகில் அல்லதிது கொள்ளப்பெறார்* (SII,v,783.)

செலுத்துவதனுக்கு (பெ) நடைபெறச் செய்வதற்கு (810) *இப்பரிசு செலுத்துவதனுக்கு திருமலை வீரரும் பராந்தக வீரரும் ரக்ஷை* (SII,xiv,42.)

செவ்வரி ஆடு (பெ) செம்மரி ஆடு (1134) *சாவாமூவாச் செவ்வரி ஆடு தொண்ணூறும்* (SII,v,645.)

செவ்வாடு (பெ) செம்மரி ஆடு (1277) *கை கொண்ட செவ்வாடு தொண்ணூறும்* (SII,v,648.)

செவ்வாய் (பெ) சிவந்த வாய் (800) *பால் கொண்ட செவ்வாய்* (EI,xiii,10.)

செவ்வாரம் (பெ) பாதி வாரம்: நிலவிளைச்சலில் பாதி (953) *இந்நிலத்திற் செவ்வாரமும்* (SII,xiii,74.)

செவ்விச்ச (வி) (= செய்வித்த) (1000) *சார்த்திச் செவ்விச்ச கிணறு* (EI,xxx,19(i).)

செவ்வித்தாள் (வி) உண்டாக்கினாள் (1137) *திருவீரட்டாநமுடையார் கோயிலில் இத்திருமடைப்பளி செவ்வித்தாள்* (SII,vii,914.)

செவ்வேய் (பெ) நேராக (1006) *மூலையில் நின்றுங் செவ்வேய் வடக்கு நோக்கி* (SII,v,518.)

செவ்வை (பெ) செம்மையான: தூய்மையான (1126) *இகோயில் பண்டாரத்து கொண்ட செவ்வை காசு நிறை பொன் இருநூறு முபதின் கழைஞ்சு* (SII,xix,214.)

செவ்வை (பெ) நேர் வழி (1127) *தெற்கு நோக்கின செவ்வைக்கு மேற்கும் தெந்நெல்லை திருவுணாழிகை* (SII,xiv,213.)

செவரி ஆடு (பெ) செம்மரி ஆடு (1115) *திருநுந்தாவிளக்கு ஒன்றுக்கும் விட்ட செவரி ஆடு* (SII,v,640.)

செவி கவர (வி) காதால் கேட்க (1243) *அறைகடலி னிசையுடநே யண்டர் வேயினாம்பலிசை செவி கவர* (EI,xxiii,27.)

செவி கழுவி (வி) கேட்டுத் துய்த்து (815) *தீந்தமிழிற் செவிகழுவியும்* (SII,iii,206b.)

செவிடு (பெ) ஒரு முகத்தல் அளவு (878) *காயம் இரு செவிட்டு* (SII,xiv,13.)

செழிஞர் (பெ) பாண்டியர் (1005) *விளங்கும் யாண்டே செழிஞரைத் தேசுகொள்* (SII,iii,52.)

செழிய வாணியர் (பெ) ஒரு வகை வணிகக் குழு (863) *குன்றத்துச் செழிய வாணியர்களோம்* (SII,xii,53.)

செழியன் (பெ) பாண்டியன் (771) *செழியன் வானவன் செங்கோற் சேந்தன்* (EI,xvii,16.)

செழுந்தகை (பெ) வளம் பொருந்திய (905) *ஏதமில் சோமாசிகுறுச்சிச் செழுந்தகைய் நிலத்துப்படும் நிலத்தை* (TASSI,1962-65, p.1-31; PNDCP,p.95-115.)

செழும் (பெ) சிறந்த (1197) *செழு முத்தின் குடை நிழற்கீழ்* (SII,v,1359.)

செற்றி (பெ) பள்ளியறை (1545) *பெருமாள் சந்நதியில் செற்றியில் அமுது செய்தருளும் அப்படி 1க்கு பணம்* (TDI,v,47.)

செற்று (பெ) கோபித்து (1068) *சாமுண்ட ராஜனைச் செற்றவன் சிரத்தினையறுத்து* (EI,xxi,38.)

செறி (வி) அடர்ந்த (1024) *சிட்டருஞ் செறிமிளை யொட்டவிஷயமும்* (SII,i,68.)

செறிந்து (வி) நெருங்கி (1012) *விழப் பாய்ந்து செறிந்துயர் புதுமத கிடறிப் போர்க் கலிங் கிடந்து* (SII,vii,863.)

செறி பொழில் (பெ) அடர்ந்த சோலை (1044) *பைம்புனல் வயலுஞ் செறி பொழிலும்* (TMPL,xviii,p.293.)

செறு (பெ) நீர்நிலை (1030) *நடுவுபட்ட பணிக்கய மென்னுஞ் செறுவும் ஓடையு முட்பட்ட* (SII,viii,67.)

செறு (பெ) வயல் (731) *இச்செறுவினுள் பொற்றத்தனா கூறாயதும்* (SII,viii,331.)

செறு (பெ) வயலின் பெயர் (550) *போக்குவாய்ச் செறுவின்* (TASSI,1958-59,p.41-83.)

செறுத்து (வி) கோபித்து (1055) *சேனையும் தானும் செறுத்து வந்திறுத்த ஆஹவமல்ல* (SII,v,512.)

செறு பயறு (பெ) பாசிப்பயறு (1200) *செறுபயறு மடை 2 மோர் மடை 1 1/2 கதளி வாழைக்கா 12* (TAS,vi,47.)

செறுவு (பெ) ஒரு நிலப்பரப்பளவு (966) *உமா பிடாரிஎன்னும் செறுவு மிகிதிக் குறைமை உள்ளடங்க பதினேழு செறுவில் போ4க3த்தில்* (SII,vii,810)

செறுவு (பெ) வயல் (985) *வடசேரி மேடு பார்த்திபுஞ் செறுவு பார்த்தியமான பார்த்தி* (SII,xix,370.)

சென்நீர் வெட்டி (பெ) (= செந்நீர் வெட்டி) (926) *இந்நிலத்தால் சென்நீர் வெட்டி செய்யாதேய்* (SII,viii,668.)

சென்மம் (பெ) வாழ்நாள் முழுவதும் உள்ள உரிமை (1267) *இந்நில ஆறுமாவும் காராண்மைச் சென்மமாகத் தந்தோம்* (SII,v,739.)

சென்ற (வி) கழிந்த (866) *பதினான்கு நூறாயிரத்து நாற்பத்து ஒன்பதினாயிரத்து எண்பத்து ஏழு சென்ற நாள்* (TAS,i,p.1-14.)

சென்ற (வி) ஒருவன் மேற் சென்ற (800) *தென்னவன் முனையைக் கெடச் சென்ற மாறன்* (EI,xiii,10.)

சென்றது (வி) ஆயிற்று (550) *பள்ளிச் சந்தமாக பரதத்தி சென்றது* (TASSI,1958-59,p.41-83; PLCP,p.26-32.)

சென்று (வி) போய் (811) *திருத்தலை தொழுமின் சென்று* (SII,xiv,41.)

சென்னடை (பெ) (= செந்நடை) (866) *அக நாழிகைச் சென்னடைக்கு அட்டின பூமி* (TAS,i,p.1-14.)

சென்னீர்ப் பொதுவினை (பெ) (= சென்னீர் வெட்டி) (1008) *குற்றேத்தம் பண்ணவுங் கூடை நீரிறைக்கவும் பெறாததாகவும் சென்னீர்ப் பொதுவினைச் செய்யாததாகவும்* (EI,xxii,34.)

சென்னீரமஞ்சி (பெ) (= செந்நீர் வெட்டி) (962) *தறிப் பொறும் சென்னீரமஞ்சியும்* (SII,vi,324.)

சென்னீரமஞ்சி (பெ) (1058) *இன்னிலம் உழுகுடிகள் சென்னீரமஞ்சி உள்ளிட்ட ஏரியமஞ்சி செய்யக் கடவர் அல்லாதாராக* (SII,vii,947.)

சென்னெற்றீட்டல் (பெ) செந்நெல் அரிசி (878) *ஒரு பொழுதைக்கு வேண்டுவன அரிசி சென்னெற்றீட்டல் நானாழி* (SII,xiv,13.)

சே

சே (பெ) காளை (1300) *பசு 4 கிடாரி 2 சே விரண்டு ஆக உரு 8* (SII,iv,310.); (1300) *சேக்கள் கிடாக்களுக்கு பணமொருமாவும்* (AVNM,6,p.36-40)

சேகண்டிகை (பெ) வட்டத்தகட்டு மணி (900) *திருப்பணி மூன்று தேசகாலமும் சேகண்டிகை உட்பட* (SII,xii,114.)

சேங்கன்று (பெ) ஆண் கன்று (991) *பசு இருபது இவை இருபாலும் சேங்கன்று ஈன்றால் உள்ளன நாகுக்கும் பசுவுக்கும் மாறிக் கொள்வதாகவும்* (SII,xiii,132.)

சேசை (பெ) பிற (1100) *மேல் நோக்கின மரமும் சேசை ஸித்$_3$தா$_4$யமுவையும் ஸர்வமானியமாக* (EC,ix,Nl.62a.)

சேட்டையர் (பெ) மூதேவி (959) *குமண்பாடி சேட்டையர்க்கு அச்சனாபோ$_4$க$_3$த்துக்கு* (SII,iii,169.)

சேட்டையார் (பெ) மூதேவி (1014) *சேட்டையார் கோயிலுந் திருமுற்றமும்* (SII,ii,5.)

சேடகச் சண்டை (பெ) ஒரு வாத்தியம் (1012) *நாடகத் துழதி நவின்றது சேடகச் சண்டையுங் தாளமுங் காளமும்* (SII,vii,863.)

சேடு (பெ) திரட்சி (800) *சேட்டிணர் பூந்தண் பொழில்* (EI,xiii,10.)

சேணியங்காடியார் (பெ) ஒரு வணிகர் பிரிவு (1329) *செட்டிகள் வாணிகர் சேணி யங்காடியார் தெருவிலங்காடியார் பேர்க்கடமை அச்சுத்தறி* (SII,iv,287.)

சேணியர் தறி (பெ) சேணிய நெசவு சாதியினர் தறி மீது வரி (1329) *தெருவிலங்காடியார் பேர்க்கடமை அச்சுத்தறி சேணியர்தறி சாலியத்தறி பறைத்தறி செக்குக்கடமை* (SII,iv,287.)

சேதம் (பெ) சீர்கேடு (1014) *கிணற்றுக்கும் தொட்டிக்கும் சேதத்துக்கும் ஆட்டாண்டு தோறும் புதுக்குப்புறமாக வச்ச* (SII,iii,4.)

சேதம் (பெ) அழிவு (1123) *முதல் முதலே முதலுக்கு சேதமின்றியேய் சந்திராதித்தவற் நிற்பதாகவும்* (SII,xiv,198.)

சேது (பெ) இராமேசுவரம் (1068) *விரதமு மாற்றிச் சூழிமஞ் சேது வரம்பாக* (SII,iv,529.)

சேது (வி) அமைத்து (992) *திடல் வயக்கின இடமும் உள்பட சேதுக்குடுத்த நிலத்துக்கு* (SII,viii,660.)

சேதும் (இ) (= செய்தும்): ஓர் அசைச்சொல் (869) *நெய் பால் தயிர் ஐஞ்ஞாழிச் சேதும் இளநீர் இருபது* (SII,vii,523.)

சேதுமாற்க்கம் (பெ) இராமேசுவரத்துக்குச் செல்லும் வழி (1728) *இத்தனை னாள் யெங்கள் சீமையில் சேது மாற்க்கத்தில் களமாவூரில்* (IPS,879.)

சேந்தி (பெ) ஒரு செடி (1200) *மதுராபுரி முழுதுஞ் சேந்தி விளையச் சீறி மதம் பொழியு மயிராபதம்* (SII,viii,134.)

சேமச் செடி (பெ) காவல் மரம் (1142) *...ந்தால் சேமச்செடியும் கையோலையும் ...ன்...மறுத்தார் மறுத்த* (SII,xiv,251.)

சேமஞ்செய்து (வி) காத்து (953) *சடையமரையன் காலி கொள்ள மகனச் சேமஞ்செய்து எதிரேய் நடந்து* (AVNM,7,p.29)

சேமம் (பெ) வைப்புப் பொருள் (1267) *சீவல்லவ னான ஆசலாயற்கு சேமமாகக் குடுப்பித்த பொந்...* (SII,v,737.)

சேமாடு (பெ) காளைமாடு (1300) *சேமாடு ஒன்றுக்குக் காசு இரண்டும்* (SII,viii,442.)

சேய் (பெ) மகன் (905) *கோச்சடையற்குச் சேயாகி வெளிப்பட்ட செங்கண்மால்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சேர்வல்லாமை (பெ) ஒரு சேர இல்லாமை (1132) *இவ்வாள்வார்க்கு சேர்வல்லாமையில் இந்நிலம் பதினோறாவது முதல் மாறி* (SII,xiv,229.)

சேர்வுபட்டு (வி) நட்பாகி (1175) *ஏழகத்தாரிலும் மறச்சாமந்தரிலும் நமக்குச் சேர்வுபட்டு நின்றுடன்செய்கின்ற இராஜராஜக் கற்குடியராயனும்* (EI,xxii,14.)

சேர்வை (பெ) பல்லக்குத் தூக்குவோர் (1517) *பல்லக்குச் சேர்வை அத்திஅயன பேர் 2* (SII,viii,165.)

சேர்வை (பெ) ஒன்றன் பொருட்டு சேர்த்த நிலம் (1462) *நாராயண புரப்பற்றில் சேர்வையான சாத்தக்குடி மருதூரில்* (TDI,ii,12.)

சேர்வைப் பித்தளை (பெ) கலப்புள்ள பித்தளை (1217) *சேர்வைப் பித்தளைத் திருக்குத்துவிளக்கு ஒன்றினால்* (SII,viii,431.)

சேர்வை பண்ணி நின்று (வி) சேவை பண்ணி (1444) *திருமலை ஆண்டானை வரக்காட்டி இவர் தங்களைச் சேர்வை பண்ணி நின்று நாயகரையும் நாயகர் நாச்சியாரையும்* (IPS,705.)

சேர (வி) அடைய (905) *வட புலவர் அடலழிந்து களஞ் சேர* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சேர நாடு (பெ) மலையாள நாடு (899) *சேர நாடுடைய குமாரந்தை குறும்பராதித்தநாகிய* (SII,xii,86.)

சேரமான் (பெ) சேர அரசன் (871) *சேரமான் கோத் தாணுஇரவி* (SII,iii,89.)

சேரல் (பெ) மொத்தம் (956) *சேரலரிசி ஒன்பதி னாழி* (SII,xiv,86.)

சேரலன் (பெ) சேர நாட்டரசன் (950) *மற்றவற்குச் சேரலன்றன் மடப்பாவை* (TASSI,1962-65,p.32-52.)

சேராது (வி) அடையாமல் (1005) *ஆட்டொருக் கால் அழிவு சேராது* (SII,vii,34.)

சேரி (பெ) குடியிருப்பு (966) *திருநொந்தாவிளக் கொன்றுக்கு இவ்வூர் அறுவை வாணியச் சேரி குடி ஆசான் அட்டின ஆடு ஐம்பத்தைஞ்சு* (SII,xiv,94.); (886) *பனையூர் இரண்டு சேரி ஸபை$_4$யோம்* (SII,v,608.)

சேரி (பெ) ஊரின் ஒரு பகுதி (805) *எல்லாச் சேரித் தொறு நிலையும்* (SII,vi,359.)

சேல் (பெ) கெண்டை மீன்கள் (1044) *சேலூர் பைம்புனல் வயலுஞ் செறி பொழிலும்* (TMPL,xviii,p.293.)

சேலை (வி) பெண்கள் உடுக்கும் ஆடை (1546) *னாச்சிமாருக்குச் சேலைக்கும் வேஷ்டி உத்தரியம் ரேகை பொன் 4* (TDI,v,71.)

சேவகக் காசு (பெ) ஒரு வரி (1066) *வேலிக்காசும் சேவகக் காசும் வலங்கை இடங்கை மகந்மையும்* (SII,v,976.)

சேவகம் (பெ) வீரம் (1044) *வேணாட்டரசை சேணாட்டொதுக்கி கூவகத் தரசை சேவகந் துலைத்து* (SII,v,633.)

சேவகம் (பெ) ஒரு வரி (1288) *எற்சோறு கூற்றரிசி சேவக முட்டாவாள் மற்றும்* (IPS,401.)

சேவகம் சேவித்து (வி) தொண்டுசெய்து (1530) *இப்படிக்கு இறு.... இறுத்தும் பெறுவன பெற்றும் சேவகம் சேவித்தும் போகவும்* (IPS,742.)

சேவகர் (பெ) வீரர் (795) *உள் வீட்டி னொற்றைச் சேவகர்* (TAS,i,p.158-59.)

சேவகரு (பெ) வீரன் (594) *பொற்காடான்னாரு சேவகரு* (CHHS,1971/113.)

சேவகன் (பெ) வீரன் (560) *அதிரைசரு சேவகன் கதவசாத்த* (CHHS,1971/62.)

சேவடி (பெ) சிவந்த பாதம் (905) *கடற்றிரைகள் சென்று தன் சேவடிப் பணிய* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சேவல் (பெ) முருகக் கடவுளின் சின்னம் (921) *சேவலுயர்கொடிக் குமரனெனச் சீறி* (SII,iii,206a.)

சேவிக்க (வி) வணங்க (1039) *திருவண்ணாமலை யுடையாரைச் சேவிக்க வந்த சிவ சோகிகள்* (SII,viii,68.)

சேவிக்கும் (வி) வணங்கும் (1202) *தேவி தைப்பூசத் திருநாளிலே சேவிக்கும் பரதேசிகளை* (TAS,viii,p.26-28.)

சேவித்தார் (பெ) வணங்கியவர் (1024) *திருவிழாவில் சேவித்தாரும் ஆடிநார்க்கும் பாடினார்க்கும்* (EC,x,Kl.112a.)

சேவித்து (வி) பூசித்து (1014) *சிவயோகிகள் சேவித்து வந்தால் சேவித்து வந்த சிவயோகிகள்* (SII,ii,28.)

சேவிப்ப (வி) வணங்க (1154) *மன்நவர் வந்திறை சுமந்து வந்தீண்டி சேவிப்ப ஊழியூழி* (SII,vii,1005.)

சேவிப்போம் (வி) செய்விப்போம் (887) *சேவிப்போமானோம் சபை$_4$யோம்* (SII,vii,421.)

சேவுக்கர் (பெ) (= சேவகர்) (500) *அறப்புறந் நடையாட்டுவதூஞ் செயும் பாண்டங்கரும் சேவுக்கரும் விரும்மச்சாரிகள்ளும்* (AVNM,1,p.67-69)

சேழம் (பெ) குறை (1100) *அதினு சேழம் பறையுமவன் இருந்நால்க் கழைஞ்ஞு* (TAS,iv,p.145-46.)

சேறு (பெ) நிலப் பேர் (1000) *இழிஞ்ஞினத்து சேற்றின் மேல்க் கொள்ளுந் நெல் பதினாழியால் ஐம்பது பறை* (TAS,ii,p.173-207.)

சேனாபதப் பெருவிலை (பெ) விஷ்ணு கோயில் நிலங்களை விஷ்வக்ஷேனர் பெயரால் ஏலத்தில் விற்றல் (1285) *ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் ஸ்ரீகாரியஞ் செய்வார்களுக்கும்(ச்) சேனாபதப்பெருவிலையாக விற்றுக்குடுத்த படி* (IPS,398.)

சேனாபதி (பெ) படைத்தலைவன் (771) *இப்ப்ரச$_{2}$அஸ்தி பாடின சேனாபதி* (EI,xvii,16.); (1000) *கொடும்பாளூர் உடையான் சேனாபதிகள் மதுராந்தக விளங்கோ...* (SII,xvii,509.)

சேனாமுகத்தார் (பெ) ஒரு வணிகர் குழு (850) *மணிக்கிராமத்தார்க்கும் சேனாமுகத்தார்க்கும்* (JOR,vi,p.304.)

சேனை (பெ) படை (800) *பல்லவன் சேனைக் கன்று புறப்பட* (EI,xiii,10.)

சேனை (பெ) ஒரு வணிகர் குழு: (= செனாமுகம்?) (922) *இப்பரிசே சேனையிலும் இருவரைக் கொள்வதாகவும்* (SII,vi,295.)

சேனைக் கடை (பெ) சேனைக்கடையார் மீது விற்பனை வரி (1300) *தறி இறை தட்டார்பாட்டம் சேனைக்கடை வேட்டைக்காறர்க் கடையும் குளவடை ஒழுக்குநீர்* (SII,viii,245.)

சேனை செலுத்தி (வி) படையை அனுப்பி (1012) *பொங்கு புலிப்போத்துப் புதுக்கத் துங்கத் திக்கின்ற சேனை செலுத்தி* (SII,vii,863.)

சேனையங்காடியார் (பெ) ஒரு வாணிகர் சாதி (1333) *வாணிகர் சேனைஅங்காடியார் செக்கு குடிமக்கள்* (TDI,i,100.)

சேனையார் (பெ) (= சேனை): ஒரு வணிகர் குழு (985) *திருவிடைமருதில் சேனையார் வழி குடுத்த ஈழக்காசு 8* (SII,xiii,7.)

சேனை அங்காடி (பெ) சேனை என்ற வணிக சாதியார் மீதான விற்பனை வரி (1465) *செக்கிறை தறிக்கடமை சேனைஅங்காடி பச்சைப்பாட்டம் ஒலிவண்ணாரப்பாறை* (TAS,vi,82.)

சை

சைய்வ்வ ஆசார்ய்யர்கள் (பெ) சைவ சமய குரவர்கள் (1032) *இது இவ்வம்ச$_{2}$த்துள்ள சைய்வ்வ ஆசார்ய்யர்களே இத்தன்மம் ரக்ஷிக்க* (SII,ii,20.)

சைய்வாக$_{3}$மங்கள் (பெ) சைவ சமய வழிபாட்டு விதி நூல்கள் (1200) *இப்படி சைய்வாக$_{3}$மங் களிலும் பஞ்சராத்ர ஸம்ஹிதைகளிலும்* (SII,xvii,603.)

சைவாசாரியம் (பெ) சிவன்கோயில் பூசைத் தொழில் (1196) *இக்கோயில் சைவாசாரியம் செய்வார்கள் ஸ்ரீசதாசிவபட்டர்* (SII,vii,1041.)

சொ

சொடிம்மைவியம்(?) (பெ) ஒரு வரி (1385) *புலைதிறை சொடிம்மைவியம் வேடுகோள் சுங்கமகமை தறவளிக்கை* (EC,ix,Ht.93.)

சொந்ற (வி) தண்டின (985) *அருளந் பகையனை சொந்ற பொந் பதிநைங் கழஞ்சு* (SII,xix,55.)

சொம்பாதி (பெ) சரிபாதி (1207) *திட்டும் மென்றும் கூடின ஊர்களால் பயிருக்கு ஒன்று சொம்பாதியால் வந்த நிலத்துக்கு* (SII,viii,263.)

சொரிஞ்சு (வி) தெளித்து (1523) *சவம் அடிக்கினால் மற்றா நாள் தண்ணீர் சொரிஞ்சு காடு ஆற்றுகிறதும் இந்த இரண்டு தொழிலுங் கழித்து குடுத்தமைக்கு* (IPS,847.)

சொல் (பெ) புகழ் (833) *சொன் மாத் தண்டமிழ்க் கூடல்* (SII,xiv,44.)

சொல் (வி) கூறு (800) *மணிப்பாறை அப்பாறை சொல்லென் விளைந்த வினையை* (EI,xiii,10.)

சொல்லப்பட்ட (வி) கூறப்பட்ட (875) *மேல் சொல்லப்பட்ட உத்தரமேருச் சதுர்வ்வேதி$_{3}$ மங்கலத்து* (SII,vi,347.)

சொல்லி (வி) ஓதி (866) *சாகையிலுங் கற்பத்திலுங் கணத்திலுந் துருச் சொல்லி* (TAS,i,p.1-14.)

சொல்லிய (வி) அறிவித்த (765) *நாட்டு வியவன் சொல்லிய* (EI,xxxvi,20.)

சொல்லியது (வி) கூறியது (700) *செல்லன் சி$_{1}$வதாஸந் சொல்லியது* (EI,xii,27; SII,xii,10-11.)

சொல்லியும் (வி) (849) *எப்பிழை சொல்லியும் இவகளைத் தடுமாறப் பெறார்* (TAS, ii, p.67-68.)

சொல்லின (வி) பாடினவை (811) *வேளான் சாத்தன் சொல்லின இவையும்* (SII,xiv,41.)

சொல்லு (வி) கூறுவாய் (800) *பாண்மகனேய் பண்டெலாம் யாமறிது மெங்கயர்க்கேய் சொல்லு நீய்* (EI,xiii,10.)

சொலப்பட்ட (வி) புகழப்பட்ட (771) *சொற் கண்ணாளர் சொலப்பட்ட* (EI,xvii,16.)

சொலும் (வி) நீக்கும் (950) *ஒடம் அழிவு சொலுந் தச்சனுக்கு* (SII,viii,652.)

சொற்கண்ணாளர் (பெ) புலவர் (771) *சொற் கண்ணாளர் சொலப்பட்ட* (EI,xvii,16.)

சொற்படி சொல்லியபடி (1002) *மன்றாடி சொற்படி கண்ணன் எழுத்து* (TMPL,i,p.193-94.)

சொற் பிழை (பெ) எழுதிய சொல்லில் தவறு (1123) *ஓலைக் குற்றம் எழுத்துக் குற்றஞ் சொற் பிழையென்று சொல்லப் பெறாதோமாகவும்* (SII,vi,434.)

சொற்புகு (வி) பாராட்டப் பெற்ற (800) *சொற்புகு தொண்டைக்கனி புகு தூமதிபோன்* (EI,xiii,10.)

சொற்றிறம் (பெ) சொல் வன்மை (1121) *கலைமகள் சொற்றிறம் புணர்ந்த கற்பினளாகி* (SII,xvii,605.)

சொன்று (வி) நீக்கி: திருத்தி (941) *அரங்கழிவு சொன்றுடனுன்றிசக்கும் தச்சனுக்கு* (SII,viii,529.)

சொன்ன (வி) (796) *உப$_{4}$யகுல பரிசு$_{2}$த்$_{3}$த$_{4}$ நீ போத்தர என்று சொன்ன இடம்* (SII,iv,135; MASI,lxiii,p.54-59.)

சொன்னமை (வி) சொல்லியது (896) *மஹாஸபை$_{4}$ யார்க்கு வந்து சொன்னமையி* (SII,xiii,312.)

சோ

சோடி (பெ) மானிய நிலத்தின் மீது செலுத்தும் குறைந்த வரி (1375) *....நூலாயம் சூலவரி சோடி நத்தவரி காத்திகைமாத இரட்டி* (SII,iv,343.); (1442) *மல்லசுவாமிகளே நடத்தும்படிக்கு சோடி சூலவரி கழித்து தாராபூர்வமாகக் குடுத்தோம்* (SII,xvii,751.)

சோதி (பெ) ஒளி (800) *பருதி கென் போதர விடுமோ இணைச்சோதி* (EI,xiii,10.)

சோதிச்சு (வி) ஆராய்ந்து (1018) *பண்டாரஞ் சோதிச்சு ஸ்ரீ பண்டாரப் பொத்தகப் படி* (SII,vii,891.)

சோதி நான்று (பெ) சுவாதி நட்சத்திரம் நாள் (892) *ஆவணித்திங்கள் சோதி நான்று* (SII,vi,371.)

சோதி மாலை (பெ) விளக்கு மாலை (985) *சோதி மாலை எரிப்பதாக நக்கீரன் மாணிக்கம் வைத்த துளைப்பொன்* (SII,xix,153; IPS,76.)

சோதிவி (பெ) நாட்குறிப்பு (992) *சோதிவி சொல்லுவான் இருபத்தேழு நாள்க் கூற்று ஒலை கரபுரத்து தூக்க* (SII,xix,357.)

சோதி விளக்கு (பெ) ஒளிரும் விளக்கு (803) *பேராடு ஐம்பது இவை கொண்டு சந்திராதிதற் சோதி விளக்கெரிப்பது* (SII,xiv,36.)

சோபகிற (பெ) அறுபது ஆண்டுகளில் ஒன்று (1183) *சோபகிற ஸம்மச்சரத்துக் கழலை நாட்டு* (EC,ix,Cp.160.)

சோபானப் பீடம் (பெ) படிக்கட்டிலுள்ள பீடம் (1126) *கோயில் கீழைச் சோபானப்பீடத்து ஸ்ரீ உத்ஸவ மண்டபமாக செய்ய* (SII,viii,224.)

சோபானம் (பெ) படிக்கட்டு (1070) *பழங் கல்வெட்டு சோபானத்தில் படி எடுத்து வெட்டித்து* (SII,vii,854.)

சோமாகணை (பெ) பழவகை (1547) *கிளக் குறிஞ்சிப்பழம் 300 கொம்மடி மாதளம்பழம் 300 சோமாகணை 300 கமாத்தம் பழம் 300* (TDI,v,92.)

சோமாசி (பெ) (= சோமயாஜி); ஸோமயாகத்தை முறைப்படி செய்த பிராமணர் (772) *காட்டுக்குறி சேந்தஸ்வாமிக்கிரமவித்தச் சோமாசியார் கல்லுவிச்ச* (SII,xiv,19.)

சோர்த்த (வி) பெயர்த்தெழுதிய (978) *ஸ்ரீ விமாநத்துப் படிக்கட்டில் வெட்டிந எழுத்துப்படி சோர்த்தபடி இவ்வாண்டு ச்ஹிலாலேகை செய்த பரிசாவது* (SII,iii,133; SII,xix,200.)

சோர்ப்பிக்க (வி) பேர்த்தெழுவிக்க (1013) *விமானத்துள்ள கல்வெட்டுப்படி பொத்தகத்தில் சோர்ப்பிக்க வென்று* (SII,v,652.)

சோராவொற்றி (பெ) மீளாத நில அடைமானம் (1461) *இவர் பேருக்கு சோராவொற்றியாக எழுதி வாங்கின வகைக்கு* (KANDT,1968/35.)

சோருகை (பெ) திருட்டு போகை (1374) *குன்றவாணப்பெருமாள் திருவாசியிலே நூற்று ஐம்பது பொன் சோருகையில்* (SII,v,479.)

சோருந் நாள் (பெ) கெடு முடிவடையும் நாள் (1253) *இந்நிலம் ஒற்றி சோருந் நாள் ஒற்றி முதலாலும்* (TAS,vi,16.)

சோலை (பெ) தோப்பு (771) *பூவிரிஉம் பொழிற் சோலை* (EI,xvii,16.)

சோழ நாடு (பெ) சோழ அரச குலம் ஆண்ட நாட்டின் நடுப்பகுதி (792) *சோழநாட்டுத் தென்கரை ஆர்வலக் கூற்றத்து நாட்டார்க் காண்க* (EI,xviii,14.)

சோழ பெருமாநடிகள் (பெ) சோழ அரசன் (பொதுப்பெயர்) (988) *நொந்தாவிளக்கு எரிப்பதற்கு சோழ பெருமானடிகள் தேவியார்* (SII,xiii,351.)

சோழன் (பெ) சோழ அரசன் (771) *தென்ன வானவன் செம்பியன் சோழன்* (EI,xvii,16.)

சோழிகக்காய் (பெ) அடைக்காய்(?) (1000) *சோழிகக்காய் முப்பதுந் தெரியிலை மூன்று பற்றுக்கு நெல் நிசதி* (SII,viii,647.)

சோழிச்சியல் விளக்கு (பெ) சோழநாட்டில் வழங்கும் விளக்கு (1009) *சோழிச்சியல் விளக்கு உள்க்கருவும் நாராயமும் உள்பட நிறை* (SII,v,521.)

சோழியங் காசு (பெ) நாணய வகை (1269) *இரட்டித்த பொந்நூற்று ஒருபதிந்கழஞ்சு சோழியந் காசு அறுநூற்று எழுபதினால்* (IPS,379.)

சோழிய வாணியன் (பெ) சோழ நாட்டைச் சேர்ந்த வாணியன் (911) *சோழியவாணியநான முண்டன் அரங்கநாகிய* (SII,xix,99.)

சோற்றடைப்பு (பெ) சோற்றுக்கு அடைத்த நிலம் அல்லது பொருள் (1213) *சோறு நானாழியும் சோற்றடைப்பிலே கூட்டிக்கொள்ளக் கடவதாகவும்* (TMPL,vi,p.267-68.)

சோறு (பெ) உணவு (812) *புடவைக்குஞ் சோறுக்குமாக* (SII,xiii,295.)

சோறு கூறு (பெ) (= சோறு கூறை) (985) *நிலம் எப்பேர்ப்பட்ட பூமியும் இவளுக்குச் சோறு கூறுக்கு* (SII,viii,723.)

சோறு கூறை (பெ) உணவு உடை ஆகிய வாழ்க்கைச் செலவு (937) *என் பட்டாரன் நாராயணங் கிருஷ்ணனிடை சோறு கூறை பெற்றுடைய தோட்டம்* (SII,xvii,640.)

சோறுமாட்டு (பெ) (= எற்சோறு) (883) *எப்பேர்ப்பட்ட இறையுஞ் சோறுமாட்டுங் காட்டப் பெறாதோமாக* (SII,vii,420.)

சோனகச்சிருக்கின் கூடு (பெ) (சோனகர் கலைத்திறன் கொண்ட) ஒரு நகை (1014) *சோனகச்சிருக்கின் கூடு ஒன்றிற் கட்டின மாணிக்கம் ஒன்பதும்* (SII,ii,93.)

சோனகம் (பெ) அரபு நாடு (1242) *கலிங்க மீழங் கடாரங் கெடவுந் தெலிங்கஞ் சோனகஞ் சீனக முதலாய விதிமுறை திகழ* (SII,viii,404.)

சோனகர் (பெ) அரபு நாட்டார் (1136) *வங்க வரங்கவர் வத்தவர் மத்திர கங்கர் சோனகர் கையகையர் ஜினரென்றறை கழல்* (SII,vii,1038.)

சோனக வரி (பெ) சோனகர் மீதான வரி (1231) *பாடி காவலும் சாரிகையும் வெட்டிவரி சோனகவரி வேண்டுகோள் அம்புவரி கணக்கப் பேறு....தேவைகளும்* (SII,viii,469.)

சோனகன் (பெ) அரபு நாட்டான் (1014) *ராஜவித்யாதரப் பெருந்தெருவில் இருக்கும் சோனகன் சாவூர் பரஞ்சோதி* (SII,ii,64&95.)

ஜ

ஜகதிப்படை (பெ) கட்டிடத்தின் அடித்தள உறுப்புக்களுள் ஒன்று (1014) *இந்த ஜகதிப் படையில் இதனுக்கு முன்கிழக்கடைய கல்லில் வெட்டிந* (SII,ii,i.)

ஜங்கை (பெ) கணைக்கால் (1014) *ஜங்கைக்கு மேற் கேசாந்தத் தளவுந் செல்ல* (SII,ii,44.)

ஜடை (பெ) பின்னிய மயிர் முடி (1014) *ஜடைமேல் கங்கா பட்டாரகியும் ஜடை ஒன்பதும்* (SII,ii,42.)

ஜபம் (பெ) மந்திரங்களைச் சொல்லுதல் (1024) *மந்த்ர ஜபம் பண்ணுவான் ஒருவநுக்கும்* (EC,x,Kl.112a.

ஜயந்த்யாஷ்டமி (பெ) கிருஷ்ண ஜயந்தி (1068) *ஜயந்த்யாஷ்டமிக்கு நெல் முக்கலநே யறு நாழியுரியும்* (EI,xxi,38.)

ஜய மடந்தை (பெ) வெற்றித் தெய்வம் (1070) *திருமடந்தையும் ஜயமடந்தையும் திருப்புயங்களில் இநி திருப்ப* (SII,vii,884.)

ஜயஸ்தம்பம் (பெ) வெற்றிக் கம்பம் (1044) *ஸ்ரீமஹேந்திரத்தில் ஜயஸ்தம்பம் நாட்டி* (SII,v,1352.)

ஜாதி (பெ) பிறப்பாலும், தொழிலாலும் வேறுபட்ட மக்கள் தொகுதி (994) *வ்யாபாரிக ளென்றல் வெள்ளாளர் என்றல் மற்றும் எப்பேர்ப்பட்ட ஜாதிகள் ளென்றும்* (EI,xxii,32.); (1002) *ப்ராஹமண ஊர்களில் ப்ராஹமணர்க்கு கீழ்ப்பட்ட ஜாதிகளில் காணிகளில் பணிசெய் மக்கள் காணி* (SII,v,1409.)

ஜாதி பகடு (பெ) நல்ல சாதி யானை (1056) *செருக்களத்தவன் விடு சத்துரு பயங்கரன் கரபத்திர முதபத்திர ஜாதி பகட்டரைசநேகமு* (SII,iii,29.)

ஜிநாலயம் (பெ) அருகக் கடவுளின் கோயில் (1025) *முகை நாட்டுப் பள்ளிச்சந்தம் வைகாவூர்த் திருமலை ஸ்ரீகுந்தவை ஜிநாலயத்து தேவற்கு* (EI,ix,31; SII,i,67.)

ஞ

ஞமலி (பெ) நாய் (1000) *துடரிடையாத்த ஞமலியைச் போலிருந்தேன்* (SII,iv,167.)

ஞாதி (பெ) உறவினர்: பங்காளிகள் (985) *இவருடைய ஞாதி பசுவதி தாமோதிரப்பட்டனும் இவன் தம்பி* (SII,xix,373.); (1001) *விலை கொண்டு ஞாதிஸாமந்த தநியகர் முன்பு நிலாது போக* (SII,v,723.)

ஞாயமில்லாத (வி) உரிமை யில்லாத (1300) *புரையிடத்தில்ச் சென்று அதரஞ் செய்யுமவகளும் ஞாயமில்லாத பூமிவிலக்குமவகளும்* (TAS,iii,p.194-195.)

ஞாயிறு (பெ) சூரியன் (833) *மதியமு ஞாயிறும் போல* (SII,xiv,44.)

ஞாலம் (பெ) உலகம் (771) *கருங் கடலுடுத்த பெருங்கண் ஞாலம்* (EI,xvii,16.)

ஞாலி (பெ) தோரணம் (905) *மேக ஞாலி விதானத்தின்றண்ணிழற் கீழ்* (TASSI,1962-65,p.1-31.)

ஞான்று (பெ) நாளில் (550) *தேவரு சுட்ட ஞான்று* (CHHS,1971/62.)

ஞெகிழ்த்து (வி) எய்து (921) *கூர்வெங்கணை தொடை ஞெகிழ்த்துப் பருதி ஆற்றலோடு விளங்கின* (SII,iii,206a.)

ஞெருங்கு (வி) நிறைந்த (833) *இழித்தேறிய ஞெருங்கு புனற் கிழவனேரியும்* (SII,xiv,44.)

ஞெளிய (வி) அமுங்க (785) *பல்படைஒடு பார் ஞெளிய* (IA,xxii,p.57-75; PNDCP,p,55-62)